உ

ஓம் குஹாயநம :

திருப்புகழமிர்தம்.

ஒரு சிறந்த மாத வெளியீடு.

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

(மலர் 2.)

ஈஸ்வர ௵ சித்திரை ௴ முதல் பங்குனி ௴ வரையில்.
1937 ௵ ஏப்ரல் ௴ முதல் 1938 ௵ மார்ச்சு ௴ வரையில்

திருப்புகழ்த் தொண்டன்,
கிருபானந்தவாரி.

"திருப்புகழமிர்தம்" ஆபீஸ்,
108, சாமிநாயக்கன் தெருவு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

1938

இதன் விலை ரூ. 1-8-0. தபாற்கூலி வேறு.

திருப்புகழமிர்தம்

பொருளடக்கம்

புராண வரலாறுகள்.



அறுமுகச்சிவனார் அருணகிரியாருக்கு உபதேசித்தல்.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர். 2 Vol. 2	ஈசுவர ஹூ சித்திரைமீ 1உ ஏப்ரல்—1937	இதழ் 1 No. 1

திருப்புகழ்.

திருச்செந்தூர்

(13) தொந்திசரிய மயிரே வெளிற நிரை
தந்தமசைய முதுகே வளைய இதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர்
நகையாடி

தொண்டுகிழவ னிவனா ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு
செவியாகி

வந்தபிணியு மதிலே மிடையு மொரு
பண்டி தனுமே யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுகு
துயர்மேவி

மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை
வரவேணும்

எந்தை வருக ரகுநாயக வருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக
அபிராம
இங்கு வருக அரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல
வருமாயன்
சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரோடுமடிய
அடுதீரா!
திங்களரவு நதிசூ டிய பரமர்
தந்தகுமர அலையே கரை பொருத
செந்திநகரி லினிதே மருவி வளர்
பெருமாளே!

பதவுரை.

எந்தை வருக - என் அப்பனே வா!, ரகுநாயக வருக - ரகு குலத்திற்கு நாயகனே வா!, மைந்த வருக - வலியுடையவனே வா!, மகனே இனி வருக - என் புதல்வனே தாமதியாது இனி வருவாய், என் கண் வருக - எனது கண்ணே வா!, எனது ஆர்உயிர் வருக - எனது அருமையான உயிருக்கு நிகரானவனே வா!, அபிராம இங்கு வருக - அழகிற் சிறந்தவனே இவ்விடம் வா!, அரசே வருக - இரா ஜாவே வா!, முலை உண்க வருக - பால் உண்ணவா!, மலர் சூடிட வருக - மலர்களை சூட்டிக்கொள்ள வா!, என்று பரிவினொடு கோசலை புகல - என்று அன்புடன் கௌசலாதேவி சொல்லி அழைக்குமாறு, வரும் மாயன் - இராமபிரானாக அவதரித்து வந்த மாயா சொரூப ராகிய நாராயணமூர்த்தி, சிந்தை மகிழும் மருகா - உள்ளங் களிக்கும் படியான மருமகரே!, குறவர் இள - குறவர் குலத்தில் தோன்றிய வரும் இளமை யுடையவரும், வஞ்சி மருவும் அழகா - வஞ்சிக்கொடி போன்ற இடை யுடையவருமாகிய வள்ளிநாயகியார் அணைகின்ற அழகிற் சிறந்தவரே!, அமரர் சிறை - தேவர்களது சிறைச்சாலைத் துன்பமானது, சிந்த - நீங்குமாறு, அசுரர் கிளை - இராக்கதர்களுடைய சுற்ற முழுவதும், வேரொடு மடிய - வேருடன் (அடியோடு) அழிந்து போகுமாறு, அடுதீரா - போர் புரிந்து கொன்ற தீரரே!, திங்கள் -

சந்திரனையும், அரவு - பாம்பையும், நதி - கங்கையையும், சூடிய - சடாபாரத்திற் றரித்துள்ள, பரமர் - எப்பொருட்கும் இறைவரும் பெரிய பொருளுமாகிய சிவபெருமான், தந்த குமர - பெற்றருளிய குமாரக் கடவுளே !, அலை (ஏ-அசை) கரை பொருத - கடலில் எழும் அலைகள் ஒழியாது கரையில் மோதப்பெற்ற, செந்தில் நகரில் - திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரில், இனிதே மருவி வளர் - இனிமையாகப் பொருந்தி வாழ்கின்ற, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே !, தொந்தி சரிய - வயது முதிர்ச்சியால் வயிறு சரிந்து தொங்கவும், மயிர் (ஏ-அசை) வெளிற - கருத்திருந்த தலைமயிரானது (கொக்கைப் போல்) வெளுத்து நறைக்கவும், நிரை தந்தம் அசைய - வரிசையாக இருந்த பற்கள் அசையவும், முதுகு (ஏ-அசை) வளைய - நிமிர்ந்திருந்த முதுகானது (பல்லக்குபோல்) வளையவும், இதழ் தொங்க - உதடுகள் தொங்கவும், ஒரு கை தடிமேல் வர - (கூனுடன்) ஒரு கரம் தடியின் மேல் பொருந்தி வர (தடியூன்றி தள்ளாடி நடந்துவருகின்ற சமயத்தில்), மகளிர் - பெண்கள், நகையாடி - (கிழவனாகிய என்னை நோக்கி) எளனமாகச் சிரித்து, தொண்டு கிழவன் இவன் ஆரெனா - "பழய கிழவனாகிய இவன் ஆர்? என்று பரிகசிக்கவும், இருமல் கிண்கிண் என- கிண்கிண் என்ற ஒலியுடன் இருமல் வரவும், முன் உரை (ஏ-அசை) குழற - முன்னர் திருத்தமாகப் பேசிக்கொண்டிருந்த சொற்கள் குழறவும், விழி துஞ்சு குருடுபட (ஏ-அசை) கண்கள் எக்காலத்தும் தூங்குவதுபோல் ஒளி குன்றி குருட்டுத்தன்மை யடையவும், செவிடு படு செவியாகி - காதுகள் செவிட்டுத்தன்மை யடையவும், வந்த பிணியும் - உடலுக்கு வந்த நோயும், அதிலே மிடையும் - அந்த நோயை அகற்றுதற்பொருட்டு நெருங்கிய, ஒரு பண்டிதனும் - ஒரு வைத்தியனும், மெய் உறு வேதனையும் - சரீரத்திற்கு வந்த நோயாலாகிய துன்பமும் துன்புறுத்த, இள மைந்தர் உடைமை கடன் ஏது என - இளம்பருவத்தையுடைய மக்கள் சொத்து எவ்வளவு இருக்கிறது என்றும் கடன் எவ்வளவு இருக்கிறது என்று கேழ்க்கவும், முடுகு துயர் மேவி - இதனாலாகிய துன்பங்களை நான் அடையவும், மங்கை அழுது விழவே - என் பத்தினி ஓவென்று கதறி அழவும், யமபடர்கள் நின்று சருவ - யமதூதர்கள் என் உயிரைப்பற்றுமாறு வந்து நெருங்கி நிற்கவும், மலம் (ஏ-அசை) ஒழுக - மலம் தண்ணீர் போல் ஒழுகவும், உயிர் மங்கு பொழுது - அடியேனது உயிர் மங்குந்தன்மை யடையும்போது, கடிதே மயிலின் மிசை வரவேணும் - விரைவாக மயில்வாகனத்தின்மீது வந்தருள் புரியவேணும்.

பொழிப்புரை.

என் அப்பனேவா! இரகுகுலத்திற்கு நாயகனேவா! வலி யுடையவ னேவா! என்மகனே! இனிவருவாயாக, என்கண்ணேவா! எனது ஆருயிரேவா! அழகிற்சிறந்தவனே! இவ்விடம்வா, ராஜாவே வா! பால்குடிக்கும்பொருட்டு வா! மலரைச்சூடிக்கொள்ளுவதற்காக வா! என்று அன்புடன் கௌசலாதேவி அழைக்குமாறு மண்ணுலகில் அவதரித்துவந்த இராமபிரானும் மாயாசொரூபமாகிய மகாவிஷ்ணு உள்ளம் மகிழ்ச்சி யடையும் மருமகரே! குறவர்குலத்திற் பிறந்தவரும் இளமை யுடையவருமாகிய வள்ளியம்மையார் மருவுகின்ற கட்டழகுடையவரே! தேவர்களது சிறைவாசம் ஒழிய அசுரர்களது வமிசம் அடியோடு போர்புரிந்து அழித்த தீரரே! சந்திரனையும் சர்ப்பத்தையும் நதியையும் சடையிற்சூடிக்கொண்டுள்ள சிவபெருமான் பெற்ற குமாரமூர்த்தியே! கடலின் அலை கரையில் மோதுகின்ற திருச்செந்தூர் என்னும் புனித தலத்தில் வாழ்கின்ற பெருமையிற் சிறந்தவரே! முதுமையடைந்ததனால் தொந்தி சரியவும், கருமைநிறம் பொருந்திய மயிர்கள் வெளுத்து நரையடையவும், வரிசையாகிய பற்கள் அசையவும், முதுகு வளையவும், உதடுகள் தொங்கவும், ஊன்று கோலின்மீது ஒருகரம் பொருந்துமாறு தள்ளாடி நடந்துவருங்காலையில் பெண்கள் “பழய கிழவனாகிய இவன்யார்?” என்று எள்ளிநகையாடவும், கிண் கிண் என்ற ஒலியுடன் இருமல் வரவும், அழுத்தமாகவும் திருத்தமாகவும் முான்பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் குழறவும், கண்கள் எப்போதும் தூங்குவதுபோல் ஒளிகுன்றி குருட்டுத்தன்மையடையவும், செவிகள் செவிட்டுத்தன்மை யடையவும், உடலுக்குவந்த நோயும், அதனை நீக்குதற்கென நெருங்கிவந்த வைத்தியனும், சரீரத்திற்கு உற்ற பிணியின்துன்பமும் (ஒருங்கேவருத்த), இளம் பிள்ளைகள் சொத்து (ஆஸ்தி) எவ்வளவு இருக்கிறது? கடன் எவ்வளவு இருக்கிறது? என்று கேழ்க்கவும், துன்பமானது மிகவும், விரைந்து வரவும், என்பத்தினி ஓ வென்று கதறி அழவும், யமதூதர்கள் என் உயிரைப் பற்றுமாறு வந்து நெருங்கி நிற்கவும், மலம் ஒழுகவும் ஆகிய மரணாவஸ்தையடைந்து உயிர்மங்குகின்ற காலத்தில் தேவரீர் மயில்வாகனத்தின்மீது விரைவாகவந்து அடியேனைக் காத்தருளவேண்டும்.

விரிவுரை.

தோந்திசரிய :—

வயது முதிர்ந்தகாலத்தில் ஆலிலைபோலிருந்த வயிறு பெருத்து சரிந்துவிடும்.

மயிரே வெளிற :—

கருமைநிறத்துடனிருந்த மயிர்கள் கொக்கு போல் நரைத்து வெளுத்துவிடும். "தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்து" என்ற திருவாக்கையும் உன்னுக

நிறைதந்தம் அசைய :—

முத்தைப் போல் வரிசையாயிருந்த பற்கள் அசைந்து உதிரும்.

"வயது சென்றது வாய்ப்பல்லுதிர்ந்தது"

—திருப்புகழ்.

பற்கள் உதிர்ந்த வுடனே சொற்கள் கெட்டுவிடுமாதலால் இறைவனை வாயார வாழ்த்துதற்கு இயலாது போம். ஆகலால் பற்கள் விடுமின் இறைவனைத்துதித்தல் வேண்டும். பற்கள் உதிர்ந்தபின் மந்திரம் ஜெபிப்பார்க்கு சித்தியுறுதென்னும் மந்திரசாத்திரத்தையும் உய்த்துணர்க.

முதுகே வளைய —

"நிமிர்ந்த முதுகுங் குனிந்து" என்றபடி முதுகு பல்லக்கு போல் வளைந்துவிடும். அங்ஙனம் கூன் வளைந்தபின் இறைவன் திருவடியை மனத்தின்கண் நினைத்து தியான சமாதி செய்தற் கியலாது. முதுகுதண்டிலுள்ள சுழிமுனை என்னும் வெள்ளை நாம்பிலுள்ள தாமரைத்தண்டின் சிறு துவாரம்போன்ற நுண்ணிய வழியில் பிராண வாயுவை கபாலம் வரைக்கும் ஏற்றி சிவயோகசாதனம் முதுகு வளைந்துவிட்டபின் செய்யமுடியாது எனவே இடுப்பும் முதுகும் சிரமும் நேரேநிறுத்தி சித்திரப்பதுமைபோல் இருந்து தியானித்தல்வேண்டும். ஆதலால் முதுகுவளையாமுன் சிவயோகத்தை முயலல்வேண்டும்.

மகளிர் நகையாடி :—

முதுமைப் பருவம் வந்த காலத்தில் பெண்களும் இளைஞர்களும் பரிகசித்து நகையாடுவர்.

"வருத்தமுந்தர தாய்மனை யாள்மக
வெறுத்தி டங்கினை யோருடன் யாவரும்
வசைக் குறுஞ்சொலி னுல்மிக வேதினம் நகையாட"
—(மனத்திரைத்) திருப்புகழ்.

விழிதுஞ்சு குருடுபடவே :—

கண்கள் முதுமையில் ஒளிகுன்றி குருடுபடும். அங்ஙனம் கண்ணொளி யிழந்தபின் இறைவனது திவ்யமங்கள திருமேனியின் பொலிவைக்கண்டு "ஐந்துபோறிவுங் கண்களே கொள்ள" என்ற பேரானந்தத்தை யடையமுடியாது. ஆதலால் கண்கள் ஒளியுடன் விளங்கும்போதே கண்ணினாலாகிய பயனைப் பெறவேண்டும்.

செவிடுபடு செவியாகி :—

முதுமையில் கண்கள் குருடுபட்டதோடு காதுகளும் கேட்குந் தொழிலை இழந்துவிடும். அங்ஙனம் செவியடைந்தபின் இறைவனது அருட்பெருங் குணங்களைக் கேட்டு மகிழமுடியாது. செவிபடைத்ததன்பயன் இறைவனது சீர்கேட்டு சிந்தை மகிழ்தலே.

"சேவ்வேளின் சீர்கேளாச் செவியென்ன செவியே"

வந்த பிணியும் :—

உதிரம் வற்றி உடல் தளர்ந்துவிடுவதால் முதுமையில் பல நோய்கள் வந்து துன்புறுத்தும்.

"சூலை சொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுடல்
அழிவேனோ"
—(வாலவய) திருப்புகழ்.

இள மைந்தர் உடைமை கடன் ஏதெனா :—

தொந்தி சரிந்தும், மயிர் நரைத்தும், பற்கள் கழன்றும், முதுகு வளைந்தும், இதழ் தொங்கியும், தடியூன்றியும், "இந்தக் கிழவன் யார்" என்று பெண்கள் பரிகசித்து நகையாடவும், இருமல் வரவும், மொழி குழறவும், குருடு படவும், செவிடு படவும், பற்பல நோய்கள் வரவும், வைத்தியன் வந்து பணங் கேழ்க்கவும், உடலில் வேதனையும் இவை முதலிய பல துன்பங்களால் துன்புற்று ஆவிபிரியுங்காலத்தில், இளம்

பிள்ளைகள் மாணுவஸ்தைப் படுவோனுடைய வருத்தத்தைக் கண்டு மனம் துடியாது, ஆஸ்தி எவ்வளவு? கடன் எவ்வளவு? எங்கெங்கு கொடுத்திருக்கிறீர்! என்று கேட்டு துன்புறுத்துவார்கள். அவர்களது நன்மையைக் கருதுவார்களே யன்றி நம்முடைய நன்மையைக் கருதி ஆன்மா க்ஷேமமடைகின்ற வழியைத் தேடமாட்டார்கள்.

யமபடர்கள் . . . . . . மலமே ஒழுக:—

யமதூதர்கள் வந்து பாசக்கயிற்றால் உயிரைக்கட்டி யீர்க்கின்ற சமயத்தில் மலம் நீர்போலே நெகிழ்ந்து ஒழுகும்.

உயிர் மங்கு பொழுது கடிதே மயிலின் மிசை வரவேணும்:—

ஆவி மங்குகின்ற காலத்தில் முருகனுடைய தெரிசனம் உண்டாயின் இயமதூதர்கள் வெருவி ஓடுவார்கள். ஆதலால் விரைவாக மயில்வாகனத்தின்மிசை வந்து காப்பாற்றவேணும் என்றனர்.

எந்தை வருக . . . . . . வருமாயன்:—

பகவானுகிய நாராயணர், அளவற்ற தவம்புரிந்த கௌசலாதேவி அன்புடன் பற்பல வகையாக அழைக்க அவளது திருவுதரத்தில் தோன்றி மகனுக வந்தனர்.

"மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே"

—*திருமொழி.*

சிந்தை மகிழு மருகா:—

ஷண்முகப் பெருமான் அளவற்ற கருணையும், முடிவில்லாத ஆற்றலும், ஞானமேயொரு திருமேனியும் உடையவாக இருந்து கார்த்திகைப் பெண்கள் அறுவர்களுக்கும் மகனுகிய அன்னார் பலவாறு அழைக்க அவர்களுக்கு அருள்புரிந்தமையால், நாராயணர் சிந்தை மகிழுகின்றார்.

குறவரிள வஞ்சி மருவும் அழகா:—

முருகப் பெருமான் வள்ளி நாயகியார் மருவுகின்ற அழகிற் சிறந்தவர்; முருகப்பெருமானுடைய வடிவே அழகு; அழகால் அவரின் மிக்காரும் ஒப்பாரும் இல்லை. "முழுதுமழகிய குமர"

—*திருப்புகழ்.*

அமரர்சிறை சிந்த . . . . அடுதீரா :—

தேவர்களை சூரபன்மன் சிறையிட்டு பல யுகங்களாகத் துன் புறுத்த, இனி நமக்கு உய்வில்லை என்று நிர்க்கதியாக இருந்த தேவர்களது சிறையைமீட்டு சூராதி அசுரர்களது குலத்தை அடியோடுஅழித்து முருகப்பெருமான் அறத்தை நிலைபெறச் செய்தனர். ஒருவராலும் வெல்லவொண்ணாத சூரன் முதலியோரை வென்றதனால் தீரன் என்றனர்.

தேவர்கள் என்பது :—சத்துவம் முதலிய நற்குணங்கள்; அசுரர்கள் என்பது :—தாமசம் முதலிய தீயகுணங்கள்; தீயகுணங் களை அழித்து நற்குணங்களை நிலைபெறச் செய்தனர் என்பது அதன் தத்துவம்.

திங்கள் அரவு . . . . தந்தகுமர :—

அபயமென்று வந்த சந்திரனையும் கொல்லவந்த அரவம் முதலிய வைகளையுங் காப்பாற்றி சடாபாரத்தில் சூடிக்கொண்ட கருணா மூர்த்தியாகிய கண்ணுதற் கடவுளது மைந்தனை படியால், இயம பயம் நேருங்கால் மயில் மிசை வந்து காத்தருளல் வேண்டும் என்று விண்ணப்பம் புரிகின்றனர்.

அலையே கரை . . . . பெருமாளே :—

அலைகள் வந்து தமது திருவடியில் ஓய்வுறுமாறு கடற்கரையில் முருகன் உறைகின்றனர். அலைகள் என்பது பலவகையான எண்ணங்கள். அவைகள் எம்பெருமானது திருவடியில் ஓயுமாறு செந்திலம்பதியில் வாழ்கின்றனர். செந்திலாண்டவனை நினைப்பார் க்கு துன்பங்கள் இல.

கருத்துரை.

மாயவனது மருகரே! வள்ளிநாயகியின்மணாளரே! அசுரரை யழித்த அதிதீரரே! சிவபெருமானது புதல்வரே! செந்திலாண்ட வரே! பற்பலதுன்புற்று ஆவிபிரியுங்கால் மயில்மிசைவந்து காப்பாற்ற வேண்டும்.

உ

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

நூன்முகம்.

"செந்திலையுணர்ந்து உணர்ந்து உணர்வுற" என்று நம் அருணகிரிநாத சுவாமிகளால் புகழ்ந்தோதிய திருச்செந்தூர் என்னும் திருத்தலம் சுப்ரமண்ய க்ஷேத்திரங்களில் முதன்மை பெற்றது. கடற்கரையில் காண்போர் கண்ணுங்கருத்துங் கவருங் கவினுடையது இரண்டாவது படைவீடு. பாண்டியராஜனது மகளாகிய அங்கசுந்தரிக்கு சாபத்தால்வந்த குதிரைமுகம் மாறி அழகிய முகம்கிடைத்த வதனாரம்பதீர்த்தமுடையது. இயற்கையழகால் எக்காலத்தும் இன்பத்தை நல்குவது. 'பரமபதமாய செந்தில்' 'மகாபுநிதந்தங்குஞ் செந்தில்' என்ற திருவாக்குகளால் இப் புனிதக்ஷேத்திரத்தின் பெருமை நன்கு வெளியாகின்றது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஊமையாயிருந்து ஐந்தாவது ஆண்டில் இத்திருப்பதிக்குச் சென்றவுடன் அருள்பெற்று கந்தர் கலிவெண்பா என்னும் அரிய பிரபந்தத்தை ஓதிய மகிமையுடையது. வேண்டுவார் வேண்டிய வரங்களையெல்லாம் விரைவிலீந்து கலியுகவரதராகக் கந்தப்பெருமான் எழுந்தருளியுள்ள தெய்வீகமுடையது.

இத்தகைய திவ்ய க்ஷேத்திரத்தில் ஆதிசங்கர பகவத்பாதர் வந்தபோது எம்பெருமானை வழிபட்டு புஜங்க ஸ்தோத்திரம் என்னும் இனிய பிரபந்தத்தைத் திருவாய் மலர்ந்தருளினர். அந்நூலைப் பாராயணம் புரிவோர்க்கு இகபர சித்தியாம். இதன் பொருளையுணர்ந்து பாராயணம் புரிதலே சிறப்புடைத்தாதலால் இதன் பொருளை விளக்குதும். அன்பர்கள் கருத்துணர்ந்து தினந்தோறும் பூஜாகாலங்களில் அன்புடன் பாராயணம் புரிந்து "யார் வேண்டினுங் கேட்ட பொருளீயுந் தியாகாங்கசீல" னும் குமாரபரமேஸ்வரனது திருவருளைப் பெறுமாறு வேண்டுகின்றனம்.

நூல்.

सदा बाल रूपापि विघ्नाद्रि हन्त्री ।
महादन्ति वक्त्रापि पञ्चास्य मान्या ॥
विधीन्द्रादि मृग्या गणेशाभि धामे ।
विधत्तां श्रियंकापि कल्याणमूर्तिः ॥

ஸதா3 பா3ல ரூபாபி விக்4நாத்3ரி ஹந்த்ரீ

மஹா த3ந்தி வக்த்ராபி பஞ்சாஸ்ய மான்யா |

விதீ4ந்த்3ராதி3 ம்ருக்3யா க3ணே சாபி4 தா4 மே

வித4 த்தாம் ஸ்ரியம் காபி கல்யாணமூர்த்தி: || (1)

அவதாரிகை.

ஸ்ரீமத் சங்கராசார்ய சுவாமிகள் பக்தானுக்கிரகார்த்தம், ஜயந்தீபுர (திருச்செந்தூர்) த்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருப்பவரும், பரமசிவனுக்குப் பிரணவார்த்தத்தை உபதேசித்த குருவாகையால் "ஸ்வாமிநாதன்" என்றும் ஆன்மாக்களின் ஹ்ருதய குகையில் சூட்சும ஜ்யோதிஸ்வரூபரா யிருப்பவராகையால் "குஹன்" என்றும் மற்றும் பற்பல காரணங்களைப்பற்றிப் பக்தர்களால் பல்லாயிரக் கணக்கான திருநாமங்களாற் றுதிக்கப்படாநின்றவருமான பரம்பொருளைத் துதிக்கத் தொடங்கி, அது இடையூறின்றி இனிது முடியும் பொருட்டு முதலில் விநாயக ஸ்துதி ரூபமாகிய மங்களத்தைச் செய்கின்றார்.

பதவுரை.

ஸதா - எக்காலத்தும்,
பால ரூபா அபி - குழந்தை வடிவ முடையதாயினும்.
விக் நாத்திரி ஹந்த்ரீ - இடையூறாகிய மலையைப் பிளக்கின்றதும்,
மஹா தந்தி வக்த்ரா அபி - பெரிய யானையின் முகத்தை யுடைத்தாயினும்,
* *பஞ்சாஸ்ய மாந்யா* - சிங்கத்தால் அல்லது பரம சிவனால் வெகுமானிக்கத் தக்கதும்;
விதீந்த்ராதி ம்ருக்யா - பிரமன் இந்திரன் முதலிய தேவர்களால் தேடத்தக்கதும்,
கணே சாபிதா - கணேசன் என்று பெயருடையதுமான,
காபி கல்யாண மூர்த்தி - ஒப்பற்ற மங்கள மூர்த்தியான,
மே - எனக்கு,
ஸ்ரியம் - (மோக்ஷ) லக்ஷ்மியை,
விதத்தாம் - கொடுக்கட்டும்.

பொழிப்புரை.

எப்போதும் சிறுகுழந்தை வடிவமுடையதாயினும் தனது அன்பர்களுக்கு வரும் மலைபோன்ற இடையூறுகளைப் பிளக்கத்தக்க வலியுடையதும், பெரிய யானை முகத்தை யுடையதாயினும் சிங்க (பரமசிவ) த்தின் அன்பிற் குரியதும், பிரமன் இந்திரன் முதலிய இமையவரால் தேடப்படுவதுமான கணேசர் என்ற மங்கள மூர்த்தி எனக்கு † மோட்சத்தை அனுக்கிரகிக்கட்டும்.

*குறிப்பு :— * பஞ்சாஸ்யன் ஐந்து முக முள்ளவன். இவை ஈசான தத்புருஷ, அகோர, வாமதேவ, சத்யோஜாத என்னும் ஐந்து முகங்கள் இருப்பதால் பரமசிவனுக்குப் பெயராம்.*

பஞ்சாஸ்ய—விரிந்த முகத்தையுடையது என்று மற்றொரு பொருள். விரிந்த முகத்தையுடைய சிங்கத்திற்கும் பெயராம். எனவே பஞ்சாஸ்ய என்பது சிவபெருமானுக்கும் சிங்கத்திற்கும் பொருளாம்.

† லக்ஷ்மி என்பது பொதுவாகச் செல்வத்தைக் குறிப்பதாயினும், சங்கராசார்ய சுவாமிகள் சர்வசங்க பரித்தியாகி யாகையால் மோக்ஷ லக்ஷ்மி யையே விரும்பி யிருக்கக்கூடும். அன்றியும் பிரமவிஷ்ணு வாதிகளாலும் வழிபடக்கூடிய விநாயகக் கடவுளிடம் அற்ப ஐஸ்வரியங்களை அபேக்ஷிப்பது அநுசிதமுமாம்.

न जानामि पद्यं न जानामि गद्यम् ।
न जानामि शब्दं न जानामि चार्थम् ॥
चिदेका षडास्या हृदि द्योतते मे ।
मुखान्निःसरन्ते गिरश्चापि चित्रम् ॥

நஜாநாமி பத்யம் நஜாநாமி கத்யம்
நஜாநாமி ஸப்தம் நஜாநாமி சார்த்தம் ।
சிதேகா ஷடாஸ்யா ஹ்ருதித் யோததேமே
முகாந்நி : ஸரந்தே க்ரஸ்சாபி சித்ரம் ॥ (2)

அவதாரிகை.

இச் சுலோகத்தில் முற்றறிவும் முழுவல்லமையு முடைய குமாரக் கடவுளின் கருணையின்றி அற்ப அறிவுடைய ஜீவனால் எக் காரியமும் நடவாதென்னு முண்மையைக் கூறுகின்றார்.

பதவுரை.

பத்யம்	- செய்யுளை,	ஷடாஸ்யா	- ஆறுமுகங்களை யுடைய
நஜாநாமி	- அறியேன்;	ஏகாசித்	- ஒரு சித்தானது; (சித்து:- ஞான ஸ்வரூபம்)
கத்யம்	- வசனத்தையும்,	த்யோததே	- பிரகாசிக்கின்றன
நஜாநாமி	- அறியேன்	முகாத்	- முகத்தினின்றும்
சப்தம்	- சொல்லையும்	கிர :சஅபி	- வாக்குகளும் (சுலோகங்களும்)
நஜாநாமி	- அறியேன்	நி:ஸரந்தே	- வெளிப்படுகின்றன
அர்த்தம்	- பொருளையும்	சித்ரம்	- ஆச்சரியம்
நஜாநாமி	- அறியேன்		
கிந்து	- ஆனால்		
மே	- எனது		
ஹ்ருதி	- உள்ளத்தில்		

பொழிப்புரை.

நான் செய்யுள், வசனம், சொல், பொருள் இவை ஒன்றும் அறியேன். ஆனால் எனது உள்ளத்தில் ஆறுமுகங்களையுடைய ஒரு ஞானஸ்வரூபம் விளங்கிக்கொண்டிருக்கின்றது. ஆகையால் வாயினின்றும் ஆச்சரியகரங்களான சொற்களும் வெளிவருகின்றன. (நான் சுவாமியைத் துதிக்கப் புகுந்தது அவரின் அருளினாலேயே யன்றி எனது வல்லமையினாலன்று என்பது கருத்து).

---

(1) க (k), ச (ch), ட (t), த (t), ப (p)
(2) க (kh), ச (chh), ட (th), த (th), ப (ph)
(3) க் (g), ச (j), ட (d), த் (d), ப (b)
(4) க (gh), ச (jh), ட (dh), த (dh), ப (bh)

ஓம் ஸ்கந்தாய நம :

கந்தர் திருவிளையாடல்.

தோற்றுவாய்.

அறிவைத்தருகின்ற நூலுக்கு வித்தை யென்று பேர். வித். அறிவு ; அவ்வித்தை பதிநான்கென்பார் ஆன்றோர்.

" வித்யாஹ்யே தாச்சதுர்த்தச "

—மஹாபாரதம்.

அவ்வித்தை பதினான்காவன :—இருக்கு, யஜுர், சாமம், அதர் வணம் ஆகிய வேதங்கள் நான்கு ; சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தஸ், ஜோதிடம் என்னும் அங்கங்கள் ஆறு ; புராணம், நியாயம், மீமாஞ்சை, ஸ்மிருதி (தருமசாத்திரம்) என்பவை நான்கு ஆக வித்தை பதினான்கு. இவற்றோடு ஆயுள் வேதம், வில்வேதம், காந்தர்வவேதம், அருத்தவேதம் என்னும் உபவேதம் நான்கனையுங் கூட்டி வித்தை பதினெட்டென சைவபுராணத்து வாயுசங்கிதை தெரிவிக்கிறது.

" அஷ்டா தசாநாம் வித்யாநாம் ".

இவ்விருதிற நூல்களும் புராணத்தைப் பிரமாண வித்தையில் வைத்துக் கூறுவவாயின. இப்புராணம் பதினெட்டு வகைத்தாம். அவை :—சைவம், பௌஷியம், ஸ்காந்தம், மார்க்கண்டேயம், இலிங் கம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், நாரதீயம், வைணவம், பாகவதம், பிரமம், பதுமம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம் என்பன. இவற்றுள் முறையே சிவபுராணம் 10, விஷ்ணுபுராணம் 4, பிரமபுராணம் 2, அக்கினிபுராணம் 1, சூரிய புராணம் 1, ஆக 18. புராணம் என்றால் பழைமை என்று பொருள். பதினெட்டுப் புராணங்களின் கிரந்த எண் 4 இலட்சம். (32 எழுத் துக்களைக் கொண்டது ஒரு கிரந்தம்) அவற்றுள் 17, புராணங்களின் எண் 3, இலட்சம். கந்தபுராணம் ஒரு இலட்சம் கிரந்த முடையது ஏனையபுராணங்களை என்றால் இளமை படுத்தும் சிரேட்டமுடையது. இம்மகா புராணமாகிய காந்தபுராணம்.

இக்கந்தபுராணம் வேதவேதாங்கங்களின் சாரத்தையும் தன்னகத்தே கொண்டதும், புராணங்களின் நாயகமும், விசாலமுமுடையது மாகும். இத்தகைய மகாபுராணமானது சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூரசங்கிதை என ஆறு சங்கிதைகளை யுடையது. இவற்றுள் சங்கர சங்கிதையென்பது முற்றும் வேத சம்மதமாயுள்ளது என்பதை சம்பவகாண்டம் தெரிவிக்குமாறு காண்க.

" தத்ரயா ஸம்ஹிதாப் ரோக்தா
சாங்கரீ வேத ஸம்மதா ".

இத்தகைய சங்கரசங்கிதை பன்னிரண்டு கண்டங்களை யுடையது. அவற்றுள் முற்பட்டது சிவரகசிய கண்டம். அச்சிவரகசிய கண்டம் சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என்னும் ஏழுகாண்டங்களை யுடையதாம். இவற்றுள் முதலாறு காண்டங்களையும் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் செந்தமிழில் பாரகாவியமாக இயற்றினர். ஏழாவதாகிய உபதேச காண்டத்தை குகனேரியப்ப நாவலர் இனிது தமிழில் இயற்றினர்.

எண்ணுதற்கரிய புண்ணிய புராணமாகிய இக்கந்தபுராணம் இவ்வகையாகப் பல பிரிவுகளாக ஒப்பற்று விளங்குவதாம். எந்த வரலாற்றினையும் கந்தபுராணத்திற் காணலாம் என்ற முதுமொழியே அப்புராணத்தின் பெருமையை விளக்கப் போதிய சான்றாம். இத்தகைய அரிய பெரிய புராணத்தின் சங்கர சங்கிதை கந்தப்பெருமானுடைய திருவிளையாடல்களை விரித்துரைக்கிறது.

கந்தவேளுடைய புனிதமாகிய சரித்திரத்தை அன்போடு பாராயனம் புரிவோர்க்கும், சிரவணம் புரிவோர்க்கும் இகபரசித்தி எளிதிலுண்டாகும்.

ச்ருணுத்வம் ருஷயஸ்ஸர்வே கததோமத் கதாம் சுபாம்
ஸ்கந்தஸ்ய கீர்த்தி மதுலாம் கலிகல்மஷ நாஸிநீம்.

(வரலாற்றோடுங் கூடிய கந்தன் புகழ்மையை முனிச்சிரேட்டர்காள்! கேண்மின்! இது கலியுகத்திலுண்டாம் பாவத்தைப் படிக்கக் கேட்டலினாலேயே பாற்றிட வல்லது)

—சம்பவகாண்டம்.

ஆக்யானநற் பஹுபிர்யுக்த மபீஷ்டபல ஸாதநம் !
ஆதரேண முநிச்ரேஷ்டாச் ச்ருணுத்வம் கதயாமிவ !!

(வேட்ட பலனை நல்கத்தக்க கந்தனது சரித்திரத்தை நுங்கட்கு கூறுவல் ; பிரியத்தோடு கேண்மின்)

— சம்பவகாண்டம்.

இத்தகைய பரமபவித்ரமான கந்தப்பெருமானுடைய இனிய திருவிளையாடலை சுருக்கமாக வரைகுதும். அன்பர்கள் படித்து இக பர நலன்களை எய்துவாராக.

சம்பவகாண்டம்

காப்பு.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுரை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

பார்வதி ஜனனம்.

திருக்கைலாய மென்னுந் திருமலை ஆயிரங்கோடி சந்திரர்கள் ஒருங்கு சேர்ந்து உதயமானால் எவ்வண்ணம் ஒளி செய்யுமோ அவ்வண்ணம் ஒளி செய்துக்கொண்டு விளங்கும் சிவபெருமான் தன்னை யடுத்த அடியார்களது பாசத்தை நீக்கி தமது திருவருளைத்தருமாறு போல் அவ்வெள்ளியங்குன்றம் தன்னைச் சார்ந்தோருடைய ஒளியை மாற்றி தனது நல்லொளியை வீசிக்கொண்டிருக்கும். கொன்றை, வில்வம் முதலிய தருக்களின் சோலைகளால் அம்மலை இயற்கையழகுக் கிருப்பிடமானது முக்கண்ணும், நாற்புயமும், பொன்மேனியு முடைய நந்தியெம்பெருமான் பொற்பிரம்பைக் கரத்திலேந்தி காவல் புரிந்துகொண்டிருப்பர். இந்திரன் முதலிய இமயவர், ஈறில்லாத மாதவமுடைய இருடிகள், சிவனடியார்கள், சிவகணங்கள் முதலியோர் எப்போதும் அம்மகா மலையில் வாழ்ந்துகொண்டிருப்பர். அரம்பையர்களின் ஆடலும், கந்தருவர்களின் பாடலும், வீணை முதலிய இனிய வாத்தியங்களும், தேவர்களின் வாழ்த்தும், எக்காலத்தும் அம்மலையில் ஒலித்துக்கொண்டிருக்கும்,

ஊழிகாலத்து மழியாத அவ்வெள்ளியங்கிரியின் மத்தியில் நவமணிகளின் நல்லொளி வீசிக்கொண்டு பொன்னெடுங்கோயில் ஒன்று பொலிவுற்றிருந்தது. அத்திருக்கோயிலின் நடுவில் வனப்புகளுக்

குறைவிடமாக விளங்கும் மணிமண்டபத்தில் நவமணியிழைத்த அரியணைமேல் அம்பிகையுடன் சிவபெருமான் எழுந்தருளியிருந்தனர். தும்புருநாரதர், கந்தருவர், செந்திருமுனிவர் முதலியோர் இனிய கானம் புரிந்துகொண்டிருந்தனர்.

அத்தருவாயில் அம்பிகை மனத்தில் ஒன்றை நினைத்து துணுக்குற்று விரைந்தெழுந்து, சிவபெருமானைத் தொழுது, "கற்பனை கடந்த கண்ணுதலே! சிவ அபராதியாகிய தக்ஷனுடைய மகள் என்னும் பொருள்படும் தாக்ஷாயணி என்ற பெயரை யான் பூண்டிருத்தல் தகுதியன்று. அவனால் வளர்த்த இவ்வுடலையும் அவனுடைய மகளென்னும் பெயரையும் இனி தரித்திரேன்; அவை நீங்குமாறு திருவருள் புரிதல் வேண்டுமென" வேண்டினர். சிவபெருமான் "ஒப்பற்ற அன்புடைய ஒண்டொடி! உலகத்தில் ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் இங்ஙனம் நினைத்தனை; நினது எண்ணம் நன்மையுடைத்தே; மலையரசனாகிய இமவான் நின்னை மகளாகப்பெற்று எமக்குத் தருமாறு விழைந்து பெருந்தவம் புரிகின்றனன். அவன் விருப்பம் நிறைவேறுமாறு நீ அவனுக்கு மகளாகச் சென்று வளர்குதி. ஐந்தாவது ஆண்டில் நம்மை நோக்கி நற்றவம் புரிதி; அக்கால் கணங்களோடு நாம் வந்து நின்னை மணங்கொண்டு திருவருள் புரிவோம்; செல்லுதி" என்று அருளிச்செய்தனர். விடையவன்பால் விடைபெற்ற உமாதேவியார் வெள்ளி வெற்பைவிட்டு இமயமலையை எய்தினர்.

கீழ்த்திசைக்கடலும் மேற்றிசைக்கடலும் ஒன்றுகூடாவண்ணம் தடைசெய்ய நிற்பதுபோன்று விண்ணளாவிய இமயமலை எழில் செய்து விளங்கும். அம்மலையின்மேல் தேவாமிர்தமொத்த தெண்ணீருடைய பத்மை என்னும் தடாகமொன்று திகழும் அத்தடாகத்தில் இமவான் கௌரியம்மை தனக்கு மகளாகத்தோன்றவும், அவரை அரனார்க்கு நல்கவும் விழைந்து பெருந்தவமாற்றி நின்றனன்.

எல்லா வுலகங்களையுமீன்ற எம்பிராட்டி அத்தடாகத்தில் அழகிய தாமரை மலரின்மேல் கண்களைக்கவரும் கட்டழகுடைய இளங் குழந்தை வடிவத்துடன் வீற்றிருந்தனள். அத்தெய்வக்குழந்தையை இமவான் கண்டு அடியேனை ஆட்கொள்ளும்பொருட்டு அகிலாண்ட கோடி யீன்ற அன்னை குழந்தையாகவந்து அமர்ந்தனள் என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, உரோமஞ் சிலிர்க்க பெருங்களிப்புற்று

"அடியனேன் தவம் பலித்தது" என்று ஆனந்தக்கூத்தாடி அம்பிகையைத் தொழுது குழந்தையைக் கரத்திலெடுத்து சென்னிமேற் றூங்கிக்கொண்டு, தனது பொன்மாளிகை புக்கு தனது தரும பத்தினியாகிய மேனையின் கரத்திலே மகவை நல்கினன்.

பருவதராஜனாற் கொடுக்கப்பெற்ற தெய்வக் குழவியை மேனை தொழுது வாங்கி, குழந்தை கிடைத்த வரலாற்றைக்கேட்டு ஈசனாது இன்னருளால் இம்மகவு கிடைத்தது என்று மனமிகமகிழ்ந்து மார் போடணைத்தனள். கொங்கைகள் பால் சுரந்தன பரிபுரம், தண்டை, சங்குவளை, ரத்தினச்சுட்டி, மதாணி, பொற்றோடு, அங்கதம் முதலிய பொன்னாபரணங்களை குழந்தைக்குத்தரித்து பொன்னாலாகிய தொட்டி லில் தாலாட்டி, உலகங்களையெல்லாம் ஈன்று வளர்த்த உலகமாதாவை மகளாகப் பெற்றுவளர்த்தனள். பருவதராஜனுக்கு மகளாக வந்தத னால் பார்வதி என்னுந் திருப்பெயரைப் பெற்றனர்.

பார்வதியாருக்கு வயது ஐந்து ஆயிற்று. அத்தருணத்தில் அம் பிகை ஆலமுண்ட அண்ணலில் ஆணையை நினைத்து இமவானைநோக்கி, "ஐய! மணிகண்டப் பெருமானை மணம் புரிந்துகொள்ளுமாறு அப்பெருமானைக் குறித்துத் தவம்புரிவேன். அதற்கு இம்மலையிலோர் பால் தவச்சாலை யொன்றை நியமித்தருவீர்" என்று கூறினர். அத னைக்கேட்ட மலையரையன் "அம்மா! தவம் என்பது சாமானியமன்று; உடல் வருந்தித் திடஞானத்துடன் செய்தல்வேண்டும்; அதற்கு இது பருவமன்று; உனக்கு வயது ஐந்தே நிறைந்துளது; நின் உடல் தவம் புரிதற்கு வலிபெறவில்லை; ஆதலால் தவம் புரியும் எண்ணத்தைத் தவிர்தி" என்றனன். அங்ஙனமே தாயுந் தடுத்தனள். உமாதேவி "எந்தாய்! எவ்வுயிரையுங் காக்கவல்ல ஈசன் ஒருவனுண்டு; அவனரு ளின்றி யாரும் தம்மைத் தாமே காத்துக்கொள்ள இயலாது; இப் போது யான் கூறுவதும் அவன் திருவருளே; தடை செய்யாது விடை தாரும்" என, மன்னன் இசைந்து தவச்சாலை செய்து மகளை அதி விருத்தி, அநேக கன்னியரைக் காவலாகச் செய்து வேண்டுவ செய் தான். பார்வதியார் தவச்சாலை சென்று கன்னியர் பலர்சூழ கண்ணு தற் பரமனை மன மொழி மெய்களால் வழிபாடு செய்து அருந்தவத் திருந்தனர். மலையரசனும் மேனையும், தினந்தோறும் மகளைப்போய்ப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

(தொடரும்)

கற்பு.

(369-ம் பக்கத் தொடர்ச்சி)

சுகன்னி.

பெண்களுக்குக் கணவனே தெய்வம்; கணவனுடன் வசித்தலே சுவர்க்கலோகவாசம். நாயகன் வயோதிகனாக இருக்கினும் அவனையே நன்கு வழிபாடு செய்தல்வேண்டும் இத்தகைய அசைவற்ற கற்புடைய பத்தினியை உடையவனுக்கு அடையத்தகாத பொருள் மூவுலகிலுமில்லை. இதனை விளக்கும் சுகன்யோபாக்யானத்தை ஈண்டு வரைகுதும்; பெண்மக்கள் படித்துப் பயன்பெறுவார்களாக

பிருகு முனிவருக்கு புலோமை என்னும் தருமபத்தினியிடம் சியவனர் என்னும் புதல்வர் தோன்றினர். அவர் தவத்தையே தனமாகக்கொண்டவர். பொறிகளையும் புலன்களையும் வென்றவர், அவர் ஒரு கானகத்தில் கடுந்தவம் புரிந்திருந்தனர். மிகுந்த ஒளியையுடைய அவர் வீராசனத்துடன் சித்திரதீபம்போல் அசைவற்ற மனத்துடன் ஒரேயிடத்தில் கம்பம்போல் நெடுங்காலமிருந்தனர். அதனால் அவரைக் கொடிகள் சூழ்ந்தன; புற்று மூடியது; புத்திமானான அவர் மண்முட்டுப்போல எல்லாப் பக்கங்களிலும் சூழப்பட்டவரானார். புற்றினால் சூழப்பெற்று பயங்கரமான தவத்தைப் புரிந்துகொண்டிருந்தனர்.

நெடுங்காலத்திற்குப்பின் சந்திரகுலத் திறைவனாகிய சர்யாதி விளையாடுவதற்காக பரிவாரங்களுடன் தனது மகள் சுகன்னியுடனும் அக்கானகத்திற்கு வந்தனன். நதிகளாலும், நறுமலர்ச் சோலைகளாலும், அழகிய சிறு குன்றுகளாலும் அவ்வனம் மிக்க இயற்கை வனப்புடன் இலங்கியது. சர்யாதிக்கு நாலாயிரம் பத்தினிகள் இருந்தனர். அழகிய புருவங்களுள்ள சுகன்னி ஆடையாபரணங்களால் அலங்கரித்து தோழிகளுடன் உலாவிக்கொண்டு சியவனர் தவம்புரிகின்ற புற்றை அடைந்தனள். தோழிகளால் சூழப்பட்ட அம்மாதரசி அங்கே மனத்தை மகிழ்விப்பதான பூமியைப் பார்த்துக்கொண்டும் மலர்களைப் பறித்துக்கொண்டும் விளையாடினள். தோழிகளைப் பிரிந்து தனியாக

மலர்மிசைவாழும் திருமகளைப்போல மெல்ல உலாவிக்கொண்டிருந்தனள். அறிவிற் சிறந்த அருந்தவராகிய சியவனர் தனித்திருப்பவளும் ஒற்றையாடை யுடுத்தவளும் அலங்கரிக்கப்பட்டவளும் ஆகிய அப் பெண்மணியை அசைந்து கொண்டிருக்கிற மின்னலைப்போலக் கண்டார். மிகுந்த ஒளியுடைய அவர் ஜனங்களில்லாத இடத்தில் அவளைக் கண்டுகளித்தனர். குரல் மெலிந்தவரும் தபோபலத்துடன் சேர்ந்தவருமாகிய சியவனர் சுகன்னியை அழைத்தனர். அவளுக்கு இவருடைய சொல் கேட்கவில்லை. பிறகு சுகன்னி புற்றில் சியவனருடைய கண்களைப்பார்த்து அறிவுமயக்கத்தால் வலிமைசெய்யப்பட்டவளாகி மகிழ்ச்சியால் 'இது என்ன?' என்று கூறி முள்ளினால் அவருடைய கண்களைக்குத்தினாள். உடனே சியவனர் சினமடைந்து சர்யாதியினது சேனைகளின் மலஜலங்களைக் கட்டிவிட்டார். மலஜலங்கள் தடுக்கப்பட்டவுடன் சேனையானது மிக்கத் துன்புறுவதாயிற்று. அதனைக்கண்ட அரசன் தன் பரிசனங்களை நோக்கி, 'தவத்தில் எப்பொழுதும் நிலைபெற்றவரும், வயது முதிர்ந்தவரும், மிகுந்த கோபமுடையவருமாகிய சியவனருக்கு இப்போது இங்கே தெரிந்தோ தெரியாமலோ தீமை செய்ததுயார்? அதனை விரைவில் கூறுங்கள்; தாமதித்தல்கூடாது'' என்று வினவினன். அது கேட்ட அனைவரும் "மநுநெறிநின்ற மன்ன! நாங்கள்யாரும் சியவனருக்குத் தீமை புரிந்தோமில்லை. எல்லா உபாயங்களாலும் அதனை அறிந்து கொள்ளும்" என்றனர். பின்னர் மன்னன் தானே நண்பர் கூட்டத்தை நயமாகவும் பயமாகவும் கேட்டான். மலஜலபந்தத்தால் துன்புற்று வருந்துகிற சைன்யத்தையும் அதுகண்டு கவலையுற்ற பிதாவையும் கண்டு சுகன்னி, சர்யாதியை நோக்கி, "அப்பா! நான் இங்கு உலவிக்கொண்டிருந்தபோது புற்றுக்குள் ஒளி செய்கின்ற ஒரு பிராணியைக் கண்டேன். நான் அதனை மின்மினிப்பூச்சிபோன்றதென்றெண்ணி அருகில்சென்று குத்திவிட்டேன்" என்றனள். மன்னன் கேட்டு திடுக்கிட்டு விரைவாகப் புற்றை நோக்கிச் சென்றனன். அதில் சந்திர சூரியர் போல் ஒளியுள்ளவரான தவமுதியவரைக் கண்டான். அரசன் கைகூப்பிக்கொண்டு "அருந்தவப் பெரியீர்! என்னுடைய சிறுமி அறியாமையால் உமக்குச்செய்த அபராதத்தை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டினன்.

பிருகு புத்திரரான சியவனர் மன்னனை நோக்கி, "அகங்காரத்தால் நிறைந்த இப்பெண்ணால் நான் அவமதிப்பினால் குத்தப்பட்டேன்.

கொற்றவ! இணையற்ற எழிலும் கம்பீரமும் உடையவளும் லோபத் தாலும் மோகத்தாலும் வசப்படுத்தப்பட்டவளுமான உன்னுடைய அந்தப்பெண்ணையே நான் மணம்புரிந்தால் மன்னிப்பேன்; இதனை உண்மையாக உணர்வாயாக" என்றுகூறினர். முனிவருடைய மொழி களைக்கேட்ட முடி மன்னன் ஆராயாமலே அருந்தவமுனிவருக்குத் தனது பெருந்தவப் புதல்வியைக் கொடுத்தான். முனிவர் கன்னிகை யைப்பெற்று அருள்புரிந்தனர். அருளைப்பெற்ற அரசன் சேனைகளு டன் நகரஞ்சென்றனன். கற்பிற் சிறந்தவளாகிய சுகன்னி வயது முதிர்ந்த மாதவரை மணாளனாக அடைந்து, அன்புடனும் தவத்துட னும் அடக்கத்துடனும் அவருக்குத் தினந்தோறும் ஏவல்புரிந்துவந் தாள். அரச செல்வத்தை அநுபவித்த அம்மாதரசி அரண்யத்தில் கிழவராகிய முனிவரை சிறிதும் அவமதியாது அவருடன் வசிப்ப தையே இந்திரலோக வாழ்வாகவும், அவருக்குப் பணிவிடை புரிவ தையே பெறத்தக்க பேறெனவும், அவருடைய வாக்கே வேதவசன மெனவும் எண்ணி மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தனள். அசூயை இல்லாதவளும் அழகிய முகமுள்ளவளுமான அவள் அக்கினிகளுக்கும் அதிதிகளுக்கும் விரைந்து பணிசெய்து சியவனரை ஆராதித்து வந் தாள்.

சிலகாலம் சென்றபின் அசுவினி தேவர்கள், நீராடிக்கொண்டு ஆடையால் மறைக்கப்படாதவளான அந்த சுகன்னியைக் கண்டார் கள். பார்த்தற்கு இனிய அங்கங்களுள்ளவளும் தேவராஜனுடைய புதல்வியைப் போன்றவளுமான அவளைப்பார்த்து அசுவினிதேவர்கள் எதிரில் ஓடிவந்து, "அழகிற் சிறந்தவளே! நீ யாருக்கு உரியவள்? இந்தக்காட்டில் என்னசெய்கிறாய்? கல்யாணி! உன்னை அறிய விரும் புகிறோம், உண்மையைக்கூறுதி" என்றனர். சுகன்னி ஆடையைச் சுற்றிக்கொண்டு அந்தத் தேவச்சிரேஷ்டர்களை நோக்கி, "என்னை நீங் கள் சர்யாதியின்புதல்வி யென்றும் சியவனருடைய மனைவியென்றும் தெரிந்து கொள்ளுங்கள்; என்பெயர் சுகன்னி. நான் எல்லா விதங்க ளாலும் எப்பொழுதும் கணவனையே அநுசரித்தவள்" என்று சொன்னாள். அசுவினிதேவர்கள் நகைத்து மீண்டும் அம்மடவாலைப் பார்த்து, "மாதரசே! நீ எப்படி பிதாவினால் கொடுக்கப்பட்டு வந் திருக்கிறாய்? இந்த வனத்தில் நீ பிரகாசிக்கின்ற மின்னலைப்போல் விளங்குகிறாய். பயந்தவளே! தேவர்களுள்ளும் உனக்கு நிகராக இருப்பவளை நாங்கள் பார்க்கவில்லை. அழகிய ஆரணங்கே! ஆபரணங்

களில்லாதவளும் சிறந்த ஆடைதரியாதவளுமான நீ அலங்கரிக்கப் படாதவளாக இருந்தும் கானகத்தை அதிகமாகப் பிரகாசிக்கச் செய்கிறாய். கல்யாணி! எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுச் சிறந்த ஆடையை உடுத்தால் நீ நன்றாகப் பிரகாசிப்பாய். இவ்வண்ணம் அழுக்கும் சேறுமுள்ளவளாயிருந்தால் பிரகாசிக்கமாட்டாய். இத்தகையளாயிருந்தும் யாது காரணம்பற்றி மூப்பினால் தளர்ந்தவரும் காமபோக்ங்களுக்கு விலக்கானவருமான பதியை அடைந்திருக்கிறாய்? குற்றமற்றவளே! இணையற்ற எழிலுடைய நீ இரட்சிப்பதிலும் மகிழ்ச்சியைத் தருவதிலும் திறமையில்லாத சியவனரை விட்டுவிடு. எங்கள் இருவருள் ஒருவரை வரிப்பாயாக. தேவகன்னிகையைப்போன்ற காந்தியுடையவளே! இந்தப் பதிக்காக உன் யௌவனத்தை வீணாக்காதே'' என்று மொழிந்தார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சுகன்னி ஒரு சிறிதும் மனம் மாறினாளில்லை. கலங்காத சித்தத்தையுடைய அக்கற்பரசி அசுவனி தேவர்களைப்பார்த்து, "நான் பர்த்தாவாகிய சியவனரிடத்தில் பற்றுள்ளவள். என்னைப்பற்றி நீங்கள் சந்தேகிக்கவேண்டாம்'' என்றனள். அவ்விருவரும் மீளவும் அவளை நோக்கி, பெண்ணரசே! நாங்கள் தேவ வைத்தியர்கள்; உன்னுடைய பதியை யௌவனமுள்ளவரும் அழகுபொருந்தியவருமாகச் செய்வோம். பிறகு அவரும் நாங்களுமாகிய எங்களுக்குள், ஒருவரைப் பதியாக வரிப்பாயாக. பெண்மணியே! இந்த உடன்பாட்டினால் பதியை ஆராய்ந்துகொள்'' என்று சொன்னார்கள் சுகன்னி அந்த வசனத்தை கேட்டு சியவனரிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறினாள். அது கேட்ட சியவனர் மனைவியை நோக்கி, 'செய்யலாம்' என்றனர். கணவனால் அனுமதிக்கப்பெற்ற அவள் அசுவினி தேவர்களை நோக்கி 'செய்யலாம்' என்றனள். அசுவினி தேவர்கள் மாதரசியே! உன்னுடைய பதி நீரில் மூழ்கக்கடவர்'' என்று கூறினார்கள். அதன்பின் சியவனர் ரூபத்தை விரும்பினவராகச் சீக்கிரம் நீரில் மூழ்கினர். ஆதித்தன் புதல்வர்களாகிய அசுவினி தேவர்களும் அப்பொழுது அந்தத் தடாகத்தில் மூழ்கினார்கள். பிறகு ஒரு முகூர்த்த காலத்திற்குப்பின் அம்மூவரும் திவ்ய ரூபத்தைத் தரித்தவர்களும், யௌவனமுள்ளவர்களும், ஒரே விதமானஉருவத்தைப் பூண்டவர்களும், மனத்திற்கு அன்பைப் பெருக்குகின்றவர்களுமாகி அத்தடாகத்தினின்றுங் கரையேறினார்கள். அம்மூவர்களும் ஒருவரைப்போல் ஒருவாக இருந்தார்கள்.

அடையாளங்கண்டுபிடிக்க முடியாத நிலையில் வித்யாசமின்றி இருந்தார்கள்.

மூவர்களும் ஒன்று சேர்ந்தவர்களாக, "கல்யாணி! மங்களத்தை உண்டுபண்ணுகிறவளே! சிறந்த நிறமுள்ளவளே! எங்களுள் இஷ்டமான ஒருவரைப் பதியாக வரிப்பாயாக. புகழுள்ளவளே! நீ அசுவினிதேவர்களையாவது சியவனரையாவது யாரிடத்தில் விருப்பமுள்ளவளாக இருக்கிறாயோ அவரை வரிப்பாயாக" என்று சொன்னார்கள். அந்தத் தேவி ஒத்த ரூபத்தைத் தரித்து நிற்கின்ற மூவர்களையும் பார்த்து கற்பின் பெருமையால் மனத்தாலும் புத்தியாலும் நிச்சயித்துத் தன் பர்த்தாவாகிய சியவனரையே வரித்தாள். சியவனர் மனைவியையும் விரும்பப்பட்ட வயதையும் அழகையும் மிக்க ஒளியையும் அடைந்து கரையற்ற களிப்புற்று அசுவினிதேவர்களை நோக்கி, "வயது முதிர்ந்தவனாக இருந்த நான் உங்களால் நல்ல ரூபம் பொருந்தியவனாகவும் இளமையுடையவனாகவும் செய்யப்பட்டு கற்பரசியாகிய இவளையும் மனைவியாக அடைந்தேனாதலால், நான் அன்பினால் தேவர் கோமான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே யாகத்தில் சோமரசத்தைப் பருகுகிறவர்களாகச் செய்வேன். இது உண்மை" என்றனர். அவர்கள் கேட்டு மனமகிழ்ந்து வானடு சேர்ந்தார்கள். கற்பின் மிக்க சுகன்னியும் சியவனரும் இனிது வாழ்ந்தார்கள். உத்தம மனைவியால் அடைதற்கரிய நலனை சியவனர் பெற்றனர்.

(தொடரும்)

உபதேசம்.

தண்ணீரும், நீர்க்குமிழியும், வாஸ்தவத்தில் ஒன்றேயாகும். புற்புதம் நீரில் பிறந்து, நீரில் மிதந்து, நீரிலேயே மறைகின்றது. அதுபோல ஜீவாத்மாவும், பரமாத்மாவும், யதார்த்தமாக சுவரூபத்தில் ஒன்றேயாகும். பரஸ்பரம் காணப்படும் பேதங்களெல்லாம் அளவிலேயே ஒழிய இனத்தில் கிடையாது. ஜீவன் ஓர் அளவுக்குட்பட்ட சிறியவனும், பரமாத்மாவைப் பற்றி இருப்பவனுமாம். பரமாத்மாவோ எல்லையில்லா அகண்டரும், தன்னிகரில்லா சுதந்திரருமாக இருக்கிறார்.

இராமகிருஷ்ணர்.

ஓம் குஹாயநம :

பிரமசரியம்

மெய்யன்புடையீர் !

மனிதனுடைய உயிர்வாழ்க்கை நான்கு பிரிவுகளாக அமைந்திருக்கிறது. அவை :—பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாஸம் என்பன. அவற்றுள் பிரமசரியம் என்பது உபநயனத்திற்குமேல் விவாகம் வரை நியமந்தவறாது இருக்கும் ஒரு சிறந்த நிலை. அந்த பிரமசரிய விரதத்தை விதிப்படி அனுஷ்டித்தல் வேண்டும், உலகில் பிரமசரிய நிலையை அநுஷ்டித்த பிறகே கிருகஸ்தாச்சிரமத்தையடையவேண்டும். எல்லோரும் கல்யாணத்திற்குமுன் இந்தப் பிரமசரிய நிலையில் இருக்கின்றனர். ஆனால் விதிப்படி இருக்கின்றனரா ? பிரமசரியம் என்ற நிலையை எவ்வாறு கழித்தல் வேண்டும் ? என்பது பற்றிச் சிறிது வரைகுதும்.

ஐந்தாவது ஆண்டில் சற்குருவையடுத்து அறிவைத் தருகின்ற அறநூல்களை ஓதுதல் வேண்டும். அங்ஙனம் வேதம் ஆகமம் வேதாங்கம் தருமநூல் முதலியவைகளைக் கற்குங்கால் குருபக்தி விநயம் என்ற இரு குணங்களை முக்கியமாக மேற்கொள்ளல்வேண்டும். ஆசாரியனைக் கடவுளாக நினைத்தல்வேண்டும்; "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற அறமொழியை நோக்குக. கற்கத்தொடங்குமுன் ஒவ்வொரு நாளும் குருநாதனை வணங்கி வடக்கேனும் கிழக்கேனும் திரும்பி கைகளைக் கட்டிக்கொண்டு ஓதல்வேண்டும். அமாவாசை, பௌர்ணமி, பிரதமை, சதுர்த்தசி, அட்டமி முதலிய விலக்கப்பட்ட நாள்களில் வேதமோதுதல் கூடாது. வேதம் ஆகமம் என்ற இரு நூல்களைத் தவிர ஏனைய புராணம் வேதாங்கம் முதலிய நூல்களை அமாவாசை பௌர்ணமி என்ற நாள்களைத்தவிர மற்ற நாள்களில் ஓதலாம். பாராயண நூல்களை எந்நாளும் ஓதலாம். பழைய காலத்தில் மாணவர்கள் குருவினது இருக்கையிலேயே வசித்து வந்தார்கள். அதற்கு 'குருகுல வாசம்' என்று பெயர். அப்படி

குருவின் இருக்கையிலிருக்குங்கால் பிட்சையெடுத்து குருவின் அனுமதிபெற்று உண்ணவேண்டும். இது நெடுங்காலத்திற்கு முன் அனுசரித்த தருமம். தற்காலம் வீட்டிலிருந்து கலை கற்கிறார்கள். முக்கியமான அடியில்வரும் விதிகளைத் தவறாமல் அனுஷ்டித்தல் வேண்டும். குருநாதன் கட்டளையிடுகின்ற ஏவலை சென்னிமேற்றாங்கி சிரத்தையுடன் செய்யவேண்டும். குருவினது கட்டளையைச் செய்துவிட்டு குருவினருகிற்சென்று வணங்கி 'செய்துவிட்டேன்' என்று சொல்லி பக்கத்தில் நிற்கவேண்டும். எல்லாக் காரியங்களிலும் சமர்த்தனாயிருந்து 'செய்வன திருந்தச் செய்' என்றபடி ஒழுங்காகத் தொழில்களைச் செய்யவேண்டும். முன்னேற்ற மடையவேண்டுமென்ற விருப்பமுடைய ஒவ்வொரு பிரமசாரியும் குருவை அலட்சியம் செய்யக்கூடாது. குருவின் வலப்பக்கமாக இருக்கவேண்டும்; குரு அழைத்தால் உடனே போகவேண்டும். நீராடி பரிசுத்தமான ஆடையை அணிந்து கடவுளை வழிபட்டு படிக்கவேண்டும். குருநாதன் ஒரு சமயம் கோபித்தாலும் அடித்தாலும் அன்பாகவும் அடக்கமாகவும் இருந்து கற்றல்வேண்டும். குருவின் சமீபத்தில் இருக்கும்போது கொட்டாவி விடுதலும் தும்முதலும் கால்நீட்டியிருத்தலும் கால்மேல் கால்வைத்து அமருதலுங்கூடாது. சமயம்பார்த்து தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களைக் கேட்டுத் தெளிதல்வேண்டும். குருநாதன் நிற்கும்போது தானும் நிற்கவேண்டும்; அவர் உட்காராமலிருக்கும்போது தான் உட்காரக்கூடாது. அவர் நித்திரை புரியாதிருக்கும்போது தான் நித்திரை செய்யப்படாது. *நிமிர்ந்த கரங்களால் அவருடைய பாதங்களை மெல்லப்பிடிக்கவேண்டும். இடப்பாதத்தை இடக்காத்தாலும் வலப்பாதத்தை வலக்காத்தாலும் பிடித்தல்வேண்டும். "குருநாதா! இந்தக் காரியத்தைச் செய்துவிட்டேன்; இதைச் செய்யப் போகிறேன்; இன்னும் நீங்கள் எதை ஏவுகின்றீர்களோ அதையுஞ் செய்வேன்; என்று எல்லாவற்றையுந் தெரிவித்து குருவின் அனுமதி பெற்றுக்கொண்டு விதிப்படி செய்யவேண்டும். செய்துவிட்டு மீளவும் அவற்றையெல்லாம் குருவினிடம் சொல்லவேண்டும்.

பிரமசாரி பழைய சோற்றையும் தேனையும் உண்ணப்படாது. சூரியனை வீணே பார்க்கப்படாது; உறவினரிடமிருந்து உண்ணுதலும்

---

* உள்ளங்கை.

அறிவீனர் கூட்டத்திற் சேர்தலும் கூடாது; சந்தனம், புஷ்பம், தாம்பூலம் ஆகியவற்றைத் தரிக்கப்படாது; எந்த வுயிரையும் இம்சிக்கப்படாது.

"நெல்லல் லமைத்த செழுஞ் சோறு பைந்தேனு நீப்பர்
கொன்னே யிரவி தனை நோக்குதல் கொள்கை யன்றே"

"காழ் கொண்ட சந்தங் கமழ்தா ரடைக்காயோ டாகா
வாழ்கின்ற ஆவி யெவையேனும் வதைத்த லாகா"

—காசிகாண்டம்.

பெண்கள் சமீபத்தில் இருத்தலும், அவர்களோடு கலந்து பேசுதலும், கீதங்கேட்டலும், கூத்துப்பார்த்தலும் ஆகாவாம். காமவுணர்ச்சியை வளர்க்கின்ற கதைகளைப் (நாவல்ஸ்) படிக்கவே கூடாது. ஆடும் படங்களைப் (சினிமா) பார்க்கப்படாது; சீட்டு முதலிய தீய ஆட்டங்களை ஆடப்படாது; கிடைத்தற் கரிய நேரத்தை கமரில் காமதேனுவின்பாலைக் கவிழ்த்ததுபோல் வறிதே கழிக்கப்படாது. பெண்களைக் குறிப்புப் பார்வையாக நோக்குதல் தகாது; பயனற்ற வார்த்தைகளைப் பேசப்படாது.

அறிவு என்கின்ற பயிரை நூல்கள் என்ற நீர்விட்டு பயிர்புரிந்த நல்லாசிரியனை நிந்திக்கப்படாது; ஒரு எழுத்தையோ? ஒரு பொருளையோ? கற்றுக்கொடுத்த ஆசாரியனுடைய மனம் வருந்துமாறு நிந்தித்தோர், ஊருக்கு மத்தியில் நாயாய்ப்பிறந்து ஒரு யுகம் வரை புழுவாகப் பிறந்து துன்புறுவர்.

ஓரெழுத் தொரு பொரு ளுணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே.

—திருமந்திரம்.

வேதங்களையும், வேதங்களின் நுண்மாண் பொருள்களையும் நன்முக எடுத்துப் போதித்தவர் ஆசாரியரென்றும், பொன் பெற்றுச் சொல்லிவைப்பவர் உபாத்தியரென்றும், எல்லா வினைகளும் ஒழியும்படி உபதேசித்தருளுகின்றவர் குருவென்றும் பெயர் பெறுவர்.

நல்வேதப் பொருள் யாவு நவின்று ளோர்கள்
தொல்லா சிரியர் பொருள்கொண் டவை சொல்லுகிற்போர்

ஒல்லாத தீங்குத் தபநூறு முபாத்தி யாயர்
எல்லா வினையு முடிப்போர் குருவென்ப ரன்றே,

—காசிகாண்டம்.

பிதா மாதா குரு இம்மூவரும் வழிபடத்தக்க தெய்வங்களாம்; பிதாவைக் காட்டிலும் மாதா உயர்வாகும்; தெளிவு உண்டாக்கிய ஆசாரியரை நிந்திப்போருடன் கூடப்படாது. தாய் தந்தை குரு ஆகிய குரவர் மூவரையும் புறங்கூறுவோர், கூர்மையான முட்கள் நிறைந்ததும் இருள் மிக்கதுமாகிய நரகத்தில் அநேக காலமிருந்து வருந்துவர்.

அருண் மேவுந் தந்தைதன்னி லன்னை யதிகமாதும்
தெருள் சேர் குரவற் பழிப் போரிடை சேர்தலாகா
மருளோடு மன்னோர் புறங்கூறுநர் வைமுள் ளேற்ற
இருண் மாநிரயந் தனிற் பற்பகலெய்து வாரே.

—காசிகாண்டம்.

தாய், சகோதரி முதலியவர்களானாலும் அவர்களுடன் பிரமசாரி தனித்த இடத்தில் வசிக்கப்படாது. அரசன், குரு, தமையன், மாமன் இவர்களது மனைவியரும், தன்னைப் பெற்றவளும் ஆகிய ஐவரும் தாய் மாராவர். சூரியன் உதிப்பதற்குமுன் எழுந்திருந்து நீராடி தெய் வத்தை வணங்கி நூல்களைக் கற்றல்வேண்டும்; சூரியன் உதிக்குமளவும் துயில் நீங்கி யெழாத பிரமசாரி அன்று முழுதும் புசியாமல் விரத மிருக்கக்கடவன்.

இத்தகை பிரமசரியம், பௌதிக பிரமசரியம், நைட்டிக பிரம சரியம் என இருவகைப்படும். இளமை தொடங்கி கல்யாணகாலம் வரை மேற்கூறிய ஒழுக்கத்தினின்று வழுவாதிருந்து விரதங்காப்பது பௌதிக பிரமசரியம்; மரணாந்தம்வரை விரதம் நியமித்துத் துறவி யாயிருப்பது நைட்டிக பிரமசரியம்,

பௌதிக பிரமசரியத்தை அனுஷ்டிப்பவன், ஆசாரியனிடத்தில் ஓதற்பாலனவாகிய வேதமுதலிய அறிவு நூல்களை ஓதியுணர்ந்து, அவருக்கு வேண்டிய தக்ஷிணைகளைத்தந்து அவரனுமதிபெற்று, தனது ஆயுளில் நாலிலொரு பாகத்தை பிரமசரிய விரதத்திற்கழித்து (அதா வது இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல்) விதிப்படி சமாவர்த்தன

மென்னும் விரதமுடிவைச்செய்து, நற்குடிப் பிறந்த நங்கையை விதிப்படி மணஞ்செய்துக்கொள்ளவேண்டும்.

நைட்டிக பிரமசரியத்தை அனுஷ்டிப்பவன், பெண்களுடைய பெயரையுஞ் சொல்லாமல், அவர்களுடைய வடிவத்தையும் நினையாமல் புலன்களை அடக்கினவனாய் ஆசையைவென்று, ஈசுரபக்தியுடன் மரண பரியந்தம் நெறிதவறாது இருத்தல்வேண்டும். ஒரு சமயம் இந்த நைட்டிக பிரமசாரி போகத்தின்கண் விருப்பமேற்பட்டால், ஆசாரியனிடஞ் சென்று உண்மையை யுரைத்து, ஆகமத்திற்கூறிய விதிப்படியே அவர் சந்நிதியில் நைட்டிக பிரமசரிய விரதத்தை இறக்கி நீராடி, அவரிடத்தில் வெள்ளை வஸ்திரம் இரண்டுபெற்று, பிராயச்சித்தஞ் செய்து முடித்து, அவரனுமதி பெற்றுக்கொண்டு விவாகஞ் செய்துகொள்ளல் வேண்டும்.

இவ்வாறு செய்யில் குற்றமில்லை. இப்படி விரதத்தை இறக்காது நைட்டிக பிரமசாரியாகவே இருந்துகொண்டு பெண்களுடன் சேருவானாயின், தன் உடலில் வளர்ந்த உரோமம் எத்தனை உண்டோ அத்தனை வருடம் மிகக் கொடிய ரௌரவமுதலிய நரகங்களிற் கிடந்துழலுவன். சுகசன்னி, நீரிழிவு, க்ஷயம், குஷ்டம் முதலிய நோய்களால் வருந்துவன். இவனுக்குக் கழுவாய் (பிராயச்சித்தம்) எந்த நூல்களிலும் இல்லை.

யட்சப்பிரச்னை.

வினா :—பிராமணர்களுக்கு தேவதன்மை எது ?

விடை :—இவர்களுக்கு வேதாத்தியயனமானது தேவதன்மை.

வினா :—ஸாதுக்களுக்கிருப்பதுபோல, அவர்களுக்கு தர்மம் எது ?

விடை :—ஸாதுக்களுக்குபோல் இவர்களுக்குத் தவமானது தர்மம்.

வினா :—அவர்களுக்கு மனுஷ்யத்தன்மை எது ?

விடை :—மரணம் இவர்களுக்குமனுஷ்யத்தன்மை.

வினா :—அஸத்துகளுக்குபோல அவர்களுக்கு அதர்மம் எது ?

விடை :—அஸத்துகளுக்குபோல, இவர்களுக்கு பரநிந்தை,

ஓம் குஹாய நம :

ஸ்ரீ பஞ்சாக்ஷரம்.

" வேணுகோபால் "

சகோதர சகோதரிகாள் !

பஞ்சாக்ஷரம் என்பது ஐந்தெழுத்தாலாகிய திருமந்திரம். மந்திரம் என்றால்:—மந் நினைப்பவன் ; திரம்-இரக்ஷித்தல், காத்தல் ; அதாவது நினைப்பவனை இரட்சிப்பது என்று பொருள்.

யாவனொருவன் யாதொரு மந்திரத்தை முறையாக நினைப்பானாயின், அம்மந்திரம் அவனைத் துன்பத்தினின்றுங் காப்பாற்றி நன்மை யடையுமாறு அனுக்கிரகம்பண்ணு நிற்கும்.

"மகாரம் மநநஞ்சை வத்ராகாரம் த்ராணழச்யதே
மநநத்ராணமித்யா ஹூர்மந்ரமித்ய பிதீயதே "

என்பது பிரமாணம்.

மேல்காட்டிய பஞ்சாக்ஷர மென்பது நமசிவாய என்னும் ஐந்தெழுத்துக்களாகும். இதனை உச்சரிக்குங்கால் ' சிவாய நம ' என்றமையும் இதற்குச் சூக்கும பஞ்சாக்ஷரம் என்றும் பெயர். இதன் பொருள். சி-சிவம், வ-அருள், ய-ஆன்மா, ந-திரோதம், ம-மலம். " சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும் அவனெழுத் தஞ்சினடைவாம்," என்பதறிக.

அவற்றில் முன் இரண்டெழுத்துக்களும் பதியும், பின் இரண்டெழுத்துக்களும் பாசமும், நடு எழுத்தொன்றும் பசுவுமாகும். பதிக்கும் பாசத்துக்கும் இடைப்பட்டதாய் பாசத்தோடு சேர்ந்து பாசமாயும், பதியோடு சேர்ந்து பதியாயும், பாசமும் பதியும் அல்லாமல் தயங்கும் தன்மையை யுடையது பசு என்னுமுண்மை இதனல் நிலக்கும். பதியோடு கூடிய சம்பந்தத்தை ஞான நடனம் எனவும், பசுவோடு கூடிய சம்பந்தத்தை ஊன நடனம் எனவும் பெரியோர் கூறுவர். ஊன நடனமொழிந்து ஞானநடனம் தானே ஆதரிக்கற்பாலதென வேதாகமங்கள் முழங்கும். ஆதலால் நகார மகாரங்க

ளாகிய மலங்களைப் பின்றள்ளி யகாரமாகிய ஆன்மா வகாரமாகிய அருள்கூட்டச் சிகாரமாகிய சிவத்தில் அதீதப்படும்.

இதற்குப் பிரமாணம் : விருத்தாசல புராணம்.

"மகா வக்காம் வல்லினந்துறந்திடை யினத்தில்
இகலறுத்தின மாக்கியே நகரமதீறய்
வகாவத்சாத் நடங்கிட வொடுக்கமற்றவைபோற்
றுகளிலாவினஞ் சேர்ந்துறந் துறவர் பானின்றன்."

(பொருள்) மகார அக்ஷரமாகிய திரோதாயியை வல்லினமாகிய சிகாரவக்ஷரத்தை விடுத்து இடையினமாகிய நகார அக்ஷரமாகிய மலத்தை வகார அக்ஷரமாகிய அருளிலொடுக்கி, அவைகளை ஒடுக்கினதுபோல், குற்றமற்ற இனங்களென்னும் யகார அக்ஷரமாகிய ஆன்மாவை வகார அக்ஷரமாகிய அருளிலொடுக்கி அவ்வருளும் சிகார வக்ஷரமாகிய சிவமும் பேதமற்று அபேதமான அத்து விதானந்த நிலையில் விளங்குகின்ற மூர்த்திகளான பெரியோர்களிடத்தில் அநுசரித்திருந்தான் சுவேதாசன் இதனைப்பிரகாராந்தமாகவும் காட்டி விவகரிப்பாம், எங்ஙனமெனின் :

நம=சீவான்மா, சிவ=பரமான்மா, ஆய=ஐக்கியம். (சிவ) பரமான்வாகிய பதிக்கும், (நம) சீவான்மாவாகிய பசுவுக்கும், (ஆய) அருட்பராசத்தி வாயிலாக ஐக்கியமுண்டாமென்பது.

இந்த பஞ்சாக்ஷரம் பிரணவத்தின் பொருளாயிருப்பதாலும் அதைப்போன்ற பிரக மந்திரமாதலாலும், பரம பாவநகரமான மோக்ஷமந்திரமாகும். ஐந்தெழுத்துங்கூடிய இம் மகாமந்திரத்தின் முதலில் பிரணவமில்லை.

"வித்தியா ஸ்ருதிர் ருத்க்ருஷ்டா ருத்ரைகாதசி நீச்ருதௌ
தத்ர பஞ்சாக்ஷரீதஸ்யாம் சிவ இத்யக்ஷர த்ரயம்"

என்பதினால் வித்தைகளெல்லாவற்றுள்ளும் சுருதியே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும்; உருத்திரைகாதசினியே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும் சிவ என்னும் த்வயாக்ஷரங்களே உத்கிருஷ்டமானவையென்றும் தெரியவருகிறது. பிரணவம் வேறுதுணை வேண்டாது உச்சரிக்கப்படுவதேபோல் ஸ்ரீ பஞ்சாக்ஷரமும் வேறொன்றின் ஆஸ்ரயமில்லாமல் ஜபிக்கப்படுவதால் இரண்டும் தம்மில் வேறுபடாத ஒரே மந்திரமாகும். இதன் மகிமையோவெனின்:

" ஐந்து பூதமைம் பொறிகளோ டைம்புல னமர்ந்த
வைந் தெனுங் கருமேந்திய மைவர் காரணரா
மைந் தெனுந் தொழி லம்பெரும் பிரமங்க ளனைத்து
மைந் தெழுத்தினி லுணர்த்துவ ரறிவறிந் தவரே"

" அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே யமர்ந் திருந்தானே "

அதாவது பஞ்சாக்ஷரமாவது, நகார மகார சிகார வகார யகாரங்களாகிய ஐந்தெழுத்துக்களும் முறையே, பஞ்ச பூதங்களையும், பஞ்ச ஞானேந்திரியங்களையும், பஞ்ச கன்மேந்திரியங்களையும், பஞ்ச தன்மாத்திரைகளையும், பஞ்ச கலைகளையும், பஞ்ச சதாக்கியங்களையும், பஞ்ச சக்திகளையும், பஞ்சப் பிரமங்களையும், பஞ்ச கர்த்தாக்களையும், பஞ்ச கிருத்தியங்களையும், பஞ்ச வர்ணங்களையும், பஞ்ச பட்சிகளையும், தமதுள் அந்தர்ப்பாவமாய்க் குறிப்பித்து விளக்கிக்கொண்டு சத்தார்த்தப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் பிரேரக நிலயாதாரமாயிருக்கிறது.

இம்மட்டோ?

'சிவ' என்னும் ஆணெழுத்தும் 'நம' என்னும் பெண்ணெழுத்தும், 'ய' என்னும் அலிஎழுத்தும் சேர்ந்து பதி, பசு, பாசத்திலடங்கும். இது உச்சரிக்கப்படுகிற முறைமையினலே ஸ்தூல பஞ்சாக்ஷரம், சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம், காரண பஞ்சாக்ஷரம், மகா காரண பஞ்சாக்ஷரம், அதி சூக்கும பஞ்சாக்ஷரம் அல்லது மஹாமநு என ஐவகைப்படும். போகத்தைக்கொடுக்கக்கூடிய ஸ்தூல பஞ்சாக்ஷரம் "நமசிவாய" என்றும், மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் "சிவாயநம" என்றும் சொல்லப்படும்.

சூக்கும பஞ்சாக்ஷரத்திலுள்ள சிகாரம் சிவம், வகாரம் அருள், மகாரம் ஆன்மா, நகாரம் திரோதை, மகார மலம். ஆதலின், இந்த முறைமையை யுணர்ந்து ஊன நடனமாகிய நகார மகாரத்திலே சென்று ஜனன மரணப்பட்டுப்போகாமல், ஞான நடனமாகிய சிகார வகாரத்தைப் பொருந்திச் சிகார முதலாக உச்சரித்து, அப்படி உச்சரிக்கிற முறைமையையும் விட்டு, வகாரமாகிய ஞானம் தானய் நிற்கவே, சிகாரமாகிய ஞேயத்திலே அழுத்துவிக்கும். அது

எப்படியெனில், சத்தியாகிய வகாரம் இடமாகச் சிவமாகிய சிகாரத்தின் இடையிலழுந்தலே அத்தன்மை யுண்டாக்கும். இந்த அனுபவ ரகசியத்தையும், பஞ்சாக்ஷரம் ஏகாக்ஷரமா மாறி வகாரத்தில் நகாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும், அதில் யகாரமும் ஒடுங்கும் முறைமையினையும், காரணபஞ்சாக்ஷரம், மகா காரணபஞ்சாக்ஷரம், மகாமநு, இந்தமூன்றையுல் குருபரன் திருத்தாளைச் சேர்ந்து வழிபட்டுத்தெரிந்துகொள்ளலாம். இதுவே பிரம்மாநுபவம் என்னும் சுவாநுபவமாம். முடிவாக ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் ஒருவன் உணர்ந்துகொள்ளவேண்டியது யாதனில் துக்கநிவர்த்தியும் சுகப்பேறுமேயாம். "பாசங்கழன்ருல் பசுவுக்கிடம் பதியாம்" என்றும் அனுபவாளர் உரையே சான்ரும். ஆதலாலே

"மெய்த்த வோண்சிவ தத்துவ மதனினுமேலாந்
தத்துவாந்தா மின்மை போன்மறைகளின்றலைபாய்
வைத்த வைந்தெழுத் தாகிய மந்திரமதனில்
உத்தரம்பெறு மந்திரமிலையென வுணர்வாய்"

இதனுல் மூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்துக்கு மேற்பட்ட மந்திரங்கள் இல்லையென விளங்குகிறது.

"நமச்சிவாயவே ஞானமுங் கல்வியு
நமச்சிவாயவே நானறிவிச்சையு
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே"

பிழையுளதேல் ஆன்ருேர் பொறுக்க.

உ

ஓம் :

" திருப்புகழமிர்தம் " வளர்க !	" திருப்புகழமிர்தம் " சிறப்புரை.	" ஆனந்தாமிர்தம் " தருக ! !

"தி	ருப்புகழமிர்தம்" மிகமிகச் சிறந்த மாசிகை !	"தி
ரு	ப்புகழமிர்தம்" நம்பார்வைக்கு அரிய சஞ்சிகை ! " தி	ரு
ப்	புகழமிர்தம்" அறிவைப் பெருக்கும் பத்திரிகை ! " திரு	ப்
பு	கழமிர்தம்" உலகில் ஆராய்ச்சிக்கரிய வெளியீடு ! " திருப்	பு
க	ழமிர்தம்" காண்போர் கருத்திற்கினியைந்த மதிஅமிர்தம் !" திருப்பு	க
ழ	மிர்தம்" அதிமிக நற்றமிழ் அணிகலன் ! " திருப்புக	ழ
மி	ர்தம்" நல்லரு மருந்தாகிய கற்பகம் ! " திருப்புகழ	மி
ர்	தம்" படிபோர்க் கினிமை நல்குதேன் ! " திருப்புகழமி	ர்
த	ம்" ஆனந்தாநுபவப் பொக்கிஷம் ! " திருப்புகழமிர்	த
ம்	பூசனை செயத்தகு நல்லமிர்த மாதப் பத்திரிகை !" திருப்புகழமிர்த	ம்

க. அ. க. தமிழறிஞர் *	வாழ்க ! வாழ்க !! சிறப்புடன் வாழ்க !!!	* காயல்பட்டணம், 21—3—37.

உ

ஆதிசங்கரர்

வினு விடை மணிகள்.

கே:—எந்த ஆயுதம் எல்லோருடைய கையிலுமுள்ளது ?

ப :— யுக்தி (நியாயபூர்வமாக நிரூபணம் செய்யக்கூடிய சக்தி.)

கே :—எல்லோருக்கும் தாயார் யார் ?

ப :— பசு. (தன் குழந்தைக்குப் பால்கொடுத்துவிட்டு ஊருக்கும் பால்கொடுக்கும் பசு. அதை நாம் ரக்ஷிக்கவேண்டும்).

கே :—எது சேனை ?

ப :— தைரியம்.

கே :—எது எமன் ?

ப :— கவனமில்லாதிருந்துவிடல்.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

" திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர். 2 Vol. 2 | ஈசுவர வருஷம் வைகாசிமீ 1உ மே—1937 | இதழ் 2 No. 2

திருப்புகழ்.

திருச்செந்தூர்

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி
யுழலாதே

முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தானு
முனைமீதே

திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு
நடமாடுஞ்

செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்க அநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப் போது
வருவாயே

அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ்சோல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார
முடிமேலே
அஞ்சலிசெய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார
எழிலான
சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ்சோலடி யார்கள் வாரக் கார
எதிரான
செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்தில்நகர் வாழு மாண்மைக் கார
பெருமாளே.

பதவுரை.

அந்தண்-அழகிய குளிர்ந்த சிந்தையுடையவர்களால், *மறை வேள்வி* - வேதவிதிப்படி செய்யும் யாகங்களுக்கு, *காவல்கார* -இடையூறு நேராவண்ணம் காவல்புரியும் காவல்காரரே!, *செந்தமிழ்* - செவ்வையான தமிழ்மொழியாலாகிய, *சொல்பாவின்* - புகழ்ப் பாக்களாலாகிய பிரபந்தங்களை, *மாலைக்கார* - மாலையாகத் தரித்துக்கொள்பவரே! *அண்டர் உபகார*- தேவர்களுக்கு (சூரபன்மனாலேற்பட்ட சிறையை நீக்கி) உபகரித்தவரே! *சேவல்கார* - சேவற்கொடியைக் கரத்தில் தாங்கியவரே!, *முடிமேல் அஞ்சலி செய்வோர்கள்* - சென்னியின்மேல் செங்கரங்களைக் குவித்து வணங்குகிற அடியார்களுக்கு, *நேயக்கார* - சிநேகராக விளங்குபவரே!, *குன்று உருவ ஏவும்* - கிரௌஞ்ச மலையை ஊடுருவிச் சென்று பிளக்குமாறு செலுத்திய, *வேலைக்கார* - ஞானசக்தியாகிய வேலாயுதத்தையுடையவரே!, *அந்தம் வெகுவான* - மிகுந்த அழகுடைய, *ரூபக்கார* - திருமேனியைக் கொண்டவரே!, *எழில் ஆன* - அழகு மிகுந்த, *சிந்துர மின் மேவு* - தேவயானையின் மகளாகிய தேவகுஞ்சரியம்மையார் விரும்பு

கின்ற, போகக்கார - சிவ போகத்தையுடையவரே!, விந்தை குற மாது - அற்புதமடையத்தக்க அரிய குணங்களேயுடைய குறமகளாகிய வள்ளிநாயகியாருடன், வேளைக்கார - பொழுதைப் போக்குபவரே!, செஞ்சொல் - செவ்வையான சொற்களேயுடைய, அடியார்கள் - அடியவர்களிடத்து, வாரக்கார - அன்புடையவரே!, எதிர் ஆன - போர்க்களத்தில் எதிர்த்துவந்த, செஞ்சமரை - உதிரப்பெருக்கத்தால் சிவந்த அசுரர்களின் யுத்தத்தை, மாயும் மாயக்கார - இமைப்பொழுதில் மாயக்காரன்போல் மாய்த்தவரே!, துங்க ரண சூர - பரிசுத்தமான போர்வீரனுகிய சூரபன்மனை, சூறைக்கார - சண்டமாருதம்போல் அழித்தவரே!, செந்தில் நகர் வாழும் - திருச்செந்தூர் என்னும் திருத்தலத்தில் வசிக்கின்ற, ஆண்மைக்கார ஆண்மை (திடம்) யை உடையவரே!, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே!, மூந்து தமிழ் மாலை - பழமையான தமிழ்மொழியால், கோடி கோடி - கோடிக்கணக்கான கவிகளை, சந்தமொடு - சந்தத்தோடு, நீடு பாடி பாடி - நீளமாகப் பாடிப்பாடி, முஞ்சர் - இறந்துபோகின்ற கிழ்மக்களுடைய, மனைவாசல் தேடி தேடி - வீட்டுவாசலைத் தேடித் தேடி, உழலாது - (ஏ-அசை) பொருள் விருப்பத்தால் உழன்று அலையாவண்ணமும், முந்தைவினை (ஏ-பிரிநிலை) பிறவிகள்தோறும் புரிந்து பக்குவத்திற்கு வாராத சஞ்சித வினைகள், வராமல் போக - அடியேனைத் தொடர்ந்துவந்து துன்புறுத்தாமல் விலகிப்போகவும், மங்கையர்கள் காதல் - பெண்கள்மீதுள்ள ஆசையானது, தூரத்து ஏக - அடியேனைவிட்டு மிகுந்த தூரத்தில் ஓடிப்போகவும், மூந்து அடிமையேனை - வழிவழி அடிமைப்பட்ட பழமையான தொண்டனுகிய அடியேனை, ஆள (தான் உம்-அசைகள்) -ஆட்கொள்வதற்காக, முனைமீது (ஏ-அசை) - போர்க்களத்தினிடம், திந்திதிமி தோதி . . . . செஞ்செ ணகு சேகு - என்ற, தாளத்தோடு - தாளவரிசையுடன், நடமாடும் - நடனம் செய்கின்றதும், செம் சிறிய கால் - செவ்வையான சிறிய கால்களையுடையதும், விசாலதோகை - விசாலமான தோகையை யுடையதும், துங்க அநுகூல பார்வை - விக்கினமில்லாமையை யுண்டுபண்ணுகின்ற பரிசுத்தமான அருட்பார்வையையுடையதும், தீர - தைரியமுடையதும், செம்பொன் - சிவந்த பொன்னைப் போல் ஒளி செய்வதுமாகிய; மயில்மீதில் (ஏ-அசை) - மயில்வாகனத்தின்மீது ஊர்ந்து, எப்போது வருவாய் (ஏ-அசை) எந்தச் சமயத்தில் வந்தருள்வீர்?

பொழிப்புரை.

அந்தணர்களால் வேதவிதிப்படி புரியும் வேள்விகளுக்கு இன்னல் நேராவண்ணம் காவல் புரிபவரே!, செந்தமிழாலாகிய புகழ்ப்பாவினங்களை மாலையாகத் தரித்துக்கொள்பவரே! தேவர்களுக்கு அசுரரா லேற்பட்ட சிறைத்துன்பத்தை நீக்கி உதவி செய்தவரே! சேவற் கொடியைக் கரத்திலேந்தியவரே! சென்னிமேற் கரங்களைக் கூப்பி அஞ்சலி அஸ்தராகநின்று அன்புடன் வந்தனஞ்செய்வோர்களது சிநேகிதரே! (தாரகனுக்குத்துணைசெய்து மாயைக்கிருப்பிடமாயிருந்த) கிரௌஞ்சமலையை ஊடுருவிச்சென்று பிளந்தழிக்குமாறு செலுத்திய வேற்படையையுடையவரே! சிறந்தஎழிலுடைய இன்பவடிவினரே! அழகு மிகுந்த தேவயானையம்மையார் விரும்புகின்ற சிவபோகத்தை யுடையவரே! அதிசயமுறத்தக்க அருங்குணங்களையுடைய குறவர் குலக்கொழுந்தாகிய வள்ளிநாயகியாருடன் பொழுதுபோக்குபவரே! செவ்வையான சொற்களையுடைய அடியார்களிடத்தில் அன்புடையவரே! எதிர்த்துவந்த உதிரத்தால் சிவந்த அசுரர்களை ஒரு கணப் பொழுதிற்குள் மாயக்காரன்போல் மாய்த்தவரே! பரிசுத்தமான போர்வீரனாகிய சூரபன்மனை சுழல்மாருதம்போல் அழித்தவரே! திருச்செந்திலம்பதியில் வாழ்கின்ற ஆண்மையை யுடையவரே! பெருமையிற் சிறந்தவரே! பழமையான தமிழ்மொழியால் கவி மாலைகளை சந்தத்தோடு நீளமாகக் கோடிகோடியாக எந்நேரமும் பாடிக்கொண்டு, அழிந்துபோகின்ற மனிதர்களின் வீட்டுவாசல் தோறும் அவர்களைத் தேடிக்கொண்டு உழன்று அவமே அலையா வண்ணமும், பிறவிகள்தோறும் புரிந்த பழைய வினைகளாகிய சஞ்சித வினை என்னைவந்து தொடாமல் விலகிப்போகவும், பெண்கள்மீதுள்ள ஆசைப்பெருக்கமானது அடியேனைவிட்டு நெடுந்தூரத்தில் ஓடிப்போகவும், வழிவழியாக அடிமைப்பட்ட பழைய தொண்டனாகிய அடியேனை ஆட்கொள்ளுமாறு, போர்க்களத்தில் திந்திதிமிதோதி தீதித்தீதி தந்தத்தன தான தானத் தான செஞ்செணகு சேகு என்ற தாளவரிசைகளுடன் நடனமிடுவதும், செவ்வையான சிறிய பாதமும் விசாலமான தோகையும், அநுகூலத்தைச் செய்யும் தூய்மையான பார்வையும் தைரியமும் உடையதும், செம்பொன்போன்ற பிரகாசத்தை யுடையதுமாகிய மயில்வாகனத்தின்மீது எக்காலத்தில் வந்து திருவருள் புரிவீர்?

விரிவுரை.

முந்து தமிழ் :—

வடமொழிக்கும் தென்மொழிக்கும் ஆசிரியர் சிவபெருமானே யாவர். வடமொழியைப் பாணினிக்கும், தென்மொழியை அகத்தியருக்கும் சிவபெருமான் உபதேசித்தனர். சிவபெருமான் இந்த இரு மொழிகளின் வடிவமாக விளங்குகிறார்.

"ஆரியமுஞ் செந்தமிழும் ஆனான்காண்"

— தமிழ்மறை.

இந்த இரு மொழிகளில் ஆரியம் உலகவழக்கினின்றும் ஒழிந்தது. செந்தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளாக இளமையாகவே செழித்தோங்கியுளது. முச்சங்கத்திலும் நின்று நிலவியது. சாக்ஷாத் சிவபெருமானே மதுரையில் புலவர் குழாங்களில் தாமும் ஒருவராக இருந்து ஆராய்ந்த தனிச்சிறப்புடைத்து. நேற்று தோன்றி இன்று மறையும் ஏனைய மொழிகள்போலல்லாது எக்காலத்தும் எழில் குன்றாமல் இனிமை பயப்பது இத்தமிழ்மொழியே யாகும். சிவபெருமானே இதற்கு ஆசிரியராதலால் தொன்மை யுடைத்து. எல்லா மொழிகளுக்கும் முதன்மையுடைத்து எனினும் அமையும்.

முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி உழலாதே :—

இத்தகைய அரிய தமிழைப்பயின்று அம்மொழிக்குத் தலைவனாகிய இறைவனைப்பாடி அதன் பயனைப்பெறாது, பொருள் விருப்பத்தால் இன்றிருந்து நாளையிறக்கும் மனிதர்கள் வீடுதோறும் சென்று கொடாதவனைப் பாரிகாரி என்றும், குணமில்லாத கீழ்மகனை தருமபுத்திரனுக்கு நிகரானவனென்றும், சிறிதும் வலியற்றவனை விஜயனென்றும் வறிதே புகழ்ந்து வாழ்நாளையும் கல்வியறிவையும் கமரிற் கவிழ்த்த காமதேனுவின் பாலாக வீணாக்குகின்றனர்.

மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே
வில்லுக் கிவனென்று
கொடுக்கிலா தானைப் பாரியே யென்று
கூறினுங் கொடுப்பாரிலை
பொடிக்கொள் மேனியெம் புண்ணியன்
புகலூரைப் பாடுமின் புலவோர்காள்

அடுக்குமேல் அமருலகம் ஆள்வதற் கியாது
மையுற வில்லையே.

—*சுந்தரமூர்த்தி சுவாமிகள்.*

" வஞ்சக லோப மூடர் தம்பொரு ளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது பலபாவின்
வண்புகழ் பாரிகாரி என்றிசை வாது கூறி
வந்தியர்போல வீணி லழியாதே "

—*திருப்புகழ்.*

முந்தை வினை:—

பிறவிகள்தோறும் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் புரிந்த வினைகளானது மலைபோற் குவிந்து அனுபவித்தற்குரிய பக்குவப்படாது குவிந்துள. அவைகட்கு சஞ்சிதமெனப் பெயர். அவற்றை இறைவன் திருவருளாலேயே ஒழித்தல்வேண்டும். அந்த வினைகள் அழிந்துபோகும்வண்ணம் குமாரநாயகனை விரும்பி அழைக்கின்றார். வேலாயுதத்தையுடைய வீரன் அப்பெருமானே யாவர். வினைகளை அழிக்கவல்லது வேற்படை யொன்றேயாம். வினைகளழியவேண்டுமாயின் வேற்படையைத்தாங்கிய விமலனை வழிபடவேண்டும். வினைகளை அழிக்க வல்லது வேற்படையென்பதை அடியில் வரும் வாக்குகள் வலியுறுத்துமாறு காண்க.

" நிசர்கள்த மோடேனது தீவினையெலா மடிய
நீடுதனி வேல்விடு மடங்கல் வேலா "

—*(ஆறுமுகம்) திருப்புகழ்.*

" வினையோட விடுங்கதிர் வேல் "

—*கந்தரனுபூதி.*

மங்கையர்கள் காதல் தூரத்தேக :—

பொன்னாசையும் மண்ணாசையும் மனிதப்பிறவிக்கேயுள. பெண்ணாசை ஒன்றே எல்லாப் பிறவிகளுக்கும் உண்டு. எனவே பிறவிகள்தோறும் தொடர்ந்துவருவதாகிய பெண்ணாசையை இறைவன் திருவருளாலன்றி ஒழிக்கமுடியாது. இதுவேயுமன்றி அவ்வாசை மிகவும் வலியுடையதாதலால் சிறிது அருகிலிருந்தாலும் உயிரைவந்து பற்றி மயக்கத்தைச் செய்யும் ஆதலால் இம்மாதராசை மிகமிகத் தூரத்திலே யகலவேண்டும்.

கள்ளானது குடித்தாலன்றி மயக்கத்தை யுண்டுபண்ணுது. காமமோ கண்டாலும் நினைத்தாலும் மயக்கத்தை யுண்டுபண்ணும். ஆதலால் இப்பெண்ணுசையைப்போல் மயக்கத்தைத் தரும் வலி யுடைய பொருள் வேறென்றும் இல்லை. இதனை அடியில்வரும் வட மொழி தென்மொழி மறைகளாற் கண்டு தெளிக.

மாத்யதீ ப்ரமதாம் த்ருஷ்ட்வா ஸுராம் பீத்வாசமாத்யதீ!
தஸ்மாத் த்ருஷ்டி விஷாம்நாரீ தூரத: பரிவர்ஜயேத்||

—நாரதபரிவ்ராஜகம்.

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

—பொதுமறை.

தீயைக்காட்டிலும் காமத் தீ கொடியது; தீயில் விழுந்தாலும் உய்வு பெறலாம்; காமத்தீயில் விழுந்தார்க்கு உய்வு இல்லை; தீயானது உடம்பைமட்டும் சுடும்; காமத்தீ உடம்பையும் உயிரையும் உள்ளத்தையும் சுடும். அன்றியும் அணுகமுடியாத வெப்பமுடைய அக்கினிவந்து சூழ்ந்துகொண்டால் நீருள் மூழ்கி அத்தீயினுலுண்டாகும் துன்பத்தை நீக்கிக்கொள்ளலாம். காமத்தீயானது நீருள் மூழ்கினுலும் சுடும்; மலைமேல் ஏறி ஒளித்துக்கொண்டாலும் சுடும்.

ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகும் — நீருள்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்.

—நாலடியார்.

தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற் சுட லாற்றுமோ தீ.

—திருக்குறள்.

தீயானது தொட்டால்தான் சுடும்; காமத்தீயானது நினைத்தாலும் சுடும்; கேட்டாலும் சுடும்; இது வேண்டாமென்று தள்ளினுலும் ஓடிவந்து சுடும்; இதுவேயுமன்றி நஞ்சை யருந்தினுல்தான் கொல்லும்; இக்காமமாகிய விஷம் பார்த்தாலும் நினைத்தாலும் கொல்லுந்தகையது. ஆதலால் காமமானது விஷத்தைக்காட்டிலும், கள்

லேக்காட்டிலும், தீயைக்காட்டிலும், ஏனைய கொல்லும் பொருள் களைக்காட்டிலும் மிகவும் கொடியது.

உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற்
கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினாற்
கள்ளினுங் கொடியது காமத் தீயதே.

நெஞ்சினு நினைப்பரோ நினைந்து ளார்தமை
எஞ்சிய துயரிடை யீண்டை யுய்த்துமேல்
விஞ்சிய பவக்கடல் வீழ்த்து மாதலால்
நஞ்சினுந் தீயது நலமில் காமமே.

—கந்தபுராணம்.

முந்தடிமையேனை :—

அருணகிரிநாத சுவாமிகள் வழிவழியாக முருகனிடத்தில் அடிமைத்திறம் பூண்டவர். இதனை அடியில் வரும் திருப்புகழ் வாக்குகள் வலியுறுத்துமாறு காண்க.

" பழைய நினது வழியடிமையும் விளங்கும் படிக்கினி
துணர்த்தி யருள்வாயே "

" விராலி மலையில் விளங்கிய கந்த என்றனை
மகிழ் வோடு வந்திசெய் மைந்த னென்றெனை
வழிவழி யன்புசெய் தொண்டு கொண்டருள்
பெருமாளே"

" தஞ்ச மாகியே வழிவழி யருள்பெறும்
அன்பின வன தடிபுக ழடிமை."

" திந்தி திமிதோதி . . . . நடமாடும் "

மயிலினது நடனத்தின் சிறப்பை வர்ணிக்கின்றனர். குமாரக் கடவுள் ஊர்ந்துவரும் பசும்பொன் மயில், சக்ரவாளகிரி கிழிபடவும், கிரௌஞ்சசைலம் பிளக்கவும், மகாமேருகிரியும் அஷ்டகுலாசலங் களும் உலகங்களும் குலுங்கவும், ஆதிசேடனது ஆயிரம்பணமகுடங் களும் அதிரவும், சூரபன்மன்முதலிய அவுணர்கள் திடுக்கிட்டு நடு நடுங்கவும், நடிக்கின்ற திறத்தை அருணகிரியாரேயன்றி மற்றுயாரே புகழவல்லார்.

"சக்ரப்ரசண்டகிரி முட்டக்கிழிந்துவெளி
பட்டுக்ரவுஞ்ச சயிலந்
தகரப் பெருங்கனக சிகரச் சிலம்புமெழு
தனிவெற்பு மம்புவியுமெண்
டிக்குத் தடங்குவடு மொக்கக் குலுங்கவரு
சித்ரப்பதம் பெயரவே
சேடன்முடி திண்டாட ஆடல்புரிவெஞ்சூரர்
திடுக்கிடாநடிக்கு மயிலாம்."

—மயில்விருத்தம்.

அந்தண்மறை வேள்வி காவற்கார :—

அந்தண் என்பதை யாகத்திற்கு அடைமொழியாகக்கொண்டு அழகியதும் குளிர்ந்ததுமாகிய யாகமென்பாரும் உளர்.

வேதவிதிப்படி அந்தணர்களால் நியமத்துடன் புரியும் யாகத்திற்கு முருகப்பெருமான் காவல்காரராகஇருந்து இடையூறுகளை நீக்கி இன்பத்தை நல்குகின்றனர்.

யாக ரக்ஷக வரலாறு

காசிபமுனிவர்க்கு அதிதியென்னும் பத்தினியிடந் தோன்றியவர்கள் ஆதித்யர் என்னும் தேவர்கள். திதியென்னும் பத்தினியிடம் தோன்றியவர்கள் தைத்தியர்கள். திதி மைந்தர்களாகிய அசுரர்களுக்கும் சுரர்களுக்கும் போர்தொடங்கி இருதிறத்திலும் பலர் மடிந்தனர். தேவர் வேண்டுகோளுக்கிணங்கி திருமால் பாற்கடல் கடைந்து அமிர்தத்தைத் தேவர்களுக்கீந்து, அசுரகுலத்தை அடியோடு அழித்தனர். அஃதறிந்த திதியென்பாள் மிகவும் மனம்வருந்தி, காசிபரிடம்வந்து தன் குலநாசத்தைக்கூறி "நாயக! என் சந்ததி வளருமாறு ஓர் புதல்வனைத் தந்தருள்வீர்" என்று முறையிட்டனள். காசிபமுனிவர் "அன்புள்ளவளே! அஞ்சற்க; நின் அவாவின்படி குலவிருத்தி செய்ய ஓர் புதல்வனைத் தருகின்றேம்' என்று அருளுரைகூறி, குமாரக்கடவுள் வீற்றிருந்தருள்கின்ற திருத்தலங்கள் அறுபத்து நான்கனுள் ஒன்றாய புத்திரகாமம் என்னும் புனிதக்ஷேத்திரத்தை யடைந்து, ஆங்கோர் தூய இடத்தில் சால்யோத்தாரணம், தாரை சுத்திமுதலியவைகளுஞ்செய்து யாகசாலை வகுக்கத் தொடங்கினர். மனுசூத்திரம், இரவி சூத்திரம், மூனி சூத்திரம், மானவ சூத்திரம்,

திரபாகமண்டபம் என்னும் ஐவகைப்படும் யாகசாலைகளுக்குள் தங் கருமத்திற்குரிய யாகசாலை மானவரூக்கிரமாதலின் அதனைவகுத்து, வேதிகை, ஊர்த்வபட்டி. அதோபட்டி, துவாரம், குண்டலங்கள் இவை கற்பித்து, வேதியின் நடுவிலே பிரமபதமெனவும், நாற்புறத் திலும் தெய்வபதம், மானுடபதம், பைசாசபதம், இராக்கதபதம் என் னும் பதங்களும், அவைகளில் ஊர்த்துவமேகலை, அதோமேகலை, மத்திய மேகலை இவைகளும் கற்பித்துக் குண்டயோனி முதலியவை யும் வகுத்தார். மேலும் யாகசாலைக்குரியனவெல்லாம் செய்து, மறை முறைப்படி சிவாகம மந்திரங்களைக்கூறிச் செய்வாராயினர்.

" அந்த யாக முற்றுமேல் திதியென்பாள் வயிற்றில் கருப்ப முண்டாகும்; அங்ஙனமுண்டாயின் நமக்கும் நம் குலத்தார்க்கும் அழிவு நேரிடும் " என்று தேவர்கோமானும் திருமாலும் இடையூறு களை யியற்றத்தொடங்கினர்

காசிபர் அஃதுணர்ந்து வேள்விப்பதியாகிய வேற்கரத்கண்ணலை வேண்டுவாராயினர்.

யாவனங்கி வடிவானோன்
யாவனயத்தை யூர்ந்திடுவான்
யாவனங்கி பூவெனமுஞ்
மறைகளியம்பு மகபலத்தை
யாவன்கொடுக்கும் பொறியாகத்
தோன்று மெழிலோன்முக்கண்ணன்
யாவனவன்றன் பதமலர்க்கிங்
கடியேன் சரணம் புகநின்றேன்

யாவன் அக்கினிவடிவாயிருப்போன்; எவன் மேடவாகனத்தை யூர்வோன்; அம்மூர்த்தி அடியேனையும் யாகத்தையும் காத்தருள்க. 'சிவாக்கினிபூ' என்று வேதங்கள் முழங்கும் பொருளாயிருப்பவன் எவன்? யாகபலப்ரதான மூர்த்தி யாவன்? ஊர்த்வரேதசனும் அறு திசைகளைக் காப்பவனும் யாவன்? குமாரன் திரியம்பகன் யாவன்? அக்கடவுள் அடியேனையும் யாகத்தையும் காத்தருளும்படி அடைக் கலம் புகநின்றேன். யாகத்திலே மும்முறை "சுப்ரமண்யோம்! சுப்ரமண்யோம்!! சுப்ரமண்யோம்!!! என்று வேதங்களால் அழைக் கப்பெறும் ஆறுமுகப்பரம்பொருளுக்கு அடைக்கலம் என்று இவ் வாறு துதித்தார்.

இவ்வொலிகேட்டதும் சேய்குரல்கேட்ட தாய்போல் தன்னருள் சுரந்து தனிவேற்பரமன் பாலவடிவத்துடன் வேலாயுதமும் பல்லவமுந்தரித்த திருக்கரத்தினராய்த்தோன்றி, "அருந்தவத்தோய்! அஞ்சற்க, யாங்காத்தருள்புரிகின்றோம்; யாகத்தை முடிக்குதி" என்றருளினர். காசிபமுனிவர் கந்த சகத்திரநாமத்தால் அர்ச்சித்துச் சோடச ரூபதியானஞ்செய்து யாகம் புரிவாராயினர்.

தேவர்கள்புரியும் அபிசாரவேள்வியினின்றுந்தோன்றி, மலையன், மாரன் என்னும் அசுரர் இருவரனுப்பப்பட்டார். அவ்வசுரர்கள் முனிவரையும் யாகப்பொருள்களையும் விழுங்கவேண்டுமென்று ஆரவாரித்து நெருங்கினர்கள். காசிபர் பயந்து, ஞானசத்திதரா! பாலரூபா! பாஞ்சுடரே! ஓலம் ஓலம்" என்று துதித்தனர். அதுகேட்ட என்றுமகலாத இளமைக்கார எந்தையார் தங்கரத்திருந்த பல்லவத்தால் அவ்வசுரர் இருவரையும் கொன்று யாகத்தைக் காத்தருளினர். முனிவர் யாகத்தை நிறைவேற்றி, ஆங்கு முருகவேளை பிரதிட்டை செய்தனர். அதுவே புத்திரப்பேற்றை யளித்ததால் புத்திரகாமம் என்னும் பெயர் பெற்றது.

வரனயன் சுதன்றன் மனையருட்டிதிதன்
வமிசத்தை யழித்தமாயவனை
எரிசதக் கிருதை யழிசுதற் றருகேன்
றிரக்கவோர் வேள்வியை யியற்ற
வரியிருவருஞ் செயல்வறை தீர
வந்தடர் மாரனர் மலையார்
பரிவுற வழித்துக் காத்தனன் வேவிப்
பதிபுத்ர காமநற் றலமே

இன்னணம் எம்பெருமான் அந்தணர்கள் மறைமுறை வழாது புரியும் யாகங்களை காத்தருள் புரிவதை நக்கீரதேவரும் கூறுமாறு காண்க.

"மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்"
—திருமுருகாற்றுப்படை.

சேந்தமிழ் சோல்பாவின் மாலைக்கார :—

செந்தமிழ்ப் பரமாகிரிபனும் செவ்வேட்பரமன் அடியார்களால் அணியப்படும் செந்தமிழ்ப் பாமாலைகளை அன்புடன் தரித்துக்கொள்ளுகிறார்.

"விரித்தருண கிரிநாத னுரைத்ததமி ழெனுமாலை
மிகுத்த பலமுடனோதி மகிழ்வோனே"
—(வரிக்கலை) திருப்புகழ்.

அண்டருபகார :—

அண்டர் - தேவர், உபகாரன் - உபகரித்தவன். சூரபன்மனால் சிறைப்பட்டு நூற்றெட்டு யுகங்களாக மிகவும் வருந்தி இனி உய்வு பெறுவேமோ என்று ஏங்கியிருந்த தேவர்களுடைய சிறையைமீட்டு, பொன்னாடு தந்து இன்பவாழ்வில் இருக்கவைத்தவர் நம் குமாரமூர்த்தியே யாதலால் தேவசகாயனானார்.

சேவற்கார :—

பக்தர்கள் இடையூருற்று முறையிட்டகாலத்தில் முருகப்பெருமான் தான்வரும் குறிப்பை முன்னரே ஒலியால் புலப்படுத்தும் சேவற்கொடியைக் கரத்தில் தாங்கிக்கொண்டுவருவார். இதனை நம் அருணகிரியார் பிறிதோரிடத்தில் "முருகா! நான் கந்தா என்று அழைக்கும்போது தாங்கள் சிவந்த சேவற்கொடியைக் கரத்திலேந்தியவண்ணம் வரவேணும்" என்பதை உற்றுநோக்கி உள்ளம் மகிழ்க.

"சென்றே யிடங்கோள் கந்தாயெனும்போ
சேஞ் சேவல்கோண்டு வரவேணும்."
—(அன்பாக) திருப்புகழ்.

சிறைப்பட்டிருந்த இந்திர குமாரனாகிய சயந்தனுடைய கனவில் அறுமுகனார் அருள் புரிந்தபோது கோழிக்கொடியுடன் சென்றார் என்ற அச்சரிதையை விரித்தோதும் முதல்வன் புராணத்துள் கண்டு தெளிக.

ஆரணம் பயில் ஞான புங்கவ
சேவலங் கோடி யான பைங்கரா
ஆவினனகுடி வாழ்வுகோண்டருள் பெருமாளே.
—(மூலமந்) திருப்புகழ்.

முடிமேலே அஞ்சலிசெய்வோர்கள் நேயக்கார :—

இறைவனை வழிபாடு செய்யுங்கால் கரங்களை சிரங்களுக்குமேல் பன்னிரண்டங்குலம் உயரக்கூப்பி வணங்கவேண்டும், அங்ஙனம் அன்புடன் அஞ்சலிபஸ்தராக நின்று வழிபாடு செய்வோர்களுக்கு தேவர்களுங் காணவொண்ணாத தேவ தேவனும் திருமுருகேசன் நேயக்காரனாக எளிதில் இரங்கி இன்னருள் புரிகிறான்.

குன்றுருவ ஏவும் வேலைக்கார :—

இதன் விரிவை திருப்புகழமிர்தம் முதலாவதாண்டு மலர் 1, 36-ம் பக்கத்திற் காண்க.

அந்தம் வெகுவான ரூபக்கார :—

முருகனே முழுதுமழகிய முதல்வன் என்பதை முருகன் பெருமை என்ற கட்டுரையில் விரித்து எழுதியுள்ளோம். திருப்புகழமிர்தம் மலர் 1, பக்கம் 208-ல் காண்க.

சிந்துரமின் மேவு போகக்கார :—

உயிர்களுக்கு இன்பத்தை நல்குவதற்காக இறைவன் கிரியா சக்தியாகிய தேவகுஞ்சரியுடன் போகமூர்த்தியாக விளங்குகின்றனன்.

குறமாது வேளைக்கார :—

வேளைக்காரன் வகுப்பைக் காண்க.

செஞ்சொலடியார்கள் வாரகார :—

இனிய சொற்களையுடைய அடியார்களுக்கு அன்புடையவராக ஆண்டவன் விளங்குகின்றனர்.

" அடிபோற்றி யல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே."

—(குடிவாழ்க்கை) திருப்புகழ்.

துங்கரணசூர சூறைக்கார :—

" துரிதமிடு நிருதர்புர சூறைக்கார பெருமாளே."

—(ஒருபொழுது) திருப்புகழ்.

ஆண்மைக்கார :—

" ஆரியபரம ஞானமு மழகும்
ஆண்மையு முடைய பெருமாளே'

—(தோரண) திருப்புகழ்.

கருத்துரை.

யாகரக்ஷகரே! தமிழ் மாலையை யணிபவரே! தேவசகாயரே! சேவற்கொடியுடையவரே! வணக்கம்புரிவாரது நேயரே! குன்றெறிந்த குமாரமூர்த்தியே! வல்லீதேவ சேனசமேதரே! அடியார்க்கு அன்பரே! அசுரகுலகாரரே! செந்திலாதிப! தமிழ்ப்பாக்களைப் பாடி அழிகின்ற மனிதர்கள் வாசல்தோறும் அலையாமலும், பண்டைவினை நீங்கவும், பெண்ணாசையறவும், செம்பொன் மயில்மீது வந்தருள்வீர்.

உ

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

मयूराधिरूढं महावाग्यगूढम्
मनोहारिदेहं महत्चित्तगेहम् ।
महादेवदेवं महावेदभावम्
महादेवबालं भजे लोकपालम् ॥

(3) மயூராதி4ரூ4டம் மஹாவாக்ய கூ3ட4ம்
மனோஹாரி தே3ஹம் மஹச்சித்த கே3ஹம் ।
மஹாதே3வ தே3வம் மஹா வேத3 பா4வம்
மஹா தே3வபா3லம் ப4ஜே லோகபாலம் ॥

அவதாரிகை.

இந்த சுலோகத்தில் குமாரக்கடவுளது பெருமைகளை கூறித் துதிக்கின்றார்.

பதவுரை.

மயூராதிருடம் — மயிலின்மீது ஏறிக்கொண்டிருப்பவரும்,
மஹாவாக்ய கூடம் — தத்வமஸிமுதலிய மஹாவாக்கியங்களின் சூட்சுமமாக (பொருளாக) இருப்பவரும்,
மனோஹாரி தேஹம்— அழகிய சரீரத்தை யுடையவரும் (அருளுருவத்தை யுடையவரும்),
மஹச்சித்த கேஹம்— பெரியோர்களின் உள்ளமே திருக்கோயிலாகக்கொண்டவரும்,

மஹாதேவதேவம்	—	பிரமன் விஷ்ணுமுதலிய தேவச்சிரேட்டர்களுக்கும் தேவனும், (அல்லது பிரணவார்த்தத்தை உபதேசித்த குருவாகையால் பரமசிவனுக்கும் தேவனும்),
மஹாவேத பாவம்	—	வேதங்களின் உட்கருத்தாக இருப்பவரும்,
மஹாதேவ பாலம்	—	சிவபெருமானுடைய குமாரரும்,
லோக பாலம்	—	உலகத்தைக் காப்பவருமான குமாரக்கடவுளை,
பஜே	—	வழிபடுகிறேன்.

பொழிப்புரை.

மயிலை வாகனமாக வுடையவரும், தத்துவமஸி முதலிய மஹா வாக்கியங்களுக்குள் சூட்சுமார்த்தமாக விளங்குபவரும், பெரியோர்களின் உள்ளத்தை ஆலயமாகக்கொண்டவரும், அழகிய அருட்டிரு மேனியையுடையவரும், பிரமவிஷ்ணுவாதி தேவச்சிரேட்டர்களுக்கெல்லாம் வழிபடுகடவுளும், பெருமைபொருந்திய வேதங்களின் தாத்பரியரும், பரமசிவனுக்குப் புத்திரரும், உலகத்தை இரட்சிப்பவருமாகிய குமாரக்கடவுளை நான் வழிபடுகிறேன்.

यदा संन्निधानं गता मानवा मे
भवाम्भोधि पारं गतास्तेन दैव ।
इति व्यञ्जयन् चिन्दुतीरेय आस्ते
तमीडे पवित्रं पराशक्ति पुत्रम् ॥

(4) யதா³ ஸங்நிதா⁴நம் க³தா மாநவாமே
ப⁴வாம் போ⁴தி⁴பாரம் க³தாஸ்தேத தை⁴வ ।
இதிவ்ய ஞ்ஜ்யன் ஸிந்து⁴ தீரேய ஆஸ்தே
தமீடே³ பவித்ரம் பராசக்தி புத்ரம் ॥

அவதாரிகை.

இந்த சுலோகத்தில் சுவாமிநாதன் சமுத்திரக்கரையில் எழுந்தருளியிருக்கும் காரணத்தை விளக்குகிறார்.

பதவுரை.

மாநவா: — மனிதர்கள்,
யதா — எப்பொழுது,
மே — எனது,
ஸந்நிதானம் — சந்நிதானத்தை,
கதா: — அடைகிறார்களோ,
ததாவவ — அப்போதே,
தே — அவர்கள்
பவாம் போதி பாரம்—பிறவிக்கடலின் மறுகரையை (முத்தியை),
கதா — அடைகிறார்கள்,
இதி — என்று
வ்யஞ்ஜயன் — (குறிப்பாக) உணர்த்தும்பொருட்டு.
ய: — யாதொரு சுவாமியானவர்,
ஸிந்துதீரே — சமுத்திரக்கரையில்,
ஆஸ்தே — எழுந்தருளி யிருக்கிறாரோ,
தம் — அந்த
பவித்ரம் — பரிசுத்தமான,
பராசக்தி புத்திரம்—பராசக்தியின் புத்திரரை,
ஈடே — துதிக்கின்றேன்.

பொழிப்புரை.

மக்கள் எனது சந்நிதியை அடைந்தமாத்திரத்திலேயே அபாரமாகிய சமுசாரசமுத்திரத்தின் மறுகரையை யடைந்து முத்தியின் பத்தை நுகர்கின்றனர் என்னும் உண்மையை உணர்த்தும்பொருட்டு கருணைக்கடலாகிய யாதொரு கடவுள் கடற்கரையில் வசிக்கின்றாரோ? பரிசுத்தரும் பராசக்தியின் புதல்வருமாகிய அவரைத்துதிக்கின்றேன்.

यथाब्धेस्तरङ्गा लयं यान्ति तुङ्गा
स्तथैवापदःसन्निधिं सेवमाने ।
इतीवोर्मिपङ्क्तीर् नृणां दर्शयन्तम्
सदा भावये हृद्सरोजे गुहन्तम् ॥

(5) யதாப்[2]தே[3]ஸ்[4]தரங்கா லயம்யாந்தி துங்[3]கா[3]
ஸ்[1]ததைவாப[3]த: ஸந்நி[4]திம் ஸேவமானே ।
இதீ ஓர்மிபங்க்தீர் ந்ருணாம் [3]தர்சயந்தம்
ஸ[3]தா பா[4]வயே ஹ்ருத் ஸரோஜே [3]குஹந்தம் ॥

அவதாரிகை.

இச்சுலோகத்தில் குகப்பெருமானுடைய சந்நிதியை அடைந்தவர்களுக்குத் துன்பமுண்டாகாது என்று விளக்குகிறார்.

பதவுரை.

யதா — எவ்வாறு,
அப்தே: — சமுத்திரத்தின்,
துங்கா: — பெரிய
தரங்கா: — அலைகள்,
லயம் யாந்தி — நாசத்தை யடைகின்றனவோ,
ததா — அவ்வாறே,
ஸந்நிதிம் — ஸந்நிதானத்தை,
ஸேவமானே — அடைந்தபோதே,
ஆபத: — ஆபத்துகளும் (பக்தர்களின் துன்பங்களும்),
லயம் யாந்தி — நாசத்தையடைகின்றன.
இதிவ — என்று,
ந்ருணாம் — மக்களுக்கு,
ஊர்மி பங்க்தீ — அலைகளின் கூட்டங்களை,
தர்சயந்தம் — காட்டுகின்ற,
தம் குஹம் — பிரசித்தரான குஹப்பெருமானை,
ஹ்ருத்ஸரோஜே — எனது மனதாகிய தாமரைப்பூவின்கண்,
ஸதா — எக்காலத்தும்,
பாவயே — எண்ணி வழிபடுகிறேன்.

பொழிப்புரை.

எங்ஙனம் அலைகள் மிகப்பெரியவையாயினும் கரையில் அடையுங்கால் ஒடுங்கிப்போகின்றனவோ அங்ஙனமே அன்பர்களின் துன்பங்களும் எனது சந்நிதியை யடைந்தவளவிலேயே ஒழிந்துவிடுகின்றன என்று அலைகளின் வரிசையை மக்களுக்கு உதாரணமாகக் காட்டுகின்ற குஹப்பெருமானை எனது மனதின்கண் எப்போதும் தியானித்து வணங்குகின்றேன்.

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்.

(17-வது பக்கத் தொடர்ச்சி.)

'பன்னருஞ் சிறப்பின் மிக்க பனிவரை யரசன் றன்பால் கன்னியம் புதல்வியாகிக் கௌரி' தவம்புரிந்திருந்தகாலை, அசுரர் குலத் தலைவனும் சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசு செலுத்தி ஒப்பாருமிக்காருமின்றி தருக்குற்றிருந்தனன். அந்தக் காலத்தில் சனகாதியர் நால்வரும் சிவபெருமானை நோக்கி பன்னெடுங் காலம் தவம்புரிந்து இறைவனருளால் கைலைமலையை யடைந்து, நந்தி தேவர் காவல் புரிகின்ற முதல்வாயிலையணுகி நந்தியெம்பெருமானை வணங்கி அவரருளால் சிவசந்நிதியுட்சென்று நான்முகன் முதலோர் காணு ஞானநாயகனைக் கண்டார்கள், தேவதேவனைக் கண்டவுடனே மொழிகுழற, முழுதுடல் புளகிக்க, விழிபுனல்பெருக, தீ சேர் மெழு கென உள்ளம் உருக, கரமலர் குவிய, இருதயமலர் மலர, ஹரஹர என்று தொழுது, வானோர்க்கரியமருந்தே போற்றி, ஏனோர்க்கெளிய இறைவா போற்றி என்று துதித்து, "அருட்பெருங் கடலே! பொருட்பெருங் கடலாம் வேதமென்னும் புணரியில் மூழ்கி, புந்தி தெளியாது மயங்கியுள்ளோம்; மனம் சாந்தியை யடையவில்லை; அறியாமை நீங்கி மெய்யுணர்வு பெற்றோமில்லை; எமது மனம் அமைதியையடையும் வழியைக்காட்டி நல்லருள் புரிந்தருளவேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தனர். அடியார்க்கருளும் அருட் பெரும் வள்ளல் அகமகிழ்ந்து "நமது மனமடங்கி மெய்யுணர்வு தலைப்படுமாறு கூறுதும்; இருங்கள்" என்று கூற சால்பெருந் தகைமை நால்வரும் பரமேசுவரனை வணங்கி அருகில் கைகுவித்த வண்ணமாக வீற்றிருந்தனர்.

சிவபெருமான் நந்தியங்கடவுளை நோக்கி "மலர்க்கணைக் கிழவனும் மன்மதன் தவிர வேறு யார்வந்தாலும் உள்ளே விடவேண்டா மென்று கட்டளையிட, நந்திசர் "அங்ஙனமே" என்று கோபுரவாசலில் காவல்புரிந்திருந்தனர். கல்லாலின்கீழ் வீற்றிருந்த கண்ணுதற்

கடவுள் சனகாதியர்க்கு சிவாகமங்களின் நுட்பங்களாகிய சரியை கிரியை யோகமென்ற முப்பாதங்களையும் கூற, சனகாதியர் "எந்தையே! எமக்கு மனமொடுங்குமாறு ஞானபாதத்தைப் போதிக்கவேண்டும்" என்று வேண்ட, புரமெரித்த புரிசடைக்கடவுள் புன்முறுவல்கொண்டு முனிவர்களை நோக்கி, அது வாக்கினால் கூறுவதன்று; இப்படி சும்மாயிருப்பதேயாகுமென்று தமது திருமார்பிலமைத்த சின்முத்திரைக் கரத்தோடு, ஒரு கணப்போது யோகஞ் செய்வார்போல் மௌன நிலையைக்காட்டி வீற்றிருந்தனர்.

இருவரு முணராவண்ண லேனவேள் ளெயிறி யாமை
சிரநிரை யநந்த கோடி திளைந்திடு மரத்திற் சீர்கொள்
காதல மொன்று சேர்த்தி மோன முத்திரையைக் காட்டி
யொருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய்வாரி னுற்றன்.

அந்த யோகநிலையைக்கண்ட சனகாதியர் "சிவஞானமானது நூலறிவினால் கிடைப்பதன்று. அநுபவ அறிவாற்கிடைப்பது" என்று முதல்வனருளால் தெரிந்து மனமொடுங்கி சித்திரப்பதுமைபோல் செயலற்று சிவஞானமுற்றிருந்தனர். சிவபெருமான் நால்வருக்கும் ஞானநிலையைக்காட்ட மோனநிலையில் இருந்த ஒரு கணப்பொழுதானது பிரமன்முதலிய தேவர்களுக்கெல்லாம் அநேக யுகங்களாயிருந்தது. தேவர்களுக்கே இவ்வாறாயின் ஏனையோர்க்கு இத்துணைக் காலமாயிற்றென்று கூறவல்லார் யாவர்? காஞ்சிமாநகரில் கம்பாநதியின் பெருக்கைக்கண்டஞ்சி இறைவனைத் தழுவிக்கொண்ட இமயவல்லி எம்பிரானது கண்புதைத்த காலம்போல், சிவமூர்த்தி ஒரு கணப்பொழுது யோகத்திலமர்ந்தது தேவர்களுக்குப் பற்பல யுகங்கள் கடந்தன. சிவமூர்த்தி மோனநிலையுற்றதனால் விண்ணுறையமரர்களும் மண்ணுறை மனிதர்களும் மாதர் கலவியின்றி காம இச்சை யறவேநீங்கி முற்றத்துறந்த முனிவர்போல் இருந்தனர். அதனால் உலகில் ஆண்பெண் சேர்க்கையின்றி சிருட்டித்தொழிலும் நடவாமற்போயிற்று. உலகிற்கு காரணக்கடவுள் கண்ணுதற்கடவுளே என்பது இதனால் குன்றின்மேல்வைத்த விளக்கேபோல் வெளியாகிறதென்பதை யாரே மறுக்கவல்லார்.

இவ்வாறு உலகமெல்லாம் இடர்பட்டுநின்றகாலை, சூரபன்மனுடைய கொடுஞ்செயலுக்கஞ்சி தேவேந்திரன் தேவர்களுடன் பொன்னுலகைவிட்டு இந்திராணியோடு மண்ணுலகஞ் சேர்ந்து, கைலை

மலையையடைந்து பரமேசுரனைக் காணாகி மேருமலையடைந்து, சூர பன்மனுடைய மகனாகிய பானுகோபன் பொன்னாட்டையழித்து தனது (இந்திர) குமாரனாகிய சயந்தனைச் சிறைபுரிந்த தன்மையைக் கேட்டு மனம் வருந்தி, மேருகிரியில் ஓர் புறத்தில் நீலகண்டப்பெரு மானை நோக்கி நெடுங்காலம் தவம்புரிந்தனன். அவனுடைய தவத் திற்கிரங்கி ஆலமுண்ட அண்ணல் விடைமேலூர்ந்துவந்து தெரிசனம் தர, இந்திரன் பன்முறையும் இறைஞ்சி நிற்க, சிவமூர்த்தி "ஆகண் டல! அளப்பருங்காலம் உடல்வருந்தி தவமிருந்தனை; நினக்குவேண் டிய வரம் யாது? கூறுதி" என்று அறியாதவர்போல் வினவ, அமரர் கோமான், "எந்நாட்டவர்க்கும் இறைவா! சூரபன்மன் எம்மைத் துன்பக்கடலிலாழ்த்தி எனது மகனையும் இமையவரையும் சிறையிட்டு எமது நகராகிய அமராவதியைக்கொளுத்தி இடர்ப்பல செய்கின்ற னன். எம்பெருமானே! சூராதியரை யழித்து எம்மைக் காத்தருள வேண்டும்" என்றனன். சிவபெருமான் "புரந்தர! எம்மையிகழ்ந்த தக்கன் வேள்வியில் நீவிர் இருந்தபாவத்தால் இந்தத்துன்பம் உமக்கு நேர்ந்தது; இனி எமக்கு ஒரு புதல்வன் தோன்றுவன். அப்புதல் வன் சூராதிகளையழித்து உமக்கு விண்ணுலக இன்பவாழ்வை நல்கு வன்" என்று கூறி மறைந்தருளினர்.

பின்னர் இந்திரன், "கண்ணுதற்கடவுள் கல்லாலின்கீழ் யோகம் புரிவார்போல் அமர்ந்திருக்கின்றனர். உமாதேவி மலையரையன் மக ளாய்த் தவஞ்செய்வாளாயினள். இங்ஙனமிருக்கின் அன்னார்க்குப் புதல்வன் எவ்வாறு தோன்றும்? புதல்வன் தோன்றினால் தானே நங்குறை நீங்கும்" என்று பலவாறு சிந்தித்து, மநோவதியென்னும் மாநகரடைந்து வியாழபகவானது மனையிடம் தன் மனைவியை இருத்தி, தேவர்குழாங்களுடன் அம்புயத்தவிசில் வைகும் அயனு டைய இருக்கை சென்று, முக்கட்பரமன் மோனநிலையிலிருப்பதால் படைப்புத்தொழிலின்றி மனவருத்தத்துடனிருக்கும் மலரவனைக் கண்டு அன்னனது அருணசாரோவிந்தங்களை வணங்கி வழுத்திநின்ற னன். பிரமன் திருவருள்புரிந்து "புருகூத! வானவருடன் வந்த காரணம் யாது?" என்று வினவ, இந்திரன் சூரபன்மனால் நேர்ந்த துன்பங்களையும், சிவபெருமான் கல்லாலின்கீழ் மௌனவிரதத்துட னிருத்தலையும், தன்னுடைய தவத்திற்கிரங்கி சிவமூர்த்தி அருளிய திறத்தையும் கூறி, மேல் உய்யும்வகையை உரைத்தருளவேண்டு மென்று குறையிரந்து நின்றனன். பிரமன் "தேவேந்திர! அருள்

வடிவினரும், உற்றவர்க்குதவும் நற்கருணை நாயகனும், யானும் மாலும் தேடிக் காணமுடியாத அண்ணலுமாகிய சிவபெருமான் வெள்ளியங்குன்றில் முனிவர் நால்வருக்கும் மோனமுத்திரையைக் காட்டி தவநிலையில் வீற்றிருப்பது நமது துன்பத்தை நீக்கி இன்பத்தை நல்குவதற்கே யாகும். சந்திரமௌலியாகிய தனிப்பெருந் தலைவன் ஆருயிர்களை யெல்லாம் சங்கரிப்பதும், அவ்வுயிர்களின் துன்ப நீக்கத்தின்பொருட்டே யாதல்போல கொடிய வெஞ்சூரனைக் கொண்டு நமக்கு இடர்புரிவதும் நமது பாவத்தைநீக்கி நல்லருள் புரிவதன்பொருட்டேயாம். மக்களைப்பெற்ற தாய்தந்தைகள் மக்களுக்கு நோய்வந்தகாலத்துப் பிறரைக்கொண்டு துன்புறுத்தியும் நோயை நீக்குவர்; அது மக்கள்மீதுள்ள கருணையேதவிர சினத்தாலன்று. அதுபோல நம்முடைய தீவினைகளை நீக்குவதற்காகவே நமக்குத் தந்தையுந்தாயுமாகிய கறைமிடற்றண்ணல் இச்செய்கையைப் புரிந்துளார் மேகவாகன! அசுரர்களாகிய சண்டமாருதத்தால் அலைகின்ற நமது வினைகள் ஒருசிறிது விலகும் சமயம் நெருங்கியிருப்பதால் கருணைக்கடலாகிய கண்ணுதல் அன்புடன் நின்பால்வந்து உய்யும்வகையை உணர்த்திப் போந்தனர். ஆதலால் நம்மையாளுடைப் பரமனே மேலும் அருள்புரிவன். அத்திருவருள் கைகூடுவதற்கு வேண்டிய முயற்சியையும் நாம் சிறிது செய்தல் அவசியமாகும். இவற்றையெல்லாம் நாராயணமூர்த்தியிடம் அறிவித்து மேல் நடக்கவேண்டியதற்கு எது செய்யத்தக்கதோ அதை விரைவிற்புரிவோம்; வருவாயாக" என்று இந்திரன் முதலிய இமயவருடனும் படைத்தற்றொழிலை நடத்தும் பங்கயாசனன் நாராயணர் உறையும் வைகுந்தம் செல்வதற்குப் புறப்பட்டனன்.

ஓம் குஹாயநம :

கற்பு

(22-ம் பக்கத் தொடர்ச்சி.)

கற்புடைய பெண்மணிகளுக்கு நிகரான பொருள் மூவுலகங்களிலுமில்லை. கற்புடையமாதர்களை அருந்தவராலும் அழிக்கமுடியாது. கற்புடையோர்களுக்கு இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்ற முக்கால ஞானமும் உண்டாகும். இவற்றை விளக்கும் அடியில்வரும் புனித சரிதையைப் பெண்மக்கள்படித்துப் பயன் பெறுவார்களாக.

அந்தணர்களுக்குள் சிறந்தவனும் வேதங்களை அத்யயனம் செய்தவனும் தவத்தையே தனமாகக் கொண்டவனும் தருமசீலனுமாகிய கௌசிகனென்கிற ஒரு வேதியன் இருந்தான். அந்த மறையவன் அங்கங்களுடனும் உபநிடதங்களுடனும் கூடிய வேதங்களை நன்றாகக்கற்றுணர்ந்தவன் அவன் ஒருமரத்தினடியில் வேதங்களை உச்சரித்துக்கொண்டு அமர்ந்திருந்தான். அந்தமரத்தின் மீது ஒரு கொக்கு உட்கார்ந்திருந்தது. அப்பொழுது அந்த கொக்கு பிராம்மணன் மீது எச்சமிட்டது. உடனே அவனுக்குச் சினமூண்டது. மரத்தின் உச்சியிலுள்ள கொக்கை நன்றாக விழித்துப்பார்த்து தீங்கு செய்யநினைத்தான். கௌசிகன் கோபத்தால் பார்த்த உடனே அவன் பார்வையாகிற வெப்பத்தால் தகிக்கப்பட்டு கொக்கு கீழே விழுந்து மாண்டது. அதைக்கண்ட கௌசிகன் "அந்தோ! நான் ஒரு உயிருக்குத் தீங்கு செய்துவிட்டேன். கோபத்திற்கு அடிமைப்பட்டு தீயகாரியத்தைப் புரிந்துவிட்டேன்" என்று வருந்தினன். கற்றறிந்தவராகிய அவன் இவ்வண்ணம் பலவாறுகூறி பிக்ஷைக்காக ஓர் கிராமத்தையடைந்தான். பிக்ஷையெடுத்துக் கொண்டே சென்று ஒரு வீட்டில் நுழைந்து 'பிக்ஷை கொடு' என்று கேட்டான். அந்த வீட்டிலிருந்த பெண்மாசி பிக்ஷைகொடுக்க எழுந்த அதே சமயத்தில் அவளுடைய கணவன் மிகவும் பசியினால் வாடி திடீரென்று வீட்டினுள் நுழைந்தான். அந்தமாது கௌசிகனைச் 'சற்று இரும்' என்று

சொல்லிவிட்டு நாயகனுக்குக்காலலம்ப நீரையும் ஆசமன தீர்த்தத்தை யும் ஆசனத்தையும் கொடுத்து இருக்கவைத்து, இனிய மொழிகளைக் கூறி நல்ல சுவையுள்ள உணவுகளைத்தந்து உபசரித்தாள். கணவனையே கடவுளாகநினைக்கின்ற அக்காரிகை கணவனுண்டபின் உண்பவள். மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் பதியையே வழிபடுபவள். பதி உணவு கொள்ளாமுன் தண்ணீரும் குடிக்கமாட்டாள். ஆசார முள்ளவளும் பதிபணிவிடையில் பற்றுள்ளவளும் குடும்பத்திற்கும் கொழுநனுக்கும் இதத்தைச் செய்பவளும் அருந்ததிக்கு நிகரானவளுமாகிய அவள் எப்பொழுதும் எது நன்மையோ அதையே செய்து கொண்டுவந்தாள். தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் அப்படியே மாமியார் மாமனார்களுக்கும் தினமும் பணிவிடைபுரிவதில் ஊக்கமுள்ளவள். எப்பொழுதும் இந்திரியங்களையடக்கினவள். இனியபார்வையும் இனிய மொழியுமுள்ளவள். நற்குணங்களுக்கெல்லாம் உறைவிடமாகிய அப்பெண்ணரசி நாயகனுக்கு வேண்டிய உபசாரங்களையெல்லாம் வழுவறப்புரிந்து பிறகு பிராம்மணனுக்குப் பிக்ஷையிடநினைந்தாள். கீர்த்தியுள்ளவளான அம்மங்கை வெட்கத்துடன் இதுகாறும் நின்றுகொண்டிருந்த அதிதியாகிய கௌசிகனுக்குப் பிக்ஷை யெடுத்துக்கொண்டு வெளியேவந்தாள்.

கௌசிகன் "அம்மா! நீ என்னை நில் என்று சொல்லி பிக்ஷாடனத்திற்குத் தடைசெய்தாய். என்னை இது காறும் தாமதிக்கச் செய்தனை. இது தருமமோ? என்றனன். கோபத்தால் மிக்க தாபத்தையடைந்தவனும் ஒளியினால் பிரகாசிப்பவனுமாகிய கௌசிகனை நோக்கி அந்த உத்தமி, "பிராம்மணோத்தமரே! பொறுத்துக்கொள்ளும். என்னிடத்தில் கருணைபுரிவீராக. கற்றறிந்தவரே! என் குற்றத்தை மன்னிக்கவேண்டும். எனக்குக் கணவன் பெரியதெய்வம். பசித்துக்களைத்துவந்த எனது பதிக்குப்பணிவிடை செய்தேன். அதனால் தாமதமாயிற்று" என்றனள். கௌசிகன் "கர்வங்கொண்டவளே! உனக்குப் பிராம்மணர்கள் கௌரவ முள்ளவர்களல்லர். உன் கணவனே உன்னால் கௌரவமுள்ளவனாகச் செய்யப்பட்டான். இல்லறத்திலிருக்கிற நீ பிராம்மணர்களை அவமதிக்கிறாய்: இந்திரன்கூட இவர்களை வணங்குகிறான்; அவ்வாறிருக்க பூமியிலுள்ள மனிதன் இவர்களை வணங்குவதில் ஐயமென்ன! நீ இதனை அறியவில்லை. நீ அறிவிற் சிறந்த அருந்தவருடைய பெருமையைக் கேட்டதில்லை;

அக்கினிக்கு ஒப்பாயிருக்கிற பிராம்மணர்கள் அவமதிக்கப்பட்டால் மலைகளோடும் வனங்களோடும் தீவுகளோடும் கூடின பூமியைக்கூட விரைவாக எரித்துவிடுவார்கள்." என்று சொன்னான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அம்மாதரசி "தபோதனரே! நான் கொக்கல்லேன்; கோபத்தை விட்டுவிடும்; கோபமுள்ளவரான நீர் கோபமுள்ள பார்வையினால் என்னை என்னசெய்துவிடுவீர்? நான் தேவர்களுக்கு நிகரானவர்களும் பெரிய மனமுள்ளவர்களு மான பிராம்மணர்களை அவமதிக்கிறதில்லை. பிராமணரே! நீர் இந்த அபராதத்தைப் பொறுக்கவேண்டும். நான் சிறந்த புத்தியுடையவர் களான பிராம்மணர்களுடைய சக்தியையும் மகிமையையும் அறி வேன்; தவத்திற் சிறந்த அந்தணருடைய கோபத்தால் கடலானது உவர்நீருள்ளதும் பானஞ் செய்வதற்குத் தகாததுமாகச் செய்யப் பட்டதன்றோ. அப்படியே ஒளிசெய்கின்ற தவமுடையவர்களும பரம்பொருளைத் தியானிப்பவர்களுமான முனிவர்களுடைய கோபத் தீயானது இன்றுங்கூட சமுத்திரத்தினுள் தணியாமலிருக்கிறது; அளவுகடந்த ஆற்றலுள்ள அந்த அந்தணர்களை எந்த அறிவிலிதான் அவமதிப்பான்? மிக்க கெட்ட எண்ணமுள்ளவனும் கொடுந்தொழி லுடையவனுமாகிய வாதாபி என்கிற அரக்கன் அந்தண சிரேட்டர் களை அவமதித்ததனால் அகத்தியமுனிவரையடைந்து ஜீரணமானான். மகாத்மாக்களான அந்தணர்களுடைய அநேகபெருமைகள் கேட்கப் படுகின்றன. மறையவரே! மகாத்மாக்களுக்குக் கோபமும் அதி கம்; அனுக்ரகமும் அதிகம்; இந்தக்குற்றத்தை நீர் பொறுக்கக் கடவீர்; பதியினுடைய பணிவிடையால் உண்டாகும் தருமமே எனக்கு இனிக்கிறது; எல்லாத் தேவதைகளுள்ளும் எனக்குக் கண வனே பரதேவதை; கணவனைக் காட்டிலும் சிறந்த தெய்வம் எனக்கு மூன்று உலகங்களிலுமில்லை; எனது தெய்வமாகிய கணவனுக்கு என் கடமையைச் செய்வேன்; பதிக்குப்புரியும் பணிவிடையின் பயன் எவ்விதமென்பதைப்பாரும்; கொக்கானது உம்மால் கோபத் தால் எரிக்கப்பட்டதன்றோ? அது என்னால் அறியப்பட்டது. பதி பக்திபுரிவோர்க்கு தவமும் ஞானமும் மோக்ஷமும் தானேவரும்; மனிதர்களுக்கு கோபமானது உடலிலுள்ள பகைவன்; நீர் கோபித் துக்கொள்ளவேண்டாம்; பதிவிரதையான நான் கொக்கைப்போல் உம்மால் கொல்லத்தக்கவளாகமாட்டேன்; எவன் கோபத்தையும் மோகத்தையும் விடுகிறானோ அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறி

கிறார்கள்; எவன் இவ்வுலகத்தில் சத்தியவாக்கியங்களை உரைப்பனோ? எவன் குருவை மகிழ்விப்பனோ? பிறரால் தான் துன்பஞ்செய்யப்பட்டாலும் பிறனைத் துன்பஞ்செய்யாமலிருப்பவன் எவனோ? அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். எவன் இந்திரியங்களை வென்றவனாகவும் தருமத்தில் முக்கிய நோக்கமுள்ளவனாகவும் வேதாத்யாயனத்தில் பற்றுதலுள்ளவனாகவும் சுத்தனாகவுமிருப்பானோ? காமம் கோபமிரண்டும் எவனுக்கு வசப்பட்டிருக்குமோ? அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். தருமங்களை அறிந்தவனும் சிறந்த மனமுடையவனும் எல்லாத் தருமங்களையுஞ் செய்பவனுமான எந்த மனிதனால் உலகம் தனக்குச்சமமாக எண்ணப்படுகிறதோ? அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். எவன் வேதங்களை அத்யயனஞ்செய்விப்பனோ, தானும் அத்யயனம் செய்வனோ, எவன் யாகம் செய்வனோ, பிறர்களுக்கும் யாகத்தைச் செய்விப்பனோ, எவன் சக்திக்குத்தக்கபடி தானம் செய்வனோ, அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். பிரமசரியத்தையும் சொல்வன்மையுள்ளவனும், மதமில்லாதவனும், சிறந்த வேதங்களை ஓதினவனும், வேதங்களை அத்யயனம் செய்துகொண்டே இருப்பவனுமான உத்தமனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். பிராம்மணர்களுக்கு எது மகிமையோ அதை இவர்களுக்கு இருப்பதாகச் சொல்லவேண்டும். அப்படிச் சத்தியத்தைப் பேசுகிறவர்களுக்கு பொய்யில் மனமானது மகிழ்ச்சி யடையாது. பிராம்மணனுக்கு வேதத்தையும், மனத்தின் அடக்கத்தையும், மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினுடைய ஒற்றுமையையும், இந்திரிய நிக்ரஹத்தையும் சாசுவதமான பொருளாகச் சொல்லுகிறார்கள். தருமத்தை யறிந்த ஜனங்கள் சத்தியத்தையும் மனோ வாக்கு காயங்களுடைய ஒற்றுமையையும் சிறந்த தருமமாகச் சொல்லுகிறார்கள். சாசுவதமான தருமமானது எவ்விதத்தாலும் அறியமுடியாதது. அந்தத் தருமமானது சத்தியத்தில் நிலைபெற்றிருக்கிறது. தருமமானது சுருதியைப் பிரமாணமாகக்கொண்டிருக்குமென்பது பெரியோர்களுடைய உபதேசம்.

வேதியரே! சூட்சுமமான தருமமே பலவாறாகக்காணப்படுகிறது. தேவரீரும் தருமத்தை அறிந்தவர்; வேதாத்யயனத்தில் பற்றுள்ளவர்; சுத்தர். தருமத்தை நீர் உள்ளபடி அறியவில்லையென்பது என்னு

டைய எண்ணம். உத்தம தருமத்தை நீர் அறியாமலிருந்தால் மிதுலாபுரிக்குப்போய் தருமவியாதரைக் கேளும். பிதாமாதாக்களுக்குப் பணிவிடைசெய்பவரும், உண்மையையுரைப்பவரும், ஜிதேந்திரியருமான வியாதர் மிதிலையில் வசிக்கிறார். அவர் உமக்குத் தருமங்களைச் சொல்லுவார். உமதிஷ்டப்படி அவ்விடம் செல்லுவீராக. உமக்கு மங்களம். பரமதார்மிகரான அந்த வியாதர் உம்முடைய ஐயத்தை அகற்றுவார். அதிகமாகச் சொல்லப்பட்டிருந்தாலும் பொறுத்தருள்வீர். எவர்கள் தருமத்தை அறிகிறார்களோ அவர்களனைவருக்கும் பெண்கள் வதம்செய்யத் தகாதவர்களல்லரோ ? என்று சொன்னாள்.

கௌசிகன் " கல்யாணி! உனக்கு மங்களம் ; கோபம்போய் விட்டது ; நான் அன்புள்ளவனாக இருக்கிறேன் ; நின்னால் சொல்லப்பட்ட நிந்தையானது எனக்குச் சிறந்த நன்மையே ஆயிற்று. உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். அம்மா ! மிதிலைக்குச் செல்வேன். என்காரியத்தை நிறைவேற்றிக்கொள்வேன். இப்படிப்பட்ட நடையுள்ள நீ பாக்கியவதியாக இருக்கிறாய் " என்று இன்னுரைகூறி விடைபெற்றுச் சென்றான்.

உ

ஓம் குருப்யோ நம :

குரு சிஷ்ய லக்ஷணம்

சச்சிதாநந்தன்.

முன்னுரை.

அறிவிற் சிறந்த பெரியீர் !

ஒருவன் துன்பத்தை விடுத்து இன்பத்தைப் பெறவேண்டுமானல் மறச்செய்கையை யொழித்து அறச்செய்கையைக் கடைப்பிடித்து குருவருளை அவசியம் பெறவேண்டும். குருவருள்பெற்றவன் சகலவித துக்கங்களும் நீங்கிப்பரமானந்த வாழ்வைப் பெறுவான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை; ஆதலால் ஒவ்வொருவரும் சற்குருவையடைந்து வழிபட வேண்டியது அவஸ்யம். ஆகவே யானிப்போது கூறப்புகுந்த விஷயம் குரு சிஷ்ய லக்ஷணம் என்பதாம். ஆனல் ஸ்ரீ சற்குருலக்ஷணத்தையும் சீடனுடைய லக்ஷணத்தையும் சாங்கோபமாக எழுதிமுடிக்க முடியாது; ஏனெனில் ? சாஸ்திரங்களில் மிகவும் தேர்ச்சியுள்ளவர்களால் விவரிக்கத்தக்கது. ஆயினும் இவ்வரிய விஷயத்தை இச்சிறுவனல் எழுதத் தொடங்குவது திருப்பாற்கடலை சிற்றெரும்பு பருகநினைப்பதுபோலவும், சந்திரனைக் கரத்தால் பிடிக்கத் தாவுவதுபோலவும், கடலைக் கடக்கக் கரத்தால் நீந்துவதுபோலவும் ஒக்கும். ஆயினும் என் விசாரணைக்கும் கேள்விக்கும் எட்டினமட்டிற் சுருங்கக்கூறுவதை அன்பு பாலித்து ஏற்றுக் கொள்வீரெனத் தோற்றங்கொண்டே இங்கனம் இறகுகோலை ஏவலானேன். இதில் நேரிடுந்தவறுகளை நீக்கிக் குணப்பொருளைச் சீர்தூக்கி ஆதரிக்க நமது பக்தசீலராகிய பத்திராதிபரையும் அவர் கல்விக் கடலிற்றுளைந்து விளையாடும் உத்தமர்களையும் வேண்டுகிறேன்.

(ஸ்ரீகுரு: ஸர்வகாரண பூதா ஸக்தி)

—பாவனேபநிஷத்.

மெய்யன்பர்களே !

கு—ரு—என்னும் இந்த இரண்டு அக்ஷரமே சப்தகோடி மஹா மந்திரங்களிலும் மிகவும் சிரேஷ்ட்டமானது. குரு கீதையில்

"ஸப்த கோடி மஹா மந்த்ர: சித்தவிப் ப்ரமகா நாக:
ஏகமேவ பரோ மந்த்ர: குருரித் த்யக்ஷரத்வயம்"

என்று சொல்லப்படுகிறது.

குகாரம் அந்தகாரம்; ருகாரம் (அதனை விழுங்கும்) தேஜஸெனப் படுகின்றது. அஞ்ஞானத்தை விழுங்கும் ப்ரஹ்மம் "குருவே"; சம்சயமில்லை என்றும், கு-என்றால் கா டா ந் த கா ர ம்; ரு-என்றால் காடாந்தகாரத்தை நாசம் செய்யப்பட்டவன்; ஆதலால் குரு என்றால் அஞ்ஞானமாகிய காடாந்தகாரத்தை நாசம் செய்யப்பட்டவன் என்றும், குகாரம்-குணாதீதமாம்; ரூபாதீதம் ருகாரமாம். குணரூபங்களில்லாததாயிருத்தலால் குருவென்று சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது.

குரு—அதாவது ஆசிரியன்

"ஆசிநோதிஹி ஸாஸ்த்ராதா நாசா ரேஸ்தா பயத்யபி
ஸ்வயமா சரதே யஸ்மாத்-தஸ்மாதா சார்ய உச்யதே,"

என்கிறபடி சாஸ்திரார்த்தங்களைக்கூட்டிப் போதித்துச் சீடனை நல்லொழுக்கத்தில் நிலை நிறுத்துகிறவனும், அதுபோலவே தானும் நன்மார்க்கத்தைக் கடைப்பிடித் தொழுகுபவனா யிருத்தலால் ஆசாரியனெனப்படுகிறான்.

"குரு லக்ஷணம்"

ஆசாரியனானவன், "ஆசார்யோ வேத ஸம்பந்நோ . . . . . . மம்த்ரஜ்ஞோ மம்த்ரபக்தஸ்சஸதா மம்த்ரஸ் ரயஸ்ஸாசி—குருபக்தி ஸமாயுக்த: புராணஜ்ஞோ விசேஷக:—ஏவம் லக்ஷண ஸம்பந்நோ குருரித்யபி தீயதே" என்கிறபடி வேதாத்யயனம் செய்தவனாயும், த்வேஷமில்லாதவனாயும், மந்திரமறிந்தவனாயும், ஆசாரிய பக்தியுடையவனாயும், விசேஷமாய்ப் புராணங்களைப் படித்தவனாயும், ஆத்மஞான நிஷ்டையுடையவனாயும், ஒருவித பயனையும் கருதாமல் போதிப்பவனாயும், பணத்திற்காகவோ புகழுக்காகவோ, பெயருக்காகவோ, கற்பிக்காமல் சீடனிடம் கருணையினால் மட்டும் உபதேசிப்பவனாயிருத்தல்வேண்டும்.

ஆசிரியனுடைய இலக்கணத்தை ஆத்திரையன் பேராசிரியரும்,

"வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான் யாரன்ன தூய்மையும் வான்யாறு
நிலம் படர்ந்தன்ன நலம்பட ரொழுக்கமும்

தீங்க ளன்ன கல்வியுந் திங்களோடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவது
மஃகா வன்பும் வெஃகா வுள்ளமும்
துலைநா வன்ன சமநிலை யுள்பட
வெண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையும் தாளா அண்மையு
முலகிய லறிதலு நிலைஇய தோற்றமும்
பொறையு நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவு முருவு மாற்றலும் புகழுஞ்
சொற்பொரு ளுணர்த்துஞ் சொல் வன்மையும்
கற்போர் நெஞ்சங் காமுறப் படுதலும்
மின்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பி னல்லா சிரியர் ''

எனும் தொல்காப்பிய பாயிர சூத்திரத்தாலறிக.

மேலே கூறின இலக்கணத்தை யுடையவனே குருவென்னும் பதவிக்கேற்றவன்.

'' ஆசார்யு ஏவ ஸம்ஸார மோசக ப்ரத உச்யதே:
ஆசார்யோ நாம வேதாந்த விசாரணுத்த வேதன:

—காந்தம்.

சம்சாரமாகிற ஜநன மரண துக்கத்திலிருந்து விடுவிக்கிறவர் குருவேதான்; குரு யாரென்றால் வேதாந்த விசாரத்தினாலடைந்த ஆத்துமக்ஞானமுடையவர் யாரோ அவரே குருவென்று சொல்லப் படுகிறது. சகல சமுசாரத்தையும் மித்தியவடிவமாக உபதேசிக்கும் குருநாதரானவர் பிராஹ்மணனாயினும், அல்லது வைசியனாயினும், அல்லது சூத்திரனாயினும், ஸ்திரீயேயாயினும், அல்லது நபும்சகனே யாயினும், அல்லது வயதில் சிறியவனாயினும் அவரேதான் குருவாகப் பாவித்தல்வேண்டும்.

ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளும்

, , , , . த்ருட்ப்ரஜ்ஞாஹி யஸ்யாஸ்திசேத்
சண்டாளோஸ் துத்விஜோஸ்து குருரித்யேஷா மனீஷமம

—மனீஷாபஞ்சகம்,

த்ருட்ப்ரஜ்ஞாஹி - திடமான ஞானம், யஸ்ய - எவனுக்கு, அஸ்திசேத் - இருக்கின்றதோ, (ஸது-அப்படிப்பட்டவன்) சண்டா

ளோஸ்து - சண்டாளனுனபோதிலும், த்விஜோஸ்து - பிராம்மணனுனபோதிலும், குருரிதி - குரு என்பது, மம - என்னுடைய, ஏஷா மனீஷா - என்னுடைய அபிப்ராயம் என்றூர்.

நாம் ஆற்றைக்கடக்கவேண்டுமென்றூல் படகுவோட்டுபவனைக் கொண்டு கடக்கின்றேம். படகுவோட்டுபவன் ஈனஜாதியாகயிருந்தாலும் அவனைத்தவிர்த்து ஆற்றைக் கடக்கமுடியாது ; அதுபோல் கற்றவன் ஈனஜாதிப் பிறப்பினனுயினும் அவனைக்கொண்டே,தான் கற்கவேண்டும்.

நாலடியாரிலும்,

தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணுய்
அவன்றுணை யாவாறு போபற்றே நூல்கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்.

என்றூர்

இதற்குச் சான்றுக பிரமவிருடிகளாகிய துருவாசர் முதலாயினோர் நான்காம்வருணத்தானுகிய விதுரனிடத்திலே ஞானேபதேசம் பெற்றூர்களென்றும், திருத்துறையூரிலிருந்த சகலாகம பண்டிதரென்னும் அருணந்தி சிவாசாரியர் திருவெண்ணெய்நல்லூரிலிருந்த நான்காம் வருணத்தாராகிய மெய்கண்ட தேவரிடத்திலே ஞானேபதேசம் பெற்றூரென்றும், பாரத, பாகவதங்களிலும், சைவபுராணங்களிலும் கூறப்பட்டுள்ளது..

(தொடரும்.)

சிவமயம்.

திருவிளக்குப்பூசை

சிவசுப்பிரமணியன்.

நாம் தீபத்தையும் அக்கினியையும் வணங்குகிறோமென்று சிலர் நம்மை எளனமாகக் கருதுகின்றார்கள். அது கடவுள் இலட்சணம் பூரணமாக அறியாத்தன்மையாகும். நமது முன்னோர்பயனற்றகாரியத்தையேனும் குற்றமுடையவற்றையேனும் செய்யும்படி நமக்குக் கட்டளையிட்டிருக்கவில்லை. அவர்கள் அனுபவமாக யாவுமறிந்தே கூறியிருக்கிறார்கள்.

இப்போது தீபம் அல்லது அக்னி என்பதை நாம் வணங்குவதற்குக் காரணம் யாதென்று நோக்கின், அக்னியினிடத்தில் கடவுளின் முக்கிய இலக்ஷணங்களில் சில பொருந்தியிருக்கின்றன என்பதால்தான் என்று அறியலாம்.

அதோடு கடவுளும் அடியார்களுக்கு அருள்செய்ய அதன்வழியாய் வெளிப்படுகிறார் என்பது நம்முன்னோர் கண்டது. நெருப்பினிடத்தில் காணப்படும் குணங்களும் கடவுளிடத்துள்ள குணங்களும் ஒற்றுமையாயிருப்பதைச் சிறிது சிந்திப்போம். முதலாவது கடவுள் பேரொளியுடையவர், அதாவது மிகுந்த பிரகாசமுடையவர். மாமணிச்சோதியான் என்றும், சோதியே, சுடரே, சூழொளி விளக்கே என்றும் பெரியோர் கூறியிருக்கின்றார்கள். விளக்குக்கும் அதாவது நெருப்புக்கும் வெளிச்சம் இருக்கின்றது. இரண்டாவது, கடவுள் எங்கும் எப்பொருள்களிலும் இருப்பதுபோலவே நெருப்பும் அதாவது சூடு இல்லாத பொருள் உலகில் இல்லை. சூடு குறைவுற்றால் அப்பொருள் அழிவுறும். மனிதரும் சூடு குறைந்தபின்னரே சாகின்றனர். மூன்றாவது, கடவுள் எல்லாவற்றையும் அறிந்து மற்றோரையும் அறிவிப்பர். அதுபோலவே விளக்கும் எல்லாவற்றையும் காட்டித் தன்னையுங்காட்டிக்கொள்ளும். நான்காவது, கடவுள் தூய உடம்பும் தூய்மையும் உடையவர். தன்னிடம் சேர்ந்தாரையும் தூய்மை செய்

வர். நெருப்பும் தான் தூய்மையாயிருந்துகொண்டு தன்னிடம்சேரும் பொருள்களையும் தூய்மைசெய்யும். அதாவது நெருப்பிலிட்ட எப்பொருள்களும் நீருகித் தூய்மையாகும். ஐந்தாவது, கடவுள் தன்னைச் சேர்ந்தார்க்கு இன்பமும் சேராதார்க்குத் துன்பமும் கொடுப்பது போன்றே நெருப்பும் தன்னைச்சேர்ந்த மனிதர் குளிர்விட்டு சுகமும், உண்டிமுதலியவை அடைந்து இன்பமும், அடையச்செய்து சேரார்க்குக் குளிரும் மந்தமும் கொடுத்துத் துன்பமும் அடையச்செய்கிறது.

இதுவரை கூறிவந்த குணங்கள் எல்லாம் எல்லா மதத்திற்கும் பொதுவானது. இனி நம் சைவ சித்தாந்த மதத்திற்குரிய சில குறிப்புக்குணங்களும் விளக்கினிடம் காணக்கூடும். நம் சைவசமயக் கொள்கைப்படி கடவுள் பாதிஉடலை அம்மையாம் உமாதேவியாருக்குக்கொடுத்து மங்கைபங்காளன் எனப் பெயர்பெற்றனர். அதுபோல் விளக்கிலும் தீ எரிகிற இடத்தில் ஒரு நிறமும், வெளியில் ஒரு நிறமுமாக இரண்டுபாகங்கள் தோன்றும். இனி அம்மையின் நிறம் பச்சை கலந்த கருப்பு என்பர். அதுபோல் விளக்கிலுள்ள இரண்டுபாகங்களில் உள்பாகம் சிறு ஊதாநிறமுள்ளது. அம்மையே கடவுளின் சக்தி அல்லது வல்லமை யாவர்? அதுபோல் விளக்கு எரிவதற்கு நீலநிறமான அந்தப்பாகமே முக்கியமானது. அங்குதான் எண்ணெய் ஆவியாகி எரியத்தயாராகிறது. சிவபெருமான் நிறம் பொன்னிறம் என்பர். அதுபோல் மற்றப்பாகம் பொன்னிறங்கொண்டுவிளங்கும்.

ஆகையால், எவ்விதத்திலும் சிவபெருமானை ஒத்துள்ள குணங்களில் சில தனக்குச் சொந்தமாகக்கொண்ட விளக்கை நாம் எல்லோரும் பூசித்துச் செல்வமும் முத்தியும் பெறவேண்டுமென்பது நமமுன்னோர் கட்டளையாகும்.

அவ்வாறு நடந்து நலமடைய இறைவன் இன்னருள் செய்ய அவனடி வணங்குவாம். பிழையுள வேல் ஆன்றோர் பொறுக்க.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர். 2 Vol. 2	ஈஸ்வர வருடு ஆனிமீ 1௳ ஜூன்—1937	இதழ் 3 No. 3

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
  மிகவானி லிந்து   வெயில் காய
 மிதவாடை வந்து தழல்போல வொன்ற
  வினைமாதர் தந்தம்   வசைகூற

குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
  கொடிதான துன்ப   மயல்தீர
 குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
  குறைதீர வந்து   குறுகாயோ

மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து
  வழிபாடு தந்த   மதியாளா
 மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
  வடிவே லெறிந்த   அதி தீரா

அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சும்
  அடியா ரிடைஞ்சல்   களை வோனே
 அழகான செம்போன் மயில்மே லமர்ந்து
  அலைவா யுகந்த   பெருமா ளே.

பதவுரை.

மறிமான் உகந்த - மான்குட்டியைக் கருணையுடன் காத்திலேந்தியுள்ள, இறையோன் - எப்பொருட்கும் இறைவராகிய சிவபெருமான், மகிழ்ந்து - பிரணவோபதேசம் பெறுவதற்காக மனமகிழ்ச்சியுடன், வழிபாடு தந்த - சிஷ்யபாவ மூர்த்தியாக நின்று வழிபட்ட, மதியாளா - ஞானவடிவினரே!, மலை - கிரவுஞ்ச மலையும், மாவு சிந்த - மா மரமாக நின்ற சூரபன்மனும் அழியுமாறும், அலை வேலை அஞ்ச - அலைகளையுடைய கடல் அஞ்சவும், வடிவேல் எறிந்த - கூர்மை பொருந்திய வேலாயுதத்தைப் பிரயோகம் புரிந்த, அதி தீரா - மிகவுந் தைரியத்தை யுடையவரே!, அறிவாலறிந்து - பாச அறிவும் பசு அறிவும் நீங்கிய மெய்யறிவினால் உணர்ந்து, உன் இருதாள் இறைஞ்சும் - தேவரீரது திருவடித் தாமரைகள் இரண்டையும் வணங்குகின்ற, அடியார் இடைஞ்சல் - அடியார்களது இடையூறுகளை, களைவோனே - நீக்குபவரே!, அழகான செம்பொன் மயில்மேல் - அழகியதும் செம்பொற் சாயலை யுடையதுமாகிய மயிலின்மிசை, அமர்ந்த - ஏறிக்கொண்டு, அலைவாய் உகந்த - திருச்சீரலைவாய் என்னும் புனிதக்ஷேத்திரத்தில் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே!, விறல் மாரன் - யாவரையும் மயக்குகின்ற சக்தியுடைய மன்மதன், மலர்வாளி சிந்த - மலர்க்கணைகளை வீசவும், வானில் - ஆகாயத்தில், மிக இந்து வெயில் காய - சந்திரன் மிகவும் குளிர்ந்த கிரணங்களைப் பொழியவும், மிதவாடை வந்து - மெல்லிய தென்றல் காற்று வந்து, தழல்போல ஒன்ற - அக்கினிபோல் நெருங்கவும், வினை மாதர் தம் தம் - வினைவசப்பட்ட மாதர்கள் தங்கள் தங்கள் மனம்போன வண்ணம், வசை கூற - வசைமொழிகளைக் கூறவும், குறவாணர் குன்றில் உறை - ஐம்புலன்களாகிய குறவர்களுடைய மலையில் வசிக்கின்ற, பேதைகொண்ட - அறியாமையையுடைய பெண்ணாகிய ஜீவான்மாவடைந்த, கொடிது ஆன துன்ப - கொடிய துன்பத்தைப் புரியும், மயல்தீர - மயக்கம் நீங்க, குளிர் மாலையின்கண் - குளிர்ச்சி பொருந்திய மாலைநேரத்தில், அணிமாலை தந்து - தேவரீரது திருமார்பிலணிந்துள்ள மாலையைத் தந்து, குறைதீரவந்து - இந்த ஜீவான்மாவினது குறை நீங்குமாறு வந்து, குறுகாயோ - அணுக மாட்டீரோ?

பொழிப்புரை.

தாருகவனத்திருடிகளா லனுப்பப்பட்ட மான்குட்டியைக் கருணையினால் காத்திலேந்தியுள்ள, எவ்வுயிர்க்கும் எப்பொருட்கும் இறைவராகிய சிவபெருமான், குடிலை மந்திரோபதேசம் பெறும் பொருட்டு மகிழ்ச்சியுடன் வழிபாடுசெய்த ஞான சொரூபியே! கிரவுஞ்ச மலையும், மா மரமாகிநின்ற சூரபன்மனையும் அழியும்படியும்; அலைகளையுடைத்தான சமுத்திரம் அஞ்சவும், வடிவேலாயுதத்தை எறிந்த மிகுந்த தைரியத்தை யுடையவரே!, பதிஞானத்தால் மெய்ப் பொருளையறிந்து தேவரீரது அருணசரணாரவிந்தங்கள் இரண்டையும் வணங்குகின்ற அடியார்களது இன்னல்களை யகற்றுகின்றவரே! அழகிய செம்பொன்னனைய மயில்மேல் அமர்ந்து திருச்சிராமலைவாய் என்னுந் திருத்தலத்தில் மகிழ்ச்சியுடன் உறைகின்ற பெருமையிற் சிறந்தவரே! (எத்திறப்பட்டாரையும் மயக்குகிற) சக்தியையுடைய மன்மதன் ஐந்து மலர்க்கணைகளைச் சிந்தவும், ஆகாயத்தில் சந்திரன் மிகவும்குளிர்ந்த கிரணங்களைப்பொழியவும், மெல்லியதென்றற்காற்று அக்கினிபோல் வந்து வெப்பத்தைச் செய்யவும், வினைகளைப்புரியும் பெண்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றியவண்ணமெல்லாம் நிந்தை மொழிகளைச் சொல்லவும், ஐம்புலன்களாகிய வேடுவர்களது கன்மங்களாகிய மலைமேலுறைகின்ற ஜீவான்மாவாகிய பெண்மங்கைகொண்ட கொடிய துன்பத்தை விளைக்கின்ற மயக்கம் நீங்குமாறு, குளிர்ந்த மாலை நேரத்தில் தேவரீர் அணிந்துகொண்டுள்ள மலர்மாலையைத்தந்து இந்த ஜீவான்மாவினது குறைதிருமாறு வந்து அணுகாயோ?

விரிவுரை.

விறல்மாரன் :—

யயாதி, நகுஷன், புரூரவன், சர்யாதி முதலிய ராஜரிஷிகளையும், காசிபர், சியவனர், கௌதமர், பராசர், விசுவாமித்திரர் முதலிய பிரம்ம ரிஷிகளையும்; இந்திரன், அக்கினி, பிரமன், திருமால் முதலிய இமையவர்களையும்; தனது மலர்க்கணைகளால் மயக்கி வாகைசூடியோன் ஆதலால் மதனனை விறல்மாரன் என்றனர்.

ஐந்து மலர்வாளி :—

மன்மதன் கணைகள் ஐந்து. அவையாவன: தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன. இவற்றின் பெயர் முறையே :— உன்மத்தம், மதனம், சம்மோகம், சந்தாபம், வசீகரணம் என்பன வாம். இவை செய்யும் அவத்தை :—சுப்ரயோகம், விப்ரயோகம், சோகம், மோகம், மரணம். இதன் விவரம் : சுப்ரயோகம் :—சொல் லும் நினைவும்; விப்ரயோகம் :—வெய்துயிர்த்திரங்கல் ; சோகம்:— வெதுப்புந் துய்யன தெவிட்டலும் ; மோகம்:—அழுங்கலும் மொழி பல பிதற்றலும் ; மரணம் :—அயர்ப்பும் மயக்கமுமாம்.

பேதைகொண்ட கோடிதான துன்பமயல் :—

தலைவன்மீது காதல்கொண்ட தலைவிக்கு குளிர்ந்த சந்திரனது தண்ணொளி வெப்பத்தையும், தென்றல் காற்று அனல்போன்ற வெம் மையையும் செய்யும். ஈண்டு ஜீவான்மா நாயகியாகவும், பரமான்மா நாயகனாகவும் வைத்து; பரமான்மாவாகிய நாயகன்மீது காதல் கொண்ட நாயகியாகிய ஜீவான்மா மிகுந்த தாபத்தையடைந்து வருந்துகின்றது. இங்ஙனம் நாயகி நாயகபாவத்தில் எழுந்த திருப் புகழ் பல.

“ துள்ளுமத வேள் கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே ”

—*திருப்புகழ்,*

தென்றலையம்பு புனைவார் குமார திமிரமுந்நீர்த்
தென்றலையம்புய மின்கோ மருக செழுமறைதேர்
தென்றலையம்பு சகபூ தரவெரி சிந்திமன்றல்
தென்றலையம்பு படுநெறி போயுயிர் தீர்கின்றதே.

இங்ஙனம் பரமான்மாவின்மீது வேட்கைகொண்ட ஜீவான்மா அவ்வேட்கைதீர மலர்மாலையை விரும்புகிறது.

“ நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே ”

—*திருப்புகழ்.*

மறிமான் . . . . . வழிபாடுதந்த மதியாளா:—

அறுமுகச் சிவனாரை ஐம்முகச் சிவனார் வழிபட்ட வரலாறு.

கயிலைமலையின்கண் குமாரக்கடவுள் வீற்றிருந்த ஞான்று சிவ வழிபாட்டின்பொருட்டு வந்த அமரர்கள் அனைவரும் குகக்கடவுளை வணங்கிச்சென்றனர். அங்ஙனம் வணங்காது சென்ற பிரமனை யழைத்து பிரவணப்பொருளை வினவி, அதனையுரைக்காது விழித்த அம்புயனை அறுமுகனார் சிறைப்படுத்தி, முத்தொழிலும் புரிந்து தாமே மூவர்க்கும் முதல்வன் என்பதை மலையிடை வைத்த மணிவிளக்கென வெளிப்படுத்தினர்.

பின்னர் ஒருகால் கந்தாசலத் திருக்கோயிலின்கணிருந்த கந்தக் கடவுள் தந்தையாராகிய தழல்மேனியாரைத் தெரிசிக்கச் சென்றனர். பொன்னார் மேனிப்புரிசடை யண்ணல் "புதல்வ! இங்ஙனம் வருக" என்று எடுத்து அணைத்து உச்சி மோந்து முதுகுதைவந்து "குமார! நின் பெருமையை உலகமெவ்வாறு தெறியும்: மறைகளால் மனத் தால் வாக்கால் அளக்கவொண்ணாத மாப்பெருந்தகைமையுடைய நின்னை உள்ளபடி உணரவல்லார் யாவர்?" என்று புகழ்ந்து அதனை விளக்குவான் உன்னி எத்திறப்பட்டோர்க்கும் குருநாதனின்றி மெய்ப் பொருளை யுணரமுடியா தென்பதையும், குருஅவசியம் இருத்தல் வேண்டுமென்பதையும் உலகிற்கு உணர்த்துமாறுந் திருவுளங்கொண்டு, புன்முறுவல்பூத்த முகத்தினராய் வரைபகவெறிந்த வள்ளலை நோக்கி,

அமரர்வணங்குங் குமரநாயக! அறியாமையானுதல், உரிமை குறித்தாதல் நட்பினர் மாட்டும் பிழைகள் தோன்றல் இயற்கை. அறிவின்மிக்க ஆன்றோர் அறிந்து ஒரு பிழையும் செய்கிலார். அறி விற் குறைந்த சிறியோர் அறிந்தும், அறியாமையானும் பெரும் பிழை களையுஞ் செய்வர். அவ்வத்திறங்களின் உண்மைகளை யறிந்த பெரி யோர் அதுபற்றிச் சினந்து வைரங்கொள்ளார். ஆதலால் அம்புயனும் அறிவின்மையால் நின்னைக்கண்டு வணக்கம் புரியாது சென்றனன். அவனை விளித்து அவன் மூக்கிலும் செவிகளிலும் வாயிலும் கண்களி லும் உதிரஞ் சொரியுமாறு குட்டி, கனங்களால் அடிப்பித்து, பல நாளாகச் சிறையிலிருத்தி, எல்லார் தொழிலையும் நீயே யியற்றினை. எல்லார்க்குச்செய்யும் வணக்கமும் நினக்கே யெய்துந்தகையது; அறு

சமயத்தார்க்கும் நீயே தலைவன்" என்று எம்பிரானார் இனிதுகூறினர். எந்தை கந்தவேள் இளநகைகொண்டு "தந்தையே! ஓமெழுத்தின் உட்பொருளை யுணராப் பிரமன் உலகங்களைச் சிருட்டி செய்யும் வல்லவனாதல் எவ்வாறு? அங்ஙன மறியாதவனுக்குச் சிருட்டித் தொழிலை யெவ்வாறு கொடுக்கலாம்?' என்றனர்.

சிவபெருமான் "மைந்த! நீ அதன் பொருளைத் தெரிக்குதி" என்ன, குன்றெறிந்த குமாரக்கடவுள் "அண்ணலே! எந்தப்பொருள்களும் உபதேசமுறையினாலன்றி உரைத்தல் தகாது. காலம் இடம் என்பன அறிந்து, முறையினாற் கழறவல்லேம்" என்றனர். அானார் கேட்டு "செல்வக்குமர! உண்மையே உரைத்தனை; ஞானபோத உபதேசப்பொருள் கேட்டதற்கு சிறந்ததென்னும் மாசிமாதத்து மக நாள் இதோ வருகிறது; நீ எஞ்ஞான்றும் நீங்காத விருப்புடனமருந் தணிகைவெற்பை யடைகின்றும்" என்று கணங்களுடன் புறப்பட்டு ஏறார்ந்து தணிகைமாமலையைச் சார்ந்தனர். குமாரக்கடவுள் தோன்றுமை கண்டு, பிரணவப்பொருள் முதலிய உண்மையுபதேசமெல்லாம் தவத்தானும் வழிபாட்டானுமே கிடைக்கற்பாலனவென்று உலகங் கண்டு தெளிந்துய்வான் றவம்புரிய ஆரம்பித்தனர். ஞானசத்திதரக் கடவுளாரின் அத்தாணி மண்டபம் எனப்படூஉம் திருத்தணிமலைச் சாரலின் வடகீழ்ப்பாற் சென்று, கம்புரிசடை தூங்க, வேற்படை விமலனை உளநிறுவி ஓர் கணப்பொழுது தவம்புரிந்தனர். எல்லாம் வல்ல இறைவன் அங்ஙனம் ஒரு கணப்பொழுது தவமுஞற்றலானன்றே அத்தணிகைமலை கணிக வெற்புஎனப் பெயர்பெற்றதென்ப.

கண்ணுதற்கடவுள் இங்ஙனம் ஒரு கணம் தவமியற்றக் கதிர் வேலண்ணல் தோன்றலும், ஆலமுண்ட அண்ணல் எழுந்து குமரனை வணங்கி வடதிசை நோக்கி நின்று பிரணவ உபதேசம் பெறும் பொருட்டு சீடனது இலக்கணத்தை உலகிற்கு உணர்த்தும்பொருட்டு சிஷ்யபாவகமாக நின்று வந்தனை வழிபாடுசெய்து பிரணவோபதேசம் பெற்றனர்.

"திருறுங் குமரனை யிருந்தவி சேற்றியங்
கதிர்கழல் வந்தனை யதனொடுந் தாழ்வயிற்
சதுர்பட வைகுபு தாவரும் பிரணவ
முதுபொருட் செறிவெலா மொழிதரக் கேட்டனன்.

—தணிகை புராணம்.

"நாத போற்றி யெனமுது தாதை கேட்க அநுபவ
ஞான வார்த்தை யருளிய பெருமாளே"
—(ஆலமேற்ற) திருப்புகழ்.

"நாதா குமரா நமவென் றரனர்
ஓதா வென ஓதிய தெப் பொருள்தான்"
—அநுபூதி.

தமிழ்விரக உயர்பரம சங்கரன் கும்பிடுந் தம்பிரானே.
—(ஒருவரையு) திருப்புகழ்.

மலைமாவு சிந்த . . . . . . வடிவேலெறிந்த :—

மலை :—கிரவுஞ்சமலை. அதனை எறிந்தவரலாற்றை திருப்புகழமிர்தம் முதற்பாகம் 36-ம் பக்கத்திற் காண்க.

மா வெறிந்த வரலாறு.

மாயையின் மகனாகிய சூரபன்மன் சிவமூர்த்தியின்பால் பற்பல வரம் பெற்று உளந்தருக்கி அறநெறி பிறழ்ந்து அமரர்க்கு அலக்கண் விளைத்த ஞான்று, குமாரக்கடவுள் தேவர் சிறைதீர்ப்பான் அமர் தொடங்கி அசுரர் அனைவரையும் அட்டனர். முடிவில் சூரபன்மன் போர்க்கோலங்கொண்டு ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள சேனைகளைத் திரட்டிக்கொண்டு போர்க்களமுற்றனன். அப்பெருந்தானையைக்கண்ட பூதவெள்ளங்களும் சேனாபதிகளும் வீரபாகு ஒழிந்த ஏனைய வீரர்களும் உளநடுங்கினர். தேவர்கள் அளக்கவொணா அலக்கணையடைந்தனர். குகப்பெருமானர் அப்பெருஞ் சேனைகளையெல்லாம் அழித்தனர். முருகவேளும் சூரபன்மனும் நெடுநேரம் போர் புரிந்தனர். சூரபன்மனுடைய பற்பல ஆயுதங்களும் மாயைத்திறங்களும் ஒழிந்தன. அவுணர்கோன் முடிவில் "இக்குமரனைக் கொணர்ந்து யுத்தத்தை விளைவித்த தேவர்களை முதலில் கொன்று சிறிது சினந்தணிந்தபின் இக்குமரனோடு போர் புரிவேன்" என்று நினைத்து ஓர் மாயாமந்திரத்தைச் செபித்து உலகமுழுவதும் பெரிய இருள் சூழுமாறு செய்து; அவ்விருளில் வாளையேந்தி தேவர்களைக் கொல்லுதற்பொருட்டு விண்ணிடை பாய்ந்தனன். அதனைக் குறிப்பாலுணர்ந்த அரியயனாதியமரர்கள்

தேவர்கள் தேவே யோலம் சிறந்தசிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா வோலம்

பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே யோலம் யோலம்.

என்று முறையிட்டனர். அம்முறையைக் கேட்டு மூவிரு முகங் கொண்டுள்ள முழுமுதற்கடவுள், சேயழுகை தாயைப்போல் தண்ணருள் சுரந்து, தமது திருக்காத்தில் வைகுஞ் செங்கதிர்வேலாயுதத்தை நோக்கி "நீ விரைந்துசென்று சூரபன்மனுடைய மாயைகளையும் ஆற்றலையும் அழித்து அவனது உடலைப்பிளந்து வருதி" என்று ஆணை தந்தனர். உடனே வேற்படையானது ஆயிரங்கோடி சூரியர்கள் ஒருங்குகூடினாற்போலத் திகழ்ந்து அக்கினி மழையைப் பொழிந்துகொண்டு சூரன் கொண்ட இருளுருவத்தை இமைப்பொழுதிலழித்தது.

அரியு மயனோ டபய மெனவே
அயிலை யிருள்மேல் விடுவோனே.
—(இருவர்) திருப்புகழ்.

சூரபன்மன் "முடிவில்லாத வரத்தையுடைய என்னை இவ்வேற்படை யாதுசெய்ய வல்லது? இதன் திறத்தைக் காண்கின்றனன்" என்று அண்ட முகடுகள் நடுங்கச் சிரித்து, மிகுந்த சீற்றங்கொண்டு, "சமுத்திரம், பூதலம், பிரமாதி தேவர்களது உலகங்கள் உயிர்கள் முதலிய அனைத்தையும் இப்பொழுதே யழிப்பன்" என்று விரைந்து சென்று கடல் நடுவில், நெருப்புப்போலுந் தளிர்களும், புகைபோன்ற இலைகளும், மேகக்கூட்டங்கள் போன்ற கிளைகளும், மாகத கற்கள் போன்ற பிஞ்சுகளும், மாணிக்கத்தையொத்த பழங்களுங்கொண்டு பிரமாண்டச் சுவர்வரையிலும் வேரோடி, இலக்கயோசனை தூரமளவும் விசாலித்த கலைகிழான மாமரவடிவங்கொண்டு, சகல லோகங்களையும் நடுநடுங்கமோதினன்.

வன்னியி னலங்கல் கான்று வான்றழை புகையினல்கிப்
பொன்னென விணர்க ளீன்று மரகதம் புரையக் காய்த்துச்
செந்நிற மணிகளென்னத் தீம்பழங் கொண்டு கார்போற்
றுன்னுபல் கவடுபோக்கிச் சூதமா யவுண னின்றான்

அஷ்டநாகங்களும் திக்கஜங்களும் சந்திர சூரியரும் எல்லாவுயிர்களும் அஞ்சி ஓலமிட்டன. அந்த மாந்தரு சிறிது அசைந்த பொழுது எல்லா வுலகங்களும் அசைந்தன; குலகிரிகள் பொடிபட்டன; உல

கத்தைத் தாங்கும் கூர்மமும் ஆதிசேடனும் புரண்டனர். நட்சத்திரங்கள் உதிர்ந்தன. அண்டங்களெல்லாந் தகர்ந்தன. நாரணனுலகும் நான்முகனுலகும் அழிந்தன. தேவர்களெல்லாம் வெருவி கயிலையைநாடி இரிந்தனர். அக்கால் அறுமுகப்பெருமான் விடுத்த அயிற்படை, ஆயிரங்கோடி யண்டத்து அக்கினியும் ஒன்று சேர்ந்தாப்போல் பேரனல்வடிவு தாங்கிச் சென்று

தேயுவி னெடுத்த வண்டத் திறங்களும் பிறங்கு ஞாலத்
தாயிரகோடி யண்டத் தங்கியு மொன்றிற் றென்ன
மீயுயர்ந் தொழுகி யான்றோர் வெருவருந் தோற்றங் கொண்டு
நாயகன் றனது தெய்வப் படைக்கல நடந்த தன்றே

மூதண்ட முகடுவரை வளர்ந்தோங்கி கிளைகளையசைத்து உலகங்களை யெல்லாம் அசைத்தழிக்கின்ற மா மரத்தை இரு கூறாகப் பிளந்தது.

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கன லுறுத்திப் பாணி
யிடம்பிடித் திட்ட தீயிற் றோய்த்துமுன் னியற்றி யன்ன
வுடம்பிடித் தெய்வ மிவ்வா றருகெழு சேலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே.

"கவடு கோத் தெழும் உவரி மாத்திறல்
காய் வேல் பாடடன்"

—திருப்புகழ்.

கருத்துரை.

இறைவராகிய சிவபெருமான் வழிபாடு செய்த ஞானசொரூபியே! கிரவுஞ்ச மலையும் மாமரத்தையும் அழியும்படி வேலாயுதத்தை விடுத்த அதிதீரரே! அடியார்களது இன்னல்களை அகற்றுபவரே! செந்திலாண்டவனே! ஜீவான்மாவின் துன்பம் நீங்குமாறு பரமான்மாவாகிய தேவரீரது திருமார்பிலணிந்துள்ள மலர்மாலையைத்தந்து ரக்ஷித்தருள வரமாட்டீரோ?

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

(49-ம் பக்கத் தொடர்ச்சி)

गिरौमन्निवासे नरायेधिरूढाः
तदा पर्वते राजते तेधिरूढाः ।
इतीवब्रुवन् गन्धशैलाधिरूढः
सदेवो मुदेमे सदाषण्मुखोस्तु ॥

(6) கி³ரௌ மந்நிவாஸே நராயே தி⁴ரூடா⁴:
ததா³ பர்வதே ராஜதே தே³தி⁴ ரூடா⁴: ।
இதீவ ப்³ருவன் க³ந்த⁴ சைலாதி⁴ ரூடா⁴:
ஸதே³வோ முதே³மே ஸதா³ ஷண்முகோ²ஸ்து ॥

அவதாரிகை

இந்தச் சுலோகத்தில் கந்தப்பெருமான் கந்தமாதன பர்வதத்தில் வசிக்குங் காரணத்தைக் கூறுகின்றார்.

பதவுரை.

யே நரா: - எந்த மனிதர்கள்,
மந்நிவாஸே - எனது வாஸஸ்தானமாகிய
கி³ரௌ - பர்வதத்தின் மீது,
அதிரூடா: - எப்போது ஏறுகின்றார்களோ,
ததா - அப்போதே,
தே - அந்த மனிதர்கள்,
ராஜதே பர்வதே - வெள்ளிமாமலையின் (கைலாயத்தில்)
அதிருடா: - ஏறிவிடுகின்றார்கள்,
இதி ப்ருவன்னிவ - இவ்வுண்மையை உணர்த்துவதற்கோ என்று நினைக்கும்படி,
கந்த சைலாப்தி ரூட: - கந்தமாதன பர்வதத்தின்மீது எழுந்தருளியிருப்பவரான,
ஸ: ஷண்முக: தேவ: - அந்த ஆறுமுகக்கடவுளானவர்,
மே - எனது,
முதே - சந்தோஷத்தின் பொருட்டு,
ஸதா - எப்போதும்,
அஸ்து - இருக்கக்கடவர்.

பொழிப்புரை.

கருணைக் கடலாகிய கந்தப்பெருமானைத் தரிசிக்க அவாவுடன் வரும் அடியவர்கள் எப்போது கந்தமாதன பர்வதத்தின்மீது ஏறுவார்களோ அக்கணமே கைலாயத்தையடையும் பாக்கியம் பெறுவார்கள். இவ்வுண்மையை உணர்த்துவதற்காகவே மலையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அந்த ஆறுமுகப்பெருமான் எனக்கு எக்காலத்தும் மகிழ்ச்சியை உண்டுபண்ணட்டும்.

महांभोधितीरे महा पापचोरे
मुनीन्द्रानुकूले सुगन्धाख्यशैले।
गुहायां वसन्तं स्व भासालसन्तं
जनार्त्ति हरन्तं स्रयामो गुहन्तम् ॥

(7) மஹாம் போ⁴தி⁴ தீரே மஹா பாபசோரே
முனீந்த்³ரானு கூலே ஸுக³ந்³தா⁴க்ய சைலே ।
கு³ஹாயாம் வஸந்தம் ஸ்வ பா⁴ஸா லஸந்தம்
ஜனார்த்திம் ஹரந்தம் ஸ்ரயாமோ கு³ஹந்தம் ॥

பதவுரை.

மஹா பாபசோரே - கொடியபாவங்களைப் போக்கடிக்கின்ற,
மஹாம் போகிதீரே - பெரிய கடற்கரையின்கண்,
முனீந்த்ரானுகூலே - முனீஸ்வரர்களுக்கு அனுகூலமான,
ஸுகாந்தாக்ய சைலே - அழகிய கந்தமாதன மலையில்மீதுள்ள,
குஹாயாம் - குகையின்கண்,
வஸந்தம் - வாசம்செய்பவரும்,
ஸ்வபாஸா - தனது திவ்விய தேஜஸ்ஸால்,
லஸந்தம் - பிரகாசிப்பவரும்,
ஜனார்த்திம் - அன்பர்களின் துக்கத்தை,
ஹரந்தம் - போக்கடிப்பவரும் ஆன,
தம் - அந்த,
குஹம் - குஹப்பெருமானை,
ஸ்ரயாம: - வழிபடுகின்றோம்.

பொழிப்புரை.

பெரும் பாவங்களையும் போக்கடிக்கவல்ல புண்ணிய சமுத்திரக் கரையில் முனிவர்களுக்கு மகிழ்ச்சியைத் தாநின்ற கந்தமாதன பர்வதத்தின் குகையில் எழுந்தருளியிருப்பவரும், திவ்விய தேஜோ

மூர்த்தியும் அன்பர்களின் துன்பத்தை தீர்ப்பவருமான குஹக்கடவுளை நாங்கள் சரணமாக அடைகின்றோம்.

लसत्स्वर्णगेहे नृणां कामदोहे
सुमस्तोमसंछन्न माणिक्यमञ्चे ।
समुद्यत् सहस्रार्क तुल्य प्रकाशं
सदा भावये कार्तिकेयं सुरेशम् ॥

(8) லஸத் ஸ்வர்ண கேஹே ந்ரூணாம் காம தோஹே
ஸுமஸ் தோம ஸஞ்சந்ந மாணிக்ய மஞ்சே ।
ஸமுத்யத் ஸஹஸ்ரார்க துல்ய ப்ரகாஸம்
ஸதா பாவயே கார்த்தி கேயம் ஸுரேஸம் ॥

பதவுரை.

லஸத் ஸ்வர்ணகேஹே - பிரகாசிக்கின்ற பொன்மயமான திருக்கோயிலின்கண்,
ந்ரூணாம் காமதோஹே - அடியவர்களின் அவாவை நிறைவேற்றுவதும்,
ஸுமஸ்த்தோம ஸஞ்சந்ந மாணிக்ய மஞ்சே - புஷ்பங்களால் அழகு செய்யப்பட்ட மஞ்சத்தின்மீது,
ஸமுத்யத் ஸஹஸ்ரார்க்க துல்யப்ரகாசம் - ஏக காலத்தில் ஆயிரக்கணக்கான சூரியர்கள் உதித்தால் எத்தகைய பிரகாசம் உண்டாகுமோ அத்தகைய பிரகாசமுடையவரும்,
ஸுரேஸம் - தேவர்களுக்கெல்லாந் தலைவருமாகிய,
கார்த்திகேயம் - கார்த்திகேயப்பெருமானை,
ஸதா பாவயே - எப்போதும் எண்ணுகின்றேன்.

பொழிப்புரை.

பொன்மயமான திருக்கோயிலின்கண் அடியவர்களின் ஆசையைப் பூர்த்திசெய்வதும், அழகிய புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான மாணிக்க மஞ்சத்தின்மீது ஒரே காலத்தில் ஆயிரக்கணக்கான சூரியர்கள் உதயமானாற்போலப் பிரகாசிக்கின்றவரும், தேவர்களுக்கெல்லாம் தலைவருமான கார்த்திகேய ஸ்வாமியை நான் எப்போதும் தியானஞ் செய்கின்றேன்.

(தொடரும்.)

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(53-வது பக்கத் தொடர்ச்சி.)

இந்திரன் முதலிய இமையவர் பின்தொடர்ந்துவர நான்முகக் கடவுள் நலம்பலமல்கிய வைகுந்தமடைந்து ஆலயத்திற்குள் சென்று சங்கு சக்கிரபாணியாகிய துவாரபாலகன்பால் விடைபெற்று, பன்னகாசனன் வைகும் பேரவையடைந்து, நாராயணமூர்த்தியின் நற்றாட் கமலங்களை வணங்கி நின்றனன். கருமுகிலனைய மேனித் திருமகள் கொழுநன் கருணைசெய்து பிரமனுக்குப் பீடமளித்து, "நான்முக! நின் படைப்புத்தொழில் இடையூறின்றி இனிது நடைபெறுகிறதா?" என்று வினவ, நான்முகன் "எந்தாய்! அறிவிற் சிறந்த அருந்தவர்களாகிய சனகாதி நால்வர்கள் என் மனத்தினின்றுந் தோன்றினார்கள். அவர்களை யான் நோக்கி "மைந்தர்களே! இந்த சிருஷ்டித்தொழிலையாற்றி இங்ஙனே இருத்திர்" என்ன, அவர்கள் அது கேட்டு நகைத்து, "ஐயா! பாசமாகிய சிறைப்பட்டு படைத்தற்றொழிலை யாம் புரியோம். ஈசனாது இணையடியை யேத்தி இன்புறுவோம்" என்று கூறி நீங்கி, பெருந்தவத்தைச் செய்தனர். அத்தவத்திற்கு இரங்கி ஆலமுண்ட அண்ணலார் தோன்றி "நும் விருப்பம் யாதென" முனிவர் "ஆதிநாயக! வேத வுண்மையை விளம்புதி" என்றனர். இறைவன் வெள்ளியங்குன்றில் தென்திசையில் ஓர் ஆலவிருட்சத்தின்கீழமர்ந்து நால்வர்க்கும் நான்மறைப்பொருள்களை நவின்று நீங்கினர். அதனால் சனகாதி நால்வர்க்கும் மனம் ஒருமை யடையாமையால் வருந்தி மீளவும் கண்ணுதலை வேண்டிக் கடுந்தவமாற்றினர். பின்னர் அவர்கள் கயிலையை யணுகி எம்பிரானை வணங்கி "மனமடங்குமாறு உபதேசித்தருளல் வேண்டுமென" அவர்களது பரிபக்குவத்தை உணர்ந்து பிறைசூடிய பெருமான் ஆகமத்தினுட்கருத்துக்களாகிய சரியை கிரியை யோகமென்னும் முத்திறத்தையும் உபதேசித்து ஞானபாதத்தை விளக்குமாறு சின்முத்திரையைக் காட்டி மௌனநிலையையுணர்த்தித் தானும் மௌனத்துடன் வீற்றிருப்பா

ராயினர். அதுகண்ட அருந்தவரும் செயலற்று சிவயோகத்தில் அமர்ந்தனர். சிவபெருமான் ஒரு கணம் யோகத்தில் அமர்ந்துள காலம் நமக்கும் ஏனையோர்க்கும் பற்பல யுகங்களாயின; உயிர்கள் இச்சையின்றி ஆண்பெண் சேர்க்கையின்றி வருந்துகின்றன; அதனால் அடியேனுடைய படைப்புத்தொழில் அழிந்தது. இது நிற்க, சிவமூர்த்தியின்பால் பற்பல வரம்பெற்றுத் தருக்கிய சூராதியவுணர்கள் எமக்குத் தினந்தோறும் ஏவலைத்தந்து பொன்னுலகத்திலும் துன்பத்தை விளைவித்தனர். இந்திரன் மகனையும் ஏனையதேவர்களையும் தேவமாதர்களையும் சிறையிட்டுத் துன்புறுத்துகின்றனர். சூரபன்மன் தேவர்களை ஏவல்கொண்டு ஒப்பாரு மிக்காருமின்றி அண்டங்கள் ஆயிரத்தெட்டையும் அரசாளுகின்றனன். இவைகளையெல்லாம் அறிந்தும் அறியாதவர்போல் அரனார் சிவயோகத்தில் அமர்ந்துளார். இனி செயத்தக்கது யாது? அதனை விரைந்து விளம்புதல் வேண்டும்" என விளம்பினன். இவைகளைக்கேட்ட திருமகள் நாயகராம் நாராயணர் கூறுவார்.

"கமலாசன! எல்லா உயிர்களுக்கும் உயிர்க்குயிராய் அருவமும் உருவமும் உருவாருவமும் ஆகிய எல்லா உயிர்கட்கும் எல்லாவுலகங்கட்கும் மூலகாரணமாய் நின்ற மூவர் முதல்வனும் முக்கட்பெருமான் மோனநிலையைக்காட்டி நிற்பாரேல் உலகில் எவர்கள் தான் இச்சையுற்று மாதர் தோளைத்தழுவுவர்?

ஆவிக ளனைத்து மாகி யருவமா யுருவ மாகி
மூவகை யியற்கைத் தான மூலகாரண மதாகுந்
தேவர்கள் தேவன் யோகின் செயன்முறை காட்டு மென்னில்
ஏவர்கள் காமங் கன்றித் தோன்மைபோ லிருக்கு நீரார்.

சிவமூர்த்தியின்பால் பற்பல நலன்களைப் பெற்ற தக்கன் ஊழ்வினை வயப்பட்டு செய்நன்றி மறந்து சிவமூர்த்தியை நிந்தித்து ஒரு பெரும் வேள்வியைச் செய்ய, அச்சிவாபராதியாகிய தக்கன்பால் சேர்ந்து இருந்ததால் நமக்கு ஏற்பட்ட தீவினையைத்தீர்த்து இன்பத்தை நல்குதற்பொருட்டு எம்பிரானார் திருவுளங்கொண்டார். சூரபன்மனுக்கு அளவில்லாத ஆற்றலை நல்கியதும், அமரர்கள் அணுகுதற்கரிய நிலையில் சனகாதிகளுக்கு சிவயோகநிலையைக்காட்டி கொன்றை சூடிய குன்றவில்லி உயிர்களுக்கு இன்னலை விளைவித்ததும் என்னென்று ஆராய்ந்து நோக்கின், பேரருள் பெருக்கேயன்றி பிறிதொரு

செயலுமுண்டோ? முக்கட்பெருமான் முனிவருக்கு உணர்வுகாட்டும் மோனத்தினின்றும் நீங்கி இமவரை யீன்ற எம்பெருமாட்டியை மணந்துகொள்ளுமேல் படைத்தற்றொழில் இனிது நடைபெறும். உமாமகேஸ்வரர்பால் இனி ஓர் குமாரன் தோன்றுமேல் சூர்முதல் அவுணரையழித்து இன்பமுண்டாக்கும். உலகமெல்லாம் தொன்மை போல் நன்மைபெற்றுய்யும் இவைகளெல்லாம் இனிது நிகழுமாறு ஓர் உபாயத்தை யுரைப்பன். அம்புய! உலகத்தில் எத்திறப்பட்டோரும் காமுறுமாறு மலர்க்கணைகளை எவும் மன்மதனை ஏவி ஈசனார்மேல் ஐங்கணைகளைப் பொழியச்செய்யின் சிவமூர்த்தி யோகத்தினின்றும் நீங்கி அகிலாண்டநாயகியை மணந்து சூராதிகளையழிக்கும் திருக்குமாரனை நல்குவர்; இதுவே செயத்தக்கது" என்றனர்.

அதுகேட்ட பிரமன் "அண்ணலே! நன்று நன்று; இது செய்யின் எண்ணிய கருமம் கைகூடும்; சமயத்திற்குத் தக்கவாறு கூறினீர்" என்றுகூற, நாராயணர் "வாணிகேள்வ! நீ உடனே மதனனை யழைத்து மதி நதி மௌலிபால் அனுப்புதி" என்றனன். மலரவன் மகிழ்ந்து மாயவனைவணங்கி விடைபெற்று இந்திராதி இமையவருடன் தனது மனோவதி நகரையடைந்து பதுமபீடமிசை வீற்றிருந்தனன்.

காமதகனப்.

மலர்த்தவிசின்மீது வீற்றிருந்த பிரமதேவன் மலர்க்கணைக் கிழவனாகிய மன்மதனை வருமாறு நினைந்தான். மாயவன் மகனும் மன்மதன் உடனே தனது பரிவாரங்களுடன் வந்து நான்முகனை வணங்கி "அண்ணலே! அடியேனை நினைத்த காரணம்யாது? கருணைபுரிந்து கட்டளையிடுவீர்" என்றனன். மலரவன் "மதன! கங்கையை முடித்த கண்ணுதற்கடவுள் மலையரையன் பயந்த மகேஸ்வரியை மணந்துகொள்ளுமாறு நின் மலர்க்கணைகளையேவி சிவமூர்த்தியினது மோனநிலையை யகற்றுதி; எம்பொருட்டாக இக்கருமத்தை நீ செய்தல் வேண்டும். தாமதியாது செல்லுதி" என்றனன்.

கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெய்பின்
மங்கையை மேவநின் வாளிகள் தூவி
அங்கவை மோன மகற்றினை யின்னே
எங்கள் பொருட்டினில் ஏகுதி யென்றன்

பிரமதேவன் இவ்வண்ணங்கூறிய கொடுமையானதும், விடத்திற்கு நிகரானதுமாகிய தீச்சொல் மன்மதனுடைய செவிவழிச்

சென்று அவனுடைய உள்ளத்தை யுடனே சுட்டுவிட்டது. சிவ பிரானது யோகநிலையை யகற்றவேண்டு மென்ற சொல்லே காம னுடைய உள்ளமுழுவதும் சுட்டுவிட்ட தென்னில் பிறைசூடிய பெரு மான் அவனுடைய உடம்பை எரிப்பது ஓர் அற்புதமோ? பிரமனது சொல்லைக்கேட்ட மதனன் தனது இருகரங்களாலும் விரைந்து செவி களைப் பொத்தி ஐந்தெழுத்தையும் மனத்தில் நினைந்து 'ஹாஹா! என்று கூறி "அளப்பரும் பாவத்தைத்தரும் இத்திய மொழியைக் கேட்கலாயிற்றே" என்று உளம்வருந்தி, அனலில் வாட்டிய தாமரை போல் வாடியமுகத்துடன் பிரமனை நோக்கிப் பின்வருமாறு பேச லாயினன்.

"அண்ணலே! தீயவர்களாயினும் தம்மிடம் வந்தடுக்கில் பெரி யோர்கள் உய்யும்வழியாகிய நன்மையைப் புகல்வர் அங்ஙனமிருக்க, அறிவின்மிக்க நின்னைவந்தடுத்த என்னிடம் எக்காரணத்தாலும் உய்ய முடியாத இத்திய வசனத்தை யுரைத்தனை. என்னிடம் உனக்கு அருள் ஒரு சிறிதும் இல்லை போலும்; என்னுடைய மலர்க்கணைக ளால் மயங்காதவர் உலகில் ஒருவருமில்லை. பூதேவியையும் பூந்தவி சில் வைகுஞ் சிதேவியையும், ஏனைய மாதர்களையும் புணர்ந்து போகத் தழுந்துமாறு என் பிதாவாகிய நாராயணமூர்த்தியை மலர்க்கணைக ளால் மயங்கச் செய்தேன். வெண்டாமரைமிசை வீற்றிருக்கும் பாமகளைப் புணருமாறும், திலோர்த்தமையைக் கண்டு உள்ளத்தால் புணருமாறும், உன்னை எனது கணைகளால்வெற்றி பெற்றேன். இத் துடனமையாது திருமகளை நாராயணர் மார்பில் வைக்கவும், கலை மகளைத் தாங்கள் நாவில் வைக்கவும் செய்தேன். அகலிகையைக் கண்டு காமுறச்செய்து இந்திரனுடைய உடல்முழுவதும் கண்களா கச்செய்தது எனது மலர்க்கணைகளின் வல்லபமன்றோ? தனது பாக னாகிய அருணன் பெண்ணுருவடைந்தபோது அவளைக் கண்டு மயங் கச்செய்து சூரியனைப் புணருமாறுசெய்தது என் கணைகளேயன்றோ? குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனை குருவின் பத்தினியாகிய தாரையைப் புணர்ந்து புதனென்னும் புதல்வனைப்பெருமாறு செய் தேன். வேதங்களின் நுட்பங்களையுணர்ந்த நல்லறிவுடைய தேவர் கள் யாவரையும் என் கணையால் மயக்கி மாதர்களுக்குக் குற்றேவல் புரியுமாறு செய்தேன். மறை முழுதுணர்ந்த அகத்தியர், அத்திரி, கௌதமன், அறிவிற் சிறந்த காசிபர், வசிட்டர், மரீசி முதலிய முனிச்சிரேட்டர்களது தவவலியை இமைப்பொழுதில் நீக்கி என்வசப்

பட்டுத் தவிக்கச்செய்தேனன்றோ ? நால்வகை வருணத்தாராகிய மனிதர்களையும் பெண்மயக்குற்றுப் பீடழியுமாறு செய்தேன். என் வசப்படாது என் கணைகளை வென்றவர் மூவுலகிலும் யாருளர் ? எத்திறப்பட்டவரையும் வெற்றிபெற்றேன். ஆயினும் சிவமூர்த்தியை வெல்லுமாறு நினைத்தற்கும் ஆற்றலுளதோ ? நாரணனாதி தேவர்களை மயக்கி வெற்றிபெறலாமேயன்றி நதிசூடிய நான்மறை நாயகனும் சிவபரம்பொருளை எனது கணையால் மயக்குவது முடிகின்ற கருமமோ? என்னே நின் கருத்து ? மாற்றம் மனங்கழிய நின்ற மகேஸ்வரனை மயக்கவேண்டுமென்று மனத்தால் நினைக்கினும் உய்வுபெறமுடியாது. அனலே வடிவாகிய அரனார்மேல் எனது மலர்க்கணைகளை விடுத்தாலும் அக்கணைகள் அவரிடம் செல்லுமோ ? சிவமூர்த்தியினது காத்திலும் அக்கினி ; நகையிலும் அக்கினி ; கண்ணிலும் அக்கினி; நடையிலும் அக்கினி; அனற்பிழம்பாகிய அமலனிடம் யான் சென்றால் உய்யும் வகையும் உளதோ ? வேண்டுதல் வேண்டாமையிலாத விமலனை யாரே மயக்கவல்லார் ? ஏனைய தேவர்களைப் போல் அவரையும் எண்ணினைபோலும்; சண்டமாருதத்தை எதிர்த்து ஒரு பூளைப்பூ வெற்றிபெறுமேயாமாகில் வெண்ணீரணிந்த விடையவனை நான் வெற்றி பெருதல் கூடும். சிவமூர்த்தியை எதிர்த்து அழிந்தவரேயன்றி உய்வு பெற்றவர் யாரேனுமுளரோ? திரிபுர சங்காரகாலத்தில் அரிமுதல் அமரர்கள் குற்றேவல்புரிய முக்கட்பெருமான் புன்கையாலேயே புரமூன்றை ஒரு கணப்பொழுதில் எரித்ததை மறந்தனைபோலும். மூவர் முதல்வ ! தேவ தேவ ! கண்ணுதற் பரம ! என்று துதித்து வழிபாடு செய்த மார்க்கண்டேயரைப் பற்றுமாறு அழல்போல் சினந்துவந்த கூற்றுவனை நம்பன் இடது திருவடியால் உதைத்த அருட்டிறத்தை யறிந்திலைபோலும். முன்னொரு நாள் தாங்களும் தண்டுழாயலங்கல் தாமோதரரும் “ பரம்பொருள் யான் ” என்று வாதிட்டபோது ஆங்கு வந்த சிவமூர்த்தியை நீ மதியாதிருக்க நினது ஐந்தலைகளில் ஒரு தலையை சிவனார் நகத்தாற் கிள்ளியெறிந்ததை யுணர்ந்திலைகொல்? சலந்தரனாதி தானவர்கள் சங்கரனாரைப் பகைத்து மாண்டதை யறியாதாருமுளரோ ? நின் மகனாகிய தக்கன் புரிந்த வேள்விசாலையிலிருந்தோர் யாவரும் விடையவன்பால் தோன்றிய வீரபத்திரரால் மிகவுந் துன்புற்று வருந்தியதைப் பார்த்திருந்தனையே ? அமிர்தமதனம் புரிந்தஞான்று நாமெல்லாம் நடுநடுங்கி பயந் தோடுமாறு தோன்றிய ஆலகால விடத்தையுண்டு நம்மைக்காத்தரு

ளியது அப்பெருமானது அருட்டிறமேயன்றோ? உலகை யழிக்க வந்த கங்காதேவியை சடைமிசையேற்று தன்னருள்புரிந்தது அச் சிவமூர்த்தியேயன்றோ? தாருகவனத்திருடிகள் அபிசார வேள்வி செய்து அனுப்பிய யானை, புலி, மான், முயலகன், பாம்பு முதலிய வைகளைச் சிவனார் உரியாகவும், போர்வையாகவும், ஆபரணமாகவும் அணிந்துளதை நீ பார்த்திலையோ? சர்வசங்காரகாலத்தில் கறை மிடற்றண்ணல் தனது நெற்றிக்கண்ணிலிருந்து விழும் ஒரு சிறு பொறியால் உலகங்களெல்லாம் நீறாகி யழிகின்ற பெருந்திறத்தை நீ யறிந்திருந்தும் மறந்தனையோ? இத்தகைய பேராற்றலையுடைய பிறைமுடிப்பெருமானை நாயினுங் கடைப்பட்ட அடியேன் எனது கரும்புவில்லைக்கொண்டு மலர்க்கணையேவி ஒருபோதும் போர்புரிய இசையேன். பிழைக்கவேண்டுமென்று நினைப்பவர் யார்தான் இச் செயலைச் செய்வார்? உலகங்களையெல்லாம் படைத்து காத்து அழித்து மறைத்து அருளும் தனிப்பெருந்தலைவனை நானோ மயல் செய்ய வலியுடையேன்? நன்று; நன்று; நினைத்தற்கும் தகுதியில் லேன்'' என்று பற்பல வசனங்களை யுரைத்தான்.

இவ்வாறு மன்மதன் மறுத்துக் கூறியதை மலர்மிசை வைகும் நான்முகன் கேட்டு உளம்வருந்தி சிறிதுநேரம் ஆராய்ந்து பேருயிர்ப் புடன் உரைக்கலாயினன். ''மதனே! ஒருவராலும் வெல்லுதற்கரிய சிவபெருமானது அருட்பெருங்குணங்களை வெள்ளறிவுடைய விண்ணவரிடம் விளம்புவதுபோல் என்னிடம் விளம்பினை. நீ யுரைத்தவெல் லாம் உண்மையே; தனக்குவமையில்லாத கயிலைநாயகனை வெல்வது எளிதன்று; எவர்க்கும் அரியதே. ஆயினும், தன்னையடைந்தோர் தாபத்தைத் தவிர்க்கும் தயாபரனும் சிவமூர்த்தியினது நல்லருளால் இக்கருமம் முடிவடையும். அவனருள் பெறாதாரால் முடித்தற்கரிய தாம். நினைந்து பார்க்கில் இக்கருமத்தை முடித்தற்கு நீ தான் சிறந்த காரணனும். அவனருளின்றி யணுவு மசையாது. எல்லாருடைய செயலும் அவன் செயலே. நீ யிப்போது கண்ணுதலை மயக்கச் செல்லுவதும் அவருடைய செயலேயாகும். தேவர்களெல்லாம் குழுமியிருந்தபோது சிவபெருமான் யட்சனைப்போல்வந்து ஒரு துரும்பை நிறுத்தி அதனை வாயுவினாலும் அக்கினியினாலும் ஏனைய தேவர்களாலும் அசைக்கவும் எரிக்கவும் பிறசெய்யவும் முடியாது திகைத்திருக்குமாறு செய்த பெருந்திறத்தையறிந்திருந்தும் நம்மால் ஒரு கருமம் முடியுமென்பது நாணத்திற்கிடமன்றோ? நாம் பேசுவதும்

நடப்பதும் பார்ப்பதும் செய்வதும் அவன் திருவருட்செயலே. ஆதலால் நீ கரும்புவில்லை வளைத்து பூங்கணைகளை ஏவுமாறு செல்லுதி; இதுவும் அவனருளே; ஐயமில்லை. இது சாதம்.

இஃதன்றி ஆற்றவொணுத் துன்பங்கொண்டு யாராவது ஒருவரையடுத்து "உதவிசெய்" என்று இரந்தால் அவருடைய துன்பத்தைக் கண்டு இரங்கி அவருடைய துன்பத்தை களையாது தன்னுயிரைப் பெரிதென்றெண்ணி உயிருடனிருத்தல் தருமமோ? அது அறத்தின் வழி நின்ருர்க்கு ஏற்றதாகுமோ? ஒருவனுக்கு ஒரு துன்பம் நேர்ந்தால் அத்துன்பத்தைத் தன்னுல் நீக்க முடியுமேல் அவன் சொல்லாமுன்னம் தானே வலிந்து துன்பத்தை நீக்குதல் உத்தமம்; அவன் வந்து இத்துன்பத்தை நீக்குதல் வேண்டுமென்று சொன்னபின் நீக்குதல் மத்திமம்; பலநாள் வேண்டிக் கொள்ள மறுத்தும் பின்னர் நீக்குதல் அதமம். யாராவது இடருற்றனரேல் அவரது இடரை யகற்றுதற்பொருட்டு தன்னுயிரை விடுதலுந் தருமமே. தன்னுயிர்க்குப் பயந்து அத்துன்பத்தை நீக்க மறுப்பரேல் பாவமட்டுமல்ல, அகலாத பழியும் வந்துசேரும்.

ஏவ ரேனினும் இடருற்றன ராகில்
ஓவில் துறைபோ னுளரேல் அதுமுடித்தற்
காவி விடினும் அறனே மறுத்துளரேல்
பாவ மலது பழியும் ஒழியாதே

பிறர்க்குதவி செய்யாது கழித்தோன் வாழ்நாள் வீணாகும். தண்டுழாய் முடியோனுடன் வாதியற்றிய ததீசிமுனிவரை தேவர் கோமான் குறையிரப்ப, விருத்தாசுரனை வதைக்கும் பொருட்டுத் தனது முதுகெலும்பைத்தந்து ததீசிமுனிவர் உயிரிழந்த செய்தியை நீ கேட்டதில்லையோ? பாற்கடலில் எழுந்த வடவாமுகாக்கினியனைய விடத்தினைக்கண்டு நாம் பயந்தபோது திருமால் நம்மைக்காத்தற் பொருட்டு அஞ்சேல் என்று கூறி அவ்விடத்தின் எதிரில் ஒரு கணப்பொழுது நின்று தமது வெண்ணிறம் பொருந்திய திருமேனி கருமை நிறத்தை யடைந்ததை நீ பார்த்ததில்லையோ? பிறர்பொருட்டுத் தம்முயிரை மிகச் சிறிய பொருளாக எண்ணுவோர் உலகில் புகழ் பெற்று வாழ்வார்கள். யாம் சூரபன்மனுல் மிகவும் வருந்தினேம். அவ்வருத்தம் தீரும்படி கண்ணுதற்பெருமான் ஒரு புதல்வனை தோற்றுவித்தற்பொருட்டு நீ பஞ்சபாணங்களுடன் செல்லவேண்டும். எமது வேண்டுகோளை நீ மறுத்தல் தகுதியன்று" என்று பலவாராக பிரமன் கூறினன்.

(தொடரும்.)

ஓம் குஹாய நம :

கதிர்காமம்

"கதலி சூதத் தீனிற் பயிலு மீழத்தினிற்
கதிர காமக் கிரிப் பெருமாளே"

கதிர்காமக்ஷேத்திரத்தைப் பற்றியும் அதன் வாலாறு வழி முத லியவற்றையும் அறிந்துகொள்ளவேண்டுமென்று பல அன்பர்கள் விரும்பிப் பன்முறையுங் கேட்டுக்கொண்டதனால் இதனை ஒருவாறு விளக்கலானேன்.

முன்னொருகாலத்தில் வாயுதேவனாற் பறித்தெறிந்த மேருகிரியின் சிகரங்கள்மூன்றனுள் ஒன்று இலங்கை மண்டலம். அதற்கு தக்கிண கயிலை, பொன்னகாம், ஈழம் (சிலோன்) முதலிய பல நாமங்களுள. இம்மண்டலத்தை சூரபன்மன், இராவணன், குபேரன், மது, உக்கிர வழுதி, வீடணன், தொண்டமானிளந்திரையன், நல்லியக்கோடன், குளக்கோடன், உக்கிரசோழன், வாலசிங்கன், சிங்கையாரியன், அரசகேசரி பராாசசேகான், செகாாசசேகான், முதலிய பற்பல மன்னர் அரசாண்டனர். ஆகமம் ஸ்மிருதியாதி வடமொழி நூல் களும், தேவாரம் திருப்புகழாதி தென்மொழி நூல்களும் இதனைப் புகழ்கின்றன. இவ்விலங்கை விராட்புருடனுக்கு இடைநாடியா யிலங்குவது. திரிகூடம், கேதீஸ்வரம், கந்தமாதனம், ஏமகூடம், நீலம், சுவேலம், சிவனொளிபாதம், செங்கடம், வள்ளி, காளபைரவம், நகுலம், மேந்தலை, மகானுவரம், சிவர்த்தனம், உகந்தை, கதிரை முத லிய மலைகளாலும், மாவலிகங்கை, கருடகங்கை, காவிரிகங்கை, மாணிக்க கங்கை, பாலாவி, பாபநாசம், நவகங்கை, மாயவனாறு, கழு நீர்க் கங்கை, வேலாயுத புட்காணி, கன்யாகங்கை, நகுலம், சமுத்திர தீர்த்தம், பாதலகங்கை, கல்லாறு, நவகிரி, திருவடுநிலை, யமுனரி, நிலா விரி, வாமனம் முதலிய தீர்த்தங்களாலும், கண்டி கொழும்பு முதலிய நகாங்களாலும் அலங்கரிக்கப்பட்டு காண்பார் கண் கவருங்கவினை யுடையதாய் விளங்குவது இத்தீவு. சூாபன்மனுடைய வீரமகேந்திர புரியைச் சூழ்ந்திருந்த எட்டுத்தீவுகளில் இது வடபுறத்தில் இருந்தது.

இத்தகைய இலங்காத்வீபத்தின் தென்கோடியில் மகாபுனிதந் தங்கிய இடத்தில் விளங்குகின்றது கதிர்காம க்ஷேத்திரம்.

சூரபன்மன் தேவர்களையும் தேவமாதர்களையுஞ் இந்திர குமாரனாகிய சயந்தனையுஞ் சிறையிட, அதனை மீட்டருள்புரியுமாறு குமாரக்கடவுள் இலக்கத்தொன்பான் வீரர்களுடனும் பூதவெள்ளங்களுடனும் கயிலையினின்றும் புறப்பட்டு, தாரகனைக்கொன்று செந்திலம்பதி சென்று அங்கிருந்து கடலைக்கடந்து இலங்கைமண்டலத்தையடைந்து அதன் தென்கோடியில் சென்றவுடனே, நான்முகனும் நாரணனும் பணிந்த, "எம்மையாட்கொள்ளும் பொருட்டு எழுந்தருளிய எந்தையே! சூரபன்மன் வாழும் மகேந்திரபுரி நீசர்களுக்கிருப்பிடமாதலால் ஆங்கு தேவரீர் செல்லுவது தகுதியன்று" என்றுகூற, கதிர்வேலண்ணல் தேவகம்மியனாகிய விசுவகருமனைத் திருநோக்கஞ் செய்தருளி, "இங்கு ஓர் நகரமைத்தி" என்னலும், உடனே அவன் வானளாவிய கோபுரங்களும், மணிமண்டபங்களும், நெடுந் தெருக்களும், மத்தியில் எம்பெருமானிருத்தற்கு அழகிய திருக்கோயிலுமாக ஏமகூடம் என்னும் ஓர் நகரை உண்டாக்கினான். (தங்கத்தால் செய்ததால் அதற்கு ஏமகூடம் எனப்பெயருண்டாயிற்று) முருகவேள் அந்த ஏம கூடத்தில் தங்கி இருந்து சூராதிகளை யழித்து இந்திராதி தேவர்களைக் காத்தருள் புரிந்தனர். இந்த ஏமகூடந்தான் கதிர்காமமாகும். இத்தலத்தே முருகப்பெருமான் ஆறுதிருமுகங்களும், பதினெட்டுத் திருக்கண்களும், மணமருத கடப்பமலர் மாலையணிந்த திருமார்பும், வலத்திருக்கரங்களிலே கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபையம் என்பவும், இடத்திருக்கரங்களிலே தாமரை, கண்டாமணி, மழு, தண்டு, வில், வரதம் என்பவும் அமைந்த பன்னிரு திருப்புயங்களும்கொண்டு, கோடி சூரியப் பிரகாசமான திருமேனியுங் கொண்டு வீரமூர்த்தியாய் இலக்கத்தொன்பான் வீரர்களும், ஈராயிரம் பூதவெள்ளங்களும், அரியயனாதி அமரர் குழாங்களும் சூழ வீற்றிருந்தருளினர். பகவான் இத்தலத்தில் போர்க்கோலத்துடன் எழுந்தருளியிருத்தலால் அத்திருக்கோலத்தை மானுடராகிய சிறியேம் தரிசிக்கவியலாதென்று மூலத்தான மடைக்கப்பட்டு மூர்த்தியும் அவ்வியக்கமாயினர்.

கதிர்காமம் என்பதன் பொருள்: கதிர்-ஒளி, காமம் - இன்பம் எனவே ஆன்மாக்களுக்குச் சிவஞானவொளியினாற் பேரின்பத்தையளிப்பது என்பதாம் பரஞ்சுடராகிய சுப்பிரமண்யமூர்த்தி இன்பத்

துடன் உறைவது எனவுமாம். கதிர் - சூரிய சந்திரர்களால், காயம் - விரும்பிப் பூசிக்கப்பட்டதெனவும் பொருள்படும். இத்தலத்திற்கு தக்கிண கந்தபுரி, ஏமகூடம், அம்சுகாமம், கதிரை, பூலோககந்தபுரி, கோட்டம், வன்னிமங்கலம், காரிகாப்பு, வாபுரி, பஞ்சமூர்த்திவாசம், சகல தேவோபாசியம், கதிக்கேணி, சகல சித்திகாம், அகத்தியபிரியம், சிதாகாசம், குகைத்தலம், தகாலயம், பிரமசித்து, மகத்து, விவிக்தம், ககனம், பரிசுத்தம், அற்புதம், பாசறை, அம்பலம், பரவியோமம், இரண்மயகோசம், அந்தராகாசம், அவ்யக்தமூர்த்திபுரி, கதிர்காமம் எனப் பற்பல திருநாமங்களுள. இந்த க்ஷேத்திரத்தில் குமாரக்கடவுள் கணப்பொழுதும் நீங்காதிருந்து, இச்சாசக்தியாகிய வள்ளியம்மையாருடனும், கிரியாசக்தியாகிய தெய்வகுஞ்சரியம்மையாருடனும், அமர்ந்து பற்பல திருவிளையாடல்களைப் புரிந்தருள்வார். தேவர் முதலிய கணர்கள்தான் ஆண்டவனை உள்ளே ஆராதிக்கிறார்கள்.

அநுமார் கணையாழியைப்பெற்று இராமமூர்த்தியின்பால் விடைபெற்று சீதையைத் தேடிக்கொண்டு இலங்கைக்குச் சென்றபோது இக்கதிர் காமமூர்த்தியாகிய கந்தவேளைவழிபட்டு முருகனருள் பெற்றுச்சென்றனர். இதனை அருணகிரிநாதர்

அருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே

—(உடுக்க) திருப்புகழ்.

இத்தலத்தின் பெருமை அளவிடற்கரியது. அருணகிரி சுவாமிகளால் பாடப்பெற்ற 13 திருப்புகழ் பாடல்களுள.

படைவீட்டுத்தலங்களாகிய திருப்பரங்குன்றமுதலிய ஆறுதாரதலங்களினும் மேலாய துவாதசாந்தத்தலமாய் விளங்குவது இக்கதிர்காமக்ஷேத்திரம். அன்றியும் சில தலங்களிலே கோயில் என்னும் சிதம்பரம் ஆகாயலிங்கமுடைத்தா மிரகசியத்தலமானதுபோல், இக்கதிர்காமமும் அங்ஙனமே சோதிவடிவினரா யெவரானும் விரும்பத்தகுந்த பரவியோமமூர்த்தி, எவர்களானுங் காண்டற்கரியராய் விளங்கலின் இரகசியத்தலமாய்விளங்கும். இங்ஙனுள்ள தீர்த்தங்களோ மாணிக்க கங்கை முதலாக அளவற்றன. மலைகளோ : கதிரைமலை, வள்ளிமலை,

தெய்வயானைமலை, காளபைரவமலை, முதலாக எண்ணிலாதன. சிவ கணேச உமாவீரபைரவ மகாசாத்த நவலக்க வீர புட்கலேச ராம காளிய சுராரி துர்க்கை முதலிய பலமூர்த்திகள் முருகவேளை உபாசித்து நாற்புறங்களிலும் வசித்துளார்கள்.

கதிர்காம யாத்திரை.

இத்தகைய அற்புத க்ஷேத்திரத்திற்குச் செல்லவேண்டுமென்று நெடுநாளாக அடியேனும் எமது திருப்புகழ்சபையோரும் அன்புகூர்ந்திருந்தோம். ஸ்ரீமுகவருஷ ஆடிமீ 11-உ (26-7-'33) புதன்கிழமை திருப்புகழ் கோஷ்டியுடன் புறப்பட்டு தனுஷ்கோடியைச் சார்ந்துள்ள மண்டபம் போய் ஆங்கிருந்து தனுஷ்கோடியில் (28-7-'33) மாலை 4-30 மணிக்குக் கப்பலேறினோம். இரவு 8-மணிக்கு இலங்கையின் கரையாகிய தலைமனார் சென்றோம். தனுஷ்கோடிக்கும் தலைமன்னார்க்கும் ஏறக்குறைய 24 மைல் என்பர். பின்னர் தலைமன்னாரில் உடனே ரயிலேறி மறுநாள் காலை $7\frac{1}{2}$-மணிக்கு கொழும்பு சேர்ந்தோம். 30-7-'33-ல் கொழும்பிலிருந்து புறப்பட்டு காலை 8-மணிக்கு ரயிலேறி காலி மார்க்கமாகப்போய் பகல் $1\frac{1}{2}$-மணிக்கு மாத்திரைக்கு போனோம், அங்கே இரண்டு கூட்டத்தார்கள் இருபுறத்திலே நின்று ரயிலடியிலேயிருந்து "எங்களிடம் வந்து சாப்பிடுங்கள்"; "எங்களிடம் வாருங்கள்" என்று உபசரிக்கும் காக்ஷி மிகவும் நன்றாக இருக்கும். அவர்கள் கொடிகளுடன் பரிவோடழைத்து உணவு தருகிறார்கள். உணவு உண்டவுடன் காபி முதலிய பானங்களைத்தருகிறார்கள். மாத்திரை வரையிலுந்தான் ரயில். அங்கிருந்து 75 மைல் பஸ்மூலமாக திசைமாறு என்ற ஊருக்கு மாலை 6-மணிக்குச் சேர்ந்தோம். அங்கிருந்து கதிர்காமம் சற்றேறக்குறைய 13 மைல். திசைமாறுவிலிருந்து இரவு 7-மணிக்குப் புறப்பட்டு கால்நடையாக இரவு 2-மணிக்குக் கதிர்காமம் சேர்ந்தோம். திசைமாறுவிலிருந்து கதிர்காமம் போகிறவரை பெருங்காடு; பள்ளமும் மேடுமான வழிதான். சாமான்களை ஏற்றிக்கொண்டு சிலவண்டிகள் போகின்றன. ஆனால் எதிரில் வண்டிவந்துவிட்டால் வண்டி ஒதுங்க இடமின்றி சிரமப்படுகின்றனர். சிங்களவர்தான் வண்டி ஓட்டுகின்றனர் அவர்கள் வண்டியை கர்த்தை என்கின்றனர். அடர்ந்த காடு; இருபுறத்திலும் காண்பதற்கு பயங்கரமாயிருக்கிறது.

ஜனங்கள் திசைமாறுவிலிருந்து கதிர்காமம் போகிறபோதும் திரும்பி வருகிறபோதும், கதிர்காமத்தில் வசிக்கும்போதும் வாய் ஓயாமல் ஹரோ ஹரா ஹரோ ஹரா என்று கூவி ஓலமிடுகின்றனர். பெரும்பாலும் இரவிலேயே செல்லுகின்றனர்; மிருகாதிகள் நிறைந்த காடு; வானளாவி வளர்ந்த தருக்களால் அக்காடு வளம்பெற்றுளது; ஆடிமாசம் அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரைக்கும் கதிர்காமத்தில் உத்சவம்; அந்தக்காலத்தில்தான் செல்லமுடியும்; ஏனையகாலங்களில் செல்லமுடியாது என்கின்றனர்; ஆடி பௌர்ணமியன்று தீர்த்தவாரி; அதற்குமேல் ஒருநாள்கூட அங்கு தங்கக்கூடாதென்கின்றனர். அந்தப் பதினைந்துநாளும் ஜனங்கள் இலட்சக்கணக்கான அன்பர்கள் ஹரோ ஹரா என்ற முழக்கத்துடன் போவதும் வருவதுமாக இருக்கிறார்கள். அந்த காக்ஷி காண்பதற்கு இனிமையாயிருக்கும்.

கதிர்காமமானது அந்த பெருங்காட்டின் நடுவில் மாணிக்க நதியின்கரையிலுள்ளது. அந்த நதி தெள்ளிய நீரால் காண்பார் கண்களைக்கவருங் கவினுடையதாய் எக்காலத்தும் நீரோடுவதாய் ஊசி வீழ்ந்தாலும் தெரியக்கூடிய அத்துணைப் பரிசுத்தமுடையதாய் விளங்குகிறது இதனை அருணகிரியாரும்

"மணிதரளம்வீசி யணியருவி சூழ
மருவுகதிர்காமப் பெருமாள் காண்"

—(திருமக; திருப்புகழ்.

அத்தலத்தில் ஓலை வீடுகளும், இரண்டு மூன்று சத்திரங்களும் உள; இரண்டே தெருக்கள்தான். கதிர்காமக்கோயில் ஒரு மதிளுக்கு மத்தியில் இலகுகின்றது; ஓட்டுக்கோயில்தான். அது மூன்று பிரிவாகவுளது. ஒரு பிரிவில்தான் தரிசனைக்குப் போகும் அன்பர்கள் நிற்கிறார்கள். அதற்கடுத்த பிரிவில் வரிசையாக முருகக்கடவுள் திருவுருவம் பொறித்த திரைகளைத் தொங்கவிட்டுள. மூன்றாவது நிலை பூட்டப்பட்டுளதாம். அந்த நிலையில்தான் சுவாமி வீற்றிருக்கிறார். அதில் ஒருவரும் சென்றதேயில்லை. அங்கு ஆராதனை செய்கின்றவர்கள் சிங்களவர்கள். அவர்கள் அங்கியணிந்து தலைப்பாகையுடன் தாம்பூலமடக்கிய வாயுடன் இருக்கின்றனர். அவர்களிடம் தேங்காய்ப்பழங்களைத்தந்தால் அந்தத் திரைகளில் ஒரு திரையைத்தாண்டி ஆராதனைசெய்து விபூதி முதலிய பிரசாதங்களைத் தருகின்றனர்.

அந்த அர்ச்சகர்களுக்குக் கப்பரையாள் என்று அங்கு பேர். அவர்கள் பார்வைக்கு ஆசாரமில்லாதவர்களாகத் தோன்றுகிறார்கள். ஆயினும் தெய்வபக்தி நிறைந்தவர்களாம். கதிர்காம எல்லையை மிதித்தவுடன் எல்லோரும் ஆனந்தபரவசராகி அன்புமயமாகத் திகழ்கின்றனர். ஆலயத்தில் நுழைந்தவுடன் கண்ணீர்சொரிந்து அஞ்சலியஸ்தராகநின்று ஆண்டவனையழைத்து பக்திசெய்கின்ற காக்ஷி கல்மனத்தையுமுருக்கிவிடும். அக்காக்ஷியை நினைக்கும்போதே மயிர்சிலிர்க்கும்.

காலைமுதற்கொண்டு மாலைவரை தரிசனார்த்த பக்தகோடிகள் உடம்பில் வேல்களை நிரம்பக்குத்திக்கொண்டு மாணிக்க நதியில் நீராடி பலவகையான காவடிகளை எடுத்துக்கொண்டு சென்றவண்ணமாகவே இருக்கிறார்கள். கதிர்காமத்திலிருந்து அக்கினி திக்கில் 3 மைலில் விபூதிசுரங்கமென்று ஒன்றுளது. அங்கு பூமியைப்பறித்தால் வெள்ளை விபூதிபோன்ற மண் கிடைக்கிறது. அந்த விபூதியைக் கொண்டு வந்து புதுச்சட்டியிலிட்டு தலைமீதுவைத்து அதில் நிறையக் கற்பூரத்தைக்கொட்டி ஏற்றி மாலை 5 மணியிலிருந்து மாணிக்க நதியில் நீராடி கூட்டங்கூட்டமாக கற்பூரதீபங்களை எடுத்துக்கொண்டு கோயிலுக்குப் போகிறார்கள். அப்படி போகும் கற்பூரதீபங்கள் ஆயிரக்கணக்காகப் பிரகாசிக்கின்றன. எங்கு பார்த்தாலும் கற்பூரதீபமாகவே இலங்குகின்றன. லக்ஷதீபம்போல் அந்தக்காக்ஷி மிகவும் அழகாக இருக்கிறது. அந்த மாலை நேரத்தில் கதிர்காமம் கந்தலோகம்போல் பார்ப்போர்களது மனத்தை அப்படியே பரவசப்படுத்துகிறது. அக்காக்ஷியை நினைக்குந்தோறும் இன்றும் கண்முன்நின்று நிலவுகிறது மறக்கமுடியாததும் பார்க்கத்தகுந்ததுமாகிய அக்காக்ஷியைக்காணாத கண் கண்ணல்ல. கருங் கல்மனதாயிருந்தாலும் அதைக் கண்டவுடனே நீராயுருகி நெகிழும்.

இரவு 10-மணிக்குமேல் ஏதோ ஒரு பெட்டி அந்தத் திரைக்குள்ளிருந்து எடுத்து அதையும் அதை எடுப்பவரையும் ஆடையால் மூடி யானைமேல்வைத்து பவனிகொண்டுவருகிறார்கள்; இதுதான் உத்சவம்; மேளதாளங்களுடன் வருகிறது. அதன்பிறகு யாம் திருப்புகழ் கோஷ்டி நிகழ்த்தினோம்; திருப்புகழைப்பாடி அதன் தத்துவங்களை எடுத்து வியாக்கியானம் புரிகின்றகாலை அந்த ஜனங்கள் மிகவும் ஊக்கத்துடனும் பக்தியுடனும் கேட்டுக்கொண்டுவந்தார்கள். பிரசங்கத்

தில் மிகுந்த இனிமையானபாகம் வரும்போதெல்லாம் அந்த ஜனங்கள் ஹரோ ஹரா ஹரோ ஹரா என்று முழக்கஞ்செய்து காட்டிய போன்பை எக்காலத்தும் மறக்கமுடியாது. கோஷ்டி விடியற்காலம் 4-மணிக்கு முடிவடைகின்றகாலத்தில் எல்லா ஜனங்களும் ஓவென்று கதறியழுது 10 நாளும் நீங்கள் இருந்து இந்தமாதிரி திருப்புகழ் கோஷ்டியும் அதன் தத்துவார்த்த வியாக்யானமும் செய்யவேண்டுமென வேண்டி மன்றாடினார்கள்.

மறுநாள் காலை கதிர்காமத்திலிருந்து காட்டுமார்க்கமாக 3 மைல் சென்று அங்கு கதிர்மலை என்ற மலையின்மீது மிகுந்த சிரமப்பட்டு ஏறினோம்; மிகவும் பெரியமலை; ஏழு பிரிவாக இருக்கிறது அம்மலை; ஏறும் வழியில் ஆங்காங்கு காபி முதலிய இனிய பானங்களை உபசாரத்தோடு தருமம் புரிகின்றனர். உச்சியில் ஒரு வேல் இருக்கிறது. அங்குபோனவுடன் எல்லோரும் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி "ஹரோ ஹரா" என்று கதறுகின்றனர். ஒரு சிலர் "அப்பு" "அப்பு" என்று கண்துளி சிந்தக் கதறுகின்றனர். அக்காக்ஷியைக் கண்டு திரும்பி கதிர்காமம் சேர்ந்தோம். அன்று இரவு முன்னாள் நிகழ்த்தியவாறு திருப்புகழ்கோஷ்டி நிகழ்த்தினோம்.

கோயிலுக்குப் பின்புறத்தில் வானளாவிய ஓர் அரசமரமுளது; ஒரு சிறு விநாயகச்சந்நிதியும், புத்தர்கோயிலும், தேவயானையம்மையார் சந்நிதியுமுள. ஊருக்குக் கிழக்கே வள்ளியம்மையார் சந்நிதியுளது. அந்த ஊரில் உத்சவமல்லாத காலங்களில் யானைகள் மந்தை மந்தையாகவந்து உலவுகிறதாம். உத்சவகாலத்தில் மட்டும் ஆண்டவனருளால் மிருகாதிகளால் இடைஞ்சல் இல்லை.

அடுத்தநாள் கதிர்காமத்திற்கு வடக்கே 3 மைலிலுள்ள செல்வக் கதிர்காமஞ் சென்றிருந்தோம்; அங்கு மாணிக்க விநாயகர் சந்நிதியொன்றுளது; அங்கே மாணிக்க நதி மிகவும் மனோகரமாயுளது. ரிஷிகேஸ்வரத்தின் ஞாபகத்தையுண்டுபண்ணுகிறது. மறுநாள் திரும்பி முன் சொன்ன மார்க்கமாக தனுஷ்கோடி சேர்ந்தோம்.

இத்தகைய புண்ணியக்ஷேத்திரமாகிய கதிர்காமத்தை அன்புடன் சேவிப்பார்க்கு இகபரநலன்கள் எளிதிலுண்டாகும். பண்டைத் தவமிருந்தாலொழிய இக்கதிர்காமதெரிசனம் கிடைக்காது. ஏமகூடமென்னும் கதிர்காமத்தில் வாழுங் கதிர்வேலண்ணல் அன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலன்களையுமீந்து இன்னருள் புரிவாராக.

மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய
வந்திடும் பூதலத் தோர்
வாயுமர் பாடவுங் குருடர்கண் பார்த்திடவு
மலடிகள்பின் மைந்தர் பெறவும்
காணிற்த மாரவே லாவென்று மன்பரைக்
காடி புலி யானை சிங்கங்
காலிற் பணிந்தஞ்சி யோடவுங் கந்தனே
கண்கண்ட தெய்வ மெனவே
ஆணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினுள்
அடியானை யாண்டு கொண்டேன்
ஆகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கும்
ஆறுமுக மெய்த் தெய்வமே
சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிகணவ
செங்கீரை யாடி யருளே
தேவரோடு மனிதர்மணி கதிர்காம வேலனே
செங்கீரை யாடி யருளே.

வினு விடை மணிகள்.

ஆதி சங்கரர்.

க: பத்யத ரோதர்ம: க: ஸுசிரிஹ யஸ்ய மாநஸம் ஸுத்தம்.
க: பண்டிதோ விவேகிகிம் விஷமவதீர்ணு குருஷு ||

கே,—எது பத்தியம்? (ஹிதமானது).

ப:—தர்மம்.

கே:—எவன் சுத்தன்?

ப.—எவன் மனது சுத்தமாக இருக்கிறதோ அவன்.

கே:—எவன் பண்டிதன்?

ப:—விவேகி. (விவேகத்தை யுடையவன்).

கே:—எது விஷம்?

ப:—பெரியார்வார்த்தையை அலட்சியம் செய்வது.

ஓம் குஹாய நம:

குரு சிஷ்ய லக்ஷணம்

(62-ம் பக்கத் தொடர்ச்சி)

சச்சிதானந்தன்.

குருவின் அவசியம்.

குருநாதனில்லாமல் ஒருவரும் இருக்கப்படாது; ஏனெனில் எவ்விதம் சுறுசுறுப்பில்லாத புத்தியும், பக்தியில்லாத பூஜையும், அரசனில்லாத நகரமும், தானங்கள் செய்யாத கரங்களும், விசுவாசமில்லாத சிநேகமும், பூததயையில்லாத தவமும், பரோபகாரமில்லாத பிரயாசையும், விபூதியில்லாத நெற்றியும், பிரயோஜனமற்றதே: அதுபோல் குருபதேசமில்லாத ஜன்மமும் வீணேயாகும். எப்படி பெண்ணானவள் நாயகனில்லாமலிருந்தால் நிந்திக்கப்படுவாளோ அதுபோல் நாமும் குருநாதனில்லாமலிருந்தால் நிந்திக்கப்பட்டு நற்கதி சேரமாட்டோம்.

ஜகத்குருவாகிய சங்காராசார்ய சுவாமிகளும் யாவருக்கும் எப்படி விதிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே நடக்க வேண்டுமென்று சற்குருநாதனைத் தேடினரென்று அவர் சரிதையில் நாம் கண்ணுறுகிறோம். ஆகவே சகலராகிய நாம் குருநாதனில்லாமல் இருக்கப்படாதென்பதற்கு ஆதிசங்காருடைய சரித்திரமே போதியசான்று. சிற்சிலர் கூறுகிறார்கள் குருவும் நம்மைப்போல் மனிதர்தானே? அவரும் மாதா உதரத்திலிருந்தவர்தானே? அவரிடத்தில் எதற்காக நாம் உபதேசம் பெறவேண்டும்? அவர் சொல்வதெல்லாம் சாஸ்திரத்தில் இருக்கிறது? நாமே நல்ல நல்ல கிரந்தங்களை வாசித்துக்கொண்டு அந்தப்படி அப்யாசம்செய்தால் நமக்கு தானே ஞானமுண்டாகிவிடும்; ஆகையால் குரு எதற்கு? குரு அநாவசியமென்றும், நம்மைக் காட்டிலும் குருவுக்கென்ன அதிகமாய்த்தெரியும்? எல்லாம் நமக்கு தெரிந்தவைகளையே அவரும் சொல்லுகிறார் என்னும் விபரீத பாவனையாக எண்ணுகிறார்கள்; அவர்களுடைய அறிவீனத்தனம் என்னே! அவர்கள் நினைப்பானது எதுபோலுள்ளதென்றால், ஒரு பெண்ணானவள் தன் நாயகனைக் கொன்று சந்ததி விளக்குவதற்காக மகவை வேண்டி தவமிருப்பது போலொக்கும்; இதை பதிபசுபாச விளக்கத்தில்

முந்து நூலுழைப்பு மின்றி முத்தர் பாலிணக்க மின்றி
சுந்தரக் குரவன் பாதத் தொழும்புகள் சிறிது மின்றி
யந்தமில் ஞானம் வேண்டு மவாவேலாங் கொழநற் கொன்று
சந்ததி வேண்டி நோற்குந் தன்மையோ டொக்கு மன்றே

என்றனர்.

ஆயுள்முழுதும் சகல சாஸ்திரங்களையும் சங்கையின்றிப் படித்தாலும் சுகத்தையடையமாட்டான்; படிப்பினுல் புத்தி நுட்பமட்டும் விளையுமே யன்றி ஞானத்தையடையான்; குருபதேசத்தினுல்தான் ஞானத்தை யடையமுடியும். நான்கு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும், சப்தகோடி மஹா மந்திரங்களையும், யந்திரங்களையும் தெரிந்ததனுலேயே பிரஹ்மஞானமென்னும் சுகமுண்டாகமாட்டாது; சற்குரு கடாக்ஷத்தினுலேயே பிரம்மானந்தமான மோக்ஷ சாதனமுண்டாகுமென்று ஹரிஹராதி தேவதைகளும் கூறியுள்ளார்கள். மஹா நாராயணேபநிஷத்தில் ஐந்தாவது அத்யாயத்தில்

யதா ஜாத்யந்தஸ்ய ஸ்வரூபக்ஞானம் நவித்யதே
ததா குருபதேசே நவினு !! கல்பகோடிசதைரபி
தத்வஜ்ஞான நஜாயதே

பிறவிக்குருடனுக்கு வஸ்துக்களுடைய சுவரூபஜ்ஞானம் எப்படி விளங்காதோ அப்படி குருபதேசமின்றி நூறுகோடி கல்பங்களானுலும் தத்வஜ்ஞான முண்டாகமாட்டாது. ஆனுல் ஒரு தெய்வயோகத்தால் ஞானத்தையடைந்தாலும் அந்த ஞானமானது எதுபோலொக்குமெனில்

குருவிலான் பெற்ற ஞானம் குமரியைக் குமரிகூடி
மருவிய இன்பமொக்கு . . . .
குருவினுற் பெற்ற ஞானங் குமரியைக் குமரன்கூடி
மருவிய இன்பமொக்கு மென்பர்நன் மதியுளோரே.

—பதிபசுபாசவிளக்கம்.

நாரதரும்.

புத்தகத்திலிருக்கிற வித்தையும் குருநாதனிடத்தில் அப்யாசம் செய்யப்படாத வித்தையும் சபையில் ப்ரயோஜனப்படாது; எப்படியெனில் கள்ளப்புருஷனிடத்திலிருந்து அடையப்பட்ட கர்ப்பமானது ஸ்திரீகளுக்குப் பயன்படமாட்டாது போலென்க" என்று கூறியிருக்கிறுர்.

மேலும் குருநாதரானவர் தேற்றங்கொட்டையைப்போலவும், ஒரு வண்டை (குளவி) போலவும் ஞாயிறுபோலவும், *பரிசன வேதியைப்போலவும் இருக்கிறார், தேற்றங்கொட்டையானது தண்ணீரிலுள்ள அழுக்குகளை நீக்கி தெளிவிப்பதுபோல சீடனுடைய மன அழுக்கைப் போக்கடித்து தெளிவிக்கிறார். குளவியானது ஒரு புழுவைக்கொண்டுவந்து ஒரு மண் கூட்டிலடைத்து ஊதிக் குளவியாய் செய்வதுபோல் ஞானமில்லாதவனுக்கு நல்ல மந்திரோபதேசங்களைச் செய்து ஞானத்தை உண்டுபண்ணுவித்து தன்னைப்போல் சீடனையும் செய்துவிடுகிறார்.

சூரியனானவன் மூடுபனியைப் போக்கடிப்பதுபோல் சீடனுடைய மனதை மூடிக்கொண்டிருக்கிற வஞ்சகம் முதலிய துர்க்குணங்களைக் களைந்தெரிகிறார்.

சாமான்ய உலோகங்களையும் பொன்னாக மாற்றுகிற பரிசன வேதியைப்போல் கேவலம் ஞானசூன்யனாயிருக்கிறவனையும் ஞானவானாகச் செய்கிறார். இதனை த்யாகராஜரும்

துருவு சில்ல கிந் துருவே ப்ரமரமு
துருடே பாஸ்கருடு துருடே பருஸ வேதீ

என்றார். மற்றோரிடத்திலும் த்யாகராஜர்

கறகை நஹ்ந த்ரோக கஹுதமுநு கோட்ட ஸத்
துரு லேக யெடு வம்டி துணிகி தெலியக போது

என்பதனால் எண்ணிறந்த சன்மங்களில் செய்த வினையின் வலியால் அடர்ந்து வளர்ந்திருக்கிற மனோவியாதியாகிய காட்டை வெட்டியொழிப்பதற்கு ஸத்குருவென்னும் கோடாலி வேண்டுமென்றார்.

இத்யாதி காரணங்களால் எப்படிப்பட்ட யோக்யதையுடையவனும் ஆசிரியனில்லாமல் கிருதார்த்தனாகமாட்டான். த்யாகராஜர் "குரு லேக எடுவம்டி குணிகி தெலியகபோது" என்றார். ஆகவே, ஆசிரியன் அவஸ்யமிருக்கவேண்டும்.

"குருவை யடையும் வழி"

நமக்கு எக்காலத்தில் குருநாதன் கிடைப்பான்; எப்பொழுது தரிசிப்போம்; அவருடைய ஆக்ஞையை என்று நாம் செய்வோம் என, கோடைகாலத்து பயிரானது மழையை எதிர்நோக்குவது போல் நாம் குருநாதனுடைய தரிசனத்துக்காக வருந்தி எதிர்பார்க்க

* ஒரு கொடி.

வேண்டும். ஒருவன் சமுத்திரத்தில் இடறிவிழுந்துவிட்டால், கரை சேருவதற்கு எவ்வளவு துரிதமாகத் தெப்பத்தைப் பிடிப்பதற்குத் தாவுவானே அதுபோல் நாம் இறப்புப் பிறப்பாகிய அலைகள் நிரம்பிய சமுசாரமென்கிற சமுத்திரத்தில் விழுந்துகிடக்கின்ற நாம் மோக்ஷமென்னும் கரை சேர்ப்பிக்கிற தெப்பமாகிய குருநாதனை அடைவதற்கு விரைந்து முயற்சிசெய்யவேண்டும். பிறவிக்குருடனான அநாதன் கோடைக்காலத்தின் நடுப்பகலிலே நீர் தேடித்திரியுமாறுபோலவும் நாம் மிகவும் வருந்தி குருநாதரைத் தேடவேண்டும்.

> நெருப்புவழி நடப்பி னீர்தேடு வார்போற்
> கருப்பிலனந் தேடுங் கதைபோல்—விருப்புற்றுப்
> பக்குவத்து நாயகனைத் தேடுகின்ற பைந்தொடிபோற்
> சற்குருவைத் தேடுந் தரும்,

—வள்ளலார்.

பக்குவம் வந்த சமயத்தில் இருவினையொப்பு மலபரிபாகம் உண்டாகச் சத்திநிபாதம் விளைந்த வழி மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல் தனிமயிலேறும் இராவுத்தனாகிய ஆண்டவன் மானிடச் சட்டை சாத்திக்கொண்டு ஆசிரியமூர்த்தமாக எழுந்தருளுவான்.

இதனைக் கீழ்வரும் ஆன்றோர் வாக்கியத்தாற் கவனிக்க:

தாயுமானர்:

> அடிமைக்கா வளர்த்தெடுத்த வன்னைபோல
> நீதி பெறுங் குருவாகி — எனவும்,

பதிபசுபாசவிளக்கம்:

> மருவி யுடல் வெறுப்பும் வந்தா
> லிருவினை யொப்புமங்க ணெய்திடு மெய்துங்காலம்
> கருமல பாகமுண்டாம் பாகந்தான் கடிதிற்சேரும்
> திருவருட் சத்திபாதஞ் செறிந்திடுங் குருவுமன்றே, — எனவும்,

சிவானுபூதிவிளக்கம்:

> பருவங் குறித்துப் பரவொளி வந்திங்
> குருவந்தரித்தாலொரு தவங்கள் வேண்டுமோ
> செய்தற்கரிய தவஞ்செய்தப் பின்னல்லவோ
> வெய்தற் கரியபிரா னெம்போல வந்ததுவே — எனவும்,

சிற்றம்பலநாடி தாலாட்டு:

> கண்ணேறு மூன்றுங் கவற்கரமு மைம்முகமு
> மண்ணவர்க்குக் காண வகையொளித்து வந்தானே
> எங்கெங்குந் தானாகி யென்போ லுருக்கொண்டு
> மங்கும் பிறவிதனை மாற்றவந்த வள்ளலோ — எனவும்,

திருவாசகம் :

அருபரத்தொருவன் அவனியில் வந்து
தருபரனுகிய அருளிய பெருமையை சிறுமையென்றிகழாது
எனவும்,

திருவருட்பயன்:

பார்வையென மாக்கண் முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வையென காணர் புவி எனவும,

போற்றிப்பஃறொடை :

பூவலயந் தன்னின்று நீங்காச்சகலர்க்கவர்போல்
முன்னின்று மும்மலம் தீர்த் தாட்கோள்கை எனவும்,

சிவப்பிரகாசம்:

. . . முன்னம் ஈட்டிய தவத்தினுலே இறை அருளுருவாய்வந்து
கூட்டிடுமிவற்றை நீக்கிக் குறைகழல் தருதுமாறே எனவும்,

சித்தியார்:

. . . துன்னிய ஐம்புலவேடர் சூழலிற்பட்டுத் துணைவனையும்
அறியாது துயருறும் தொல்லுயிரை மன்னும் அருட்குருவாகிவந்(து)
அவரின் நீக்கி மலம் அகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பான்
எனவும் வருவனவற்றுற்காண்க.

இதற்கு நமது ஸ்ரீ அருணகிரிநாதஸ்வாமிகள் நோய்வாய்ப்பட்ட சமயத்தில் உலகத்தை வெறுத்து உயிரைத் துரப்பதற்காக (அருணையில்) கோபுரத்தின்மேலேறி ஒருவன் உண்டேல் என்னைக் காக்க, இல்லையேல் உயிர் துறக்க என்று விழுந்தகாலத்தில் அக்கணமே அறுமுகப்பெருமான் குருவடிவாக எழுந்தருளியதே சான்று.

(தொடரும்.)

யக்ஷப்பிரஸ்னே.

வினு :—க்ஷத்திரியர்களுக்கு தேவதன்மை எது ?

விடை :—பாணங்களும் அஸ்திரங்களும் தேவதன்மை.

வினு :—ஸத்துக்களுக்குபோல இவர்களுக்கு தர்மம் எது ?

விடை :—ஸத்துக்களுக்குபோல இவர்களுக்கு யக்ஞமானது தர்மம்.

வினு :—இவர்களுக்கு மானிடத்தன்மை எது ?

விடை :—இவர்களுக்கு பயமானது மானிடத்தன்மை.

வினு :—அஸத்துக்களுக்குபோல இவர்களுக்கு அதர்மம் எது ?

விடை :—அஸத்துக்களுக்குபோல இவர்களுக்குத்துன்பமுற்றவர்களைக் கைவிடுதல் அதர்மம்.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர். 2 Vol. 2	ஈஸ்வர௵ ஆடிமீ 1உ ஜூலை—1937	இதழ் 4 No. 4

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

அந்தகன் வருந்தினம் பிறகிடச்
சந்ததமும் வந்துகண் டரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள

அந்திபக லென்றிரண் டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்

செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத

சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப் படுவேனோ

கொந்தவிழ் சரண் சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெற அரக் கருமாளக்
குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்
தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தா வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

பதவுரை.

கொந்து அவிழ்சரண் - பூங்கொத்துகள் மலர்ந்துள்ள தேவரீரது திருவடிகளே, சரண் சரண்என - அடைக்கலம் அடைக்கலம் என்று சொல்லி அபையம் புகுந்து, கும்பிடு புரந்தரன் - வணக்கம் புரிந்த இந்திரன், பதிபெற - தனது பொன்னுலகத்தைப்பெற்று இன்புறவும், குஞ்சரி குயம் புயம் பெற - தேவயானையால் வளர்க்கப்பட்ட தேவயானையம்மையாரது தனங்கள் தேவரீரது புயாசலங்களைப்பெறவும், அரக்கர் (உம்-அசை) மாள - இராக்கதர்கள் அழிவெய்தவும், குன்று இடிய - கிரௌஞ்சமலை தூள்பட்டு இடியவும், அம் பொனின் திருவரை கிண்கிணி - அழகியதும் பொன்னலாகியதுமாகிய திருவரையிலுள்ள சதங்கையானது, கிணின் கிணின் கிணின் என - கிணின் கிணின் என்று இனிமையாகச் சப்திக்கவும், இளம் குழைகளில் - இளமையான செவிகளில், குண்டலம் அசைந்து பிரபைவீச - குண்டலமாகிய காதணிகள் மெல்ல அசைந்து ஒளிசெய்யவும், செம் சிறு சதங்கை - பாதத்தில் அணிந்துள்ள அழகிய சிறு சதங்கைகள், தந்தனம் தனம் தனம் தன என கொஞ்சிட - தந்தனம் தனம் தனம் தன என்று மிகுந்த இனிமையாகக் கொஞ்சி ஓசையைச்செய்யவும், மணித்தண்டைகள் - இரத்னமணிகளால் செய்துள்ள தண்டைகளானது, கலின் கலின் கலின் என - கலின் கலின் கலின் என்று ஒலிக்கவும், திருவான - சர்வ மங்களங்களுக்கும் உறைவிடமான மகாலட்சுமியாகிய, சங்கரி - சுகத்தைக் கொடுப்பவளாகிய பார்வதியம்மையார்,

மனங் குழைந்து - அன்பின் மிகுதியால் மனங்குழைந்து, உருக முத்தந்தர-உள்ளம் உருகி முத்தங்கொடுக்கவும், வரும் செழுந்தளர்நடை-மெல்ல அசைந்து அசைந்து வருகின்ற அழகிய தளர்நடையுடைய, சந்ததி - இளங்குமரனே, சகம் தொழும் - உலகமெல்லாம் கைகூப்பி வந்தனம் புரிகின்ற, சரவண - சரவண தடாகத்தில் உய்யும்பொருட்டு வெளிப்பட்ட, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே, அந்தகன் வரும் தினம் பிறகிட - அடியேனுடைய உயிரைப்பற்ற கூற்றுவன் வருகின்ற நாளில் புறங்கொடுத்து ஓடவும், சந்ததமும் வந்து கண்டு - சதாகாலமும் விலைமகளிர் வீதியில்வந்து அவர்களது அழகைப் பார்த்து, அரிவையர்க்கு - அந்த பொதுமாதர்களிடத்திலே, அன்பு உருகு - அன்பு வைத்து மனம் உருகுகின்ற, சங்கதம் தவிர - நட்பானது நீங்கவும், முக்குணம் மாள - சத்துவம் இராசசம் தாமசம் என்ற மூன்று குணங்களும் மாண்டுபோகவும், அந்திபகல் என்ற இரண்டையும் ஒழித்து - மறப்பு நினைப்பு (கேவல சகலம்) என்கிற இரண்டு அவஸ்தைகளையும் அடியோடு ஒழித்து, இந்திரிய சஞ்சலங்களை அறுத்து - மெய் வாய் கண் நாசி செவி என்ற ஐம்புலன்களால் உண்டாகிற துன்பங்களை அடியோடு நீக்கி, அம்புய பதங்களின் பெருமையை கவிபாடி - தாமரை மலரையொத்த தேவரீரது திருவடிகளின் பெருமைகளை அமைத்து பாமாலைகளைப்பாடி, செந்திலை உணர்ந்து உணர்ந்து உணர்வு உற - திருச்செந்திலம்பதியில் தேவரீர் எழுந்தருளியிருக்கின்ற தத்துவத்தையும் செந்திற்பதியின் உட்கருத்துக்களையும் ஓங்காரவடிவாக ஆலயம் அமைந்திருக்கின்ற திறத்தையும் மெய்யறிவால் உணர்ந்து அம்மெய்யறிவு நிறைவடையவும், கந்தனை அறிந்து அறிந்து - கந்தனாகிய நினது சொரூபலக்ஷணத்தையும் தடஸ்த லட்சணத்தையும் அறிந்து, அறிவினில் சென்று சேரும் தடம் தெளிதர-அந்த அறிவின் வழியிலே சென்று உண்மைப்பொருளைச் சேருகின்ற முத்திநெறி இன்னதென்று தெளிவடையவும், தணியாத சிந்தையும் அவிழ்ந்து அவிழ்ந்து-சாந்தியையடையாத (கல்போன்ற) மனமானது நெகிழுந் தன்மையையடைந்து, உரையொழித்து - சொல்லற நின்று, என் செயல் அழிந்து அழிந்து அழிய - என்செயலால் எல்லாம் நடைபெறுகிறதென்ற தற்போதமானது அடியோடு அழியவும், மெய் சிந்தை வர - உண்மை யறிவானது உண்டாகவும், என்று - எந்த நாளில், நின் தெரிசனைப்படுவேனோ - தேவரீரது திவ்ய தெரிசனம் அடியேன் கிடைக்கப்பெறுவேனோ ?

பொழிப்புரை.

பூங்கொத்துகள் மலர்கின்ற தேவரீரது திருவடியில் அடைக்கலம் அடைக்கலம் என்று கூறி அபயம் புகுந்து வணங்கிய தேவேந்திரன் தனது பொன்னுலகத்தைப் பெற்று இன்பத்தை யடையவும், ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற தேவயானையம்மையாரது தனங்கள் நினது புயாசலங்களைப் பெறவும், அரக்கர்கள் மாளவும், கிரௌஞ்ச வெற்பு தூள்பட்டு இடியவும், அழகியதும் பொன்னாலாகியதுமாகிய நினது திருவரையிற் கட்டியுள்ள சதங்கைகள் கிணின் கிணின் கிணின் என்று இனிய ஒலியைச் செய்யவும், இளஞ் செவிகளில் குண்டலங்கள் மெல்ல அசைந்து ஒளி வீசவும், திருவடியில் அணிந்துள்ள அழகிய சிறு சதங்கைகள் தந்தனம் தனம் தனம் தன என்று இனிமையாகக் கொஞ்சி சப்திக்கவும், இரத்னமணிகளாலாகிய தண்டைகள் கலின் கலின் கலின் என்று ஒலிக்கவும், சர்வமங்களங்களுக்கும் உறைவிடமானவரும், சுகத்தைக் கொடுப்பவருமாகிய உமா தேவியார் அன்பின்மிகுதியால் மனமானது குழைந்து உருகி முத்தங் கொடுக்கவும் மெல்ல வருகின்ற அழகிய (இளம்பருவத்தின்) தளர் நடையுடைய புதல்வரே! உலகெலாம் வழிபட்டு வணங்குகின்ற சரவணோற்பவரே! பெருமையிற் சிறந்தவரே! அடியேனது ஆவியைப்பற்றுவதற்காக இயமன் வருகின்றநாளில் பிறகிட்டு ஓடவும், தினந்தோறும் பொதுமகளிர் இடத்திற்சென்று அவர்களது புற அழகைக்கண்டு அதில் ஈடுபட்டு அன்புகொண்டு மனம் உருகி அவர்களிடத்திற் பொருந்துகின்ற சினேகமானது நீங்கவும், சத்துவம் இராசசம் தாமசம் என்ற முக்குணங்களும் இறந்துபடவும், தாம் எழுந்தருளியுள்ள திருச்செந்தூரின் தத்துவத்தையும் அது கடற் கரையில் அமைந்திருப்பதன் காரணத்தையும் பிரணவாகாரமாக ஆங்கு ஆலயம் அமைந்திருக்கின்ற நிலையையும் உணர்ந்து மெய்யுணர்வையடையவும், கந்தனாகிய தேவரீரை உள்ளபடி அறிந்து அறிவு மார்க்கத்தில் சென்று உண்மைப் பொருளைச் சேருகின்ற முத்திநெறி இதுவே என்று தெளிவுறவும், தணிதலையடையாத எனது மனமாகிய கல்லானது உருகி நெகிழ்ச்சியடைந்து உரையற்று என்செயலால் எல்லாம் நிகழுகிறதென்ற தற்போதம் அறவே அழிந்து உண்மை ஞானம் வரவும் தேவரீரது அருள்வடிவின் திவ்ய தெரிசனையை அடியேன் என்று பெறுவேன்?

விரிவுரை.

அந்தகன் வருந்தினம் பிறகிட :—

குமாரக்கடவுளது தெரிசனைப்பட்டவர்களைக் கண்டால் இயமன் பிறகிட்டு ஓடுவன். இதனை

"மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனையாள இவண்
வந்திடாயோ"

குமரா சரண சரணமென் றண்டர் குழாந் துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுகம் ஆறுங் கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென் செயுமே

என்ற திருப்புகழ் கந்தாலங்காரத் திருவாக்குகளால் தெளிக.

இயமன் தனது தூதுவர்களைப்பார்த்து சிவமூர்த்தியை நினைந்து வணங்கி "தூதர்களே! சிவபெருமானுடைய அடியார்களைக்கண்டால் நீங்கள் பயபக்தியுடன் வணங்கி எவ்வளவு தூரமாகச் செல்லமுடியுமோ அவ்வளவுதூரம் அகன்று செல்லுங்கள்" என்று கூறுகின்றனன். மார்க்கண்டேயரைப் பற்றச்சென்று உதையுண்டதை மறப்பனோ?

தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில் காளத்தி மன்னன்—பழுதிலாப்
பத்தர்களைக் கண்டாற் பணிந்தகலப் போமின்கண்
எத்தனையுஞ் சேய்த்தாக என்று

சந்ததமும் வந்து . . . . சங்கதந்தவிர :—

தினந்தோறும் பெண்களுடைய அழகைக்கண்டு மனமுருகி அவர்களது நட்பில் ஈடுபடுகின்ற அவத்தொழிலை யறவே ஒழிக்க வேண்டும். இதனாலன்றோ இராமலிங்க அடிகள் "மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்" என்று தேற்றேகாரத்தால் இறைவனைக் குறையிரந்தனர்.

முக்குணம் மாள :—

இறைவனுடைய அருட்குணத்தில் திளைத்து சிவயோகத்தில் வீற்றிருப்பார்க்கு முக்குணமும் நாசமடையும்.

" நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந்தேன் இறந்தே விட்ட திவ்வுடம்பே "

—அலங்காரம்.

அந்தி பகல் என்றிரண்டையு மொழித்து :—

அந்தி:—மறப்பு, பகல்:—நினைப்பு, (கேவல சகலம்) நினைப்பும் மறப்பும் அற்றார்க்கே இறைவனது தெரிசனம் உண்டாகும். நினைப்பு மறப்பு நீங்கப்பெறுதல் அவசியம். இதனை அருணகிரிநாதர் பலவிடத்துக்கூறியுள்ளார்.

" அந்திபகலற்ற நினைவு அருள்வாயே "

" இதமகிதம் விட்டுருகி இரவுபகலற்ற விடம்
எனதெனவிருக்கைபுரி யோகப் புராதனனும் "

" பரமானந்தத்தே தேங்கார் நினைப்பு மறப்பு மறார் "

" இராப்பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே "

" கருதா மரவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரவேன் றிசைவாய் "

பிற ஆன்றோர்கள் வாக்குகளையும் நோக்குக:

" நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றறுக்கும் விமல னிருக்கும் "

—திருமந்திரம்.

" இரவுபக லில்லா இன்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற "

—திருவுந்தியார்.

" கங்குல்பக லறநின்ற எல்லையுள தேது "

—தாயுமானர்.

இந்திரிய சஞ்சலங்களையறுத்து :—

நினைப்பு மறப்பும் அற்றவர்க்குப் புலன்களாலுண்டாகும் துன்பங்கள் தானே நீங்கும். தூங்கியோன் கைப்பொருள் தானே வீழ்வதுபோல் என்றுணர்க.

" இந்த்ரிய தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனே "

—(ஓலமறைகள்) திருப்புகழ்.

அம்புயப் பதங்களின் பெருமையைக் கவிபாடி :—

இறைவனுடைய திருவடிக்கமலங்களின் பெருமையை அமைத்துக் கவிபாடுதல் நினைப்பும் மறப்பும் நீங்குதற்கு சாதனமாம். அத்

திருவடியின் பெருமையை அருணகிரியார் அநேகவிடத்திற் கூறி யுள்ளார்.

" ஆலமுண்டகோன் அகண்டலோக முண்டமால் விரிஞ்சன்
ஆரணங்கள் ஆகமங்கள் புகழ்தாள் "

—(தோலெலும்பு) திருப்புகழ்.

" விடுஞ் சுரர் மாமுடி வேதமும் வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே "

" வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப் பாதா "

—அநுபூதி,

செந்திலை யுணர்ந்து உணர்ந்து :—

அலைகள் வந்து ஒய்வடைகின்ற இடமாதலால் செந்திலுக்கு அலைவாய் என்று மற்றொரு பேருமுண்டு. நினைப்பு மறப்புகளாகிய அலைகள் வலியற்று அவனது திருவடியில் வந்து ஒடுங்க கடற்கரையில் எம்பெருமான் உறைகின்றனன். " பிரவிக்கடலில் வீழ்ந்தோரை எனது திருவடியாகிய ஓடத்தால் முத்திக்கரைசேர்ப்பதற்காகக் கடற் கறையில் யான் வசிக்கின்றனன் " என்ற குறிப்பைக்காட்டுதற் காகவே முருகன் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ளான்.

" யாதுநிலை யற்றலையும் ஏழுபிற விக்கடலை
ஏறவிடுநற் கருணை ஓடக்காரனும் "

—வகுப்பு.

" சுவர்க்கலோக மீகாம சமஸ்தலோக பூபால
தோடுத்தநீப வேல்வீர வயலூரா "

—(அனித்த) திருப்புகழ்.

தூண்டுகை விநாயகர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஆனந்த விலாசஞ்சென்று வதனாரம்ப தீர்த்தஞ் சென்று ஷண்முகவிலாசத்தின் வழியே சென்று சுவாமிதரிசனஞ் செய்துத் திரும்பினல் பிரணவா காரமாக அமைந்திருக்குந் தன்மை கண்கூடு. முருகதலங்களுள் செந்திலம்பதி தலைசிறந்தது. சுவாதிஷ்டான க்ஷேத்திரம், அளக் கற்கரும் பெருமையுடைத்து. இத் தெய்வீக தலத்தை அருணகிரி யார் பிறபாடல்களில் கூறியவாறுங் காண்க.

" செந்திலென் றவிழவுள முருகிவரும் அன்பிலன் "

" சங்கங் கஞ்சங் கயல் சூழ்தட
மெங்கெங்கும் போங்க மகாபுநி
தந்தங்குஞ் செந்திலில் வாழ்வுயர் பெருமாளே "

" கயிலைமலையனைய செந்திற் பதிவாழ்வே "

" திருச்செந்திலை யுரைத்துய்ந்திட அறியாரே "

கந்தனையறிந்து அறிந்து :—

கந்தப்பெருமானுடைய சொரூபலட்சணத்தையும், தடஸ்த லட்சணத்தையும் அறிந்து

அறிவினிற் சென்று :—

ஞானமார்க்கத்திற் செல்லுதல் வேண்டும். அங்ஙனம் சென்றால் உண்மைப் பொருளை நிச்சயமாக அடையலாம். தணியாத சிந்தை அப்போதுதான் சாந்தியை யடைந்து நெகிழும். சொல்லற்ற நிருவிகற்ப சமாதி கைகூடும்.

என் செயல் அழிந்து :—

எல்லாம் சிவன் செயலென உணர்ந்து, தன் செயலால் நடைபெறுகிறதென்ற தற்போதத்தை அறவே யொழித்து தன்வசமற்று பரவசமுற்றுறைதல் வேண்டும்.

நஞ்செய லற்றிந்த நாமற்றபின் ஞாதன்
தன்செயல் தானே யென் றுந்தீபற
தன்னையே தந்தா னென் றுந்தீபற

—*திருவுந்தியார்.*

தெரிசனை படுவேனோ ?

முருகப்பெருமானுடைய தெரிசனையுண்டாயின் அந்தகன் பிறகிடுதலும், அரிவையர்க்கு அன்புருகு சங்கதந் தவிர்தலும், முக்குண மொழிதலும், அந்திபக லழிதலும், இந்திரிய சஞ்சலங்களறுதலும், அம்புயப்பதங்களின் பெருமையைக் கவிபாடுதலும், செந்திலையுணர்தலும், கந்தனையறிதலும், அறிவினிற்சென்று தெளிதலும், தணியாத சிந்தை யவிழ்தலும், உரை யொழிதலும், தன்செயலழிதலும் மெய்ச் சிந்தை யடைதலும் உண்டாகும்.

சரண் சரண் சரணெனக் கும்பிடு புரந்தரன் பதிபெற :—

சிவ பெருமான்பால் வரம் பெற்றுத் தருக்கிய சூரபன்மனுடைய கொடுமைக்கு அஞ்சி இந்திரன் பத்தினியுடன் மேருகிரியின்ஓர்சார்

மூழைக்குள் ஒளிந்திருந்தனன். அக்கால் சூரபன்மன் பானுகோபனை ஏவி இந்திரலோகத்தை தீவாய்ப்படுத்தி இந்திரன் மகனாகிய சயந்தனையும் தேவர்களையும் தேவமாதர்களையும் சிறைப்படுத்தினன் இந்திரன் தனது உலகத்தையும் மகனையும் இழந்து பல யுகங்களாக வருந்தி இனி உய்வுபெறுங்காலமு முண்டோ? என ஏங்கி சிறகற்ற பறவைபோல் தளர்ந்த மனமுடையவனாய் எந்தை கந்தவேளிடமெய்தி "அமரர் பயந்தவிர்க்குங் குமாரநாயக! மூவர் முதல்முதல்வ! வேற்படை விமல! நின் திருவடியே சரணம்; உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்; புகலிடம் வேறில்லை; தஞ்சம் தஞ்சம்; எளியேனைக் காத்தல் நின்கடன்" என்று கதறி முறையிட்டனன். வேண்டுவார் வினைப்பகையறுத்து வேண்டிய போகங்களை நல்கும் வேலாயுதக்கடவுள் சூராதியவுணர்களைச் செற்று, இந்திரன் மகனையும் தேவமாதர்களையும் சிறைமீட்டு இந்திரனுக்குப் பொன்னுலகளித்துப் பொன்று வாழ்வில் இருத்தினர்.

"வாலகுமர குக கந்த குன்றெறி
வேல மயில என வந்து கும்பிடு
வான விபுதர்பதி யிந்திரன் வெந்துயர் களைவோனே"

—(ஓலமறை) திருப்புகழ்.

திருவரைக்கிண்கிணி கிணின் கிணின் என :—

என்றுமகலாத இளமைக்காரனாகிய குழந்தைவேலனது இடையிலணிந்துள்ள சதங்கையின் ஓசை பதினாலுலகங்களுங் கேட்டன. அதன் இன்னோசையால் உலகங்களெல்லாம் மகிழ்ந்தன. இதனை அருணகிரிநாதர் உரைக்குமாறு காண்க.

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசை யந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினாலுலகமுங் கேட்டதுவே.

மணித் தண்டைகள் கலின் கலின் கலினென :—

இணையற்ற வீரர்களது பாதத்தில் வீரகண்டாமணி கட்டுவது மரபு. முருகவேள் அதிபராக்ரம வீராதலால் இரத்தின மணிகள் பதித்த வீரகண்டாமணிகளும் தண்டைகளும் அவருடைத் திருவடிகளில் மிளிர்கின்றன.

"அணிமணித்தண்டையார்க்கும்
செழுமலரடியுங் கண்டான் அவன்தவம் செப்பற்பாற்றே"

—கந்த புராணம்.

"கழலோலிதண்டையுங் காலு மோக்கவந்து
வரமேனக் கருள்கூர்வாய்"

"இனியநாத சிலம்பு புலம்பிட
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிசேராய்"

"இசைத்திடுஞ் சந்தபேத
மோலித்திடுந் தண்டை சூழும்
இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே"

—திருப்புகழ்.

சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே :—

மொழியுஞ் சமயமனைத்துக்கும் முதல்வனுனபடியால் முருகப் பெருமானை உலகமெலாம் வணங்குகின்றன. யாவர் எத்தெய்வத்தை வணங்கினும் அவ்வணக்கம் முருகனையே சாரும்.

"நவலோகமுங் கைதொழு நிசதேவலங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே"

—(சிவனார்) திருப்புகழ்.

கருத்துரை.

சகமெல்லாம் தொழுகின்ற சரவணபவரே! பெருமையிற் சிறந்தவரே! கூற்றுவன் பிறகிட்டு ஓடவும், பொதுமகளிர் சினேகம் நீங்கவும், முக்குணங்கள் ஒழியவும், செந்திலம்பதியின் தத்துவத்தை யுணர்ந்து மெய்ஞ்ஞானத்தை யடையவும், தேவரீரை யுள்ளபடி யறிந்து, மூத்திநெறி இதுவே என்று தெளிவுறவும், என்மனமாகிய கல்லானது உருகி தற்போதம் அழிந்து உண்மையான அறிவுவரவும் தங்கள் தெரிசனையை என்று அடியேன் பெறுவேன்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

(76-வது பக்கத் தொடர்ச்சி.)

रणद्धंसके मञ्जुलेऽत्यन्त शोणे
मनोहारि लावण्य पीयूषपूर्णे ।
मनःषट्पदो मे भवक्लेश तप्तः
सदा मोदतां स्कन्दते पाद पद्मे ॥

(9) ரணத்தம் ஸகே மஞ்ஜு லேத்யந்த சோணே
மனோஹா ரிலாவண்ய பீயூஷ பூர்ணே ।
மன: ஷட்பதோமே பவக்லேச தப்த:
ஸதா மோததாம் ஸ்கந்த ! தேபாத பத்மே ॥

அவதாரிகை.

முன் சுலோகங்களினல் சுவாமியின் வாஸஸ்தானமாகிய ஸமுத்திரக்கரை, பர்வதம், சுவாமிவீற்றிருக்கும் மஞ்சம் இவைகளே. அடியவர்களின் பிறவித்துன்பத்தைப் போக்கி பேரின்பத்தை யளிக்க வல்லனவென்பதால் இத்தகைய சிறப்புவாய்ந்த ஸ்தலத்தைத் தரிசிப்பதும், அங்கு அன்பர்களுக்கு அருள்செய்யவே எழுந்தருளியிருக்கும் கந்தக்கடவுளின் கழலிணையைப் பணிவதுமே மனிதயாக்கையின் பயனெனப் பெறப்பட்டது. அத்தகைய திருவடியை இச்சுலோகத்தில் அழகாக வர்ணிக்கின்றார்.

பதவுரை.

ரணத்தம் ஸகே - ஒலிக்கின்ற அன்னப் பக்ஷிகளையுடையதும் (சப்திக்கின்ற பாதசரங்களையுடையதும்)
மஞ்சுலே - மிக அழகியதும்
அத்யந்த சோணே - மிகச் சிவந்ததும்
மனோஹாரிலாவண்ய பீயூஷ பூர்ணே — மனத்தைக் கவருகின்ற இனிய அமுர்தத்தால் நிறைந்ததும் (மனத்தைக் கவருகின்ற அழகாகிய அமுர்தத்தால் நிறைந்ததும் ஆன)
தே பாதபத்மே - உனது திருவடியாகிய தாமரைப்பூவின்கண்,
ஹே ஸ்கந்த ! - ஓ கந்தப்பெருமானே,
பவக்லேச தப்த: - ஸம்ஸாரதாபத்தால் துன்பப்படுகின்ற,
மே மன: ஷட்பத: - என் மனதாகிய வண்டானது,
ஸதா - எப்போதும்,
மோததாம் - சந்தோஷத்தை யடையட்டும்.

பொழிப்புரை.

பசியினாலும் தாகத்தினாலும் துன்புற்றிருக்கும் வண்டானது மது நிறைந்ததும் குளிர்ச்சி பொருந்தியதுமான தாமரைப்பூவை யடைந்து எவ்வாறு ஆனந்திக்குமோ அவ்வாறே சம்சாரதுக்கத்தால் துன்புற்றிருக்கும் என்மனது ஓ கந்தப்பெருமானே! தேவரீருடைய திருவடியை யடைந்து சந்தோஷத்தை யடையட்டும்.

सुवर्णाभदिव्यां वरौद्भासमानाम्
क्वणत्किङ्किणी मेखला शोभमानम् ।
लसद्धेमपट्टेन विद्योतमानम्
कटिं भावये स्कन्दते दीप्यमानम् ॥

(10) ஸுவர்ணாப[3] திவ்யாம்[4] ப[3]ரோத் பா[3]ஸமானம்
க்வணத் கிங்கிணீ மேக[2]லா சோப[4] மானம் ।
லஸத்[3]தே[4]ம பட்டேன வித்[3]யோத மானம்
கடிம்[4] பாவயே[3] ஸ்கந்த[4]! தே தீப்யமானம் ॥

பதவுரை.

ஹே ஸ்கந்த ! - ஓ கந்தப்பெருமானே,

ஸுவர்ணுப திவ்யாம் பரோத் பாஸமானம் - பொன்போல் பிரகாசிக்கின்ற உயர்ந்த பீதாம்பரத்தை யுடையதும்,

க்வணத் கிங்கிணீ மேக லாஸோபமானம் - ஒலிக்கின்ற ஒட்டியாணத்தினுல் சோபிக்கிறதும்,

லஸத்தேம பட்டேன வித்யோதமானம் - அழகிய தங்கப்பட்டத்தால் பிரகாசியாநின்றதும்,

தீப்யமானம் - இயற்கையாகவே ஒளிர்கின்றதுமான,

தெ - தேவரீருடைய,

கடிம் - இடையை,

பாவயே - தியானிக்கின்றேன்.

பொழிப்புரை.

திவ்வியமான பீதாம்பரம், ஒட்டியாணம், தங்கப்பட்டை இவைகளால் அலங்கரிக்கப்பெற்றதும், இயற்கையாகவே ஒளிர்கின்றதுமான தேவரீரது இடையை தியானிக்கின்றேன். இதனுல் தேஜோரூபமாக இருக்கும் இடையை தியானிப்பவர்கள் தேஜோரூபிகளாக ஆவார்கள் என்னும் உண்மையும் உணர்த்தப்பட்டது.

पुलिन्देशकन्या धनाभोगतुङ्ग
स्तनालिङ्गनासक्त कास्मीररागम् ।
नमस्याम्यहम् तारकारे तवोरः
स्वभक्तावने सर्वदा सानुरागम् ॥

(11) புலிந்தேச கன்யா கனு போக துங்க
ஸ்தனு லிங்க னுஸக்த காஸ்மீர ராகம் ।
நமஸ்யாம் யஹம தாரகாரே ! த வோர:
ஸ்வ பக்தாவனே ஸர்வதா ஸானு ராகம் ॥

பதவுரை.

ஹே தார காரே - தாரகாசுரனைச் சங்கரித்தவரே,

புலிந்தேச கன்யா கனுபோகதுங்கஸ்தன லிங்கனஸக்தகாஸ் மீரராகம் - வேடராஜாவின் பெண்ணாகிய வள்ளியம்மையின் பருத்த தனங்களைத் தழுவியதனால் ஒட்டிக்கொண்ட குங்குமச் சாயத்தையுடையதும்,

ஸர்வதா	- எப்போதும்,
ஸ்வபக்தாவனே	- தனது பக்தர்களைக் காப்பாற்றுவதில்,
ஸானுராகம்	- பற்றுடையதுமாகிய,
தவ	- தேவரீருடைய,
உர:	- மார்பை,
அஹம்	- நான்,
நமஸ்யாமி	- நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை.

வள்ளியம்மையின் ஸ்தனங்களினின்றும் ஒட்டிக்கொண்ட குங்குமச்சாயத்தை யுடையதும் தனது அடியவர்களைக் காத்துக் கொள்வதில் பற்றுடையதுமாகிய தேவரீருடைய மார்பை தியானிக்கின்றேன். இதனால் கந்தக்கடவுளானவர் அடியவர்கள் எத்தகைய குற்றம் புரிந்தாலும் பொறுத்து ரட்சிக்கும் கருணைக்கடலென்பது பெறப்பட்டது.

(தொடரும்.)

வினு விடை மணிகள்.

ஆதி சங்கரர்.

கே :—தானம் என்பது எது ?

ப :—கேட்காது கொடுத்தல்.

கே :—சிநேகிதன் யார் ?

ப :—பாவஞ் செய்யாது தடுப்பவன்

கே :—அழகு எது ?

ப :—சீலம்.

கே :—வாக்கிற்கு அழகு எது ?

ப :—சத்யம்.

ஓம் குஹாய நம :

கந்தர் திருவிளையாடல்

(83-ம் பக்கத் தொடர்ச்சி.)

பங்கயாசனன் இவைகளைக்கூற ஐங்கணைக் கிழவனும் மன்மதன் உள்ளம் வருந்தி, ஆதிநாயகராம் அரனிடம் மாறுகொண்டு எதிர்த்துப் போர்புரியேன்? இஃதன்றி வேறு எக்கருமத்தைக் கட்டளையிடினும் இமைப்பொழுதில் செய்வேன்" என்றனன். பிரமன் அதுகேட்டு வெகுண்டு "அறிவிலியே! என்னுடைய இன்னுரைகளை மறுத்தனை; நானுரைத்தவண்ணம் புரிவையேல் பிழைப்பாய்; இன்றேல் உனக்கு சாபந்தருவேன்; இவ்விரண்டில் எது நினக்கு உடன்பாடு? ஆராய்ந்து கூறுதி" என்றனன். மன்மதன் இவ்வசனங்களைச் செவிமடுத்து மனங்கவன்று பெருமூச்செறிந்து "இனி நாம் செயத்தக்கது யாது?" என்று சிந்தித்து, ஒருவாறு தெளிந்து மலரவன் மாமுகம் நோக்கி வகுக்கலாயினன். "நாமகள் நாயக! சிவமூர்த்தியிடம் எதிர்த்துச் செல்லுவனேல் அப்பரமனது நுதல்விழியால் மாள்வேன்; இன்றேல் நினது சாபத்தால் அழிவேன்; இவ்விரண்டில் எது தக்கது என்னில், சிவமூர்த்தியினது நெற்றிக்கண்ணால் அழிந்தால் பின்னர் ஒருகாலத்தில் உய்வேன்; நினது சாபத்தாலழியில் அவ்வுய்வு பெறுமாறில்லை; ஆதலால் யான் நின்னுரைப்படி செல்லுவேன்; சினம் கொள்ளற்க" என்றனன். உடனே பிரமன் மனமகிழ்ந்து "மதன! நன்று; நன்று; நின்னை மகாதேவரிடம் தனித்து அனுப்புவோமல்லம்; யாமும் நின்னைத் தொடர்ந்து வருவோம்; நீ செல்லுதி" என்று அன்புடன் அனுப்பினன்.

மதனன் மலரவன்பால் விடைபெற்று தன்னிருக்கை சென்று நிகழ்ந்தவற்றை தனது பத்தினியாகிய இரதியிடம் புகல, அவள் சிவமூர்த்தியிடம் செல்லுதல் தகாதெனமறுத்துரைக்க, மதனன் அவளைத் தேற்றி மலர்க்கணைகள் நிறைந்த அம்புக்கூட்டைப் புறத்தேகட்டி, கரும்புவில்லை எடுத்து குளிர்ந்த மாந்தளிராகிய வாளை இடையிற் சேர்த்து, குயில், சமுத்திரம் முதலியவைகள் முரசுவாத்தியங்களாய் முழங்க, மீனக்கொடியுடன் சேர்ந்ததும், கிளிகளைப்பூட்டியதும், சந்

கிரணக் குடையாகவுடையதுமாகிய தென்றல் தேரின்மேல் ஊர்ந்து இரதியுடன் புறப்பட்டு எம்பெருமான் வைகும் கயிலைமலையைக்கண்டு கரங்களைக்கூப்பி வணங்கி, தேரைவிட்டிறங்கி தன்னுடன் வந்த பரிசனத்தை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு, இரதிதேவியுடன் வில்லும் அம்புங்கொண்டு பெரும்புலியை நித்திரையைவிட்டெழுப்ப ஒரு சிறு மான் செல்லுவதுபோல் கயிலைமேல் ஏறினன். கரும்புவில்லை வளைத்து மலர்க்கணைபூட்டி ஆங்குள்ள பறவைகள்மீதும், விலங்குகள் மீதும் காமவிச்சையுண்டாகுமாறு செலுத்தினன். கோபுரமுகப்பிலிருந்த நந்தியங்கடவுள் அதுகண்டு பெருஞ் சினங்கொண்டு இது மன்மதனுடைய செய்கையென்று தெளிந்து 'உம்' என்று ரீங்காரஞ் செய்தனர். அவ்வொலியைக்கேட்ட மன்மதனுடைய பாணங்கள் பறவைகள்மீதும் விலங்குகளின்மீதும் செல்லாது ஆகாயத்தில் நின்றன. அதனைக்கண்ட மதனன் நெடிதுயிர்த்து மனம்வருந்தி உளந் துளங்கி, நந்திதேவர் முன் சென்று பன்முறைவணங்கி வாழ்த்தி நின்றனன். நந்தியங்கடவுள் மதன! இத்திருமலைக்கண் நீ வந்த காரணம் யாது? என்ன, மதனன் " பிரமன் தனக்குக் கூறிவிடுத்த நிகழ்ச்சிகளை யுரைக்க, நந்திதேவர் " பிரமாதிதேவர்கள் தமக்குற்ற துன்பநீக்கத்தின்பொருட்டு இவனை இங்கு விடுத்துளார்கள்; சிவபெருமான் மோன நிலையில் அமருங்கால் "யார் வந்தாலும் உள்ளே விடவேண்டாம், மன்மதன் ஒருவனைமட்டும் விடுக்குதி"என்றருளினர். மந்திரசக்தியால் பசுவைத்தடிந்து வேள்விபுரிந்து மீளவும், அப்பசுவை எழுப்புதல்போல் மன்மதனை எரித்து, மலைமகளை மணந்து பின்னர் இவனை எழுப்புமாறு எம்பெருமான் நினைத்தான்போலும்" என்று நினைத்து " மாரனே! சிவமூர்த்தியின்பால் செல்லுதல் வேண்டுமோ?" என மன்மதன் "எந்தையே! என்னுயிர்க்கு இறுதி வரினும் பொன்னார்மேனிப் புரிசடையண்ணலிடம் சேருமாறு வந்தனன்; அவ்வெண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்' என்றனன். நந்திதேவர் "மலர்க்கணைக்கிழவ! தேவதேவன்முன் செல்லுதற்கு உன்னுதியேல் மேலைக்கோபுர வழியாகச் செல்லுதி" என்றனர் மன்மதன் அவரை வணங்கி விடைபெற்று, மேலைவாயிலின் உள்சென்று, சோதிமாமலைபோல் வீற்றிருக்கும் சூலபாணி முன் சென்றனன். ஒப்பற்ற சரபத்தைக்கண்ட சிங்கக்குட்டிபோல் வெருவுற்று உள் நடுங்கி மெய் வியர்த்து காத்திற்பற்றிய படையுடன் அவசமுற்று வீழ்ந்தான்.

உடனே இரதிதேவி காத்தாற்றுங்கி 'இறந்தனன் கொல்' என்று நெஞ்சங்கவன்று தேற்றினள். மதனன் அவசந்தெளிந் தெழுந்து " அந்தோ ? அடியேன் என்னகாரியம் செய்யத் துணிந் தேன். நகையால் புரமூன்றுமெரித்த நம்பனை எதிர்த்துப்போர்புரியு மாறு பிரமதேவன் என்னை இங்கனுப்பினர். இன்றே எனக்கு அழிவு வந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. எண்குணத்திறைவனும் ஈசனைக் கண்டவுடனே உள்ளம் வெருவி என்னுயிரை யிழந்தவன் போலாயினனே? இனி எதிர்த்துக் கணைகளைப்பொழிந்தால் உய்கு வனே? கணைகள்தான் இறைவனை வெற்றி பெருமோ? இதனைத் தேவர்கள் அறிந்திலரே. பெருஞ் சண்டமாருதத்தின்முன் ஓர் சிறு தீபம் நிற்கவல்லதோ? அதுபோல் வாக்காலும் மனத்தாலும் அளக்க முடியாத வள்ளல்முன் என்னைத் தேவரனுப்பினர். இன்னும் சின் னேரத்தில் இப்பெருமானது நெற்றிக்கண் பார்வையால் வெந்தழியப் போகிறேன். சகலலோகங்களையும் இமைப்பொழுதில் நீறுசெய்யும் நிமலனைப் பூமலர்க்கணைகொண்டு போர்புரிய வந்தது நகைப்புக்கிட மன்றோ? விதியைச்கடக்கவல்லார் யார்? அயனுதியமராலும் விதியை வெல்லமுடியாதல்லவா ? இதனைக்கூர்ந்து நோக்கின் குன்றவில்லியின் செயலே போலும்? இக்கருமம் எவ்வாறுமுடியுமோ? இறைவன் திருவருள் எங்ஙனமோ அங்ஙனம் முடிக; இனி தாமதியாது எண் ணியதை முடிப்பன்" என்று பலவாறு நினைந்து கரும்புவில்லை வளைத்து சுரும்பு நாணேற்றி தன்மலர்க்கணைகளைப்பூட்டி மதிநதிச்சடைப்பெரு மான் முன்சென்று நின்றான்.

இது நிற்க, மனோவதி நகரத்தில் மலரவனை இந்திரன் இறைஞ்சி "என்தோளிறைவன்பால் மதனனைத் தனித்தனுப்பினீர்; அவனு டைய போர்த்திறத்தைக் காணும்பொருட்டு நாமும் போவோம்" என்றனன். பிரமன் எழுந்து தேவர் குழாத்துடன் புறப்பட்டு கயிலை மலையையணுகி மன்மதனுடைய செயலைநோக்கி மழுக்காத்தண்ணலை வழுத்திநின்றனன். மதனன் சிவபிரான்மேல் குறிபார்த்து ஐந்து மலர்க்கணைகளையும் விடுத்தனன். மதனனால் விடப்பட்ட மலர்ப்பகழிகள் சிவபிரான்மேற் படுதலும் பரமேஸ்வரன் தனது நெற்றிக்கண்ணைச் சிறிது திறந்து மன்மதனை நோக்க, அவ்விழியி னின்றுந்தோன்றிய சிறு தீப்பொறியானது மன்மதனது உடலை எரித் தது. அதனாலுண்டாகிய புகை கயிலைமலை முழுதும் சூழ்ந்தது.

விட்ட வெம் பகழி யைந்தும் வியத்தது விமலன்மீது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடுஞ்
கட்டழல் போதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது கைலை முற்றுஞ் சூழ்புகை பாவிற் றன்றே.

அரியயனாதி யமரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விடந்தோன்றியதுபோல் புகையுந் தீயும் பரவலுற்றன. கீழ்க்கோபுர வாயிலில் காவல்பூண்டுள்ள நந்திதேவர் அதனைக்கண்டு, மதனன் மடிந்தான் என்று நினைந்து, அங்குள்ளார்களுக்கு உரைப்பார். அறிவின்மிக்கீர்! கண்ணுதற்கடவுள்முன் சென்ற மன்மதனைச் சிவபெருமானது நெற்றிக்கண் சுட்டதென்று நினையாதீர்கள்; அருட்பெருங் கடலாம் அரனாரை மலர்க்கணையால் மயக்குவனென்றெழுந்துவந்த மறச்செயலே அவனைச் சுட்டுவிட்டது; இனி தனது பதியிறந்த தன்மையைக்கண்டு இரதிதேவி அக்கினியில் வீழ்ந்த மலர்மாலைபோல் வாடி, கறைமிடற்றண்ணலைவேண்ட, நம் கருணையங்கடவுள் மன்மதனை மீளவும் எழுப்பித்தருகுவன்; இதனை நீவிர் காண்மின்" என்று கூறினர். இதனைக் கேட்டோர் உலகமுய்யும் பொருட்டாக காமனை எரித்த கருணாகரக்கடவுளது அருட்செயலையுன்னி மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வந்தித்திருந்தனர்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளான முக்கட் பெருமான் முன்னொருகாலத்தில் தனதடியாராகிய மூவரையும் எரிக்காது விடுத்து முப்புரத்தைமட்டும் எரித்ததுபோல், தென்றல் தேருடைய மதனனைமட்டும் எரித்து, அவனுடன் சேர்ந்துவந்த குற்றமில்லாத இரதிதேவியை எரிக்காது விடுத்தனர். மன்மதனுடைய உடல் முழுவதும் வெந்து விபூதிபோலானபின் எம்பெருமான் பண்டுபோல் மோனநிலையில் வீற்றிருந்தனர். எல்லாம் செய்யவல்ல இறைவற்கு இஃதோ ரருமையான கருமமோ?

கணவன் ஒரு கணத்தில் மாய்ந்த தன்மையைக்கண்டு இரதிதேவி அளப்பருந்துன்பமாகிய ஆழ்கடலில் ஆழ்ந்தனள்; கண்ணீர் ஆறுபோல் ஓடிற்று; சரீரம் வியர்த்தது; நாசி நெட்டுயிர்த்தது; ஆவி ஒடுங்கிற்று; இவளும் நாயகனுடனே மடிந்தாளென்ன பார்த்தவர் பதைபதைத்துருக நிலத்தின்மேல் வீழ்ந்து மூர்ச்சித்தனள். நெடும் பொழுதுக்குப்பின் ஒருவாறு உணர்வுவந்தெழுந்து, இரு காங்களையும் வயிற்றின்மீதறைந்து வாய்விட்டுக் கதறுவாளானாள். "திருமகளீன்ற செல்வப்புதல்வரே! உயிர்க்குயிரானவரே! நாராயணாது நற்

றவக்குமாரரே! சம்பராசுரனுடைய உயிரைக்குடித்த தனிப்பெரும் வீரரே! கரும்புவில்லைப்பிடித்த காதலமுடையவரே! அழகிய பவள மலைபோன்ற பரசிவனாரது நெற்றிக்கண்ணால் வெந்து அழிந்தீரே! தேவர்கள் கண்களெல்லாம் இனியாவது தூங்குமோ! அம்புயமேல் வைகும் அயனாரும் அகமகிழ்ந்தனரோ? திரிபுரத்தை நகையா லெரித்த சிவபெருமான்மேல் மலர்க்கணை செலுத்தச் செல்லுதல் முறையல்லவென்று அடியாள் எத்தனைமுறை சொல்லியுங் கேளாமற் போயினீரே! தேவகாரியஞ் செய்வதையே பெரிதாகத் துணிந்தீரே! உமது திருமேனி நீறாக வெந்தழிந்ததே! இதனைக்கண்டும் சகிப்பா ருளரோ! என்னாருயிராகிய தாங்கள் மடிந்தபின் யான் தனித்திருப் பனோ? பரமன் விழி மாறுதலையடையவும், உமது ஆற்றல் அழிந்து போகவும், உடல் நீறாகவும், தேவர்கள் மனம் வருந்தவும், தணியாத பெருந்துன்பத்தீ என்மனத்தில் மூளவும் தாங்கள் எவ்விடம் ஒளித் திருக்கின்றீர்? உருவத்துடன் வாராதொழியினும் அருவாகவேனும் வந்துகூற மாட்டீரோ? என் ஆருயிர்த்துணைவரே! அடியாள் செய்த குற்றம் ஏதாவதுளதோ? எண்தோட்பரமனது திருக்கண்ணால் எரிந்து தாங்கள் இறந்த இப்பழியானது தேவர்களிடத்திற் சென் றதோ? இந்திரன்பாற் சென்றதோ? உம்மையிக்கருமத்தில் ஏவிய நான்முகன்பாற் சென்றதோ? அரனாது மோனநிலையை மாற்றுவ னென்றுவந்த தங்களிடத்தில் சென்றதோ? யாரிடஞ் சென்றதோ? முப்புரமெரித்த முழுமுதற் கடவுளது யோகத்தைத் தவிர்க்குமாறு நின்னை வேண்டிய தேவர்கள் எல்லோருமா இறந்தனர்கள்? என் அருமைக்கணவா? தாங்கள் ஒருவரே யன்றோ உயிர்துறந்தீர். தேவர்கள் தங்களைக் கொல்லாமற் கொன்றனரே; என்னுயிரையுங் கொலை செய்தனரே; பொல்லாதவர்க்கு நன்றிசெய்தல் தம்முயிர்க் கல்லவோ முடிவுநேரும்? யான்முற் பிறவியில் என்ன தீவினைசெய் தேனோ? என்னைப்போன்ற இளமகளிர்க்கு யாது தீங்கு புரிந்தேனோ? விதியை யாரே யறியவல்லார். அன்பிற் குறைவிடமே! என்னை யாண்டருள்புரிவீர். நெருப்புக்கண்ணுடைய நிமலனை நோவதற்கு என்ன ஞாயமுளது?

பொன்செய்தார் முடிகாணேன் அழகொழுகுந் திருமுகத்துப்
பொலிவு காணேன்
மின்செய்பூ ணணிதலவும் புயங்காணேன் அகன் மார்பின்
மேன்மை காணேன்

கோன்செய்பூங் கணைகாணேன் சிலைகாணேன் ஆடல்புரி
கோலங்காணேன்
என்செய்வேன் என்கணவா என்னை யொழித்
தெவ்விடத்தே இருக்கின்றயே.

உயிர்த்துணைவரே! ஆதி நாளையில் அக்கினிசாட்சியாக அரிய யனுதி யமரர்கள் முன்னர் எனது கழுத்தில் மங்கல நாண்பூட்டி என்னை மணஞ்செய்துக் கொண்ட போது "எந்நாளும் உன்னைப் பிரியேன்" என்று சத்தியம் செய்தீரே. அச்சரத வாக்கியத்தை மறந்து என்னைத் தனியே விடுத்து நீங்குதல் தருமமோ? சிவமூர்த்தி யிடஞ் செல்வாயென்று தங்களை யனுப்பியதேவர்கள் இப்போது தங்களை எழுப்ப மாட்டார்களோ? தங்களுடைய தந்தையாகிய நாரா யணரை வல்லமை யுடையவ ரென்று கூறுகின்றனரே? அவருடைய மருமகளாகிய அடியாள் ஓவென்று கதறியழுவதைக்கண்டு ஓடிவந்தா ரில்லை; நித்திரையிலிருக்கின்றார் போலும்? வெந்தழியவேண்டு மென்று தமது தலையில் விதித்திருந்தால் அவர்களையெல்லாம் வெறுப் பதில் என்னபயன்? அருமைக்காதலரே! மறைபயிலும் மலரவனை யும், மகபதியையும், தங்களையீன்ற மாயவனையும், முனிவர்களையும், மற்றுள்ள யாவரையும் தமது மலர்க்கணையால் மயக்கி வெற்றி பெற் றீர்; அதுபோல் ஆலமுண்ட அண்ணலையும் நினைத்து அனலிடைப் பட்ட விட்டிற்பூச்சிபோல் இவ்வாறு அழிவுற்றீர். குளிர்ந்த பனிநீர் விசிறிக்கொண்டு விளையாடி மலர்கொய்து நந்தனவனத்திடைசென்று பூவணைமிசை தென்றல்காற்றுவீச சந்தனச்சேறுடி நாம் இருவரும் கருத்தொருமித்து ஓருடலென ஒருமித்துவாழ்ந்த இன்ப வாழ்வெல் லாம் கனவு கண்டாப்போலாயிற்று. மருமகனென்று அவமதித்த தக்கனது மகத்தையழித்த வள்ளலாகிய மதிமுடிப்பரமனை வெல்லு தற்பொருட்டு தேவர்கள் தங்களை விடுத்தனரே? அன்னவர்களால் வெந்தழிந்தனை. தங்களைப்போல் யானும் துன்பமென்னும் வெந்தழ லால் எரிகின்றேன். தாங்கள் சென்ற இடத்திற்கு யானும் வருகின் றேன்; என்னுயிர்க்குயிரே!" என்று பலவாறு புலம்பிவருந்தினள்.

(தொடரும்.)

ஓம் குஹாயநம :

கிருகஸ்தம்

(மனையறம்)

(27-வது பக்கத் தொடர்ச்சி.)

பிரமசரியத்தை மேற்கூறிய விதிப்படி அனுஷ்டித்து இருபத்தைந்து ஆண்டுக்குமேல் (ஆயுளின் இரண்டாவது பாகத்தில்) அக்கினி சாக்ஷியாக மணமுடித்துக் கொண்ட இல்லாளுடன் இல்லத்திலிருந்து செய்யப்படுவது கிருகஸ்தம். அவ்வாறு மணமுடித்துக்கொள்ளும் கன்னிகை தன்குலத்திற் பிறந்தவளாயும், தன் கோத்திரத்திற் பிறவாதவளாயும், நோய் முதலியன உள்ள பரம்பரையிற் பிறவாதவளாயும், மகள்தங்கை முதலிய முறையிற் சேராதவளாயும், தனக்கு இளையவளாயும் இருத்தல்வேண்டும்.

நற்குலதில் தோன்றிய நல்லொழுக்கமுடைய நங்கையுடன் கருத்தொருமித்து தருமநெறியில் பொருளைச் சம்பாதித்து அப்பொருளை அறவழியில் செலவழித்து ஈசுர்பக்தியுடையவனய் வாழுதல் வேண்டும். கிருகஸ்த தருமம் உயர்ந்ததென்று ஆன்றோர்கள் முடிவு கட்டியுள்ளார்கள். கிரகஸ்தன் தனக்கென்று சமையல் செய்யப்படாது. அதிதிகளுக்கென்றும் தேவஆராதனைக்கென்றும் சமைத்தல் வேண்டும், பசுவை இம்சித்தல் கூடாது. சந்தியாகாலங்களில் உணவருந்தபடாது. பகலிலும் முன்னிரவிலும் பின்னிரவிலும் ஒருபோதும் தூங்கப்படாது. ருதுகாலந் தவிர மற்றைக் காலங்களில் மனைவியை அழைக்கவும்கூடாது. கிருகஸ்தன் சமையல் செய்யாதவர்களான பிரம்சாரிகளுக்கும் சந்யாசிக்கும் அன்னமளிக்கவேண்டும், தன்னுடைய பத்தினியிடம் இன்பத்தை நுகர்ந்து மனத்தை அடக்கி பாபத்தை விலக்கி, அறநெறியில் ஒழுகவேண்டும். உபாத்தியாயன், ஆசாரியன், அம்மான், அதிதி, தன்னை அடுத்தவன், வயோதிகன், இளைஞன், நோயாளி, வைத்தியன், தாயாதி, சம்பந்தி, பந்து, மாதா, பிதா, ஒத்தகோத்திரத்தில் பிறந்தபெண், சகோதரன், புத்திரன், மனைவி, புத்திரி, வேலைக்காரர்கள் இவர்களுடன் கலகஞ்செய்யக்கூடாது. இந்தக் கலகங்களை விட்டால் எல்லாப்பாவங்களாலும் விடப்படுவான்.

இவர்களால் கலகமில்லாமல் ஜயிக்கப்பட்டவன் எல்லாவுலகங்களையும் ஜயிப்பான். மூத்த தமையன் பிதாவுக்கு சமானம். மனைவியும் மகனும் தன்சரீரமே தொண்டர்கள் (வேலைக்காரர்கள்) தன்னுடைய நிழல், இல்வாழ்கையில் நாயகனும் நாயகியும் கருத்து வேறுபாடின்றி நடக்கவேண்டும். மனைவியினுடைய பணிவிடை முதலியவற்றினாலே கணவன் பரதாரத்தை நினையாமலும், கணவனுடைய அன்பு முதலிய வற்றினாலே மனைவி பரபுருஷனை நினையாமலும், பரஸ்பரம் ஒருவரை யொருவர் அன்புபாராட்டி மிகவும் ஒற்றுமையுடையவராக இருக்க வேண்டும் அப்படியுள்ள குடும்பம் மென்மேலுந் தழைத்தோங்கும். கணவன் தன்மனவியை விரும்பாதொழிந்து பரதார கமன முடைய வனாயிருந்தால், மனைவி கற்பொழுக்கத்தை விட்டு பரபுருஷனை இச்சித் தல் கூடும்; அதனால் அக்குலம் தாழ்ந்துவிடும். கணவன் வெளியூர் போகநேரிட்டால் தான்போய் வருமளவும் மனைவிக்கு உணவுக்கு வேண்டிய வற்றை உதவி விட்டுப்போக வேண்டும்.

பிறன்மனைவியையும், வேசையையும், விதவையையும் விரும்பாத வனாகி, தன்மனைவியை விதிக்கப்பட்ட நாள்களில் கலந்து வாழ்பவன் கிருகஸ்தனேயாயினும் அறிஞர்களால் பிரமசாரியாகவே மதிக்கப்படு வான். அவன் இம்மையிலே நோயற்றவனாகவும், திடதேகமுடை யவனாகவும், நீண்டஆயுளும் சற்புத்திரப் பேறுமுடையவனாகவும் பகைவர்கள் வணங்க புகழும் புண்ணியமும் பெற்று இனிதுவாழ்ந்து, மறுமையில் நற்கதியை அடைவான். தன்னையே கதியென்று நம்பி மணந்துகொண்ட பத்தினியை வெறுத்து அவளை உணவு உடை முத லியவைதந்து ஆதரியாமல் அவளுக்குத் துன்பஞ்செய்தவனும் தன் மனைவியை விடுத்து வேசையிடத்தாயினும் பிறன் மனைவியிடத்தாயி னும் போனவனும், தன் மனைவிகொணர்ந்த சீதனப்பொருளை அழித்த வனும், கொலை புலை களவு கள் பொய்முதலிய தீமைகளைப் புரிந்தவனும் அளவில்லாத காலம் நரகிலே கிடந்துழலுவர். பிறவிதோறும் சூலை, க்ஷயம், தொழுநோய், குன்மம், முதலிய பிணிவாய்ப்பட்டு வருந்துவர்.

கிருகஸ்தன் எல்லாவுயிர்களிடத்தும் அன்புடையவனாக இருத் தல்வேண்டும். மோட்சத்தையும் தீர்க்காயுளையும் நோயின்மையையும் விரும்பினோர் புலால்புசிக்கலாகாது. புலால் புசித்தவன், அதற்கு உடன்பட்டவன், ஆயுதங்களைக் கொண்டு உயிர்களைக் கொன்றவன், செய்யென்று சொன்னவன், கொண்டுவந்தவன், கொலைசெய்வதைக் கண்டு மகிழ்ந்தவன், விரைவிலாகட்டுமென்று துரிதப்படுத்தினவன்,

சமைத்தவன் ஆகிய எண்மரும் நரகத்தை யடைவார்கள். ஜீவகாருண்யத்தால் புலாலைவிலக்கினவர் அசுவமேதயாகஞ்செய்த பலனையடைவார்.

பிறஉயிர்களுக்கு ஒருதுன்பஞ்செய்தால் அத்துன்பம் மீளவும் தனக்கே வரும்; ஆதலால் எந்த உயிர்களுக்கும் எவ்வகையான இன்னலும் புரியாது, உயிர்களுக்கு இனிமையே புரிந்து கொண்டு இருத்தல் வேண்டும். மெய்வாய் கண் நாசி செவி என்கிற ஐம்புலன்களையும் தீய வழியிற் செல்லாவண்ணம் அடக்கல்வேண்டும்.

பிறரிடை யின்ன வியற்றிடிற்றமக்குப்
பிழைப்பற வெய்து மென்பதனை
அறிந்தன ரறிஞ ராதலாலுயிர்க
ளனைத்தையுந்தம்முயுர் போல
நெறியினிற் கருத லினியவா மைந்து புலனையு
நெறியலாவழியிற்
பொறியினிற் செலுத்தா தடக்கனன் குணர்ந்த
புலமையோரொழுக் கெனப்புகல்வார்

—காசிகாண்டம்.

சரீரம் வருந்தி யுழைக்கானயின் பொருள்வாாது; பொருளில்லாமல் தருமஞ்செய்ய இயலாது; தருமமில்லாமல் இன்பமெய்தாது; ஆதலால் கிருகஸ்தர் ஒவ்வொருவரும் தத்தம் தொழில்களை ஊக்கமுடன் புரிதல்வேண்டும். இல்வாழ்க்கையிலிருப்போன் தாய், தந்தை, குரு, மனைவி, மகன், விருந்தாளி, வழிபாடுசெய்வோன், அதிதி, ஓமாக்கினி ஆகிய ஒன்பதுபேரையும் தினமுங் காப்பாற்றவேண்டும். இல்லையேல் மனிதரிற் பதரென்று கூறப்படுவான்.

குரவனைத் தாயைத் தந்தையை மனையைக்
குற்றமில் புதல்வனை விருந்தை
இரவுநண் பகலும் வழிபடு வோனை
யதிதியை யெரியினை யீந்து
கருது மோன் பதின்மர் தம்மையு நாளுங்
கருணைகூர்ந் தினிதளித் திடாது
மருவுமில் வாழ்க்கை பூண்டுளோன் றன்னை
மக்களுட் பதடியென் றுரைப்பார்.

—காசிகாண்டம்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்ற பொதுமறையின் பொன்மொழிப்படி கிருகஸ்தன் தனது வீடு தேடிவந்த விருந்தினருக்கு அடியிற்கண்ட ஒன்பது உபசாரங்களை உஞற்றுதல்வேண்டும்.

அவையாவன :—ஆசனத்திலிருந்து எழுந்திருத்தல், நன்குமதித்தல், இனிய மொழிகளைக்கூறுதல், குளிர்ச்சியாகப்பார்த்தல், வாருங்கள் வாருங்கள் என்று கூறுதல், அவர் பேசுமுன் களிப்புண்டாகப் பேசுதல், அருகில் இருத்தல், உபசாரம் மொழிதல், அவர்கள் செல்லுங்கால் பின்னே சென்று வழிவிடுதல்.

விருந்தினனாக வொருவன்வந் தெதிரின்
வியர்த்தல் நன்மொழியினி துரைத்தல்
திருந்துற நோக்கல் வருகென வுரைத்த
லெழுதல்முன் மகிழ்வன செப்பல்
பொருந்துமற் றவன்ற னருகுற இருத்தல்
போமெனிற் பின்செல்வ தாதல்
பரிந்துநன் முகமன் வழங்கலிவ் வொன்பா
னொழுக்கமும் வழிபடும் பண்பே. —காசிகாண்டம்.

தன் இல்லத்தில் வந்தவர்களுக்குக் காலலம்பநீர், ஆசனம், தாகத்திற்கு நீர், தம்மாலியன்ற உணவு, தாம்பூலம், வசித்தற்கு இடம் படுக்கை, விளக்கு, எண்ணெய் ஆகிய ஒன்பது பொருள்களையும் கொடுத்தல்வேண்டும்.

பாதாரகமனஞ்செய்தல், நிலைதவறி நடத்தல், பொய்பேசுதல், கோபங் கொள்ளுதல், பகை கொள்ளுதல், கோள் சொல்லுதல், தகாத வார்த்தைகளைப்பேசுதல், மாயஞ் செய்தல், வஞ்சகம் பேசுதல், ஆகிய ஒன்பது குறற்ங்களையும் நீக்குதல்வேண்டும்.

நீராடுதல், சந்தியாகாலங்களில் (காலை மாலை) கடவுளை வழிபடுதல், பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரங்களை ஜெபித்தல், அக்கினிகாரியம், வேதபாராயணம் (சைவர்கள் தேவார திருவாசக திருப்புகழ் முதலிய தமிழ்வேதங்களையும், வைணவர் நாலாயிர பிரபந்தம் முதலியவைகளையும் பாராயணஞ் செய்தல்), மலர்களால் இறைவனை அர்ச்சித்தல், வைசுவதேவம், (காக்கை முதலியவைகளுக்குப் பலியீதல்) பிதிர்தர்ப்பணம், அதிதி பூசை, ஆகிய ஒன்பது கருமங்களையும் இல்வாழ்வோர் ஒவ்வொருநாளும் செய்தல்வேண்டும்.

(தொடரும்.)

ஓம் குஹாயநம:

புனிதவதியின் நற்போதனை

K. V. சிவசுப்பிரமண்யன், B.A , சிதம்பரம்.

புனிதவதி என்னும் ஒரு நங்கை அழகில் இலக்குமியையும், அறிவில் ஔவையையும், கல்வியில் கலைமகளையும், ஈசுரபக்தியில் புனிதவதியாரையும், கற்பில் அருந்ததியையும், சைவசமயாபிமானத்தில் மங்கையர்க்கரசியாரையும் ஒத்தவள். மயிலின் சாயலும், குயிலின் மொழியும், அன்னநடையும் அவளுக்கு ஈடாகா. அவள் ஒரு நாள் வைகறையில் துயிலெழுந்து அவசிய கருமம்முடித்து பல் முகம் கை கால் முதலியன சுத்தம் செய்து நெற்றியில் விபூதி தரித்து வீட்டின் முற்புறத்திலும் முற்றத்திலும் சுற்றுப்புறங்களிலும் சாணந் தெளித்து அலகிட்டு வீட்டிலுள்ள பாத்திரங்களை சுத்திசெய்து கவிழ்த்து வைத்துவிட்டு நதியில்சென்று நன்னீராடி இறைவனை வழிபட்டு வீட்டை யடைந்தனள்.

பின்பு காலைச் சிற்றுண்டிமுடித்து அகத்திலுள்ளார்க்கு அன்புடனளித்து அவரவர் தத்தங் கருமங்களுக்குச் சென்றதன்மேல் அயல் வீட்டிலுள்ள தன் தோழியாகிய கமலவல்லியை அவசரமாகக்காணும் பொருட்டு சென்றனள். அப்போது பொழுது புலர்ந்து மூன்றே முக்கால் நாழிகை அதாவது ஏழரைமணியாயிற்று. கமலவல்லியின் வீட்டுத் தெருக்கதவு திறக்கப்பட்டிருந்தது; அறைக்கதவு தாளிடப் பட்டிருந்தது; அதனால் அப்பெண்மணி இங்கு ஒருவரும் இன்னும் நித்திரையினின்றும் எழவில்லைபோலும் என எண்ணி கூடத்திலிருந்த ஒரு நாற்காலியில் வீற்றிருந்து அங்கு மாட்டியிருந்த அழகிய படங்களைப்பார்த்து மகிழ்ந்து மகிழ்ந்து கமலவல்லியின் வருகைக்காக காத்திருந்தாள். அப்படங்களின் நடுவில், மாதிருக்கும்பாதியனும் விடையேறூர்ந்தவனும், நீலகண்டனும், கங்கை வேணியனும் உள்ள பரமேசுரனது உருவிலும் திருவிலும் மிக்க படமொன்று கண்ணினைக் கவர்ந்து ஒளிர்தல்கண்டு உள்ளத்திற் கிளர்ந்தெழுந்த உவகையினால் திருத்தாண்டகங்கள் சிலவற்றை ஓதிக்கொண்டிருந்தனள். கமல

வல்லியின் செவியிலே அவ்வின்னிசை புகுதலும் அருண்டு புரண்டு எழுந்து கட்டிலைவிட்டிறங்கி இடையிலிருந்த துணியை சுருட்டிவாரிக்கொண்டு அவிழ்ந்த மயிரும் சோம்பிய முகமும் மூடிமூடிவிழிக்கும் பார்வையும் உள்ளவளாய் மெய் தளர்ந்து ஆடி அசைந்துகொண்டு மெல்ல மெல்ல வந்து கதவின்தாளை நீக்கி கூடத்தில்வந்து புனிதவதியை நோக்கி சோம்பலோடு எதிரிலிருந்த ஒரு நாற்காலியிலமர்ந்தனள். இருந்து அசதி நீங்காமையின் உடம்பை நெளித்து முறித்துத் திமிர்வாங்கி கொட்டாவி விட்டுக்கொண்டு "நீ எப்பம்மா வந்தாய்? நேரமாயிற்றோ" என்றாள். புனிதவதி புன்முறுவல்பூத்து தன்பாடலை முடித்து "நல்லது! நீ போய் அவசிய கருமம்முடித்து முகங்கழுவி வா, பின்னர் பேசுவோம்" என்றாள். அவளது புன்முறுவலும் சொல்லும் நாணத்தையுண்டாக்கினமையின் விரைந்துசென்று கை காலலம்பித் துடைத்துக்கொண்டு அடுக்களைவாயிலிற்சென்று வேலையாள் கொடுத்த காப்பிநீர் பருகி புனிதவதியின் அருகில் வந்துட்கார்ந்தாள். அதுகண்ட புனிதவதி சிறுநகைசெய்தனள். இருவரும் உடலும் உயிரும் போன்ற நண்பர்களாகலின் கோபம் எற்படவில்லை. பின் கமலவல்லி புனிதவதியைப் பார்த்து "தோழீ! நான் நித்திரை விட்டு எழுந்துவந்தபொழுதும் இப்பொழுதும் என்னைப்பார்த்து நீ நகைத்த காரணமென்ன?" என்றாள். புனிதவதி சகியே! நீ வந்த கோலத்தையும் உன் பழக்கத்தையும் பார்க்க எனக்குச் சிரிப்புண்டாகியது" என்றாள். அதுபற்றி அவர்களிடையே சில சம்பாஷணைகள் நிகழ்ந்தன.

கமலவல்லி: என் கோலம் எப்படி இருந்தது? என் பழக்கத்தில் என்ன குறையிருக்கிறது? என் நன்மையின்பொருட்டுக் கூறுவாயாக.

புனிதவதி: 7½ மணியாகியும் நித்திரைவிட்டெழாதிருந்து பின் என் குரல்கேட்டெழுந்ததும், அலங்கோலமாய் வெளியில் வந்ததும் பார்க்க முதலில் சிரிப்புண்டாயிற்று; இப்போது மற்றுமுள்ள உன் பழக்கவழக்கங்களைக்காணச் சிரிப்புண்டாக்கியது

கமலவல்லி: என் கணவர் ஊரிலில்லாமையால் கவலையற்று அயர்ந்து நித்திரையிலாழ்ந்துவிட்டேன்; அல்லாமலும் இந்த நேரத்தில்தான் எப்போதும் நான் எழுவது வழக்கம்; எழுந்ததும் உன் குரல் கேட்டபடியால் அவசரமாக அலங்கோலத்தோடு வந்துவிட்டேன்; இதையன்றி யான் இப்போது இழைத்த குற்றம் என்ன?

புனித்வதி : நல்லது நெற்றியில் விபூதியிட்டுவா ; பின்னர் கூறுகிறேன்.

கமலவல்லி : ஆமாம் மறந்துவிட்டேன்; கிருஸ்தவர் விடுதிப் பள்ளிக்கூடத்தில் யான் இளமையிற் கல்விபயின்றேன்; அதனல் அங்கே பழகிய பழக்கம் இன்னும் என்னை விடவில்லை. (எனக் கூறிக்கொண்டே விபூதி எடுத்துத்தரித்தனள்.)

புனிதவதி : இப்போது உன் முகம் எங்ஙனம் பொலிவுற்றிருக்கிறது, கண்ணாடியிற் காண், "நீரில்லா நெற்றிபாழ்" என்றும் "பூதியணியார் முகம் புறங்காடு" என்றும் கூறப்பட்டிருக்கின்றதே, நீ இவற்றை யோதி உணர்ந்ததில்லையா ?

கமல : கிறிஸ்தவப் பாதிரிமார் பள்ளியில் இந்தப் பாடமும் எனக்குப் படிப்பித்தார்களா ? நீ நல்வினை செய்தவள், சைவப்பள்ளியில் படித்து ஒழுங்குமுறைகள் யாவும் அறிந்துகொண்டாய்.

புனித : தோழீ ! இவ்வளவு நேரம் தூங்கினதும் வைகறையில் செய்யவேண்டு மவற்றைச் செய்யாது விடுத்ததும் பிழையல்லவா ?

கமல : என்ன பிழை ? அதனல் நஷ்டமென்ன ?

புனித : எங்கள் சீலத்திற்கு மாறு அல்லவா ?

கமல : நன்று, நன்று ! உனக்கும் இந்தப் பேய்த்தனம் இருக்கிறதா ? நமது முன்னோர் இப்படி அநேக காரியங்களை அறிவீனமாய் எழுதிவைத்திருக்கிறார்கள் என்று எங்கள் பள்ளிக்கூடத்து ஆசிரியை சொல்ல அறிந்திருக்கிறேன். பாதிரியார் சொல்லவும் கேட்டிருக்கிறேன். இதனல் ஒரு பிரயோஜனமுமில்லை. அவரவர் சுகத்தை அவரவர் கவனிக்கவேண்டும்.

புனித : ஓகோ ! உன் அறிவு இப்படி திருந்தியிருக்கிறதா ? கிறிஸ்தவர் பள்ளியில் படிப்பதில் இத்துணை தீங்குளதென்பதை இன்றுதான் அறிகிறேன்.

கமல : நல்லது, சைவாசாரங்களில் என்ன பயன் இருக்கிறது என்பதைச் சொல் பார்ப்போம். அவை வெறும் எட்டுச்சுரைக்காய் தானே.

புனிதவதி : சொல்லுகிறேன், கவனமாய்க் கேள்: சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குமுன் எழவேண்டும், சூரியன் கண்ணுக்குத் தெரிய ஒருமணி நேரத்திற்குமுன் சூரியகிரணமாகிய அதன் வெப்பம் பூமிக்கு வருகிறது. அதனல் பூமியில் ஒரு மாறுதல் உண்டாகிறது.

அப்போதுதான் நமது உடம்பிலுள்ள வாத பித்த சிலேட்டுமங்கள் மாறுபாடடையும். அந்த நேரத்தில் படுத்திருந்தால் வெப்பம் தலைக்கேறி பித்தமேற்படும். அதிலிருந்து பல நோய்கள் விளையும், ஆதலால் அப்போது சயனித்திருக்கலாகாது. 5 மணிக்குமுன்பே நமது உடற்கருவிகள் தொழில் செய்யத் தொடங்கிவிடவேண்டும். அது மட்டுமன்று, ஐந்துமணியளவில் நீராடவேண்டும். ஏனெனில் அப்போதுதான் தண்ணீரின் சொந்தகுணம் நீரிலிருக்கும். அதற்குமேல் சூரியவெப்பம் நீரின் குணத்தைமாற்றிவிடும். மாறியபின் நீராடுவதால் நன்மை இல்லை. வைகறையில் குளிக்காவிடில் சூரியன்முதலிய கிரகங்களினின்றும் பூமியிலிருந்தும் உடம்பினுட்செல்லும் பல சுத்த அணுக்கள் உட்புகும்போது உடம்பின் அழுக்குகளோடு சுவறி அசுத்தமடைந்து செல்ல நேரும். அது நோய்க்கு ஏதுவாமாகையால் அவ்வணுக்கள் தோன்றுமுன்னரே உடலை அழுக்குநீக்கி சுத்திசெய்ய வேண்டும்.

கமல : எழுந்தஉடனே கடவுளைவணங்குவது எதற்காக?

புனித . மனமும் புலனும் தம் செயலற்று ஒடுங்கியுள்ள நேரம் அதுவேயாம். அதனால் கடவுளை வணங்க அது நல்ல நேரம். இது ஆன்மசுகத்தின்பொருட்டு. மனம் ஆனந்தமாய்க் கடவுளை நினைத்தலால் இருதயம் குளிரும். இரத்த ஓட்டம் நன்கு பரவும்.

கமல : வைகறைத்துயிலெழுந்ததும் சாணந்தெளித்து மெழுகிறதினால் என்ன பிரயோசனம்?

புனித : தோழீ ! வீட்டின் முற்றத்திலும் பக்கங்களிலும் தினசரி உண்டாகும் அசுத்தங்களும் இரவில் அதன் தொடர்பாக வந்து குவிந்த கெட்ட அணுக்களும் நிறைந்திருப்பதால் அதைப் போக்க சாணந்தெளித்தலவசியம். வீட்டின் உட்புறத்தில் நாம் வாசம் செய்வதாலேற்படும் அழுக்கை நீக்க உள்ளும் மெழுகவேண்டும். இன்றேல் அவ்வசுத்த அணுக்கள் நமக்கு நோயை விளைக்கும்.

கமல : சாணம் அவ்வசுத்த அணுக்களை நீக்கிவிடவல்லதா?

புனித : ஆம் நீக்கிவிடும். சில சமயம் பிள்ளைகள் இரவில் முற்றத்தில் மலசலங்கழித்தால் ஏற்படும் துர்நாற்றத்தை சாணந்தெளிப்பதால் போக்கிவிடுகிறோமல்லவா? மற்றும் வைத்தியர்கள் நேர்வாளம் எனும் நஞ்சு விதையை மருந்துப்பொருளாக்கவேண்டிகலாத்த சாணிப்பாலில் ஊறவைத்து அதன் நச்சுத்தன்மையை நீக்கு

தலை நீ கேள்வியுற்றிருப்பாய். சாணம் நச்சுத்தன்மையைப்போக்கு வதில் இணையற்றது என்பதைக்கண்டு மேல்நாட்டார்கூட அதை இப் போது உபயோகிக்க ஆரம்பித்துவிட்டனர். சாணம் அசுத்தத்தை நீக்கும் சக்தி வாய்ந்ததாகையால் நம்முன்னோர்கள் அவ்வழக்கத்தை கைக்கொண்டனர். சாணம் அழுக்கை நீக்குவதால்தான் வண்ணான் கோடிப்புடவைக்கு சாணிப்பாலேற்றுகிறான். ஒரு வீட்டில் இறந்த பிரேதத்தை எடுத்த பின்னர் தரையிலும் பண்டபதார்த்தங்களிலும் சுவர்களிலும் படுக்கையிலும் கெட்ட அணுக்கள் வாயுவோடு சம்பந் தப்பட்டிருக்குமாகையால் சாணங் கரைத்தூற்றி சுத்தஞ்செய்யும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. போசனம் செய்யப்புகுமுன் இலை போடுமிடத்தில் அசுத்த அணுக்கள் இருக்குமாகையால் முன்னே வட்டமாக மெழுகுவதும் அந்நோக்கம்பற்றியே, போசனமுடித்த பின் எச்சிலினாலாய குற்றங்களைக் களையவேண்டி மெழுகுவர். இன் னும் சொல்வேன் கேள் : சிறுபிள்ளைகளுக்கு கையில் சொரி சிறங்கு வந்தால் கரைத்த சாணத்தில் கையை வைத்திருக்கச்செய்கிறோம்; அதனால் கிருமிகள் கொல்லப்படுகின்றன.

கமல : ஆகா ! மிக நன்றாயிருக்கிறது ! இதுவரை எனக்கு இங்ஙனம் எடுத்துக்கூறுவார் ஒருவருமில்லை; இன்று கேட்க கேட்க ஆனந்தமா யிருக்கிறது. இனி தினந்தோறும் விடியற்காலையில் சாணந்தெளிக்கும் வழக்கத்தை மேற்கொள்ளுகிறேன்.

புனித : வீட்டையும் முற்றத்தையும் பாத்திரங்களையும் சுத்தி செய்துவிட்டு குளித்தல்வேண்டும். நீராடுஞ் சமயத்தில் உடம்பில் அழுக்கு நீங்கவும், வாசனை ஏறவும் சோப்பு பூசுதல் உசிதமல்ல. சோப்பு மிகச்சூடானது; சில அசுத்தப்பொருள்களும் அதில் சேரு கின்றன. மற்றும் சோப்புக்கட்டி ஒன்றுக்கு கால் ரூபாய் அரை ரூபாய் விலைகொடுத்து வாங்கி அன்னியநாட்டிற்கு நாம் பிழைப்புண் டாக்குவதும் நம் பொருளை வீண்செலவு செய்வதும் புத்தியன்று.

கமல : அப்படியாயின் வேறு என்ன தேய்த்து நீராடலாம் ?

புனித : நம்முன்னோர் நமக்கென தேர்ந்தெடுத்த வாசனைப் பொடியை உபயோகித்தல் நலம். அதில் பயற்றம்மா, கஸ்தூரிமஞ் சள், கோரைக்கிழங்கு, கார்கோலரிசி, விலாமிச்சவேர், ஆவாரை இலை, முதலிய குளிர்ச்சியும், வாசனையும், அழுக்கெடுக்குந் தன்மை யும், வாய்ந்த சாமான்கள் சேர்த்து அந்த வாசனைப்பொடியை தயா

ரிப்பார்கள். இது சவர்க்காரத்தைப்போல் கெடுதலும் அசுத்தமும் உள்ளதல்ல; செலவும் குறைவு; வாசனையும் குளிர்ச்சியும் தரும். வட இந்தியாவிலுள்ள பெண்கள் பலரும் இன்றும் இப்பொடியையே உபயோகித்து வருகிறார்கள். இன்று கூட அப்பொடியைத்தான் தேய்த்துக்கொண்டேன். என்மேல் கமழும் வாசனையைப் பார். நீயும் இதை உபயோகிப்பாயாயின் அது நலமே; மற்றும் சவர்க்காரம் தோலின்மேலுள்ள இயற்கையான ஒருவகை நெய்ப்பசையை நீக்கி நாளடைவில் தோலைச் சுருங்கச்செய்துவிடுகிறது.

கமல: இதைப்பற்றி நான் இதுகாறும் அறியேன். இனி அப்படியே செய்வேன்.

புனித: இக்காலத்தில் அநேக மங்கையர் மஞ்சள் அணிதலை விட்டுவிட்டனர்; அது அறிவீனமே.

கமல: நானும் மஞ்சள் அணிவதில்லை. சோப்பு தேய்த்த முகத்தில் மஞ்சள் பூசுவது கெடுதலென்று விட்டுவிட்டேன். மஞ்சளணிவதிலுள்ள நயமென்ன? அணியாவிடில் வரும் தீங்கு என்ன?

புனித: சுமங்கிலிகள் மஞ்சள் பூசுவது மெத்த அவசியம். அதனால் நாயகனது ஆயுள் பெருகும்; இன்றேல் ஆயுள் குறையும்.

கமல: நன்று நன்று! கணவனுக்கு ஆயுள்கூடுவதும் குறைவதும் மஞ்சளிலா இருக்கிறது! இது ஒரு குருட்டு நம்பிக்கை.

புனித: அப்படியல்ல; நம் தேகமும் ஆடவர்தேகமும் வித்தியாசமுள்ளவை. நமது சரீரம் சூடுள்ளதாயும் நாம் விடும் சுவாசம் நச்சுள்ளதாயும் அசுத்தமாயும் இருக்கிறது; ஆதலால் பெண்கள் நாயகரோடு சயனித்திருக்குங்கால் அவர்களது சுவாசம் நாயகன் மேற்பட்டால் நாயகன் நாசிவழியாய்ச்சென்று சுவாசப்பையில் தங்கி கேடு செய்யும். சுவாசத்தில் கேடுண்டாகவே ஆயுள் குறையும். இப்படிப் பலநாள் நடந்தால் முடிவில் மாணமும் ஏற்படும். மஞ்சளை பெண்கள் முகத்திலணிந்தால் சுவாசத்தின் நச்சுத்தன்மையை நீக்கும். அதுபற்றியே சுமங்கிலிகள் ஒரு நாளேனும் தவறாது மஞ்சள் பூசுவர். மஞ்சளின் சிறந்த குணத்தைக்கண்டுதான் பெரியோர்கள் அதை ஒரு மங்கலப்பொருளாக எடுத்துக்கொண்டார்கள்.

கமல: அப்படியா! அறிவிற் சிறந்த முன்னோர்கள் இதைக் கைக்கொண்டனர். இக்காலத்தில என்போன்ற சிறுமிகளுக்கு ஒன்றுந்தெரியாமையால் மூடத்தனமாய் மஞ்சட்பூச்சை விட்டுவிட

நேர்ந்தது. இப்போது அதன் அருமையை அறிந்தேன். மஞ்சட் பூச்சினால் முகத்தின் தோல் சுருங்கிவிடும் என்கின்றனரே ? அதனால் முகத்தின் அழகு குறைந்துவிடுமென்று சில இளம் பெண்கள் பூசுவதில்லை, அதன் உண்மை என்ன ?

புனித: அது தவறு. முகத்தின் அழகு யார்பொருட்டு ? நாயகன் கண்டு மகிழும் பொருட்டன்றோ? நம்மால் நாயகனது ஆயுள் குறையுமானால் பின்பு இந்த அழகைப் பத்திரப்படுத்திவைத்திருப்பது யார் பொருட்டு? இது அறியாமையான செயல், மஞ்சளில் அத்துர்க்குணமுமில்லை. அதனால் முகப்பொலிவும் நீங்குவதில்லை. அதோ உன் கணவர் சுந்தரனோடு வருகிறார், நான் போய் வருகிறேன்.

கமல: போய்வா, பின்னர் பேசலாம்.

உ

ஓம் குஹாய நம:

என் பிரார்த்தனை

(K. V. லோகநாதன் அவர்கள், பெங்களூர்.)

அருணகிரிகளோதிய [1]பதினாறாயிரத்தை, கந்தனுக்கிசைந்த கற்பகத்தை, மூன் தானவர்க்கும் வானவர்க்கும் நரை திரை மூப்பு பிணி நீக்க கடற்கடைந்து [2]கத்தனளித்ததைப்போல்—இக் கலியுகத்தில் [3]எக்காலத்தவரும் ஜனன மரணமெனும் பிரவித்துன்பத்தின்று வகல நம் கிருபானந்தவாரிதிகள் தம் [4]மூவலியினால் திருப்புகழை அமுதமாக்கிய பேருதவியினை [5]பூமியினும் பெரிதெனக்கொள்வோம். [6]திருப்புகழமிர்தமெனும் செஞ்சொல் லமுத களஞ்சியம் பாரினில் பல்லாண்டு பலுகி வாழி.

1 திருப்புகழ் பதினாறாயிரமென்பர்.

2 ஸ்ரீவிஷ்ணு.

3 எவ்வயதினரும்.

4 ஞானம், கா, கரம் எனும் மூவலிகளாம்.

5 மக்களுக்கு சாவா மருந்தைப்போலருளிய பெருந்தகையா ராகையால் புவிதாயினும் சிறந்துகூறப்பட்டது.

6 தேவாமுதம் குறையுந் தன்மையது; திருப்புகழமிர்தம் குறைவுபடாதது.

அகாமுதலவ்வெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு—உலகதோற்றத்திற்கு காரணமாயும், ஆதியாயும், சூக்குமமாயும் நின்ற பரப்பிரம்ம சச்சிதானந்த சொரூபமாயுள்ள கடவுள் ஒருவன் உளன் எனும் ஞான தத்துவங்களை உசிதப்படுத்துவது— ... "திருப்புகழமிர்தம் !"

ஆசையை யொழித்து அவனியின் பொய் பாசத்தையெலாமழித்து அறநெறியை கைபிடித்தொழுகச் செய்வது— "திருப்புகழமிர்தம் !"

இகபர சுகமளிக்கும் தாணிப்புகழ் இனியத் தமிழ் வேத பொக்கிஷம்— ... ... "திருப்புகழமிர்தம் !".

ஈ எரும்பு ஈர கவுள்ள எண்பத்துநான்கு கோடிகளையு மீன்றவப்பனும் எம்பிரான் சமராபுரி ஈசனின் ஒப்பற்ற பெருமை புகலும்— ... ... "திருப்புகழமிர்தம் !".

உத்தமிகளின் கற்பிலக்கண உயர்குண லக்ஷணங்களை கைங்கர்யப் படுத்தவல்ல கற்பகத்தரு— ... "திருப்புகழமிர்தம் !".

ஊணுடுத்து ஓயாமல் கங்குல்பகலும் வீண் குதர்க்கம் பேசி அலைந்துதிரிந்தலை குலைத்து குகனை வழிபடச்செய்வது--"திருப்புகழமிர்தம்!".

எனது நான் எனும் அனுபவமலாதிகளின் வேர்களைந்தெரிந்து தம்பிரான் திருவடித் தருவது— ... "திருப்புகழமிர்தம் !".

ஏகாக்கிரசித்தமே மகிபனைக்காணும் மூலமும் முரடற்ற மார்க்கமுமென முரசறைவிப்பது— ... "திருப்புகழமிர்தம் !".

ஐ கள்வர் புரியும் வஞ்சகத்தை செங்கீர்குடிலை நெஞ்சகத்தே யுணர்த்தி பாவங்களைப் பட்டுருவப்பண்ணி புண்ணியர் தருவது-- ... ... "திருப்புகழமிர்தம் !"

ஒருவனே நல்லார்க்கும் பொல்லார்க்கும் அருளமுதந்தரும் அருமை தெய்வம், கலியுக மெய்தெய்வம் ! எமையாண்டுகொண்ட அறுமுகத் தெய்வத்தின்— ... ... "திருப்புகழமிர்தம் !".

ஓத ஓத மெஞ்ஞான ஊற்றெடுத்து உணர்வு கலந்து ஒளி கலந்திடும் உண்மை ஞான தீபிகை— ... "திருப்புகழமிர்தம் !'.

ஔவியம், புலை, கள், களவு, காமமெனும் பஞ்சபாதகங்களைத் தவிர்த்து, அயிலும் அயிலொடு மயிலும், மயிலொடு அழகும் பொருந்திய ஆண்டவனின் புகழ் பாடுவிக்கும்— ... "திருப்புகழமிர்தம் !".

ஃ ரங்களை கற்றிடவும் கற்றதனை நிற்றிடவும் நின்றபின் கதிமருத்துதவிடும் கர்த்தனின்— ... "திருப்புகழமிர்தம் !"

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர். 2 Vol. 2	ஈஸ்வர வருஷ ஆவணிமீ 1உ ஆகஸ்டு—1937	இதழ் 5 No. 5

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

தோலொடு மூடிய கூரையை நம்பிப்
 பாவையர் தோதக லீலைநி ரம்பிச்
 சூழ்பொருள் தேடிட வோடி வருந்தி புதிதான

தூம்தொடு நான்மணி மாலைப்ர பந்த
 கோவை யுலாமடல் கூறிய முந்தித்
 தோமுறு காளையர் வாசல்தோ றும்புக் கலமாருங்

காலனை வீணனை நீதிகெ டும்போய்க்
 கோளனை மானமி லாவழி நெஞ்சக்
 காதக லோபவ்ரு தாவனை நிந்தைப் புலையேனைக்

காரண காரிய லோகப்ர பஞ்சச்
 சோகமே லாமற வாழ்வற நம்பிற்
 காசறு வாரிமெய்ஞ் ஞானத வஞ்சற் றருளாதோ

பாலன மீதும ஞான்முக செம்பொற்
பாலனை மோதப ராதன பண்டப்
பாரிய மாறுதி தோள்மிசை கொண்டுற் றமராடிப்
பாவியி ராவண ஞர்தலை சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக் கினியோனே
சீலமு லாவிய நாரதர் வந்துற்
றீதவள் வாழ்புன மாமென முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரிதோய்வாய்
சேலொடு வாளைவ ரால்கள்கி ளம்பித்
தாறுகள் பூகம ளாவிய இன்பச்
சீரலை வாய்நகர் மேவிய கந்தப் பெருமாளே.

பதவுரை.

பால் அன மீதுமன் - பால்போன்ற வெண்ணிறமுடைய அன்ன வாகனத்தின் மீது நிலைபெற்றவனும், *நான்முக* - நான்கு முகங்களை யுடையவனும், *செம்பொன் பாலனை* - சிவந்த இலக்குமிதேவியின் குமாரனுமாகிய பிரமதேவனை, *மோது அபராதன* - (பிரணவப் பொருள் வினவி அது கூறாது விழித்தமையின்) கரங்களால் மோதி தண்டனையைப் புரிந்தவரே!, *பண்டு* - முன்னாளில், *அ பாரிய மாருதி தோள் மிசை கொண்டு உற்று* - பருத்த வடிவுடைய அந்த அநுமனது தோள்மிசை யூர்ந்து (இலங்கையை) அடைந்து, *அமர் ஆடி* - போர் புரிந்து, *பாவி இராவணனர் தலை சிந்தி* - கொடும் பாவியாகிய இராவணனது தலைகள் பத்தும் கீழே யறுத்து வீழ்த்தி, *சீரிய வீடணர் வாழ்வுற* - சிறப்புடைய விபீஷணர் இலங்கைக்கு அரசனாகி இன்புற்று வாழ்வுறச்செய்து, *மன்றல் பாவையர் தோள் புணர்* - வாசனை தங்கிய சீதை யென்னும் திருமகள் ஜெயத்தால் வந்த ஜெய மகளென்னும் இருமகளிரது புயத்திற் சேர்ந்த, *மாதுலர் சிந்தைக்கு இனியோனே* - திருமாமனாகிய நாராயணமூர்த்தியினது உள்ளத்திற்கு இனிமையான மருகோனே!, *சீலம் உலாவிய நாரதர்* - நல்லொழுக்கத்திற் சிறந்த நாரதமுனிவர், *வந்து உற்று* - தணிகைமாமலையில் வந்தடைந்து (முருகவேளை அழைத்தேகி), *ஈது அவள் வாழ்புன மாம் என* - வள்ளியம்மையார் வாழ்கின்ற தினைப்புனம் இதுதான் என்று காட்ட, *முந்தி* - முன்னாளில், *தே மொழி* - தேன்போன்ற

இனிய மொழியை யுடையவரும், பாளித - சந்தனக்குழம்பு களை யணிந்தவரும், கோமள - இளமை யுடையவரும், இன்பகிரி தோய்வாய் - இன்பமலை போன்றவருமாகிய வள்ளிநாயகியைப் பொருந்தியவரே! சேலொடு வாளை வரால்கள் கிளம்பி - சேற்கெண்டைகளும் வாளைமீன்களும் வரால்மீன்களுந் துள்ளியெழுந்து, தாறு கொள் பூகம் அளாவிய - குலைகளையுடைய கமுகுமரங்களில் விளையாடும், இன்ப - இன்பத்தையுடைய, சீரலைவாய் நகர் - திருச்சீரலைவாய் என்னும் செந்திலம்பதியில், மேவிய - விரும்பியுறைகின்ற, கந்த - கந்தமூர்த்தியே!, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே!, தோலொடு மூடிய கூறையை - தோலாலே மூடிவைத்துள்ள சிறு குடிலை (உடம்பை), நம்பி - நிலைத்திருக்குமென நம்பி, பாவையர் - பெண்களது, தோதக லீலை நிரம்பி - வஞ்சகத்தையுடைய காமலீலை மிகுந்து, சூழ்பொருள் தேடிட - நிலையின்றி சுற்றுகின்ற செல்வத்தை ஈட்டுதற்பொருட்டு, ஓடி வருந்தி - பல திசைகளிலும் ஓடி மிகவும் வருத்தமுற்று, புதிதான - நூதனமான, தூது ஒடு நான்மணிமாலை ப்ரபந்த கோவை உலா மடல் கூறி - தூது நான்மணிமாலை கோவை உலா மடல் முதலிய பிரபந்தங்களை அந்நார்கள்மீது பாடி, அழுந்தி - அந்நா துதியிலேயே அழுந்திய மனத்தையுடையவனாகி, தோம்உறு காளையர் - குற்றம் நிறைந்த ஆடவருடைய, வாசல் தொறும் புக்கு - வீடுகள்தோறும் புகுந்து, அலமாரும் - அலைந்து திரியும், காலனை - இயமதூதவனுக்கு நிகரானவனை, வீணனை - வீணே நாள்போக்குபவனை, நீதி கெடும் பொய் கோளனை - நீதிநெறிகெட்ட பொய்யே பேசும் தன்மையுடைய கோள் சொல்லுபவனை, மானம் இலாவழி - பெருமையில்லாத தீயவழியிற் செல்லும், நெஞ்ச - உள்ளத்தை யுடைய, காதக - கொலைத்தன்மையும், லோப - உலோபத்தன்மையு முடைய வ்ருதாவனை - விருதாவாகக் காலங்கழிப்பவனை, நிந்தை புலையனை - உலகத்தோர்கள் நிந்தித்தற்குரிய புலைத்தொழி லுடையவனை, காரண காரிய லோக ப்ரபஞ்ச - காரண காரியங்களால் வந்த உலக வாழ்க்கையின், சோகம் எலாம் அற - துன்பங்கள் முழுவதும் அறவே நீங்கப்பெற்று, வாழ்வு உற - முத்திப்பேற்றை யடைந்து இன்ப வாழ்வையடைய, நம்பில் - விரும்பினல், காசு அற - குற்ற மற்ற, வாரி - கடல்போன்ற, மெய்ஞான தவம் - உண்மை ஞானத் தோடு கூடிய தவநிலையை, சற்று அருளாதோ - (அடியேனுக்கு நினது திருவருள்) சிறிது அருள்புரியாதோ?

பொழிப்புரை.

பால்போன்ற வெண்ணிறமுடைய அன்னவாகனத்தின் மீது நிலைபெற்றுள்ளவனும், நான்கு முகங்களை யுடையவனும், சிவந்த இலக்குமியின் குமாரனுமாகிய பிரமதேவனைப் பிரணவார்த்தங்கேட்டு அதனை யுரைக்காது விழித்தமையால் கரங்களால் மோதி தண்டனை புரிந்தவரே! முன்னாளில் பெரிய வடிவத்தோடு நின்ற அந்த அநும னது தோளின்மிசை யூர்ந்துவந்து போர்புரிந்து, பாவத்தொழிலை மேற்கொண்ட இராவணனது தலைகள் பத்தும் சிந்துமாறு அறுத்துத் தள்ளி, நல்லொழுக்கமுடைய விபீஷணர் (இலங்காபுரி யாசாட்சியைப் பெற்று) இன்புற்று வாழுமாறு, மணம் பொருந்திய சீதையாகிய திருமகள், ஜெயத்தாலுண்டாகிய ஜெயலட்சுமி ஆகிய இருபாவையரது தோள் புணர்ந்த திருமாமனாகிய நாராயணமூர்த்தியினது சிந்தைக் கினிய மருகரே! ஒழுக்கத்தால் மிக்க நாரதமுனிவர் (தணிகைமாமலை) வந்தடைந்து, வள்ளிநாயகியார் வாழ்கின்ற தினைப்புனம் இதுதான் என்று காட்ட, முன்னாளில் தேன்போன்ற மதுரமொழியுடையவ ரும் சந்தனமணிபவரும் இளமையுடையவரும் இன்பமலையனையவரு மாகிய வள்ளிபிராட்டியாரை அணைபவரே! சேல்வாளை வரால் முத லிய மீன்கள் நீர்ப்பெருக்கால் துள்ளியெழுந்து குலைகளோடு கூடி கமுகுகளின்மேல் தாவி விளையாடும் இன்பத்தை நல்கும் திருச்செந்தி லம்பதியில் விரும்பிவாழுகின்ற கந்தக்கடவுளே! பெருமையின் மிக்கவரே! தோலால்மூடிய கூரைவீட்டிற்கு நிகராகிய இவ்வுடம்பை நிலைத்திருக்குமென நம்பி, பெண்களது வஞ்சனையோடுகூடிய காம லீலையில் மிகவும் ஈடுபட்டு நிலையின்றி சுற்றுகின்ற பொருளைத்தேடும் பொருட்டு திசைகள்தோறும் ஓடி வருத்தமுற்று நூதனமான தூது நான்மணிமாலை கோவை உலா மடல் முதலிய பிரபந்தங்களை நரர்கள் மீது, அந்நாதுதியிலேயே அழுந்தி குற்றமுடைய மனிதர்களது வீடு கள்தோறும் சென்று அலைந்து சுழலுகின்ற காலனுக்கு நிகரானவனை வீண்பொழுது போக்குபவனை, நீதிநெறியற்ற பொய்மொழியுடன் கோள்சொல்லுபவனை, பெருமையில்லாத் தீநெறியில் நின்ற நெஞ்சத் தையுடைய கொலை உலோபமுதலிய தீயகுணமிக்க விருதாவனை, எல் லோராலும் நிந்திக்கப்படுகின்ற புலையனை, காரண காரிய உலக வாழ் வாலாகிய துன்பங்களெல்லாம் அறவே நீங்கப்பெற்று இன்ப வாழ் வுறுமாறு விரும்பினால் குற்றமற்ற கடல்போன்ற மெய்யுணர்வுடன் கூடிய தவநிலை அடியேனுக்கு உண்டாக தேவரீரது திருவருள் சிறிது அருள்புரியாதோ?

விரிவுரை.

தோலொடு மூடிய கூரையை நம்பி :—

இந்த உடம்பு கூரைவீட்டிற்கு நிகரானது ; கூரைவீட்டை ஓலையால் மூடியுள்ளதுபோல் இவ்வுடம்பை தோலால் மூடியுளது. ஒரு மனிதன் கல்வீடு, ஓட்டுவீடு, மாடிவீடு இவைகளில் வாழ்ந்தால் நெருப்புபயம் அதிகமின்றி ஒரு சில நாளாவது அந்த வீட்டில் சுகமே வாழலாம். கூரைவீட்டிலேயிருப்பவன் நெருப்பு காற்று மழை முதலியவைகளுக்கு மிகவும் அஞ்சிவாழ்வான். கூரைவீட்டிற்கு விரைவில் அழிவுநேரும். கூரைவீடு என்றும் நிலைத்திருக்குமென நம்புதற்கில்லை ; அதுபோல் கூரைவீடனைய இவ்வுடம்பிற்கும் விரைவில் அழிவு நேரும் ; பிணி மூதுமை முதலியவைகள் உண்டாகிக்கெடும். இதனை நம்பியிருத்தல் பெருந்தவறு. யாக்கை நிலையாமையை யுணர்ந்து ஆன்மலாபத்தை விரைந்து தேடவேண்டும். " புல்லின் நுனியிலுள்ள நீர் எப்படி நிலைக்காதோ அதுபோல் இவ்வுடம்பும் நிலையற்றதென் றுணர்ந்து, இப்பொழுதே அறவினையைச் செய்க ; ஒருவன் பிறந்து நாம் பார்த்திருக்கும்போதே நின்று, இருந்து, கிடந்து சுற்றத்தார்கள் அலற இறந்து படுகின்றான் ; இதனைக் கண்கூடாகக் காண்கின்றோ மாதலால் இதனை நம்பியிராதே" என்ற நாலடியாரின் நல்வாக்கை யுன்னுக.

புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க வறவினை—யின்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப்படுத லால்

இத்தகைய சரீரமாகிய கூரைவீடு இடிகின்ற காலத்தில் குமாரக் கடவுளது திருவடியே துணைசெய்யும்.

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றி நரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரி தொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே

— அலங்காரம்.

பாவையர் தோதக லீலை நிரம்பி :—

கூரைவீட்டிற்கு நெருப்பை எப்படி அழிவை உண்டாக்குமோ? அப்படி உடம்பிற்கு அழிவை யுண்டாக்குவது பொதுமகளிரது

போகம் ஆவி யீடேறும் நெறியை வேண்டுவார் வரைவின்மகளிரை விழையா தொழிக.

சூழ் பொருள் தேடிட ஓடிவருந்தி :—

மேற்கூறிய விலைமகளிர்க்கு பொன்கொடுத்தாலன்றி விரும்பாராதலால் பொருள் தேடும்பொருட்டு பல ஊர்களிலும் சென்று வருந்த நேரும். சிறிது கை வரண்டால் விலைமாதர் வெறுத்து விரட்டுவர்; ஓயாமல் பொருள் கொடுத்தவண்ணமாகவே இருத்தல் வேண்டும். விளக்கும் வேசையர் நட்பும் ஒன்று; விளக்கு நெய் வற்றி விட்டால் அணைந்துவிடும். அதுபோல் வேசையர் நட்பு பொருள் வற்றிவிட்டால் ஒழியும். இதனை நாலடியார் கூறுமாறு காண்க.

விளக் கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின்வே றல்ல—விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங்
கைஅயற்ற கண்ணே யறும்

தூது :—

பாணன் முதலிய உயர்திணையோடும், கிள்ளை முதலிய அஃறிணையோடும், ஆண்பாலும் பெண்பாலும் அவரவர் காதலைச்சொல்லி தூது போய் வாவெனக் கூறுவது. கிள்ளை விடு தூது, வண்டு விடு தூது, நெஞ்சு விடு தூது முதலியவற்றைக் காண்க.

நான்மணிமாலை :—

வெண்பாவுங் கலித்துறையும், விருத்தமும், அகவலும், அந்தாதித் தொடையாகப்பாடுவது; நாற்பது கவிகளால் செய்யப்படுவது. கோயில் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை, நால்வர் நான்மணிமாலை முதலியவற்றைக் காண்க.

கோவை :—

இருவகைப்பட்ட முதற்பொருளும், பதினான்கு வகைப்பட்ட கருப்பொருளும், பத்து வகைப்பட்ட உருப்பொருளும், பொருந்திக் கைக்கிளை முதலுற்ற அன்புடைக் காமப்பகுதியவாம் களவொழுக்கத்தினையும் கற்பொழுக்கத்தினையும் கூறுதலே எல்லையாகக் கட்டளைத் துறை நானூற்றால் திணை முதலாகத் துறை யீராகக்கூறப்பட்ட பன்னிரண்டாகப் பாட்டுறுப்பும் வழுவின்றித் தோன்றப்பாடுவது.

இது வெண்பா, அகவல், கலி, வஞ்சி, வண்ணம் இவற்றுனும் வழங்கப்படும். திருக்கோவையார், திருவெங்கைக் கோவை, கோடீசுரக் கோவை முதலியவற்றைக் காண்க.

உலா :—

இளமைப் பருவமுதல் றலைமகனைக் குலங்குடிப்பிறப்பு மங்கல பரம்பரை இவற்றுன் இன்னுன் என்பது தோன்றத் தலைமையாய் மாதர் நெருங்கிய வீதியிடத்தவன் பவனிவரப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழு வகைப் பருவ மடந்தையர்களும், கண்டு காமுற்றுத் தொழுத்தாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

மடல் :—

கனவில் ஒரு பெண்ணைக் கண்டு கலவியின்ப நுகர்ந்தோன் விழித்தபின் அவள்பொருட்டு மடலூர்வேன் என்பதைக் கலிவெண் பாவினுல் முற்றுவிப்பது.

இத்தகைய பிரபந்தங்களைப் பொருள்பெறும்பொருட்டு நற்குண மில்லா நார்களை மட்டின்றிப் புகழ்ந்துபாடி யலைவது சில புலவரது தொழில் அங்ஙனம் அலைந்து நாதுதிசெய்து சேகரித்த பொருளைக் கொண்டுவந்து தாம் இச்சித்த போகமாதரிடந்தந்து உழல்வர்.

காலனை :—

பல வுயிர்களையுங் கருணையின்றிக் கொல்வதால் இயமனுக்கு நிகரானவனை என்றனர்.

"எவ்வுயிரு மறி வென்றிராதவ் வுயிர்க்கெலாம்
எமனுயிருந்த துட்டன்"

—பாம்பன்—குமாரகுருதாச சுவாமிகள்,

வீணனை :—

நமது ஆயுளில் ஒவ்வொரு கணமும் விலைமதிக்கமுடியாத மாணிக்கமாம் இத்தகைய அருமையான காலத்தை இழந்துவிட்டால் மீளவும் பெறமுடியாது. எத்தனைகோடி பொன்கொடுத்தாலும் கழிந்த நாள் வாராது. அதனை வறிதே கழிக்காமல் ஒவ்வொரு கணமும் தெய்வ சிந்தனையுடன் தவப்பொழுதாகக் கழிக்கவேண்டும்.

"நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாவோம்

—ஞானசம்பந்தர் தமிழ்மறை.

" போதவமே யிழந்து போனதுமான மேன்ப தறியாத பூரியன் "

—திருப்புகழ்

நிந்தைப் புலையனே :—

புலாலுண்பவர்கள் புலையர்கள் ; புலையர்கள் என்பது பிறப்பினு லன்று ; புலைப் புசிப்புடையோர்கள் யாவராயினும் புலையரே.

" மாமிசம் தின்போரெல்லாம மானிடப் புலையர்தாமே " என்றார் வள்ளலார்.

புலாலையுண்ணும் புலையரை யாவருங்காண இயமதூதர்கள் துன்ப மிகுந்த தீவாய் நரகில் மல்லாக்கத் தள்ளிவருத்துவர் என்ற திருமந் திரத்தைக் கண்டு தெளிக.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே

புலாலை யுண்பவன் எத்துணைச் சிறந்தவனாயினும் எவ்வளவு புண்ணி யத்தைப் புரியினும் பயனில்லை ;

கங்கையிற் படிந் திட்டாலுங் கடவுளைப் பூசித்தாலு
மங்குல் போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கினாலும்
சங்கை யில்லாத ஞான சாத்திர முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போன் போய்நரக டைவனன்றே.

—வள்ளலார்.

இதுவேயுமன்றி கருணையென்பது ஒரு சிறிதுமின்றி ஒரு தீங்கு மியற்றாது உபகாரம்புரியும் ஆடு கோழி பன்றி மீன்முதலிய ஏழைப் பிராணிகளைக் கொன்று அவற்றின் புலாலையுண்ணும் கொடியவரை, அவர்கள் கொன்ற பிராணிகளின் உடலிலுள்ள மயிர்கள் எத்துணை யுளவோ அத்துணைக்காலம் வெப்பமான நரகங்களையனுபவித்து மிக வுந் துன்புற்று, புழுக்களோடு கூடிய வாயுடையவராய் தொழுநோய் முதலிய பிணிகளை யடைந்து உழலுவர்.

கொன்று விலங்கின் தசைநுகருங்
கொடுமையோரவ் விலங்கி னுடல்
துன்று மயிரேத் துணையாமத்
துணைய காலம் வெந்நரகி

ஞேன்றி நுகர்வாய் புழுவொழுக வழப்ப
ரேன்கை யுணர்ந்தேயோ
கன்று சினவெங் கொடு விலங்கும்
புலவூன் றினனக் கருதாவால்

—சிவதருமோத்தரம்.

காரண காரிய லோக :—

உலகம் காரணம் காரியம் என இருவகைத்து. உயிர்கள் புரியும் நல்வினை தீவினைக் காரணத்தால் காரியப்படுவது காரிய உலகம். இவைகட்கு காரணமாவது காரண உலகம். இவ்விரு உலகங்களின் துன்பங்களும் நீங்கவேண்டுமாயின் மெய்ஞ்ஞான தவம் அவசியம் வேண்டும்.

பாலனமீது . . . . . அபராதன :—

அயனைத் தண்டித்த வரலாற்றை திருப்புகழமிர்தம் முதற்பாகம் 172-வது பக்கத்திற் காண்க.

வாரிய மாருதி :

விஸ்வரூபத்தை எடுத்து அரும்பெருங் காரியத்தை புரிந்தோ ராதலால் அநுமாரை பாரிய மாருதி என்றனர்.

பாவி யிராவணன் :—

அறன் கடை நின்ருரு ளெல்லாம்
பிறன் கடை நின்ருரிற் பேதையா ரில்

என்றபடி அயலானுடைய பத்தினியைக் களவாகக் கொண்டுபோனவ னாதலால் பாவி யென்றனர்.

சீரிய வீடணர் :—

சீலம், தவம், பொறை, ஈஸ்வரபக்தி முதலிய நற்குண நல்லொ ழுக்கமுடையவர் விபீஷணர்.

சீலமுலாவிய நாரதர் :—

நாரதர் சுப்ரமண்ய பக்தியிற் சிறந்தவர் ; கந்தபுராணத்துத் தக்ஷ காண்டத்துக் கந்தவிரத படலத்தில் வெளியாமாறு, கார்த்திகை மாதத்தில் வருங் கார்த்திகை நக்ஷத்திரத்தின் முதன்னாளாகிய பரணி நாள் உதயத்தில் யாவனொருவன் நித்தியகரும முடித்துப் பரிசுத்த னாய் ஒருவேளை யுண்டு, மறுநாள் கார்த்திகைதினத்தன்று அதிகாலை யெழுந்து புண்ணிய நதியில் நீராடி, தூய ஆடையுடுத்தி, முருகவேளை அலங்கரித்து அருச்சித்து நீர் சந்தன புஷ்ப தூப தீப நிவேதனங்க

ளால் வழிபாடுசெய்து, முருகவேள் சரித்திரத்தை பக்தியுடன்கேட்டு உபவாசமிருந்து பகல் முழுவதும் குகசிந்தையுடன் இருந்து, இரவில் தருப்பையைப் பரப்பி அதன்மீதிருந்து அரிவையரை அணுவளவும் நினையாது அறுமுகவள்ளலின் அடிமலரையுன்னி, துயில்புரியாது தியானம்புரிந்த நிலையில் இருந்து விடிந்த உரோகணி நட்சத்திரத்தில் விடியற்காலத்தில் நீராடி நித்தியகரும முடித்து, கந்தவேளை முன் போல் வழிபட்டு, அடியார்களுடனிருந்து பாரணைபண்ணி அப்பகல் உறங்காது வைகி மாலைக்கடன் முடித்து அன்றிரா உறங்கவேண்டும் இவ்வித கந்த விரதத்தை விநாயகமூர்த்தி பணித்தவாறு, நான்முகன் மகனாராகிய நாரதமுனிவர், பன்னிரண்டாண்டு ஆற்றிக் கந்தவேளைத் தரிசித்துத் தேவ இருடிகளில் முதன்மைப்பேறு பெற்றனர். இவர் வள்ளிநாயகியை மணம்புணருமாறு விண்ணப்பம்புரிய, அவரை வழி காட்டுமாறு செய்து வள்ளிநாயகியை வரைபகவெறிந்த வடிவேலண்ணல் மணம்புரிந்துகொண்டனர்.

இதன் தத்துவம் :—

வள்ளியென்பது ஜீவான்மா; முருகன் பரமான்மா; நாரதர் வள்ளியினது தபோ சக்தி; தபோ சக்திதான் ஆண்டவனை அருள் புரிய அழைத்துவரும். வள்ளிநாயகியார் திருமண தத்துவத்தைப் பின்னர் விரிவாக விளக்குவாம்.

சேலோடு . . . . சீரலைவாய் :—

திருச்செந்தூரில் நீர்வள மிகுந்திருப்பதால் வயல்களில் வாழும் வாளை முதலிய மீனினங்கள் துள்ளிக்குதித்து கமுகுகளில் தாவி விளையாடுகின்றன.

கருத்துரை.

நான்முகனைத் தண்டனை புரிந்தவரே! இராவண சம்மாரம்புரிந்த இரகுவீரரது மருகரே! நாரதனார்புகல் வள்ளிபிராட்டியை மணந்தவரே! செந்திமாநகரத்தில் வாழும் கந்தமூர்த்தியே! பெருமையின் மிக்கவரே! தோலால் மூடிய சிறுகுடிலை நம்பி, மாதர் மயலுற்று, பொருள்தேடுமாறு நாதுதிசெய்து அலையும் நீயவனாகிய அடியேன் விரும்பினால் உலக துன்பமற மெய்ஞானதவத்தைத் தமது திருவருள் சிறிது உண்டாக்கச் செய்யாதோ?

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

(110-ம் பக்கத் தொடர்ச்சி.)

विधौक्लृप्तदण्डान् स्वलीलाधृताण्डा-
न्निरस्तेभशुण्डान् द्विषां कालदण्डान् ।
हतेन्द्रारिषण्डान् जगत्त्राणशौण्डा-
न्सदा ते प्रचण्डान् श्रीये बाहुदण्डान् ॥

(12) விதௌ[4] க்லுப்த த[3]ண்டா[3]ஸ்வலீலாத்[4]ருண்டான்
நிரஸ்தே[4]ப சுண்[3]டான் த்[4]விஷாம் காலத[3]ண்டான் ।
ஹதேந்த்ராரி ஷண்டான் ஜக[3]த்த்ராண சௌண்டா[3]ன்
ஸ[2]தாதே ப்ரசண்டான் ஸ்ரயே பா[3]ஹூ த[3]ண்டான் ॥

பதவுரை.

ஹேஸ்கந்த!	- ஓ ஸ்கந்தமூர்த்தியே!
விதௌ	- பிரமதேவன் விஷயத்தில் (பிரமதேவனை),
க்லுப்ததண்டான்	- செய்யப்பட்ட தண்டனையை யுடையதும் (தண்டித்தவைகளும்),
ஸ்வலீலாத்ருதண்டான்	- விளையாட்டாகவே அண்டங்களைத் தாங்குகின்றவைகளும்,
நிரஸ்த்தேபசுண்டான்	- அழகினால் திரஸ்கரிக்கப்பட்ட யானைத்துதிக்கைகளையுடையவைகளும் அல்லது யுத்த காலத்தில் அசுரர்களின் யானைகளின் துதிக்கைகளை வெட்டி எறிந்தவைகளும்,

த்விஷாம் காலதண்டான் - பகைவர்களுக்குக் காலனின் தண்டாயுதம் போன்றவைகளும்,
ஹதேந்த்ராதிஷண்டான் - கொல்லப்பட்ட அசுரர்களை யுடையவைகளும் (அசுரர்களை அழித்தவைகளும்),
ஜகத்ராண சௌண்டான் - உலகத்தை யிரட்சிப்பதில் சமர்த்தங்களும்,
ப்ரசண்டான் - பெரியவைகளுமான,
தேபாஹூந்தண்டான் - தேவரீருடைய கைகளை,
ஸதா - எப்போதும்,
ஶ்ரயே - ஆஶ்ரயிக்கின்றேன்.

பொழிப்புரை.

பிரமதேவனைச் சிறையிலடைத்தவைகளும் விளையாட்டாகவே அண்டங்களனைத்தையும் தாங்குகின்றவைகளும் யானைகளின் துதிக்கைகளுக்கொப்ப அழகுவாய்ந்தவைகளும் அல்லது அசுரர்களால் ஏவப்பட்ட மதயானைகளின் துதிக்கைகளை அறுத்தெறிந்தவைகளும் அசுரர்களை அழித்தவைகளும் உலகத்தைக் காக்க வல்லவைகளும் பெரியவைகளும் ஆன தேவரீரது திருக்கரங்களை எப்போதும் ஆஸ்ரயிக்கின்றேன். இதனால் இத்தகைய திருக்கரங்களைத் தியானிக்கும் அடியவர்களுக்கு திவ்வியஞானமும் சத்துருஞானமும் அபீஷ்ட்ட சித்தியும் உண்டாகும் என்னும் உண்மையை உணர்த்தப்பட்டதோடு பிரணவத்தின் பொருள் தெரியாவிடினும் வீணே செருக்கு படைத்த பிரமனைப்போல் அகங்காரத்தையுடைய ஜீவர்கள் துன்பப்பட நேரும் என்பதும் அறிவுறுத்தப்பட்டது,

सदाशारदाः षण्मृगाङ्का यदिस्युः
समुद्यन्द एव स्थिता स्चेत् समन्तात्।
सदा पूर्णविम्बाः कलङ्कैस्चहीना
स्तदात्वन्मुखानां ब्रुवेस्कन्द साम्यम्॥

(13) ஸதா சாரதா: ஷண்ம்ருகாங்கா யதிஸ்யு:
ஸமுத்யந்த ஏவஸ்திதாஸ்சேத் ஸமந்தாத் ।
ஸதாபூர்ண பிம்பா: கலங்கைஸ்ச ஹீநா
ஸ்ததா த்வன்முகானாம் ப்ருவேஸ்கந்த ஸாம்யம் ॥

பதவுரை.

ஹே ஸ்கந்த !	- ஓ கந்தமூர்த்தியே !
ஸதா	- எக்காலத்தும்,
பூர்ண பிம்பா:	- பூர்ணபிம்பங்களை யுடையவைகளும்,
கலங்கை:ஸஹீனா:	- கலங்கமின்றியவைகளும்,
ஸாரதா:	- சரத்காலத்தியவைகளும் ஆன,
ஷட்ம்ருகாங்கா:	- ஆறு சந்திர பிம்பங்கள்,
ஸமந்தாத்	- நான்கு பக்கமும்,
ஸமுத்யந்த: ஏவஸ்திதா:சேத்	- உதித்துக்கொண்டிருப்பவைகளாக இருக்குமேயானால்,
ததா	- அப்போது,
த்வன்முகானாம்	- தேவரீரின் திருமுகங்களுக்கு,
ஸாம்யம்	- ஸமானத்தன்மையை (ஒப்பை),
ப்ருவே	- கூறுவேன்.

பொழிப்புரை.

ஓ கந்தப்பெருமானே ! சரத்காலத்திய ஆறுபூர்ண சந்திரர்கள் களங்கமின்றியவைகளாய் நான்கு பக்கமும் உதித்துக்கொண்டிருக்குமேயானால் அப்போது தேவரீரது திருமுகங்களுக்கு ஒருவாறு ஒப்பிட்டுக் கூறுவேன். இதனால் சுவாமியின் திருமுகங்கள் ஒப்பற்றவைகளென்றும் தியானிப்பவர்களின் ஆத்யாத்மிகாதி தாபத்திரயங்களைக் கெடுத்து ஆனந்தத்தைக் கொடுக்கவல்லவைகளென்றும் பெறப்பட்டது.

स्फुरन्मन्दहासैः सहं सानि चञ्च-
त्कटाक्षावलीभृङ्गसङ्गोज्ज्वलानि ।
सुधास्यन्ति विम्बाः धराणीश सूनो
तवा लोकये षण्मुखाम्भोरुहाणि ॥

(14). ஸ்ப்[2]ரன்மந்[3]தஹா ஸைஸ்ஸஹம் ஸானி சஞ்சத்
கடாக்ஷாவலீப்[4]ருங்[3]க ஸங்கோஜ்வலானி ।
ஸு[4]தாஸ்யந்[3]தி பி[3]ம்[3]பா[4] த[4]ராணீச ஸூனோ
தவாலோகயே ஷண்மு[1]காம்[4]போரு ஹாணி ॥

பதவுரை.

ஹே ஈஸஸூநோ : பரமசிவனுடைய புத்திரனே :
ஸ்புரன் மந்தஹாஸை: - பிரகாசியாநின்ற புன்முறுவல்களாகிய அன்னப்பட்சிகளையுடையனவும்,
சஞ்சத் கடாக்ஷா வலீப்ருங்க ஸங்கோஜ் வலானி - அசையாநின்ற கடாக்ஷங்களாகிய வண்டுகளால் அழகியனவும்,
ஸுதாஸ்யந்தி பிம்பாதரானி - சந்திரபிம்பங்களைத் தாழ்மைப்படுத்துகின்றனவும் அல்லது அமிர்தம் சொட்டுகின்றனவும் கோவைப்பழம்போன்று சிவந்திருப்பனவுமாகிய இதழ்களையுடையனவும் ஆகிய,
தவ - தேவரீரது,
ஷட் - ஆறு,
முகாம்போருஹாணி - திருமுகங்களாகிய தாமரைப்பூக்களை,
ஆலோகயே - தரிசிக்கின்றேன்.

பொழிப்புரை.

புன்சிரிப்புடையவைகளும் அடியவர்களுக்கு ஏதேனும் ஆபத்துண்டாமென்று எப்போதும் கவனித்துக்கொண்டேயிருப்பதனால் அசைந்துகொண்டிராநின்ற கடாக்ஷத்தையுடையவைகளும் சந்திரபிம்பத்தையும் கோவைப்பழத்தையும் அழகினால் தோற்கடிப்பவைகளும் ஆகிய தேவரீரது முகாரவிந்தங்களை தரிசிக்கின்றேன். இதனால் இத்தகைய முகாரவிந்தங்களைத் தியானிக்கும் அன்பர்கள் நித்தியாநித்ய வஸ்துவிவேகம் வைராக்கியம் ஸாதுஸங்கம் முதலியவைகளையடைந்து மோட்சத்தையு மடைவார்கள் என்னும் உண்மையை உணர்த்தப்பட்டது.

(தொடரும்.)

ஓம் குஹாயநம:

கந்தர் திருவிளையாடல்

(116-ம் பக்கத் தொடர்ச்சி)

மோன நீங்குதல்.

திசைமுகனாதி தேவர்கள் மன்மதன் எரிந்து நீறாயினதையும், சிவமூர்த்தி முன்போலவே மௌனத்துடன் வீற்றிருத்தலையுங்கண்டு, உடல் வியர்த்து, உள்ளங்கலங்கி, விழிநீர் பெருக்கி, மெய் நடுங்கி, துன்பக்கடலில் அழுந்தி, அழுதார்கள். "நமது அல்லல் அகலும் பொருட்டு ஆலமுண்ட அண்ணலிடம் மன்மதனை யேவினோம். அரனார் அவனைப் பொடிபடுத்தினர்; மோனநிலையினின்றும் நீங்கினாரில்லை. அந்தோ! இனி என் செய்வோம்?" என்று புலம்பினார்கள். "காமனை எரித்த கண்ணுதலுடைய மௌனநிலையை உபாயத்தினால் மாற்றுதல் முடியாது; அவர் நம்மைத் துன்பத்தினைத் துடைத்து இன்பத்தை நல்கிக் காத்தருளவேண்டுமாயின், நாம் அவரைத் துதிப்பதே கடன்" என்று எண்ணி அயன் முதலிய அமரர்கள், கயிலைமலையின்மேற் றிகழும் கோபுரத்தின் புறத்தே சென்று துதிக்கலானார்கள். மங்கை பாகா! சொற்பதங்கடந்த அற்புதா! மூவருமறியா முழுமுதலே! கடல்நஞ்சை யருந்தியும், கங்கையைச் சூடியும், நெற்றியில் கனல்விழியைப் படைத்தும், கொடிய அவுணர்களைக் கொன்றும், முன்னாளில் எளியேங்களைக் காத்தருளினீர். இத்தருணம் கைவிடுவீரேல் மைந்தர்களாகிய எமக்குத் தந்தையாகிய தேவரீரையன்றி புகலிடமாவார் யாவர்? அடியார்கள் குற்றமேசெய்யினுங் குணமெனக்கொள்ளும் குன்றமில்லியே! உமது பூங்கழலே சரணமென்றடைந்தேம். நாங்கள் நாடோறும் சூரபன்மனாலே துன்புற்றுமாளலாமோ? எமது இடரைச் சிறிதேனும் நினைந்தருள்புரியீரா? எந்தையே! அம்பிகையைப்பிரிந்து யோகநெறியைக் காட்டியது உமக்கு ஓர் கணப்பொழுதேயாகும்; எமக்கு எண்ணிலா யுகங்கள் சென்றன; இன்னும் தாங்கள் புறக்கணித்திருக்கில் யாம் எவ்வாறு உய்வேம்? திருமால் முதலிய அனைவரும் உம்மை நோக்கி அருந்தவம்புரிந்து உமது அடிமலர்களை அர்ச்சிக்க, தேவரீரே இப்பதவி

களையும் ஏனைய நலன்களையும் தந்தருளினீர். தோற்றமின்றியே ஐந் தொழிலியற்றிய தொல்லோய்! நீர் கொண்ட தவநிலை எம்பொருட் டேயன்றோ? அடியேங்கள் செய்த தீவினையால் தினந்தோறும் துன்பமாகிய வாளால் துணிக்கின்றீர்; இனி எங்களைக்காப்பாற்றுதல் அல்லது அழித்துவிடுதல்; இந்த இரண்டில் எது உமக்குத் திருவுளமோ அதைப்புரியும் தேவ தேவ! உமாதேவியை மணந்து எமது இடரைக் களைவீரென்று அறிவிலிகளாகிய அடியேங்கள் மதனனை யனுப்பினேம். அவனை எரித்து முன்போலவே மோன நிலையில் எழுந்தருளியுள்ளீர்; இங்கு யாம் இடர்ப்பட்டு அழிவது தக்கதோ? இனியேனும் சிறிது திருவுளமிரங்கிக் காத்தருளல்வேண்டும். நரசிங்க முதலிய விலங்குகளை உரித்து அவற்றின் தோல்களைத் தரித்தீர்; தக்கனது பெருமகத்தை வீரபத்திரரைக்கொண்டு தடிந்தீர்; அதுபோல் சூராதியவுணர்களைத்தொலைத்து எமது துன்பத்தை துடைத்தல்வேண்டும்" என்று முறையிட்டார்கள்.

பிரமாதி தேவர்கள் அழலிடைப்பட்ட மெழுகென உருகி அழுது தொழுது காமுற்று அரற்றித்துதித்தலும், அவர் பாவந் தொலையுஞ்சமையம் நெருங்கிவிட்டதால் திருவுளமிரங்கி, நந்தியை நினைந்தனர். அதனையுணர்ந்த நந்திதேவர் இறைவன்முன் சென்று இறைஞ்சி நிற்க, சிவமூர்த்தி ' அம்புயனாதி அமரர்களை நம்முன் அழைத்து வருதி" என்றனர். நந்தியங்கடவுள் கோபுரவாயிலையடைய பங்கயனாதியோர் பணிய" நந்திதேவர் "வருந்தன்மின்; உம்மை யழைத்துவருமாறு கண்ணுதற்பெருமான் கட்டளையிட்டனர்.; வாருங்கள்" என்றனர். அவ்வார்த்தை அமுதஞ்சொரிவது போல் செவியில் நுழைதல் தேவர்கள் அளப்பருமகிழ்வெய்தி, சிவமூர்த்தியைத்துதித்து ஆடினார்கள். நந்திதேவர் அவர்களை அழைத்து சிவசந்நிதியில் விடுத்தனர். தேவர்கள் மதிமுடிப்பரமனைப் பலகாலும் பணிந்து, பூதநாத! பொருவிடைப்பாக! சிவசிவ! ஹரஹர! என்று துதித்து நின்றனர்கள். புரமெரித்த புண்ணியன் "துன்பத்தையும் விண்ணப்பத்தையும் விளம்புமின்" என்றனர்.

தேவர்கள் "அருட்பெருங்கடலே! அநேக யுகங்களாக சூரனது ஆணையால் அலக்கணுற்று வருந்துகிறேம்; தங்களையன்றி எமது துன்பத்தை நீக்குவோர் யாவருளர்? சூராதியவுணரையழிக்க வல்ல ஓர் குமாரரைத் தந்தருளும் வண்ணம், இமயமால்வரையில் தவம் புரியும் மரகதவல்லியை மணமுடித்தருளல் வேண்டும்" என்றுகூறி

எம்பெருமான் இணையடிமேல் வீழ்ந்து வேண்டினார்கள். மதிமுடிப் பரமன் "அன்புடையீர்! வருந்தாதீர்; உங்கள் பொருட்டு மலை மங்கையை மணந்து உமது வருத்தத்தை மாற்றுதும். நீவிர் நுமது இருக்கை செல்லுமின்" என்றருள்புரிந்தனர். தேவர்கள் மகிழ்ந்து வணங்கி மேருமலையைச் சேர்ந்தனர்கள்.

அதுகண்ட இரதிதேவி எம்பெருமான் திருமுன்னர் வந்து வணங்கி "முறையோ! முறையோ!! எப்பொருட்கும் இறைவ! பங்கயனுதி பண்ணவர் ஏவலினாலே எனது நாயகன் தேவரீர்மீது மலர்க்கணைகளை ஏவி அழிந்தனன். அவன்புரிந்த குற்றத்தைத் திருவுளங்கொள்ளாது அருள்புரிதல்வேண்டும்" என்று முறையிட்டனள். சிவபெருமான் கருணைகூர்ந்து "இரதியே! நீ புலம்பற்க; மலையாயன் தந்த மாகதவல்லியை யாம் மணம்புரியும்போது நினது பதியை உயிர்ப்பித்தருளுவேம்; சிந்தாகுலமற்று செல்லுதி" என்றனர். இரதிதேவி இறைவனை இறைஞ்சி இமையவரை சென்று ஒருபுறத்தே மேகத்தின் வரவை நோக்கும் மயிலேபோலிருந்தனள்.

சிவபெருமான் மலைவளர்காதலியை மணம்புரிவானுன்னி "சனகாதி நால்வரை நோக்கி "மைந்தர்களே! சிவஞானமென்பது வாய்விட்டு சொல்லுந் தகையதன்று; அது இவ்வாறு மௌனத்தோடிருந்து நம்மை அறிவதேயாம்" என்று கூற; முனிவர்கள் தெளிவடைந்து தேசிகேசனுந் தேவதேவனைப் பன்முறை வணங்கி "எந்தாய்! அடியேங்கள் மயக்கமற்று தெளிவடைந்தேம்; ஆவியீடேறும் வகைபெற்றுய்ந்தேம்" என்று புகழ்ந்து போற்றினர். கறைமிடற்றண்ணல் "இனி நீவிர் இவ்வாறு சிவயோகத்திருந்து எமது சிவகதி சேருமின்' என்று விடைதந்தனுப்பினர்.

அம்பிகையின் தவநிலையறிதல்.

கண்ணருள் நிறைந்த கண்ணுதற்கடவுள், இமயவெற்பின்மீது மாதவம்புரியும் மலைமகள் தமதுமீதுள்ள தலையன்பையும் காதலையும் உலகிற்கு உணர்த்துமாறு திருவுளங்கொண்டு, சிவந்தவுடையும், சிகையும், திருநீறுபூசிய திருமேனியும், பூணூலும், கையில் கமண்டலமும், மழையையும் பனியையும் வெய்யிலையும் காக்கும் ஓலையையும், தண்டும் உடைய முதிய அந்தணவடிவங்கொண்டு பார்வதியம்மையாரது தவச்சாலையை யடைந்தனர். வாயில்காக்கும் மகளிர்கள் பலர் "இவர்

தூய வயோதிகர்" என்று வந்து அவரை வணங்கிநின்று "தளர் நடையுடைய பெரியவரே! இப்பனிமலையின்மீது வருதல் எளிதன்று; தாங்கள் வந்த காரியம் யாது?" என்ன. அந்தணர் "நேரிழையீர்! மலைவளர்காதலியாகிய பார்வதியின் தவத்தைக் காணும்பொருட்டு வந்தேன் என்றனர். சில மாதர்கள் உடனே உமாதேவியிடஞ் சென்று கிழவேதியாது வரவை விண்ணப்பஞ்செய்ய; அம்பிகை "அவர் முதியவராயின் இங்கே அழைத்துவம்மின்" என்று கட்டளையிட, சேடியர் அவ்வந்தணரை அம்மையார்முன் விடுத்தனர். அவரைக்கண்டவுடனே அம்மையார் "இவர் எம்பிரானுடைய அடியவர்" என்று பத்தியுடன் வழிபாடுசெய்து பணிந்தனர். உமையம்மையாருக்கு மெய்த்துணையாயுள்ள விசயை என்பவர் ஓ ராசன மிட்டு அதில் பெரியவரை இருத்தினள். உமை ஒருபுறத்தில் ஒதுங்கி நின்றனர். அருந்தவக்கிழவர் அம்பிகையை அன்புடன் பார்த்து "பெண்மணியே! அளவிடற்கரிய நின் அழகு குன்றவும், உடல் தசை வாடவும், யாது குறித்துத் தவம்புரிகின்றனை? நின் விருப்பம் என்னை? கூறுதி" என்றனர். மலைமகள் விசையையின் முகத்தை நோக்கி, குறிப்பினல் "நீ இவருக்கு எதிர்மொழி இயம்பக்கடவாய்" என்று கண்காட்ட, விசையை அக்குறிப்பை யுணர்ந்து, அருந்தவ அடிகளே! கண்ணுதற்கடவுள் தன்னை மணந்து தன்னிடமிருத்திக் கொள்ளும்வண்ணம் இவ்வம்மையார் தவம்புரிகின்றனர்" என்றுரைக்க, முதியவர் முறுவல்செய்து மொழிந்தருளுவர்.

புலியதளித்தருள் முதல்வரு நாடரும் புனிதன்றான்
இவள் தவத்தினுக் கெளியனோ எய்தினுமிளையாளை
அவன்விருப்போடு வரையுமோ உமையவ ளறியாமே
தவமியற்றினள் எளியனோ சங்கரன்தனக் கம்மா.

பொற்றொடி! மாலு மயனும் காண்டற்கரிய மறைமுதற்கடவுள் இவள் தவத்திற்கு இரங்கி வருவனோ? அங்ஙனம் வந்தாலும் இவளை விரும்பி திருமணங்கொள்வரோ? என்னே பேதமை? உமையவள் இதனையறியாது தவமியற்றினள். சிவமூர்த்தி எளியனோ? அளக்கரிய துன்பத்துடன் இவள் செய்யுந்தவத்தினலாகியபயன் ஒன்றுமில்லை. ஒருவராலும் அடைதற்கரிய பரம் பொருள் இவளுக்கு எளிதாகுமோ! பன்னெடுநாள்களாக தவஞ்செய்து வீணே உடல் நலத்தையும் கட்டழகையும் பாழ்படுத்தினள். விரைவில் இத்தவத்தை விடுவதே நலம்" என்றார். இதனைக்கேட்ட இமயவல்லி "அந்தோ!

இவர் எம்பிரானுக்கு அன்பர்; முதியவேதியர் என்று எண்ணினேன் இவர் இப்படிப்பட்ட கொடுஞ்சொற்களைக் கூறுவரென்றுணராமற் போனேன்" என்று சினங்கொண்டு, பெருமூச்செறிந்து. நாணத்தை நீக்கி மனம்பொறுக்கமுடியாததால் கூறலாயினர். "ஐயா! ஆதியும் அந்தமு மில்லாத ஐம்முகச்சிவனர் எனது விருப்பத்தை நிறைவேற் ருது விடுவாராயினும் யான் இத்தவத்தை விடுவனே? ஒருபோதும் விடேன். இன்னும் அளவில்லாத கடுந் தவத்தைச் செய்து உயிர் விடுவேன். நீ மிகவும் கிழத்தன்மையை யடைந்ததால் மயக்கமுற்ருய்; நீ என்ன பித்தனே? என்றனள். எல்லாவுயிர்களையுமீன்ற இளமுலை நாயகி இவ்வாறுகூற, கிழவேதியர் மீளவும் ஓர் தன்மையை உன்னி உமாதேவியை நோக்கி "பெண்ணே! நீ விரும்பிய விடையவனது வளங்களை நன்ருகக் கேட்டுணர்ந்திலை போலும்; யான் உணர்த்து வன்; கேள்.

ஆடைதோல் விடை யேறுவ தணிகலம் அரவென்பு
கேடில் வெண்டலை மாலிகை கேழலின் மருப்பின்ன
ஓடு கோள்கலம் ஊண்பலி வெய்யநஞ் சுவப்புற்ரேர்
காடதே நடம் புரிபிடங் கண்ணுதற் கடவுட்கே

பெண்மணியே! சிவனுக்கு ஆடை தோல்; வாகனம் எருது; ஆபரணம் பாம்பு, எலும்பு தலைமாலை, பன்றிக் கொம்பு முதலியன; உண்ணுகின்ற பாத்திரம் தலையோடு; உணவு பிக்ஷையும் விஷமும்? ஆடுகின்ற இடம் சுடுகாடு; தரித்துக்கொள்வன வெள்ளெருக்கு, அறுகு, கொன்றை, நொச்சி, ஊமத்தம், கங்கை, பாம்பு முதலியன பல; சந்தனம் சாம்பல்; கையிற்பிடித்திருப்பன சூலம், மான், மழு, உடுக்கு, அக்கினி முதலியன; சூழ்ந்துளசேனை பூதங்கள்; மேலும் அச்சிவனுக்கு தாயுமில்லை தந்தையுமில்லை; தமருமில்லை; குணம் குறி செயல் குலம் என்பனவு மில்லை; அவனுக்குரிய பெருமைகள் இவை களே. இவைகளெல்லாம் உன்னுடையனவாகும் பொருட்டோ நீ இவ்வாறு பெருந்தவம் புரிந்து இளைத்தனை! மிகுந்த சிறப்புடைய மன்னர் மன்னனது மகளாகிய உனக்கு இது இயையுமோ? ஆதலால் தவத்தைவிரைவில் விடுப்பாயாக" என்றனர். திரிபுரமெரித்த திங் கள் வேணியனது வசனங்களைக் கேட்டவுடனே அகிலாண்ட நாயகி காங்களால் இரு செவிகளையும் பொத்தி, "சிவ சிவ" என்று கூறி துக்கமும் சினமுங்கொண்டு பார்ப்பனனே! கேள். எமது பிரானு

கிய என்றோளன்னலிடம் நினக்கு சிறிதாவது அன்பில்லை, நீ இச் சிவவேடங்கொண்ட தன்மை வேடுவன் காட்டில் பறவைகளைப் பிடிக் கும் பொருட்டுப் புதலை மேற்கொண்டமை போலும், முற்காலத்தில் சிவபக்தி யில்லாது தக்கன் உன்னைப்போல், நெற்றிக்கண்ணுடைய நிமலனை நிந்தித்துப் பேசியதும் அதனால் அவனடைந்த அலக்கணும் நீ கேட்டதில்லையோ? அந்தோ! எம்பிரானை இவ்வாறு என்முன் இகழ்ந்தாயே! நீ இந்நாள்வரை மாசறு மறைகளைச் சிறிதும் ஆராய்ந் திலைபோலும்? பசுபதி ஒருவரே பரம்பொருள் என்று வரையறுத்துக் கூறுகின்ற வேதங்களைப் பார்ப்பனர்கள் ஓதினாராயினும், அம்மறை நெறியில் நில்லாது, பொல்லா வொழுக்கத்தையே மேற்கொண்டு, முக்கண் மூர்த்தியை யிகழ்ந்து அத்தீவினையால் முத்தியடையாது பிறப்பிறப்பென்னும் பெருங்கடற்பட்டுழலும்வண்ணம், முன்னாளிலே முனிச்சிரேட்டர்களாலே மறையவர் பெற்ற சாபம் நின்னையும் மயக் காமல்விடுமோ? உலகங்களுக்கெல்லாம் தந்தையாய்த் தங்களைப் பெற்றுத் தங்கள் தொழிலுக்குத் தலைவனாய் இன்றியமையாப்பெரு மையையுடைய இறைவனாகிய சிவபெருமானை நீங்கி, தனது கணவனை விட்டு அயலானை மருவிக் கற்பினையிழந்த மாதரைப்போலும் வேதிய ரது முறையையே நீ செய்தாய்; உன்னை யான் வெறுப்பதில் என்ன பயன்? ஆயினும் வேதியர்கட்குள் வேதத்தில் விதித்தபடி விபூதி உருத்திராக்கமாதி சிவச்சின்னங்களைத் தரித்து சிவபெருமானுக்குத் தொண்டுசெய்வாரும் உண்டு; நீ அவர்களைப்போலச் சிவச்சின்னங் களைத்தரித்தும் சிவநிந்தை செய்தாயென்னின், அசுரர்களுள்ளும் நின்னைப்போல் தீயவரில்லை; வேண்டுதல் வேண்டாமையில்லாத விம லனை ஈண்டு நீ இகழ்ந்தனவெல்லாம் சர்வஜீவதயாபரனாகிய சங்கரன் ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் கருணைப்பெருக்கால் பூண்டருளுங் குறிகளென்று அறியக்கடவாய். இவையெலாம் எம்பிராற்குப் புகழே யாம். அப்பரமபதியினது இயல்பனைத்தும் அறியவல்லார் யாவர்? அறிவிலியே நீ இகழ்ச்சிபோல இயம்பியவனைத்தும் மாலயனாதிவான வர்கள் தம்மை வழிபட்டுத் துதிக்க அவர்களுக்கு ஆற்றலையும் அதி காரத்தையும் நல்கிய முழுமுதற்கடவுள் விருப்பும் வெறுப்புமின்றி ஆன்மாக்களுக்கு அருள்புரியும் நிலையே என்று நினை. ஆரணமாதி அறிவு நூல்களும் இவ்வாறே கூறுகின்றன. இவற்றையெலாம் தெளிந்த மெய்யறிவுடைய மேலோர்களுணர்வார்கள். சிவநிந்தை புரியும் மகாபாவியாகிய உனக்குச் சொல்லப்படாது; சொன்னாற்

பாவம் ; பொய்வேடங்கொண்டவனே! நீ விரைவிற் புறத்தே போய் விடு" என்று கூறினர்.

அறம்வளர்த்த நாயகியை நோக்கி அானர் "பெண்பாவாய்! உன்மீது காதல்கொண்டுவந்த் என்செயலைக் கேளாது புறத்தே போ என்று கூறுதல் தருமமோ? நான் இங்கு வந்தது மறைமுறைப் படி உன்னை மணங்கொள்ளும்பொருட்டேயாம்"என்றனர். உள்ளங் கவர்கள்வனது வாசகத்தை மலைமங்கை இருசெவிபொத்தி விம்மி யழுது, மெய்பதைத்து, "இக்கிழவன் போகான்; நானே போவேன்" என்று பஞ்சினுமினிய பாததாமரை சிவக்க ஆங்கு ஓர் புறத்தில் போதலுற்றனர். அம்மையாரது தவவுறுதியையும் தனிப் பெருங்காதலையுங் கண்ட சிவமூர்த்தி வரம்பிலாக் கருணைகூர்ந்து வேதியர் வடிவத்தை நீங்கி, சிவகணங்கள் சூழ்ந்து துதிக்க, விண் ணிடை விடைமேல் தோன்றினர். அம்மையார் ஆண்டவனைக்கண்டு திருமேனி நடுங்கி, நாணங்கொண்டு, பன்முறையும்பணிந்து எழுந்து கைகூப்பி நின்று, மட்டற்ற மகிழ்ச்சியுடன் போற்றி "அளவற்ற அறிவினாலும் எட்டாத ஆதியே! அருட்பெருஞ் சோதியே! தேவரீ ரது மாயையை யுணரேன்; சிறிதும் அறிவில்லாப்பேதை உம்மை யிகழ்ந்தமையைப் பேரருளாற் பொருத்தருளல்வேண்டும்" என்று குறையிரந்தனர். கயிலைக்கடவுள் "நற்றவ நங்காய்! நீ நம்மிடத் துள்ள அன்பின்பெருக்கால் முன்னே சொல்லியவெல்லாம் துதி யாகவே கொண்டாம்; உன்னிடம் குற்றமுண்டாயினன்றோ நாம் பொறுத்தல்வேண்டும்; இனி கொடுந்தவத்தால் வருந்தவேண்டா; நாளை நின்னை மணஞ்செய்துகொள்ள வருவேம்" என்று புனித வாய் மலர்ந்து மறைந்தருளினர். அம்மையார் சிந்தை மிகமகிழ்ந்து சிவமூர்த்தியை நினைந்து துதித்துக்கொண்டிருந்தனர். சிலமகளிர் மலையரையனிடம் சென்று மழுவாளிவந்து திருவருள் செய்தமை யைத் தெரிவிக்க, இமவான் கவலைநீங்கிக் களித்து தன்மனைவியாகிய மேனையோடு சென்று ஞானம்பிகையைத் தன்கோயிலுக்கு அழைத் துக்கொண்டு சென்றான்.

(தொடரும்.)

உ

ஓம் குஹாய நம :

கற்பு

(58-வது பக்கம் தொடர்ச்சி)

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

பெண்மக்கள் தம்மையெய்திய கணவனை வழிபடுகின்ற செந்நெறியைக் கடைப்பிடித்து வாழ்வாரேயாமாயின் தேவர்கள் வாழுகின்ற தெய்வலோகத்தில் அத்தேவர்கள் பெருஞ்சிறப்பினைப் பெற்று இன்புற்று இனிது வாழ்வார்கள். கணவனை வழிபடுகின்ற காரிகையர்களுக்கு இம்மையில் புகழும், மறுமையில் முத்திநலனும் உண்டாகும். கற்புடைய மனைவியை யுடையோனுக்கு கிடைக்கத்தகாத பொருள் மூவுலகிலு மில்லை. கற்புடையவள் வாழுகின்ற மனையே மனை; மற்றது புலிவாழுகின்ற புதர். நாயகனுக்குப் புகழ், அழகு, செல்வம், கல்வி, ஞானம், பாகதி முதலிய எல்லா நலன்களும் கற்புடைய மனைவியினாலேயே உண்டாகும். கற்புடை மனைவியையுடையவனுக்குத் துன்பம் எக்காலத்தும் நேராது; நேர்ந்தாலும் விரைவில் நீங்கும். பெண்கள் கணவனைப் பிரிந்திருத்தல் கூடாது. ஒரு சமயம் தொழில்காரணமாக வெளியூர் செல்ல நேர்ந்தால் நாயகன் சென்ற இடத்தில் அவனுக்கு வழியில் இன்னல் நேராமலும் இன்பம் உண்டாகவும் இறைவனை வணங்குதல் வேண்டும். பெண்டிர்க்குத் தமது கணவனுடன் ஒருமித்து வாழும் இன்பத்தைக்காட்டிலும் உயர்ந்த இன்பம் சுவர்க்கலோகத்திலுமில்லை. நாயகனுடன் உறைவது வனவாசமேயாயினும் இந்திரலோகவாசமென எண்ணுவது உயர்குலப் பெண்டிரது இயல்பு.

ஸ்ரீராமர் தந்தைசொற்படி பதினான்குவருடம் ஆரண்யவாசத்திற்காக சடைமுடியுடன் சீதை வாழுகின்ற திருமாளிகையடைந்தனர். கணவனைக்கண்ட கட்டழகின் மிக்கசீதை எழுந்து தொழுது "நமது நாயகனுக்கு இன்று மகுடாபிஷேகமல்லவா? அந்தக்காலமும் அகன்றுவிட்டதே? மகுடாபிஷேககோலமின்றி மரவுரியுடன் சடா

மௌலியோடு விளங்குகின்றனரே? காரணம் யாது?" என்று ஐயுற்று ரகுநாதரை நோக்கி "ரவிகுல திலக! சிந்தை குடிகொண்ட செல்வ! மணிமகுடந்தாங்குதற்கென இருந்த நீர், சடைமுடியுடன் தோன்றிய காரணம் என்னை? என்ன துன்பம் நேர்ந்தது? கூறியருளல்வேண்டும்" என்றனள் மாகதவண்ணன் மனைவியைநோக்கி, "என் அருமைத்துணைவனாகிய இணையற்ற பரதன் ஆழிசூழ் அவனி முழுவதையும் அரியணை வைகி யரசாளுவன்; தாய்தந்தையாகிய இரு முதுகுரவர்ஆணை மேற்கொண்டு யான் இன்று காடுசெல்வேன்; மலைகள் அடர்ந்த கானகத்தில் தங்கியிருந்து திரும்பிவருவேன்! நீ வருந்தாது இவண் இருப்பாயாக" என்றனர்.

பொருவி வேம்பி புவிபுரப் பான்புக
லிருவராணையு மேந்தினே னின்றுபோய்க்
கருவி மாமழைக் கற்றடங் கண்டு நான்
வருவே னீண்டு வருந்தலை நீயென்றான்.

சானகியின் கற்பின் திறத்தை பெண்மணிகள் உற்றுநோக்குக. இதனைக்கேட்ட சீதாதேவி, தனது கணவன் கானகம் செல்வதற்கும் வருந்தினாளில்லை; கணவன் வெண்கொற்றக் குடையின்கீழமர்ந்து வேலைசூழ் ஞாலமெல்லாம் தனிச்செங்கோல் செலுத்தியாளும் அரசுரிமையை யிழந்தானென்றும் கலங்கினாளில்லை; "நீ வருந்தாதே; நான் நீங்குவேன்" என்ற சொற்களானது செவியைச் சுட்டுவிட்டதால் மனம் வருந்தி துன்பவேலையில் வீழ்ந்தனள். இராவணசங்காரத்தின் பொருட்டு நாராயணர் திருப்பாற்கடலிலிருந்துவந்து இராமனாகத் திருவவதாரம் புரிந்தபோது, அவரைவிட்டுப் பிரியாதிருத்தல்வேண்டுமென்று பரமசுகத்தை நல்கும் பாற்கடல்வாசத்தை வெறுத்து மண்ணுட்டில் வந்து சீதையாக அவதரித்த திருமகள் ஈண்டு "உன்னைவிட்டுப்பிரிவேன்" என்ற சொல்லைக்கேட்டு மனஞ்சகிப்பளோ? கற்பின் கரைகாட்டவந்த காரிகையன்றோ?

நாயகன் வன நண்ணலுற் றனனென்று
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலன்
நீவருந் தலை நீங்குவன் யானென்ற
தீய வெஞ்சொற் செவிசுடத் தேம்புவாள்

சீதை பெருந்துன்புற்று நாயகனது சொல்லை உன்னி உன்னி பெருமூச்செறிந்து "மாரனைப் பழித்த மன்ன! கற்றவர் புகழுங் கற்பகக்கனியே! தந்தையாரும் தாயாரும் சொல்லிய காரியங்களைச்

செய்யத்துணிந்தது சாலவும் நன்றே; யாதுகாரணத்தால் என்னை இங்கே இரு என்று சொன்னீர்? என்னைத் தனியேவிட்டுச் செல்ல தங்கட்கு என்ன தவறு செய்தேன்? தங்களுக்கு என்மீதுள்ள வெறுப்பென்ன? தாய்தந்தையர் தங்களைக் காட்டிற்கு அனுப்பினாரகளென்றால் என்னையும் அனுப்பியதாகும். தங்கள் சுகதுக்கத்தில் எனக்கும் பங்குண்டு; நிழலைப்போல் தங்களை என்றும்பிரியாதிருக்குமாறு தந்தையார் கட்டளையிட்டுளார். திருமணகாலத்தில் "உன்னை விட்டு எக்காலத்தும் பிரியேன்" என்று அக்கினிமுன் சத்தியஞ் செய்தீர்; அதனை மறந்து தாங்கள்மட்டும் இப்போது தனியாகக் கானகம்போவது எவ்வாறு பொருந்தும். தாங்களின்றி எனக்குச் சுவர்க்கம் கிடைப்பினும் வேண்டேன்; தங்களுடன் கூடியிருப்பது நரகமே எனினும் விரும்புவேன்; கணவனையிழந்த காரிகை பிணத்திற்கு நிகராவள்; யானும் தங்களுடன்வர அனுமதிக்கவேண்டும்" என்று கூறி கண்ணீர் சொரிந்து நெஞ்சம் நெகிழ்ந்து நின்றனள். ரகுராமர் "பெண்ணே! பெருந்தவப்பிடியே! வருந்தாதே! உன்னை இங்ஙனம் விட்டுச்செல்வது நின்மீது வெறுப்புகொண்டன்று, விருப்பேயாகும். கானகத்தின் கடுந்துன்பம் நீ யறிந்தாயில்லை, காயுங் கனியும் இலையும் சருகும் உண்ணவேண்டும், அறுசுவையுண்டியை தாதியர் ஊட்ட உண்ட நீ அவைகளை எவ்வாறு உண்பாய்? பஞ்சணையிற்றுயின்ற நீ பாறையின்மீது எவ்வாறு படுப்பாய்? பனியுங் காற்றும் வெய்யிலும் மழையும் மிகுந்தகாட்டில் வாழ்வது நின்னால் முடிந்தகாரியமன்று, பசிதாகத்தைப் பொறுக்கவும் சுனைநீரைக் குடிக்கவும் நீ எப்பொழுது கற்றாய்? வெம்புலி சிங்கம் காட்டானை முதலிய மிருகங்களைக் கண்டால் நீ அஞ்சுவாய், செம்பஞ்சு ஒட்டிய மலரினுமெல்லிய நின்பாதம் கல்லிலும் முள்ளிலும் எவ்வாறு நடக்க முடியும்? துன்பமென்பது இன்னதென்றறியாத நீ இக்கடுந்துன்பத்தை எவ்வாறு அனுபவிப்பாய்? பூ மேல்விழுந்தாலும் தழும்புபடும் நின் பொன்னார்மேனி பேய்கள்வாழும் பருங்கைக் கற்கள் நிறைந்த கானகத்தின் வெப்பத்தை எவ்வாறு தாங்குவாய்? ஆதலால் நீ இவண் சுகமே இருப்பாயாக" என்றனர்.

இவ்வுரைகளைக் கேட்ட சீதை கானகத்தின் றுன்பத்தை ஒருசிறிதும் பொருள்படுத்தினளில்லை என்னே! கற்பின் உறுதி? தாசரதியை நோக்கி "சந்திரவதனா! மரகதவண்ணா! வாழ்ந்தாலும் வாழ்வன்றி நல்குரவிற்றாழ்ந்தாலும் ஒக்க சமைபவளே கற்புடைக்

காரிகையாவள், பதிக்குத் துன்பம் வந்த ஞான்று தானும் பதிவுடனிருந்து அத்துன்பத்தில் பங்கெடுத்துக்கொள்ளல்வேண்டும். தங்களுடனிருந்துண்ணும் காயிலை சருகுகளே எனக்கு விண்ணவரமிர்தம்; மிருகங்களின் ஒலிகள் வேய்ங்குழல் வீணாநாதங்களாம்; கல்லணை மலரினு மினிய மெல்லணையாம்; தாங்கள் முட்களில் நடக்க நேரிடின் யான் அம்முட்களின்மீது முன்னே நடந்து நற்பாதையாக்குவேன்; தங்களுக்குப் பசியுண்டாகின்றபோது காய்கனிதேடி நல்குவேன்; தாங்கள் நடந்து கால்வருந்தியபோது பாதங்களை வருடி அயர்வு நீக்குவேன்; தங்களைவிட்டு இருக்கின்ற இந்த அயோத்திமாநகரமே எனக்குப் பெருங்காடாகும்; பிரளயகாலத்துச் சூரியனது வெப்பத்தைக் காட்டிலும் தங்கள் பிரிவாலுண்டாகும் வெப்பங் கொடியது; தாங்கள் போகின்றகாடு தங்கள் பிரிவுத்துன்பத்தைக் காட்டிலும் சுடுந்தன்மையதோ? தங்களைவிட்டு ஒருகணமும் பிரிந்திருக்கேன்" என்று விழிநீர் பெருக்கி மனமுருகிக்கூறி நாயகனது அனுமதிபெற்று கணவனுடன் நிழல்போல் தொடர்ந்தனள்.

பரி விகந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை யூழி யருக்கனு
மெரியு மென்பது யாண்டைய தீண்டுநின்
பிரிவினுஞ் சுடு மோபெருங் காடென்றாள்.

பெண்மணிகள் சற்று ஊன்றி நோக்குக. கணவனைவிட்டிருக்கும் அரசபோகம் சீதைக்கு அனலாயிருந்தது. கணவனோடிருக்கும் காட்டின் வெப்பம் குளிர்ந்திருந்தது.

பெண்கள் நாயகனுக்குப் புகழையுண்டுபண்ணுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருத்தல்வேண்டும். இதனாலன்றோ "சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்றார் செந்நாப்போதர். கற்புடை மகளிரின்றேல் ஒருவன் ஒருபோதும் புகழுடையமுடியாது. இதனை நன்குவிளக்கும் சீதையின் செயலை பிறிதோரிடத்திற் காண்க.

அசோகவனத்தில் சீதையை அநுமன் கண்டு கணையாழி தந்து நல்லுரை கூறியபின், சீதையைக்கொண்டுபோய் இராமபிரானிடஞ் சேர்க்கவேண்டுமென்றுன்னி, சீதையைப் பணிந்து "அம்மா! என் மொழியை முனியாது கேள். தங்களை அடியேனது புயத்தின்மீது வைத்து ஒரிமைப்போதில் ரகுநாயகன் இருக்கின்ற இடத்தில் சேர்க்கின்றேன்; இடையில் அரக்கர்கள் எதிர்த்தாலும் அவர்களைக்

கொன்று சினந்தணிவேன். ஒருவராலும் கொல்லப்படமாட்டாத அடியேன் தங்களைக்கொண்டு செல்வேனேயன்றி வெறுங்கையுடன் செல்லேன். மேலும் "இலங்கையோடு பேர்த்து என்னைக்கொண்டு போ" என்று கட்டளையிட்டாலும் இலங்கையைப் பேர்த்து ஒரு கையில் வைத்து, மற்றொரு கையால் அரக்கர்களையெல்லாம் அழிப்பேன். ஆயினும் தங்களை இராமபிரானிடஞ்சேர்த்து அவரை மகிழ்வித்தபின் இங்குவந்து இவரையழித்தல் நன்று. ஆகையால் மறுத்துரைக்காது அடியேனது தோளின்மீது ஏறுவீர்; எம்பிரானிடஞ் சேர்ந்து மகிழ்வீர்; விரைவில் வருவீர்" என்றனன்.

சீதை "மாருதி! அன்பின் மிகுதியால் இவ்வாறு சொற்றனை. நின் ஆற்றலுக்கு ஏற்றதே செய்யத்துணிந்தனை; இது உனக்கு அரியதன்று; ஆயினும் இது என் எண்ணத்திற்கு மாறாக இருக்கின்றது. பேதைமையுடைய என்சிற்றறிவிற்கு இதுபொருந்தவில்லை. நீ என்னை எடுத்துக்கொண்டு செல்கையில் வெய்ய அரக்கர்கள்தடுத்து யுத்தம் புரியுங்கால், அவர்களுடன் போர்புரியவு முடியாமல் என்னைக் காப்பாற்றவுமுடியாமல் தடுமாற நேரும். இதுவேயுமன்றி நீ என்னைக் களவடமாகக் கொண்டுபோனால் இராமபிரானது வில்லுக்குப் பழிப்புண்டாகும். களவடமாக கொண்டுசெல்ல நினைத்தல் தகுதியோ? குழந்தாய்! இராமபிரானன்றி அயலார் என்னைத் தீண்டுதல் அறமாகுமோ? நீயும் ஓர் ஆடவனேயாகும், மேலும் நீ இந்த இலங்கையையும் அரக்கரையும் அழிக்கிறேனென்றனை; நான் அழிக்கவேண்டுமென்று நினைத்தால் இன்னல்செய்யும் இராக்கதர்க் குறைவிடமாகிய இந்த இலங்கையைமட்டுமோ? கணக்கில்லாத உலகங்களையெல்லாம் என் சொல்லினால் (சாபத்தினால்) சுடுவேன்; அவ்வாறு செய்தால், தூய்மையுடைய இராமபிரானது வில்லுக்குப் புகழில்லாமற் போய் விடுமென்று எண்ணியிருக்கிறேன், இல்லையேல் இந்த இலங்கை எனக்கு எம்மாத்திரம்? கணவனுக்குப் புகழை விளைவிப்பதே காரிகையார் கடமை. பார்வையினாலேயே இலங்கையை எரிக்கும் ஆற்றல் எனக்கிருந்தும் தசரத குமாரராம் ரகுவீரருக்குக் கீர்த்தியை விளைவிக்கவேண்டுமென்று கருதி சாந்தத்தை வகித்துளேன்.

அல்லன் மாக்க ளிலங்கைய தாதுமோ
எல்லைநீந்த வுலகங்கள் யாவு மென்
சொல்லி னாற்சுடு வேனது தூயவன்
வில்லி னாற்றந்த மாசென்று வீசினேன்.

அநுமனே! ஆதலால் நீ சென்று இரகுநாயகருக்கு நிகழ்ந்தவை கூறி, சிறைமீட்குமாறு செய்வாயாக'' என்றனள்.

சகோதரிகள்! ஜானகியின் அமுதவாக்குகளையும் தூய எண்ணத்தையும் கருத்தூன்றி காண்க.

இதுவேயுமன்றி இலங்காபுரி முழுவதும் சுட்டது அநுமனன்று, அநுமன் வைத்த அக்கினியுமன்று, சீதாதேவியின் கற்புத்தீயேயாம். இதனை விபீஷணர் இராவணனிடங் கூறுமாறு காண்க.

கோநகர் முழுவது நினது கோற்றமும்
சானகி யெனும்பெய நலகின் றம்மனை
யானவள் கற்பினால் வெந்த தல்லதோர்
வானரஞ் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ,

அன்புடையீர்! கற்பின் மாண்பினை யாரே கழறவல்லார்? இத்தகைய கற்பின் பெருந்தகைப் பெண்டிர் வாழ்ந்த நாடு நம் நாடு. ஆதலால் பெண்மக்கள் கற்பிலக்கணத்தை நன்குணர்ந்து அவ்வண்ண மொழுகி பிறந்த வீட்டார்க்கும் புகுந்தவீட்டார்க்கும் பொன்றுப் புகழையுண்டாக்கி என்றும் மழியா இன்பத்தை எய்துவார்களாக.

(தொடரும்.)

வினு விடை மணிகள்.

(ஆதிசங்கரர்)

கிம்கஹநம் ஸ்த்ரீசரிதம் கஸ்சதுரோ யோந கண்டிதஸ்தேந।
கிம்து:கம ஸந்தோஷ: கிம்லாகவ மதமதோ யாச்ஞா ॥

கே :— அளவிடமுடியாதது எது?
ப :— பெண்களின் நடை.
கே :— சமர்த்தன் யாவன்?
ப :— பெண்களின் நடையினால் வஞ்சிக்கப்படாதவன்,
கே :— வறுமை யாது?
ப :— திருப்தியின்மை.
கே :— கீழ்மை யாது?
ப :—கீழ்ப்பட்டவனிடத்தில் யாசிப்பது.

உ

ஓம் குஹாயநம:

கிருகஸ்தம்

(மனையறம்)

(27-வது பக்கத் தொடர்ச்சி.)

மந்திரம், தன்னை அயலார் அவமதித்தல், மாதரைக் கலத்தல், தன்வஞ்சனை, தன் ஆயுள், தான் பிறந்தநாள், தன் வீட்டிற் பொருந்திய குற்றங்கள், தனக்குரிய செல்வம், தன்மனைவியின் குணங்கள் ஆகிய ஒன்பதும், உயிர் நீங்குங்காலம்வரை அயலாரிடம் சொல்லப் படாது.

தகுந்த விஷயங்கள், தான் பெற்றிருக்குங் கடன், கடனை யொழிக்கும்வகை, பொருள்தேடும் வழி, பொருளைச் செலவிடுதல், பெண்ணைமணஞ் செய்து கொடுத்தல், தன்னுடைய நடை, தன் வமிசத்திற் செய்தபாவம், பிறருடைய நல்லகுணங்கள் ஆகிய ஒன்பதையும் ஒளியாமற் சொல்லுதல் வேண்டும்.

உண்மைபேசுதல், சாந்தம், கொலைபுரியாதிருத்தல், அந்தக் கரணங்களை யடக்குதல், ஆசாரம், அளவில்லாமற் கொடுத்தல், கோபத்தை விலக்குதல், திருடாதிருத்தல், அன்னியர் படுந்துன் பத்தைக்கண்டு மனமிரங்குதல் ஆகிய ஒன்பதும் தேவர்கள் எதிர் கொண்டுவந்து தம்மை யழைப்பதற்கு ஆகாயத்திற்கனுப்பிய தூதாகும்.

முகத்திற்கெதிரே ஒன்றுபேசி பிரிந்தால் வேறொன்று பேசுவோர், தூதர், நூற்கேள்வியில்லாத வைத்தியர், பிறர் பொருளை அபகரிப்போர், காமுகர், கொடுந்தொழில் புரிவோர், மல்யுத்தம் புரிவோர், செருக்குடையவர், இழிதொழிலை செய்வோர் ஆகிய ஒன்பது பேருக்கும் பொருள்கொடுத்தல் தீதாகும்.

பெரியோர்கள், சிநேகிதர், தம் வழிமுறையில் நிற்கின்றவர்கள், தரித்திரர், பிறவுயிர்களைத் தன்னுயிர்போற் காப்பவர்கள், துறவிகள், பிதாமாதாக்கள், குரு, தமக்கு உதவி செய்தவர்கள் ஆகிய ஒன்பது பேருக்கும் பொருள் கொடுத்தால் ஒன்று கோடியாகும்.

தன்மனையாளையும், அடைக்கலப் பொருள்களையும், சரணமடைந்தோனையும், தன் குலாசாரத்தையும், சேமநிதியையும், புத்திரனையும்,

புத்திரனுக்காகத் தான்தேடிய பொருள்களையும் மரணத்திற்குச் சமமான துன்பம் வந்தாலும் கைவிடலாகாது.

தமையன் விவாகமில்லாதிருக்கத் தம்பி விவாகஞ் செய்துகொள்ளலாகாது. ஆனால், மூத்தவன் ஊமையாகவேனும் செவிடனாகவேனுமிருந்தாலும், சந்யாசம் பெற்றுக்கொண்டாலும், தூரதேசஞ்சென்று இருக்குமிடம் அறியப்படாதிருந்தாலும் தம்பி விவாகஞ்செய்துகொள்ளலாம்.

அன்னம்படைக்கும் கருவியாலன்றி அன்னத்தைக் கையாற் பரிமாறுதலும், அன்னத்தைக் கையிலேற்றுப் புசித்தலுந் தீதாகும். இரும்பாலாகிய கருவியால் அன்னமிட்டவர்கள் நரகமடை...வார்கள். அவற்றைப் புசித்தவர்களும் அமேத்தியத்தை யுண்டவர்களுக்கு ஒப்பாவார்கள். பல்லை விரலால் தேய்த்தாலும், வெள்ளுப்பைச் சேர்த்து உண்டாலும், கையாலெடுத்து இட்டலவணம், நெய், தண்ணீர், பாற்சோறு இவைகளை உண்டாலும் கோ மாமிசத்தை யுண்டதற்கு நிகராகும். போசனஞ்செய்தபின் வாயில்வார்த்த நீரை கொப்பளித்து உமிழாமற் குடித்தால், தன்னையும் பிதிர்களையும் தேவர்களையும் கொன்ற பாவிகளுக்குச் சமமாவர்.

நீராடாமலும், செபஞ் செய்யாமலும், பூசை செய்யாமலும், பாலர் விருத்தர் முதலியவர்க்கு உணவுதாராமுன்னும், அதிதிகளுக்குத் தாராமுன்னும் கிருகஸ்தன் உண்ணப்படாது. அங்ஙனமுண்போன் அருநரகடைவன்.

பலபேர் கூடியளித்த அன்னத்தையேனும், சீமந்தமுகூர்த்தத்திலேனும் பொருள் பெற்றுக்கொண்டு கல்விகற்பிக்கின்றவர் வீட்டிலேனும் போசனஞ்செய்தால் சாந்திராயணவிரதம் அனுஷ்டித்தல் வேண்டும். பசுவின் தொழுவத்திலும், யாகசாலையிலும், வேதியரிடத்திலும், ஆலயத்திலும் இருக்கும்பொழுது காலைத் தீண்டப்படாது. உண்கலத்தைக் கையிலேனும் மடியிலேனும் வைத்துக்கொண்டு உண்ணலாகாது. கட்டிலிலும் பீடத்திலுமிருந்து உண்ணுதலும் மட்கலத்திற் புசித்தலுமாகாது.

பொய்பேசுதல் குற்றமாயினும் மங்கையர் பிணக்கிலும், மறையவர் உயிர்பிழைக்குமென்னுஞ் சமையத்திலும், பசுவை இரட்சித்தற்பொருட்டும், விவாகஞ்செய்தற்பொருட்டும் பேசும்பொய்யானது மெய்யைக் காட்டிலும் சிறந்ததாகும்.

நீர் பெருக்கத்தில் நீந்துகிறவனும், அக்கினிபற்றி எரிகின்ற சமயத்தில் அருகிற் செல்லுகிறவனும், உயர்ந்த மரத்திலும் கல்லின் மீதும் ஏறுகின்றவனும், மகனையும் மனைவியையும் விலைக்குக்கொடுப்பவனும் ஆகிய ஆறுபேரும் தமக்குத் தாமே இயமனுவார்கள். பசுவின் தொழுவத்தில் நித்திரை செய்தலும், இரகசியத்தை வெளியிற் கூறுதலுமாகாது. தன்னுடைய ஒழுக்கத்தினின்றுந் தவறினவன், தன்னைத்தானே கொன்றவனுவான். தான் சொன்ன சபதத்தை நிறைவேற்றுதவன் மோட்சத்தையடையமாட்டான். புதிதாக வீட்டுக்கு வந்த மருமகளையும், சிறு பெண்களையும், வீட்டிலுள்ள பிணியாளர்களையும், கருப்பவதிகளையும், சிறு குழந்தைகளையும், மூப்புடைய பிதா மாதா முதலியவர்களையும் முன்னே புசிப்பித்தல்வேண்டும். தன் பிதா மாதாக்கள் இறந்த மாதமும் திதியும் வரும்போது ஆண்டுதோறும் அன்புடனும் விதிப்படியும் சிரார்த்தம் செய்தல்வேண்டும். அமாவாசை கிரகணகாலம், உத்திராயணம், தக்ஷிணாயனம், மாதப் பிறப்புமுதலிய புண்ணியதினங்களில் புண்ணியதீர்த்தத்தில் நீராடிப் பிதிர் தர்ப்பணஞ்செய்து அதிதிகளோடும் சுற்றத்தாரோடும் உணவு செய்து, விரதநியமத்துடன் இருத்தல்வேண்டும். இல்வாழ்வானே மற்றைய ஆச்சிரமத்தார்கள் அனைவருக்கும் ஆதாரமானவன். ஆதலால் தரும நிலையும் உலகநிலையும் இல்லறத்திற்றுனே உண்டாகுகின்றன. பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்யாசம் என்கிற நான்கு ஆச்சிரமங்களும், பரகதியையடைவதற்கு நான்குபடியுடன் சேர்ந்த ஓர் ஏணிக்குச் சமானமாயினும் கிருகஸ்தம் மிகவும் சிறந்த நிலையாக ஆன்றோர்களாற் கருதப்படுகிறது.

இல்லறம் மேற்கொண்டோன் ஒரு சமயம் தன்னெழுக்கத்திற் றவறுவானேயாயின் கழுவாயுண்டு. ஏனைய ஆச்சிரமத்தை மேற்கொண்டோர் தவறுவரேல் கழுவாயில்லை. முத்தொழிலுடைய மூவரும், இந்திரன் முதலிய இமையவரும், அகத்தியாதி அருந்தவரும் இல்லறத்தையே நடத்திக் காட்டுகின்றனர். இல்வாழ்வோனுக்கு இம்மை நலனும் மறுமை நலனும் எளிதிலுண்டாகும். இல்லறத்தானது பெருமையை இத்துணையதென்று எவரே யறையவல்லார்?

எவன் மனத்தில் வருத்தமின்றி இந்தக் கிருகஸ்த தருமத்தை நடத்திவருகிறுனே அவன் தனது பித்ரு பிதாமகர்களான முன்னோர் பதின்மரையும், தன் பின்னுள்ளவர்களான பதின்மரையும் பரிசுத்தர்களாகச் செய்கிறுன். முன்பத்தும் பின்பத்தும் தன்னேடும் ஆக

இருபத்தொரு தலைமுறைகளையும் கிருகஸ்தன் முத்தியிற்சேர்க்கிறான். அவன் சக்கிரவர்த்திகளுடைய உலகங்களுக்கு ஒப்பான கதியை அடைவான். அல்லது இந்திரியஜயமுள்ளவர்களுக்குள்ள கதி விதிக்கப்பட்டிருக்கிறது. விமானத்துடன் கூடியதும் வேதத்தில் காணப்பட்டதுமான சுவர்க்கம் மிகவும் அழகானது. அடக்கமுள்ள மனமுடைய கிருகஸ்தர்களுக்கு சுவர்க்கலோகத்தில் நிலையான வாசம் ஏற்படுகிறது பிரமாவினால் இது படியாக ஏற்படுத்தப்பட்டது. முறையாக இந்த இரண்டாவது ஆச்சிரமத்தை அடைந்து அனுஷ்டிப்பதனால் சுவர்க்கத்தில் பூசிக்கப்படுகிறான். இத்தகைய கிருகஸ்த தருமத்தை யனுஷ்டித்தவன் விண்ணாடு புகுங்கால் வானவர்கள் எதிர்கொண்டு அழைத்துச்சென்று தங்களுக்குள் ஒருவனாக உயர்ந்த இடத்தில் இருக்கவைத்து உபசரிப்பர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

—திருக்குறள்.

கிருகஸ்தம் என்னும் இல்லறத்தை மேற்கொண்டோர் ஒவ்வொருவரும் மேற்போந்த தருமங்களை ஊன்றிக் கவனித்து அதன்படி ஒழுகி எல்லா நலன்களையும் எய்தி இன்பமுற்று இனிது வாழ்வாராக.

(தொடரும்).

யக்ஷப்பிரஸ்னை.

வினா :— யஜ்ஞத்திற்குரிய முக்கியமான ஸாமம் எது ?
விடை :— உயிரே யஜ்ஞத்திற்குரிய முக்கியமான ஸாமம்.

வினா :— யஜ்ஞத்திற்குரிய முக்கியமான யஜுஸ் எது ?
விடை :— மனமானது யஜ்ஞத்திற்குரிய முக்கியமான யஜுஸ்.

வினா :— இவர்களுடைய யஜ்ஞத்தை எது வரிக்கிறது ?
விடை :— ரிக்கொன்றே யஜ்ஞத்தை வரிக்கிறது,

வினா :— யஜ்ஞமானது எதை மீறாமல் இருக்கிறது ?
விடை :— யஜ்ஞம் அந்தரிக்கை (வேதவாக்கை) மீறாமலிருக்கிறது,

ஓம் குஹாய நம:

குரு சிஷ்ய லக்ஷணம்

சச்சிதானந்தன்.

(96-ம் பக்கத் தொடர்ச்சி)

சிஷ்ய லக்ஷணம்.

குருநாதன் கிடைப்பானேயாகில் அப்போது கைலையங்கிரியில் சனகாதிகளுக்கு உபதேசித்த பரமசிவனைப்போல் பாவித்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து இருகண்களிலும் கண்ணீர்வார மயிற்குச்செறிவு முதலியன உண்டாகவேண்டும்.

சிவஞானதீபத்தில்

திருமறைமா முனிவருக்கன் றாலநீழற்
றிருந்தவற முரைத்தபெருந் தகைதானிந்த
விருநிலமே லருளுருவாய் வந்துதோன்றி
யிசைந்திடுநேற் றவிடுமினை யுமிபோல் வேய்ந்த
திரிமலவே ரினைநினைவா லுரையால் ஞானச்
செய்கையினு லறுத்திருதாள் சென்னிசூட்டுந்
தருபரனை மருளுலக வாதைநீக்குந்
துணைக்கடலை மனத்திலுறை வணக்கஞ்செய்வாம் எனவும்,

அதிரகசியத்தில்,

கண்டான் குருவைக் கண்ணூக் கதறி வீழ்ந்தான் கமலமிசை
யண்டார் வானே நெடுமாலே யயனே யென்று னகமகிழ்ந்தான் [யே
றெண்டா லியலும் பணிசெய்யத் துணிந்தான் பணிந்தான் மும்முறை
பண்டா லிறைந்த பாவாலுங் காவா யென்னப் பாடினான்.

சிவஞானப்ரகாச வெண்பா

ஆசானைக் கண்டோரு மன்புருக கைதுவியு
மாசாருடம்பு மயிர்க்கூச் செரியும்—பேசாத
வானந்த முன்றூறு மக்கணமே பாசாங்க
டானந்த முத்தி தரும்.

ஆகவே, விதிப்படி சரணடைந்து தன் (1) சரீரம் (2) மனது (3) தனம் (4) வாக்கு என்பவற்றைக் குருநாதனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும்.

(தொடரும்)

---

1. அவர் கட்டளைமீறுமல் நடப்பதுதான சரீர அர்ப்பணம்.
2. தோஷதிருட்டி வரவொட்டாமல் குருநாதன் வடிவத்தையே தியானிப்பது மனதின் அர்ப்பணமாம்.
3. தனத்தையெல்லாம் விட்டு சரணமடைவது தன அர்ப்பணம்,
4. குருநாதன் குணங்களைப் புகழ்ந்துசொல்லுதலோடு தோஷத்தை சொல்லாதிருத்தலே வாக்கின் அர்ப்பணம்.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர். 2 Vol. 2 | ஈஸ்வர ஹூ புரட்டாசிமீ 1உ செப்டம்பர்—1937 | இதழ் 6 No. 6

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

(19) சங்கைதா ஞென்றுதா னின்றியே நெஞ்சிலே
சஞ்சலா ரம்பமாயன்
சந்தோடே குங்குமா லங்க்ருதா டம்பரா
சம்ப்ரமா னந்தமாயன்
மங்கைமார் கொங்கைசே ரங்கமோ கங்களால்
வம்பிலே துன்புறுமே
வண்குகா நின்சோரு பம்ப்ரகா சங்கோடே
வந்துநீ அன்பிலாள்வாய்
கங்கைசூ டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே விஞ்சையூரா
கம்பியா திந்த்ரலோ கங்கள்கா வென்றவா
கண்டலே சன்சோல்வீரா
செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் போன்றவே
சென்றுமோ தும்ப்ரதாபா
செங்கண்மால் பங்கஜா னன்தோழா னந்தவேள்
செந்தில்வாழ் தம்பிரானே.

பதவுரை.

கங்கை சூடும் பிரான் - கங்காநதியைச் சடையிற்றரித்தருளிய சிவபெருமானுடைய, மைந்தனே - திருக்குமாரரே!, அந்தனே - அழகின் மிக்கவரே!, கந்தனே - கந்தப் பெருமானே!, விஞ்சை ஊரா - ஞான நூல்களையே உறைவிடமாகக்கொண்டவரே!, கம்பியாது - (சூராதியவுணர்களது கொடுமையால்) நடுங்காவண்ணம், இந்த்ரலோகங்கள் - தேவர்கோமானுலகமாகிய அமராவதி முதலிய தேவலோகங்களை, கா என்ற - காப்பாற்றவேண்டுமென்று முறையிட்ட, ஆகண்டல ஈசன் சொல் வீரா - அமரர் கோமானாகிய இந்திரன் புகழ்கின்ற வீரரே!, செம் கை வேல் - சிவந்த காத்தில் வீற்றிருப்பதும், வென்றி வேல்கொண்டு - வெற்றியை யுடையதுமாகிய வேலாயுதத்தைக்கொண்டு, சூர் பொன்ற - சூரபன்மன் அழிய (ஏ-அசை), சென்று மோதும் ப்ரதாபா - போர்த்தலத்திற் சென்று தாக்கி 'யமர்புரிந்த, ப்ரதாபா - கீர்த்தியின் மிக்கவரே!, செங்கண் மால் - (தாமரை மலரையொத்த) சிவந்த கண்களையுடைய திருமாலும், பங்கஜானன் - தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவனும், தொழு ஆனந்த வேள் - (பக்தியுடன் பாவி) வணங்கும் ஆனந்த சொரூபியாகிய முருகவேளே!. செந்தில்வாழ் - திருச்செந்திலில் வாழுகின்ற, தம்பிரானே - எப்பொருட்கு மிறைவரே!, சங்கைதான் ஒன்றுதான் இன்றியே - எண்ணல் அளவை ஒன்றுமின்றி அளவில்லாமலே, நெஞ்சிலே - மனத்திலே, சஞ்சல ஆரம்ப மாயன் - விலைமகளிரை யடையவேண்டுமென்ற கவலை ஆரம்பமாகி மாயையுடையவனும், சந்தொடு (ஏ-பிரிநிலை) குங்கும அலங்க்ருத ஆடம்பர சம்ப்ரம ஆனந்த மாயன் - சந்தனம் குங்குமப்பூ முதலிய வாசனைப்பொருள்களையணிந்து (இரத்தினாபரணங்களாலும் ஆடைகளாலும்) அலங்கரித்துக்கொண்டு இடம்பமாகவும் சம்ப்ரமமாகவும் உலாவி இன்புறும் மாயையில் மூழ்கியவனுமாகிய அடியேன், மங்கைமார் கொங்கை சேர் அங்க மோகங்களால் - மகளிரது தனபாரங்களுடைய சரீரத்தின் மீதுள்ள ஆசைப்பெருக்கம் அதனிடத்துள்ள மயக்கமுதலியவைகளால், வம்பிலே துன்புறுமே - வீணாக துன்பத்தையடையாமல், வன் குகா - வள்ளற்றன்மையுடைய குகப்பெருமானே!, நின் ப்ரகாசங்கொடு - (ஏ-அசை) தேவரீரது அருட்பெருஞ் சோதி வீசும் திருக்கோலத்துடன், வந்து நீ அன்பில் ஆள்வாய் - தாங்கள் அடியேனிடம் வந்து அன்பினால் ஆட்கொண்டருளவேண்டும்.

பொழிப்புரை.

உலகங்கள் அழிந்துபோகாவண்ணம் மிகப்பெருகிவந்த கங்கா நதியை தமது சடாடவியிற் சூடிக்கொண்ட கருணைக்கடலாங் கண்ணுதற்பெருமானது திருக்குமாரரே! அழகிற் சிறந்தவரே! கந்தப் பெருமானே! ஞான நூல்களை உறைவிடமாகக்கொண்டவரே! இந்திரலோகங்கள் (சூரபன்மனால்) நடுங்காவண்ணம் காத்தருளவேண்டுமென்று முறையிட்ட தேவர் கோமானால் புகழப்பட்டவரே! சிவந்த (தாமரையனைய) கரத்தில் வீற்றிருக்கும் வெற்றியையுடைய வேலாயுதத்தைக்கொண்டு போர்க்களஞ்சென்று சூரபன்மன் அழியுமாறு தாக்கிய கீர்த்தியின் மிக்கவரே! தாமரை மலரையொத்த கண்களையுடைய நாராயணமூர்த்தியும், தாமரையில் வசிக்கும் நான்முகனும் பக்தியுடன் வழிபட்டு வணங்கும் ஆனந்த சொரூபியாகிய அறுமுக வேளே! செந்திமா நகரத்தில் எழுந்தருளியுள்ள தலைவரே! (விலைமகளிரது மோகத்தாலுண்டாகிய) அளவில்லாத பலவகையாகிய சஞ்சலமானது மனத்திலே முளைக்க ஆரம்பித்த மாயைக்குட்பட்டவனும், சந்தனம் குங்குமப்பூ முதலிய வாசனைகளையணிந்து, (ஆடை ஆபரணங்களால்) அலங்கரித்துக்கொண்டு ஆடம்பரமாகவும் சம்பிரமமாகவும் திரிகின்ற மாயையின் மிக்கவனுமாகிய அடியேன், மாதர்களது தனபாரங்களோடுகூடிய சரீரத்தின்மீதுள்ள ஆசைப்பெருக்கத்தால் வீணே துன்புற்று அழியாவண்ணம் வள்ளல்தன்மையுடைய குகமூர்த்தியே! தேவரீரது அருட்பிரகாசத்தோடுகூடிய திருவுருவத்துடன் வந்து அடியேனை அன்பினால் தடுத்தாட்கொண்டருள வேண்டும்.

விரிவுரை.

கங்கை சூடும்பிரான் :—

கங்கையைத் தரித்த வரலாறு.

முன்னொருஞான்று உமாதேவியார், திருக்கைலாசமலையிலுள்ள சோலையிலே ஒரு விளையாட்டாக ஒன்றும் பேசாதவராய்ச் சிவபெருமானுக்குப் பின்புறத்தில் வந்து, அவருடைய இருகண்களையும் தமது திருக்கரங்களாற் பொத்தினர். அதனால் எவ்வுயிர்களும் வருத்தமடையும்படி புவனங்கள் எங்கும் இருள் பரந்தது. சிவபெருமானுடைய திருக்கண்களினாலேயே எல்லாச் சோதியுந்தழைத்த தன்மை

யினுல், சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய இவர்களின் சுடர்களும் மற்றைத்தேவர்களின் ஒளிகளும் பிற ஒளிகளும் அழிந்து எல்லாம் இருள்மயமாயின. அம்மையார் அரனாது திருக்கண்களைப் பொத்திய அக்கணமொன்றில், உயிர்கட்கெல்லாம் எல்லையில்லாத ஊழி காலங்களாயின. அதனை நீலகண்டப்பெருமான் நோக்கி, ஆன்மாக்களுக்குத் திருவருள்செய்யத் திருவுளங்கொண்டு, தம்முடைய நெற்றியிலே ஒரு திருக்கண்ணையுண்டாக்கி, அதனுல் அருளொடு நோக்கி, எங்கும் வியாபித்த பேரிருளை மாற்றி, சூரியன் முதலாயினோர்க்கும் சிறந்த பேரொளியை யீந்தார். புவனங்களிலுள்ள பேரிருள் முழுதும் நீங்கினமையால் ஆன்மகோடிகள் உவகை மேற்கொண்டு சிறப்புற்றன. சிவபெருமானுடைய செய்கையை உமாதேவியார் நோக்கி அச்சமெய்தி அவருடைய திருக்கண்மலர்களை மூடிய இருகர மலர்களையும் தண்ணென்று எடுத்தார். எடுக்கும் பொழுது தமது பத்துத் திருவிரல்களிலும் அச்சத்தினுலே வியர்வை தோன்ற, அதனை உமாதேவியார் நோக்கி திருக்கரங்களையுதறினர். அவ்வியர்வை பத்துக் கங்கைகளாய் ஆயிரநூறுகோடி முகங்களைப் பொருந்திச் சமுத்திரங்கள்போல எங்கும் பரந்தன. அவற்றை அரியரிபிரமாதி தேவர்களும் பிறருங்கண்டு, திருக்கைலையில் எழுந்தருளிய தேவதேவன்பால் சென்று, வணங்கித்துதித்து, "எம்பெருமானே! இஃதோர் நீர்ப்பெருக்கு எங்கும் கல்லென்று ஒலித்து யாவரும் அழியும்படி அண்டங்கள் முழுவதையும் கவர்ந்தது; முன்னுளில் விடத்தையுண்டு அடியேங்களைக் காத்தருளியதுபோல் இதனையுந் தாங்கி எங்களைக் காத்தருளுவீர்" என்று வேண்டினர்கள். மறைகளுங்காணுக் கறைமிடற்றண்ணல் அந்நதியின் வரலாற்றை அவர்களுக்குச் சொல்லி, அதனை அங்கே அழைத்து, தமது திருச்சடையிலுள்ள ஓர் உரோமத்தின்மீது விடுத்தார்.

அதனைக்கண்டு மகிழ்ந்து நான்முகனும் நாரணனும் இந்திரனும் "எம்மையாட்கொண்ட எந்தையே! இவ்வண்டங்களை யெல்லாம் விழுங்கிய கங்கை உமது அருட்சத்தியாகிய அம்பிகையாரது திருக்காத்திற்றோன்றினமையாலும், உமது திருச்சடையிற் சேர்த்தமையாலும் நிருமலமுடையதாகும். அதில் எமது நகரந்தோறும் இருக்கும்படி சிறிது தந்தருளல்வேண்டும்" என்று வேண்டினர்கள், சிவபெருமான் திருச்சடையிற் புகுந்திருந்த கங்கையிற் சிறிதை அள்ளி அம்மூவர்களுடைய கைகளிலுங் கொடுத்தார். அவர்கள் வாங்கி

மெய்யன்போடு வணங்கி, விடைபெற்றுக்கொண்டு தத்தம் நகர்களை யடைந்து அங்கே அவற்றை விடுத்தார்கள். அந்த மூன்று நதிகளுள் பிரமலோகத்தையடைந்த கங்கை பகீரதமன்னனுடைய தவத்தினுற் பூமியின் மீண்டுவர, சிவபெருமான் பின்னும் அதனை திருமுடிமேற் றாங்கி, பின் இந்த நிலவுலகிற் செல்லும்படி விடுத்தார். அந்நதி சகரர்கள் அனைவரும் மேற்கதிபெற்றுய்யும்படி அவர்கள் எலும்பிற் பாய்ந்து சமுத்திரத்திற் பெருகியது. இதனையொழிந்த மற்றை இருநதிகளும் தாம் புகுந்த இடங்களில் இருந்தன. நமது அருட் சத்தியாகிய உமையம்மையாருடைய திருக்காத்திற்றோன்றிய கங்கா நதி உலகங்களையழிக்காவண்ணம் திருவருண்மேலீட்டால் சிவபெருமான் அதனை திருமுடியிற்றரித்த வரலாறு இதுவேயாம்.

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடி? [ம்
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லா
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ.

—திருவாசகம்.

பங்கஜானன் = பங்கஜாசனன், சகரங்குறைந்து இடைக்குறை யாயிற்று.

ஆனந்தவேள் :—

முருகப்பெருமான் ஆனந்தமூர்த்தியாம். இதனை "ஆனந்தம் ப்ரஹ்ம" எனும் யஜுர்வேத தைத்திரீயோபநிடத ஆனந்தவல்லி வசனத்தாலும், "கந்தசுவாமி சிவபெருமானது தோளின்மீது ஏறியிருந்தனர்; அஞ்ஞான்று சிவபெருமான் அளவற்ற ஆனந்தசொரூபியாயினும் தம்முடைய உத்தமபுத்திரராம் ஆனந்தசாகரத்தினது திருமேனி பரிசித்தலாய அளப்பறு மகிழ்தநீரில் அமிழ்வாராயினர்" எனும் பொருளைத்தரும் முதல்வன்புராண சம்பவகாண்டத்து 34-ம் அத்தியாயத்து 4, 5ஞ் சுலோகங்களானுமறிக.

"ஆனந்த வத்துவின் கழல் வாழ்த்தி வணங்குவாம்"

என்ற ஸ்ரீமத் குமரகுருதாசசுவாமிகள் திருவாக்கையும் உய்த்துணர்க. இதனாலன்றோ முருகப்பெருமானது திருவருள் பெறாதார்க்கு ஆனந்த மில்லையென்பது ஆன்றோர் கொள்கை.

கருத்துரை.

கங்கைமிலேச்சிய கண்ணுதற்கடவுளது திருக்குமாரரே! கந்த மூர்த்தியே! கலை விநோதரே! இந்திரனுல் துதிக்கப்பெற்றவரே! வெற்றிவேலைக்கொண்டு சூரனையழித்த பெருங் கீர்த்தியையுடைய வரே! அரியயனுல் தொழப்பட்ட ஆனந்தமூர்த்தியே! செந்திலாதிப! சஞ்சலமனமுடையவனுகி வாசனைப்பொருள்களையணிந்து ஆடம்பர மாகத்திரிகின்ற மாயையுடையவனுகிய அடியேன், விலைமகளிர் வலைப் பட்டு அழியாவண்ணம் தேவரீர் தமது திருவருட்பிரகாசத்திருமேனி யுடன்வந்து காத்தருள்வீர்.

(20) அங்கை மென்குழ லாய்வார் போலே
சந்தி நின்றய லோடே போவா
ரன்பு கொண்டிட நீரோ போறீ ரறியீரோ
அன்று வந்தொரு நாள்நீர் போனீர்
பின்பு கண்டறி யோநா மீதே
அன்று மின்றுமோர் போதோ போகா துயில்வாரா
எங்க ளந்தரம் வேறு ரோர்வார்
பண்டு தந்தது போதா தோமே
லின்று தந்துற வோதா னீதே னிதுபோதா
திங்கு நின்றதேன் வீடே வாரீ
ரென்றி ணங்கிகள் மாயா லீலா
இன்ப சிங்கியில் வீணே வீழா தருள்வாயே
மங்கு லின்புறு வானுய் வானு
டன்ற ரும்பிய காலாய் நீள்கால்
மண்டு றும்புகை நீறு வீறு எரிதீயாய்
வந்தி ரைந்தெழு நீராய் நீர்சூழ்
அம்ப ரம்புனை பாராய் பாரேழ்
மண்ட லம்புகழ் நீயாய் நானுய் மலரோனுய்
உங்கள் சங்கரர் தாமாய் நாமார்
அண்ட பந்திகள் தாமாய் வானுய்
ஒன்றி லுங்கடை தோயா மாயோன் மருகோனே
ஒண்த டம்பொழில் நீடூர் கோடூர்
செந்தி லம்பதி வாழ்வே வாழ்வோர்
உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே.

பதவுரை.

மங்குல் இன்புறு வானாய் - மேகமானது இன்புற்று சஞ்சரிக்கும் ஆகாய பூதமாகியும், வானூடு அன்று அரும்பிய காலாய் - அவ் வாகாயத்தில் அந்நாளில் தோன்றிய வாயுபூதமாகியும், நீள்கால் மண்டுறும் புகை நீறு வீறு எரி தீயாய் - பெருங்காற்றுடன் நெருங்கி புகையுடனெழுந்து யாவற்றையும் நீறுக்கும் வன்மையுடைய அக்கினிபூதமாகியும், வந்து இரைந்து எழும் நீராய் - ஒலித்து எழுந்துவரும் அப்புபூதமாகியும், நீர் சூழ் அம்பரம் புனை பாராய் - தண்ணீரைத் தனக்கு ஆடையாகப்புனைந்துள்ள பிருதிவி பூதமாகியும், பார் ஏழ் மண்டலம் புகழ் நீயாய் - நிலம் முதலிய ஏழுலகங்களும் புகழும் குகக்கடவுளாகிய தாங்களாகவும், நானாய் - அடியேனாகவும், மலரோனாய் - பிரமதேவாகியும், உங்கள் சங்கரர் தாமாய் - உமது பிதாவாகிய சிவபெருமானாகவும், நாம் ஆர் அண்ட பந்திகள் தாம் ஆய்வானாய் - எத்துணையவோ என்று அச்சத்தை விளைவிக்கக்கூடிய எண்ணிலாத அண்டகோடிகளை ஆராய்பவராகியும், ஒன்றிலும் கடை தோயா - முடிவில் ஒன்றிலும் கலப்பில்லாதவராகியுமாகிய, மாயோன் - மாயவன் என்னும் திருமாலினது, மருகோனே - மருகரே! ஒண் தடம் பொழில் நீடு ஊர் - ஒளி பெற்றதும் விசாலமுடையதுமாகிய மலர்ச்சோலைகள் சூழ்ந்த புராதன தலமாகிய, கோடு ஊர் — சங்குகள் தவழும், செந்தில் அம்பதி வாழ்வே - திருச்செந்தூர் என்னும் க்ஷேத்திரத்தின் வாழ்வையுடையவரே! வாழ்வோர் உண்ட நெஞ்சு அறி தேனே - அத்தலத்தில் வாழ்பவர்கள் பருகிய உள்ளத்தில் தித்தித்தறிந்துகொள்ளும் ஆனந்தத்தேனே! வானோர் பெருமாளே! தேவர்களுக்கெல்லாம் பெருமானாக வீற்றிருப்பவரே!, அம் கை மென்குழல் ஆய்வார் போலே - அழகிய கரத்தால் மென்மையாகிய அளகபாரக் கூந்தலை சிக்கெடுப்பவர்களைப்போல், சந்தி நின்று - பல தெருக்கூடுமிடத்தில் நின்று, அயலோடே போவார் - அயலிடத்திற்கெனச் செல்லுவோர்கள், அன்புகொண்டிட - தங்கள்மீது அன்புகொள்ளும்படி, நீரோ போறீர் - நீங்களா போகின்றீர்கள் ?, அறியீரோ - நான் நிற்பதை அறியவில்லை போலும் ?, அன்று வந்து ஒருநாள் போனீர்-அன்றைத் தினம் ஒருநாள் இவ்விடம் வந்து போனீர், நாம் பின்புகண்டு அறியோம் - நாம் பின்னர் ஒருவரையொருவர் பார்த்து அறியவேயில்லை, ஈதே - உம்முடைய அன்பு இதுவோ ? அன்றும் இன்றும் ஓர்போதா போகா - தாங்கள் என்னிடம் வந்துபோன அன்றுதொடங்கி இன்று

வரை ஒரு பொழுதே போகிறதில்லை, துயில் வாரா - இரவில் தூக்கமே வருவதில்லை, எங்கள் அந்தரம் வேறு ஆர் ஓர்வார் - எமது இரகசியத்தை தங்களைத்தவிர வேறு யார்தான் ஆராயவல்லவர்? பண்டு தந்ததுபோதாதோ- முன்பு கொடுத்தீரே அதுவே போதாதோ? மேல் இன்று தந்து உறவோதான் - இனிமேல் இன்றைக்கு வேறு பொருள் கொடுத்துத்தான் உறவாடவேண்டுமென்பதில்லை, ஈதேன் இது போதாது - இது என்ன தாங்கள் இப்படி வந்து தெரிசனம் கொடுத்தீரே இது போதாதோ? இங்கு நின்றது என் - நடுவீதியாகிய இங்குநின்றிருப்பது எதற்கு? வீடே வாரீர் - வீட்டிற்கு வாருங்கள், என்று இணங்கிகள் மாயா லீலா - என்று இவ்வாறு இணக்கமாகப்பேசி (பொருள்பறிக்கும்) மாயா லீலையுடைய, இன்ப சிங்கியில் - விலைமகளிரது இன்பமாகிய குளிர்ந்து கொல்லும் விஷக்குழியில், வீணே வீழாது - வீணே விழுந்து உழலாவண்ணம், அருள்வாயே - அருள்புரிந்து காப்பாற்றவேண்டும்.

பொழிப்புரை.

மேகங்கள் இன்புற்றுலவும் ஆகாய பூதமாகியும், அவ்வாகாயத்தில் அந்நாளில் தோன்றிய வாயுபூதமாகியும், பெருங்காற்றுடன் நெருங்கியெழும் புகையுடன்கூடி யாவற்றையும் நீறுக்கும் வலியுடைய அக்கினிபூதமாகியும், ஒலித்தெழுந்துவரும் அப்பு பூதமாகியும், நீரை ஆடையாகவுடைய பிருதிவி பூதமாகியும், நிலம் முதலாக (சத்திய உலகம் ஈறாகவுள்ள) ஏழுலகங்களும் புகழும் தேவரீராகியும், அடியேனுமாகியும், பிரமதேவராகியும், உமது பிதாவாகிய சிவமூர்த்தியாகியும், எத்துணையவோ? என அச்சத்தை விளைவிக்கும் அண்ட பந்திகளை ஆராய்பவராகியும், முடிவில் ஒன்றிலும் தோயாத மாயவனாகிய திருமாலினது மருகரே! ஒளிபெற்றதும் விசாலமுடையதுமாகிய சோலைகளால் சூழப்பெற்ற புராதனதலமும், சங்குகள் தவழப்பெற்றதுமாகிய திருச்செந்திலம்பதியில் வாழ்கின்றவரே! அத்தலத்தில் வாழ்வோர்கள் பருகிய நெஞ்சத்தில் தித்திக்கும் ஆனந்தத்தேனே! தேவர் பெருமாளே! அழகிய காத்தினால் மெல்லிய கூந்தலை ஆராய்பவரைப் போல் பல தெருக்கூடுமிடத்தில் நின்று அயலில் செல்லும் ஆடவர் தம்மீது அன்பு கொள்ளுமாறு நீங்களாபோகிறீர்? என்னைப்பார்க்கவில்லைபோலும்? அன்று ஒரு நாள்வந்துபோயினீர். பின்பு உம்மைக் காணவேயில்லை, உமது அன்பு இதுவோ? நீர்வந்துபோன அன்று

முதல் இன்றுவரை பொழுதே போகிறதில்லை. இரவில் தூக்கமும் வருவதில்லை. உம்மைத் தவிர எமது உள்ளக்கிடக்கையை ஆராயவல்லவர் யாவர்? முன்பு கொடுத்ததுபோதாதோ? இனிமேல் இன்று புதிதாகக் கொடுத்து உறவாடவேண்டுமோ? வேண்டியதில்லை. என்ன இது; நீர் இங்குவந்து தெரிசனந்தந்தீரே இது போதாதோ? இங்கு நிற்பது எதற்கு? வீட்டிற்கு வாருங்கள் என்று இணக்கமாகப் பேசி (அழைத்துக்கொண்டுபோய்) மாயலீலைகளைப்புரியும் இன்பம்போல் குளிர்ந்து கொல்லும் விலைமாதராது நச்சுக்குழியில் அவமே வீழ்ந்தழியாவண்ணம் அருள்புரிவீர்.

விரிவுரை.

"அங்கை மென்குழ . . . . . . என்றிணங்கிகள்"

நடுவீதியில் நின்று அவ்வீதிவழியே செல்லும் இளைஞர்களை வலிந்தழைத்து பல இனியவார்த்தைகளைக்கூறி, கண்வலை வீசி, தமது நடையுடைகளால் மயக்கி, மனமுடனே பொருளையும் ஆவியையும் பறிமுதல்புரியும் விலைமகளிரது சாகசங்களை எடுத்துக்கூறி; அதனிடத்து மயங்காவண்ணம் விழிப்பை யுண்டுபண்ணுகிறார். சிவஞானந் தலைப்படுமாறு பத்திநெறி சென்று முத்திநிலையடைய விழைவார்க்கு முதற்படி மாதராசையை நீக்குவதேயாம். முதலில் விலைமகளிரை வெறுத்து இல்லறத்திருந்து பின்னர் அதனையும் வெறுத்து நிராசையை மேற்கொள்ளவேண்டும்.

எங்கேனு மோருவர்வர அங்கேக ணினிதுகோடு
இங்கேவ ருனதுமயல் தரியாரேன்
றிந்தாவே னினியஇதழ் தந்தேனை யுறமருவ
என்றுசை குழையவிழி யிணையாடி
தங்காம லவருடைய வுண்டான பொருளுயிர்கள்
சந்தேக மறவேபறி கோளுமானர்
சங்கீத கலவிநல மென்றேது முதிவிட
தண்பாரு முனதருளை யருள்வாயே
—திருப்புகழ்.

சந்தி = என்பதற்கு மாலைநேரம் என்றும் பொருள்கொள்ளலாம்.

சிங்கி = குளிர்ந்து கொல்லும் நஞ்சு.

மங்குலின்புறு. . . . . மாயோன்:—

விஷ்ணு என்றால் வியாபகன் என்று பொருளாதலின் பஞ்ச பூதங்களாகியும் விளங்குகின்றனர். சங்கரர் தாமாய், முருகனாய்,

என்பதன் பொருள் : நாராயணர் சிவனடியாராதலால் சிவ சாரூப்ய மும் விஷ்ணுவுக்கு உளதாதலால் சிவமூர்த்தியாகவும் விளங்குகிறார் என்றனர். நாராயணர் திருநீறு தரித்து உருத்திராக்கமணிந்து சிவ வழிபாடு செய்கின்ற சிவனடியாரில் முதன்மையானவர். அங்ஙனஞ் சிவபெருமானை வழிபட்ட ஆலயங்கள் இற்றைக்கும் ஆங்காங்கு விளங்குகின்றன.

உண்டநெஞ்சறிதேனே :—

பத்திநெறி சென்று தினந்தோறும் இறைவனை மன மொழி மெய் என்ற மூன்று கரணங்களாலும் வழிபட்டு, இறைவனது திரு வருட் பெருமையை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்து, கண்ணீர் மல்கி, உரைதடுமாறி உரோமஞ் சிலிர்ப்ப ஒழியா ஆர்வத்துடன் அன்பு செய்வார்க்கே அப்பெருமானுடைய தியானனந்தம் இனிக் கும். அவ்வாறு வழிபடத்தெரியாத அபாக்யவான்களுக்கு அம்மது ரம் இனிப்பது யாங்ஙனம்? அன்பு நெறி நின்று ஆண்டவனை வழி படுவார்க்கு அவ்வானந்தத்தேன் நினைக்குந்தோறும் பேசுந்தோறும் காணுந்தோறும் மற்று எக்காலத்தும் இன்பத்தை வழங்கும். இதனை மணிவாசகனார் தமிழ்மறை தெரிக்குமாறு காண்க.

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

இறைவனைத் தேனே என்று பரிந்தழைக்கும் ஆன்றோர் அமுத வாக்குகளையும் உற்று நோக்குக.

"திருவே என் செல்வமே தேனே வானோர் செழும்
பொருளே"

—அப்பர்.

"சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத்
தேவதேவனைத் தித்திக்குந் தேனை"

—சுந்தரர்.

கருத்துரை.

பஞ்சபூத சொரூபியாயும் யாவையுமாயும் விளங்கும் திருமாலி னது மருகரே! செந்திலாதிப! உண்ட நெஞ்சறி தேனே! தேவர் பெருமானே! விலைமகளிரது மாயாலீலையிற் சிக்கி வீணே அழியாமல் நின் திருவருளால் அடியேனைக் காத்தருளல் வேண்டும்.

———

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

(142-ம் பக்கத் தொடர்ச்சி.)

विशालेषु कर्णान्द दीर्घेष्वजस्रम्
दयास्यन्दिषु द्वादसस्वीक्षणेषु ।
महीषत्कटाक्षः सकृद्पाति तस्चे
द्भवेत्ते दयाशीलका नाम हानिः ॥

(15) விசாலேஷு கர்ணாந்த தீர்கேஷ்வஜஸ்ரம்
தயாஸ்யந்தி ஷுத்வாத சஸ்வீக்ஷணேஷு
மயீஷத் கடாக்ஷ: ஸக்ருத் பாதிதஸ்சேத்
பவேத்தே தயாசீல காநாமஹானி ||

பதவுரை.

ஹே தயாசீல! - கருணை நிறைந்தவரே!
விசாலேஷுகர்ணாந்த தீர்க்கேஷு - விசாலமாக காதுவரையில் நீண்டிருப்பனவைகளும்,
தயாஸ்யந்திஷு - கருணைப்பெருக்குடையவைகளும் ஆன,
த்வாதசஸு ஈக்ஷணேஷு - பன்னிரண்டு திருக்கண்களில்விளங்காநின்ற,
கடாக்ஷ: - கடைக்கண் பார்வையானது,
ஸக்ருத் - ஒருதடவையேனும்,
ஈஷத் - சிறிது,
மயி - என்மீது,
பாதித:சேத் - செலுத்தப்பட்டதேயானால்,
தே - தேவரீருக்கு,
காநாமஹாநி பவேத் - என்ன கெடுதல்தான் உண்டாகப்போகின்றது.

பொழிப்புரை.

ஓ தயாஸ்வபாவமுடையவரே! மிக விசாலங்களும் அன்பர்களை காக்கவேண்டுமென்னும் கருணைப் பிரவாகத்தை யுடையவைகளும் ஆகிய தேவரீரது பன்னிரண்டு திருக்கண்களிலுள்ள கடாக்ஷங்களில் சிறிது ஒரு தடவையேனும் என்மீது செலுத்தினல் தேவரீருக்கு என்ன குறைதான் நேரிடப்போகின்றது.

सुताङ्गात्भवोमेऽसि जीवेति षद्धा
जपन्मन्द्र मीशो मुदाजि घ्रतेयान् ।
जगद्भारभृद्यो जगन्नाथ तेभ्यः
किरीटोज्ज्वलेभ्यो नमोमस्त केभ्यः ॥

(16) ஸூதாங்காத்[3] ப[4]வோமேஸி ஜீவேதிஷட்[3].கா[4]
ஜபன்மந்த்ர மீசோமுதாஜிக்ரதேயான் ।
ஜ[3]க[4]த்பார ப்ரு[3]த்ப்யோ ஜ[3]கந்நா[2]த தே[4]ப்ய:
கிரீடோஜ்வலேப்யோ நமோமஸ்த்த கேப்ய: ॥

பதவுரை.

ஹே ஸூத	- ஓ குழந்தாய்,
மே	- எனது,
அங்காத்	- அங்கத்தினின்றும்,
பவ:அஸி	- தோன்றியவனாகவிருக்கின்றாய்,
ஜீவ	- ஆயுஷ்மானாக இரு
இதி மந்த்ரம்	- என்கிற மந்திரத்தை,
ஈச:	- பரமசிவன்
ஷட்தா	- ஆறுதடவை,
ஜபன்	- ஜபிக்கின்றவராய்,
முதா	- மகிழ்ச்சியோடு,
யான் ஜிக்ரதே	- எவைகளை முகர்கின்றாரோ,
ஹே ஜகன்னாத !	- உலகத்திற்கு தலைவனே,
கிரீடோஜ் வலப்ய:	- கிரீடங்களினாற் பிரகாசிக்கின்றவைகளும்,
ஜகத்பாரப் ப்ருத்ப்ய:	- உலகத்தின் சுமையைத் தாங்குகின்றவைகளுமான,
தேப்ய: மஸ்த்தகேப்ய: நம:	- தேவரீருடைய அத்தகைய சிரசுகளுக்கு நமஸ்காரம்.

பொழிப்புரை.

ஓ குழந்தாய் நெடுங்காலம் ஜீவித்திருவென்கிற மந்திரத்தைச் சொல்லி பரமசிவக்கடவுள் எந்த சிரசுகளை முகர்கின்றாரோ கிரீடங்களை அணிந்திருப்பவைகளும் உலகத்தின் சுமையைத் தாங்குகின்றவைகளும் ஆன தேவரீருடைய அத்தகைய சிரசுகளை நமஸ்கரிக்கின்றேன். இதனால் முருகக்கடவுளின் ஆறு சிரசுகளைத் தியானிப்பவர்கள் உலகத்தில் மிகச் சவுக்கியத்துடன் நெடுங்காலம் வாழ்ந்திருப்பார்கள் என்பது சூசிப்பிக்கப்பட்டது.

स्फुरद्रत्नकेयूरहाराभिराम-
श्चलत्कुण्डल श्रीलसद्गण्ड भागः ।
कटौ पीतवासाःकरे चारु शक्तिः
पुरस्तान्ममास्तां पुरारेस्तनूजः ॥

(17) ஸ்புரத்ரத்ந கேயூர ஹாராபிராம
ஸ்சலத்குண்டலஸ்ரீ லஸத்கண்ட பாக: |
கடௌபீதவாஸா: கரேசாரு சக்தி:
புரஸ்தான்மமாஸ்தாம் புராரேஸ்தனூஜ: ||

பதவுரை.

ஸ்புரத் ரத்நகேயூர ஹாராபிராம: - அழகிய ரத்தினங்களைப் பதித்த தோள்வளை, முத்துமாலை, இவைகளால் மனதைக் கவருகின்றவரும்,
சலத்குண்டல ஸ்ரீலஸத்கண்டபாக: - அசைகின்ற ஒளியால் பிரகாசியாநின்ற கன்னங்களையுடையவரும்,
கடௌபீதவாஸா: - இடுப்பில் பீதாம்பரத்தையும்,
கரேசாரு சக்தி: - கையில் அழகிய வேற்படையையும் உடையவரும்,
புராரே: தனூஜ: - பரமசிவக்கடவுளுக்கு புத்திரனும் ஆன முருகப்பெருமான்,
மம புரஸ்தாத் ஆஸ்தாம் - எனக்கெதிரில் ப்ரத்யக்ஷமாகட்டும்.

பொழிப்புரை.

மிகப்பிரகாசியாநின்ற ரத்தினங்களைப்பதித்த தோள்வளை முத்துமாலை குண்டலங்கள் இவைகளுடனும் இடையில் பீதாம்பரமும் கையில் வேலாயுதமும் தாங்கிக்கொண்டு கண்களைக்கவரும் வனப்போடு பரமசிவபுத்திரனாகிய முருகப்பிரான் என்முன்னால் எழுந்தருளட்டும்.

(தொடரும்)

உ

ஓம் குஹாயநம:

கந்தர் திருவிளையாடல்

பார்வதியம்மையார் திருமணம்.

(149-ம் பக்கத் தொடர்ச்சி)

உமாதேவியாரது தவத்தைக்கண்டு திருவருள்வழங்கி வெள்ளியங்கிரி சென்று வீற்றிருந்தருளிய விரிசடைக்கடவுள், எழு முனிவர்களை வருமாறு திருவுளத்தே நினைந்தருளினர். நீலகண்டரது நினைவையுணர்ந்த இருடிகள் எழுவரும் அஞ்சி, உடல் நடுங்கி, விரைந்துவந்து சிவமூர்த்தியை வணங்கி "தேவதேவ! பங்கயன் மால் முதலிய பண்ணவர்கள் உமது ஏவலுக்கு உரியவர்களாயிருப்ப, அடியேங்களை நினைந்தருளினீர்; அதனால் அவர்கள் செய்த தவத்தினும் யாங்கள் செய்ததவம் அதிகம்போலும். எம்மை யீன்றருளிய எந்தையே! எங்களை வருமாறு கருணையுடன் நினைந்தருளினமையால் நாங்கள் உய்ந்தனம்; எமது தீவினை தீர்ந்தது; இனியொரு தீமையுண்டாகுமோ? ஆன்மாக்களுய்யும் வண்ணம் ஐந்தொழில்களை அநாதியே தொடங்கி இடையறாதியற்றும் ஆதிநாயக! எமது சிறுமை நீங்குதற்பொருட்டு சிந்தித்தனை; அடியேங்கள் விரைந்து செய்யும்பணியைப் பணித்தருள்வீர்" என்று விண்ணப்பம் புரிந்தார்கள். சிவபெருமான் "அன்புடையீர்! நீவிர் இமயமலையரசனிடமேகி உமாதேவியை இன்று நமக்கு திருமணம் செய்துத்தருமாறு பேசி, விரைந்து வருவீர்கள்" என்று பணித்தருளினர்.

சத்த முனிவர்கள் இறைவனது ஏவலைச் சிரமேற்றாங்கி வணங்கி, இமயவெற்படைய, இமவான் தன் மனைவியுடன் எதிர்கொண்டு வந்தித்து, இருக்கையீந்து, அருச்சனைமுதலிய வழிபாடுசெய்து, துதித்து நின்று "தபோதனர்களே! உமது திருவடிகள் ஈண்டு படுதலால் இவ்விமயமலை, மேருமலையினும் புனிதமுடையதாகித் தலைமை பெற்றது; நாயினேனது பிறவித்துன்பமும் இப்போழ்தே நீங்கியது; நீங்கள் அடியேன்பால் வந்த காரணம் யாது? என்றான். இருடிகள் அகிலாண்டங்களையுமீன்ற நின் புதல்வியை உயிர்க்குயிராய்நின்ற சிவமூர்த்தி திருமணம் புரிந்துகொள்ளுதற்பொருட்டு நின்பால் எம்மை ஏவினர்" என்றார்கள். வரையரசன் "மூவர்க்கு முதல்வராகிய

முக்கட்பரமர்க்கு அகிலாண்டகோடியீன்று கன்னியென மறைபேசும் மாகதவல்லியை மணஞ்செய்துத்தந்து என்னையும் அடிமையாகத் தருவேன்" என்றனன். உடனே அருகில்நின்ற அவன் மனைவியாகிய மேனை "நான்முகன் புதல்வனாகிய தக்கன் தனது புதல்வியைக் கல்யாணஞ் செய்துகொடுக்க, சிவபெருமான் அவனுடைய தலையை யறுத்தார் என்று கூறுகின்றார்கள். அதனை நினைந்து நினைந்து நெஞ்சம் அஞ்சுகிறது; ஆதலால் எங்கள் குலமகளைக் குன்றவில்லிக்குத்தருவது எவ்வாறு?" என்றனள். முனிவர்கள் மேனையை நோக்கி "அம்மா! நீ வருந்தாதே; தேவதேவாகிய சிவபெருமானது செய்கையை நீ நன்றாக அறிந்தாயில்லை. தக்கன் வேள்வியிலே தமக்குத் தரக்கூடிய அவியைமறுத்து சிவநிந்தை செய்தகால் அவன் தலையைத் தடிந்தனர். தம்மை வழிபாடுசெய்வோர்க்கு அறக்கருணையும், அல்லாதார்க்கு மறக்கருணையும் செய்வர். இவ்வுண்மையை அறிஞர்கள் அனைவருமறிவார்கள்; நீயும் அறியக்கடவாய்; வேறொன்றும் எண்ணற்க" என்றனர். மலையரையன் "இது சரதம்" என்ன, மேனை அஞ்சி, நடுநடுங்கி, "எம்பெருமானுடைய திருவருட்செயல்களை அறியாது சொல்லிவிட்டேன்." என்று நினைந்து வருந்தி, இருடிகளது திருவடிகளை வணங்கிநின்று, "பெண்ணறிவென்பது பெரும் பேதமையை உடையதன்றோ? சிவனாது திருவருட்குணங்களை ஒரு சிறிதுமுணரேன்; அறிவின்மையால் யான்கூறிய புன்மொழிகளைப் பொறுத்தருள்வீர்" என்றனள். அருந்தவர்கள் அருள்புரிந்தார்கள். வரையரசன் "தவநெறிப்பெரியீர்! இவள் புன்மொழியைத்திருவுளங் கொள்ளாதொழிமின்; உமாதேவியை விரைவில் திருமணம்புரிந்து கொள்ள வரும்வண்ணம் சிவமூர்த்திக்குத் தெரிவியுங்கள்" என்றான். அதுகேட்ட இருடிகள் மனமிக மகிழ்ந்து ஆசிகூறிவிட்டு, திருக்கயிலாயமடைந்து, சிவபெருமான் சந்நிதிசென்று, திருமணத்திற்கு மலையரையன் உடன்பட்டமையை விண்ணப்பஞ்செய்தார்கள். கண்ணுதற்கடவுள் "முனிவர்களே! உங்கள் செயலைச் செய்யச்செல்லுமின்" என்று விடைதர, இருடிகள் எண்டோளனை இறைஞ்சித் தங்கள் இருக்கையடைந்தார்கள்.

வரையரையன் சிவபெருமானது திருவருளையுன்னி உளமகிழ்ந்து தேவதச்சனை விளித்து "பார்வதி பரமேஸ்வர மணவினை நிகழ்த்த இந்நகரை இந்திரலோகம்போல் 'எழில்பெற அலங்கரிப்பாய்!' என்ன, தேவதச்சன் வாழைக் கமுகுகளை நாட்டி, தோரணங்களை

நீட்டி, நவரத்தினங்களால் மண்டபம், தடாகம், சிகரம் முதலியன உண்டாக்கி, நறுமணங்கமழ மலர்தூவி, பூஞ்சோலைகள்சூழ ஓர் மண்டபத்தைப்புதுக்கி கண்டவர்கள் கண்கவருங் கவினுடையதாக அலங்கரித்தனன். மலையரையன் அது கண்டு மகிழ்ந்து மாலயனாதி வானவர்களைத் தங்கள் தங்கள் மனைவியர்களுடன் திருமணங்காண வருமாறு தூதர்களை எங்கும் விடுத்தான். தேவர் கூட்டங்களும் முனிவர் கணங்களும் இமயமலையில் கூடி எள்ளிட இடமின்றி இருந்தன. இலக்குமி, வாணி, இந்திராணி, இருடி பத்தினிகள், தேவமாதர்கள் முதலிய பெண்மணிகள் கடல்போல் ஆங்கு குழுமியிருந்தார்கள். மகாமேரு மந்தரம் முதலிய உறவினரும், சத்த நதிகளும், நாக இனங்களும் திக்குயானைகளும் பிறவும் வந்தன. கண்பெற்றதன் பயன் இன்றே கிடைத்தது என்று ஒவ்வொருவரும் மட்டற்ற மகிழ்ச்சி மிக்குற்றிருந்தனர்.

மலையரையன், தனது தமருடன் கயிலைமலைசென்று, நந்திதேவரனுமதி பெற்று உள்ளே சென்று, முக்கண்மூர்த்தியைத் தொழுது "எந்தையே! அகிலாண்ட நாயகியைத் திருமணங்கொள்ளத் திருவுளங்கொண்டருளினீர்; கணிதவல்லுனர்கள் மங்கல தினமெனக் கூறிய பங்குனி உத்தரம் இன்றேயாகும்; எமது பரமபதியே! இப்பொழுது இமையமலைக்கு எழுந்தருளுவீர்" என்று விண்ணப்பம் புரிந்தான். சிவபெருமான் "நாம் இப்பொழுதே வரம்பில்லாத கணங்கள் சூழ இமையவரைக்கு எழுந்தருளுவோம்; நீ முன்னே செல்லுதி" என்ன வரையரசன் வரைவில்லியை வணங்கி தனது நகரையடைந்தான்.

கண்ணுதற்கடவுள் நந்திதேவரை நோக்கி "நம்முடைய திருமணக்கோலத்தைத் தெரிசிக்கும்பொருட்டு, உருத்திர கணங்களையும், அரியயனாதி அமரர்களையும், ஏனையோரையும் இங்கு தாக்கடவாய்" என்ன; நந்திதேவர் "அனைவரும் வரவேண்டுமென" நினைத்தவுடனே எல்லோரும்வந்து ஈசனை இறைஞ்சி எழுகடல் திரண்டதென்ன நின்றனர். அத்தருணம் பிரமதேவர், மணிமகுடம் முதலிய திவ்வியாபரணங்களைப்படைத்து, பொற்றட்டில் வைத்து, சிவபெருமான் திருமுன் வைத்து, வணங்கிநின்று "எந்தையே! உமக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை; அடியேங்கள் உய்யும்பொருட்டு திருக்கல்யாணம் செய்ய வுளமிசைந்தீர். உமது திருமேனியிலுள்ள பாம்பு பன்றிக்

கொம்பு சிரமாலை ஆமையோடு முதலியவைகளை நீக்கி, இந்த இரத்தினுபரணங்களை அணிந்தருளல் வேண்டும்'' என்று விண்ணப்பம் புரிந்தார். புரமெரித்த பொன்னூர்மேனிப் புரிசடைக்கடவுள் புன்முறுவல்கொண்டு “நான்முக! நீ அன்போடு தந்தமையால் இவற்றையணிந்தாற்போல மகிழ்ந்தோம்'' என்று அக்கலன்களைக் கரத்தாற்றொட்டனர். பின்னர் திருமேனியிலுள்ள பாம்பு எலும்பு முதலியவைகள் இரத்தினுபரணங்களாக இறைவன் எண்ணியவுடன் அவைகள் அவ்வாறுயின. அதுகண்டு அனைவரும் அற்புதமுற்று அஞ்சலி செய்தார்கள்.

ஆலமுண்ட அரனூர் இமயவெற்புக்குச் செல்லவுன்னி, தமது கணநாதர்களுக்குக் குறிப்பாலுணர்த்தி, இருக்கைவிட் டெழுந்து, நந்திதேவர் துதித்து முன்செல்ல, அருந்தவரும் அமரரும் புகழ, விஞ்சையர் இசைபாட, வேதாகமங்கள் வியந்து துதிக்க, திருக்கோயிலினின்று நீங்கி, தமது பாததாமரைகளைக் குண்டோதரன் புயமீது வைத்து தருமவிடைமீது ஏறியருளினூர். அவ்விடபாரூடக்காட்சியைக்கண்டு அனைவரும் “ஹரஹர'' என்று கடல்போல் ஆர்த்து அஞ்சலி செய்தார்கள். சந்திர சூரியர் தண்ணிழற்குடையையும், வாயு சாமரத்தையும், வருணன் சாந்தாற்றியையும், அமரர்கோன் ஆலவட்டத்தையும் எடுத்துக்கொண்டு அருகில் நின்று ஏவல்செய்தனர். பூதங்கள் பற்பல இன்னிசைக் கருவிகளை முழக்கின; இறைவன் ஏவலினூலே அரியயனுதி அனைவர்களும் தத்தம் ஊர்திகளின்மேல் புடைசூழ்ந்து சென்றனர். இவ்வாறு இறைவன் காண்போர் கண்கவரும் கட்டழகுடன் இமையவெற்படைந்தனர். அஃதறிந்த இமவான் தமருடன் எதிர்கொண்டு வணங்கி, தனது ஒஷதிப்ரஸ்தமென்னும் நகரத்துக்கு அழைத்தேகினுன். இருடிகள் பல பூரணகும்பங்களை ஏந்திக் கொண்டுவந்தார்கள்; மகளிர் அட்டமங்கலங்களைக் கொண்டுவந்து காட்டினூர்கள்; சிலமகளிர் நீராஞ்சனஞ் சுற்றினூர்கள். திருமணச் சாலை சென்றவுடனே அனைவரும் ஊர்திவிட்டிறங்க அரனும் விடையினின்றும் இறங்கியருளினூர்.

மலையரையன் மனைவியாகிய மேனை அரம்பையர்களோடு வந்து எம்பெருமானுடைய இணையடிகளைக் காமதேனுவின் பாலினூலாட்டி, கைதொழுதுகொண்டு திரும்பினுள். உடனே சிவபெருமான் திருநந்திதேவர் கொண்டுவந்துவைத்த பாதுகையின்மேல் தமது பாதங்களைவைத்து இருபுறத்தும் நாரணனும் நான்முகனும் கைகொடுப்ப,

தமது திருக்கரங்களால் பற்றிக்கொண்டு, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, தும்புரு நாரதர் பாட, உருத்திரர் சூழ, கணங்கள் ஆரவாரிக்க, திருக்கோயினுட்சென்று, அரியயன் வேண்ட, ஆங்குள்ள அழகுகளை திருநந்திதேவர்காட்டச் சென்றுசென்று பார்த்தருளினர்.

பின்னர், எம்பெருமான் திருமணமண்டபத்தேகி இந்திரநீல மணித்தவிசின்மேல் வீற்றிருந்தருளினர். வீரபத்திரர், காலாக்கினி உருத்திரர், கூர்மாண்டேசர், ஆடகேசுரர், ஐயனுர் முதலிய உருத்திரர்களும், அரி அயன் ஆகண்டலனுதி அமரர்களும், அருந்தவரும் தத்தமக்குரிய ஆசனங்களில் சிவமூர்த்தியைச்சூழ்ந்து இருந்தார்கள். அக்காலை பார்வதி பரமேசுவரரது திருமணவைபவத்தைத் தெரிசிக்கும்பொருட்டு எப்புவனத்திலுமுள்ள யாவரும் அங்கு குழுமியதால் இமயமலை நடுங்கியது. பூமியின் வடபால் தாழ, தென்பால் உயர்ந்தது; தேவர்முதலிய யாபேரும் ஏங்கி "சிவசிவ ஹரஹர" என்று ஓலமிட்டார்கள். அதுகேட்ட அரனுர் நந்திதேவர்மூலம் அகத்திய முனிவரையழைத்து, "அகத்தியனே! இங்கு அனைவரும் கூடினமையால் வடபால் தாழத் தென்பால் உயர்ந்தது; இதனுல் ஆன்மகோடிகள் அல்லலுறுகின்றன; இதனைச் சமன்செய்ய நீ உடனே தென்ஞடு சென்று பொதியமலையின்மேல் இருக்கக்கடவாய்" எனப்பணித்தனர். அகத்தியர் அச்சமுற்று "பரமகருணநிதியே! அடியேன் புரிந்த குற்றம்யாது? தமது திருமணக்காட்சியைக் காண்டற்கின்றிக் கொடியேனை யகற்றுகின்றீர்; எனது கண்கள் தவஞ்செய்யவில்லை போலும்" என்றனர். சிவபெருமான் "முனிவா! உனக்கு இணையான இருடிகள் உலகில் உண்டோ? இல்லை; அயனும் நினக்கு நிகரல்லன்; ஆதலால் நினைத்தவையனைத்துந் தவறின்றிமுடிக்குந் திறமுடையாய்; இச்செயற் கருஞ்செயலை ஏனையோரால் செய்தற்கியலாது; யாவரினும் மேலாய நின்னுல்மட்டும் இதுசெய்தற்கெளிது; செல்லுதி" என்றனர். அகத்தியமுனிவர் "எமது பரமபிதாவே! அரியயனுதி அமரர்கள் நிற்க, அடியேனுக்கு இதனைப்பணித்தருளினீர்; உமது திருமணக்காட்சியைக் காண்பதற்கு என்மனம் விழைகிறது; அதனைவிட்டு நீங்குதற்கு வருந்துகிறேன்; இதற்கு என்செய்வேன்" என்ன, சிவபெருமான் "நீ சற்றுந்தியங்காது பொதியமலைசெல்வாய் நாம் அங்குவந்து நமது திருமணக்கோலத்தைக் காட்டுவோம்; நீ மகிழ்ந்து தெரிசிப்பாய்; நம்மை தியானித்து அங்கு சின்னுளிருந்து பின்பு முன்போல் நமது பக்கத்தில் வருவாயாக" என்று அருளிச்

செய்தனர். ஆழியைப்பருகிய அகத்தியனார் அதற்கியைந்து அரனாரைப் பன்முறை வணங்கி துதித்து நெட்டுயிர்த்து அரிதினீங்கி பொதியாசலம் போந்து, புரிசடையண்ணலைத் தியானித்திருக்க பூமி சமனாகியது. ஆன்மாக்கள் அலக்கண் நீங்கி அழலேந்தியைத் துதித்து மகிழ்ந்தன.

இமவான் உமையை அழைத்துவருமாறு ஏவ தேவமாதர் பணி செய்ய சிவகாமசுந்தரி மணமண்டபமெய்தினள்.

அங்கது பொழுதுதன்னி லரசன திசைவா லெங்கள்
சங்கரி யையைக் காப்பச் சசியென்பா ளடைப்பை யேந்தக்
கங்கைகள் கவரிவீசக் காளிகள் கவிகை பற்றப்
பங்கய மான்கைப் பற்றிப் பாரதி பரவவந்தாள்.

அங்ஙனம் வந்த அம்மையார் ஆதியுமந்தமுமில்லா அண்ணலை அஞ்சலிசெய்ய, சிவமூர்த்தி "நம் அருகில் அமருதி" என்று பணித்தருள, பார்ப்பதியார் இலக்குமிமுதலியோர் துதிக்க எம்பெருமான் பக்கத்தின் எழுந்தருளி யிருந்தார். மலையரையன் சிவபெருமானை வணங்கி மேனை கரகநீர் விடுப்ப, அவரது பதாம்புயங்களை விளக்கி, சந்தனத்தாலும் நறுமலராலும் பூசித்து, உமாதேவியின் கரமலரை இறைவன் கரத்தில் வைத்து, "அடியேனது புதல்வியை உமக்குத் தந்தேன்" என்று வேதமந்திரங்களைச் சொல்லி தாராதத்தஞ் செய்தான். அப்பொழுது அரம்பையர்கள் ஆடினார்கள்; சித்தகந்தருவர்கள் பாடினார்கள்; தும்புரு நாரதர் இசை கூடினார்கள்; திருமகளும் கலைமகளும் மங்கலப்பாடலை ஓதினார்கள்; விண்ணவர் தண்மலர்சொரிந்தனர்; பூதர்கள் மங்கலவாத்தியங்களை முழக்கினார்கள்; முனிவர்கள் வேதங்களைச் சொன்னார்கள்; இமவான் பால், நெய், தேன், மா கதலி பலா முதலிய கனிகள் முதலியவைகளை எம்பிரான்முன் வைத்து, "எந்தையே! இவற்றைத் திருவமுது செய்தருளவேண்டும்" என்று வேண்டினன். மங்கைபங்காளர் மனமகிழ்ந்து "நாம் இவற்றை அமுது செய்தாற்போல உவந்தோம்; நீ எடுத்துக்கொள்வாய்" என்ன, மலைவேந்தன் அன்போடு அந்த நிருமாலியத்தை எடுத்து மலர், கந்தம், நீர் என்பவற்றோடும் ஒருபுறத்தில் வைத்தான்.

கலைமகள் நாயகன் மலைமகள் நாயகனை வணங்கி, தேவதேவ! விண்ணவரும் மண்ணவரும் மணவிதியை உணர்தற்பொருட்டு, சர்வலோகைக நாயகராகிய தேவரீர் நடத்திக்காட்டவேண்டும்; ஆதலால்

மணச்சடங்கை முற்றுவிக்கும்பொருட்டு அனுமதி தாவேண்டும்" என்று வேண்ட; முக்கண்ணர் முறுவல்செய்து இயைந்தருள, திசைமுகன் தீ வளர்த்து வெள்ளியும் வியாழனும் பிறமுனிவரும் அருகிருந்து மறையறைய மணவினைச் சடங்கை இனிது செய்துமுடித்தான். அனைவரும் அம்மையப்பரை அஞ்சலி செய்தார்கள். அம்மையும் அப்பனும் அனைவருக்கும் அருள்புரிந்தார்கள். இமவான் சிவநிருமாலியமாகிய தீர்த்தம் சந்தனம் மலர் முதலியவற்றை அனைவருக்கும் வழங்கினன். அவற்றைப்பெற்று அனைவரும் உட்கொண்டு அணிந்து "இன்றே நம் வினையனைத்தும் அழிந்தன" என்று பெருமகிழ்வுற்றார்கள்.

அப்பொழுது தாபத நிலையாளாகி அங்கிருந்த இரதிவந்து சிவபெருமானை வணங்கி "சர்வசீவ தயாபரா! அடியேனது அல்லலையகற்றியருளுக" என்று குறையிரந்தனள். எண்டோளிறைவன் கருணைசெய்தவுடனே மன்மதன் தோன்றி சிவமூர்த்தியை வணங்கி "கிருபாநிதியே! அடியேனது குற்றத்தைப் பொறுத்தருள்க" என்று துதித்தனன். மலைமகள் பங்கன் "மதனா! நமக்குச் சினமிருந்தாலன்றோ மன்னித்தல்வேண்டும்; வருந்தாதே; நீ இரதிக்குமட்டும் உருவமாகவும், மற்றையோர்க்கு அருவமாகவும் இருந்து நின்னரசியலை நடத்தக்கடவாய்" என்று அவனுக்கு உரிய அரசையும் ஆற்றலையும் தந்து இரதியுடன் இருக்கை செல்ல விடைகொடுத்தருளினர்.

பின்னர் சிவபெருமான் உமாதேவியோடு மணித்தவிசினின்றுமெழுந்து மறையொலியும் மங்கலமுழவும் முழங்க இடபமீதூர்ந்து திருக்கயிலாயமலையடைந்தனர். மாலயனாதி வானவரையும் மலையரையனையும் ஏனையோரையும் தத்தம் இருக்கைசெல்ல விடைகொடுத்தருளி, இடபத்தினின்று மிறங்கி திருக்கோயிலினுட்சென்று மலைமகளுடன் முன்போல் அரியணைமேல் வீற்றிருந்தருளினர். உயிர்க்குயிராகிய உமாதேவியுடன் கண்ணுதற்பரமன் வீற்றிருந்தருளலும் ஆண் பெண் என்னும் இருபாலினவாகிய ஆன்மகோடிகள் துன்ப நீங்கி இன்பமுற்றிருந்தன.

(தொடரும்.)

ஓம் குஹாய நம :

கற்பு

(155-வது பக்கம் தொடர்ச்சி)

பெண்களுக்கு சிறந்த அணிகலம் கற்பு என்பதாம். உயிரினுஞ் சிறந்ததாக ஓம்பத்தக்கது இக்கற்பு என்பது. கற்பு அழிய நேரிடுங்கால் உயிரைத் துரும்பாக நினைத்துத் துறப்பார்கள் கற்புடை மாதர்கள். இத்தகைய கற்பானது வடவைத்தீயினும் வெப்பமுடையது. கற்புடை மாதரைக் கனலுந்தீண்ட அஞ்சும். கானகத்தில் எதிர்ப்பட்ட பெருங் கனலைக்கடந்த சந்திரமதியின் கற்பை யுணராதார் யாவர்?

இராவணவதத்திற்குப்பின், இராமபிரான் சீதையிடம் நற்செய்தி கூற அநுமனை ஏவினர். அநுமன் சீதையின்பாலேகி இராவணவதத்தையும் இராமனது வெற்றியையும் கூறினன். சானகிபிராட்டியார் அளவற்ற மகிழ்ச்சியடைந்தனள். இராமபிரான் விபீடணனை நோக்கி "அன்ப! எனது வாழ்க்கைத் துணைவியாகிய சானகியை நன்ருக அலங்கரித்து அழைத்து வருவாயாக" என்றனர். விபீடணர் சீதைபாற்சென்று வணங்கி, அம்மா! இரகுநாயகர் தங்களைக்காணவிரும்புகின்றனர்; தேவர்களுந் தெரிசிக்கவந்துளார்; துன்பத்தை விடுத்து அழகுபெற அலங்கரித்து வருவீர்" என்றனர். சீதை "யான் இங்கு ரகுநாயகனைப் பிரிந்தபின் துன்புற்றிருந்த இக்கோலத்தை தேவர்களும் எனது பதியும் ஆங்குள்ள முனிவர்குழாங்களும் கற்பின் மிக்க மாதர்களும் காண்பதே பெருமை; அலங்கரித்துக்கொண்டேகுதல் நலமன்று" என்றனள். விபீடணர், "அம்மா! இது இரகுவீரரது ஆணை" என்ன, அன்னையுமிணங்க மேனகை ஊர்வசி முதலிய தேவமாதர்கள் மாசுற்ற திருமேனியும் சிக்குற்ற கருங்கூந்தலும் அழுக்கு படிந்த ஆடையுங்கொண்டிருந்த சீதாபிராட்டியாரை மங்கல நீராட்டி, அழகெலாந் திரண்டொன்ருக அமைந்ததுபோல் அலங்கரித்து, விமானத்தின்மீது ஏற்றி இரகுவீரரிடம் கொணர்ந்தார்கள். சீதை போர்க்களங்கண்டு களித்து விமானத்தினின்றிழிந்து, இராமபிரானடியில் வீழ்ந்து இறைஞ்சி "இனி மரணம் நேரினும் நன்று"

என்று மகிழ்ந்து துன்பம் நீங்கினவராய் கைகுவித்து நின்றார். அவ்வாறு நின்ற கற்புக்காசும் காரிகையார் திலகமும் பத்துமாதமாக உணவுநீத்த உத்தமியும், பொற்புக்கழகுமாகிய சானகியாரை இராமச்சந்திரர் கோபக்குறியுடன் நோக்கி கடிந்துரைக்கலாயினர்.

நீதிநெறி வழுவிய நிருதனாகிய இராவணனது பெரிய இலங்கையில் நெடுநாள் வாழ்ந்து அவன்கீழ் அடங்கியிருந்தாய்; அறுசுவையுணவுவகைகளையும் விரும்பியுண்டாய்; நல்லொழுக்கம் பாழ்பட இறந்தாயில்லை; இத்தன்மையளான நீ இப்பொழுது அச்சமின்றிஈண்டுயாது கருதிவந்தாய்? நான் உன்னை விரும்புவேன் என்று கருதினையோ? சானகி! உன்னைச் சிறைமீட்டு அழைத்துக்கொள்ளுதற்பொருட்டு கடலில் அணைகட்டி இராவணாதியரை அழித்தேனில்லை; தன் மனைவியைக் கவர்ந்தவனைக் கொன்றிலன் என்ற பழிப்பினின்றும் என்னை மீட்டுக்கொள்ளுதற்பொருட்டு நான் இலங்கைக்குவந்து பகைவென்றேன்; அன்பு நீங்கியவளே! அமிர்தத்தினுமினியதென்று ஊன் தின்றனையே; கள்ளைக்குடித்தனையே; இவ்வாறு மதுமாமிசபட்சணஞ்செய்து உயிருடனிருந்தாயன்றோ? அவ்வாறாகிய நீ அத்தகைய வுண்டிகளால் எமக்குச்செய்யும் விருந்துகள் உளவோ? உயர் குணங்களெல்லாம் உன்னைவிட்டு ஒழிந்தன; நீ நற்குலத்திற்பிறவாது வலியில்லாத புழுவைப்போல் நிலத்திற்பிறந்ததால் அப்பிறப்பின் தன்மையைப் பூரணமாகச்செய்துவிட்டாய்

பெண்மையும் பெருமையும் பிறப்புங் கற்பெனுந்
திண்மையும் ஒழுக்கமுந் தெளிவுஞ் சீர்மையும்
உண்மையு நீயெனு மொருத்தி தோன்றலால்
வண்மையின் மன்னவன் புகழின் மாய்ந்ததே.

நாணம் முதலிய மகளிர்க்குரிய குணங்களும் பெருமையும் உயர் குடிப்பிறப்புக்கேற்ற இயல்பும், பதிவிரதாதருமத்தின் உறுதியும், நல்லொழுக்கமும், தெளிவும், புகழும், உண்மையும், நீ ஒருத்தி தோன்றியதனால் ஈகையில்லாத அரசனது கீர்த்தி அழிதல்போல உலகத்தில் அழிந்தன. உயர்குலப்பெண்டிர் கணவனைப்பிரிந்த காலத்து ஐம்புலன்களை அடக்கிவைப்பர், ஒழுக்கத்தை உறுதியாகக் கொண்டு தலைமயிரை வாரிமுடிக்காமல் சடைத்தொகுதியாகத் திரித்துவிட்டிருப்பர்; கற்பின் உறுதியால் மாதவம் செய்வர்; ஒரு பழியுண்டாகுமேல் உயிரைநீத்து அப்பழியைப் போக்கிக்கொள்வர், பல கூறுவதில் பயன் யாது? உனது தீயொழுக்கமானது எனமனத்தையறுக்

கின்றது; ஆதலால் நீ இப்பொழுது செய்யக்கடவது இறந்தொழி வதே அல்லது உனக்குத் தக்கதோரிடத்தில் செல்லுதி" என்று கடிந்துரைத்தனர்.

இவ்வுரைகளைக்கேட்ட முனிவர்களும், தேவர்களும் அளவில் லாத மக்களிரும் நிருதரும், வாநரர்களும் வாய்விட்டலறினார்கள். நாணத்தால் தரையை நோக்கித் தலைகவிழ்ந்துநின்ற மலரில் வைகும் மங்கையர்க்கரசியார், இவ்வளவுகாலம் இராமனைப்பிரிந்து வருந்தி யவர் இப்பொழுது அவ்விராமனது கடுஞ்சொற்களைக் கேட்டவுடனே புண்ணைக்கோல்கொண்டு கிளரியதுபோல் மிக்க வருத்தத்தால் இரண்டு கண்களினின்றும் இரத்தமும் நீரும் மிகுதியாகச்சிந்த நினைப் பற்று நெடுமூச்சுவிட்டார். பருந்துகள் மிக்க பாலைவனத்தில் சிக்கி நீர்விடாயால் வருந்தி மரணத்தருவாயில் இருக்கிற மான் பெரிய நீர் நிலையைக்கண்டு அதில் இறங்கவொண்ணாதபடி பெரியதடை ஏற் பட்டாற்போல அறிவுகலங்கிநின்று, நீண்டகண்களினின்றும் நீர் மழைசிந்த உலகினை நோக்கி "நான் இதுகாறும் தீயொழுக்கமின்றி நல்லொழுக்கத்தோடு உயிர்வாழ்ந்திருந்து பெற்ற பயன் இவ்வளவே போலும், எனது நல்வினை இவ்வளவோடு பயன்தந்து கழிந்தது" என்று கூறி இராமபிரானை நோக்கிக் கூறுவாரானார்.

வரையாதுவழங்கும் வள்ளலே! அநுமான் முன்பு இவ்விலங்கை க்குவந்து என்னைப்பார்த்து, "நீர் இவ்விடத்திற்கு எழுந்தருள்வீர்" என்று எனக்குத் தேறுதல்கூறிச்சென்றனன்; எல்லோரினும் மேலாவ னான அவ்வநுமான் இங்குசோர்ந்துகிடந்த எனது நிலைமையை உள்ள படி உமக்குக்கூறவில்லைபோலும்; அவ்வநுமான் தூதலட்சணபூர்த்தி யுடையவனல்லனோ? புருஷோத்தம! இவ்வளவுகாலம் நான் மிகுந்த துன்பத்தோடு காத்துவந்தனவாகிய எத்துணைச் சிறந்த தவமும், எத் துணை நற்குண நற்செய்கைகளும், எத்துணைச் சிறந்த பதிவிரதாதரும மும் ஆகிய இவைகளெல்லாம், 'நீர் உமது திருவுளத்தில் அறிந்திடா ததனால் பைத்தியச் செயலெனும்படி வீணே பழுதுபட்டது; நான் உலகமுழுவதிலும் சிறந்த பதிவிரதை; பிரமனுக்கும் மாற்றக்கூடிய மனநிலையுடையேனல்லள், இங்ஙனமிருந்தும், இராமபிரான் இவ்வாறு இழிவாக எண்ணினால் இக்கருத்தை மாற்றும் வகையை தெய்வம் அறிவதோ? நான்முகன், நாரணன் நாரிபங்கன் ஆகிய மும்மூர்த்தி களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எல்லாப் பொருள்களையும்

உள்ளபடி உணரவல்லாராயினும் மாதர்களுடைய மனத்தின் நிலைமையை இத்தன்மையதென்று உள்ளபடி உணரவல்லரோ? ஆதலால் இனி எனது குற்றமற்ற கற்பு நெறியை வேறு யாருக்குத்தான் சொல்லியுணர்த்தக்கடவேன்? இந்நிலையில் எனக்கு இறத்தல்போலச் சிறந்தது வேறொன்றில்லை, "இறப்பாய்" என்று கட்டளையிட்டது தக்கதே, எனது வினைப்பயனும் அங்ஙனமே உள்ளதுபோலும்" என்று சொன்னாள்; மீளவும் சீதை இலக்குமணனை அருகில் அழைத்து "அக்கினியை அமைப்பாய்" என்றுகூற, இலக்குமணன் அதுகேட்டு மனம்வருந்தி, உயிர்களுக்குப்புகலிடமாகிய அவ்விராமபிரானை வணங்க, ஸ்ரீராமர் கண்குறிப்பால் "செய்" என்று கூறினார். இலக்குமணன் இராமர் கருத்தையுணர்ந்து, மரணவேதனைக்கு நிகரான வருத்தத்தையடைந்து, விம்மிவிம்மி அழுதலாற் சொரிகின்ற கண்ணீரையுடையவனாய், அவ்விடத்தில் தீப்பிரவேச முறைப்படி தீயை வளர்த்தனன். விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் தாயாராகிய சீதாதேவியார் தீயருகில்நடந்து சென்றனர். அக்கடுஞ்செயலைக்கண்டு சகிக்க மாட்டாமையால் நான்கு வேதங்களும் சிறந்த அறமும் எல்லாவுயிர்களும் வாயைத்திறந்து கதறின, சீதாபிராட்டியார் அக்கினிப்பிரவேசஞ் செய்தற்பொருட்டு அக்கினியை வலம்வரும்போது சுவர்க்கம் முதலிய உலகங்களும் கலக்கமுற்றுக் கதறின, ஓவென்றலறி இராமனை நோக்கி "ஐய! இத்தன்மையதான இத்தனியாக் கோபம் தகுதியில்லாதது" என்று கூறின. இந்திரன் மனைவியர் முதலிய தேவமாதர்கள் ஆகாயவெளியிலே நின்று கதறுகின்றவர்களாய்ச் சிவந்த கைகளால் அழகிய தங்கள் கண்களை மோதிக்கொண்டு துடித்தார்கள். பிரமாதி தேவர்களெல்லாம் உள்ளமும் உடலுந் நடுங்கினார்கள். பூதலத்தைச் சுமக்கிற ஆதிசேடனுடைய படம் சுருங்கியது. அப்பணியரசனது வாயினின்று கக்கிய விஷம் பரவுவதால் உலகமுழுவதும் தவிப்படைந்தது, சூரியன் முதலிய சுடர்கள் இடம் பிறழ்ந்தன, கடல்கள் கதறின, சங்குவளையல்களை யணிந்த சானகிபிராட்டியார் அக்கினியை நோக்கி "தழற்கடவுளே! நான் மன மொழி மெய் என்கிற திரிகரணங்களில் ஒன்றினாலேனும் களங்கமுடையேனாயின், என்னை நீ கடுமையாக எரித்துவிடு" என்று கூறி புனத்துழாயலங்கல் பூவைவண்ணனைப் போற்றிசெய்து, ஆழ்ந்த பெரிய நீர்நிலையில் ஓங்கியெழுந்த செந்தாமரை மலராகிய தனது வாழிடத்தையே சென்று சேர்பவள்போல் அந்தத்தீயில் விரைவாகப்

பாய்ந்தனள். அங்ஙனம் பாய்ந்தவுடன் அந்தக்கற்பரசியின் பதிவிரதாதருமமாகிய நெருப்பினால் அந்த அக்கினி வெண்ணிறமுள்ள பஞ்சுபோல் எரிந்தது. சீதையின் கற்புத் தீயால் தவிப்படைந்து எரிகிற மேனியுடையவனாகிய அக்கினிதேவன் தத்துவஞானத்தின் கொழுந்தாகிய இராமபிரானைக்குறித்து அபயம் வேண்டிப் பேரொலி செய்து கைகுவித்து வணங்கி அம்மையாரைக் கரத்திற்றாங்கிக் கொண்டு எழுந்தான். தன் கணவன் காட்டிய கோபத்தாலாகிய தாபத்தால் சீதையின் திருமேனியில் அரும்பிய வேர்வைநீர்த்துளிகளும் உலரவில்லை; அப்பிராட்டியின் கூந்தலிற் சூடிய பூக்கள் தன்னிடம் மொய்த்து இசைபாடுகிற வண்டுகளோடும் இடைவிடாது துளிக்கின்ற தேனோடும், நீரில் தோய்த்து எடுக்கப்பட்டனபோலக் குளிர்ந்து காணப்பட்டன. இன்னும் இதைப்பற்றி மாறுசொல்ல வேண்டுவது உளதோ? நிலைதுலைந்துள்ள உலகங்களும் பிறழ்ச்சி பொழிந்து சரிவரநின்றன. இரங்கியவர்களுடைய உயிர்களெல்லாம் அச்சமொழிந்தன; அருந்ததிமுதலிய மாதர்கள் மகிழ்ச்சியின் மிகுதியால் கூத்தாடுபவராகி நாணமும் அடக்கமும் நீங்கப்பெற்றனர்.

அக்கினிதேவன் இராமபிரானை நோக்கி "நீர் எனது எளிமையைத் திருவுள்ளத்திற்கொள்ளாமல் தமது மனைவியாரது பதிவிரதா தருமமாகிய தெய்வீக அக்கினியைக்கொண்டு என்வலியை நீக்கினீர்; நீர் சீதாதேவியை மாத்திரமேயன்றி என்னையும் கோபித்தனை போலும்; என்றனன். இராமபிரான் அக்கினியை நோக்கி "நீயார்? நீ நெருப்பினுள்ளே தோன்றிக் கூறியது என்ன? தீயொழுக்கம் மிக்க இவளை நீ எரித்திடாமல் காப்பாற்றினை; அத்தன்மை யார் சொல்ல நிகழ்ந்தது? கூறுதி" என்றனர். அக்கினிதேவன் "இரகுவீர! யான் அக்கினிதேவன்; என்னை உலகமாதாவாகிய இத்தேவியினது கற்புத்தீ எரிக்க, அத்தாபத்தைப் பொறுக்கமாட்டாமையால் இந்த அணைந்தேன், இங்ஙனம் எனக்கு நேர்ந்த தன்மையைப் பார்த்தபின்பும் இப்பிராட்டியின் ஒழுக்கத்தைப்பற்றி நீ சங்கித்து நிற்கக்கடவையோ? குலமகளிரை மணஞ்செய்துகொள்வதும், அம்மகளிர் கற்பொழுக்கத்தினின்று விலகினர்களானால் அவர்கள் ஒழுக்கத்தைக் குறித்துப் பிரமாணமாக வைத்துக்கேட்பதும், ஏனைய விஷயங்களிலுண்டான ஐயத்தை நீக்கிக்கொள்வதும் ஆகிய இவையெல்லாம் என்பக்கலிலேயே நிகழக்கடவன என்கிற தத்துவார்த்தத்தை வேதங்கள் வெளிப்படையாகக் கூறுமன்றோ? பொய்மையில்லாத அநுமானுடைய வார்த்தையையும் நன்குமதித்து சீதையை ஏற்றுக் கொள்ளாத நீ, ஐயமுற்றபொருள்களின் ஐயமாகிய குற்றத்தை நீங்கி அங்கைநெல்லிக்கனிபோல் நன்குகாட்டுந்தன்மையுள்ள எனது உறுதி மொழியைக் கேட்டாயினுஞ் சீதையை மீட்டு அழைத்துச்சேர்த்துக் கொள்வாயோ? தேவர்களும் முனிவர்களும் ஏனைய பிராணிகளும் சீதை தீ வலஞ்செய்யத்தொடங்கியபோது அதனைக்கண்டு தங்கள்

தங்கள் கண்களைக் கைகளால் மோதிக்கொண்டு நின்று ஆ என்று கதறியதை நீ கேட்டுணர்ந்தா யில்லைபோலும். தருமத்தைவிட்டு இத்தகைய அதருமத்தை எங்கிருந்து கொண்டனை? இராம! கற்புக் கணிகலமாகிய இச்சீதாதேவி மனத்திற் கோபங்கொண்டால் மேகம் மழை பொழியுமோ? பூமி உடனே பிளந்துவிடுவதல்லாமல் எல்லாப் பாரங்களையும் பொறுத்துக்கொண்டிருக்குமோ? தருமம் செவ்விதாக நடக்குமோ? உலகம் நிலைத்திருக்குமோ? இவள் கோபங்கொண்டு சபிப்பாளானால் தாமரை மலரில் வாழும் சதுர்முகனும் இறந்து விடுவானன்றோ?

பெய்யுமே மழைபுவி பிளப்ப தன்றியே
செய்யுமே பொறையறம் நெறியிற் செல்லுமே
உய்யுமே யுலகிவ ளுணர்வு சீறினால்
வய்யமேன் மலர்மிசை யயனு மாயுமே.

சானகியாரது கற்புத்தழலால் தாபமுற்ற தழற்கடவுள் இவ்வாறு பெருமைமிக்க பலவார்த்தைகளைச் சொல்லி நின்று, பிராட்டியின் கற்புநிலையைக்கண்ட களிப்பினாற் கூத்தாடுகின்ற தேவர்கள்முதல் மற்றை உலகத்துயிர்களும் ஆரவாரித்து களிப்புமிக, மயில்போலுஞ் சாயலையுடைய பிராட்டியைப் பெருமான்பக்கத்தில் கொணர்ந்து விட்டான். இராமபிரான் "அக்கினியே! நீ உலகத்துயிர்கட்கெல்லாம் நீதிநெறி தவறுதலில்லாத சாட்சியாகிறாய்; ஆதலால் இகழ்ச்சிக்கு இடமில்லாத சிறந்த வார்த்தைகளைச்சொல்லி நீ இவளை யாதொரு குற்றமுமில்லாதவளென்று சொல்லினை; ஆதலால் இவளிடத்து யாதொரு பழியுமில்லை; இனி இவள் என்னால் நீக்கத்தக்கவளல்லள்" என்று கூறி சீதாதேவியை அங்கீகரித்தனர்.

சீதையின் கற்பின் திறத்தை உற்றுநோக்குக; கற்புத்தீயின் பெருமையையும் அத் தீ பட்டு அழற்கடவுள்வருந்திய சிறுமையையும் நுனித்துணர்க; கற்புடையார் பெருமையை யாரே கழறவல்லார்? கற்புடையார்க்கு செய்யத்தகாத காரியம் மூவுலகிலுமில்லை. அவர் நினைப்புமாத்திரத்தால் மூவுலகையும் அழிப்பர். கற்பின் வலியைக் கண்டு அஞ்சாதார் யாவர்? கற்புடையாரைப்பகைத்து உய்ந்தோர் ஒருவருமில்லை. எக்காலத்தும் அழியாப்புகழையுண்டாக்குவது இக் கற்பின் உறுதியேயாகும். இத்தகைய கற்புடைமங்கையை வாழ்க் கைத்துணைவியாகப் பெற்றோன் எல்லா நலன்களையும் எய்துவன்; அவனுக்குப் பெறத்தகாத பொருள் மூவுலகிலுமில்லை. பொன்றாப் புகழைப் பெறுவன்.

———

(தொடரும்).

உ

ஓம் குஹாயநம:

தொண்டர்தம் பெருமை

K. V. சிவசுப்பிரமண்யன், B.A., சிதம்பரம்.

மலரில் மணமும், மணியில் ஒளியும்போல் எங்கும் நிறைந்திருக்கும் கற்பனை கடந்த தற்பரம்பொருளாகிய சிவபெருமானை நாம் வழிபட்டு நற்கதியடைவதற்குரிய இடங்கள் குரு (Devotion to teacher), லிங்கம் (Adoration of image) சங்கமம் (Benevolence to the fellow-worshipper) என்னும் இம்மூன்றுமாம். குரு ஆசாரியனெனவும், இலிங்கம் விக்கிரகம் எனவும், சங்கமம் சிவனடியார்கள் எனவும் பொருள் பெறும். இவற்றுள் குருவழிபாடு தீக்கை பெற்றோரால் தமது ஆசிரியரிடத்து மாத்திரம் செய்யப்படுவது. மூர்த்திவழிபாடும், சிவனடியார் வழிபாடும் எல்லோராலும் யாண்டும் செயற்குரியன. இவ்விரண்டனுள் அதிக பலனைத் தருவது சிவனடியார் வழிபாடே என்பது சைவநூற்றுணிபு.

சிவலிங்க முதலிய வடிவங்களைப் பூசித்தல் சிவபெருமானை மாத்திரம் பூசிப்பதாகும். சிவனடியாரைப் பூசித்தல் அவர்களையே யன்றி அவர்கள் உள்ளத்தைக் கோயிலாகக்கொண்டு இனிது வீற்றிருக்கும் சிவபெருமானையும் பூசிப்பதாகும். சிவபெருமான் குறைவிலா நிறைவாய் வேண்டுதல் வேண்டாமையற்றிருப்பதனால் அவரைப் பூசிப்பது அவரது பிரயோசனங் கருதியதாகாமல் பூசிப்பவர் பிரயோசனங் கருதியதாகும். சிவனடியார்களைப் பூசிப்பவர் தாம் மல நீக்கம் பெறுவதோடு அவ்வடியார்க்கும் பயனையளிப்பவராவர்.

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற் கதாமே

—என்பது திருமந்திரம்.

"பத்திவழி நிற்பார்க்கு வினைத்துயர் தீர்த்திட எடுத்த வடிவு" தான் சிவனடியார் வேடம் என்றார் பரஞ்சோதி முனிவர். சிவனடியார் கூட்டத்தில் சிவபெருமானும் ஒருவராயிருந்து நீங்காதுறை

கின்றூர். இது சிதம்பரத்தில் தில்லைவாழந்தணரோடு தாமும் ஒரு வீட்டாராக இருந்தமையா லறியப்படும்.

> மனத்தகத்தான் றலைமேலான் வாக்கி னுள்ளான்,
> வாயாரத்தன் னடியே பாடுந்தொண்டர்—இனத்தகத்தான்.
>
> —திருத்தாண்டகம்.

> ஞாலமுய்ய நாமுய்ய நம்பிசைவ நன்னெறியின்
> சீலமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பாடச் செழுமறைகள்
> ஓலமிட்டு முணர்வரியா ரடியாருட னுமுளதென்றல்
> ஆலமுது செய்தபிரா னடியார் பெருமை யறிந்தாரார்.
>
> —பெரிய புராணம்.

எத்தகையினாராயினும் சிவனடியார் திருக்கூட்டத்தில் சேர்ந் திருக்கப்பெறில் அவர்களது பாவனு சக்தியால் சீவன் முக்தராய் விடுவர். பசவதேவருடைய அருட் சத்தியினுல், கத்தரிக்காயை இலிங்கமெனக் கழுத்திலணிந்து கள்ளவேடம் புனைந்து வந்த கள்வ ரெல்லாம் களங்கமற்ற உண்மைச் சிவனடியாரானமையும், மரக்கால், கட்டுத்தறி முதலியனவும் சிவலிங்கங்களாக மாறினமையுமாகிய வசவபுராணச் சரித்திரங்களாலும் இவை யறியப்படும். அதுபற்றியே சிதம்பர மும்மணிக்கோவையில்

> "மெய்த்தவத் தொண்டர் கூட்டம்
> பெற்றவர்க்குண்டோ பெறத்தகாதனவே"

எனக்கூறப்பட்டது. சிவனடியார்க்களித்த உணவு உருத்திரன் மால், அயன் என்னும் மூவர்க்கும் அளித்ததாம். சிவஞானிக ளுடைய பரிகல மிச்சிலை உண்ணப் பெறுவதனுலேயே ஆணவமலம் தொலைந்து சிவஞானம் தோன்றும் என்பது நூற்றுணிபு. இக்கருத்து கீழ்வரும் திருமந்திரப் பாடலில் வலியுறுத்தப் படுதல் காண்க:—

> "வித்தகமாகிய வேடத்த ருண்ட வூண்
> அத்த னயன்மா லருந்திய வண்ணமாம்
> சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
> முத்தியா மென்று நம் மூலன் மொழிந்ததே.

இந்திராதி பதவிகளைக் கான்ற சோறெனக் கடிந்தொதுக்கிய பெரியோர்களும் சிவனடியாரது பாதோகத்தை நோக்க விண்ணவ ரமுதை வேப்பென வெறுத்தனர். சிவனடியார்கள் உண்டு கழித் ததை உண்ணப் பெறும் நாயாகவும் பிறக்க விரும்பினூர்கள் என பண்டாரமும் மணிக்கோவையா லறிகிறோம்.

பந்தமகன்ற சிவபக்தர் பாதம் விளக்கும் புனற்றுழியில்
வந்து பிறந்து முழ்கியதில் வைதும் புழுவின் பேரும்பேறு
முந்து கங்கை முதல்வா முற்றும் படிந்து தீவினைகள்
சிந்து மந்தணுளருமே சோரமேன்று மறைசாற்றும்

என்ற பிரபுலிங்க லீலைச் செய்யுளாலும் சித்தாந்த சிகாமணி என்றும் சீரிய வீரசைவநூலாலும் பாதோதகத்தின் பெருமையை நன்குணரலாம். சிவனடியார்கள் செய்யும் வழிபாட்டினால் சிவலிங்கம் முதலிய மூர்த்தங்களில் சிவசாந்நித்யம் அதிகப்படுகின்றது. அதுபற்றியே பாடல்பெற்ற தலங்கள் பெரிதும்போற்றப்படுகின்றன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த சிவனடியார்களை முன்னே திரிகரணங்களாலும் வணங்காமல் மனத்தால் மாத்திரம் வணங்கி வீதிவிடங்கப்பெருமானை வணங்கச் சென்ற போது, விரன்மிண்ட நாயனுர் அவ்வாறு சென்ற தம்பிரான் றோழரை மாத்திரமன்றி அவரை யாட்கொண்ட வீதிவிடங்கப் பெருமானையும் " புறகு " (Boycott) எனக்கூறி யொதுக்கினுர்.

சிவபெருமான் அடியார்க் கெளியாயிருப்பதோடு அவர்களுக்கு ஏவலும் செய்கிறுர் என்பது.

" தூண்டு சுடரனைய சோதிகண்டாய்
தொல்லமரர் சூளாமணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற வெளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவ தேயீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்டமனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக் காட்டுறையு மணாளன்றனே.

என்ற திருத்தாண்டகத்தால் விளங்குகிறது.

மாமுகில் தவழும் மணிமதிற் கமலைப்
பெம்மானருமைப் பெருமாளாயினும்
ஊனுண் வாழ்க்கைக் கானவர்தரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
உண்டுமிழ்நீ நீருவந்தன ராடியும்
விருப்படி கொண்ட மிச்சி லூன்மிசைந்தும்
செருப்படிக் கடிகள் செம்மாந்திருந்தும்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்தும்
அருந்தமிழ் வழுதி பிரம்படிக்கு வந்தும்

. . . .

எளியரின் எளியராயினர்
அளியர் போலு மன்பர்க டமக்கே

—(திருவாரூர் நான்மணிமாலை.)

இன்னும் பல மணிவாசகரது "கீர்த்தித்திருவகவலில்" காண்க.

தொண்டர்கூட்டம் இல்லாதபோது சிவபெருமானுக்கோர் பெருமையுமில்லை. அவர் ஐந்தொழில் நடத்தவேண்டுவதுமில்லை. ஆதலால் அவர் திருத்தொண்டர் சகிதமாகவே தில்லையம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் செய்தருளுகின்றார்.

வணங்கத்தலை வைத்து வார்கழல் வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம் பெருமான்
அணங் கொடணி தில்லை யம்பலத்தேயாடுகின்ற
குணங் கூறப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

—திருவாசகம்.

முடிகள் வணங்கி மூவாதோர்கள் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானரமங்கையர்பின்செல்ல
பொடிகள் பூசிப் பாடுந் தொண்டர் புடைசூழ
அடிகள் ஆரூ ராதிரைநாளா லதுவண்ணம்

—தேவாரம்.

சிவபெருமானின் பெருமைகளை புராணங்களும், திருத்தொண்டர் செய்கைகளை பெரியபுராணமும் கூறுகின்றன. இதுபற்றியன்றோ

"உமையோ இறைவர்பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே."

என்று பெரியார் கூறினர். சிவபெருமான் "உலகெலாம்" என்று அடியெடுத்துக்கொடுக்க அருள்வசப்பட்டிருந்து தொண்டர் சீர் பரவிய சேக்கிழார்பெருமானே

"தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர்தம்
பொருவருஞ்சீர் புகலலுற்றேன் முற்றப்
பெருகு தன்கடலூற்றுஉன் பெருநசை
யொருசுணங்கனை யொக்குந்தகைமையேன்."

என்று அருளிச்செய்தாரெனில் மருள்வசப்பட்டு முத்திநெறியறியாத மூர்க்கனாகிய யான் திருத்தொண்டர் பெருமைகளையெல்லாம் எங்ஙனம் எடுத்துச்சொல்ல இயலும். பிழையுளதேல் ஆன்றோர்பொறுக்க.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில.

—(பொய்யாமொழி).

ஓம் குஹாய நம:

குரு சிஷ்ய லக்ஷணம்

சச்சிதானந்தன்.

சிஷ்ய லக்ஷணம்.

(160-வது பக்கத் தொடர்ச்சி.)

குருநாதனிடத்தில் இருக்கும்பொழுது உயர்ந்த வஸ்திரம் தரிக்கப்படாது; உயர்ந்த ஆகாரம் உட்கொள்ளப்படாது; உயர்ந்த ஆசனத்தில் இருக்கப்படாது; குருநாதன் கட்டளையிடும்பொழுது படுக்கையிலிருந்தும் அமர்ந்துக்கொண்டும் ஏதேனுமொன்றைப் புசித்தும் பராமுகமா இருந்தும் வருவது கூடாது. சீடனானவன் குருநாதனிடத்தில் ஏதேனுமொன்றைத் தெரிவிப்பதாயிருந்தால் படுத்துக்கொண்டும் உடகார்ந்துக்கொண்டும் நடந்துக்கொண்டும் தெரிவிக்கப்படாது. குருநாதனுக்கெதிரில் இஷ்டப்படி இருக்கப்படாது. அவரது பெயரை வெளிப்படையாகக் கூறப்படாது; மஹாமஹிமை தங்கிய குருநாதனெனச் சொல்லவேண்டும், வாஹனாதிகளில் ஏறிச்செல்லும்பொழுது குருநாதன் சந்தித்தால் அவைகளில் இருந்து நமஸ்காரம் செய்யப்படாது. கீழே இறங்கி நமஸ்கரிக்கவேண்டும், குருநாதனுக்கெதிரில் காது அசையும்படி தலையை யாட்டிக் கொள்வதும் தொடையை யாட்டிக் கொள்வதும் காலை நீட்டுவதும் காறி துப்புவதும் சிறிப்பதும் கொட்டாவி விடுவதும் கூடாது. குருநாதனுக்கு அடங்கி சுவதந்திர மில்லாது இருக்கவேண்டும். குருநாதனுடைய படுக்கையிலும் பலகையிலும்ஆசனத்திலும், * கூர்ச்சத்திலும் எந்தச் சமயத்திலும் அமருவது கூடாது. அவர்க்கின்னாத சொல்லைச் சொல்லலாகாது. அவர் வேண்டாததைச் செய்யலாகாது. அவருக்கு மன வெறுப்பு உண்டாகாதபடி நடந்துகொள்ளல்வேண்டும். குருநாதன் வெகுதூரத்திலிருந்து வருபவராயினும் கோபங் கொண்டவராயினும் அவருக்கு அபிவாதனம் செய்வது கூடாது. குருநாதன் பெண்டீருடன் இரகஸ்யமாய் இருக்கும் பொழுதும் கூடாது. குருநாதன் சமுகத்திலிருக்குங்கால் அவரது உத்திரவு பெறாது, தாய் தகப்பன் முதலியவர்களை நமஸ்கரிக்க அதிகாரம் பெறமாட்டான்! குருநாதன் பாதோதகத்தை பருகல் சிறந்ததென்று உட்கொளல் வேண்டும். குருநாதன் வடிவத்தை யெப்போதும் த்யானிக்கவேண்டும். அவரது நாமத்தை எப்போதும் ஜபித்தல் வேண்டும்.

---

* கூர்ச்சமென்பது விஸ்வாமித்திரம் புல்லினால் செய்த ஓர் ஆசனம்.

குருபாதோதகம் பாநம் குரோருச் சிஷ்ட போஜநம்
குருமூர்தேஸ் ஸதாத்யாநம் குரோர் நாம ஸதாஜப:

—குருகீதை.

என்று கூறப்பட்டுளது. குருநாதன் நடக்கும்பொழுது அவர் பின்னே செல்லவேண்டும். குருநாதன் நிழலைத் தாண்டலாகாது; அவர்மேல் படும் காற்று தன்மேல்படாமலும், தன்மேல் படுங்காற்று அவர்மேல் படாமலும் இருந்தவரவேண்டும். அவருக்கு ஹிதம் செய்யவேண்டும். அவருக்கெதிரில் ஆசனத்திலிருக்கப்படாது அவர் நித்திரைபெற்ற பிறகுதான் நித்திரைபெறவேண்டும். அவர் தூக்கத்தினின்று எழுந்திருப்பதற்குமுன் எழுந்திருந்து அவருக்கு வேண்டிய தர்ப்பை சமித்து வஸ்திரம் முதலியவைகளைக் கொண்டுவரவேண்டும். கடுங்காற்று முதலியவை வீசும்பொழுது சொல்லும் சங்கதிகள் காதுகளில் படாது; ஆனதுபற்றி அச்சமயத்தில் ஏதேனுமொன்றை தெரியப்படுத்துவது கூடாது.

எவ்விடத்தில் குருநாதனுடைய (1) பரிவாதம் (2) நிந்தை இவ்விரண்டும் இருக்கின்றவோ அவ்விடத்தில் தன் இருகாதுகளையும் மூடி வேறிடம் செல்லல்வேண்டும். குருவின் பரிவாதம் செய்த சீடன் கழுதையாகவும், நிந்தைசெய்தவன் நாயாகவும், அவர் பணத்தை நியாயமின்றிப் புசித்தவன் சிறியபுழுவாகவும், அவர்பெருமையை யுணராதவன் பெரியபுழுவாகவும் பிறப்பார். அவரை மதிக்காதவன் சுவானயோனிநூற்றையடைந்து சண்டாள யோனிகளில் பிறப்பானென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றான். ஆதலால் குருநாதனுக்கு (3) காயத்தாலும் (4) மனத்தாலும், (5) வாக்காலும் ஒருக்காலும் துரோகஞ்செய்யக்கூடாது. யார் ஒருவன் குருநாதனை உம் என்று அதட்டுகின்றனனோ அவன் மயானபூமியில் தருவாகமுளைத்து பிணம் சுடும் புகையினால் தகிக்கப்பட்டுப் பிணம்புசிக்கும் நாய் நரி கழுகுகளால் சேவிக்க பெறுவன் என்று ஆத்மபுராணத்தில்

குருவை யும்மெனக் கூறுவர் வாதா
லருமறை யவர்தங்களை யரிதின்வெல் லுனர்கள்
எரி சுடலையிற் பெருந் தருவாகிப்பேயிருந்து
நரிகழுதுகள் முதலன சேரவாழுவரே.

கூறப்பட்டுள்ளது. (தொடரும்).

---

1. பரிவாத மென்பது உள்ள துர்க்குணத்தை எடுத்துக் கூறுவது.
2. நிந்தை யென்பது கெட்ட நடத்தை ஆரோபித்தல்.
3. அடித்தல் முதலியன காயத்தால் ஆற்றுந் துரோகம்.
4. அனிஷ்டத்தை சிந்தித்தல் மனத்தால் ஆற்றுந்த்ரோகமாம்.
5. அனுசித வசனத்தைக் கூறல் வாக்காலாற்றுந்த்ரோகம்.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர். 2 Vol. 2	ஈச்வர ஸு ஐப்பசிமீ 1உ அக்டோபர்—1937	இதழ் 7 No. 7

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

(21) அமுதுததி விடமுமிழு செங்கட் டிங்கட்
பகவினொளிர் வெளிறெயிறு துஞ்சற் குஞ்சித்
தலையுமுடை யவனரவ தண்டச் சண்டச்
சமனோலை

அதுவருகு மளவினுயி ரங்கிட் டிங்குப்
பறைதிமிலை திமிர்தமிகு தம்பட் டம்பற்
கரையவுற வினரலற வுந்திச் சந்தித்
தெருவூடே

எமதுபொரு ளெனுமருளை யின்றிக் குன்றிப்
பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கைக்
கிளையமுது வசைதவிர இன்றைக் கன்றைக்
கெனநாடா

திடுககடி தெனுமுணர்வு பொன்றிக் கொண்டிட்
டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டுட் டுண்டுட்
டெனவகலு நெறிகருதி நெஞ்சத் தஞ்சிப்
பகிராதோ

குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடிலசடை பவுரிகொடு தொங்கப் பங்கிற்
கொடியாடக்
குலதடினி அசையஇசை பொங்கப் பொங்கக்
கழலதிர டெகுடெகுட டெங்கட் டெங்கத்
தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத்
தொகு தீ தோ
திமிதமென முழவொலிமு ழங்கச் செங்கைத்
தமருகம ததிர்சதியொ டன்பர்க் கின்பத்
திறமுதவு பரதகுரு வந்திக் குஞ்சற்
குருநாதா
திரளுமணி தரளமுயர் தெங்கிற் றங்கிப்
புரளஎறி திரைமகர சங்கத் துங்கத்
திமிரசல நிதிதழுவு செந்திற் கந்தப்
பெருமாளே.

பதவுரை.

குமுதபதி வகிர் - ஆம்பல் மலருக்குப் பதியாகிய சந்திரனது பிறை, அமுது சிந்த சிந்த - தனது அமிர்த கிரணங்களை மிகவும் பொழியவும், சரண பரிபுர - திருவடியி லணிந்துள்ள சிலம்பானது, சுருதி கொஞ்ச கொஞ்ச - வேத வசனங்களை இனிமையுடன் ஒலிக்கவும், குடில சடை - வளைவுடைய சடையானது, பவுரி கொடு தொங்க - அந்தத் திருநடனத்திற் கிணங்க அசைந்து (அழகுடன்) தொங்கவும், பங்கில் கொடியாட - ஒரு பக்கத்தில் கொடியனைய சிவகாமசுந்தரி யாடவும், குலதடினி அசைய - மேன்மை பொருந்திய கங்காநதி அசையவும், இசை பொங்க பொங்க - இனிய பாடல்களின் ஒலியும் வாத்திய ஒலியும் மிகுதியாக சப்திக்கவும், கழல் அதிர - பாதத்தி லணிந்துள்ள வீரகண்டாமணி அதிர்ந்து ஒலிக்கவும், டெகுடெகுட டெங்கட் டெங்கத் தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத் தொகு தீ தோ திமிதம் என முழவொலி முழங்க - இத்தகைய தாளவரிசையுடன் மேள வொலிகள் முழங்கவும், செம் கை - சிவந்த கரத்திலுள்ள, தமருகம் அது அதிர் சதியொடு - உடுக்கையானது அதிரும் தாளவொத்துடனும், அன்பர்க்கு இன்ப திறம் உதவும் -

(ஆனந்தத்திருநடனம்புரிந்து) அன்பு செய்யும் அடியார்கட்கு என்று மழியாத இன்பநலனை வழங்கும், பாதகுரு - பாத நாடகத்திற்கு ஆசிரியராகிய சிவபெருமான், வந்திக்கும் வணங்குகின்ற, சற்குருநாதா - ஞானாசிரியரே! திரளு மணிதாளம் - உருட்சியாகத் திரளும் முத்து மணிகள், உயர் தெங்கில் தங்கி புரள - உயர்ந்து வளர்ந்துள்ள தென்னைமரங்களின்மீது தங்கிப் புரளுமாறு, எறி திரை - அம்முத்துக் களை வீசி எறிகின்ற அலைகளையுடையதும், மகர சங்க - மகாமீன் களின் கூட்டத்தையுடையதும், துங்க - தூய்மையுடையதும், திமிர - இருள்போல் கருநிறத்தைபுடையதும் ஆகிய, சலநிதி தழுவு - சமுத்திரமணைந்துள்ள, செந்தில் கந்த - செந்திலம்பதியில் வாழுகின்ற கந்தப்பெருமானே, பெருமாளே - பெருமையின் மிக்கவரே!, அமுது உதகி விடம் உமிழு - பாற்கடலிற்றோன்றிய ஆலகாலவிடத்தைக் கக்கும், செம் கண் - சிவந்த கண்களையும், திங்கள் பகலின் ஒளிர் - சந்திரனது பிள்வைப் (பிறை) போற் பிரகாசிக்கின்ற, வெளிறு எயிறு - வெண்மையான பற்களையும், துஞ்சல் குஞ்சி தலையும் உடையவன் - சுருளுகின்ற தன்மையுடைய மயிர்க்குடுமியோடுகூடிய தலையையும் உடையவனாகிய, அரவ தண்ட - பேரொலியுடன் வந்து உயிர்களை காலாந்தரத்தில் தண்டிக்கும், சண்டசமன் ஓலை அதுவரும் அளவில்- வேகத்தையுடைய கூற்றுவனது ஓலையானது வருகின்ற காலத்தில், உயிர் அங்கிட்டு - ஆவி இயமனுலகிற் செல்ல, இங்கு - உடலிருக்கும் இவ்விடத்திலே, பறை - பறை வாத்தியங்களும், திமிலை - பம்பையும், திமிர்தமிகு தம்பட்டம் - ஒலிமிகுந்த தம்பட்டமென்கிற வாத்தியமும், பல் கரைய - பலவிதமாக ஒலிக்கவும், உறவினர் அலற - உறவின் முறையோர் துன்புற்றுக் கதறி அழவும், எமது பொருள் எனும் மருளை இன்றி - எம்முடைய பொருள் என்னும் மயக்கமின்றி, குன்றி பிளவு அளவு - குன்றிமணியிற் பாதியாகிலும், தினை அளவு - தினை யரிசி யளவாகிலும், பங்கிட்டு உண்கைக்கு இளைய - ஏழைகளுக்குப் பங்கிட்டுத்தந்து உண்ணவேண்டிய அறவழியில் நின்றும் இளைத்து, முது வசை தவிர - லோபி என்ற பழமையான வசைச்சொல் நீங்குமாறு, இன்றைக்கு அன்றைக்கு என நாடாது - இன்றைக்கு அறம் புரிவது நாளைக்குப் புரிவது என்று எண்ணாது, இடுககடிது எனும் - விரைந்து வறிஞர்க்குப் பிச்சை யிடு என்று (அறிஞர்) உரைக்கும் உரைகளால் எற்படும், உணர்வு பொன்றிக் கொண்டிட்டு - அறிவு அழிந்துபோய், உந்தி சந்தி தெருவூடே - (பிணத்தை) எடுத்துக்

கொண்டு பல தெருக்கூடும் சந்திகளின் வழியாக, டுடுடுடு என அகலும் - டுடுடுடு என்ற பறை ஒலியுடன் கொண்டுபோகின்ற, நெறி கருதி - மார்க்கத்தை நினைத்து, நெஞ்சத்து அஞ்சி - மனத்தில் இவ்வாறு நாமும் ஒரு நாளைக்குச் செல்லவேண்டிவரும் என்று பயந்து, பகிராதோ - ஏழைகளுக்கு என் வருவாயில் பங்கிட்டு தருமம் புரியமாட்டேனோ?

பொழிப்புரை.

குமுத மலருக்குப் பதியாகிய சந்திரனது பிறை தனது அமிர்த கிரணங்களை மிகவும் பொழியவும், திருவடியிலணிந்துள்ள சிலம்பானது வேத வொலியைச் செய்யவும், வளைவுடைய சடை அத் திரு நடனத்திற்கிணங்க அசைந்து தொங்கவும், ஒருபக்கத்தில் கொடியிடையுடை சிவகாமசுந்தரி ஆடவும், மேன்மை பொருந்திய கங்கா நதி அசையவும், பாடல்கள் வாத்தியங்களின் இனிய ஒலி மிகுதியாகப் பொங்கவும், பாதகமலத்திலுள்ள வீரகண்டாமணி அதிர்ந்து ஒலிக்கவும், டெகுடெகுட டெங்கட் டெங்க தொகுதகு தொகுகுகு தொங்கத் தொங்கத் தொகுதீ தோ திமிதம் என்று முழவுகள் முழங்கவும், சிவந்த காத்திலுள்ள உடுக்கையின் தாளவொத்துடனும், ஆனந்த நிருத்தம் புரிந்து அன்பர்களுக்கு என்று மகலாத இன்ப வீட்டை வழங்கும் பரதநாடகத்திற்கு ஆசிரியராகிய சிவபெருமான் சிஷ்யபாவமூர்த்தியாக இருந்து வணங்கி வழிபாடு செய்யும் ஞானசிரியரே! உருட்சியாகத் திரளும் முத்துமணிகள் உயர்ந்த தென்னைமரத்தில் தங்கிப்புரளுமாறு வீசி எறிகின்ற அலைகளையுடையதும், மகரமீன்களின் கூட்டத்தையுடையதும், பரிசுத்தமானதும், இருள்போற் கரு நிறத்தையுடையதுமாகிய சமுத்திர மணைந்துள்ள திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள கந்தமூர்த்தியே! பெருமையிற் சிறந்தவரே! பாற்கடலில் தோன்றிய ஆலகாலவிடத்தைக் கக்கும் (கோபத்தினால்) சிவந்த கண்களையும், பிறைச் சந்திரனைப்போல் ஒளி செய்யும் வெண்ணிறமுடைய பற்களையும், சுருண்டுள்ள மயிர்க்குடுமியுடன் கூடிய தலையையும் உடையவனும், பேரொலியுடன் வந்து உயிர்களைக் காலாந்தரத்தில் வினைக்கேற்பத் தண்டிப்பவனும் வேகமுடையவனுமாகிய இயமனது ஓலை வருகின்ற காலத்தில் உயிர் இயமலோகஞ் செல்ல, உடல்மட்டுமுள்ள இவ்விடத்தில் பறை பம்பை ஒலியுடைய தம்பட்டம் முதலிய பலவிதமான வாத்தியங்கள் ஒலிக்கவும், உறவினர்

ஓவென்று கதறியழவும், எமது பொருள் என்ற மயக்கமின்றி, குன்றி மணியில் பாதியாகிலும் தினையரிசியளவாகிலும் ஏழைகளுக்குப் பகிர்ந்து உண்ணுவதற்கு இளைத்து, லோபி என்ற பழமையான வசை மொழி நீங்குமாறு இன்று அறஞ்செய்வோம் நாளை செய்வோம் என எண்ணாது விரைந்து தருமஞ்செய் என்ற அறிஞர் அறிவுரைகளால் ஏற்படுகின்ற அறிவு அழிந்து, பிணத்தை எடுத்துக்கொண்டு தெருக் கூடுமிடுகின்ற சந்திவழியாக டுடுடுடு என்ற பறை யொலியுடன் வீணே போகின்ற மார்க்கத்தை நினைந்து நினைந்து, இவ்வாறு வறிதே ஒருநாள் அழிவு வருவது நிச்சயமென்று பயந்து பொருள் உள்ள போதே சிறிதாவது பகிர்ந்தளிக்க மாட்டேனோ?

விரிவுரை.

அமுதததி விடமுமிழு செங்கண் :—

கூற்றுவனுடைய கண்கள் மிகவும் பயங்கரத்தை விளைவிக்குமாறு கொடியவிடத்திற்கு நிகரான நெருப்புகளைப் பொழியும் கூற்றுவனுக்கு இரண்டு உருவம் உள; ஒன்று புண்ணியசீலர்களுக்கு அருள் மேனி, ஒன்று பாவிகளுக்கு அச்சத்தைத்தரும் கோரவடிவு. இவ்விரண்டில் பாவமுடையோர்க்கு மிகவும் கோரவடிவுடன் தோன்றும் போது அக்கண்களில் அனல் சொரியும்.

> "எரிமூண்டதென்ன விழித்துப்புகையெழப் பொங்கு
> வெங்கூற்றன்"
>
> —அலங்காரம்.

தண்டம் :—

அறப்பான் மூன்றனுள் ஒன்று; அஃது ஒழுக்கத்தினும் வழக்கத்தினுந் திறம்பினோரை அவற்றின் நெறியே நிற்குமாறு இறைவன் தண்டித்தலாம். இத்தொழில் இயமன் மேற்கொண்டிருக்கிறான். அறநெறி வழுவி மறநெறி சென்றோரைக் கூற்றுவன் தனது தூதவர்களால் பற்பல துன்பங்களை விளைவிப்பன்.

சமன் ஓலை :—

ஆன்மலாபத்தை யடைதற்பொருட்டுத் தோன்றிய நாம் ஆவியீடேறும் வழியைக் கருதாமல், வறிதே வாழ்நாளை வீணாக்கிக்கொண்டிருந்தால் கூற்றுவன் ஓலையை எடுத்துக்கொண்டுவந்து உயிரைக் கொண்டு போகின்றான். அவ்வோலை வருவதற்குமுன் இறைவன் திருவருளைப் பெறுவதற்கு மிகமிக விரைந்து முயலுதல் வேண்டும்.

இயமன் ஓலைகாட்டிக்கொண்டு போவான் என்பதை அடியில் வருந் திருவாக்காலுணர்க.

"காலமாச்சு வருகென ஓலைகாட்டி யமபடர்
காவலாக்கி யுயிரது கொடுபோமுன்
காமவாழ்க்கை பொடிபட ஞானம்வாய்த்த கழலிணை
காதலாற் கருதுமுணர் தருவாயே"
—(ஆலமேற்ற) திருப்புகழ்.

பறைதிமிலை . . . . . . கரைய :—

ஆவி போனவுடன் பற்பல பறைவாத்தியங்களுடன் ஈமதேசங் கொண்டுபோய் சுடுவர். இப்பறை வாத்தியங்களை ஒருவர் இறந்தவுடன் மூன்று முறை முழக்குவர்.

சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை — நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
சேத்தாரைச் சாவார் சுமந்து"

இவ்வளவு அற்பகாலத்திலழியும் நிலையற்றவாழ்வைப் பெரிதென்றெண்ணி மதிமயங்கி, இறந்து படுவோரைக்கண்டும் தெளிவடையாது மணம்புரிந்துகொண்டு சுகம் உண்டு உண்டு உண்டு என்னும் சிற்றறிவுடையார்க்கு அறிவைப் புகட்டுவதுபோல் ஒலிக்கிறது பறை.

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு—மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
டொண்டொண்டொண் டென்னும் பறை.

—நாலடியார்.

எமது பொருளெனு மருளையின்றி :—

செல்வமானது நீர்மேற் குமிழிபோல் நிலையற்றதாதலால் அதனை உள்ளபோதே அறவழியிற் செலவழித்தல்வேண்டும். செல்வம் வந்தபோது அதன் நிலையாமையை யுணர்தல்வேண்டும். அருமைப் பத்தினியானவள் அருகிலிருந்து அறுசுவையுண்டிகளை யூட்ட, அதனை மறுகவளம் வேண்டாவென்னும் பெருஞ் செல்வாயிருந்தோரும் ஏழைகளாய் ஓரிடத்தில் போய் கூழையிரப்பர் என்று சொன்னால் செல்வம் நிலையுடையதென்று எண்ணற்பாலதோ? அநேக செல்வர்கள் தானும் உண்ணாது பிறருக்கும் உதவிசெய்யாது பணங்காக்கும்

பூதம்போல் வறிதே யழிவர் ; என்னே பேதமை? "நம்மைக்காட்டிலும் அறிவும் ஆற்றலும் உடையவர்களெல்லாம் ஏழையாயிருக்கிறார்களே? நமக்குமட்டும் செல்வம் உண்டானதற்குக் காரணமென்ன? "கொடுத்துவைத்த புண்ணியவான்" என்கிறார்களே? எப்போது கொடுத்துவைத்தோம்? முந்தின பிறவியில் ஏழைகளுக்குக்கொடுத்து வைத்தோம்; அதன் புண்ணியத்தால் இப்போது பெருஞ்செல்வராய்ப் பிறங்குகிறோம்; இப்போதும் கொடுத்துவைத்தால்தானே இனி வரும் பிறவியிலும் சுகமே வாழ்வோம்; நாம் எந்தப்பொருளை ஏழைக்குத் தருகிறோமோ அதுதான் நம்முடைய பொருள்; எவ்வளவு பொருள் அறவழியில் செலவழிக்கிறோமோ அவ்வளவும் மறுமைக்கு வந்து துணைசெய்யும்" என்று ஒவ்வொருவரும் தனியே யிருந்து சிறிது நேரம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பிறக்கும்பொழுது கொண்டுவந்ததில்லை, இறக்கும்பொழுது கொண்டுபோகிறதுமில்லை எனவே இடையில்வந்த பொருள் ; அது சிவபெருமானால் கொடுக்கப்பட்டது; அதனை அரன்பணியிலும் அடியார் பணியிலும் செலவழித்தல் வேண்டும். அங்ஙனஞ் செலவழிக்காது காவல்புரிந்துகொண்டிருந்தால் செல்வம் விரைவிலழியும். தேனீயானது மிகவும் துன்புற்று அலைந்து சிறிதுசிறிதாகத் தேனைச் சேர்த்துவைத்துத் தானும் முண்ணாமல் பிறருக்கும் வழங்காமல் காத்துக்கொண்டிருக்கிறது; பின்னர் என்ன ஆகிறது? பிறரால் அத்தேன் கவரப்பட்டு தேனீ வீணே வருந்தியழிகிறது. அதுபோல் அறஞ்செய்யாதான் செல்வ மழியுமென்றுணர்க.

உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

—நாலடியார்.

" சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வம் "
" தேரிற் கரிற் பரியிற் றிரிபவர் செல்வ மெல்லாம்
நீரிற் பொரியென் றறியாத பாவி நெடு நெஞ்சமே "
" நில்லாது செல்வம் பார்க்குமிடத் தந்தமின்போலு மென்பர்."

—அலங்காரம்.

குன்றிப்பிளவுளவு தினையளவு பங்கிட்டு :—

பெருந் தருமங்களைப் புரிவதற்குப் போதிய செல்வமில்லாதோரும் தமது தகுதிக்குத்தக்கவாறு சிறிதாவது அறம்புரிதல்வேண்டும். இதனை வலியுறுத்துதற்காகவே "இயல்வது கரவேல்" என்ற அமுத மொழி யெழுந்தது.

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும் வாயெல்லாஞ் செயல்

—*பொய்யாமொழி.*

ஒவ்வொரு நாளும் நமது வருவாயில் ஒரு சிறிதாவது அறத்திற் செலவழிந்ததா என்று இரவிற்படுக்கும்போது சிந்தித்தல்வேண்டும்.

"தவிடி னுர்ப்பத மேனினு மேற்பவர்
தாழா தீயேன்"

—*(கவடுகோத்தெழு) திருப்புகழ்.*

"வறிஞர்க்கென்றும் நொய்யிற்பிள வளவேனும் பகிர்மின்கள்"

—*அலங்காரம்.*

"சிறுமிக்குமர நிகர்வீர் பகரச் சிதையுயிர்த்துச்
சிறுமிக்குமர சரணமென்னீ ருய்வீர்"

—*அந்தாதி.*

(இதன் பொருள்:— *சிறு - சிறிதான, உமிக்கும் - குற்றுமியை யாயினும், பகிரமா நிகர்வீர் - பிறர்க்கிட்டுண்ண மனங்கூடாமல் மரம் போன்றிருப்பவரே! சிதை - அழிந்துபோவதும், உயிர் - பிராணனுக்கு, துச்சில் - ஒதுக்கிடமுமாகிய இவ்வுடலின்கண், துமி - ஒரு தும்மலுண்டாகுங்காலையினும், குமர - குமரனே, சரணம் - உனக் கடைக்கலம், என்னீர் - என்று சொல்வீர், உய்வீர் - பிழைப்பீர்கள்*)

இன்றைக்கு அன்றைக்கு என நாடாது இடுக :—

அறிஞர் அறமொழியைக் கேட்பதனாலும், அறிவுநூல்களைப் படிப்பதாலும், அறஞ்செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். அங்ஙனம் உண்டாயின் உடனே அறத்தைச்செய்யவேண்டும். இன்று புரிவோம், நாளை புரிவோம் என்றிருத்தல் கூடாது. எனெனில் மறுகணம் இருப்போம் என்பது என்ன நிச்சயம்? யாம் இளையம், முதுமையில் அறம்புரிவோமென்னில் இளமையில் அழிதலுங் கண்கூடு முற்றிய கனி யுதிர்வதோடு முதிராத பிஞ்சுகளும் உதிர்ந்து வீழ்வதைக் காண்கிறோமல்லவா? ஆதலால் யாக்கைநிலையாமையை

யுணர்ந்து அறம்புரியவேண்டுமென்ற எண்ணம் உண்டானபோதே விரைந்து தருமஞ்செய் என்றனர்.

அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
போன்றுங்காற் பொன்றுத் துணை

—மூப்பானூல்.

இன்றுகோ லன்றுகோ லேன்றுகோ லேன்னுது
பின்றையே நின்றது கூற்றமேன் — றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா றறம்.

மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னுது
கைத்துண்டாம் போதே கரவா தறஞ்செய்மின்
முற்றியிருந்த கனியொழியத் தீ வளியால்
நற்கா யுதிர்தலு முண்டு.

—நாலடியார்.

டுடுடுடு . . எனவகலு நெறிகருதி நெஞ்சத்தஞ்சிப் பகிராதோ :—

ஆன்றோர் அறமொழிகள், அறிவுநூல்கள் இவைகளைக்கொண்டு யாக்கை நிலையாமை செல்வநிலையாமைகளை யுணரவில்லையெனின், தினந்தோறும் இறந்தவரை பறையொலியுடன் கொண்டுபோவதைக் கண்டாவது நெஞ்சம் அஞ்சவேண்டாவோ? இறந்தோரை யலங்கரித்து அழுகையொலியுடன் ஈமதேசத்திற்குக் கொண்டுபோகப் பார்க்கிறேமல்லவா? அதைக்கண்டும் ஆசையில் அழுந்தலாமா? நாம் நெடுநாளைக்கிருப்போமென்று எண்ணுவது எவ்வளவு மதியீனம்? சற்று சிந்தியுங்கள். நன்கு எண்ணிப்பார்த்து மனம் பதைக்கவேண்டும்; "அந்தோ! இதுகாறும் அறஞ்செய்யா தொழிந்தோமே? நாமும் இப்படி ஒருநாளைக்கு இறப்போமல்லவா? இத்துணைச் செல்வத்தையும் விட்டுப்போய்விடுவோமே? நமக்கு இப்போதிருக்கிற பெயரையொழித்து பிணம் என்ற பெயரிட்டு பறையொலியுடன் கொண்டுபோய் தீக்கிரையாக்குவரோ? அதற்குள் விரைந்து தருமஞ் செய்து இகபர சௌபாக்கியத்தைப் பெறவேண்டுமென்று" நினைத்து நினைத்து நெஞ்சம் அஞ்சிப் பகிர்ந்தளிக்கவேண்டும்.

குமுதபதி . . . . . பாதகுரு :—

சிவபெருமானது திருநடனத்தின் பெருமை: இதன்வரலாற்றை திருப்புகழமிர்தம் முதற்பாகம் 264-ம் பக்கத்திற்காண்க.

திரளுமணிதரள . . . எறிதிரை :—

செந்திலம்பதி கடற்கரையில் கண்கவரும் கவினுடையதாகத் திகழ்வதால் ஆங்குள்ள தென்னைமரங்கள்மீது தங்கிப்புரளுமாறு கடலலைகள் மிக உயர்ந்தெழுந்து முத்துக்களைக் கொழிக்கிறது.

" ஒருகோடி முத்தம் தெள்ளிக் கொழிக்குங்கடற்
செந்தில் மேவிய சேவகனே "

—அலங்காரம்.

கருத்துரை.

ஆனந்தக்கூத்தயரும் அரனார் வந்திக்கும் குருநாதரே! செந்தில் மேவிய கந்தப்பெருமாளே! கூற்றுவன் ஓலைவர, அடியேனுயிர் எமபுரமேக இங்கு பறை முதலிய ஒலிகளுடன் எனதுடலை ஈமதேயத்திற்குக் கொண்டுபோகும் மரணயாத்திரையை எண்ணிப்பயந்து பகிர்ந்தளிக்கமாட்டேனோ?

தந்தை தாய்ப் பேண்.

தாய் தந்தைகளைப் பேணிக் காப்பாற்றுவது மைந்தரது கடமையாம்; சிசிலி என்னுந் தீவில் எட்னு என்கின்ற எரிமலை ஒன்றுளது; சில சமயங்களில் அதன் சிகரங்களிலிருந்து அக்கினி பொங்கி பல திசைகளிலும் வீசுவது வழக்கம். ஒருநாள் அம்மலை மிகவும் நெருப்பைக் கக்கிற்று; அப்போது அம்மலையின் சாரலிலுள்ள மக்கள் அனைவரும் தங்கள் தங்கள் பொருள்களில் விலையேறப்பெற்றவைகளைஎடுத்துக்கொண்டு உயிர்தப்பி ஓடினார்கள்; அவர்களுள் செல்வம் மிகுந்த இரு பிள்ளைகள் உயர்ந்த நவரத்தினங்களை யெடுத்துக்கொண்டு ஓடினார்கள்; அவர்களுடைய பிதாமாதாக்கள் வயது முதிர்ந்தவர்களானபடியால் நடக்கமுடியாது; அவர்களுக்குப்பின்னே மெல்லநடந்து போனார்கள். அதுகண்ட பிள்ளைகள் இருவரும் " நம்மைப் பெற்றுவளர்த்த தாய் தந்தைகளைக்காட்டிலும் இரத்நமணிகள் உயர்ந்தனவா? நம்முடைய ஆஸ்திகள் போனாலும் போகட்டும்; தாய் தந்தைகளைக் காப்பாற்றுவதே சிறந்த கடமை ' என்றெண்ணி, விலையுயர்ந்த நவரத்னங்களை எறிந்துவிட்டு தாய்தந்தைகளைத் தூக்கிக்கொண்டு அந்த நெருப்புக்கு ஒருவாறு தப்பி ஓடிச் சென்று நெடுந்தூரம் ஓடிச்சென்று நல்லிடத்திற்குப்போய் தாய்தந்தைகளைக் காப்பாற்றிவந்தார்கள்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது.)

(173-ம் பக்கத் தொடர்ச்சி.)

इहायाहि वत्सेति हस्तान्प्रसार्या
ह्वयत्यादराच्छङ्करे मातुरङ्कात् ।
समुत्पत्यतातं श्रियन्तं कुमारम्
हराश्लिष्टगात्रम् भजे बालमूर्तिं ॥

(18) இஹா யாஹி வத்ஸேதி ஹஸ்த்தான் ப்ரஸார்யா
ஹ்வயத்யா,த3ராச் சங்கரே மாதுரங்காத் ।
ஸமுத்பத்ய,தாதம் ஸ்ரயந்தம் குமாரம்
ஹராஸ்லிஷ்டகா3த்ரம் ப4ஜே பா3லமூர்த்திம் ॥

பதவுரை.

ஹே வத்ஸா ! - ஓ குழந்தாய்,
இஹ - இங்கு,
ஆயா,ஹி - வா,
இதி - என்று,
ஆதராத் - அன்போடு,
ஹஸ்தான்ப்ரஸார்ய - கைகளை நீட்டி,
சங்கரே ஆஹ்வயதி - பரமசிவக்கடவுள் அழைக்குங்காலத்தில்,
மாது: அங்காத் ஸமுத்பத்ய - தாயின் மடியிலிருந்து துள்ளிக்குதித்து,
தாதம் ஸ்ரயந்தம் - தந்தையிடம் செல்கின்றவரும்,
ஹராஸ்லிஷ்ட காத்ரம் - பரமசிவனுலணைக்கப்பட்ட திருமேனியை யுடையவரும்,
பாலமூர்த்திம் - குழந்தைப்பருவத்தினருமான,
குமாரம் பஜே - குமாரக்கடவுளை வழிபடுகின்றேன்.

பொழிப்புரை.

பரமசிவக்கடவுள் மிக 'ஆதரவோடு குழந்தாய்! இங்கு வா! என்று கைகளை நீட்டி அழைக்கும்போது தாயின்மடியிலிருந்து துள்ளி எழுந்து தந்தையை யடைந்து தந்தையால் அணைத்துக்கொள்ளப்படும் தன்மையையுடைய இளம்பருவத்தினராகிய குமாரக்கடவுளை நான் சரணமாக அடைகின்றேன். இதனால் அன்புடன் வழிபடும் அடியவர்களை எளிதில் அனுக்கிரகிக்கும் குமாரக்கடவுளின் கருணைத்திறம் விளக்கப்பட்டது.

कुमारेशसूनोगुहस्कन्दसेना-
पते शक्तिपाणेमयूराधिरूढ ।
पुलिन्दात्मजाकान्तभक्तार्ति हारिन्
प्रभो तारकारे सदा रक्षमां त्वम् ॥

(19) குமாரேஸ ஸூநோ குஹஸ்கந்த ஸேநா
பதே ஸக்தி பாணே மயூராதி ரூட ।
புளிந்தாத்மஜாகாந்த பக்தார்த்திஹாரின்
ப்ரபோ தாரகாரே ஸதாரக்ஷ மாம்த்வம் ॥

பதவுரை.

குமார !	- குமாரக்கடவுளே !
ஈஸஸூநோ	- பரமசிவன் புத்திரனே !
குஹ !	- குஹனே !
ஸ்கந்த !	- கந்தப்பெருமானே !
ஸேநாபதே !	- தேவர்களின் சைனியங்களுக்குத் தலைவனே !
சக்திபாணே	- வேற்படையைத் தாங்கினவனே !
மயூராதிரூட !	- மயில்வாகனனே !
புளிந்தாத்மஜாகாந்த !	- வல்லீபதியே !
பக்தார்த்திஹாரின் !	- அன்பர்களின் துன்பத்தை தீர்ப்பவனே?
ப்ரபோ !	- பிரபுவே !,
தாரகாரே !	- தாரகாசுரனைச் சங்கரித்தவனே !
த்வம்	- தேவரீர்,
மாம்	- என்னை,
ஸதா	- எப்போதும்,
ரக்ஷ	- காப்பாற்றவேண்டும்:

இத்தகைய விசேஷகுணங்களால் உலகத்தைக் காக்குந்திறமை குமாரக்கடவுளுக்கே யுரித்தானதாகையால் நன்மையை விரும்பும் நல்லோர்களால் வழிபடத்தக்கவர் முருகக்கடவுளே என்று தெரிவிக்கப்பட்டது.

प्रसान्देन्द्रिये नष्ट संज्ञे विचेष्टे
कपोत्गारिवक्रे भयोत्कम्पि गात्रे ।
प्रयाणोन्मुखे मय्यनाथे तदानीम्
द्रुतं मे दयाळो भवाग्रे गुहत्वम् ॥

(20) ப்ரசாந்தேந்த்ரியே நஷ்டஸம்ஜ்ஞேவிசேஷ்டே
கபோத்காரி வக்த்ரே ப யோத்கம்பி காத்ரே ।
ப்ரயாணோன்முகே மய்யநாதே ததானீம்
த்ருதம்மே தயாளோ ! பவாக்ரே குஹத்வம் ॥

பதவுரை.

ஹே தயாளோ: குஹ ! - கருணைமிகுந்த குஹக்கடவுளே !
மயிப்ரசாந்தேந்த்ரியே நஷ்டஸம்ஜ்ஞே-நான் இந்திரியங்களெல்லாம் அடங்கி நினைவுகெட்டு,
கபோத்காரி வக்த்ரே பயோத்கம் பிகாத்ரே - கோழைகள் வெளிப்படுகின்ற முகத்தையும் பயத்தினால் நடுங்குகின்ற உடலையும் உடையவனாய்,
ப்ரயாணோன்முகே அநாதே - மரணவேளை நெருங்கிக்காப்பாற்ற ஆளில்லாமல் எப்போது ஆவேனோ,
ததானீம் - அப்போது,
த்வம் - தேவரீர்,
த்ருதம்மே அக்ரேபவ - விரைவில் எனது எதிரில் எழுந்தருள வேண்டும்.

பொழிப்புரை.

கருணைக் கடலாகிய குஹப்பெருமானே அடியேன் ஐம்புலன்களும் ஒடுங்கி அறிவிழந்து வாயினின்றும் கோழைகள் வெளிப்பட அச்சத்தால் அங்கம் நடுங்க மரணம் நெருங்கி பரிதவிக்கும்போது தேவரீர் விரைவாகவே எனது எதிரில் எழுந்தருளிக் காட்சியளித்துக் காப்பாற்றவேண்டும். (தொடரும்.)

ஓம் குஹாயநம:

கந்தர் திருவிளையாடல்

திருவவதாரம்.

(180-வது பக்கம் தொடர்ச்சி)

பார்வதியம்மையார் திருமண நிகழ்ச்சிக்குப் பலநாட்களுக்குப் பின் திருமால் திசைமுகன் தேவர்கோமான் திக்குப்பாலகர்கள் ஏனைய வானோர் முனிவர் முதலியோர் மேருகிரியிற்கூடி சூரபன்மனால் வருந்திக்கூறுவர். "சிவபெருமான் உலகங்களை அவுணர்க்கீந்து யோகி போலிருந்துகொண்டு, நமக்குத் துன்பத்தை விளைத்தார். நாம் போய் பிரார்த்தித்தாலும் திருவுளமிரங்கி உமாதேவியைத் திருமணஞ் செய்தார். செய்தும் ஓர் திருக்குமாரரைப்பெற்று நம்மைக் காத்தருளாது வாளாவிருப்பதென்னை? விருப்பு வெறுப்பின்றி யாவருக்கும் ஒரு தன்மையாய் அவரவர் வினைக்குத்தக்கபடி பயன்களை நல்கும் சிவமூர்த்தியை வெறுத்துரைத்தல் குற்றம்; நமது விதியை நோவவேண்டும்; கைலாயஞ்சென்று நமது குறையை முறையிடுவோம்" என்றார்கள். அப்பொழுது பிரமதேவர் "சிவபெருமானுடைய செய்கையை அறிந்தபின் போதல்வேண்டும்; ஒரு தூதனால் அறிவோம்" என்று, வாயுதேவனை நோக்கி, மைந்த! நீ திருக்கைலாசமலையையடைந்து சிவபெருமானுடைய செய்கையை யறிந்துகொண்டு வருவாயாக" என்றார். அதுகேட்ட வாயுதேவன் "மன்மதனை யெரித்த சிவபெருமான்முன் செல்லுதல் அரிது, செல்லிற் றீமையேவிளையும்; இது என்னால் முடிவதன்று; என் மனம் அஞ்சுகின்றது" என்றனன். பிரமதேவர் வாயுவை நோக்கி "அஞ்சாதே! வலிமையுடன் எங்கும் உலாவும் இயல்பினையுடைய உன்னையன்றி இதுசெய்ய வல்லார்யாவர்? உற்றவிடத்து உதவிசெய்வோரும், வரையாது கொடுப்போரும், தவஞ்செய்வோரும், போர்செய்யும் வீரரும் பிறிதொரு பொருளையும் விரும்பார்; வருத்தமும் பாரார்; உயிர்நீங்க வரினும் நன்றென்று மகிழ்வர்; ஆதலால் எமக்கு உதவிசெய்யும்பொருட்டு நீ செல்லக் கடவாய்" என்றார்.

வாயுதேவன் உடன்பட்டு திருக்கயிலையை யடைந்து, கங்கை தோய்ந்து, சோலைமலர் நறுமணம் அளாவி, தென்றலாய் மெல்ல அசைந்து திருக்கோயிலினுட் செல்வானாயினன். வாயிலில் வீற்றிருக்கும் நந்திதேவர் கண்டு உரப்பினர். இடியேறுண்ட நாகம்போல் வாயுதேவன் நடுங்கி வலியற்று விழுந்தான். பின் தெளிவுற்று பண்டைய வுருவத்தைக்கொண்டு திருநந்திதேவரை வணங்கி, "அருட்பெருங்கடலே! மாலயனாதி வானோர்கள் சிவபெருமானைத்தெரிசித்துத் தமது குறையை முறையிட நினைத்து, அவர் செய்கையை அறிந்து வருமாறு என்னை அனுப்பினர்; யான் மறுத்தும் அவர்கள் அடுத்தடுத் துரைத்ததால் வந்தேன்; தேவரீர்பால் விடைபெறாதுசென்றதற்கு மன்னிக்கவேண்டும்; சூரபன்மனால் துன்புற்று அறிவுகுன்றப் பெற்றேன்; பொறுத்தருள்க" என்று தொழுது வேண்டிநின்றான். நந்தியங்கடவுள் சினந்தணிந்து "உனக்கு உயிர்ப்பிச்சை யளித்தோம்; விரைவில் மீண்டுபோவாய்" என்ன; வாயுதேவன் மேருமலை சென்று நான்முகனாதியோர்க்கு நடந்த வரலாற்றை நவின்றான்.

அமரர்கள் அனைவரும் துன்பமுற்று, மேருமலையினின்றும் புறப்பட்டுக் கைலையை யடைந்து, திருநந்திதேவரைப்பணிந்து "எமது வரவை இறைவனுக்குத் தெரிவித்தருளவேண்டும்" என்ன, நந்திதேவர் சிவமூர்த்தியின்பால் அறிவிக்க, பரமசிவன் "அழைத்து வருதி" என்று பணிக்க, நந்திதேவர் அனைவரையும் அழைத்துச் சென்றனர். திருமால் முதலியோர் பரமேசனைப் பலகாலும்பணிந்து தமது குறைகளைக்கூறி முறையிட்டனர். சிவபெருமான் தேவர்கள் மீது திருவருள்நோக்கஞ்செய்து "நீங்கள் மிக வருந்தினீர்கள், உங்களுக்கு வேண்டும் வரம் யாது? கூறுதிர், தருதும்" என்று திருவாய் மலர்ந்தருளினர். தேவர்கள் "எம்பெருமானே! அடியேங்களெல்லாம் இந்நாள்காறும் சூரன்முதலிய அவுணர்களால் வருந்தினேம்; அவ்வருத்தம் நீங்கி முன்னையாக்கத்தையடையும்பொருட்டு ஒரு வரம் வேண்டுகின்றோம்; பரமகருணாநிதியே! அகிலாண்டங்களையுமீன்ற அம்பிகையை நீர் திருமணஞ்செய்ததும், தீவினைக்கடலினழுந்திய சிறியேங்களை ஆளுதற்கு ஓரேதுக்காட்டுதற்கன்றி அவரிடமாக ஒரு திருக்குமாரரைப் பெறுதற்கன்று; ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும் ஏதமும் வரவும் போக்கும் இன்பமும் துன்புமின்றி வேதமுங்கடந்துநின்ற விமலனே! ஒரு திருக்குமாரரை உமக்கொப்பாக உம்மிடத்தினின்றுந் தோற்றுவித்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

அந்திவண்ணராகிய அரனார் "நீங்கள் வருந்தாதொழிமின், புதல்வனைத் தருவேம்" என்று திருவாய்மலர்ந்து, ஞானிகளால் சிந்திக்கப் படும் தனது பழமையாகிய ஆறு திருமுகங்களையுங்கொண்டு, அத் திருமுகங்களினுள்ள நெற்றிக்கண்கள்தோறும் ஒவ்வோர் அக்கினிப் பொறியைத் தோற்றுவித்தருளினார். அவ் வாறுபொறிகளும் அரியயனாதி அண்டர்கள் யாவரும் சிறிதும் அணுகலாற்றாத மிக்க வெம்மையை உடையனவாகி, உலகமெங்கும் பரந்தன. அப்பொழுது வாயுக்கள் உலைந்து ஓய்ந்தன ; கடல்கள் வற்றின , வடவாமுகாக்கினியும் தன் செருக்கு நீங்கிற்று ; பூமி பிளந்தது ; மலைகள் யாவும் நெக்கு விட்டன ; அட்ட நாகங்களும் நெளித்து நீங்கின ; அட்ட திக்கயங்களும் அழுது தியங்கின ; உயிர்களெல்லாம் நடுங்கின ; ஆயினும்அவ் வக்கினிப்பொறிகள், பெருங்கருணை செய்யும்வண்ணம் பிறந்தனவாதலால், ஒருயிரையும் நாசஞ் செய்தில. எவர்களையும் எவைகளையும் அஞ்சுமாறு செய்தன. அப்பொறிகளின் வெம்மையைக்கண்டு, அரனார் அருகில் எழுந்தருளியிருந்த உமாதேவியார் வேர்த்துத் திருவுளங்கலங்கி, திருவடியிலுள்ள சிலம்புகள் புலம்புமாறு திருக்கோயிலினுள்ளே ஓடினார். விஷ்ணுமுதலாயினோர்கள் வெருவி நடுநடுங்கி ஒருவர் போமிடம் ஒருவருணராய் ஓடி ஒளிந்தார்கள். கப்பலின் மீதமர்ந்திருந்த காகங்கள், துரத்தப்பட்டாலும் மீளவும் அக்கப் பலையே வந்தடுப்பதுபோல் தேவர்கள் யாவருந் திரண்டு சிவமூர்த்தியையடைந்து ஓவென்று முறையிட்டு, எந்தையே! வெந்திறல் அவுணரை மாய்ப்பதற்கு ஓர் மைந்தனையருளுகென வேண்டினேம் ; முடிவில்லாத வெப்பத்தையுடைய அக்கினியை வழங்கினீர் ; நாங்கள் உய்வது எவ்வாறு ? முன்னொருநாள் மலைவளர் மங்கையின் காத்திற்றோன்றிய கங்கை எவ்வுலகங்களையும் அழிக்கப்பார்ந்ததுபோல் தமது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய நெருப்புப்பொறிகள் உலகெலாம் பரந்தன; ஐயனே! அவற்றை மாற்றிடாயெனில் இன்னும் ஒரு கணத்தில் உலகெலாம் அழியும் ; அவற்றின் வெப்பந்தாங்காது அஞ்சியோடினேம் ; மீளவும் உமது திருவடியே அடைக்கலமாக வந்துளோம் ; உம்மையன்றி எமக்கு வேறுதுணை யார் ? மண்ணும் விண்ணுமாகப்பரந்துள இப்பெரிய அக்கினியைத்தணித்து எமது குறையைத்தவிர்த்தருளல்வேண்டும்" என்று வேண்டினார்கள். சிவபெருமான் "அஞ்சன்மின்" என்று அருள்புரிந்து ஐம்முகத்தைமறைத்து ஒருமுகத்தோடு எழுந்தருளியிருந்து, தம்முடைய நுதற்கண்களினின்

றுந்தோன்றி உலகமெங்கும் பரந்த அக்கினிப்பொறிகள் தமது திருமுன் வரும்வண்ணம் திருவுள் செய்ய, அப்பெரும் அக்கினி முன்போல் ஆறுபொறிகளாகப் பெருமான்முன் வந்தன. அதுகண்டு சிவபெருமான் வாயுதேவனையும் அக்கினிதேவனையும் நோக்கி, "நீங்களிருவீரும் இத்தழற்பொறிகளைத் தாங்கிக்கொண்டுபோய் கங்கையில் விடக்கடவீர்கள்" என்று பணித்தருளினர். வாயுதேவனும் அக்கினிதேவனும் கேட்டு நடுநடுங்கி அஞ்சி, மும்முறைவணங்கி, தேவதேவ! இவைகளை அடியேங்கள் தாங்கவல்லமா? உலகத்தைச் சங்கரிக்குந் தேவரீரது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய இவ்வக்கினியும பிரம விட்டுணுக்களும் ஒரு கணப்பொழுதாயினும் தாங்க வல்லவர்களா? முற்காலத்திற்றோன்றிய ஆலகாலம்போலப்படர்ந்த இத்தழலைக்கண்டு வருந்தி ஓடினேம்; இவற்றை அணுகவும் அஞ்சுகிறேம்; இவற்றை நாங்கள் சிரமேற் றாங்கிக்கொண்டு செல்லுதல் கூடுமா? இவ்வக்கினியை நினைப்பினும் நெஞ்சம் சுடுகிறது; உடல் வியர்க்கின்றது; நாங்கள் எவ்வாறு தாங்குவோம்?" என்று கூறினர்கள். சிவபெருமான் "இவற்றைத் தாங்கும் ஆற்றலை நுமக்களித்தோம்" என்று அருள்புரிய, வாயுவும் அக்கினியும் இயைந்து பணிந்தார்கள். மாலயனாதிவானவர் "எமது இடுக்கண் இன்றே நீங்கியது" என்று உடல் பூரித்தார்கள். கண்ணுதற்பரமன் அவர்களை நோக்கி, "இத்தழற்பிழம்பு சரவணப்பொய்கையில் சேர்ந்து ஒரு குமரனாய் வளர்ந்து, சூராதியவுணர்களை யழித்து உமக்குத் திருவருள்புரியும், செல்லுகிர்" என்று திருவாய்மலர்ந்தருளினர். தேவர்கள் "உய்ந்தனம்; உய்ந்தனம்; இனி அடியேங்களுக்கு ஓர் குறையுமில்லை" என்று கூறி சிவபெருமானை வணங்கி விடைபெற்று நீங்கினர்கள்.

வாயுதேவன் வரைவில்லியை அக்கினிதேவனுடன் வணங்கி, அவருடைய திருவருளாலே அழற்பொறிகள் ஆறையும்சென்னிமேற்றாங்கிக்கொண்டு, திருக்கோயிலை நீங்கிச்செல்ல, அதனைப் பிரம விட்டுணுமுதலிய தேவர்கள் பெருமகிழ்ச்சியுடன் கண்டு, "அநாதிமலமுத்தராம் ஐம்முகச்சிவனர் நெற்றிக்கண்ணினின்றும் ஒரு திருக்குமாரரைத் தோற்றுவித்தருளினர்; சூரபன்மன் அழிவதற்கும் நாம் பண்டையின்பத்தை யடைதற்கும் இன்னுஞ் சிலநாளிருத்தலால், எம்பெருமான் தம்முடைய திருப்புதல்வரை சரவணப்பொய்கையில் குழந்தையாக வளரும்வண்ணம் அருள்செய்தார்; சிவபெருமானது செயலெல்லாந் திருவருளோ; இன்றே நங்குறை தீர்ந்தது; இனி அச்சமென்பதில்லை; நாமும் சரவணப்பொய்கைக்குச் செல்வேம்" என்று வாயுதேவனைத் தொடர்ந்து சென்றார்கள். ஒரு நாழிகை செல்ல வாயுதேவன் "இவ்வக்கினியைத் தாங்குதல் அரிது அரிது" என்று புலம்பி, சிவனாது அருளால் வலிமைபெற்ற அக்கினிதேவனுடைய சென்னியிற் சேர்த்தான். இவ்வாறு மாறி மாறி தாங்கிக்

கொண்டுபோய் கங்கையில் விடுத்தனர். அப்பொறிகளின் வெப்பத்தால் கங்கை சிவனாது சடையில் மறைந்ததுபோல் மறைந்தது. சிவபெருமானருளால் கங்கை அவற்றை சென்னிமேற்றாங்கி ஒரு நாழிகைக்குள் சரவணப்பொய்கையில் விடுத்தனள். மாலயனாதிவானவர்கள் ஆங்கு வந்து விளைவை நாடும் வறியவர்போல் எதிர்நோக்கினர்கள். பிரமன் விண்ணிலும், திருமால் மண்ணிலும், இந்திரன்முதலிய திசைபாலகர்கள் எண்டிசையிலுமாக நின்று காத்தார்கள். கங்கையும் வறக்குமாறு புகுந்த அழற்பொறிகளாறும் இமையமலைச்சாரலிலுள்ள சாவணப்பொய்கையில் புகுதலும், அது சிவபெருமானருளால் வறத்திலின்றி வளம்பெற்றிருந்தது

அருவமும் உருவமுமாய் அநாதியாய் ஒன்ருய் பலவாய்ப் பரப்பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பே திருமேனியாக கருணைவெள்ளம் பொழியும் ஆறுதிருமுகங்களும், பன்னிரு திருக்கண்களுங்கொண்டு உலகமெல்லாம் உய்யும்வண்ணம் முருகக்கடவுள் திருவவதாரஞ் செய்தருளினர்.

> அருவமு முருவுமாகி யநாதியாய்ப் பலவா யொன்ருய்ப்
> பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக் [டே
> கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்
> ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய.

ஆகாயத்திலே துந்துபிகள் முழங்கின, வேதங்களெல்லாம் ஆர்த்தன, பிரமாவும் திருமாலும் இந்திரனும் பூமழைபெய்து, "அடியேங்களுக்கு அருள்செய்க" என்று துதித்துச் சூழ்ந்தார்கள். ஒருவருக்கும் அமையப்பெருத இறைவர்க்குள்ள அருட்குணங்கள் ஆறும் ஆறுமுகங்களாய் வந்ததென்ன? சரவணத்தில் வைகும் தனிப்பெருந் தலைவர் ஆவிகட் கருள்புரியுமாறு ஆறுமுகங்கொண்டு வீற்றிருந்தருளினர். வேதங்களின் முடிவாலும் மனத்தாலும் வாக்காலும் அறியொணுது எங்கும் நிறைந்துநின்ற நிருமலாகிய முழுமுதற்கடவுள் மூவிரு முகங்களை யுடையாராய்த் தோன்றி, உயிர்களிடத்துள்ள பேரருளோடும் சாவணப் பொய்கையிலே ஆயிரத்தெட்டு இதழ்களோடுகூடிய செந்தாமரை மலரின்மீது எழுந்தருளியிருந்தார்.

> மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினு லளக்கொ ணுமல்
> னிறைவுடன் யாண்டுமாகி நின்றிடு நிமல மூர்த்தி
> அறுமுக வுருவாய்த் தோன்றி யருளோடு சரவணத்தின்
> வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந் தருளினனே.

(தொடரும்.)

ஓம் குஹாய நம :

கற்பு

(186-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவனாற் படைக்கப்பட்ட உலகம் பஞ்சபூதங்களின் சேர்க்கையேயாகும். உடம்பு பஞ்சபூதங்களின் பரிணாமமேயாம். இவ்வைம்பெரும் பூதங்களுக்குள் சிறந்தது அக்கினியேயாம். சிறந்த மணி நடுவிலிருப்பதுபோல், அக்கினிபூதம் ஐம்பூதங்களுக்கும் நடுவில் இருந்து திகழ்வதாம். எல்லாவற்றையும் நீறாக்கும் பெருந்திறலுடையது. சிவபெருமானுக்கு ஒருவகையில் நிகரென்று சொல்லப்படும் பெருமிதமுடையது. இருளைநீக்கி உலகத்திற்கு இன்பத்தை நல்குவது. கரையின்றி நிற்குங் கடலை நிலைமீறாது அடக்கிக்கொண்டிருப்பது இவ்வக்கினியேயாம். உடம்பிலும் இவ்வக்கினி தணிந்துவிட்டால் கைகால்கள் குளிர்ந்து ஆவிநீங்குகிறது. எல்லா வுலகங்களையும் முடிவில் எரிக்கும் பெருவலியுடையது.

இத்தகைய அக்கினியைச் சுடுகின்ற அக்கினி ஒன்றுளது; அதன் பெருமையை அளக்கவல்லார் யாவர்? தீயைச்சுடுகின்ற தீ எது? என்று அன்பர்கள் வியப்புறலாம்; கற்புத்தீயேயாம். கற்புடையவளைக்கண்டு கனலும் அஞ்சுகிறது; தீயினும் வெப்பமுடையது கற்பு; தூரத்திலிருந்த வேடுவனை எரித்த தமயந்தியின் கற்புத் தீயை அறியாதாரும் உண்டோ? பெண்மணிகள் அக்கற்பைக் காப்பாற்றவேண்டும்; உயிரினுஞ்சிறந்ததாகக் கற்பைப்பேணவேண்டும், அடியில் வரும் வரலாற்றை சகோதரிகள் உய்த்துணர்க.

சோழவள நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் சாதுவன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அருநிதிமிக்கப் பெருமிதமுடையவன். அந்நகரிலேயே நற்குடி தோன்றிய சற்குணவதியாம் ஆதிரை யென்னும் மாதரசை வாழ்க்கைத்துணைவியாகக் கொண்டு இல்வாழ்க்கையென்னும் நல்வாழ்க்கையை நடத்திவந்தான்.

ஆதிரையோடு ஈராண்டு சுகமே இன்புற்றிருந்தனன். ஒருநாள் சாதுவன் அந்நகரில் நடந்த நாடகத்திற்குச் சென்றான். அதில்

நடித்த நாடகமாதின் கண்களைக் கவரும் கட்டழகில் மயங்கினான். அவளது ஆடலைக்கண்டும் பாடலைக்கேட்டும் பரவசமடைந்து அவள் மீது மையல்கொண்ட சாதுவன் நாடகமுடிந்தபின் வீடுசென்று கண் ணுறங்காது, அவளையே நினைந்து நினைந்து நெஞ்சம் புண்ணாகி, விடிந் ததும் அவ்விலைமகள் வீடுசென்று அவள் மாயவலைப்பட்டு அவள் வீடே சுவர்க்கவாசமென மகிழ்ந்திருந்தான். (நாடகம் பார்ப்பதின் தீமையை உற்று நோக்குங்கள்). சாதுவன் தனது தருமபத்தினியை மறந்து கணிகையுடன் களித்து வாழும் நாளில் முன்னோர் தேடி வைத்த நிதிகளையெல்லாம் இழந்தான். பொன் பறிப்பதில் பரத்தை யர் மிகவும் வல்லுனரல்லவா? அக்கணிகை பொருள் முழுவதையும் பறித்துக்கொண்டு சாதுவன் கை வறண்டவுடனே அவனை விரட்டி விட்டனள். விளக்கொளியும் வேசையர் நட்பும் ஒன்று; விளக் கொளி நெய்யற்றவுடனே ஒழியும்; வேசையர் நட்பு கையற்ற வுடனே ஒழியும். சாதுவனை விரட்டிய வேசி வேறொரு தனவந்தனை நேசித்தாள். சாதுவன் உள்ள உணவும் உடுக்க உடையும் இன்றி துன்பவாரிதியில் வாழ்ந்தான். கற்பரசியாகிய ஆதிரையை நினைந்து வருந்தினான்; அவளுக்குத் தானிழைத்த தீங்கையுன்னி நெடுமூச் செறிந்தான்; அவளைக்காண நாணித் தனது இல்லத்திற்கும் சென்றா னில்லை.

இவ்வாறிருக்கையில் வங்கநாட்டினின்றும் சிலவணிகர் பண்ட மாற்றும்பொருட்டுக் காவிரிப்பூம்பட்டினம் வந்திருந்தார்கள். அவர் கள் மீண்டுந் தமது நாட்டிற்குப் புறப்படும்பொழுது, சாதுவனும் அந்நாட்டிற்குச் செல்ல விரும்பி, அவ்வணிகரிடம் தமது கருத்தைத் தெரிவித்து அவர்கள் சம்மதிபெற்று அவர்களுடன் மாக்கலமேறிச் சென்றனன். மாக்கலம் கடலில் நெடுந்தூரஞ் சென்றபின், கடுங் காற்றும் இடியுடன் கூடிய பெருமழையும் திடீரென்றுண்டாயின. இரவுவேளையாதலால் இருள்மயமாக மிகவும் பயங்கரமாக இருந்தது. கடல் கொந்தளித்தது; மாக்கலம் கவிழ்ந்துவிடும் என்றறிந்த கப்பல் தலைவன் அபாயநிலையை அங்குள்ளார்க்கு அறிவித்தான். கப்பலி லிருந்தோர்கள் தமக்கு நேர்ந்த இன்னலையுன்னி வருந்தி இறைவனை நினைந்து கைகூப்பித் தொழுதார்கள். சாதுவன் தனக்கு நேர்ந்த ஆபத்தையும், தனது அருமைப் பத்தினியாகிய ஆதிரைக்குத் தான் புரிந்த தீமையையும், அவளைக்கண்டு தனது குறையைக்கூறாது வந்த தையும் மாறிமாறி எண்ணி ஏங்கிக் கண்ணீர் பெருக்கி எல்லாம் வல்ல

இறைவனை இரு கரங்களாலும் இறைஞ்சி நின்றான். சிறிது நேரத்தில் கப்பல் கடலில் மூழ்கியது. ஓவென்ற ஒலி கடலொலியை வென்றது. கடலுள் அழுந்திய மக்களிற் பலர் மாண்டனர்; சிலர் இங்குமங்குமாக நீந்தித் தத்தளித்து அங்கு மிதந்திருந்த மரக்கட்டைகளையும் பாய்மரங்களையும் பற்றிக்கொண்டு அலைகளில் மோதி மொத்துண்டு அலக்கணுற்றனர். சிலர் முதலைகட்கும் பெருமீன்களுக்கும் இரையாயினர். சாதுவன் கடலில் மூழ்கியதும் அருகில் மிதந்துகொண்டிருந்த ஒரு பாய்மரத்தைக்கண்டான். அதைப் பற்றி அதன்மீது படுத்துக்கொண்டான். எங்கும் பரந்திருந்த இருளும், கருங்கடலின் பேரொலியும், இடியோசையும், பெருமழையும், கடுங்காற்றின் ஆரவாரிப்பும் ஒருங்குகூடிய அந்நிலையைக்கண்டு யார்தான் கலங்காதிருப்பார்? சாதுவன் தனது அபாயநிலைக்கு உளம் மிகவும் வருந்தி, கற்புக்கணிகலமாகிய தன் காதலியை நினைந்தான்; "மங்கையர்க்கரசியே! அருந்ததியனைய ஆரணங்கே! ஐயோ! நான் உயிரோடிருந்தும் உனக்குத் துன்பமே செய்தேன்; இறந்தும் உனக்குத் துன்பமே செய்யப்போகிறேன்; நாடகம் பார்த்து நாடோடியானேன்; மாதர் மணியாகிய உன்னை வெறுத்து வேசை வலைப்பட்டேன்; வேசையர்வலைப் பட்டார்க்கெல்லாம் இக்கதிதான் என்பது திண்ணமாயுணர்ந்தேன்; அந்தோ! காமதேனுவின் பாலை வெறுத்து கள்ளிப்பாலை விரும்பி யுண்டவனைப்போல், கற்பரசியாகிய உன்னை விட்டு கணிகையின் உறவைப்பெற்றேன்; கொடும்பாவியாகிய எனக்கு இத்தண்டனை வேண்டற்பாலதே; பாவியேன் புறப்படும்போது நினது மதிமுகத்தைக்கண்டு ஒரு சொல்லும் சொல்லாமல் வந்தேன்; இனி உன்னைக் காண்பேனோ? உனது இனிய மதுர மொழியைக் கேட்பேனோ? நான் இறந்ததைக்கேட்டு எவ்வாறு வருந்துவையோ? என்னை நினைந்து நெஞ்சம் புண்ணாகுவையோ?" என்று பலவாறு புலம்பி விண்ணீருடன் கண்ணீரையும் பெருக்கி மிதந்துகொண்டு கண்களைமூடி துன்பக்கடலில் மூழ்கினன். பாய்மரம் அலைகளால் தள்ளப்பட்டு ஆதிரையின் நற்றவப்பயனால்பொழுது புலர்ந்ததும் ஒரு மலைநாட்டில் அவனைச் சேர்த்தது.

சாதுவனைப் போலவே மரக்கட்டைகளையும் பாய்மரங்களையும் பற்றினோர் கடலில் மிதந்து மறுநாள் காவிரிப்பூம்பட்டினக்கரையில் ஒதுக்கப்பட்டார்கள். அவர்களைக்கான அந்நகர மக்கள் திரளாகக் கூடினர். இயமனிடமிருந்து தப்பியதுபோல் கடலிலிருந்து தப்பிய

அவர்கள் நிகழ்ந்ததைக் கூறினர். அதைக் கேட்டோர் அனைவரும் அதிசயமும் அநுதாபமும் கொண்டனர். சாதுவனும் கடலில் மூழ்கி மடிந்தானென்ற செய்தி காட்டுத்தீப்போல் நகரெங்கும் பரவியது. அதனைக்கேட்ட ஆதிரை இடியேறுண்ட பாந்தள்போல் நடுங்கி "அந்தோ! அருமைக்காதல! அனுதையாக என்னைவிட்டு அகன்றீரே? உமது பொன்னூர்மேனியை இனிக் காணும்நாள் உளதோ? தாங்கள் என்னோடு சொல்லாமலும் போனீரே? கணவனையே கடவுளாக நினைக்குங் காரிகையார் கணவன் பிரிந்தபின் உயிர்வாழ்வாரோ? தாங்கள் சென்ற வானுலகத்திற்கு யானும் வருகிறேன்" என்று புலம்பி, அப்பொழுதே அந்நகர மயானத்தில் தீ வளர்த்து அத்தீக் குழியில் இறங்கி உயிர்துறக்க எண்ணினள். கற்பின்மிக்க அம் மாதரசி கூந்தலில் நறுமலர்சூடி, மஞ்சள் குங்குமமணிந்து, இடையில் நல்லுடையணிந்து, உடம்பில் வாசனைகமழும் நற்சாந்தம் பூசி, மயானத்தையடைந்து, தீ வளர்த்து, வழிபடுதெய்வத்தை வணங்கி, "என் மணாளனுடன் மறுமையிலாவது மனமகிழ்ந்து வாழ்வேனாக" என்று குளிர்ந்த தாமரைத்தடாகத்தில் நீராட இறங்குபவள்போலத் தீக்குழியில் இறங்கினள். அவளது கற்பின் பெருமையைக்கண்டு கனலும் அவளை அணுகாது சூழ்ந்துநின்றது; பன்னீர்போற் குளிர்ந்திருந்தது; அவளது கருங்குழலிற் சூடியிருந்த மருமலர் வாடாமல் நிறங்குன்றாமல் முன்போலவே இலங்கிற்று; அவள் உடுத்தியிருந்த நல்லுடை நிறம் மாறாதிருந்தது; உடம்பிலணிந்திருந்த சாந்தம் முன்போலவே நறுமணங் கமழ்ந்தது. இவ்வாறு ஆதிரை கொழுந்துவிட்டெரியும் அக்கினியின் நடுவில் தாமரைமலரில் வாழும் பூமகள்போலப் பொலிவுடன் விளங்கினாள். அவளது கற்புத் தீ அந்த நெருப்பைச் சுட்டது; என்னே கற்பின் பெருமை? இப்புதுமையைக் கண்ட ஆதிரை தன் விதியைநொந்து, ஐயோ! பாவியென்று தீயும் என்னைச் சுட அஞ்சுகிறதுபோலும்; இனி என்செய்வேன்? தெய்வமே! திக்கற்ற எனக்கு நீயே துணை" யென்று கல்லுமுருகக் கதறியழுதாள். அம்மடமங்கையின் துன்பத்தைக்கண்டு பேய்களுமிரங்கின; "மாதே! உன் கணவன் உயிர்துறந்தானல்லன்; கடலினின்றுந்தப்பி நாகர் வாழும் நாடு சேர்ந்துளான்; இன்னுஞ் சிலநாட்களில் சுகமே வந்து நின் மனக்கவலையை மாற்றுவான்; வருந்தற்க" என்று ஒரு அசரீரி ஆங்கு எழுந்தது. அதனைக்கேட்ட ஆதிரை ஒருவாறு மனந்தேறிச் சிறிது மகிழ்ச்சியும் வருத்தமுங்கொண்டு தனது இல்லம் சென்று

கணவன் கடிதில் வரவேண்டுமென்று வழிபடு தெய்வத்தை வணங்கி வந்தாள்.

இஃதிவ்வாருகக் கடலினின்றுங் கரையேறிய சாதுவன் கடற் கரையில் அயர்ந்து கண்துஞ்சினன். அவ்வழியாகவந்த அந்நாட்டு மக்கள், அயலான் ஒருவன் அயர்ந்து தூங்குவதைக்கண்டு களிகூர்ந்து தமக்கு அன்று நல்லுணவு கிடைத்ததென்று மகிழ்ந்து, அவனைத் தூக்கிக்கொண்டு தம் அரசனிடம் சென்ருர்கள். சாதுவன் கண் விழித்துப்பார்த்தான்; தன்னைச்சுற்றிப் பேயுருக்கொண்ட வேற்று மக்கள் நிற்பதைக்கண்டு நடுங்கினுன். அவனைக் கண்ட அரசன் அந்நாட்டு மொழியில் "நீ யார்? இங்கு எவ்வாறு வந்தாய்? நின் வரலாறு என்னை?" என்று வினவினுன். அம்மொழியைச் சாதுவ னும் ஒருவாறு உணர்ந்திருந்தானுதலால், தனது ஊரும் பேரும் உரைத்துத் தனக்குக் கடலில் நேர்ந்த கடுந்துன்பத்தையும் கல்லும் உருகுமாறு உரைத்தான். அதைக்கேட்ட நாகமன்னன் மனமிரங்கி அவன் பசியை நீக்குமாறு கள்ளும் ஊனும் வரவழைத்துத்தருமாறு காவலர்க்குக் கட்டளையிட்டான். அது கேட்ட சாதுவன், "ஐயா! உனக்கு வந்தனம், என்னை மன்னிக்கவேண்டும்; ஊனும் கள்ளும் நான் உண்ணமாட்டேன்; பசியால் என் ஆவி பிரிந்தாலும் இப் பொருந்தாவுணவை நான் அருந்தேன்" என்றனன். அது கேட்ட அரசன் வியப்புற்று "சாதுவா! இவ்வுலகில் வாழும் மக்களுக்கு ஊனைப்போல் இன்பந்தரும் உணவும், கள்ளைப்போல் களிப்பைத் தரும் பானமும் வேறுளவோ? இவற்றை வேண்டாமென்று மறுக் கும் மக்களும் உளரோ? இவை நமக்காகத்தானே படைக்கப்பட்டி ருக்கிறது?" என்று வினவினுன்.

சாதுவன் "ஐயா! நன்று கூறினுய்? கொல்லா விரதமே எல்லா விரதங்களிலும் உயர்ந்தது; ஊனைத்தின்று ஊனைப்பெருக்கலாமா? பிற உயிருக்குத் துன்பஞ்செய்தல் மகாபாவம்; அவைகள் நமக்காகப் படைக்கப்படவில்லை; நம்மை ஒருவன் கொன்று தின்னவந்து "எனக் காகத்தான் நீ படைக்கப்பட்டிருக்கிருய்" என்று கூறினுல் நாம் என்ன சொல்லுவோம்? இந்த ஞாயத்தை உற்றுப்பார்ப்பாயாக. மன்னுயிரனைத்தையும் தன்னுயிர்போல் காப்பாற்றுவதே மக்களு டைய கடமை; இலைகளையும், காய்கனிகளையும், கிழங்குகளையும், தானியங்களையும் நாம் புசித்தல்வேண்டும்; எந்த உயிரை எவன் இம் சிக்கிருனே? அந்த உயிர் அவனை மறுபிறவியில் இம்சிக்கிறது;

கொலைக்கு ஆதாரமாக அறிவை மயக்குவதால் கள்குடிப்பதும் பெரும் பாவமே; ஆவியீடேறவேண்டுவோர் இவற்றை ஒருபோதும் அருந்தார்.

" நல்லறஞ் செய்வோர் நல்லுலகடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநரகடைதலும்
உண்டென வுணர்தலின் உறவோர் களைந்தனர்"

என்று இன்னோன்ன நீதிநெறிகளை அவன் மனதிற்படுமாறு மிகவுந்தெளிவாக எடுத்துச் சாதுவன் கூறினன். இவ்வறவுரையை கேட்ட மன்னன் மனந்தெளிந்து, அன்றுமுதல் கள்ளையும் ஊனையும் கடிந்து, தன் குடிமக்களையும் அவற்றை விலக்குமாறுசெய்து கொல்லா நெறியைத் தன் நாடுமுழுவதும் பரப்பினன். சாதுவன்பால் பல நீதிகளைக்கேட்டு அதன்படி ஒழுகத்தலைப்பட்டான். சாதுவனும் அந்நகர மக்களுடனும் அரசனுடனும் கலந்து அடிக்கடி அநேக நல்லுரைகளைக்கூறி இனிது வாழ்ந்தான். இடையிடையே தன் மனைவியை நினைந்து நெஞ்சம் நெகிழ்வான்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் சந்திரதத்தன் என்னும் வணிகனது மரக்கலம் வழிதப்பி அந்நாகநாட்டின் கரையை அடைந்தது. அதைக்கண்ட சாதுவன் பெரிதும் மகிழ்ந்து அக்கப்பலிடம்வந்து தலைவனை நோக்கி, " எங்கு செல்கிருய்?" என்று வினவினன். அவ்வணிகன் " ஐயா! எனது கப்பல் காவிரிப்பூம்பட்டினம் வரை செல்லும்" என்றனன். " பழம் நழுவிப் பாலில் விழுந்தாப்போல" சாதுவன் கேட்டு மகிழ்ந்து, அரசனிடமும் அந்நாட்டு மக்களிடமும் விடைபெற்றுக்கொண்டு கப்பலிலேறினன். அரசனும் மக்களும் அவன் பிரிவைக்குறித்துப் பெரிதும் வருந்தினர்கள். சாதுவன் இடையூறின்றித் தன்னகர் அடைந்து நெடுநாள் பிரிந்த துன்பவலையில் மூழ்கிப்பொலிவிழந்திருந்த கற்பின்மிக்க ஆதிரையைக்கண்டு களிப்பென்னுங் கடலில் மூழ்கினன். ஆதிரை நாயகனைக்கண்டு பன்முறை வணங்கி கண்ணீரால் அவனது திருவடியை விளக்கி இன்புற்றனள். மலரும் மணமும்போல இருவரும் பன்னாள் இன்பமாகவாழ்ந்தார்கள்.

சாதுவனும் ஆதிரையும் கருத்தொருமித்து இடையருத அன்புடன் இல்லறம் நடாத்துகையில், அந்நகரில் மாதவியின் மகளாகிய மணிமேகலை வந்தடைந்தனள். அம்மாது துறவறநெறியை மேற்கொண்டு, வறுமையால் வருந்தும் ஏழைமக்களது பசிப்பிணியை

நீக்கும் அறப்பணியை யாற்றிவந்தனள். மணிமேகலையின் தண்ணருள் நிறைந்த தருமசிந்தையை உணர்ந்த ஒரு தெய்வம் அவளுக்கு ஓர் பாத்திரத்தை நல்கியது. "அப்பாத்திரத்தில் கற்பிற் சிறந்த மங்கையின் கையால் அன்னம் அளிக்கப்பெற்றால் அவ்வன்னம் அள்ள அள்ளக் குறையாமல் உலகம்முழுவதும் திரண்டு ஒருங்கே வந்தாலும் உணவளிக்குந்தகுதியுடையதாய் விளங்கும்" என்று அத் தெய்வங் கூறியிருந்தது. அவ்வாறே மணிமேகலை அப்பாத்திரத்தைக் கரத்திலேந்தி நெடுநாளாக அன்னமேற்றும் அதன் பயனையடையாதவளாய் ஒருநாள் மாசிலாக் கற்புடைய ஆதிரையின் திருமனைக்கேகி சித்திரப்பாவைபோல் நின்றாள். அம்மாதைக் கண்ட ஆதிரை அக மகிழ்ந்து "பாரகமடங்கலும் பசிப்பிணியறுக" என்று வாழ்த்தி மணிமேகலையை மும்முறை வலம்வந்து வணங்கி அவள் கரத்திருந்த பாத்திரம் நிறைய இன்னமுதனைய அன்னம் அளித்தாள். அன்றுமுதல் "அமுத சுரபி" என்று பேர்பெற்ற அப்பாத்திரம் வழங்கக் குறையாத வளத்தினையுடையதாகி, உலகிலுள்ளோர் அனைவருக்கும் பசிப்பிணியை நீக்கி பொன்றா நலனை நல்கியது. மாநிலத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் பசிநோய் நீங்கப்பெற்று ஆதிரையைப் பல்லாண்டு வாழ்த்தினார்கள். கற்புடை மங்கையால் செய்யத்தகாத காரியம் மூவுலகிலுமில்லை என்று எல்லோரும் கொண்டாடினர்.

(தொடரும்).

வினா விடை மணிகள்.

(ஆதிசங்கரர்)

க்ரஸ்மாத் ஸித்திஸ்தபஸோ புத்தி: க்வநு பூசுரேகுதோ புத்தி: ।
வுத்தோப ஸேவயா கே வ்ருத்தா யே தர்மதத்வக்ஞா ॥

வினா : எதனால் காரியஸித்தி உண்டாகிறது ?

விடை : தபஸினால் (ஏகாக்ரசித்தனாய் ஒரு காரியத்தில் நினைவிருப்பது).

வினா : தபஸ் எதனால் உண்டாகிறது ?

விடை : புத்தியினால்.

வினா : புத்தி எங்கிருக்கிறது ?

விடை : பிராம்மணனிடத்தில்.

வினா : நிஜமான புத்தி எது ?

விடை : பெரியோரை அடுத்துச் சிசுருஷைசெய்து அடையும்புத்தி.

வினா : பெரியோர் யார் ?

விடை : தர்மதத்துவங்களையறிந்தவர்கள், அவர்கள் சிறியோராகவிருப்பினும் பெரியோர்களே.

ஸ்ரீவள்ளிநாயகன் துணை.

மோனமென்பது ஞானவரம்பு

"மோனமேன்பது ஞான வரம்பு" என்ற வாக்கியம் ஔவைப் பிராட்டியாரின் அமுத மொழி. அதாவது "மௌனம் என்பது ஞானத்தின் எல்லை அல்லது ஞானத்தையடையும் வழி" என்று பொருள். மௌனம் அல்லது மோனம் என்றால் சும்மா இருப்பது என்றும் பொருள்படும். சத்துவம் இராஜசு, தாமசு என்ற மூக்குணங்களில் இது சத்துவகுணத்தைச் சேர்ந்தது. சாதாரணமாக ஒருவன் வாய் பேசாமலிருந்தால் அவன் மௌனமாயிருக்கின்றான் என்று கூறுவது உலகவழக்கம். ஆனால், பேசாமல்மட்டுமிருந்தால் ஞானம் கிட்டிவிடுமா? அப்படியாயின் ஊமைகளெல்லாம் ஞானிகளாக வேண்டுமன்றோ? சன்னியாசிகள், துறவிகள் இவர்களில் சிலர் வாய் பேசாமல், அவசியமாக வெளியிடவேண்டிய எண்ணங்களை எழுதிக் காட்டுவதுண்டு. இத்தகையோர் ஒரு காரியசித்திக்காக குறித்த காலம் வரையில் மௌன விரதத்தை யனுஷ்டிப்பார்கள். அதனால் பிறர் அவர்களிடம் அதிகமாகப் பேசுவதற்கு இடமில்லாமற் போகிற படியால், அவர்களது மனம் நாட்டப்பட்ட நிலைமையினின்று சலிக்காமலிருக்க அனுகூலமாகிறது. ஆயினும் இவைகள் பூரணமௌனமாகா. கீழ்க்கண்ட மூன்றுவித மௌனங்களடங்கியதே பூரண மௌனம்; அதுவே ஞானிகளடையும் மௌனம்: 1. வாக்கு மௌனம்: வாய்திறந்து எதையும் பேசாதிருத்தல்; 2. காஷ்ட மௌனம்: அவயவங்களால் ஒரு வேலையும் செய்யாதிருத்தல்; 3. மனோ மௌனம்: மனதால் எதையும் சிந்திக்காதிருத்தல்.

ஒரு காரியம் நடக்கவேண்டுமாயின், மனம், இந்திரியம், புலன் மூன்றும் சேர்ந்தே அது நடக்கவேண்டும். இந்த மூன்றிலே மனமே முதலில் ஒன்றை நினைக்கவேண்டும்; பிறகு அது இந்திரியத்தின் உதவிகொண்டு புலன்வழியாய் வெளிவிஷயங்களையுணர்ந்து கருமேந்திரியங்களால் செய்கிறது. மனம் நினைக்காவிட்டால் ஒரு காரியமும் நடவாது. ஆகையால் மனோ மௌனமே ஞானத்திற்கு முக்கிய சாதனமாகும். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகாணங்களாலும்

நாம் கருத்தைச் செய்கிறோம். மனதால் நினைப்பதாலும், வாக்கால் வசனிப்பதாலும், காயத்தால் ஒன்றைச் செய்வதாலும் நாம் பாவ புண்ணியங்களைச் செய்கிறோம். மனமடங்கிவிட்டால் கன்மமே யொழிந்துவிடும். மனம் சலனமற்றபோது சத்துவகுண மாத்திரமாகச் சேடிக்கிறது. மனதின் உருவநிலையே அதன் இராஜோ தமோ குணங்களாம். அருவ நிலையே அதன் சத்துவகுணமாம். மனோலயமடைந்த ஞானிகள் ஈசுரார்ப்பணமாகக் கனவுபோல் காரியங்களைச் செய்தாலும் அவர்களுக்கு கர்மம் உண்டாகாது.

மனமொடுங்கினால் ஆன்மா அந்தச் சுத்த சத்துவவிருத்தியால் தன்னைத் தானடைகிறது; அதாவது ஞானத்தையடைகிறது. அதனாலே "மோனமென்பது ஞான வரம்பு" எனக்கூறப்பட்டது. மனம் உள்ளும் வெளியுமாகிய இரண்டுவழிகளில் தொழில் செய்கிறது. வெளியில் இந்திரியவாயிலாகப் புறம்போந்து விஷயங்களில் பிரவேசிக்கிறது; உள்ளே மனோராச்சியம் செய்கிறது. ஒவ்வொரு சமயம் நாம் வெளிவிஷயங்களைக் கவனிப்பதைவிட்டு மனோராச்சியமும் செய்யாமல் (அதாவது மனதில் ஒன்றும் சிந்தியாமல்) சும்மாவிருக்கிறோம். அப்போது அருகிலுள்ளோர் பேசுவதும் நமக்குக்கேட்காது. எதிரில் ஒருவர் சொல்லுவதும் தெரியாது. ஏனெனில், மனம் எந்த இந்திரியத்தோடும் சம்மந்தப்படாமலும் எதையும் சிந்திக்காமலுமிருக்கிறது; ஆகவே மௌனமாகிய நிலைமை.

ஒரு தடாகத்தில் நீர் கலங்கி அலைகள் வீசிக்கொண்டிருக்கையில் அத்தடாகத்தின் அடியில் என்ன இருக்கிறதென்று தெரியாது. அத்தகைய தடாகத்தைப்போன்றது சலனத்தோடுகூடிய மனம். அலைகளின்றி அசைவற்ற தெளிவான நீரையுடைய தடாகத்தில் அடியிலிருக்கும் வஸ்துக்கள் புலப்படும். சலனமற்ற ஒரே நிலையில் நிற்கும் மனம் அதாவது சத்துவகுணமாத்திரமாகச் சேடித்துநின்ற மனம் அலையற்ற தடாகம்போன்றது; அப்போது அதன் அடியிலுள்ளது தோன்றும். மனதின் அடிப்பாகமே அது உதிக்குமிடம். ஆகையால் அங்கு நோக்க, அதாவது மனம் எங்கிருந்து உதிக்கிறது என்று நோக்க, ஆன்மதரிசனம் உதயமாகும்; ஏனெனில், ஆன்மாவினின்றே மனம் உதிக்கின்றது.

தாயுமானவர் மனதை நோக்கி "நின் சன்மதேசத்தில் நீ செல்லல்வேண்டும்" என்றார். அதாவது "மனமே நீ எங்கிருந்து வந்தாயோ அங்கு போய்ச்சேர்" என்றார். இன்னும் அம்மகானே,

"சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே
இம்மாயா மோகினி எனடா—தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்லவேண்டாங் கன்ம
நிட்டா சிறுபிள்ளாய் நீ" என்றும்

"சும்மாவிருக்கச் சுகஞ்சுகமென்று சுருதி யெல்லா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பி யென்பேதமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தேன் அந்தோவென் விதிவசமே"
என்றும்

"சும்மா விருப்பதுவே சுட்டற்றபூ ரணமென்று
எம்மாலறிதற் கெளிதோ பராபரமே" என்றும் அருளிய தும், குமாக்கடவுளின் திருவருள்பெற்றுத் திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாதர் கந்தானுபூதியில்

"சும்மாவிரு சொல்லற வென்றலுமே
யம்மா பொரு ளொன்று மறிந்திலனே"

என்று அருளியுள்ளதும் ஈண்டு சிந்தித்தற்பாலன.

இந்த மோனநிலையை யடைதற்கு ஆசை யொழியவேண்டும். எல்லோரும் ஏககாலத்தில் இதை யடையமுடியாது. மனம் ஒரே சிந்தனையில் நிற்பதே கஷ்டம்; சதா ஒருசிந்தனைவிட் டொருசிந்தனை யிற் குதித்து அலைந்துகொண்டேயிருப்பதுதான் அதன் சுபாவம்; வேதத்தில் மனதைக் குரங்கிற்கே ஒப்பிட்டிருக்கிறது. எத்தகைய குரங்கெனில்: குரங்கு கள்ளைக் குடித்துவிட்டால் அதிக சேட்டை செய்யுமன்றோ? அதோடு அது காரமாய இஞ்சியை மென்றுவிட்டால் இன்னும் அதிக சேட்டை; அதோடு அதைத் தேளுங் கொட்டிவிட் டாலோ சொல்லவேண்டியதில்லை; அதுவும் போதாதென்று ஒரு பேயும் பிடித்துக்கொண்டால் அக்குரங்கு எப்படியிருக்கும்? அத் தகைய குரங்கிற்குச் சமதையாக மனதையொப்பிட்டிருக்கிறது.

ஆகையால் முதலாவது ஆசையைக் கொஞ்சங் கொஞ்சமாக அடக்கவேண்டும்; மனம் இச்சா சொரூபம்; இச்சையை யொழித் தால் மனமடங்கும்; அதோடு மனதை முதலில் குறித்த ஒரு சிந்தனை யிலேயே நிறுத்தப் பழகவேண்டும். அதற்கே சுகுணோபாசனை வைக்கப்பட்டிருக்கிறது. உலகபோகத்திலிருக்கும் இச்சையை உபாசனமூர்த்தியிடம் செலுத்தி (அதுவே பக்தியெனப்படுவது)

மனதை அங்கு நிறுத்திப் பழகவேண்டும். அதில் திடப்பட்டு அனு பவம் முதிரமுதிர மனவொடுக்கம் சித்திக்கும். இது மிகக் கஷ்டமான தேயாயினும் சாத்தியமானதே. சும்மாவிருப்பதுவே மிகக் கஷ்டம்; இது சோம்பலல்ல; இதில்தான் மனம் தன் பூரண சுறுசுறுப்போடு வேலைசெய்கிறது; மனதை யதன் இச்சைப்படி விட்டுவிட்டு அதன் பின் அலைவது கஷ்டமல்ல. ஒரு குதிரையை அதன் மனம்போன படி முரட்டுத்தனமாய் மேடுபள்ளம் பாராது பாய்ந்தோடும்படி விட்டு விடுவது கெட்டிக்காரத்தனமல்ல; கஷ்டமுமல்ல. அதன் கடிவாள வாரை யிழுத்துப்பிடித்து, அதையடக்கி நிறுத்துவதே கஷ்டம். அப்படிச் செய்பவனே சாமர்த்தியவான். மனதை யடக்கியாளக் கற்றவனே உண்மை வீரன்; அவனே புருடனெனப்படுவான்; நமது முன்னோர் அச்சக்தியாலேயே திரிகால ஞானிகளாய் அபூர்வ காரியங்களைச் செய்தார்கள். இத்தெய்வீக சாத்திரம் நம்புண்ணிய பூமியிலேயே அநாதியாயுள்ளது. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் இதற்கு முயற்சி செய்யவேண்டும். ஏனெனில் மனிதன் அடையத் தக்க பேரின்பப்பேற்றை யளிக்கவல்லது இம்மார்க்கமொன்றே.

"ராமு."

யக்ஷப்பிரஶ்னே.

கே: யக்ஞத்திற்குறிய முக்கியமான ஸாமம் எது?

ப: உயிரே யக்ஞத்திற்குறிய முக்கியமான ஸாமம்.

கே: யக்ஞத்திற்குறிய யஜுஸ் எது?

ப: மனமானது யக்ஞத்திற்குறிய முக்கியமான யஜுஸ்.

கே: இவர்களுடைய யக்ஞத்தை எது வரிக்கிறது?

ப: ரிக்கொன்றே யக்ஞத்தை வரிக்கிறது.

கே: யக்ஞமானது எதை மீறாமலிருக்கிறது?

ப: யக்ஞமானது அந்த ரிக்கை மீறாமலிருக்கிறது.

கே: பயிரிடுபவர்களுக்கு எது சிறந்தது?

ப: பயிரிடுபவர்களுக்கு மழை சிறந்தது?

கே: விதைப்பவர்களுக்கு எது சிறந்தது?

ப: விதைப்பவர்களுக்கு விதை சிறந்தது.

கே: பிரதிஷ்டையை விரும்புகிறவர்களுக்கு எது சிறந்து.

ப: பிரதிஷ்டையை விரும்புகிறவர்களுக்குப் பசுக்கள் சிறந்தவை.

கே: பெறுகிறவர்களுக்கு எது சிறந்தது?

ப: பெறுகிறவர்களுக்குப் புத்திரன் சிறந்தவன்.

ஓம் குஹாய நம:

குரு சிஷ்ய லக்ஷணம்

சச்சிதானந்தன்.

சிஷ்ய லக்ஷணம்.

(192-வது பக்கத் தொடர்ச்சி.)

ஆகவே குருநாதனுக்கு விரோதமான காரியத்தைச் செய்யக் கூடாது. அவர் மனம் கோணுமல் நடந்துகொள்ளல் வேண்டும்; ஏனெனில், குருநாதன் கோபித்தால் ரக்ஷிப்பவர் ஒருவரும் இல்லை. சிவன் கோபித்தால் குருநாதன் காப்பாற்றுவார். குருகீதையில்:

"சிவேருஷ்டே குருஸ்த்ராதா குரௌருஷ்டே நகஸ்சந
லப்த்வாகுல குரும்ஸம்யக் குருமேவமாஸ்ரயேத்:

என்றும்;

ஆத்ம புராணத்தில்:

தெருளுறு சிவன் சினந்திடிற்தேசிகன் காத்தும்
அருளுநக்குரு முனிந்திடிலானருளாறல்
இருளறப்புரி யிந்துசேகரன்றன் பூசையினும்
அருளிறைக்குரும் பூசையை யதிகமாற்றுகவே.

பொருளாசையினலாவது கர்வத்தினலாவது குருநாதனுடன் விவாதஞ்செய்யப்படாது; இரண்டாயிர வருடங்களுக்குமுன் பட்ட பாதர் என்ற பெரியார் பௌத்தமதத்தைக் கண்டிப்பதற்காக பொய் யாக ஒரு பௌத்தரைப்போல் வேடம்பூண்டு அவர் சாஸ்திரத்தை கற்றுக்கொண்டு அவர்களிடமே வாதம்செய்து மீமாம்சகமதத்தை பிரசாரஞ்செய்தபிறகு, கொஞ்சங் கொஞ்சமாக சரீரத்தை வேகச் செய்யும் உமிக்காந்தல் அக்கினியில் இறங்கிவிட்டார். அப்பொழுது சங்கராச்சாரியார் திக்விஜயஞ் செய்துக்கொண்டு அவ்விடத்துக்கு வந்தார். அச்சமயத்தில் பட்டபாதர் துஷாக்கினி பிரவேசம்செய்து விட்டாரென்று கேட்டவுடன் விரைந்துசென்று பட்டபாதரே எதற் காக உமிக்காந்தல் அக்கினியில் இறங்கினீரென்ருர். அப்பொழுது பட்டபாதர் நான் பௌத்த குருவிடம் பொய்சொல்லி அவர்கள் மத விஷயத்தை தெரிந்துக்கொண்டு அவர்களிடமே வாதம்பண்ணி

னேன் ; ஆதலால் நான் குருத்துரோகியாகிவிட்டேன் ; இதற்கு என்ன ப்ராயச்சித்தமென்று தர்மசாஸ்திரங்களைப் பார்த்தேன் ; குருத் துரோகிகள் மிகவும் கஷ்டமான மரணத்தை ஏற்றுக்கொள்ளவேண்டு மென இருந்தது ; அதற்காக நான் இப்படிச் செய்துகொண்டே னென்று கூறினர். ஆதலால் எப்பொழுதும் குருநாதனுடன் வாதம் செய்யப்படாதென்று இதனல் நன்கு விளங்குகின்றது. குருநாத னுக்குப் பணிவிடை செய்வதில் சோம்பலில்லாமல் குற்றம் குறைவரா மல் செய்யவேண்டும். பாதஞ்ஜலயோக சூத்திரத்தில் (ஈசுரப்ராணிதா ஞாத்வா) என்கிற சூத்திரத்தில் (போஜராஜரும்) ப்ராணிதானமாவது பயனைக் கருதாமல் பரமகுருவினிடத்தில் பணிவிடைசெய்யுந் தன்மை என்று எழுதினர். குருநாதன் எந்தவேலையைக் கட்டளையிடுகிருரோ அது தர்மமாக இருந்தாலும் அல்லது தர்மத்துக்கு விரோதமாக இருந்தாலும் அதை சிரமேற்கொண்டு செய்யவேண்டும்.

இவ்வாறு குருமூர்த்திக்குத் தொண்டு செய்வதில் சிரமத்தை நோக்காமல் அடிமைபோல் செய்யவேண்டும். அவரிடத்திலிருக் கும்போது அங்குமிங்கும் பாராமல் அவர் திருமுகத்தையே தரிசிக்க வேண்டும் ; அவரது திருநாமத்தையே ஜெபிக்கவேண்டும் ; அவரது அரும்பெரும் வாக்கியங்களையே கேழ்க்கவேண்டும் ; அவரது திரு மேனியையே திருவுள்ளத்தில் சதாகாலமும் சிந்திக்கவேண்டும்.

தெளிவு குருவின் றிருமேனியைக் காண்ட
தெளிவு குருவின் றிருநாமஞ் செப்ப
தெளிவு குருவின் றிருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே —(திருமந்திரம்).

குருநாதனுடைய பாதாரவிந்தங்களில் அன்பில்லாமல் கடவுளி டத்தில் அன்பிருந்தாலும் அது கடவுளுக்கு பிரியப்படாது. அவர் களுக்கு பாகதிவாழ்வும் கிடைக்காதென்று உபதேசரத்தினமாலையில் கூறுமாறு காண்க.

தன் குருவின் றளிணைகள் நன்னிலன்போன்றில்லாதார்
அன்பு தன்பால் செய்தாலு மம்புயைகோன்- இன்பமிகு
விண்ணாடு தானளிக்க வேண்டியிரானதலால்
நண்ணாரவர்கள் திரு நாடு மேலும்:

சக்ஷுர்கம்யம் குரும் த்யக்த்வாஸாஸ்த்ர கம்யம்து யஸ்மரேத் காஸ்த
மூதகம் த்யக்த்வாக நஸ்த பிவாஞ்சதி ஸுலபம்து குரும் -
த்யக்த்வா - துர்லபம்ய உபஸதே பத்தம் த்யக்த்வாதநம்
மூடோ குப்த மந்வேஷ தே க்ஷிதௌ

என்கிறபடி மனிதனுக்குக் கண்கண்டதெய்வமாக விளங்கும் குருவை வழிபடாமல் சாஸ்திரங்களினால் அறியத்தகுந்தவனும் எளிதிற் காணக்கிடைக்காதவனுமாகிய கடவுளைத்தேடுகிறவன், காத்திலிருக்கும் கங்கையைக் கொட்டிவிட்டு மேகத்திலிருக்கிற ஜலத்தை எதிர்பார்க்கிறவனைப்போலவும், தன்னிடமிருந்த பொன் காசுகளை இழந்துவிட்டு மண்ணில் மறைந்துகிடக்கிற புதயலைத் தேடுகிறவனைப் போலவும் பயனற்றவனாகிறான்.

ஆகவே குருவுக்குச் சமானமானவர்கள் ஒருவருமில்லை; தாய் தந்தைகளைவிட குரு மேலானவர்; ஏனெனில் தாய்தந்தைகள் காமத்தினால் புணர்ந்து எந்த ஜன்மத்தை உண்டுபண்ணுகிறார்களோ அந்தப் பிறப்பானது மிருகஜாதியைப்போல் அவையவங்களைமாத்திரம் கொடுக்கவல்லமையுள்ளது; இரண்டாவது பிரம்ம உபதேசத்தினால் குருவானவர் உண்டுபண்ணுகிறார்; அந்தப்பிறப்பானது அழிவற்றதாயும் மூப்பற்றதாயும் புண்ணியலோகங்களைக் கொடுக்கிறது; குருநாதனைப்பூஜிப்பதால் பிதிர்களும், தேவர்களும் பிரீதி அடைகிறார்கள். ஆகையால் குருநாதரானவர் தாய்தந்தையர்களைவிட மேலாகப்பூசிக்கத்தக்கவர். இதனை மனு, ஆபஸ்தம்போர் முதலியோர்கள்.

> உத்பாதக ப்ரஹ்ம தாத்ரோர் கரீயாந் ப்ரஹ்மத : பிதா -
> ப்ரஹ்ம ஜந்மஹி விப்ரத்ய ரேஹசசாஸ்வதம்
> ஸஹி வித்யாதஸ்தம் ஜநயதிதச்ச்ரேஷ்டம்
> ஜன்மசரீரமேவ - மாதாபிதாரௌ ஜனயதௌதி

என்று கூறியிருக்கிறார்கள்.

குருநாதன் எவ்விதமோ அவ்விதம் மாதாபிதாவும் இல்லை என்பதில்லை. அம்மூவரையும் அவமதிக்கக்கூடாது. அவர்களே தெய்வமாகக் கொள்ளவேண்டுமென்பது.

> மாத்ருந தேவோபவ பித்ருநதேவோபவ
> ஆசார்ய தேவோபவ

ஆசார்யன் பத்து உபாத்தியாயனுக்குச் சமானமானவர்; பிதாவானவர் நூறு ஆசார்யனுக்குச் சமானமானவர்; மாதாவானவள் பிதாவைவிட நூறுமடங்கு கௌரவமுள்ளவள்; இவர்களெல்லாரினும் குருவானவர் மிக்க மேலானவர். அவரைவிட மேலானவஸ்து ஒன்றும் உண்டானதுமில்லை, உண்டாகப்போகிறதுமில்லை என்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. ஆதலின் அவரைவிடப் பூஜிக்கத்தக்கவர் ஒருவருமில்லை. (தொடரும்).

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றுள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 2 Vol. 2 | ஈஸ்வர வருஷ கார்த்திகைமீ 1வ
நவம்பர்—1937 | இதழ் 8 No. 8

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

கோடியனைய இடைதுவள அங்கமும் பொங்கஅங்
குமுதஅமு திதழ்பருகி யின்புறுஞ் சங்கையன்
குலவியணை முகிலளக முஞ்சரிந் தன்பினின்
பண்புலாவக்

கோடியவிரல் நகநுதியில் புண்படுஞ் சஞ்சலன்
குனகியவ ருடனினிது சம்ப்ரமங் கொண்டுளங்
குரலழிய அவசமுறு குங்குணன் கொங்கவிழ்ந்
தோன்று பாய்மேல்

விடமனைய விழிமகளிர் கொங்கையின் பன்புறும்
வினையனியல் பரவுமுயிர் வெந்தழிந் தங்கமும்
மிதமொழிய அறிவில்நெறி பண்பிலண் டுஞ்சகன்
செஞ்சேரீடும்

வெகுகனக வொளிகுலவும் அந்தமன் செந்திலென்
றவிழவுள முருகிவரு மன்பிலன் தந்திலன்
விரவுமிரு சிறுகமல பங்கயந் தந்துகந்
தன்புறுதோ

படமிலகு மரவினுட லங்கமும் பங்கிடந்
துதறுமொரு கலபிமிசை வந்தெழுந் தண்டர்தம்
பகையசுர ரனைவருடல் சந்துசந் துங்கதம்
சிந்தும் வேலா
படியவரு மிமையவரும் நின்றிறைஞ் செண்குணன்
பழையவிறை யுருவமிலி யன்பர்பங் கன்பெரும்
பருவரல்செய் புரமெரிய விண்டிடுஞ் செங்கணன்
கங்கைமான்வாழ்
சடிலமிசை யழகுபுனை கொன்றையும் பண்புறுந்
தருணமதி யினகுறைசெய் துண்டமுஞ் செங்கையோண்
சகலபுவ னமுமொழிக தங்குறங் சங்கியும்
பொங்கிநீடும்
சடமருவு விடையரவர் துங்கஅம் பங்கினின்
றுலகுதரு கவுரியுமை கொங்கைதந் தன்புறுந்
தமிழ்விரக வுயர்பரம சங்கரன் கும்பிடுந்
தம்பிரானே.

பதவுரை.

படம் இலகும் அரவின் உடல் அங்கம் - படம் விளங்கப்பெற்ற பாம்பினது உடலின் அவயவங்கள், *பங்கு இடந்து* - கூறுபடுமாறு பிளந்து, *உதறும்* - காலாலும் மூக்காலும் எடுத்து உதறுகின்ற, *ஒரு கலபி மிசை வந்து எழுந்து* - ஒப்பற்ற மயிலின்மீது எழுந்தருளி வந்து, *அண்டர்தம் பகை* - தேவர்களது பகைவர்களாகிய, *அசுரர் அனைவர் உடல்* - இராக்கதர்கள் எல்லோருடைய உடல்களும், *சந்து சந்தும் கதம்* - கை கால் இடை முதலிய ஒவ்வொரு சந்துகளும் வேறுபட்டழிய, *சிந்தும் வேலா* - சிதறச்செய்த வேற்படையை யுடையவரே!, *படியவரும்* - மண்ணுலகத்தார்களும், *இமையவரும்* - தேவர்களும், *நின்று இறைஞ்சும்* - தமது சந்நிதியில் பக்தியுடன் நின்று வணங்குகின்ற, *எண் குணன்* - எட்டு அருட் குணங்களையுடையவரும், *பழைய இறை* - முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளாக விளங்குந் தனிப்பெருந்தலைவரும், *உருவம் இலி* - தனக்கென ஓர் உருவமும் இல்லாதவரும், *அன்பர் பங்கன்* - தம்முடைய மெய்யன்பர்களுக்கு அருந்துணையாயிருப்பவரும், *பெரும் பருவரல்*

செய் - உலகங்களுக்கு மிகவுந் துன்பத்தைச் செய்த, புரம் எரிய - முப்புரங்களும் வெந்து நீறுகுமாறு, விண்டிடுஞ் செம் கனன் - அக்கினியை வெளியாக்கிய சிவந்த அக்கினி நேத்திரத்தையுடையவரும், கங்கை மான்வாழ் - மானுக்கு நிகரான கங்காதேவி வாழுகின்ற, சடிலமிசை - சடைமுடியின்மீது, அழகு புனை கொன்றையும் - அழகு பொருந்திய கொன்றைமலரும், பண்பு உறும் - சிறப்பு பொருந்திய, தருண மதியின குறைசெய்துண்டமும் - இளஞ் சந்திரனது குறைவு பெற்ற துண்டமாகிய பிறையும், ஒண் செங்கை - ஒளிபெற்ற சிவந்த கரத்தில், சகல புவனமும் ஒழிகத - எல்லா உலகங்களையும் நீறுக்கும் வலியுடன், அங்கு உறங்கு அங்கியும் - அக் கரமலரில் தனது வலி யடங்கியிருக்கும் அக்கினியும், பொங்கி நீடும் - பொலிவுபெற நிலைத் துள்ள, சடம் மருவு விடையர் அவர் - திருமேனியையுடைய இடப வாகனத்தையும் உடையவருமாகிய சிவபெருமானது, துங்க அம் பங்கில் நின்று - தூய்மை பொருந்திய அழகிய இடதுபாகத்தில் நிலை பெற்று இருந்து, உலகு தரு - உலகங்களையெல்லாம் ஈன்றருளியவரும், கவுரி - கவுர நிறத்தையுடையவரும், உமை - உமாதேவியுமாகிய மலைமங்கை, கொங்கை தந்து அன்பு உறும் - திருமுலைப்பால் தந்து அன்பு கொள்ளும், தமிழ் விரக - செந்தமிழிற் சமர்த்தரே !, உயர் பரம - உயர்ந்த பெரிய பொருளே !, சங்கரன் கும்பிடும் - சிவபெருமான் (பிரணவோபதேசம் பெறும்பொருட்டு) வணங்குகின்ற, தம்பிரானே - எப்பொருட்கு மிறைவரே !, கொடி அனைய இடை துவள - கொடியைப்போல் மெலிந்துள்ள இடையானது அசைந்து வாடவும், அங்கமும் பொங்க - உயிரின்புறுவதுடன் சரீரமும் புளகமடையவும், அம் குமுத இதழ் அமுதுபருகி - அழகிய குமுத மலரையொத்த இதழிற் பெருகும் அமிர்தத்தைப் பருகி, இன்பு உறும் சங்கையன் - இன்பமடையும் வழக்கமுடையவன், முகில் அளகமுஞ் சரிந்து - மேகத்தையொத்த கருங்கூந்தலும் (துகிலும்) சரிந்து, குலவி அணை - கொண்டாடி மருவுதலால் உண்டாகின்ற, அன்பினின் பண்புஉலாவ - அன்பின் குணம் மிகுதியாக, கொடிய விரல் நகநுதியில் - கொடுந் தொழிலையுடைய விலைமகளிரது நகநுனியினால், புண்படுஞ் சஞ்சலன் - புண்படுகின்ற துன்பத்தையுடையவன், குனகி அவருடன் - சிணுங்கிப் பேசும் அம்மாதருடன், இனிது சம்ப்ரமங்கொண்டு - இனிமையாகச் சந்தோஷத்தையடைந்து, உளங் குரல் அழிய - உள்ளம் மயக்கத் தையும் குரல் தழுதழுத்தலையும் அடைந்து அழிய, அவசம் உறு-

மயக்கத்தையடையும், குங்குணன் - குறுகிய குணத்தையுடையவன், கொங்கு அவிழ்ந்து ஒன்று பாய்மேல் - மலர்களின் மகரந்தப் பொடி சிந்திப் பொருந்தியுள்ள பாய்மீது, விடம் அனைய - கொடிய ஆலகால விடத்திற்கு நிகரான, விழிமகளிர் - கண்களையுடைய பொதுமகளிரது, கொங்கை இன்பு அன்பு உறும் - தனங்களின் இன்பத்தையடைய அன்புகொள்ளும், வினையன் - தீவினையையுடையவன், இயல் பாவும் உயிர் அங்கமும் வெந்து அழிந்து - நற்குணம் மிகுதற்குத் தகுதியுடைய உயிரும் உடலும் காமாக்கினியால் வெந்து தன்னிலையினின்றும் அழிந்து, மிதம் ஒழிய - அளவு கெட, அறிவு இல் நெறி பண்பில் - அறிவு இல்லாத தீயவழியின் விதத்தில், அண்டும் சகன் - பொருந்தியுள்ள உலக மாயையுடையவன், செம் செய்நீடும் - செம்மையான வயல்கள் நிலைத்துள்ளதும், வெகு கனக ஒளிகுலவும் அந்தமன் - மிகுந்த பொற்பிரகாசம் வீசும் அழகு நிலைபெற்றதுமான, செந்தில் என்று - திருச்செந்தில் என்று கூறி, அவிழ உளம் உருகிவரும் அன்பு இலன் - கல்போன்ற தன்மை நீங்கி நெகிழ்ந்து உள்ளம் உருகி அச்செந்திமா நகரத்தைத் தெரிசிக்க வருகின்ற அன்பில்லாதவன், தந்து இலன் - பிறருக்குக் கொடுக்கும் இயல்பில்லாதவன், (இத்தகைய அடியேனுக்கு), விரவும் இரு சிறுகமல பங்கயம் - சிவஞானங் கலந்துள்ள தாமரையனைய இரண்டு சிறிய திருவடிகளையும், உகந்து தந்து அன்பு உருதோ - அடியேனை விரும்பிக்கொடுத்து தேவரீரது திருவுள்ளம் அன்பு செய்யாதோ?

பொழிப்புரை.

பணமகுடத்துடன் விளங்கும் பாம்பினது உடலின் அங்கங்கள் கூறுபட்டுப் பிளக்குமாறு (பாதத்தாலும் மூக்காலும் எடுத்து) உதறுகின்ற ஒப்பற்ற மயிலின்மிசை எழுந்தருளிவந்து, தேவர்களது பகைவர்களாகிய அசுரர்கள் அனைவருடைய உடல்களும் கை கால் கழுத்து இடைமுதலிய சந்துகளும் பூட்டுவிட்டுச் சிந்தும்படிச் சிதறச்செய்த வேற்படையை யுடையவரே! மண்ணுலகத்தவர்களும் விண்ணுலகத்தவர்களும் சந்நிதியில் நின்று வணங்கும் எட்டு அருட்குணங்களையுடையவரும், அநாதி பரம்பொருளும், எப்பொருட்கு மிறைவரும், தனக்கென ஓர் உருவமுமில்லாதவரும், அன்பர்களிடம் துணையாகப் பொருந்தியுள்ளவரும், உலகிற்குப் பெருந்துன்பத்தைச்செய்த முப்புரங்களும் எரியுமாறு தீப்பொறியைச் சிந்திய சிவந்த அக்கினி நேத்

திரத்தையுடையவரும், மான்போன்ற பார்வையுடைய கங்காதேவி வாழுகின்ற சடாமுடியின்மீது அழகுபொருந்திய கொன்றையலரும்: குணத்தாலுயர்ந்த இளம்பிறைச்சந்திரனும், ஒளிபெற்ற சிவந்த கரத்திலே சகல லோகங்களையும் நீறுக்கும் வலியுடன் அமைதியோடிருக்கின்ற அக்கினியும், பொலிவுடன் நிலைபெற்றுள்ள மேனியையுடைய இடபதேவரும் உடைய சிவபெருமானது பரிசுத்தம்பொருந்திய அழகிய வாமபாகத்தில் இருந்துகொண்டு எல்லா வுலகங்களையும் ஈன்றருளியவரும், பொன்னிறத்தை யுடையவருமாகிய உமாதேவியார் திருமுலைப்பால் தந்து அன்புகொள்ளும் தமிழறிவுடையவரே! உயர்ந்த பரம்பொருளே! பிரணவோபதேசம் பெறும்பொருட்டு சிவபெருமான் வணங்குகின்ற தனிப்பெருந் தலைவரே! கொடியையொத்த இடை யசைந்துவாடவும், உடல் புளகிக்கவும், அழகிய குமுதமலரையொத்த இதழிற் பெருகும் அமிர்தத்தைப்பருகி இன்பத்தையடையும் வழக்கத்தையுடையவனும், மேகத்தையொத்த கூந்தலும் துகிலும் சரியக் குலாவியணைகின்றகால் அன்பின் குணம் மிகுதியாக விலைமகளிரது கொடிய விரல் நகநுனியில் புண்படுகின்ற துன்பத்தை யுடையவனும், சிணுங்கிப் பேசுகின்ற அம்மகளிருடன் இனிமையாக மகிழ்ந்துகொண்டு உள்ளமும் குரலும் மாறுபட்டழிய மயக்கத்தை யடையும் குறுகிய குணத்தையுடையவனும், மலர்களின் மகரந்தப் பொடி சிந்திப் பொருந்தியுள்ள பாயலின்மிசை கொடிய விடத்திற்கு நிகரான விழிகளையுடைய மாதர்களின் தனபாரங்களின் இன்பத்தில் அன்புறும் தீவினையை யுடையவனும், நற்குணமடைதற்கு யோக்கியமான உயிரும் உடலும் வெந்தழிந்து தத்தம் நிலைகெட, அறிவற்ற வழியிற் சேர்ந்துள்ள உலக மாயையுடையவனும், செம்மையான வயல்கள் நிலைத்துள்ளதும் மிகுந்த பொன்னொளியை வீசுவதும் அழகு நிலைபெற்றதுமாகிய திருச்செந்தூர் என்று கூறி நெஞ்சம் நெகிழ்ந்து உருகி அத்திருத்தலத்தைத் தெரிசிக்கவரும் அன்பில்லாதவனும், தருமஞ்செய்யாதவனுமாகிய அடியேனுக்கு, சிவஞானமயமாகிய தேவரீரது இளமையாகிய பாததாமரைகள் இரண்டையும் அடியேனை விரும்பிக்கொடுத்து தேவரீரது திருவுளம் அன்பு செய்யாதோ?

விரிவுரை.

"கோடியனைய . . . . பண்பிலண்டுஞ்சகன்."

இம்மூன்றடிகளும் மதனநூலின் செயல்களை யுரைக்கின்றன. செஞ்செய் என்பது கடைகுறைந்து செஞ்செயென்றாயிற்று.

"செந்திலென் றவிழவுள முருகிவரு மன்பிலன்"—

ஆறுமுகப்பெருமான் அடியார்பொருட்டு திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய திருத்தலங்களுள் திருச்செந்தூர் தலையாக விளங்குவது. கடற்கரையில் காட்சிக்கினியதாய்க் காண்பார் கண்களையுங் கருத்தையும் ஒருங்கே கவருங் கவினுடையது. குமாரக் கடவுள் சூராதியவுணரைக் கொன்றருளுவான் இலக்கத்தொன்பான் வீரர்களுடன் வந்து தங்கி, வீரவாகுதேவரைத் தூதுஅனுப்பி, தேவர் குழாம் சூழ வீற்றிருந்தருளிய மேன்மையுடையது. பாண்டியன் மகளாகிய அங்கசுந்தரிக்குக் குதிரைமுகத்தை மாற்றி மனித முகத்தை நல்கிய மகிமையுடையது. குமரகுருபரருடைய ஊமைத் தன்மையைத் தவிர்த்து தெய்வவாக்கை வழங்கி அவரால் கந்தர் கலி வெண்பாவாற் துதிக்கப்பெற்றது. இத்தகைய பற்பல அற்புதங் களையுடைய இத்திருத்தலத்தின் திருநாமத்தைக் கூறியவுடனே அத் தலத்தின் பெருமைகளும், அத்தலத்தில் எழுந்தருளிய ஆண்டவனது அருட்குணங்களும் நினைவுக்கு வர, அதனால் மனங்குழைந்து உருக வேண்டும். நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்துருகி வழிபடுவார்க்கே பிறவிநோய் நீங்கி என்று மழியா இன்பம் எளிதிற்கிடைக்கும்.

"உருகுமடியவர் இருவினை யிருள்போரும்
உதய தினகர இமகரன் வலம்வரும்
உலக முழுதொரு நொடியினில் வலம்வரு
பெருமாளே"

"பஞ்சாயுதக்கடவுள் மருகன்மறவாதவர்நி னைப்பவைமுடிக குமவன்
உருகுமடியா ரிருவினைத்தொகை யறுக்குமவன்"

—வகுப்பு.

தந்திலன்:—

சாத்திர ஆராய்ச்சியில்லாதவன் என்று பொருள் கூறுவாரு முளர். தந்திலன்:— தந்து = நூல். அறிவை விசாலப்படுத்தி அஞ் ஞானத்தை நீக்குவது அறிவுநூல்களேயாம். அவ்வறிவுநூல்களா

வன : சிவஞானபோதம், சிவஞான சித்தியார்முதலிய பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும், தேவார திருவாச திருப்புகழாதி பனிரெண்டு திருமுறைகளேயாம். மனிதனாகத் தோன்றிய ஒவ்வொருவரும் இவற்றை வாங்கி பூசைப்பேடகத்தில் வைத்து மலரிட்டுப்பூசித்து அன்புடன் ஓதுதல்வேண்டும்.

"அறிவுநூல் கல்லாமூடர்"

—அருணகிரியார்,

"சாத்திரங்களாயார்"

—திருவெண்காடர்,

"படமிலகு மரவினுடல் . . . . . உதறுமோரு கலபிமிசை": —

மயில் பாம்பையெடுத்து இரண்டாகக் கிழித்து உதறுகிறது என்பதன் தத்துவம்; பாம்பு என்பது வினை; மயில் என்பது விந்து; பாம்பு எவ்வாறு ஒருவனை ஓடிவந்து தீண்டுமோ அவ்வாறு வினை அதனைச் செய்தானை எத்தேயத்தும் எக்காலத்தும் எங்கிலையிலும் தொடர்ந்து வந்து தீண்டும். ஆயிரம் பசுக்களின் நடுவில் ஓர் இளங் கன்றை விட்டுவிட்டால் தாய்ப்பசுவை அக்கன்று எவ்வாறு தேடியடையுமோ? அவ்வாறே தொல்லைப் பழவினையும் தன்னைச்செய்த ஒருவனை யடையும். இதனை நாலடியார் கூறுமாறுகாண்க.

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கோளற்கு.

மற்றொன்று சூழினும் தான் முந்துறும் பெருவலியுடையது ஊழ்வினை; அது இருகூறுயுளது: நல்வினை தீவினை என. அதனை யடக்கியாளும் பெருவலியுடையது விந்து தத்துவம்.

வாளெயிற துற்றபகு வாய்தோறு நெருப்புமிழும்
வாசுகி எடுத்துதறும் வாசிக்காரனும்

—வகுப்பு.

"பகையசுரர் . . . . சிந்தும்வேலா"

வேல் என்பது சிவஞானம்; அசுரர் என்பதில், சூரன்—ஆணவம், சிங்கமுகன் - மாயை, தாரகன் - கன்மம், என்ற மூவசுரர்களே மும்மலங்கள்; ஏனைய அசுரர்கள் காமம் குரோதம் முதலியவைகளாம். இவைகளையழிக்கவல்லது சிவஞானம் ஒன்றேயாம். அச்சிவஞான

மாகிய வேற்படையை யுடையவர் முருகக்கடவுள் ஒருவரேயாம். அதனாலன்றே அப்பெருமானை "ஞானபண்டித ஸ்வாமீ நமோ நம" என்றார் நம் பரமாசிரியர்.

"இச்சா ஞானக்ரியாசக்தி ரூபசக்தி தரம்பஜே"
—குமாரதந்திரம்.

என்குணன் :—

சிவபெருமானுக்கு எட்டு அருட்குணங்களுள. அவையாவன: தன்வயத்தவனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை.

"தன்வயத்தவன் தூயவுடம்பினன்
தானியற்கை யுணர்வின னாகுதல்
பன்னுமுற்ற வுணர்த லியல்பினன்
பாசநீங்குதல் பேரருளாகுதல்
மன்னுமீறில வாற்றலுடைமையும்
வரம்பி லின்பமுமாகிய வெண்குணம்"

இவற்றை வடநூலார்.

"ஸர்வஜ்ஞதாத்ருப்தி ரநாதிபோத: ஸ்வதந்த்ரதா நித்யமலுப்த சக்தி:| அநந்த சக்திஸ் சநிராமயாத்மா விசுத்ததேஹஸ்சசிவத்வ [மேதி"

என்பர்.

பழைய இறை :—

சிவபெருமான் ஆதியில்லாத அநாதி பரம்பொருள்; "ஆதிமந்த்யாந்த விஹீநமேகம் விபும்" எனத் தெரிவிக்கிறது பஞ்சருத்ரோபநிஷதங்களில் ஒன்றாய யஜுர்வேத கைவல்யம். இதனைத் தமிழ் வேதம் "ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி" என விளக்குகிறது. "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருள்" என்றதையும் "அநாதியா யைந்தொழிற்கும் அப்புறமா யன்றே
மநாதிகட் கெட்டா வடிவாய்"
என்றதையும் உய்த்துணர்க.

உருவமிலி :—

தனக்கென ஓர் உருவமுமில்லாதவர்; ஆன்மாக்களுக்காக உருவத்தையடைகின்றனர்.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாற் காயிரமாந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ"

—மணிவாசகனுர்.

உருவமில்லாத முழுமுதற்கடவுள் ஆன்மகோடிகளை யுய்விக்கும் பேரருட் பெருக்கால் ஆன்மாக்கள் எந்த எந்தவகையாகச் சிந்திக்கிறார்களோ அந்த அந்த உருவத்தை யடைகின்றனர். "சிந்தாமணிக்கு ஒரு நிறமுமில்லை; அதனருகில் எந்த எந்த நிறப்பொருளுளவோ அந்த அந்த நிறத்தையடைகிறது. அதுபோல் எந்த எந்த ரூபமாகச் சாதகன் நினைக்கின்றானோ அந்த சமயம் அவனுக்கு அந்த அந்த ரூபத்தைச் சிந்தாமணியைப்போல் சிவபெருமான் அடைகிறார்" என்னும் பொருள்தரும் பிரபல பிரமாணத்தைக் காண்க.

யேந யேந ஹி ரூபேண ஸாதகஸ்ஸம் ஸ்மரேத்ததா
தஸ்ய தநமயதாம்யாதி சிந்தாமணி ரிவேஸ்வர:

—சர்வசுரோத சாரசங்கிரகம்.

"ஆரொருவருள்குவா ருள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்"

—அப்பர் தமிழ்வேதம்.

இக்கருத்தை நம் காரைக்காலம்மையார் விளக்குமாறு மோர்க.

நூலறிவுபேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்று னீர்மையே—மேலுலகத்
தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம்.

அன்பர்பங்கன் :—

சிவமூர்த்தி, தமது திருவடியை வழிபடும் அன்பர்க்கு துணையாக இருந்து அருள்புரிகின்றார் என்பதனை

"பாண்டியன்முன் சொல்லிவந்த பாணன் பொருட்டடிமை
வேண்டி விறகெடுத்து விற்றனையே—ஆண்டொருநாள்
வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித்
தூய்முடிமேல் மண்ணுஞ் சுமந்தனையே—ஆய்துயா
மாவகஞ்சேர் மாணிக்க வாசகருக்காய் குதிரைச்
சேவகன்போல் வீதிதனிற் சென்றனையே—மாவிசையன்
வில்லடிக்கு நெஞ்சம் விரும்பியதல் லாலொருவன்

கல்லடிக்கு முள்ளங் களித்தனையே—மல்லலுறும்
வில்வக்கிளை யுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே—சொல்லகலின்
நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனா யாக்கினையே—கோளகல
வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னையுயர்
கோச்செங்கட் சோழனெனக் கொண்டனையே-எச்சறுநல்
ஆறடுத்த வாகீசர்க் காம்பசியைக் கண்டுகேட்டுச்
சோறெடுத்துப் பின்னே தொடர்ந்தனையே—கூறுகின்ற
தொன்மைபெறுஞ் சுந்தரர்க்குத் தோழனென்று பெண்பரவை
நன்மனைக்குத் தூது நடந்தனையே"

—திருவருட்பிரகாசவள்ளல்,

மதியினகுறைசெய் துண்டமும் —

சந்திரனைத் தரித்த வரலாற்றை திருப்புகழமிர்தம், 1-வது மலர் 9-வது பக்கத்திற் காண்க

தமிழ்விரக :—

முருகப்பெருமான் ஏனைய மொழிகளுக்குப் பொதுக்கடவுளாகவும், தமிழ்மொழிக்குச் சிறப்புக் கடவுளாகவும் விளங்குகின்றனர். மதுரையில் நாற்பத்தொன்பது புலவர்களுடன் தாமுமொருவரா யிருந்து தமிழாராய்ந்ததும், அகத்தியருக்குத் தமிழைப்போதித்ததும், நக்கீரருக்கும் அருணகிரிநாதருக்கும் தமிழால் அடியெடுத்துக் கொடுத்ததும், இதனை விளக்கும். "செந்தில்வாழ் செந்தமிழ்ப்பெருமாளே" என்ற திருப்புகழாலுந் தெளிக. திருப்புகழ் தமிழ் வேதத்தை முருகப்பெருமான் மனமகிழ்ந்து தரித்துக்கொள்ளுகின்றார்.

"விரித்தருண கிரிநாத னுரைத்ததமி ழெனுமாலை
மிகுத்தபல முடனோதை மகிழ்வோனே"

தெய்வயானையம்மையாரது இனிய கலவியின்பத்தினும் நக்கீரர் தேவர் பாடிய திருமுருகாற்றுப்படையென்னும் செந்தமிழ்ப்பிரபந்தத்தில் மிகவும் பிரியமுடையவராயிருக்கின்றனரென அருணகிரியார் கந்தரந்தாதியில் உரைக்குமாறு காண்க.

"கைமா மயில் சேவ்வி நற்கீரர் சொற்றித்தித்ததே"

முருகவேள் செந்தமிழ்ப்பிரியர் என்பதனை "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என்ற கந்தாலங்காரத் திருவிருத்தம் உணர்த்துவதையுங்காண்க.

" தண்டாள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
தண்டமிழின் மிகுநேய முருகேசா "

—(அண்டர்பதி) திருப்புகழ்.

கருத்துரை.

மயிலின்மிசை எழுந்தருளிவந்து அசுரரை சம்மரித்த வேலாயுதரே! சிவபெருமானது இடப்புறத்துவீற்றிருக்கும் உமாதேவியார் திருமுலைப்பால் தந்து அன்புகொள்ளும் தமிழ்விரக! பெரிய பொருளே! சங்கரன் கும்பிடுந் தம்பிரானே! பொதுமகளிரது மாயா வலையிற்சிக்கி, அவரது இன்பத்தையே பரமசுகமெனக்கருதி அறிவில் நெறியில் சென்று திருச்செந்தூர் என்று உருகாத அடியேனுக்கு தேவரீரது சீறடிக்கமலத்தைத் தந்தருளத் தமது திருவுளம் சிந்தியாதோ?

உண்மையின் உயர்வு.

உண்மையுரைப்பவன் இம்மையிற் பொருளையும் புகழையும், மறுமையில் புண்ணியலோகத்தையும் அடைவான். கடவுள் சத்தியவடிவாக இருக்கிறார். சத்தியத்தின் மேலான தருமமும், அசத்தியத்தின் மேலான பாவமுமில்லை, பொய்கூறியவன் எழுபிறப்பிலீட்டிய எல்லா புண்ணியத்தையுங் கெடுத்தவனாவான். பிரமவதையும், சிசுவதையும், தந்தைவதையும் செய்தவனாவான். ரௌரவ முதலிய கொடிய நரகங்களையடைவான். பின்னும் ஊர்ப்பன்றி, கழுதை, நாய், நீர்க்காக்கை, புழு என்னும் இப்பிறப்பிற் பிறந்து, பின்பு மானுடப்பிறவியிலே, பிறவிக்குருடன், செவிடன், ஊமை, குட்டநோயினன், இவர்களாகியும், மிக்க பசிதாகமுடையவனாகித் தனது பகைவன் வீட்டில் தன்மனையாளோடும் பிச்சை யிரப்பவனாகியும் பிறப்பான். உண்மையுரைத்தவன் எக்காலத்தும் பொன்றாத இன்பத்தையடைவான். உண்மையே மனத்திற்குச் சாந்தியைத் தரும். உண்மையே மனிதனை உயர்த்தும்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(205-ம் பக்கத் தொடர்ச்சி.)

कृतान्तस्य दूतेषु चण्डेषु कोपा
द्दहच्छिन्धि भिन्धीति मां तर्जयत्सु ।
मयूरं समारुह्य मा भीरि तित्वं
पुरःशक्ति पाणि र्ममायाहि शीघ्रम् ॥

(21) க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபாத்
தஹச்சிந்தி பிந்தீதி மாம் தர்ஜயத்ஸு ।
மயூரம் ஸமாருஹ்ய மாபீ ரிதித்வம்
புர: சக்தி பாணிர் மமாயாஹி சீக்ரம் ॥

பதவுரை.

ஹே தயாளோ ! - ஓ தயாலுவே !
சண்டேஷு க்ருதாந்தஸ்யதூதேஷு - கொடியவர்களான யமனுடைய தூதர்கள்,
கோபாத் - கோபத்தினால்,
தஹ, சிந்தி, பிந்தி, இதிமாம்தர்ஜயத்ஸு - கொளுத்து, வெட்டு, குத்து என்று என்னை பயமுறுத்தும்போது,
த்வம் - தேவரீர்,
மயூரம் ஸமாருஹ்ய - மயிலின்மீதேறிக்கொண்டு,
சக்திபாணி - வேலாயுதத்தைத் தாங்கின திருக்கரத்தையுடையவராய்,
சீக்ரம் - விரைவில்,
மாபீ:இதி - பயப்படாதே என்று,
மமபுர:ஆயாஹி - எனது எதிரில் எழுந்தருளவேண்டும்.

பொழிப்புரை.

ஓ கருணாமூர்த்தியே! மரணகாலத்தில் கொடியவர்களான யம தூதர்கள் வெட்டு குத்து கொளுத்து என்றிவ்வாறு என்னை நோக்கிப் பயமுறுத்தும்போது தேவரீர் திருக்கரத்தில் வேலாயுதத்தைத் தாங்கிக்கொண்டு விரைவில் மயூராரூடராய் அடியேன்முன் எழுந்தருளி அபயந்தந்து ஆதரிக்கவேண்டும்.

प्रणम्यासकृत्पादयोस्ते पतित्वा
प्रसाद्य प्रभो प्रार्थयेऽनेक वारम् ।
नवक्तुं क्षमोऽहम् तदानीं कृपाब्धे
नकार्यान्त कालेमनागप्युपेक्षा ॥

(22) ப்ரணம் யாஸக்ருத் பாத³ யோஸ்த்தே பதித்வா
ப்ரஸாத்ய ப்ரபோ⁴ ப்ரார்த்²யேநேகவாரம்|
நவக்தும் க்ஷமோஹம் த³தானீம் க்ருபாப்³தே⁴
நகார்யாந்த காலே மனாக³ப்யுபேக்ஷா.

பதவுரை.

ஹேப்ரபோ! க்ருபாப்தே!- ஓ பிரபுவே! கருணைக்கடலே!

த்வாம்	- தேவரீர்
அஸக்ருத்	- பலதடவை,
ப்ரணம்ய	- நமஸ்கரித்து,
தேபாதயோ:	- தேவரீரது திருவடித்தாமரைகளில்,
பதித்வா ப்ரஸாத்ய	- வீழ்ந்து சந்தோஷப்படுத்தி,
அநேகவாரம்	- பலதரம்,
ப்ரார்த்தயே	- கேட்டுக்கொள்ளுகிறேன்,
ததானீம்	- அப்போது,
அஹம்	- நான்,
வக்தும்	- பேசுவதற்கு,
நக்ஷம:	- சக்தியற்றவனாயிருப்பேன்,
அத:	- ஆகையினால்,
அந்தகாலே	- எனது மரணத்தருவாயில்,
மனாக்அபி	- சிறிதுகூட,
உபேக்ஷா	- உபேக்ஷையானது,
நகார்யா	- செய்யலாகாது.

பொழிப்புரை.

கருணை நிறைந்த பிரபுவே! நான் மரணத்தருவாயில் தேவரீரைப் பிரார்த்திக்கச் சக்தியற்றிருப்பேனாகையால் அக்காலத்தில் என்னை விட்டுவிடலாகாதென்றும் இப்போதே தேவரீரைப் பலதரம் வணங்கி மகிழ்வித்து ப்ரார்த்தித்து கேட்டுக்கொள்கிறேன்.

20, 21, 22 இம்மூன்று ஸ்லோகங்களினால் ஒருதரமேனும் தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று முருகக்கடவுளிடம் பிரார்த்தித்த அன்பன் கடல்போல விசாலமான கருணையையுடைய அக்கடவுளால் எக்காலத்தும் காப்பாற்றப்படுவான் என்பது தெரிவிக்கப்பட்டது.

सहस्राण्डभोक्ता त्वया शूरनामा
हतस्तारकःसिंहवक्त्रश्चदैत्यः ।
ममान्तर्हृदिस्थं मनःक्लेशमेकं
नहंसिप्रभोकिं करोमिक्वयामि ॥

(23) ஸஹஸ்ராண்ட[3] போக்[4]தா த்வயா சூரநாமா
ஹ[4]தஸ்தாரக: ஸிம்ஹ வக்த்[3]ரஸ்ச தைத்ய: |
மமாந்தர்ஹ்ருதிஸ்[2]தம் மன: க்லேசமேகம்
நஹம்ஸிப்ரபோ! கிம்கரோமி க்வயாமி ||

பதவுரை.

ஹே ப்ரபோ! - ஓ பிரபுவே!
த்வயா - தேவரீரால்,
ஸஹஸ்ராண்ட போக்தா சூரநாமா தைத்ய: - ஆயிர அண்டங்களை அடக்கியாண்டுவந்த சூரபத்மா என்கிற அசுரனும்,
(ததா) தாரக: ஸிம்ஹ வக்த்ர: சஹத: - தாரகன் சிம்ஹ வக்தரன் என்னும் அசுரர்களும் கொல்லப்பட்டார்கள்,
(கிந்து) மமஅந்தர் ஹ்ருதிஸ்தம் ஏகம் மன: க்லேஸம் நஹம்ஸி -- ஆனால் எனது ஹ்ருதயத்திற்குள்ளிருக்கும் ஒரே ஒரு மனக்கிலேசத்தைமட்டும் கொல்லாமலிருக்கிறீர்,
அஹம் - நான்,
கிம்கரோமி க்வயாமி? - என்ன செய்வேன்? எங்கு செல்வேன்,

உ

ஸ்ரீவள்ளிநாயகன் துணை.

கந்தர் திருவிளையாடல்

(192-வது பக்கத் தொடர்ச்சி.)

உலகம் உய்யும்பொருட்டு அருளுருவங்கொண்டு சரவண தடாகத்தில் திருவவதாரஞ்செய்தருளிய முருகப்பெருமான் கைக்குழந்தைபோலச் செய்யுந் திருவிளையாடலைக்கண்டு, அரியயனாதி யமரர்கள் அனைவரும் கார்த்திகை மகளிர்களை நோக்கி, "சரவணப் பொய்கையில் சண்முகக்கடவுளாய் வீற்றிருந்தருளும் எம்பெருமான் ஒரு குழந்தைபோலத் தோன்றினார். நீங்கள் அவருக்கு நாள்தோறும் உங்கள் முலைப்பாலைக்கொடுத்து வளர்க்கக்கடவீர்கள்" என்றார்கள். கார்த்திகைப்பெண்கள் அதற்கிசைந்து, சரவணப்பொய்கையில் எழுந்தருளியிருக்கும் இளம்பூரணனையடைந்து போற்ற, அறுமுகக்கடவுள் தம்மை வேண்டுவோர் வேண்டிய பொருள்களை வெறுதுதவு பெருமாள் ஆதலால், அவ்வாறு மாதர்களும் அன்போடு பால்தரும் அன்பால் எடுக்க ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஆறு குழந்தையாகப் பிரிந்தருளினார்.

"உவகையொடு கீர்த்திகைய ரறுவருமெடுக்க அவர்
ஒருவ ரொருவர்க் கவனொ ரோர்புத்ர னானவனும்"

—வகுப்பு:

பொழிப்புரை.

ஓ பிரபுவே! அநேக அண்டங்களை யடக்கியாண்டுக்கொண்டு உலகத்தை துன்புறுத்திவந்த சூரபத்மன் தாரகன் சிங்கமுகன் முதலிய அசுரர்களைத் தேவரீர் சிரமமில்லாமல் கொன்றுவிட்டீர். ஆனால் எனது உள்ளத்திலிருந்துகொண்டிருக்கும் மனக்கிலேசத்தை மாத்திரம் ஒழிக்கின்றீரில்லை. நான் எதைச் செய்வேன் எங்கே செல்லுவேன்.

இதனால் முருகக்கடவுளின் அருளால் அடியவர்கள் எக்காலத்தும் சந்தோஷமுள்ளவர்களா யிருப்பார்கள் என்பது தெரிவிக்கப்பட்டது.

அங்ஙனம் பிரிந்த ஆறு திருக்குழந்தைகளையும் கார்த்திகை மக ளிர்கள் மிகவும் மகிழ்ந்து எடுத்து தங்கள்தங்கள் முலைப்பாலை ஊட்ட, முருகப்பெருமான் திருமுறுவல் செய்து, நீங்காத பேரருளால் அருந் துவார்போல அருந்தினர். பாலருந்திய பரஞ்சுடர் முதல்வனை அக் கார்த்திகைப்பெண்கள் வண்டருந்தாத கஞ்சமாமலர்ச் சயனத்தில் சேர்த்துத் தாலாட்டிக் கண்வளரச் செய்துத் துதித்தார்கள். குமா ரக்கடவுள் திருவருளினாலே துயில்செய்ய ஒருருவமும், துயில் செய்துத்துன்னென எழுந்து மதலைமொழிபேச ஒருருவமும், மாதா வின் முலைப்பாலைச் செம்பவள வாய்வைத்து உண்ண ஒருருவமும், நகைசெய்துக்கொண்டிருக்க ஒருருவமும், விளையாடிக்கொண்டிருக்க ஒருருவமும், காரணமின்றியே அழுதுகொண்டிருக்க ஒருருவமும், உடையாராயினர். தவழ ஒருருவமும், தளர்நடையிட்டுச் செல்ல ஒருருவமும், நில்லாது விரைந்து எழுந்துவிழ ஒருருவமும், இருக்க ஒருருவமும், அச்சரவண தடாகமுழுதுங் கலக்க ஒருருவ மும், தாயாரிடத்தில் இருக்க ஒருருவமும் உடையாராயினர். கூத் தாட ஒருருவமும், செங்கைகொட்ட ஒருருவமும், இனிய பாடல் களைப்பாட ஒருருவமும், அவ்வாடலைப்பார்க்க ஒருருவமும், ஓட வோருருவமும், ஓரிடத்தில் ஒளிக்க ஒருருவமும், அப்படி ஒளித்த மகவைத் தேட வோருருவமுமாக உடையாராயினர்.

ஆடவோ ருருவஞ் செங்கை யறையவோ ருருவ நின்று
பாடவோ ருருவ நாடிப் பார்க்கவோ ருருவ மாங்க
ணோடவோ ருருவ மோர்பா லொளிக்கவோ ருருவம் யாண்டுந்
தேடவோ ருருவ மாகச் சிவன் மகன் புரித லுற்றான்

இவ்வாறு ஆறுதிருமேனியும் ஒருகணத்திற்குள் ஆயிரக்கணக் கான பேதமாம் வண்ணம் முழுமுதற்கடவுளாகிய முருகப்பெருமான் உயிர்கள்தோறு மாடல்போல் எண்ணிலாத அற்புதத் திருவிளையா டல்களைப் புரிவாராயினர். சிற்பரனுகிவந்த செவ்வேளது திருவிளை யாடலின் பற்பல திறமு நோக்கிய நாரணனும் நான்முகனும் இந்திர னும் இருடியரும் பிறரும் அற்புதமும் ஆனந்தமும் அடைந்து, இவ் வொருபாலரே பல சிறுவர் வடிவங்கொண்டு நம்முன் கணப்பொழு திற்குள் எண்ணில்லாத பேதத்தாயினா. இதனை ஆராயுங்கால் இக் குமாரசுவாமியுடைய திருவிளையாடல் எங்களாலும் அறிவறியது. கைக்குழந்தைபோலத் தோன்றிய இவர் செய்யும் இம்மாயைபோல ஒருவரும் செய்ய வல்லவரல்லர். பிறிது சொல்லி என்ன பயன்?

நாமும் இவ்வாறு செய்ததொன்றில்லை. இவர் உயர் வொப்பில்லா சிவபெருமானேயாம்" என்று சொல்லி வணங்கிநின்றார்கள்.

கார்த்திகைப்பெண்கள் அறுவரும் அறுமுகக்கடவுளின் ஆடல்களை நோக்கி, மிக்க வியப்புற்று, குழந்தையென்ற எண்ணத்தை ஒழித்து, சிறிதும் பிறியாது அஞ்சி, வழிபடுகடவுளாகவேகொண்டு மெய்யன்போடு துதித்தார்கள்.

நவவீரருற்பவம்.

ஆலமுண்ட அரனாரது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய அக்கினிப்பொறிகளின் வெம்மையைத் தாங்காது, உமாதேவியார் தமது திருவடிகளிலுள்ள சிலம்புகள் தாக்கலால் நவரத்தினங்கள் சிதறும்வண்ணம் அஞ்சியோடினார். "மாயவனாதிவானவர்கள் சிவபெருமானை வணங்கி, "நீர் ஒரு திருக்குமாரரைத் தந்தருளும்" என்று வேண்ட, சிவபெருமான் தமது நுதல்விழியினின்று தீப்பொறிகளைத் தோற்றுவித்து, ஒரு குமாரனாய் வளரும்வண்ணம் சரவணப் பொய்கையிலே சேர்ப்பித்தருளினார்" என்றுணர்ந்தார். அதன்பின் அரனாருக்குக் குமாரன் என்னிடத்தே தோன்றாவண்ணம் திருமால் பிரமன் இந்திரன் முதலிய இமையவர்களுடைய பன்னியர்களுக்கெல்லாம் புதல்வர்கள் இல்லாதொழிக" என்றார். மீண்டு சிவசந்நிதியை யடைந்து, "தமது நெற்றிக்கண்ணில் தோன்றிய நெருப்புப்பொறிகளின் வெம்மையைக்கண்டு உடல் வெதும்பி ஓடினேன்; நீர் அவற்றை இவ்விடத்தினின்றும் அகற்றினமையால் மீண்டேன்" என்று விண்ணப்பஞ்செய்ய, கண்ணுதற்கடவுள் கருணைசெய்து, தேவியாரைத் தம்பக்கத்திருத்தியருளினார்.

உமாதேவியார் முன் ஓடியபொழுது, அவருடைய பாதச்சிலம்பினுஞ் சிதறிய இரத்தினங்களெல்லாம் சிவமூர்த்தியின் திருமுன் விளங்கின. அரனாரது ஆணையினால், அந்நவமணிகளினின்றும் அம்பிகையின் திருவுருவந்தோன்றியது. அவ்வுருவங்களைச் சிவபெருமான் நோக்கி, திருவருளினால் "வாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருள, ஒவ்வோர் இரத்தினத்துக்கு ஒவ்வோர் சத்தியாக நவசத்திகள் தோன்றினார்கள். அவர்கள் முக்கண்மூர்த்தியின் முளரியந்தாளை வணங்கிநின்று அவரிடத்தே விருப்பம் வைத்தமையால், இருடி பத்தினிகள்போல் விரைவிலே கருப்பமுற்றார்கள். இவை யாவையும் பார்வதியம்மையார் கண்டு, அந்நவசத்திகளின்மீது சினந்து "நீங்கள்

நமக்கு மாறுயினமையால், இக்கருப்பத்துடன் பலகாலம் இருக்கக் கடவீர்கள்'' என்று சபித்தனர். அப்பொழுது நவசக்திகள் அஞ்சி நடுநடுங்கி உடல் வெயர்த்தனர். அவ்வெயர்வையினின்றும், தேவ தேவனது திருவருளால் தினகரத்தொகைபோல் இலட்சம் வீரர்கள் உதித்தார்கள். அவ்வீரர்கள் இடியேறனைய சொல்லையுடையவர் களும், பொன்னுடையை உடுத்தவர்களும், வாளையும் பரிசையையுங் கரத்திலேந்தியவர்களுமாய், கண்ணுதற்கடவுள்முன் சென்று, திரு வடிகளை இறைஞ்சித் துதித்துநின்றார்கள். எம்பெருமான் அவர்களை நோக்கி, "நம்மைந்தர்களே! கேண்மின்; அமரர்களுக்குப் பகைவர் களாகிய அவுணர்களை யழித்தற்பொருட்டு, நமதுபுதல்வனாகிய முருக வேளுக்கு நீங்கள் யாவரும் படைகளாகக் கடவீர்கள்'' என்று கூறியருளினர். அவ்விலக்க வீரர்களும் நாடோறும் பேரன்புடை யவர்களாய் சிவசந்நிதியை அகலாது, திருத்தொண்டின்வழி நின் றார்கள்.

பார்ப்பதியாரால் சபிக்கப்பட்ட நவசக்திகள் நடுநடுங்கி, மலை வளர்காதலியை மன மொழி மெய் காணங்களால் வழிபாடுசெய்து கொண்டு, கருப்பத்தோடு பலகாலம் இருந்தார்கள். அந்நவசக்திக ளுடைய கருவினுள்ளே நந்திகணத்தவர்கள் குழவிகளாய்ப்புகுந்து, காளையர்களாகி, சிவபெருமானைச் சிந்தித்துத் தொழுதுகொண்டிருந் தார்கள். அவர்கள் இங்ஙனம் சிவயோகஞ் செய்துகொண்டிருந்த லால், கருப்பம் மிகப்பாரமாதலும்; நவசக்திகள் பார்வதி பரமேசு வரரைப்பணிந்து "அடியேங்கள் இந்நாள்காறும் இக்கருப்பத்தினால் வருந்தினேம்; இனித்தாங்கலாற்றேம் திருவுளமிரங்கியருளல்வேண் டும்" என்று குறையிரந்தனர்கள். தழல்விழிப்பரமன் தண்ணருள்புரிந்து மலைமகளது மலர்முகத்தை நோக்கி, "ஏலவார் குழலியே! நின்காற் சிலம்பினின்றும் உதித்த இந்நவசக்திகள், நின் சாபங்காரணமாக நெடுங்காலம் கருப்பத்தைச் சுமந்து மிகுந்த துன்புற்றார்கள்; இனிப் புதல்வரைப்பெறத் திருவருள் செய்க'' என்று பணித்தருளினர். அம்பிகை "நன்று'' என்று அதற்கியைந்து, புன்முறுவல்பூத்து நவசக்திகளை நோக்கி, "இனி நீங்கள் ஆற்றலிற் சிறந்த அரும்புதல்வர் களைப் பெறக்கடவீர்கள்'' என்று திருவாய்மலர்ந்தருள, அவர்கள் வயிற்றினுள் யோகஞ் செய்துகொண்டிருக்கும் வீரர்கள் அதனை யறிந்து, யோகத்தைவிடுத்து மனமகிழ்ந்து, கறைமிடற்றண்ணலா ரது கருணையைநினைந்து தொழுது, பிறக்கும்பொருட்டு நினைந்தார்கள்.

நவசக்திகள் ஞானம்பிகையின் கருணைநிறைந்த திருமொழியைக்கேட்டலும், கவற்சி நீங்கி, அம்மையாரையும் அரனாரையும் வணங்கி வாழ்த்தி, விடைபெற்றுக்கொண்டு அங்குநின்று நீங்கி, ஓரிடத்திற்சென்று புதல்வரைப்பெற்றார்கள். மாணிக்கவல்லியிடத்து தீரமிக்க வீரவாகு தேவரும், மௌத்திகவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராகவல்லியிடத்து வீரமகேந்திரநும், கோமேதகவல்லியிடத்து வீரமகேச்சுரநும், வைடூரியவல்லியிடத்து வீரபுரந்தரநும், வைரவல்லியிடத்து வீரராக்கதநும், மரகதவல்லியிடத்து வீரமார்த்தாண்டநும், பவளவல்லியிடத்து வீராந்தகநும், இந்திரநீலவல்லியிடத்து வீரதீரநும் அவதரித்தார்கள். இந்த வீரர்கள் ஒன்பதின்மரும், சிவபெருமானுடைய திருவருளினாலே, தங்கள் தங்கள் அன்னையர்களது நிறத்தையுடையவர்களாய், பொன்னுடையுடுத்தவர்களாய், பலகாலம் வளர்ந்த உறுப்புகளோடும், நவசக்திகளுடைய உந்தியின்வழியே நான்முகக்கடவுளைப்போல் உதித்தார்கள். இவ்வண்ணம் உதித்த வீரர்கள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி எழுதலும், சிவமூர்த்தி அம்பிகையை நோக்கி, "புவனேஸ்வரீ! நம்மைந்தர்களாகிய இவர்கள் மிகுந்த அறிவுடையவர்கள்; ஆற்றலுடையவர்கள்; மானமாகிய அருங்கலமுடையவர்கள்; இவர்கள் புதியர்களல்லர்; நந்திகணத்தவர்கள்" என்று சொல்லியருளினார். தேவியார் அதுகேட்டு அம்மைந்தர்களுக்குத் திருவருள்புரிந்தார். சிவபெருமான் அவர்கள் எல்லாருக்கும் தனித்தனி வாள்கொடுத்து, ஓரிலக்க மைந்தர்களோடு நீங்களுங்கூடி, உங்களுக்குத் தலைவனாகிய அறுமுகக்கடவுளை நீங்காது அவன் பணித்த தொண்டுகளைச் செய்துகொண்டிருக்கக் கடவீர்கள்" என்று அருளிச்செய்ய. அவர்களும் அதற்கிசைந்து வணங்கினார்கள். இவ்வொன்பது வீரர்களும் இலக்க வீரர்களோடு கலந்து எம்பெருமானுடைய திருக்கோயிலை அகலாது, அங்கிருந்தார்கள். சத்திகளொன்பதின்மரும் உமாதேவியாரை நீங்காது, அவர்பணித்த தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

(தொடரும்.)

உ

ஓம் குஹாய நம :

கற்பு

(217-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்புடை மனைவியால் கணவனுக்கு ஆயுள், செல்வம், புகழ், அழகு, வெற்றி, இன்பம், கல்விமுதலியவைகள் தானே வந்தடையும்.

பற்பல நெறிகளும் பயிலு நூல்களா
னற்பய னடைதலுந் தேசு நாடோறும்
பொற்புடை வெற்றியும் புகழ மின்பமுங்
கற்புடை மனைவியாற் கணவற் கெய்துமே,

—மகாபாரதம்.

இதற்கு எடுத்துக்காட்டாக இன்றும் என்றும் எங்கும் நின்று நிலவும் புண்ணிய சரிதத்தை விளக்குதும்.

சாவித்திரி.

நீர்வளம் நிறைந்த மத்திரதேயத்தில் உத்தமகுணம் பொருந்திய அச்சுவபதி என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் அறநெறி வழுவாதவன்; விளையாட்டிற்கும் பொய் சொல்லாதவன்; தருமசீலன்; தெய்வபக்தியுள்ளவன்; போரிற் புறந்தராதவன்; இந்திரியங்களை வென்றவன்; நாட்டு ஜனங்களுக்கும் நகர ஜனங்களுக்கும் பிரியமானவன்; எல்லாவுயிர்களுக்கும் இதத்தைச் செய்பவன்; பொறுமையுள்ளவன். இத்தகைய மன்னன் குழந்தைகளில்லாமல் வருந்தினன். வயது தளர்ந்தவனதலால் புதல்வனை விரும்பி மிகவும் மனம் வருந்தி கடுமையான நியமத்தை மேற்கொண்டான். பகலை எட்டாகப்பகுத்து அதன் ஆருவது காலத்தில் குறைந்த உணவையுண்டுகொண்டும், பிரமசரிய விரதமுடனும், மனத்தையடக்கியும், சாவித்திரி மந்திரத்தால் லக்ஷம் ஆகுதி செய்துகொண்டிருந்தான். இந்த நியமத்துடன் பதினெட்டு ஆண்டுகள் இருந்தான். பதினெட்டாவது ஆண்டு நிறைந்தவுடன் சாவித்திரிதேவி உள்ளமகிழ்ந்து, அவ்வரசன் முன் தோன்றி "வேந்தே! உன்னுடைய பரிசுத்தமான பிரமசரியத்

தாலும், அடக்கத்தாலும், நியமத்தாலும், பக்தியினாலும் எல்லாவிதத்தாலும் உன் விஷயத்தில் மகிழ்ச்சியுள்ளவளாக இருக்கிறேன்; அச்சுவபதியே! விரும்பிய வரனைப் பெற்றுக்கொள்வாயாக" என்றனள்.

அச்சுவபதி, "வரத்தைக்கொடுப்பவளே! தருமத்தை அடைய வேண்டுமென்கிற விருப்பத்தால் என்னால் குழந்தை உண்டாவதற்காக இந்தக்காரியஞ் செய்யப்பட்டது. தேவி! குலத்தை வளர்ப்பவர்களான அநேக புத்திரர்கள் எனக்கு உண்டாகவேண்டும். பாக்கியங்களில் புத்திரபாக்கியஞ் சிறந்ததென்பது ஆன்றோர்களின்கொள்கை. என்னிடத்தில் நீ அன்புடையவளாக இருந்தால் இந்த வரத்தை நான் விரும்புகிறேன்" என்று சொன்னான். சாவித்திரிதேவி, "அரசனே! உன்னுடைய எண்ணத்தை முன்னரே அறிந்து நளினமிசை வைகும் நான்முகக்கடவுள் உனக்குப் புத்திரனைத் தருவதற்காக உரைக்கப்பட்டிருக்கிறார். நல்ல ஒளியுள்ள ஒரு பெண்குழந்தை உனக்குப் பிறக்கும்" என்று அருள்புரிந்து மறைந்தனள். இறைவன் தனது நகரத்திற்குச் சென்றான்.

மநுநெறி தவறாத அம்மன்னன் குடிகளைத் தருமத்தால் காப்பாற்றிக்கொண்டு அரசுசெய்து வந்தான். சிலநாள்களுக்குப்பின் அவ்வரசனுடைய மூத்தமனைவி கருவடைந்தனள். மநுவின் புதல்வியான அந்த உத்தமியின் கருப்பமானது வளர்பிறை மதிபோல் வளர்ந்தது. மகப்பெறுங்காலம் வந்தவுடன் தாமரை மலர்போன்ற கண்களுள்ள ஒரு பெண்மகவைப் பெற்றாள். மன்னன் மகவைக் கண்டு மகிழ்ந்து சாவித்திரி தேவியின் திருவருளால் பிறந்ததனால் அக்குழந்தைக்கு சாவித்திரி என்று பெயர் சூட்டினன். அந்தணர்களும் ஆன்றோர்களும் அக்குழந்தையை அன்புடன் ஆசீர்வதித்தார்கள். எல்லா நலன்களும் அமைந்துள்ள அக்கன்னிகை இலக்குமிதேவியே உருவெடுத்துவந்ததுபோல் வளர்ந்து வந்தாள்; கல்வி கேள்விகளிற் சிறந்தவளானாள்; மங்கைப்பருவத்தை யடைந்தாள்; அழகிய இடையையுள்ளவளும், குளிர்ந்த பார்வையுள்ளவளும், பொற்பாவை போன்றவளுமாகிய அந்தப்பெண்ணை ஜனங்கள் பார்த்து, "தேவகன்னியே இந்தப் பெண் வடிவத்துடன் வந்திருக்கிறாள்" என்று கொண்டாடினார்கள். காந்திமிக்க அக்கட்டழகியை அவள் காந்திக்குத் தாம் இணையில்லாமையால் ஒருவனாவது மனைவியாகவரிக்க

வில்லை. அப்பெண்ணரசி பருவகாலத்தில் நீராடி உபவாசமிருந்து தேவதையை வந்தனம்பண்ணி விதிப்படி அக்கினியில் ஓமஞ்செய்து மறையவர்களை மந்திரங்களைச் சொல்லச்செய்தாள். பிறகு தேவதைக்குச் சூட்டிக்களித்த மலர்களையெடுத்துக்கொண்டு பிதாவினிடம் வந்து வணங்கி, அந்தமலர்களை பிதாவிடந்தந்து கரங்களைக் குவித்து அருகில் நின்றாள்.

சிதேவியை யனையவளும் யௌவனப்பருவத்தி லிருப்பவளும் ஆகிய அந்தத் தன்னுடைய மகள் வரன்களால் வரிக்கப்படாமலிருத்தலை எண்ணி, அரசன் மனம் வருந்தி, "மகளே! இது உனக்குத் கன்னிகாதான காலம்; ஒருவனாவது என்னிடத்தில் வந்து கேட்கவில்லை; உனக்குத் தகுந்த கணவனை நீயே வரிப்பாயாக; உன்னால் விரும்பப்பட்டவனை எனக்குத்தெரிவித்தால் நான் நன்கு ஆராய்ந்து கொடுப்பேன். தக்கசமயத்தில் தக்க வரனுக்குப் பெண்ணைக்கொடுக்காத பிதா இகழப்படத்தக்கவன். ருதுகாலத்தில் மனைவியை யடையாதபதியும் இகழத்தக்கவன்; பிதா பரலோகம்போனபிறகு தாயைக் காப்பாற்றாத புத்திரனும், இகழத்தக்கவன்; குழந்தாய்! கணவனைத் தேடுவதில் நீ விரைவுசெய்; தேவதைகள் என்னை இகழாமலிருக்குமாறு செய்" என்றான். மந்திரிகளைப்பார்த்து பிரயாணத்திற்கு வேண்டிய வாகனாதிமுதலியவைகளும் உடன்செல்லவேண்டும்" என்றான். பெரிய மனமுள்ள அந்த சாவித்திரி நாணத்துடன் பிதாவை வணங்கி அவனுடைய சொல்லை நன்கு அறிந்து ஆலோசியாமல் புறப்பட்டாள். பொன்னாலாகிய தேரிலூர்ந்து வயதுமுதிர்ந்த மந்திரிகளால் சூழப்பட்டு ராஜரிஷிகளுடைய அழகிய தவவனங்களை அடைந்தாள். அங்கே பூசிக்கத் தக்கவர்களான முதியவர்களை அடிவணங்கிக் கொண்டு வரிசையாக எல்லா வனங்களையுமே அடைந்தாள்; தருமத்தைச் செய்துகொண்டே சென்றாள்.

சாவித்திரி இவ்வாறு எல்லாத்தீர்த்தங்களையும் எல்லா ஆச்சிரமங்களையும் அடைந்து மந்திரிகளோடு பிதாவின் வீட்டுக்குத் திரும்பிவந்தாள். மத்திரதேசாதிபதியாகிய அரசன் நாரதருடன் பேசிக்கொண்டிருந்தான். அந்த சமயத்தில் அவ்விடத்தில் வந்த சாவித்திரி இருவரையும் தலைவணங்கி நின்றாள். நாரதர் "அரசனே! உன்னுடைய இந்தப்பெண் எங்கே போயிருந்தாள்? எவ்விடத்திலிருந்துவந்தாள்? பருவமடைந்த இந்தப்பெண்ணை ஏன் தகுந்த வரனுக்குக்கொடாமலிருக்கின்றாய்? என்று வினவ; அச்சுவபதி "மாதவரே! இந்தக்

காரியத்திற்காகவே அனுப்பப்பட்டிருந்த இந்தப்பெண் இப்பொழுது தான் வந்தாள்; இவளால் வரிக்கப்பட்ட கணவனை இவளிடமிருந்து கேளும்" என்று கூறி விரிவாகக் கூறுமாறு மகளுக்குக் கட்டளையிட்டான்.

சாவித்திரி "சாலுவ தேயத்தில் தருமநெறி தவறாத தியுமத்சேனன் என்னும் அரசர் ஒருவர் அரசாட்சி செய்தார்; அவர் பிறகு குருடரானார்; அறிவிற் சிறந்த அவர், கண்களையிழந்து சிறுவரான ஒரு புத்திரருடனிருந்தமையால், இந்தச்சமயத்தில் அவருடைய ராஜ்யமானது அருகிலிருக்கும் பழைய பகைவரால் கவரப்பட்டது. அவர் சிறு குழந்தையுடனும் மனைவியுடனும் கானகஞ் சென்றார். பெரிய காட்டையடைந்த அவர் கடுமையான விரதத்துடன் தவம் புரிந்தார். அவருடைய புத்திரரும் தபோவனத்தில் வளர்கின்றவருமான சத்தியவான் என்கிற உத்தமரை எனக்கு ஒத்த கணவனென்று மனத்தினால் வரித்தேன்" என்றனள். நாரதர் "அரசனே! அந்தோ! சாவித்திரியினால் பெரிய தவறுசெய்யப்பட்டது. சத்தியவான் குணத்திற் சிறந்தவனானபடியால் அவனை இவள் அறியாமையால் வரித்தாள். அந்த சத்தியவானுடைய பிதா சத்தியத்தைச் சொல்லுகிறான்; மாதாவும் சத்தியத்தைச் சொல்லுகிறாள்; அதனால் அந்தணர்கள் அவனுக்குச் சத்தியவான் என்று பெயரிட்டார்கள்; அந்தச் சிறுவனுக்கு குதிரைகளிடத்தில் பிரியமதிகம்; அவன் மண்ணால் குதிரைகளைச் செய்கிறான்; சித்திரத்திலும் குதிரைகளை எழுதுகிறான்; அதனால் அவனை "சித்திராசுவன்" என்றுஞ் சொல்லுகிறார்கள்" என்று கூற; அரசன் முனிநாதா! இப்பொழுது அந்த அரசகுமாரன் ஒளியுள்ளவனாக இருக்கின்றானா? அறிவிற் சிறந்தவனா? பொறுமையுள்ளவனா? சூரனா? சத்தியவாதியா? தாய்தந்தைகளிடத்தில் அன்புடையவனா?" என்று வினவினான். நாரதர் "சத்தியவான் சூரியனைப்போன்ற ஒளியுள்ளவன்; அறிவில் வியாழபகவானுக்கு ஒப்பானவன்; மகேந்திரன் போன்ற வீரன்; பூமியைப் போன்ற பொறுமையுள்ளவன்" என்று சொன்னார். அரசன "அவ்வரசகுமாரன் கொடையாளியா? ஆன்றோர்களுக்கு நன்மை செய்பவனா? சத்தியவாக்கியமுள்ளவனா? இனிய தோற்றமுள்ளவனா? சிறந்த அழகுள்ளவனா? பெருந்தன்மையுள்ளவனா?" என்று வினவினான். நாரதர் "அந்த சாலுவமன்னன் மகன் தனது சக்திக்குத்தக்கபடி கொடுப்ப

தில் சங்கிருதிமகனாகிய ரந்திதேவனுக்கு நிகரானவன்; உசீநரகுமாரனாகிய சிபியைப்போல ஆன்றோர்களுக்கு நலத்தைச் செய்பவன்; அரிச்சந்திரனைப்போன்ற சத்தியவாக்குள்ளவன்; யயாதியைப்போல பெருந்தன்மையுள்ளவன்; சந்திரனைப்போன்ற இனியதோற்றமுள்ளவன்; அசுவனீ தேவர்களைப்போல உருவத்தையுடையவன்; பேசுந்திறமையுள்ளவன்; மனத்தை அடக்கினவன்; மகாசூரன்; நல்ல நட்புடையவன்; குணமுள்ளவற்றிலும் குற்றத்தை ஏற்றுச் சொல்லுவதாகிய அசூயை இல்லாதவன்; தீயகாரியங்களில் நாணமுடையவன்; தைரியம் அவனிடத்திலேயே நிலைபெற்றிருக்கிறது; உள்ளும்புறமும் ஒத்தவன்; சுருக்கமாக அவனிடத்தில் எல்லா நற்குணங்களும் குடிகொண்டிருக்கின்றன" என்றார்.

அச்சுவபதி "பகவானே! அந்த சத்தியவானைத் தேவரீர் எல்லாக்குணங்களோடுங் கூடியவனென்று சொல்லுகிறீர்; அவனிடத்தில் ஏதாவது குறைகள் உண்டாயின் அவைகளையும் சொல்வீராக" என்று வினவ; நாரதர் ஒரே ஒரு குறை அவனது எல்லாக்குணங்களையும் மீறிநிற்கிறது; அந்தக்குறை முயற்சியால் நீக்கமுடியாதது; அந்த ஒரு குறையைத்தவிர வேறு குறையில்லை; அந்த சத்தியவான் இன்றுமுதல் ஓராண்டுடன் ஆயுள்முடிந்தவனாகத் தேகத்தை இழக்கப்போகிறான்" என்று சொன்னார். அரசன் "சாவித்திரி! வேறுவரனை வரிப்பாயாக! கல்யாணி! நீ வரித்த சத்தியவான் ஒரு வருடத்தில் உயிர் துறப்பான் என்று நாரதர் சொல்லுகிறார், வேறு கணவனைத் தேடு" என்றான்.

சாவித்திரி "அப்பா! தந்தைமுதலியோரால் கிடைத்தபொருளை சகோதரர்கள் பங்கிட்டுக்கொள்வது ஒரேதடவை; கன்னிகை தந்தைமுதலியோரால் கொடுக்கப்படுவது ஒரேதடவை; பசுமுதலியவற்றைத் தானஞ் செய்வதும் ஒரேதடவை இந்த மூன்றும் ஒவ்வொரு தடவையே என்கிறார்கள் நீண்ட ஆயுளுள்ளவனோ குறைந்த ஆயுளுள்ளவனோ குணமுள்ளவனோ குணமில்லாதவனோ என்னால் கணவன் ஒரு தடவை வரிக்கப்பட்டுவிட்டான்; நான் இரண்டாமவனை வரிக்கமாட்டேன். மனத்தினால் நிச்சயஞ்செய்து பிறகு வாக்கினாற் சொல்லப்படுகிறது. பிறகு சொன்னவண்ணம் அது செய்கையால் செய்யப்படுகிறது; ஆகையால் எனக்கு மனமானது பிரமாணம்" என்று சொன்னாள். நாரதர் "மகிபால! நின் புதல்வி திடசித்தமுடையவள்; எவ்விதத்திலும் இவளைத் திருப்பமுடியாது; சத்தியவான் குணத்திற்

சிறந்தவன்; அவனுக்கு இவளைத் தடைசெய்யாது கொடுப்பதே நலம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார். மன்னன் "முனிநாதா! தேவரீர் எனக்குக் குருநாதரல்லவா? இவளுடைய நிச்சயத்தை மாற்றமுடியாது; உமது மொழிப்படியே செய்கிறேன்" என்றான். நாரதர் "உனது மகளைத் தடைசெய்யாது சத்தியவானுக்குக்கொடுப்பாயாக; உங்கள் அனைவருக்கும் மங்களம் உண்டாகுக" என்றுகூறி ஆகாயவழியே சென்றார். அரசன் விவாகத்திற்கு வேண்டியவற்றைச் சித்தஞ்செய்தான்.

அச்சுவபதி, அறிவிற் சிறந்த அந்தணர்களையும் புரோகிதர்களையும் மந்திரிகளையும் அழைத்துக்கொண்டு நல்ல நாளில் கன்னிகையுடன் புறப்பட்டான். பரிசுத்தமான வனத்திலுள்ள தியுமத்சேனனுடைய ஆச்சிரமத்தையடைந்து கால் நடையாக நடந்துபோய் அந்த ஆச்சிரமத்தில் தருப்பையாசனத்திலிருப்பவனும், கண்ணில்லாதவனும் குணசீலனுமாகிய தியுமத்சேனனைக் கண்டான் அச்சுவபதி அந்த ராஜரிஷியைத் தக்கபடி பூசித்து "நான் அச்சுவபதி" என்றான். தருமங்களையறிந்தவனாகிய தியுமத்சேனன் அச்சுவபதிக்கு அருக்கியத்தையும் ஆசனத்தையும் பழங்களையுந்தந்து "வந்த காரணம் யாது?" என்று வினவினான். அச்சுவபதி "ராஜரிஷியே! அழகியவளான சாவித்திரி என்கிற பெண் என்னுடைய பெண்; இதோ இருக்கிறாள்; நீர் இந்தப்பெண்ணை உமக்கு மருமகளாக நமக்குரிய முறைப்படி என்னிடத்தினின்று பெற்றுக்கொள்ளும்" என்றான்.

தியுமத்சேனன் "பார்த்திபரே! நாங்கள் ராஜ்யத்தினின்று நழுவினவர்களும் வனவாசமுள்ளவர்களும் நியமமுள்ளவர்களும், தவஞ்செய்பவர்களுமாகத் தருமத்தை அனுஷ்டிக்கிறோம். வனவாசத்தில் சுகமே கிடையாது; துன்பத்தையறியாத நின்மகள் இந்த வனவாசத் துன்பத்தை எவ்வாறு சகிப்பாள்?" என்றான். அச்சுவபதி "ஐய! சுகதுக்கம் மாறிமாறிவரும்; சுகமுந்துக்கமும் மனத்தைப்பொறுத்திருக்கின்றன; நல்ல நிச்சயத்துடன் உம்மிடம் வந்திருக்கிறோம், சினேகத்தால் வணங்குகிற என் விருப்பத்தை நீர் கெடுக்கப்படாது; எனக்கு நீர் சம்பந்தத்திற்குத் தகுந்தவர்; உமக்கு நான் ஒத்தவன்; என்னுடைய மகளை சத்தியவானுக்கு மனைவியும் உமக்கு மருமகளுமாக ஏற்றுக்கொள்ளும்" என்று வேண்டினான்.

ஜீவகாருண்ய ஒழுக்கம்

A. திருஞானம், சமையபுரம்.

கடவுள் சகல உலகங்களையும் அதில் தோன்றும் வஸ்துக்களையும் படைத்தார். அவற்றில் சில வஸ்துக்கள் உணர்ச்சியற்று ஜடங்களாகவும் மற்றும் சில வஸ்துக்கள் அறிவுடன்கூடி ஜீவர்களாகவும் உள்ளன. சீவன் என்பது கடவுளின் சக்தியாம்சமாகும்; அதுவே ஆன்மா அல்லது உயிர் எனவும்படும். உயிர் தோன்றி விளங்குவதற்கு பூதங்களால் ஆகிய உடல் இருப்பிடமாய் உள்ளது. ஜீவன் கடவுள் விளக்கம் ஆகையால், அது அழிவதில்லை. பூதகாரியமான

தியுமத்சேனன் "முந்தியே உம்முடைய சம்பந்தத்தை நான் விரும்பியிருந்தேன்; நான் இராஜ்யத்தை இழந்திருப்பதால் ஆலோசித்தேன்; நான் முன் விரும்பிய இந்த எண்ணம் இப்போது நிறைவேறட்டும்; சாவித்திரி எனக்கு மருமகளாகட்டும்" என்றான்.

இருமன்னர்களும் சேர்ந்து அங்குள்ள எல்லா முனிவர்களையும் வருவித்து, சாவித்திரிக்கும் சத்தியவானுக்கும் முறைப்படி விவாகத்தை நடத்தினார்கள். மகளுக்குவேண்டிய சீதனங்களை மகிழ்ச்சியுடன் கொடுத்துவிட்டு சம்பந்தியிடம் விடைபெற்று தனது நகர் சென்றான். சத்தியவான் சாவித்திரியை மனைவியாகக்கொண்டு மனமகிழ்ந்தான். மனத்தினால் விரும்பிய அக்கட்டழகனைக் கணவனாகப்பெற்று சாவித்திரியும் மகிழ்ந்தாள். தந்தை சென்றபின் சாவித்திரி ஆபரணங்களைக் கழற்றிவிட்டு மரவுரி யுடுத்திக்கொண்டாள். பணிவிடைகளாலும் குணங்களாலும் நட்பாலும் இந்திரியங்களுடைய அடக்கத்தாலும் வேண்டியவற்றைச் செய்வதாலும் மாமி மாமன் கணவன் இவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாள். மாமியாரையும் மாமனாரையும் அடக்கத்துடன் இனிய சொல்லுடனும் உணவுகளைத்தந்து உபசரித்துவந்தாள். ஏகாந்த உபசாரத்தாலும் அன்புடன் உபசரிப்பதாலும் கணவனுக்கு மகிழ்ச்சியை விளைவித்தாள்

(தொடரும்).

தேகம் அழியுந்தன்மையுடையது. தேகம் அழியும்போது அதிலுள்ள ஆன்மா அழியாமல் தான் செய்த ஊழ்வினைக்குத்தக்கபடி வேறு உருவத்துடன் மறுபடியும் ஜீவிக்கின்றது.

இவ்வாறு ஒரு ஜீவன் அடையத்தக்க பிறப்பு பலவகைப்படினும் அவை தேவர், நரர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்ற ஏழு வகைகளில் அடங்கும். அவை எல்லாம் மாயையில் வெளிப்பட்டு பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம் என்னும் விகற்பங்களால் இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றன. ஜீவன்கள் எல்லாம் ஒரே கடவுளின் சிருஷ்டி ஆதலால் ஒரு (ஜீவன்) வருக்கொருவர் சகோதரர் ஆகிறார். ஆதலால் ஒரு ஜீவன் துன்பப்படுவதைக்காணும்போதும், துன்பப்படும் என்று அறியும்போதும் மற்றவர்கள் மனம் இரங்குவது ஆன்ம உரிமை ஆகும். அதற்குத்தான் ஜீவகாருண்யம் என்று பெயர். பாசீவர்களது துன்பத்தைக்கண்டு மனமிரங்கி அத்துன்பத்தை நீக்கி இன்பமுறச்செய்வது ஜீவகாருண்ய ஒழுக்கம் எனப்படும்.

ஜீவர்களுக்கு உண்டாகும் பலவித துன்பங்களிலும் பசியால் வரும் துன்பமே மிகவுங்கொடியது. தாகம், பிணி, இச்சைமுதலியவற்றைச் சகித்துக்கொண்டு ஜீவர்கள் உயிர்வாழலாம் அல்லது வேறு உபாயங்களால் நிவர்த்திசெய்துகொள்ளலாம். அப்படிச்செய்வதால் உயிர்ச்சேதம் உண்டாவதில்லை. ஆனால் பசிநோயை ஆகாரம் இன்றி வேறு உபாயங்களால் நிவர்த்திசெய்யமுடியாது. பசியைப்பொறுத்துக்கொண்டு சும்மா இருக்கவும் இயலாது. அப்படியிருந்தால் ஜீவன்கள் உயிர் நீங்குவது நிச்சயம்; ஆகையால் எளியவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே மேலான ஜீவகாருண்யம்; அது பரஜீவகாருண்யம் எனப்படும். உடுக்க உடையும், இருக்க இடமும், உதவியாகப் பொருளும் இல்லாமையால் வருந்தும் ஏழைகளது குறைகளைத் தீர்ப்பது அபரஜீவகாருண்யமாகும். ஆகையால் ஜீவர்களது பசிப்பிணியை நீக்குவதுதான் ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லக்ஷியமாகும். இதைக் கையாண்டுவந்தால் ஏழைகளின் மற்ற குறைகளையும் நீக்கத்தக்க உபகாரசக்தி தானே உண்டாகும்.

ஜீவகாருண்யம் உள்ளவர் ஏழைகளுக்குப் பசியாற்றுவிக்கும்போது அவரது ஜாதி, மதம், ஒழுக்கம், செய்கைமுதலியவற்றில் வேற்றுமை பாராட்டாமல் எல்லோரையும் சமமாகப் பாவித்தல்

வேண்டும். தமது விதிவசத்தால் கூன், குருடு, செவிடு முதலான அங்க ஈனர்களிடத்தில் விசேஷ அன்புகொண்டு அவர்களது பசியை முதலில் நீக்கவேண்டும். அற்ப சக்தியுடைய சம்சாரிகள்கூட தமது மாதா பிதா மனைவி மக்களை காப்பாற்றுவதோடு தங்கள் செலவை சிறிது குறைத்துக்கொண்டாகிலும் ஏழைகளுக்கு உதவிபுரியவேண்டும். தக்க இயல்புள்ள சம்சாரிகள் தமது குடும்பத்தையும் பந்து மித்திரர்களையும் அடியார் அயலார்களையும் உணவளித்து ரக்ஷித்தல் வேண்டும். கலியாணம் முதலிய சடங்குகளுக்காக ஆடல், பாடல் அலங்காரம், ஊர்கோலம் முதலான ஆடம்பரங்களில் தங்கள் பொருளை வீண்செலவு செய்யும் செல்வர்கள் அப்பொருளைக்கொண்டு ஏழைகளுக்குப் பசிதீர்த்து இன்பம் அளிக்கவேண்டும். அவ்வாறு பசித்தவர்க்கு உணவு கொடுப்பதில் தாவரங்களில் காய்கறி, கிழங்கு வித்துக்களாலாகிய சத்து ஆகாரத்தையே வழங்கவேண்டும். ஏனெனில் அவற்றைக் கிரகிக்கும்போது அத்தாவரங்களுக்கு உபத்திரவமாவது உயிர்ச்சேதமாவது உண்டாவதில்லை. மாமிச ஆகாரம் தாமச குணத்தை விருத்திசெய்வதினாலும் அதைச் சம்பாதிப்பதில் உயிர்க்கொலை ஏற்படுவதினாலும் அதை உபயோகிப்பது பாவச்செயல்ஆகும். ஒரு ஜீவனைக்கொன்று மற்றொரு ஜீவனுக்கு பசிநீக்குவதில் புண்ணியமுமில்லை; தெய்வ சம்மதமுமில்லை.

ஜீவகாருண்யம் ஒழுக்கத்தால் அடையும்பலன்கள் அளவற்றன. பசிநோயால் வருந்திச் சோர்ந்துவரும் ஏழைகளுக்கு அன்னம் கொடுத்து திருப்திசெய்தால் தீராத கரும ரோகங்களான சூலை குன்மம், குஷ்டம் முதலியவையும் தீர்ந்துபோகும், சந்ததியில்லாமல் ஏங்கிநிற்கும் சீமான்கள் ஏழைகளுக்கு உணவளிக்கும் விரதத்தை அனுஷ்டித்து வந்தால் புத்திரபாக்கியத்தைப் பெறலாம். அற்ப ஆயுளைப்பெற்ற அரிஷ்டர்களும் அன்னதானம் செய்து அதன்பலத்தால் தன் ஆயுளை விருத்திசெய்துகொள்ளலாம். பசிக்குப் போஜனமளிக்கும் புண்ணியவான்களுக்கு காற்று மழையால் கஷ்ட நஷ்டம் வரா; கொடுநோயால் துன்பம் நேராது; கள்வர் சத்துருக்களிடம் பயம் தோன்றாது; அவர்களுக்கு கல்வி, செல்வம், அறிவு முதலியன மிகுதியும்உண்டாகும்; அவரது தொழில்களில் முயற்சிக்கு அதிகமான லாபம் கிடைக்கும்; அவர் பயிரிடும் நிலங்களில் எதிர்பாராத பலன் உண்டாகும்; அவரிடத்தில் அரசனிடத்தும் நன் மதிப்பு ஏற்

உ

ஓம் குஹாய நம:

குரு சிஷ்ய லக்ஷணம்

(225-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்ரும்ம வைவர்த்த புராணத்தில் பிரம்மகாண்டம் அ 11, சு.18ல்

நசவ்யாதிஸ் ஸமச்சத்ருர்ண சபூஜ்யோதுரோ: பர:
நாஸ்திமாத்ருஸமோ-பந்துர்ந சமித்ரம் பிது: பரம்,

வியாதிக்கு ஸமானமான சத்துருவுமில்லை, குருவைவிட பூஜிக்கத் தக்க சிரேஷ்டனொருவனுமில்லை, தாய்க்குசமானமான பந்துவுமில்லை, தகப்பனுருக்கு ஸமானமான நண்பரில்லை என்று கூறுகிறது.

படும்; ஏழைகளின் பசியை நீக்கி அவர் முகத்தில் தழைத்துவளரும் திருப்தி இன்பத்தைக்கண்டவர் தாமும் அவ்வின்பத்தை அனுபவிக்கிறார். தருமங்களிற் சிறந்த அன்னதானத்தைச் செய்பவர் யோகிகளுக்குச் சமமாவர்; ஏழைகள் உண்பதைத் தாம் உண்ணுவதாக நினைப்பவர் ஞானிகளை ஒப்பார்; ஏழைகளின் திருப்தியாகிய கடவுள் விளக்கத்தைக் கண்டவர் கடவுளைக் கண்டவரே ஆவர். சுருங்கச் சொல்லின் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை கடைப்பிடித்து நடப்பவர் மோக்ஷவீட்டை அடைந்து சாஸ்வதமான மோக்ஷ இன்பத்தை அனுபவிப்பார். ஜீவகாருண்யம் மோக்ஷவீட்டைத் திறப்பதற்கு ஓர் திறவுகோல்.

மோக்ஷ சாதனங்களைத் தேடிக்கொள்வதற்காகவே மானிட தேகம் ஆன்ம விளக்கமும் அருள் விளக்கமும் உடையதாய் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. தேகம் நிலையற்றதாகையால் எந்த நிமிஷத்திலும் அழியக்கூடும். அது அழிந்தால் மறுபடியும் இப்பிறவி கிடைப்பது அரிது. ஆகையால் இத் தேகம் அழிவதற்கு முன் மனிதர் யாவரும் ஜீவகாருண்யம் என்னும் சாதனத்தைக்கொண்டு முக்தி இன்பத்தைத் தேடிக்கொள்ளக்கடவர். மனிதப்பிறவியால் அடையத் தக்க பெரும் பதவிகளில் மோக்ஷமே அது ஆன்மலாபம் எனப்படும்.

ஆகவே சீடனுடைய காங்களானது எப்பொழுதும் குருநாதனையே பூசிக்கவேண்டும். மனமானது அவருடைய திருநாமத்தையே மனனம் செய்யவேண்டும்; செவியானது அவருடைய கீர்த்தியையே கேழ்க்கவேண்டும்; நயனமானது அவருடைய திருமேனியையே தரிசிக்கவேண்டும்; சரீரமானது அவருக்குப்பணிவிடைசெய்வதிலேயே கிடத்தல்வேண்டும்; வாக்கானது அவருடைய பெருமையையே பேசவேண்டும்; தான் செய்யும் நற்கருமங்களெல்லாம் அவரைச் சேர்ந்ததாக எண்ணவேண்டும்; தானறியாமல் செய்யும் குற்றங்களெல்லாம் தன்னைச் சேர்ந்ததாக எண்ணவேண்டும். அமெரிக்காவில் நியூயார்க்கு (New York) என்னும் நகரத்தில் கி பி. 1896-ம் ௵ ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தர் தன் குருநாதனுடைய புகழையே பொருளாகக்கொண்டு "என் குருநாதன்" என்று ஒரு உபன்னியாசம் செய்தார்,

"ஞானங்களையாவது, தருமங்களையாவது, ஒரு வார்த்தையேனும், நான் பிரசங்கம் செய்திருந்தால் அஃதெல்லாம் என் குருநாதனையே சேர்ந்தது; அப்பிரசங்கங்களிலுள்ள குற்றங்குறைகளெல்லாம் என்னைச் சேர்ந்தது" என்று கூறியிருக்கிறார்.

சீடனுக்கு அவரைத்தவிர பந்துகிடையாது; அவரைவிட அன்னியமானதும்; சிரேஷ்டமானதும் எதுவும் இல்லை. அவரே தேவன், அவரே பந்து, அவரே ஆத்மா, அவரே ஜீவன், குருவே சிரேஷ்டமான தருமம், குருவே சிரேஷ்டமான பதவி, குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே ஈஸ்வரன், ஆகவே குருவைக்காட்டிலும் இம்மூன்று உலகங்களிலும் சிரேஷ்டன் ஒருவனுமில்லை. ஈஸ்வரனிடத்தில் எத்தன்மையான பக்தி பாராட்டுகிறேயோ அத்தன்மையான பக்தி குருநாதனிடத்தில் எவன் பாராட்டுகிறானே அவன் பிரம்மத்தை அறிந்தவனாய்ப் பிரம்மமாக ஆகிறானென்பது வேதத்தினுடைய கட்டளை என்று சாட்டியாயநியோபநிஷத்தில்

குருரேவ பரோதர்மோ குருரேவ பராகதி: யஸ்யதேவே பராபக்திர்யதா தேவே ததாகுரௌ, ஸப்ரம்ம வித்பரம் ப்ரேயாதி திவேதாநுசாஸனம் என்று கூறப்படுகிறது.

தெய்வம் அவரே என்பதை கீழ்வரும் ப்ரமானந்தத்தாலறிக. குருகீதை:

குருஸ்ஸிவோ குருர்தேவோ குருர்பந்து ஸரீரிணம்,
குருராத்மா குருர்ஜவோ குரோர்ய்ம் நவித்யதே

என்றும், யோகசிகோபநிஷத்தில்

குருர்ப்ரஹ்மா குருர் விஷ்ணு, குருர் தேவஸ்ஸதாசியுத:
நதரோரதிக: கச்சி அத்ரிஷுலோகேஷு வித்யதே திவ்யஜ்ஞானோ
பதேஷ்டா-ரம்தேசிகம் பரமேஸ்வரம் ! பூஜயே அபராதபக்த்யா
தஸ்யஜ்ஞானபலம் லபேது! யதாகுருஸ்ததைவே சோயதைவேசஸ்ததகுரு:
பூஜநீயோமஹாபக்த்யா நபேதோ வித்யதேமந்யோ:!
என்றும், திருமந்திரத்தில்

குருவேசிவமெனக் கூறின னந்தி
குருவே சிவமென்பது குறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே

எனவும் வருவனவற்றாற் காண்க.

இவ்விதம் குருகுலவாசம் செவ்வையாய்ச் செய்யவேண்டும். ஏனெனில் சற்குருவினால் உபதேசிக்கப்பட்டபோதிலும் அசம்பாவனை, சம்சயபாவனை, விபரீதபாவனை என்ற மூன்றுவித பாவனைகளினும் ஜீவஸ்வரபின்னபேதம், ஜீவாத்மாக்களின் பரஸ்பரபேதம், ஜீவஜடங்களின் பேதம், ஈஸ்வரஜடங்களின்பேதம், ஜடங்களின் ஒன்றுக்கொன்று பேதம் என ஐந்துவகையாயுள்ள, ப்ரமைகளினாலும், குரூபதேசவாக்கியங்களும் லக்ஷியங்களும் மனத்துக்கு பிடிபடாதாகையால் நன்றாய் குருகுலவாசஞ்செய்து அவருடைய ஆக்ஞையின்படி நடக்கிறதின்மூலமாய் சகலசந்தேகங்களையும் நிவர்த்தியாகிவிடும். பிறகுதான் குரூபதேச லக்ஷியத்தில் மனதுநிற்கும் இந்திரனானவன் பிரம்மவித்தையை உபதேசிக்கப்பெற்றபோது அதாவது

ஏஷோக்ஷிணி புருஷோத்ருஸ்யதேருஷ்த
ஆத்மேதிஹோவாசைதத் ந்ருதமபயமேதத்ப்ரம்மேதி
(சாந்தோ—பிரபா—4—கண்டம்— 15—வாக்— 1

ஓ தேவதைகளுக்கு ராஜனான இந்திரனே உன்னுடைய நேத்திரத்தின்மூலமாய் நீயே உன் எதிரே ஆகாயத்தில் பார்க்கிற சாயாபுருஷனே ஆத்மா; அதுவே அம்ருதமானது; அதுவே அபயமானது; அதுவே பிரம்மம் என்று முதலில் உபதேசப்பெற்றுதான் தனித்து சென்று ஏகாந்தமாய் அநுஷ்டித்தும் மனத்திற்கு பிடிபடாமல் குருநாதனிடம் வந்தான். குருநாதனும் பலவிதமாய் வெளிப்படுத்தியும் இந்திரனுக்கு மனதில் படியவில்லை 'அப்போது குருநாதனானவர் "ஏ இந்திரா ! நீ இன்னும் 'குருகுலவாசஞ்செய்து மனதிலுள்ள கல்மிஷங்களெல்லாவற்றையும் நிவர்த்தித்துக்கொண்டுவா" என்றனர்.

இந்திரனானவன் விடாமுயற்சியுடன் குருகுலவாசம்செய்து மறுமுறை அவரிடத்தில் சென்றான். அப்பொழுதும் குருநாதனானவர் முதற் சொன்ன வாக்கியத்தையே உபதேசித்தார். அப்பொழுதும் புருஷனுக்கு மனத்திற்படவில்லை. குரு—மறுபடியும் குருகுலவாசஞ்செய் யென்று அனுப்பிவிட்டார். இவ்விதமாக இந்திரன் விடாமுயற்சியால் நான்காந்தடவையில் ஸ்வானுபவத்தை யடைந்தானென்று உபநிடதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் மனதிலுள்ள கல்மிஷங்களெல்லாம் நிவர்த்தியாகும்பரியந்தம் நாம் ஞானத்தையடைய மாட்டோம், குருகுலவாசம் செவ்வையாகச் செய்தால்தான் ஞானத்தையடையலாம்.

அவ்விதம் குருகுலவாசத்திலிருந்து ஞானத்தை யடைந்த பெரியோர்கள் சரித்திரத்தில் ஒன்றை வரைகுவாம்.

பல்வளங்களும் நிறைந்த சோழதேசத்தில் காவிரிநதிக்கரையில் சில பிராமணர்கள் வாழ்ந்துவந்தார்கள். வேதாத்யாயனம் பண்ணினவரும் கர்மவழியாகச் செல்லுபவருமாகிய ஒரு அந்தணருக்கு முன் செய்த தவப்பயனால் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சநந்தனன் என்று பெயரிட்டு வளர்த்துவந்தனர். குழந்தைக்கு செயிர்தீர் அறமும், வாய்மையும் மாறாநேசமும் தூய்மைமதங்கிய உள்ளமும் நல்லறமும் விளங்கின. எக்காரணத்தினாலும் கொடுஞ் சொற்களை உபயோகப்படுத்தாதவரும், அகங்கார மில்லாதவரும் தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளாதவரும் ஆகிய நற்குணத்தையே பூஷணமாக உடையவருமாகிய சநந்தனானவர் வளர்மதிபோல் வளர்ந்துவந்தனர். சனந்தனர், செல்வவந்தனர்களையும் தரித்திரர்களையும்பார்த்து மனம் சோகிப்பார். வாடியமலரைப்பார்த்து வாழ்வும் இப்படித்தானே வாடுமெனு மனம் வாடுவார்; வீடியதழையைக்கண்டு விழிநீருகுப்பார்; இறந்து மண்ணாக மறைந்தவரை எண்ணியெண்ணி ஏங்குவார்: நாலால் தவழ்ந்து இரண்டால் நடந்து, மூன்றால்தள்ளாடி, எணிஏறி எமலோகம்புகும் இவ்வுயிரை வெறுப்பார். மனைவி மக்கள், நண்பர், தாய்தந்தை, செல்வமெனு, மினுக்கும் இன்பமெலாம் நாடகமாடி நமன்வாய்ப்படுமெனு உணர்ந்து, பவசாகரக் கடலைத்தாண்ட வேண்டுமென மனதிலுன்னி வாழ்ந்துவந்தார்.

(தொடரும்.)

உ

ஓம் குஹாயநம:

திருப்புகழமிர்தம்.

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 2 Vol. 2	ஈஸ்வர வருஷ மார்கழிமீ 1உ டிசம்பர்—1937	இதழ் 9. No. 9.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

அனிச்சங் கார்முகம் வீசிட மாசறு
துவட்பஞ் சானத டாகம்வி டாமட
அனத்தின் தூவிகு லாவிய சீறடி மடமானார்
அருக்கன் போலொளி வீசிய மாமர
கதப்பைம் பூணணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாவியை ஆவியி டேறிட நெறிபாரா
வினைச்சண் டாளனை வீணனை நீணிதி
தனைக்கண் டாணவ மானநிர் மூடனை
விடக்கன் பாய்நுகர் பாழனை யோர்மொழி பகராதே
விகற்பங் கூறிடு மோக விகாரனை
அறத்தின் பாலொழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனோ
முனைச்சங் கோலிடு நீலம கோததி
அடைத்தஞ் சாதஇ ராவண னீள்பல
முடிக்கன் றோர்கணை யேவு மிராகவன் மருகோனே
முளைக்குஞ் சீதநி லாவொட 'ராவிரி'
திரைக்கங் காநதி தாதகி கூவிள
முடிக்குஞ் சேகரர் பேரரு ளால்வரு முருகோனே

தினைச்செங் கானக வேடுவ ரானவர்
திகைத்தந் தோவென வேகணி யாகிய
திறற்கந் தாவளி நாயகி காமுறும் எழில் வேலா
சிறக்குந் தாமரை யோடையில் மேடையில்
நிறக்குஞ் சூல்வளை பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரர் பெருமாளே.

பதவுரை.

முனை சங்கு ஒலிடு - போருக்குரிய சங்குகள் ஒலென்று ஒலிக்கும், நீல மகா உததி - நீல நிறத்தையுடைய பெரிய சமுத்திரத்தை, அடைத்து - (வானர வீரர்களைக் கொண்டு) அணை புதுக்கி, அஞ்சாத இராவணன் நீள்பல முடிக்கு - பகைவர்களுக்குப் பயப்படாத இராவணனது உயர்ந்த மணிமகுடந் தரித்த பல தலைகளையும் அறுப்பதற்கு, அன்று ஓர் கணை ஏவும் - அந்நாளில் ஒரே ஒரு அம்பினை விடுத்த, இராகவன் - இரகு வம்சத்தில் அவதரித்த இராமபிரானது, மருகோனே - மருமகனாக விளங்குபவரே! முளைக்கும் சீத நிலாவொடு - திருப்பாற் கடலிலே தோன்றும் குளிர்ந்த பிறைச் சந்திரனையும், அரா - பாம்பையும், விரி திரை கங்கா நதி - விசாலமானதும் அலைகளை யுடையதுமாகிய கங்காநதியையும், தாதகி - ஆத்தி மலரையும், கூவிளம் - வில்வத்தையும், முடிக்கும் சேகரர் - தரித்துக் கொண்டுள்ள சடாமகுடத்தையுடைய சிவபெருமானது, பேர் அருளால் வரு - பெருங்கருணையால் அவதரித்த, முருகோனே - முருகப் பெருமானே, தினை செம் கானக - தினைப்பயிர் விளையும் செழிப்பாகிய காட்டகத்தில் வாழுகின்ற, வேடுவர் ஆனவர் - வேடுவர்களானவர்கள், திகைத்து அந்தோ என (ஏ - அசை) - புதிதாக முளைத்ததால் "இது எது? என்று" பிரமித்து "ஐயோ! என் செய்வோம்" என்று கூற, கணி ஆகிய - வேங்கை மரமாகி நின்ற, திறல் கந்தா - வலிபொருந்திய கந்தப் பெருமானே! வள்ளி நாயகி காமுறும் - வள்ளி நாயகியார் கண்டு அன்புறும், எழில் வேலா - கட்டழகுடைய வேலாயுதரே! சிறக்கும் தாமரை ஓடையில் - மலர்களுக்குள் சிறப்புற்றிருக்குந் தாமரை ஓடைகளிலும், மேடையில் - உயர்ந்த உப்பரிகைகளிலும், நிக்கும் சூல் வளை - நல்ல நிறம் பொருந்திய சினை கொண்ட சங்குகள், பால் மணி வீசிய - பால் போன்ற வெண்ணிறமுடைய முத்துக்களை எறிகின்ற (கடற்கரையிலுள்ள), திருச் செந்தூர் வரு - திருச் செந்திலம் பதியில் அடியார் பொருட்டு எழுந்

தருளி வருகின்ற, சேவகனே - வீரரே!, சுரர் பெருமாளே - தேவர்களால் வணங்கப்படும் பெருமையிற் சிறந்தவரே!, அனிச்சம் - அனிச்ச மலரும், கார்முகம் வீசிட மாசு அறு துவள் பஞ்சு - பஞ்சடிக்கும் வில்லினு லடிக்க கடினமாகிய குற்றமுடையவைகள் நீங்கப் பெற்ற மெல்லிய பஞ்சும், ஆன தடாகம் விடா மட அனத்தின் தூவி - அன்பு மிக்கதான தடாகத்தை விட்டு நீங்காத அழகிய (நடையுடைய) அன்னப் பறவையின் மெல்லிய இறகும், குலாவிய சிறு அடி - மிகவும் மிருதுவாக விளங்குவதால் கொண்டாடுகின்ற சிறிய பாதங்களையுடைய, மட மானார் - அழகிய மானைப் போன்ற மகளிரது, அருக்கன் போல் - சூரியனைப்போல், ஒளி வீசிய - பிரகாசிக்கின்ற, மாமரகத பைம்பூண் அணி - சிறந்த மரகத மணிகள் பதித்த பசுமை நிறம் பொருந்திய ஆபரணங்களை யணிந்துள்ள, வார் முலை மேல் - இரவிக்கையோடு கூடிய தனங்களின் மேல், முகம் அழுத்தும் பாவியை - முகத்தையும் பார்வையையும் வைத்து அழுத்திக் களிக்கின்ற பாவியும், ஆவி இடேறிட நெறி பாரா - ஆன்மாவானது உய்யும் நெறி இன்னதென்று ஆராய்ந்தறியாத, வினை சண்டாளனை - தீய காரியங்களைப் புரியும் சண்டாளனும், வீணனை - வீண் காரியங்களைப் புரிவோனும், நீள் நிதி தனைக்கண்டு - பெரிய செல்வ முடைமையைக் கண்டு அதன் பெருக்கத்தை நினைத்து அகங்காரத்தைக் கொண்ட முழு மூடனும், விடக்கு அன்பாய் நுகர் பாழனை - மாமிசத்தை அன்பாக உண்ணுகின்ற பாழனும், ஓர் மொழி பகாதே - ஒப்பற்ற மொழியான தேவரீரது சடக்கர மந்திரத்தை உச்சரிக்காமல், விகற்பம் கூறிடு - சாஸ்திர விரோதமான வார்த்தைகளையே பேசுகின்ற, மோக விகாரனை - மோகவிகாரத்தை யுடையவனும், அறத்தின் பால் ஒழுகாத மூதேவியை - தரும நெறியில் நின்று ஒழுகாத மூதேவியுமாகிய அடியேனை, விளித்து உன் பாதுகை நீ தா - தேவரீர் கருணையால் அழைத்து தங்களுடைய திருவடி ரட்சையை என் முடிமேல் சூட்ட, நான் அருள் பெறுவேனோ - அடியேன் அந்த அனுக்கிரகத்தைப் பெற மாட்டேனோ?

பொழிப்புரை.

போருக்குரிய சங்குகள் ஓவென்று ஒலித்துக்கொண்டிருக்கும் நீல நிறம் பொருந்திய பெரிய சமுத்திரத்தில் அணை கட்டி பகைவர்களுக்கு அஞ்சாத இராவணனது மணிமகுடந் தரித்துள்ள பல தலைகளும் அற்றுவிழ ஒரே ஒரு கணையை ஏவிய ரகுவீராகிய ஸ்ரீராம

பிரானது மருமகராக எழுந்தருளி யிருப்பவரே! பாற்கடலில் தோன்றிய குளிர்ந்த பிறைச் சந்திரனையும், பாம்பையும், விசாலமான தும் அலைகளையுடையதுமாகிய கங்கா நதியையும், ஆத்திமலரையும், வில்வத்தையும் தரித்துக் கொண்டுள்ள சடாமகுடத்தையுடைய சிவ பெருமானது பெருங் கருணையால் (உலகம் உய்யும் பொருட்டு) அவ தரித்த முருகப் பெருமானே! தினைப்பயிர் விளையும் செழுமையான கானகத்தில் வசிக்கும் (நம்பி முதலிய) வேடுவர்கள் (புதிதாகத் தோன்றியதால்) "இது எது " என்று திகைப்புற்று "ஐயோ! இதற்கு என் செய்வோம்" என்று கூறும்படி வேங்கை மரமாகி நின்ற வல்லபமுடைய கந்தமூர்த்தியே! வள்ளி நாயகியார் அன் புறும் கட்டழகிற் சிறந்த வேலாயுதப் பெருமானே! மலர்களுக்குள் சிறந்த தாமரை ஓடைகளிலும் உப்பரிகைகளிலும் நல்ல நிறம் பொருந்திய சினைச்சங்குகள் பால் போன்ற வெண்ணிற முத்துக் களைக் கொழிக்கும் கடற்கரையில் விளங்கும் திருச்செந்தூர் என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள வீரரே! தேவர்களுக்குள் பெருமை யிற் சிறந்தவரே! (மிகவும் மெல்லியதாகிய) அனிச்சமலரும், பஞ் சடிக்கும் வில்லாலடிக்க கடின பொருள்களாகிய குற்றம் நீங்கிய மெல்லிய பஞ்சும், அன்புடையதான தடாகத்தை நீங்காத அழகிய அன்னப்பறவையின் மெல்லிய இறகும், தமது மென்மையிலும் மிருதுவாக இருப்பதால் கொண்டாடுகின்ற சிறிய பாதங்களையுடைய அழகிய மானைப்போன்ற மகளிரது சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற சிறந்த மாகத மணிகளிழைத்த பசுமை நிறம் பொருந்திய பொன் னாபரணங்களை யணிந்துள்ள இரவிக்கையோடு கூடிய தனபாரங் களின்மீது முகத்தையும் (பார்வையையும்) ஆசைப் பெருக்கத்தால் அழுத்துகின்ற பாவியும், ஆன்மா ஈடேறுகின்ற நன்னெறியை ஆராய்ந்து பார்க்காது தீயகாரியங்களைப் புரியும் சண்டாளனும், வீண் காரியங்களைப் புரிவோனும், பெரிய செல்வ முடைமையைக் கண்டு அகங்கரிக்கும் நிர்மூடனும், மாமிசத்தை அன்பாக உண்ணுகின்ற பாழனும், தேவரீரது ஒப்பற்ற மொழியாகிய சடக்கர மந்திரத்தை அன்புடன் உச்சரிக்காமல் சாஸ்திர விரோதமான குதர்க்க வார்த் தைகளைப்பேசுகின்ற மோகவிகாரனுமாகிய அடியேனைத் தேவரீர் திரு வருட் பெருக்கமுடையவராதலால் வலிந்து அழைத்து தமது திரு வடியி லணிந்துள்ள பாதுகைகளை என் முடிமீது சூட்ட அடியேன் அந்த அனுக்கிரகத்தைப் பெறுவேனோ?

விரிவுரை

அனிச்சம் :—

அனிச்சமலர் என்பது மிகவும் மென்மையுடைத்து அது மோந்தால் வாடும். அத்துணை மெல்லியது இம்மலரின் மென்மையைப்பற்றி தெய்வப் புலவர்

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

என்றதனுல் நன்கு புலனுகின்றது.

இத்துணை மெல்லிய அனிச்சப் பூவைக் காட்டிலும், மெல்லிய பஞ்சு அன்னப்பறவையின் மெல்லிய இறகு இவைகளைக் காட்டிலும் மாதரடி மென்மை யுடைத்து.

அனிச்சமு மன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்

—திருக்குறள்.

ஆவி ஈடேறிட நெறிபாரா :—

"ஆன்மா ஈடேறும் நெறி எது? என்று ஆராய்ந்து பார்த்தல் அவசியம். அந்நெறி பக்தி நெறியே யாகும். அந்நெறியே சென்ருல் பழவினைகள் கெட்டு மலநீக்கமுற்று சிவமாந்தன்மையை எளிதில் பெறலாம்.

" பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றுர்பெறுவா ரச்சோவே"

—மணிவாசகனர்.

வினைச் சண்டாளனே :—

சண்டாளர் என்பது ஒரு தனிப்பட்ட குலமன்று; பிறப்பினுலே சண்டாள குலம் என்பது இல்லை; சண்டாளத்துவம் எவரிடத்தில் இருக்கிறதோ அவரெல்லாம் சண்டாளரே. பிறப்பினுலேயே உயர்வு தாழ்வைக்குறித்துப் பேசுவதை அறிஞர் வெறுக்கின்றனர்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்

—உத்தரவேதம்.

தொழிலின் உயர்வு தாழ்வாலேயே குலமும் உண்டாகிறது. பிராம்மண உடம்பு, க்ஷத்திரியர் உடம்பு, என்பது இல்லையாதலால்

குலம் உடம்பைப்பற்றியதல்ல; பிராம்மண உயிர், க்ஷத்திரிய உயிர் என்பதும் இல்லையாதலால் குலம் உயிரைப்பற்றியதுமல்ல; ஆதலால் தொழிலைப்பற்றியே ஏற்படுகிறது. மேற்குலத்திற் பிறந்தான் ஒருவன் இழிதொழிலைப் புரிந்தால் மேற்குலத்தான் என்று கூறலாமா? சகல ஒழுக்கங்களும் பொருந்தியுள்ளவனை இழிகுலத்தான் என்று கூறலாமா?

நாஹம் மநுஷ்யோ நசதேவயக்ஷா
நப்ராஹ்மண க்ஷத்ரிய வைஸ்ய சூத்ரா:|
நப்ரஹ்மசாரீ நக்ருஹீ வநஸ்தே
பிக்ஷுர்நசாஹம் நிஜபோத ரூபம் ||

—நிர்வாணஷ்டகம்.

(இதன் பொருள்) "நான் மனிதனல்ல; தேவனல்ல; யக்ஷனுமல்ல; பிராம்மணனல்ல; க்ஷத்திரியனல்ல; வைசியனல்ல; சூத்திரனல்ல; பிரமசாரியல்ல; கிருகஸ்தனல்ல; வானப்ரஸ்தனல்ல; சந்நியாசியுமல்ல; ஆகையால் சத்திய ஞானாநந்த சொரூபன் நான்".

மேற்போந்த திருப்புகழின் கருத்தை நீதிநூலும் வலியுறுத்துமாறு காண்க.

தூஷகஸ் ச க்ரியா சூந்யோ நிக்ருஷ்டோ தீர்க கோபந: |
சத்வார: கர்மசண்டாலே ஜாதிசண்டால உத்தம: ||

பிறரைத் தூஷிப்பவன், நித்தியகருமானுஷ்டானத்தை விட்டவன், அதிக லோபமுள்ளவன், தீர்க்க கோபமுள்ளவன், இந் நால்வரும் கர்ம (வினைச்) சண்டாளர்கள்; இவர்களைக் காட்டிலும் ஜாதி சண்டாளன் என்பவன் உத்தமன்.

பிரமஞானமுணர்ந்தவன் பிராமணன்; அழகிய தணிந்த சிந்தையுடையவன் அந்தணன்; வேதமோதுபவன் வேதியன்; இந்திரியங்களுடன்போராடி அவற்றை வென்று பொறிபுலன்களை அடக்கியாள்பவன் அரசன்; புண்ணியபாவங்களை நிறுத்து வாணிபஞ் செய்பவன் வைசியன்; புலன்களுக்கு அடிமைப்பட்டவன் சூத்திரன்; பறை வாத்தியத்தை வாசிப்பவன் பறையன்; புலாலுண்பவன் புலையன்; சண்டாளத்துவமுடையவன் சண்டாளன் எனப் பிரித்துணர்தல் வேண்டும்.

வீணை:—

கிடைத்தற்கரிய வாழ்நாளை அவமாயைகொண்டு விருதாவாகக் கழிப்பவர் வீணர் எனப்படுவர். நம்முடைய வாழ்நாளில் ஒவ்வொரு

கணமும் மிகவும் விலையுயர்ந்த மாணிக்கத்திற்கு நிகரானது. அதனை வீண் களியாடல்களில் கழித்துவிட்டால் யாக்கையும் அழிகிறது. ஆதலால் நம்முடைய காலங்களைச் சிவநெறியில் கழிக்கவேண்டும்.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரனுமங்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளி
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.

—திருஞானசம்பந்தர்.

நிதிதனைக்கண்டு ஆணவமான நிர்மூடனை:—

அழிகின்ற செல்வத்தைக்கண்டு அதன் நிலையாமையை யுணராது, செருக்குற்று மூடனாக இருத்தல்.

சிறியரே மதிகதுமிந்தச் செல்வம்வந் துற்றஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுள்ளோர் மூகராவர்
பறியணி செவியுளாரும் பயிறரு செவிடராவர்
குறிபெறு கண்ணுளாருங் குருடராய் முடிவரன்றே

—குசேலோபாக்கியானம்.

விடக்கன்பாய் நுகர் பாழனை:—

விடக்கு - மாமிசம். மோக்ஷ உலகத்திற்கு முதற்படி ஜீவகாருண்யமேயாம். சகல யாகங்களிலும் செய்யுந் தானமும், சகல தீர்த்தங்களிலுஞ் செய்யும் ஸ்னானமும், சகல தானங்களின் புண்ணியமும் அஹிம்சா தருமத்திற்குச் சமமாகமாட்டாது. அஹிம்சா தருமத்தை அனுசரித்து நடக்கிறவனுடைய தவம் குறைவற்றது. அஹிம்சா தருமத்தை அனுசரித்து நடக்கிறவன் எப்பொழுதும் யக்ஞம் செய்பவனாக எண்ணப்படுகிறான்.

ஸர்வ யஜ்ஞேஷு வா தானம் ஸர்வதீர்த்தேஷு சாலுப்தம்
ஸ வதான பலம்த்வாபி நைதத்துல்ய மஹிம்ஸயா ।
அஹிம் ஸ்ரஸ்ய தபோ(அ) க்ஷயம்
அஹிம் ஸ்ரோய ஜதே ஸதா ॥

—மஹா பாரதம், அனுசாசனிக பர்வம்.

ஓர் மொழி:—

பிரணவமந்திரம் எனவும் பொருள் கொள்ளலாம்.

விளித்துன் பாதுகை நீ தர:—

பாவியும், சண்டாளனும், வீணனும், மூடனும், பாழனும், மோகனும், மூதேவியுமாகிய அடியேனை குற்றம் நோக்கிக் கைவிடா

மல் தேவரீரது திருவருட்பெருக்கால் வலிந்து அழைத்து பாதுகை யைச் சென்னிமேற்றந்து திருவருள் புரியவேண்டும்.

தினைச்சேங்கானகவேடுவர் . . . . . கணியாகிய :—

மூவர் தேவாதிகள் தம்பிரானாகிய முருகப்பெருமான், மாமுனிவன் புணர்மானுதவுந் தனிமானாகிய வள்ளிபிராட்டியாரைத் திருமணங்கொள்வான் வேடவடிவங்கொண்டு, அப்பிராட்டியார் காக்குந் தினைவனம்போந்து, வேடர்குலக்கொடியுடன் உரைநிகழ்த்திக்கொண்டிருக்குங்காலை, வேடர்கள் சூழ நம்பிராஜன் ஆங்கு வந்தான். அது கண்:— அறுமுகப்பெருமான் பயந்தவரைப்போல வேங்கைமரமாக நின்றார். வேதங்கள் வேர்களும் அடியுமாக, சிவாகமங்கள் நடுப்பாகமும், பலவித கலைகள் கவடுகளுமாக மந்திரவடிவான மரமாயினார்.

ஆங்கது காலைதன்னி லடிமுதன் மறைகளாக
வோங்கிய நடுவணெல்லா முயர்சிவ நூலதாகப்
பாங்கமர் கவடுமுற்றும் பல்கலையாகத் தானோர்
வேங்கையி னுருவமாகி வேற்படை வீரனின்றான்.

—கந்தபுராணம்.

பெண்களை நேசிப்பவன் எத்துணை வலியுடையோனாயினும் மரம் போல் அசைவற்றுச் செயலற்று நிற்பான் என்பது அதனுடைய தத்துவம்.

தறமறவர் கோடியடிகள் கூசாது போய்வருட
காடிபுலி திரிகடியவாரான கானில்மித
துளிர்கனியி னிளமரம தேயாகிநீடியுயர் குன்றுலாவி

—(உறவின்முறை) திருப்புகழ்.

கருத்துரை.

சேதுபந்தனம் புரிந்து இராவண வதஞ்செய்த இரகுவீரரது மருகரே! மதி, நதி, பாம்பு, ஆத்தி, வில்வம் இவைகளை முடிக்குஞ் சிவமூர்த்தியின் புதல்வரே! வேடுவராஞ்ச வேங்கைமரமாகிய கந்தப் பெருமானே! வள்ளிநாயகி அன்புகொள்ளும் வேலாயுதரே! செந்திலம்பதியில் வாழும் பெருமாளே! மாதராசையால் மயங்கும் பாவியும், வினைச்சண்டாளனும், செல்வச்செருக்கு மூடிய மூடனும், புலாலுண்ணும் பாழனும், மோகவிகாரனும், அறநெறியில் ஒழுகாத மூதேவியுமாகிய அடியேனை அழைத்து தமது பாதுகையைத்தர அடியேன் அருள்பெறுவேனோ?

—

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(239-ம் பக்கத் தொடர்ச்சி.)

अहं सर्वदा दुःख भारावसन्नो
भवान्दीनवन्धु स्त्वदन्यं नयाचे ।
भवद् भक्तिरोधं सदाक्लुप्त वाधम्
ममाधिं द्रुतं नाशयोमासुतत्वम् ॥

3 3 2 4
(24) அஹம் ஸர்வதா து:க பாராவ ஸன்னோ
4 3 3 4 3
பவான் தீனபந்து ஸத்வதன்யம் நயாசே।
4 3 4 4 3 3 4
பவத் பக்தி ரோதம் ஸதா க்லுப்த பாதம்
4 3
மமாதிம் த்ருதம் நாச யோமா ஸுத! த்வம்॥

பதவுரை.

ஹே உமாஸுத!	- ஓ உமாதேவியின் புத்திரரே!
அஹம்	- நான்,
ஸர்வதா து:கபாராவஸன்ன:	- துக்கபாரத்தினால் தளர்வுற்றவன்,
பவான் தீனபந்து:	- தேவரீரோ தீனர்களுக்குப் பந்துவுமாக இருக்கிறீர்,
த்வதன்யம் நயாசே	- தேவரீரைவிட்டுப் பின் ஒருவரை நான் வேண்டேன்,
அத:	- ஆகையினால்,
பவத் பக்திரோதம்	- தேவரீரிடத்தில் பக்தியைக் கெடுக்கிறதும்,
ஸதாக்லுப்தபாதம்	- எப்போதும் துன்பத்தையே செய்வதுமான,
மம ஆதிம்	- என் மனக்கவலையை,
த்ருதம் நாசய	- விரைவில் நாசம் செய்யவேண்டும்,

பொழிப்புரை.

ஓ உமையின் புதல்வரே! அடியேன் துன்பத்தினல் தளர்வுற்றிருக்கிறவன்; தேவரீரோ என்போன்ற ஏழைகளைக் காப்பாற்றுகிறவராகவுமிருக்கிறீர்; என் துன்பத்தை ஒழிக்கும்படி பிறதெய்வங்களை வேண்டவும் நான் பிரியப்படவில்லை. ஆகையால் தேவரீரது திருவடிகளில் வைத்திருக்கும் பக்திக்குத் தடையாய் நின்று என்னை எக்காலத்தும் துன்புறுத்திவரும் கவலையைத் தீர்த்து காப்பாற்றவேண்டும்.

இதனுல் ஏழைபங்காளனுகிய முருகவேளிடம் மெய்யன்புவைத்த உத்தமர்கள் எக்காரணத்தாலும் பிறதெய்வங்களை வேண்டார் எனவும், அத்தகைய அடியார்களைக் காப்பதே முருகனது முதற்கடமையென்றும் தெரிவிக்கப்பட்டது.

अपस्मारकुष्ट क्षयार्शः प्रमेह
ज्वरोन्मादगुल्मादि रोगा महान्तः।
पिशाचाश्च सर्वे भवत्पत्र भूतिम्
विलोक्यक्षणात्दारकारे द्रवन्ते ॥

(25) அபஸ்மார குஷ்ட க்ஷயார்ச: ப்ரமேஹ
ஜ்வரோன்மாத குல்மாதி ரோகா மஹாந்த:।
பிசாசாஸ்ச ஸர்வே பவத்பத்ர பூதிம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே! த்ரவந்தே॥

பதவுரை.

ஹே தாரகாரே! - ஓ! தாரகாசுரனைக் கொன்றவரே!

மஹாந்த: - கொடியவைகளான,

அபஸ்மார குஷ்ட க்ஷயார்ச: ப்ரமேஹ ஜ்ரோன்மாத குல்மாதி ரோகாஹ: - அபஸ்மாரம் (முயல்வலி காக்கைவலி முதலியன) குஷ்டம், க்ஷயம், மூலம், பிரமேகம், ஜ்வரம், பைத்தியம், குன்மம் முதலிய நோய்களும்,

ஸர்வே பிசாசா:ச - எல்லா வகையான பேய்களும்,
பவத்பத்ரபூதிம் விலோக்ய - தேவரீருடைய பச்சிலையையும் திருநீற்றையும் பார்த்துவிட்டு,
க்ஷணாத் ஏவத்ரலந்தே - அக்கணத்திலேயே அகன்றுவிடுகின்றன.

பொழிப்புரை.

ஓ தாரகாரியே! அபஸ்மாரம் முதலிய கொடிய வியாதிகளும், அவ்வாறே எல்லா வகையான பிசாசுகளும், தேவரீருடைய பச்சிலையிலடங்கிய திருநீற்றுப் பிரசாதத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே அகன்றுவிடுகின்றன.

பச்சிலை—பன்னீர் மரத்தின் இலை; இதில் அடங்கிய திருச்செந்தூர் திருநீற்றுப் பிரசாதத்தின் பெருமை உலகமறிந்த உண்மை.

दृशि स्कन्दमूर्तिः श्रुतौ स्कन्दकीर्ति
मुखे मे पवित्रं सदा तच्चरित्रम् ।
करे तस्य कृत्यं वपुस्तस्य भृत्यम्
गुहे सन्तु लीना ममाशेष भावाः ॥

(26) த்ருசி ஸ்கந்த மூர்த்தி: ஸ்ருதௌ ஸ்கந்த மூர்த்திர்
முகே மே பவித்ரம் ஸதா தச் சரித்ரம் ।
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ் தஸ்ய ப்ருத்யம்
குஹே ஸந்து லீனா மமாசேஷ பாவா: ॥

பதவுரை.

மேத்ருசி - எனது கண்களில்,
ஸ்கந்தமூர்த்தி: - ஸ்கந்தருடைய மூர்த்தியும்,
ஸ்ருதௌ ஸ்கந்தகீர்த்தி: - காதுகளில் ஸ்கந்தருடைய கீர்த்தனங்களும்,
முகே - முகத்தில்,
ஸதா பவித்ரம் தச்சரித்ரம் - எப்போதும் பரிசுத்தமான அவரது சரித்திரமும்,
கரேதஸ்ய க்ருத்யம் - கையில் அவருடைய க்ருத்யமும் (பூஜையும்),
*வபு ஸ்தஸ்ய ப்ருத்யம் - சரீரத்தில் அவனுடைய பணிவிடையுமாக,
மம அசேஷ பாவா: குஹே லீனா: ஸந்து - குஹனிடத்தில் லயித்திருக்கட்டும்.

* தநௌ தஸ்ய ப்ருத்யம் என்றும் பாடம்.

உ

ஓம் கந்தாய நம:.

கந்தர் திருவிளையாடல்

(243-வது பக்கத் தொடர்ச்சி.)

சிவபெருமான் சிவகாமிசுந்தரியை நோக்கி, "உமையே! முன்னே நமது நெற்றிக்கண்ணில் தோன்றி சாவணப்பொய்கையில் வளரும் உன் புதல்வனை நாம் இங்கே கொண்டுவருவோம்; வா" என்று திருவாய் மலர்ந்தருளினர் அகிலாண்ட நாயகி அது கேட்டு, உவகையும் அன்புங்கொண்டெழுந்து, "எம்பெருமானே! நமது அருமந்த புதல்வனை நாம் கொண்டுவருவோம்; எழுந்தருளுக" என்றார். உடனே சிவபெருமான் எழுந்து, இமவரை தந்த எம்பிராட்டியுடன் இடபமீது ஏறியருளினர். அதுகண்ட இமையவர்கள் "நம்முடைய தீவினைகளெல்லாம் கழிந்தன" என்று உளமுவந்து, நந்திகணத்தோடு அணைந்து துதித்தார்கள். ஆலாலசுந்தார் முதலிய கணத்தவர்களும், உருத்திரர்களும் வந்து இருபக்கத்தும் நெருங்கித் துதித்தார்கள். ஞானசாரியராகிய திருநந்திதேவர் விடுப்ப, திசைமுகன், திருமால், தேவர்கோமான் முதலிய தேவர்கள் பூமாரிபெய்து திருவடிகளை

பொழிப்புரை.

எனது கண்கள் கந்தவேளைத் தரிசித்தலிலும், காதுகள் அவருடைய கீர்த்தனங்களைக் கேட்டலிலும், நாவானது அவருடைய திவ்விய சரித்திரங்களைச் சொல்வதிலும், கைகள் அவரைப் பூஜித்தலிலும், சரீரம் அவரது மற்றைப் பணிவிடைகளிலுமாக எனது எண்ணங்களும் செய்கைகளும் யாவும் கந்தப்பெருமானிடத்திலேயே ஒடுங்கியிருக்கட்டும்,

இப்பாசுரம்

"சிந்தனைநின் றனக்காக்கி நாயி னென்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி"

என்ற தமிழ்மறையை ஞாபகமூட்டுகிறது.

(தொடரும்)

வணங்கிக்கொண்டு சூழ்ந்தார்கள். பூதர்கள் நானுவித வாத்தியங்களை முழக்கினுர்கள். நான்கு வேதங்களும் பிரணவமும் பலகலைகளும் ஒலித்தன; விஞ்சையர்கள் கீதம்பாடினுர்கள்; சூரியர்கள் வெண்குடை பிடித்தார்கள்; பூதர்கள் சாமரம் வீசினுர்கள்; நூறு கோடி பூதர்கள் சூழ்ந்தார்கள்; இடபக்கொடிகள் நெருங்கிச் சென்றன; உமையம்மையாரோடு இடபமேற்கொண்ட முக்கட்பெருமான் திருக்கோயிலினின்றும் நீங்கி, கயிலைமலையைக்கடந்து, இமயமலைச் சாரலிலுள்ள சரவணப்பொய்கையை அடைந்தார். அம்மையும் அப்பரும் ஆறுமுகங்கொண்ட முருகக்கடவுளுடைய ஆடலின் தன்மையைப்பார்த்து உளம் பூரித்து திருவருள்செய்து சரவணப்பொய்கைக் கரையில் நின்றுர்கள். அத்தடாகத்தில் ஆறுதிருவுருவங்கொண்டு லாவி வீற்றிருந்தருளும் குமாரக்கடவுள் அம்மையப்பரைக்கண்டு, திருமுகமலர்ந்து திருவுளங்களித்தார். அப்பொழுது ஆலமுண்ட அண்ணல் அம்பிகையை நோக்கி, "நீ போய் உன் புதல்வனைக் கொண்டுவருவாய்" என்று பணித்தருள, பிராட்டியார் இடபத்தினின்றுமிரங்கி திருவுளத்தெழுந்த பேரன்பின் பெருக்கால் விரைந்து சென்று, சரவணப்பொய்கையில் எழுந்தருளியிருந்த தமது திருக்குமாருடைய ஆறுருவங்களையும் இரண்டு திருக்கரங்களாலும் அன்போடு எடுத்துத்தழுவி, ஆறுதிருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்ட ஒருருவமாம்வண்ணம் செய்தருளினுர். அக்குமாரசுவாமி, அம்பிகையால் ஆறுருவமும் ஒன்ருகி, கந்தர் என்னுந் திருநாமத்தைப் பெற்றுர்.

பார்வதியம்மையார் தம்மாலே தழுவப்பட்ட குமரவேளுடைய முடிதோறும் மோந்து அழகிய முருகைக்கடவுளும், அவ்வம்மையாருடைய திருமுலைகள் சுரந்து பால்சொரிந்தன. ஆதிநாயகனது திருவருளாகியும் நிருமலமாகியும் பரஞானமாகியுமுள்ள தம்முடைய இளமுலைகள் பொழிந்த ஞானப்பாலை ஓர் இரத்தினவள்ளத்திலேற்று, முருகக்கடவுளுக்கு ஊட்டினுர். ஊட்டியபின் அக்குமாரக்கடவுளைக் கொண்டுபோய், எம்பெருமான் திருமுன்னே வணங்குவிப்ப, பெருமான் தமது திருக்கரங்களினுல் எடுத்து, மார்பிலணைத்து, பெருங்கருணையோடு தமது மருங்கில் இருத்தினுர். பின்பு எல்லா வுலகங்களையும் ஈன்றருளிய பிராட்டியையும் திருக்கரத்தால் எடுத்து தமது இடப்பக்கத்தில் இருத்தியருளினுர். அம்மையாருக்கும் அப்பருக்கும் இடையில் குமாரமூர்த்தி எழுந்தருளியிருந்தார்.

ஏலவார்குழ லிறைவிக்கு மெம்பிரான் றனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞாலமேலுறு மிரவொடு பகலுக்கு நடுவாய்
மாலையானதோன் றழிவின்றி வைகுமா றேக்கும்.

இடபத்தின்மீது அரனுருக்கும் அம்பிகைக்கும் இடையே ஆறுமுகப்பெருமான் எழுந்தருளியிருத்தலைக்கண்டு, பிரமா விட்டுணு இந்திரன்முதலிய இமையவர்கள் கடல்போல் ஆரவாரித்து அணுகி, பக்கத்தும் முன்னும்பின்னுமாக நெருங்கி "சிவபெருமானுடைய நெற்றிநாட்டத்தினின்றும் தோன்றியருளிய குமாரசுவாமியே! அடியேங்கள் சூரபன்மனால் மிகவும் வருந்தினேம்; இனிச் சிறியேங்களை ஆட்கொண்டருளுக" என்று விண்ணப்பஞ்செய்து பூமாரி பொழிந்து, வணங்கி எழுந்து வாழ்த்தினார்கள்.

அப்பொழுது கார்த்திகை மகளிர்கள் சிவபெருமானைப் பேரன்போடு வணங்கி எழுந்தார்கள். கண்ணுதற்கடவுள் அவர்கள்மீது திருவருள்நோக்கஞ்செய்து, "நம்முடைய குமாரனாகிய இவன், உங்களால் வளர்க்கப்பட்டமையால், கார்த்திகேயன் என்னும் பெயரைப் பெறக்கடவன். யாவராயினும் உங்கள் நக்ஷத்திரத்திலே இவனை மெய்யன்போடு வழிபடுவாராயின், அவர் வேண்டும் வரங்களைக் கொடுத்து, முத்தியை அருளிச்செய்வேம்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

உமாதேவியார் தம்முடைய திருக்குமாரரைச்சென்று தழுவியபொழுது சொரிந்த திருமுலைப்பால் நதிபோலப் பெருகிச் சரவணப் பொய்கையிலே புகுதலும், தங்கள் தந்தையாராகிய பராசர முனிவருடைய சாபத்தினால் அப்பொய்கையுள் மீன்களாய்த் திரிந்த *ஆறு சிறுவரும் அப்பாலைப் பருகினார்கள். பருகிய உடனே மீன்வடிவம் நீங்கி முன்னைவடிவங்கொண்டு எழுந்து, சிவபெருமானை வணங்கித் துதித்தார்கள். அவர்களைச் சிவபெருமான் நோக்கி, "நீங்கள் திருப்பரங்குன்றிலே தவஞ்செய்துகொண்டிருங்கள். சிலநாளாயின பின் நம்முடைய குமாரனாகிய இவன்வந்து உங்களுக்கு அருள்செய்வான்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்ட சிறுவர்களறுவரும் மனமகிழ்ந்து சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு சென்

*பராசர குமாரர் அறுவர் பெயர் :—தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்ரபாணி, மாலி.

ளூர்கள். சிவபெருமான் கார்த்திகைமகளிர்களையும் பிரம விட்டுணு முதலிய தேவர்களையும் தங்கள் தங்கள் இடத்துக்குச் செல்லும்வண்ணம் விடைகொடுத்து, திருக்கைலாசமலையையடைந்து, முருகக்கடவுளோடும் உமாதேவியாரோடும் இடபவாகனத்தினின்றும் இரங்கி நடந்து, செம்பொன்னாலயத்திற்சென்று சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தருளினார். நவவீரர்களும் இலக்க வீரர்களும் தங்கள் தமையனாராகிய முருகக்கடவுளை நறுமலர்களாலேபூசித்து வணங்கித்துதித்து அவர் தொண்டின் வழி நின்றூர்கள்.

மகாதேவருக்கும் மலைவளர்காதலிக்கும் இடையே எழுந்தருளியிருந்த முருகக்கடவுள் தம்முடைய தம்பியர்களோடும் எழுந்து, தம் கருணையினால் திருவிளையாடல் செய்யத் திருவுளங்கொண்டருளினார். திருவடிகளிலே தண்டையும் சிலம்பும் கழலும் சதங்கையும் ஒலிக்க, திருவரையிலே கிங்கிணி இசைக்க, திருச்செவிகளிலே குண்டலமும், திருமார்பிலே மதாணியும், திருநெற்றியிலே வீரபட்டிகையும் விளங்கத் திருவிளையாடல் செய்வார்.

மன்றுதோ றுலாவுமலர் வாவிதோ றுலாவுந்
துன்றுசிறு தென்றல்தவழ் சோலைதோ றுலாவும்
என்றுமுல வாதுலவும் யாறுதோ றுலாவுங்
குன்றுதோ றுலாவுமுறை யுங்குமர வேளே.

சபைதோறும் உலாவுவார், வாவிதோறும் உலாவுவார், மந்தமாருதம் வீசும் மலர்ச்சோலைதோறும் உலாவுவார், வற்றாத ஆறுதோறும் உலாவுவார், குன்றுதோறும் உலாவுவார், குளத்தில் உலாவுவார், அந்தணர் சாலையில் உலாவுவார், சிவதலந்தோறும் உலாவுவார், கடப்பமரம் நிற்கும் இடந்தோறும் உலாவுவார், வடமொழி தென்மொழி கற்கும் கழகந்தோறும் உலாவுவார், பூமியில் உலாவுவார், திக்குகளில் உலாவுவார், கடல்களில் உலாவுவார், ஆகாயத்தில் உலாவுவார், சந்திர சூரியர் முதலிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் உள்ள இடங்களில் உலாவுவார், கந்தருவர் சித்தர் கருடர் முதலாயினோருடைய உலகங்களில் உலாவுவார், இந்திரலோகத்தில் உலாவுவார், இருடிகளுடைய உலகத்தில் உலாவுவார், பிரமலோகத்தில் உலாவுவார், நாராயணாது உலகத்தில் உலாவுவார், சத்தியலோகத்தில் உலாவுவார், சிவலோகத்தில் உலாவுவார், பிருதிவி அண்டங்களெங்கும் உலாவுவார், அப்பு அண்டங்களெங்கும் உலாவுவார், தேயு அண்டங்களெங்கும் உலாவுவார், வாயு அண்டங்களெங்கும் உலாவுவார், ஆகாய அண்டங்களெங்கும் உலாவுவார், மற்றைப் புவனங்களிலும் உலாவு

வார், ஆறு திருமுகங்களோடும் பாலவடிவத்துடன் உலாவுவார், ஒரு திருமுகத்துடன் குமாரராய்த் திரிவார், அந்தணராய்த் திரிவார், முனிவராய்த்திரிவார், வீரராய்த் திரிவார், கால்நடையாகச் செல்லுவர், குதிரைமீது செல்லுவர், யானைமீது செல்லுவர், தேர்மீது செல்லுவர், சிங்கமீது செல்லுவர், விமானமீது செல்லுவர், மேகத்தின்மீது செல்லுவர், மணியை அசைப்பர், புல்லாங்குழலை இனிமையாக ஊதுவர், கோட்டை இசைப்பர், வீணை வாசிப்பர், நானாவித வாத்தியங்களை முழக்குவர், கல்லுமுருகும்படி இசைபாடுவர், கூத்தாடுவர்.

இவ்வாறு முருகக்கடவுள் பலதிருவுருவங்கொண்டு எவ்விடத்தும் திருவிளையாடல் செய்யும்பொழுது, உலகமாதாவாகிய உமாதேவியார் அதனையறிந்து வியந்து, முக்கட்பெருமானது முளரியந்தாள்களை வணங்கிநின்று, "எம்பெருமானே! நம்முடைய குமாரன் சிறுகுழவிப்பருவத்தே செய்யும் ஆடற்றொழில் எனக்கு அதியற்புதமாக இருக்கின்றது. ஆராயுங்கால் அவனுக்கு ஒப்பாவார் பிறரில்லை. மாயையில் உமக்கு ஒப்பாவன்; அவனுடைய பெருமையை அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தார். ஞானம்பிகை இவ்வாறு அறியாதார்போல வினவுதலும், சிவபெருமான் அவரை நோக்கி, "உமையே! எல்லா உயிர்களும் அறிந்து உய்யும்பொருட்டு உன் குமாரனது இயல்பை நீ நம்மிடத்து வினவினாய்; புவனேசுவரி! அவனது இயல்பைச் கூறுவோம் கேள்: நமது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய குமாரன் கங்கையிலே கொண்டு சென்று சாவணப்பொய்கையிலே விடப்பட்டமையால் காங்கேயன் என்றும், சரவணப்பொய்கையிலே தோன்றினமையால் சரவணபவனென்றும், கார்த்திகைப்பெண்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் என்றும், உன்னாலே ஆறுருவமும் திரட்டி ஒன்றாக்கப்பட்டமையால் கந்தன் என்றும், பெயர்பெற்றான். கிரிகுமாரீ! நமக்கு அறுமுகங்களுண்டு; அவை தாமே கந்தனுக்கு முகங்களாயின; தாரகப்பிரமமாயுள்ள நமது ஆறெழுத்தும் ஒன்றாகி உன் குமாரனுடைய மந்திரமாகிய சடக்ஷரமாயிற்று. ஆதலால் அறுமுகக்கடவுள் நமது சத்தியே; அவனுக்கும் நமக்கும் வேற்றுமையில்லை. அவன் நம்மைப்போல் யாண்டும் நீக்கமறநிறைந்திருக்கிறான். பாலன் போலத் தோன்றுவன்; எல்லாவற்றையும் உணர்ந்த முற்றறிவினன். தன்னை அன்போடு வழிபடுவோர்க்குச் செல்வத்தையும் ஞானத்தையும் முத்தியையும் கொடுக்கவல்லவன்.

ஆதலி னமது சத்தி அறுமுக னவனும் யாமும்
பேதக மன்றல் நம்போற் பிரிவிலன் யாண்டு நின்றன்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.

பார்வதீ! யான் நிட்களன்; நீ அழிவிலா சத்தி; நாமிருவரும் பகுதியும் விகுதியும் போலவுஞ் சொல்லும் பொருளும் போலவும், பிரிப்பில் பொருளாய் மதிக்கவுள்ளோம். அங்ஙனம் நீ சொல்லும் யான் பொருளும் நீ சகமும் யான் பதியுமென ஆவோம். யான் (சிருட்டி திதி சங்கார திரோபவ அனுக்கிரகமெனும்) ஐந்தொழிற் கதிபனும், ஐம்முகமுடையவனுமாகிய சதாசிவன்; நீ பலவாறாக இருப்பினும் ஒருமுகமுடைய பரமேசுவரி; குமாரன் உனது சுவரூபத்தையும் எனது சுவரூபத்தையும் கொண்டுளோனாதலின் அவன் ஆறுமுகனெனப்படுகின்றனன். இவன் பிரபஞ்ச காரியார்த்தம் ஐந்தொழில்களையும் விளையாட்டாகவே புரிகின்றனன்.

சிவோஹந் நிஷ்கள: பூர்ணச் சக்திஸ்த்வ மநபாயிநீ
ப்ரக்ருதி ப்ரத்யயாகாரா வாவாம் சப்தார்த்த கௌமதௌ!
த்வஞ் சப் தோர்த்தோ ஸ்மயஹம்பத்ரோ ஜகத்த்வம் பதிஸ்ம்யஹம்
பஞ்சக்ருத்ய பரச்சாஹம் பஞ்சவக்த்ரஸ் ஸதாசிவ:!
ஏகவக்த்ராஸி பஹுதா பிந்நாபி பரமேச்வரீ!
த்வந்மயோ மந்மயோ யஸ்மாத் ஷட்வக்த்ர பரிகீர்த்தித:
பஞ்சக்ருத்ய பரோயஞ்ச ப்ரபஞ்ச ஸ்யபால்ய லீலயா ||

பிரிய நாயகி! பிராம்மணர்கட்கு (பிரமத்தைத் தியானித்திருப்பார்க்கு) அல்லது வேதங்கட்கு யாம் முக்கிய தேவதையாகலின் யாம் பிரமணியமாவோம்; நங்குமாரன் அங்ஙனம் விசேடனாகலிற் சுராசுரர்களால் நமஸ்கரிக்கத்தக்க சுப்பிரமணியனெனப்படுகின்றனன்.

ப்ராஹ்மண நாமஹந்தேவஸ் ஸுதராம் மத்ஸுத: ப்ரியே!
ஸுப்ரஹ்மண்யஸ் ஸமாக்யாதஸ் ஸுராஸுர நமஸ்க்ருத: ||

கௌரீ! இனிமேல் அவன் பிரமனை வேதத்துக்கெல்லாம் மூலமாய் நின்ற பிரணவமந்திரத்தின் பொருளை வினவி, அவன் அதனையறியாது மயங்கக்கண்டு, அவனைச் சென்னியிலே குட்டிச் சிறைப்படுத்தி, தானே உயிர்களனைத்தையும் பலநாட் படைத்துக்கொண்டிருப்பன். அதன்பின் தாரகாசுரனையும், சிங்கமுகாசுரனையும், சூரபன்மாவையும், மற்றைய அசுரர்களையும் வதைத்து, அரியயன் ஆகண்ட

3

ஓம் குஹாய நம:

கற்பு

சாவித்திரி.

(252-வது பக்கத்தொடர்ச்சி)

உத்தமகுணங்களுக்கு உறைவிடமாகிய சாவித்திரிதேவி இவ்வண்ணம் மாமன் மாமிக்கும், கணவனுக்கும் பணிவிடை செய்து கொண்டு அந்த ஆச்சிரமத்தில் வசித்திருந்தனள். அவர்களுக்குத் தவஞ்செய்துகொண்டே சிலகாலம் சென்றது. வாட்டமடைகின்றவளும், அல்லும் பகலும் நின்றுகொண்டேயிருப்பவளுமான சாவித்திரிக்கு நாரதரால் சொல்லப்பட்ட வாக்கியம் நெஞ்சத்தைவிட்டு நீங்காதிருந்துவந்தது.

லன் முதலிய அமரர்களுடைய அல்லலைநீக்கி, அவர்களுக்குப் பேருள் செய்வன். இவையெல்லாம் பின்னர் நீ காண்பாய்.

பிரியமுள்ள கல்யாணீ! புவனேசுவரீ! சகத்திடை வைகு தேவர், மனிதர், மிருகம் முதலிய உயிர்கண்மாட்டே வீரியம், செல்வம், காந்தி, கல்வி, அறிவு என்பவற்றுள் எத்துணை எத்துணை யுள்ளனவோ அவையனைத்தும் குமாரனுடைய மகிமையே என்பது இங்ஙனஞ் சுருங்கச்சொன்னேன்; விரித்து விளம்பத்துணியின் நூறு கோடி வருடகாலத்தும் முடிவு பெறாதே"

யத்ர யத்ர ஜகத்யஸ்மிந் தேவதிர்யங் நராதிஷு!
வீர்யம் ஸ்ரீர்தீ காந்திர் வித்யாஞாநாதிகம்ப்ரியே!
தத் ஸர்வ மஸ்ய கல்யாணி விபூதி ரிதி நிச்சிதிம்!
ஸம் க்ஷிப்யோக்தா விபூதிஸ்தே புத்ரஸ்ய புவனேஸ்வரி!
நசக்யம் விஸ்தரா வக்தும் வர்ஷகோடி சதைரபி ||

என்று திருவாய்மலர்ந்தருளினர். எம்பெருமாட்டியார் தமதருமைத் திருக்குமாரருடைய பெருமையைக்கேட்டுத் திருவுளமகிழ்ந்து எழுந்தருளியிருந்தார்.

(தொடரும்).

சின்னாட்களுக்குப் பின் ஒரு சமயத்தில் சத்தியவான் மரிக்க வேண்டிய காலம் வந்தது. நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிற சாவித்திரிக்கு நாட்கள் செல்லச்செல்ல, நாரதர் சொல்லை நினைந்து நினைந்து துன்பமும் பயமும் வளர்ந்துகொண்டே வந்தது. அவ்வுத் தமியானவள், நான்காவது நாள் பதி மரிக்கும் நாளென்று நன்றாக ஆலோசித்து, மூன்று நாள்களால் நிறைவேற்றத்தக்க ஒரு விரதத்தை மேற்கொண்டு இரவும் பகலும் நியமத்துடனிருந்தாள். திரயோதசியில் உபவாச ஆரம்பம்; பிரதமையில் பாரணைசெய்கிறது; இந்த விரதத்தினால் கணவனுக்கு ஆயுள் வளருகிறது. தன் மருமகளாகிய சாவித்திரி உபவாசத்துடன் விரதமிருப்பதைக் கேட்டு சத்தியவானது பிதாவாகிய தியுமத்சேனன் மிகவும் மனவருத்தமுள்ளவனாக எழுந்திருந்து, சாவித்திரியை நோக்கி இனிமையாகக் கூறுவான் "ராஜகுமாரி! உன்னால் மிகக் கடுமையான இந்தக்காரியம் தொடங்கப்பட்டிருக்கிறது; மூன்று நாள்கள் உணவில்லாமலிருப்பதென்பது ஒருவராலும் அனுஷ்டிக்க முடியாதது" என்றான். சாவித்திரி "பிதாவே! நீங்கள் மனவருத்தப்படவேண்டாம்; நான் விரதத்தை இனிது முடிப்பேன்; காரியம் நிறைவேறுவதற்கு விடா முயற்சியே காரணம்" என்றாள். தியுமத்சேனன் "அம்மா! நான் 'விரதத்தை விட்டுவிடு' என்று சொல்வதற்கு எவ்விதத்தாலும் சக்தியுள்ளவனல்லேன்; என்னைப்போன்றவன் 'விரதத்தை முடிவுபெறச் செய்' என்கிற பொருத்தமான வசனத்தைச் சொல்லவேண்டும்" என்று சொன்னான்.

பெரிய மனமுள்ள தியுமத்சேனன் இவ்வண்ணமுரைத்துவிட்டுப் பேசாமலிருந்தான். நிற்கின்ற சாவித்திரியானவள் கட்டையானவள்போலக் காணப்பட்டாள். கணவன் மரணம் நாளை நேர்வதாக இருக்கையில், துக்கத்தையுடையவளும் நின்றுகொண்டே இருப்பவளுமான சாவித்திரிக்கு அந்த இரவானது மிக்க வருத்தத்துடன் சென்றது. கீர்த்தியுள்ளவளான சாவித்திரி நீராடி தூய்மையாக இருந்துகொண்டு "நாரதமுனிவரால் குறிப்பிடப்பட்ட அந்தக் கணவனது மரணதினம் இன்று" என்று நிச்சயித்து, ஜ்வலிக்கின்ற அக்கினியில் ஓமஞ்செய்து, சூரியன் உதித்து நான்குமுழ உயரம் மேலே வந்தவுடன் காலைக்கடன்களைச் செய்து விரதத்தை முடித்து, பிறகு வயதுமுதிர்ந்தவர்களான எல்லா அந்தணர்களையும், மாமியாரையும், மாமனாரையும் முறையேவணங்கி, இருகாங்களையும் குவித்துக்கொண்டு

நியமத்துடன் நின்றாள். தபோவனத்தில் வசிக்கின்ற எல்லாத்தவசிகளும் சாவித்திரியின்பொருட்டு ஸௌமங்கல்யத்தைக் கொடுக்கக் கூடியவையும் இதமானவையும் மங்களகரமானவையுமாகிய ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். தியானயோகத்தில் பற்றுள்ளவளும் தவமுள்ளவளுமான சாவித்திரிதேவி, "மனத்தினால் இவ்வண்ணம் ஆகட்டும்" என்று அந்த ஆசீர்வசனங்களை ஏற்றுக்கொண்டாள், மகிணனுடைய மரண சமயம் நெருங்கிவருவதால் நாரதர் வசனத்தை எண்ணி எண்ணி ஏங்கி துன்பவாரிதியில் வீழ்ந்து துடித்துக்கொண்டிருந்தாள். பிறகு, தனியிடத்திலிருக்கிற அவளை மாமியார் மாமனார்களிருவரும் அழைத்து, "விரதம் எப்படி உபதேசிக்கப்பட்டதோ அப்படியே அது உன்னால் நிறைவேற்றப்பட்டது; உணவுகொள்ளும் சமயம் வந்துவிட்டது; அம்மா! அடுத்துச் செய்யவேண்டியதைச் செய்" என்று அன்புடன் சொன்னார்கள். சாவித்திரி "சூரியன் அஸ்தமயத்தை அடைந்தபின் விருப்பம் நிறைவேற்றப்பட்ட நான் உணவு கொள்வேன்; இது என் மனத்திலுள்ள எண்ணம்; இப்படி சபதஞ்செய்திருக்கிறேன்" என்றாள். இவ்வாறு சாவித்திரி உணவு செய்யும் விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே; சத்தியவான் தோளில் கோடாலியை வைத்துக்கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான்.

சாவித்திரி கணவனைக்கண்டு, 'நீர் ஒருவராகச் செல்லலாகாது; நான் உம்மோடு கூட வருவேன்; ஏனெனில் உம்மைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டேன்" என்றாள். சத்தியவான் "கண்மணி! நீ இதற்கு முன் காட்டில் சென்றதில்லை; வழியுந்துன்பமானது; விரதத்தாலும் உபவாசத்தாலும் இளைத்தவளான நீ எவ்வாறு நடப்பாய்?" என்றான். சாவித்திரி! நாயக! உபவாசத்தால் எனக்கு வாட்டமுமில்லை; களைப்புமில்லை; காட்டுக்கு வருவதில் விருப்பமுள்ள என்னை நீர் எவ்வகையாலும் தடுக்கலாகாது" என்றாள். சத்தியவான் "பெண்ணே! உனக்கு வருவதில் விருப்பமிருந்தால் உன் விருப்பப்படி செய்வேன்; என்னுடைய பெற்றோரிடம் விடைபெற்றுக்கொள்; இந்த தோஷம் என்னை அணுகாது" என்று சொன்னான்.

பெரிய விரதமுள்ள அந்த சாவித்திரி, மாமனாரையும் மாமியாரையும் வணங்கி, இதோ என் கணவன் பழங்களைக் கொண்டுவருவதற்காகப் பெருங் காட்டுக்குச் செல்லுகிறார்; அவரோடு போக

எனக்கு நீங்கள் அனுமதி கொடுக்கவேண்டும்; இப்போது அவரைப் பிரிந்திருத்தல் தகாது; உடன் செல்ல விரும்புகிறேன்; மாதா பிதாக்களுக்கு உணவுதேடப் புறப்படுவதால் இவரைத் தடுக்க முடியவில்லை; வேறு காரியமாக வனத்துக்குப் புறப்பட்டால் தடுக்கலாம்; நான் தங்களுக்கு மருகியாகவந்து ஒரு வருடகாலம் ஆகிவிட்டது; நான் இந்த ஆச்சிரமத்தைவிட்டு இதுவரையிலும் வெளியிற் சென்றதில்லை; மேலும் பூத்திருக்கிற காட்டைக் காண்பதற்கு மிகவும் ஆசையிருக்கிறது" என்றாள். தியுமத்சேனன் "இந்த சாவித்திரியானவள், அவள் பிதாவினால் எனக்கு மருமகளாகக் கொடுக்கப்பட்ட காலமுதல் இதுவரையில், தனக்கென ஒன்றையும் பிரார்த்தித்ததாக எனக்கு நினைவில்லை; ஆதலால் இவ்வுத்தமி விரும்பினவண்ணம் அடையட்டும்; அம்மா! சத்தியவானுடன் செல்லுதி; அவனுடன் சுகமே திரும்பிவருவாய்" என்று வாழ்த்தி விடைகொடுத்தான்.

மாமி மாமன்களிடத்தில் விடைபெற்ற அம்மாதரசி துயரப்படுகின்ற மனத்துடன் சிரிப்பவள்போலப் பதியுடன் சென்றாள். விசாலமான கண்களுள்ள அந்த சாவித்திரி, எங்கும் அழகாயிருப்பவையும் மயில்கள் நிறைந்துள்ளதுமான காடுகளைக்கண்டாள். சத்தியவான் சாவித்திரியைப்பார்த்து, "பரிசுத்தமாக ஓடுகின்ற நதிகளையும், பூத்திருக்கிற சிறந்த மரங்களையும் பார்" என்று இனிய சொல்லைச் சொன்னான். குற்றமற்ற சாவித்திரி ஒவ்வொருகணமும் கணவனை நன்கு கவனித்துப் பார்த்துவந்தாள். குறித்தகாலம் வந்தவுடன் நாரதர் வசனத்தை நினைந்து கணவனை மாண்டவனாகவே எண்ணினாள். அவள் உள்ளத்தை இரண்டுபோலச் செய்துகொண்டு, அந்தக்காலத்தின்மீது ஒரு எண்ணமும், கணவனைக் கவனிப்பதில் ஒரு எண்ணமுமுடையவளாக மெல்ல நடந்து சென்றாள்.

மிகு ஆற்றலுடைய சத்தியவான் மனைவியுடன் பழங்களைப் பறித்துக் கூடையை நிரப்பினான்; பிறகு கட்டைகளைப் பிளந்தான். கட்டையைப் பிளக்கின்ற அவனுக்கு வேர்வையுண்டாயிற்று; அதனால் அவனுடைய தலையில் வலியுண்டாயிற்று; பொறுக்கமுடியாத துன்பத்துடன் அந்த உத்தமன் அன்புடைய மனைவியை அணுகி "இந்தக் கட்டையைப் பிளந்ததனால் எனக்குத் தலைவலியுண்டாயிற்று; சாவித்திரியே! அங்கங்கள் சோர்வடைகின்றன; இதயந் துடிக்கிறது; என் நிலைமை தவறுகிறது; என் தலை சூலத்தாற் குத்துவதுபோலிருக்கிறது; திசைகளனைத்தும் சுற்றுகின்றன; என்னுடைய

மனமானது சக்கரத்தில் ஏறியிருக்கிறது; கல்யாணி! ஆதலால் தூங்குவதற்கு விரும்புகிறேன்; எனக்கு நிற்கச் சக்தியில்லை" என்றான். உள்ளம் நடுக்கமுற்ற சாவித்திரி கணவன் அருகில் வந்து மடியில் அவனுடைய தலையை வைக்கும்படி செய்து பூமியில் உட்கார்ந்தாள். பிறகு, தவமுள்ள அம்மங்கை நாரதருடைய வசனத்தை ஆலோசிக்கின்றவளாக அந்த நாளையும் அந்த முகூர்த்தத்தையும் அந்தக்கணத்தையும் நினைத்தாள்; "ஆ கஷ்டம்! அந்தக்காலம் இதோ வந்துவிட்டதே" என்று பெருங்கவலையுற்று பரிதவித்தாள்; சிறிது நேரத்திற்குப்பின் சிவந்த ஆடையை உடுத்தவனும், மகுடந்தரித்தவனும், நல்ல தேகமுள்ளவனும், சூரியனுக்கொப்பான ஒளியுள்ளவனும், கருமை நிறமுள்ளவனும், சிவந்த கண்களையுடையவனும், பாசத்தைக் கையில் வைத்திருப்பவனும், பயத்தை உண்டுபண்ணுகிறவனுமான ஒரு புருஷன் சத்தியவானுடைய பக்கத்தில் அவனையே உற்றுப்பார்த்துக் கொண்டு நிற்பதைக்கண்டாள்.

சாவித்திரிதேவி, அவனைக்கண்டு திடுக்கிட்டு உடனே எழுந்திருந்து கணவனுடைய தலையை மெல்லக் கீழே வைத்துவிட்டு, கை குவித்து உள்ளம் நடுங்கி, நாக்குழறி, "உம்மைத் தேவரென்று அறிகின்றேன்; இந்தச் சரீரமானது மானிடர்க்குரியதாயில்லை; தேவேசரே! உம்மை அறிய விரும்புகிறேன்; சொல்லும்; நீர் யார்? எதைச் செய்ய விரும்புகிறீர்? என்று வினவினாள். இயமன், "சாவித்திரி! நீ பதிவிரதையாயிருக்கிறாய், அப்படியே தவமுடையவளுமாயிருக்கிறாய், அதனால் உன்னோடு பேசுகிறேன்; கல்யாணி! நீ என்னை இயமன் என்று அறி; உன்னுடைய கணவனும் இராஜகுமாரனுமான இந்த சத்தியவான் ஆயுள் முடிந்தவனாக இருக்கிறான்; நான் அவனைப் பாசத்தால் கட்டிக்கொண்டுபோவேன்; இதனை நான் செய்ய விரும்புகிறேனென்று நீ அறிவாயாக" என்றான்,

சாவித்திரி, "பகவானே! மனிதர்களைக் கொண்டுபோவதற்கு உம்முடைய தூதர்களன்றோ வருவார்களென்று கேட்டிருக்கிறேன், பிரபுவே! அவ்வாறிருக்க, யாது காரணம்பற்றி நீரே நேரில்வந்திருக்கிறீர்" என்று வினவினாள். அறக்கடவுள் சாவித்திரிக்குப் பிரியத்தைச் செய்யும்பொருட்டு அவளை நோக்கித் தன் எண்ணம் முழுவதும் உள்ளபடி சொல்லத்தொடங்கினான். "இவன் தருமத்தோடு கூடினவன்; நல்ல உருவமுள்ளவன்; குணக்கடல்; நல்லொழுக்க

முடையவன்; என்னுடைய தூதர்களால் கொண்டுபோகத்தகாதவன்; ஆதலால் நானே நேரில் வந்தேன்" என்று சொன்னான். பிறகு, கூற்றுவன் சத்தியவானுடைய உடம்பிலிருந்து பாசத்தாற் கட்டப் பட்டவனும், தனக்கு வசப்பட்டவனும், ஒரு கட்டைவிரலளவுள்ளவனுமான புருஷனை வலிந்து இழுத்தான். உயிர் வாங்கப்பெற்றதும் உயிர்ப்பு நீங்கியதும் ஒளி கெட்டதும் அசைவற்றதுமாகிய அந்த உடல் விரும்பத்தகாத தோற்றமுள்ளதாயிற்று. யமனோ அவனது உயிரைப்பற்றிக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்றான். மகா பதிவிரதையாகிய சாவித்திரி துக்கத்தால் துடிதுடித்து கணவனுடைய உடலை மறைத்துவைத்துவிட்டு அறக்கடவுளையே பின்தொடர்ந்து சென்றாள். இயமன் அம்மா! சாவித்திரி! திரும்பிச்செல்; அவனுக்குச்செய்யவேண்டிய பிரேத கருமங்களைச் செய்வாயாக; உனக்கும் உன் கணவனுக்கும் ஏற்பட்ட சம்பந்தம் நீங்கியது; நீ வரத்தக்க வரையில் வந்துவிட்டாய்" என்றான்.

சாவித்திரி, "எந்த இடத்திற்கு என் பதி கொண்டுபோகப்படுகிறாரோ, அல்லது தாம் எங்கு போகிறீரோ, அந்த இடத்தில் நானும் செல்லவேண்டும்; இதுதான் நிலைபெற்ற தருமம்; தவத்தினாலும் குருபக்தியினாலும் பதிபக்தியினாலும் விரதத்தாலும் உம்முடைய அனுக்கிரகத்தாலும் நான் வருவது தடுக்கப்படவில்லை; தத்துவார்த்தத்தைக் கண்டறிந்த பண்டிதர்கள் நேயர்கள் நேயத்தை ஏழுபதங்களால் அடையத்தக்கதென்று சொல்லுகிறார்கள்; ஆகையால் நட்பை முன்னிட்டு ஒரு விஷயத்தைச் சொல்வேன்: அதனைக் கேட். பீராக இந்திரியங்களை ஜயிக்காதவர்கள், வனத்தில் கிருகஸ்தர்களுக்கும் வானப்பிரஸ்தர்களுக்குமுரிய வைதிக தருமத்தையும், பிரமசாரிகளுக்குரிய குருகுலவாசத்தையும், சர்வசங்கபரித்யாகரூபமான சன்யாசத்தையும் அனுஷ்டிக்கிறதில்லை; ஆத்மஞானத்திற்காகத் தருமத்தைச் செய்யவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்; ஆகையால் சாதுக்கள் தருமத்தை முதன்மையாகக் கூறுகிறார்கள் சாதுக்களுக்குச் சம்மதமான ஓர் ஆச்சிரமதருமத்தால் எல்லாரும் அந்த ஞானமார்க்கத்தை அடைகிறார்கள்; ஆகையால் சாதுக்கள் ஆத்மஞானத்திற்கு கிருகஸ்த வானப்ரஸ்த தருமத்தை பிரதானமாகச் சொல்லுகிறார்கள். நான் மேலே சொல்லப்பட்ட இரண்டாவதான நைஷ்டிக பிரமச்சரியத்தையும் மூன்றாவதான சன்யாசத்தையும் விரும்பவில்லை" என்றாள். இயமன், "புகழுள்ளவளே! நீ

திரும்பு, உதாத்த முதலிய ஸ்வரங்களோடு கூடின உன்னுடைய இந்த வாக்கினால் மகிழ்ச்சியுற்றிருக்கிறேன்; இச்சமயத்தில் இவனுயிரைத்தவிர வேண்டிய வரத்தைக்கேள்; இகழப்படாதவளே! எல்லா வரங்களையும் உனக்குக் கொடுக்கிறேன்" என்றான்.

சாவித்திரி, "தருமராஜரே! என்னுடைய மாமனார் தம்முடைய இராஜ்யத்தை இழந்து, கண்களையுமிழந்து காட்டில் துன்புற்றிருக்கிறார்; அந்த அரசர் உம்முடையதிருவருளால் கண்களைப்பெற்று நல்ல பலசாலியாய் சூரியனுக்கும் அக்கினிக்கும் ஒப்பானவராக விளங்க வேண்டும்" என்று வேண்டினாள். இயமன், "அம்மா! நான் உனக்கு அந்த வரத்தைக் கொடுக்கிறேன்; உன்னால் சொல்லப்பட்டது அப்படியே ஆகும்; உன்னிடத்தில் வாட்டத்தைக் காண்கிறேன் திரும்பிச் செல். உனக்கு சிரமம் வேண்டாம்" என்றான்

சாவித்திரி, "கணவனுடைய சமீபத்தில் எனக்கு சிரமது எது? பதியிருக்குமிடமே எனக்கு நிலையான கதி; எந்த இடத்திற்கு என் பதியைக்கொண்டு போவீரோ அந்த இடமே எனக்குக் கதி, தேவநாதரே! மீண்டும் என்னுடைய வசனத்தை நீர் அறிந்துகொள்ளும். சாதுக்களுடன் ஒருதரம் சேர்க்கையும் சிறந்ததென்று விரும்பப்படுகின்றது; சிநேகத்தையோ அதனைவிடச் சிறந்ததென்று சொல்லுகிறார்கள். மேன்மக்களுடைய நட்பானது வீணாகாது; ஆகையால் சாதுக்களுடைய கூட்டத்திலேயே வசிக்கவேண்டும்" என்றாள். இயமன், "பெண்ணே! உன்னால் சொல்லப்பட்ட வசனமானது மனத்துக்கு அநுகூலமானது; புலவர்களுக்கு அறிவை வளர்ப்பது; நன்மைக்கு ஆதாரமாக இருக்கிறது; மறுபடியும் இந்த சத்தியவானுடைய உயிரைத்தவிர வேறான இரண்டாவது வரத்தைக்கேள்" என்றான்.

சாவித்திரி, "தேவசிரேட்டரே! முற்காலத்தில் பகைவரால் கவரப்பட்டதும் தம்முடையதுமான இராஜ்யத்தை சிறந்த அறிவுடையவரும் அரசருமான அந்த என் மாமனார் அடையவேண்டும்; என்னுடைய மாமனார் சுவதருமத்துடன் இராஜ்யபரிபாலனம் செய்ய வேண்டும். இரண்டாவதான இந்த வரத்தை உம்மிடத்திலிருந்து வரிக்கிறேன்" என்றாள். இயமன், "இராஜகுமாரி! தியுமத்சேன மகாராஜன் தன்னுடைய இராஜ்யத்தை அடைவான்; தன்னுடைய தருமத்தினின்றும் தவறமாட்டான்; திரும்பிச் செல்; உனக்கு சிரமம் வேண்டாம்" என்றான்.

———

(தொடரும்)

உ

கார்த்திகேயன் துணை.

வீட்டு நெறி

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்றுவி டற்கு"

பொய்யா மொழியாகிய நாயனாருளிய மேற்படி குறட்பா பெரும்பாலோரறிந்ததே. இது மிகச் சிறிய வாக்கிய மெனினும், இதில் அம்மகான் அடக்கியுள்ள பொருள் சொல்லொணாப் பெருமை யுடையது. நாயனார் குறளில் முப்பாலே கூறினார் என்று கூறப்படினும், இதில் மோக்ஷமார்க்கத்தைச் சுருக்கியருளினாரெனலாம். அதை நம் சிற்றறிவிற் கெட்டிய அளவு சுருக்கமாய்க் கூறுவாம்.

"பற்றற்றான் பற்றினைப் பற்றுக, அப்பற்றைப் பற்று விடற்குப் பற்றுக" என்பது அந்வயம்.

பற்றற்றான் பற்றினை—எல்லா வஸ்துக்களையும் பற்றி நின்றும் ஒரு பற்றுமில்லாத இறைவனருளிய வீட்டு நெறியை.

பற்றுக—இதுவே நன்னெறி யென்று மனத்துட் கொள்க.

அப்பற்றை— (அவ்வாறு மனத்துட் கொண்ட) அதன்கணுபாயத்தை.

பற்றுக—மனத்தாற் செய்க.

பற்று விடற்கு—அநாதியாய் வந்த உடம்பிற் பற்றினை விடுவதற்கு.

அதாவது—"எல்லா வஸ்துக்களையும்பற்றி நின்றும் ஒரு பற்றுமில்லாத இறைவனருளிய வீட்டு நெறியை இதுவே நன்னெறியென்று மனதுட்கொண்டு, அதன்கண் கூறியுள்ள தியானுதியுபாயங்களை மனத்தால் செய்க. இப்படிச் செய்வது அநாதியாக உன்னைப் பற்றியுள்ள உடம்பின்பற்று விடுவதற்காக" என்று பரிமேலழகர் உரையருளியுள்ளார். இக்குறள் நமது பற்றை யொழித்து நாம் வீட்டையும் நெறியைக் கூறுகிறது.

இதனால் நாம் அறியக் கிடப்பது—பகலான் ஆகாயம்போல் எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறம்புமாக நிறைந்து நின்றாலும்

எதிலும் த்ாக்கற்றவர். நாம் நம்மைப் பற்றியுள்ள பற்றுக்களொழி வதற்காக அத்தகைய இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டும். இதற்கு மர்க்கட நியாயம் என்று கூறுவர். மர்க்கடம் என்றால் வானரம். வானரம் தன் தாயைப்பற்றிக்கொண்டு தாய் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அந்தரத்தில் தாவும்போதும், மரத்திலேறும்போதும், பாய்ந்தோடும்போதும் விடாமல் பற்றிக்கொண்டேயிருக்கும். நாம் பகவானை யவ்வாறு பற்றுவது எவ்விதம்? பகவான் பக்திவலையிற் படுவோன் என்று மணிவாசகப்பெருமானாதிய பல ஆன்றோர் கூறியுளர். ஆதலின் பக்தியாலேயே அவனைப் பற்ற வேண்டும். ஒரு பொருளை நாம் பற்றிக்கொண்டோமென்றால் அப்பொருளும் நாமும் இரண்டு பொருள்களாகப் பிரியப்பட்டு நிற்காமல் ஏகமாய் ஒரே பொருளாக ஆகிவிட்டிருக்கவேண்டும். வேறு வேறாயிருக்கிறவரையில் நாம் ஆண்டவனைப் பற்றியவர்களல்ல. அவரைப் பற்றுவதற்கு முன்னே அவர் இருக்குமிடம் தெரியவேண்டும். ஆண்டவன் எங்கிருக்கிறார் எனின், அவர் எங்கும் சர்வவியாபியாயுள்ளவர். ஆகையால் நமது உள்ளத்திலேயே யுளர். அவரையன்றி நாமில்லை. கடவுள் நமக்கன்னியம் என்று நாம் கருதும் வரையில் கடவுள் நமக்கு வெகுதூரத்தி லிருக்கிறார். ஆகையால் அவரை யெங்கும் தேடிச் செல்லவேண்டிய கஷ்டமில்லை. அவ்வாறு உள்ளத்திலுள்ளவரை யெவ்வாறு பற்றலாம்?

முதலாவது அவரை யறிந்தாலன்றிப் பற்றமுடியாது. ஏனெனில் அவர் சடப்பொருளல்ல; சிச்சொரூபி யாதலின் அறிவாலேயே யவரைப்பற்றவேண்டும். இதனால் அவரை யறிவதே பற்றுதலாகும். எப்படி ஆண்டவனையறிவது? ஆண்டவனை யுள்ளபடி யறியவேண்டுமாயின், ஆரம்பத்தில் எந்தவழி சென்றாலும், கடைசியில் ஒருவழி இருக்கிறது. அவ்வழியாய் அவரை எவரும், யாராயினும் சரி, அறியலாகும். அதாவது, தன்னையறிந்தவனுக்கு ஆண்டவன் பற்றுதவிர வேறு பற்றிராது. ஏனெனின் தன் உண்மையை யறிந்ததும் தேக முதல் நாம ரூபத் தோற்றமாகிய யாவும் அநர்தசட துக்கமென்றும், யாவும் பரமான சொரூபமேயென்றும், தெரிந்துவிட, ஆன்மா பரமான்மாவோடு அத்துவிதமடையும்.

"தன்னையறிந்தாற் றலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே"

என்று தாயுமானவர் கூறியருளினர்.

தன்னையறிய மனம் ஒடுங்கவேண்டும். சகுண உபாசனையால் மனதை யடக்கவேண்டும். இவ்வாறு ஆண்டவனை ஏன் பற்றவேண்டு மெனின், நமது அந்திப்பற்று ஒழிவதற்காக. நமக்கென்ன பற்றிருக் கிறது? நமக்குள்ள பற்று அகப்பற்று புறப்பற்று என்று இருவித முண்டு. "நான், எனது" என்றும் அவற்றைக் கூறலாம்.

1. அகப்பற்று—நான் என்னும் அகங்காரமே அகப்பற்று. அது தேகத்தையே தான் என்றபிமானிப்பது.

2. புறப்பற்று:—தேகத்திற்குப் புறம்பாகிய தாரம், புத்திரர், மனை, பொன், மாடு முதலியவைகள் என்னுடையவை என்று அபி மானித்தல்.

இவற்றில் அகப்பற்றே புறப்பற்றிற்குக் காரணம். அகப்பற்று அஞ்ஞானத்தாலுண்டாயிற்று. தன் சுய சொரூபத்தை மறந்ததே அஞ்ஞானம். ஆதலின் ஆன்மாவாகிய தன் சுய சொரூபத்தைத் தரிசித்தாலே அகப்பற்று ஒழியும். அப்போது ஆன்வாவையன்றி மற்ற நாமரூபத்தோற்ற மனைத்தும் சடமாகிய அநித்தியப்பொருள் களே யென் றுணர்வதால் இச்சையொழியப் புறப்பற்றும் ஒழியும். இக்குறட்பாவால் இன்னொரு விசேஷம் நாம் அறியவேண்டியிருக் கிறது. "உன்பற்றொழிய ஈசனைப் பற்று" என்று கூறியிருக்கிற தேயன்றி "ஈசனைப்பற்ற உன்பற்றை விடு" என்று கூறியிருக்க வில்லை யென்பது கவனிக்கத்தக்கது.

சிலர் "இல்லறத்தில் பெண்சாதி பிள்ளைகளோடு கூடவிருந்தால் ஞானத்திற்கு எங்கே முயல்வது, யாவும் விட்டுவிட்டுச் சந்நியாசம் பெற்றாலன்றோ ஞானம் வரும்" என்று கூறிக்கொண்டு ஒன்றையும் விடமுடியாமலும் ஜன்மசாபல்யத்திற்கு சற்றும் முயலாமலும் அரி திற் கிடைத்த இவ்வுத்தம ஜன்மத்தை வீணாக்கிவிடுகிறார்கள். மனம் ஒரு பற்றைச் சுலபத்தில் விடாது வெளிப்பற்றாகிய பெண்டு பிள்ளை யாதிகளை விட்டுவிட்டுக் கானகம் சென்றிருந்தாலும் மனதின்கண் ணுள்ள பற்று ஒழியாதவரையில் அவன் சந்நியாசம் ஒரு பயனும் அளிக்காது. ஞானம் உதயமாயின் அந்த அநுபவம் முதிர முதிர எல்லாப் பற்றுகளும் தன்னையறியாமலே (நித்திரை வந்தவன் கையி லுள்ள பொருள் அவனை யறியாது தானே நழுவி விடுவதுபோல்) ஒழிந்துபோம்.

அகப்பற்றொழிந்தவன் இல்லறத்தி லிருந்தபோதிலும் அவன் ஞானியாவான். கர்மம் அவனையணுகாது. ஒரு செடியை வேரோடு

பிடுங்கிவிட்டுப் பிறகு அதை மண்ணிற் சொருகிவைத்தால், அது கொஞ்சகாலம்வரை பார்ப்பவருக்குப் பச்சைச்செடிபோல் காணப் படினும் சீக்கிரத்தில் உலர்ந்தழியும். இதைப்போலவே அகப்பற் றெழிந்தோன் பார்வைக்கு வெளிப்பற்றுகளை உடையான்போல் காணப்படினும் சொல்பகாலத்தில் அவனது சகலபற்றுகளும்ஒழிந்து போம்.

புறப்பற்றைமட்டும் விட்டுவிட்டு ஒருவன் அடவியிற் சென்றி ருந்தாலும் அகப்பற்றொழியாதவரையில் அவன் பற்றற்றவனாகான். அவன் மனம், இல்லறத்தில் 'உலகபோகங்களை யனுபவித்துக்கொண் டிருக்கிறவனுடைய மனதைவிட அதிகமாக உலகபோகங்களை நாடும். ஒரு மாதத்தின் கிளைகளைமட்டும் வெட்டிவிட்டால் அது பட்டமரம் போல் தோன்றினும் கொஞ்சக்காலத்திற்குள் துளிர்த்துத்தழைத்து முன்னிருந்தபடியே அகன்ற விருக்ஷமாய்விடும். அதைப்போலவே புறப்பற்றைமட்டும் விட்டவன் சற்றுத்தவறின் இல்லறத்தானிலும் மிக்கத் தாழ்ந்த நிலையடைவான்.

ஆதலின் ஞானமடைய முயல்வோன் ஆரம்பத்திலேயே இதை விடவேண்டும் அதை விடவேண்டும் என்னும் கவலை கொள்ளவே வேண்டாம். அடையவேண்டியதை யடைய முயற்சித்தால் விட வேண்டியது தானே விட்டுப்போம்- அதற்காகவே பற்றுவிடற்கு 'பற்றற்றவனைப் பற்றிக்கொள்' என்றுரைக்கப்பட்டது.

நாம் அப்பரம்பொருளை யறியவே முயலவேண்டும். அதை யறிந்து பற்றின், அதாவது அந்த நிலையினிற்பின் வினையொழியச் சகல பற்றுக்களும் தாமே நீங்கும்.

மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் ஈசுவரனிடம் பக்தி செலுத்தி யவனருளைப் பெற முயலவேண்டும். இன்றேல் மாயை யாகிய அஞ்ஞானமென்னுந் திரையை நீக்கி ஆன்மாவை யறிய முடி யாது. பூரணமான பக்தி செலுத்துவது அரிதாதலின் நமது முயற் யும் வேண்டும். அதாவது பக்தியும் சாதனையும் வேண்டும். இதுவே மனிதஜென்மம்பெற்றதா லடையவேண்டிய பலனையடையும் மார்க்க மாகும்.

கந்தன்.

ஓம் குஹாய நம:

குரு சிஷ்ய லக்ஷணம்

(256-வது பக்கம் தொடர்ச்சி)

சனந்தனருடைய மாதாபிதாக்கள் சனந்தனரைத் திருமணம் முடித்துக்கொள்ளும்படி வேண்டினார்கள். சனந்தனானவர் தாய் தந்தையர் மலரடிதொழுது இரு முதுகுரவர்களையும் நோக்கி, "அன்புடையீர்! அடியேனை இந்தப் பந்தத்தில் வீழ்த்திக் கரைகாணாமல் தவிக்கும்படி விடவேண்டாம். அடியேன் சற்குருவை அடுத்து ஞானோபதேசம் பெற்று மோக்ஷமென்னும் கரை சேருவதற்கு ஆசைப்படுகிறேன்; ஆதலின் விடைதருவீர்" என்றனர். தாய் தந்தையிருவரும் சனந்தனரைப்பார்த்து "என் குலமணிவிளக்கே இளவேனிற்காலத்தில் இலையுதிர்காலம்போல் நின்மனம் துறவை நாடியது. பெரியோர்களும் நீ உலகையெலாம் ஒளிபெறப்புரப்பாயென்று மொழிந்தார்கள்; ஆயினும் சிறிதுகாலம் இல்வாழ்க்கையைப்புரிந்து செல்லுதி" என்றனர். சனந்தனர் "தாய் தந்தையீர்! நேற்றிருந்தார் இன்று வெந்து நீறானார் என்ற இவ்வுலகத்தில் சிறிதுகாலம் இருப்போமென்பது என்னநிச்சயம்? ஆகவே அடியேனைத்தடுக்காமல் உத்தரவு தருவீர்க"ளென்றனர். அவர்கள் குழந்தையின் பிடிவாதத்தைக்கண்டு ஒன்றுங்கூற முடியாமல், "யாங்கள் விரும்பிய கனியே! உனதுளத்தின்படியே நடப்பா" யென்று உரைத்தார்கள். சனந்தனர் பெற்றோர்களின் ஆசியைப்பெற்று "கள்ளக்காதலனிடத்தன்பு கலந்துவைத்தொழுகும் உள்ளக் காரிகையைப் போல்" குருநாட்டங்கொண்டு குருவையடையும் நாள் எதுவோ? என்று ஏக்கமேலிட்டவராய், குருநாதனைத் தேடிக்கொண்டு காசிக்கு வந்தார். அவண் வாசஞ்செய்யும் ஸ்ரீ ஆசார்யார் அவர்களைக் கண்ணுற்றனர். 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்ற வாக்கின்படி இவர் முகத்தில் பிரம்மதேஜஸ் விளங்குகிறது. வாரிஜம்போல் மலர்ந்த முகமும் கருணையலையெறிந்தொழுகும் கண்ணும் அல்லனவற்றை அகற்றும் துணிபுடைய சிந்தையுமுடைய இப்பெரியாரையே

குருமூர்த்தமாக நாம் அடையவேண்டுமென உவகையுற்று, ஆசார்ய ஸ்வாமிகளுடைய திருவடியிற்படிந்து "தவவுருவாய்வரு தவமுனிச் சுடரே! ஆர்வமும் ஞானமும் அணிகலனுக்கொள் தேசிகவடிவே! கோதிலார் துணையே! சோதனைவேண்டாம்; கோழைஉலகத்துயரம் இனிப் பொறுக்கமாட்டேன்; தங்கள் சரணகமலங்களையே தஞ்சமென வந்தடைந்தேன்; அபயமென்றருள்வீர். அடியேனை ஆட்கொள்வது தங்கள் கடனே; தமியேனையும் சீடனுக ஏற்றுக்கொள்ள வேண்டு" மென மீண்டும்பணிந்து குருகுலவாசத்திலிருந்து வந்தார். குருநாதன் வாக்கியமே வேதவாக்கியமென்றும், அவரே தெய்வமெனவும் நினைந்து அடிமைபோல் சதா சர்வகாலமும் பணிவிடை செய்துகொண்டு வரும் நாளில் ஒருநாள் ஆசார்யஸ்வாமிகளானவர் சனந்தனருடனும் மற்ற சீடர்களுடனும் கங்காநதிக்குத்தீர்த்தமாடச் சென்றூர். அப்பொழுது சனந்தனர் இக்கரையில் வஸ்திரத்தை வைத்துக்கொண்டிருந்தார். ஆசார்யஸ்வாமிகளோ அக்கரையில் ஸ்னனம் முடிந்து ஈரவேட்டியுடனிருந்ததால், "சனந்தனு! வஸ்திரத்தைக் கொண்டுவா" என்றனர். உடனே சனந்தனரானவர் கங்கையில் பிரவாகமாக ஜலமிருக்கிறதேயென நினைக்கவேயில்லை. குருநாதன் வாக்கியத்தைத் தட்டாமல் செய்வதுதான் சிஷ்யனது கடமை ஆதலின் தன் குருநாதன் சொன்னமாத்திரத்தில் சனந்தனருக்குக் கங்கை ஆழமாகஇருக்கிறதேயென்ற நினைவேமறந்துபோய்விட்டது. கங்கைமேல்நடக்க ஆரம்பித்தார்; கங்கையானவள் இவரது குருபக்தியைக்கண்டு உவகையுற்று ஒவ்வொரு பாதத்திலும் ஒவ்வொரு பத்மம் புஷ்பிக்கச்செய்துத் தாங்கினுள். சனந்தனரானவர் சுகமாகக் கங்கையைக் கடந்து ஸ்ரீசங்கராச்சாரியாரிடம் வந்து வஸ்திரத்தைத் தந்து அடிபணிந்து நின்றனர். அவ்விடமிருந்த எல்லாச் சீடர்களும் பார்த்து ஆச்சரியப்பட்டு அவரது குருபக்தி விசேடத்தை யறிந்து கொண்டாடினுர்கள். பத்மங்களால் தாங்கப்பெற்ற பாதத்தை யுடையவராதலின் அவருக்குப் பத்மபாதர் என்று காரணப்பெயர் வந்தது. மற்றும் வருவனவற்றுற்காண்க.

குலச்சிறை நாயனுர், பெருமிழலைக்குறும்ப நாயனுர், அப்பூதியடிகளுயனுர், நெடுமாற நாயனுர், மங்கையர்க்கரசியார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனுர், குருநமசிவாயர், ஆரூடி, உபமன்யு, மற்ற பெரியோர்களும் குருவருளால் ஞானத்தையடைந்து முத்தியடைந்திருக்கிறுர்கள்.

குருபக்தியினால் ஆருடி கங்கையைக் கரையிலாமல் நிற்கவைத்தார். உதங்கருடைய கண்ணீரால் குருபுத்திரியின் கரங்கள் எரிக்கப்பட்டது. இவைபோல் பல பெரியோர்கள் குருபக்தியினால் பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிறார்கள். குரு சிஷ்ய சம்பந்தம், மர்க்கடஞாயம், மார்ஜாலஞாயம், சங்கம ஞாயம் என மூன்றுவகையாயுளது. தன் குருநாதன் வாக்கியத்தைப் பரிபாலனம் செய்வது மர்க்கட ஞாயம். இதற்குச் சான்று பிரகலாதாழ்வார் கருவிலிருக்கும் பொழுது நாரதரால் உபதேசிக்கப்பட்டார். அவர் குருநாதன் வாக்யத்திலேயே நின்றார். அவருக்கு என்னதுன்பம் வந்தும் தன் குருநாதன் சொன்ன மந்திரத்தை மறக்கவில்லை. இவர்கள் சம்பந்தம் மர்க்கட ஞாயமுடையது.

மார்ஜாலமென்பது:—குருநாதனே சீடனுக்கு அன்னஆகாராதிகள் தந்து காப்பாற்றுகிறது. கிருஷ்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் உள்ள சம்பந்தம் மார்ஜால ஞாயமுடையது.

சங்கம ஞாயம்:—ஓர் நதியானது கிரியிற்றோன்றி பல கற்களிலும் முட்களிலும் மேடுகளிலும் குகைகளிலும் பிரவகித்து சமுத்திரம் எங்கே எங்கே என்று தேடுவதுபோல் அதிவேகமாய் நாடிவர ஆழிதன்னைச் சரணமடையவரும் சீடனுக்கு அஞ்சலியீவதுபோல் கால் மைலுக்கு அப்பாலிருந்துக்கொண்டே இதோ இதோ இங்கே இருக்கிறேன் வருவாய் என்று தன் அலைகளாகிய காத்தினால் கூவியழைக்க, நதியும் சமீபமாக வர "மதலாய் நீ சிறுவன் இதற்குள் என்னையடையத் தகுதியன்று; நீ இன்னும் இவ் உலகத்தில் வாழ்ந்து என்னை அடைகுதி" யென்று சோதிப்பதுபோல் தன்னுடன் சேர வரும் அவ்வாற்றைத் தன்னலைகளால் ஒதுக்கித்தள்ள; அந்நதியானது 'ஐயகோ! பாறைகளிலும் அசுத்தங்களிலும் தாக்குண்டு மிகுந்த கஷ்டத்தையடைந்தேன்; இனி இத்துயரத்தை அநுபவிக்கமுடியாது: அடியேனை பரிசோதிக்கவேண்டாம்" என்று வேண்டுவதுபோல் தத்தளிக்க, சமுத்திரம் பக்திக்கிரங்கி "ஆனால் வருவா" யென்று தன் மயமாகவே சேர்த்துக்கொள்வதுபோல் சீடர்கள் குருநாதர் எங்கு கிடைப்பாரோ? எப்பொழுது கிடைப்பாரோ? நாம் எப்பொழுது ஞானத்தையடைவோம்? என்ற வருத்தத்துடன் காடுகளிலும் நாடுகளிலும் யாத்திரை செய்துவரும்பொழுது பக்குவமடைந்த காலத்தில் குருநாதன்தோன்றி பரிசோதித்து ஞானத்தைப்போதித்து தன்மயமாக்கிக்கொள்வார். இவர்கள் சம்பந்தம் சங்கமஞாயமுடை

யது. இதற்கு மேலே வரையப்பட்ட பத்மபாதாசாரியாருடைய சரித்திரமே போதிய சான்றும்.

ஆகையால் எய்துதற்கரிய மானிடஜென்மமெடுத்த நாம் ஒவ்வொருவரும் அடையவேண்டிய பேற்றைச் சற்குருவாயிலாக அடைந்து வையிற் கதிர்வேலண்ணல் திருவடிக்கீழ் உய்வோமாக.

வருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

முடிவுரை

பெருமைமிக்க பெரியோர்களே!

குருபக்தியும் சாஸ்திர உணர்ச்சியும் இல்லாத அடியேனுடைய சிற்றறிவினால் வாசித்ததைச் சிறிதுவரைந்தேன். அடியேன் எழுதின கட்டுரை சொன்னயம் பொருணயம் முதலியவற்றில் மிகவுங்குறைந்ததே ஆயினும் பசுக்கூட்டங்களுடன் செல்லும் ஒரு குருட்டுப்பசுவும் அவற்றின் பின்செல்லும் காரணத்தால் சுகமாக ஊர்போய்ச் சேர்வதுபோலவும், வாழைநாரிடத்தில் வாசனையில்லாவிடினும் பூவுடன் சேர்ந்த காரணத்தினால் வேதங்களும் தேடித்தேடிக் காணாத தேவனுடைய திருமுடியில் ஏறுவது போலவும், அறிவிற்சிறந்த என் தமையனார் ஈராண்டாக எழுதிவரும் திருப்புகழமிர்தத்தினுடன் கடைப்பட்ட என் கட்டுரையும் உங்கள் பார்வைக்குறியனவாகுமென்றே துணிந்து எழுதினேன்.

உங்கள் நல்லாசிகளை விரும்பும்
அடிமை
சச்சிதானந்தன்.

குறிப்பு:—"திருப்புகழமிர்தம் ஆபீஸ்" இடம் மாறி இருக்கிறதென்பதை அன்பர்களுக்குத் தெரிவிக்கிறோம்.

புதுவிலாசம்:

"திருப்புகழமிர்தம் ஆபீஸ்",
108, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

உ

ஓம் குஹாயநம:

திருப்புகழமிர்தம்.

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 2 Vol. 2

ஈஷ்வரவருஷ தைமீ 1௳
ஜனவரி—1938

இதழ் 10. No. 10.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

(24) கோம்பனை யார்காது, மோதிரு, கண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூஷண நகமேவு
கோங்கையி னீராவி மேல்வளர் செங்கழு நீர்மாலை சூடிய
கோண்டையி லாதார சோபையில் மருளாதே
உம்பர்கள் ஸ்வாமீ நமோநம எம்பெரு மானே நமோநம
ஒண்டொடி மோகா நமோநம எனநாளும்
உன்புக ழேபாடி நானினி அன்புட னாசார பூசை செய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே
பம்பர மேபோல ஆடிய சங்கரி வேதாள நாயகி
பங்கய சிபாத நூபுரி கரசூலி
பங்கமி லாநீலி மோடிப யங்கரி மாகாளி யோகினி
பண்டுசு ராபான சூரனோ டேதிர்போர்கண்
டெம்புதல் வாவாழி வாழியே னும்படி வீரன வேல்தர
என்றுமு ளானேம னோகர வயலூரா
இன் சோல்வி சாகாக்ரு பாகர செந்திலில் வாழ்வாகி யேயடி
யென்றனை யீடேற வாழ்வருள் பெருமாளே,

பதவுரை.

பம்பரமே போல ஆடிய சங்கரி - (அம்பலத்தினில் இறைவன் நிர்த்தனஞ் செய்யுங்கால்) பம்பரத்தைப்போலவே சுழன்று ஆடிய சங்கரியும், வேதாள நாயகி — வேதாள பூத கணங்களுக்குத் தலைவியும், பங்கய சீ பாத நூபுரி - தாமரைக்கு நிகரானதும் சிறப்பு வாய்ந்ததுமான திருவடிகளில் சிலம்புகளை யணிந்துகொண்டிருப்பவரும், காசூலி - சூலத்தைக் கரத்திலே தாங்கிக்கொண்டிருப்பவரும், பங்கம் இலா நீலி - குற்றமில்லாத நீலநிறத்தையுடையவரும், மோடி - துர்கையும், பயம்ஹரி - அடியார்களது பயத்தை அகற்றுபவரும், மாகாளி - மகா காளியும், யோகினி - யோகினி யென்னுந் தேவதையாக இருப்பவருமாகிய உமாதேவியார், பண்டு சுரா பான சூரனோடு - முன்னாளில் கள்ளருந்தும் அசுரகுலத்திற் பிறந்த சூரபன்மனோடு, எதிர் போர் கண்டு — எதிர்த்துப் போர் செய்ததைக்கண்டு, எம் புதல்வா வாழி வாழி எனும்படி - "எமது குமாரனே! நீ நீடூழி வாழ்வாயாக" என்று உன்னை வாழ்த்தும்படி, வீரான வேல்தா - வெற்றியையுடைய வேலாயுதத்தைத் தரித்துக்கொண்டிருப்பவரே! என்றும் உளானே — எந்நாளிலும் அழிவின்றி நித்திய பாவஸ்துவாகவுள்ளவரே! மனோகா — விரும்பப்படுந் தன்மையினரே! வயலூரா - வயலூர் என்னும் புண்ணிய திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பவரே! இன்சொல் விசாகா— இனிய சொற்களைப்பேசும் விசாகமூர்த்தியே!, க்ருபை ஆகா - கருணைக்கு உறைவிடமானவரே! செந்திலில் வாழ்வு ஆகி - திருச்செந்தூரில் எழுந்தருளி, அடியேன் தனை ஈடேற வாழ்வு அருள் - அடியேனை உய்யுமாறு நல்வாழ்வை யருளிய, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே!, கொம்பு அனையார் — கொம்பைப்போல் ஒல்குந்தன்மையுடைய (விலை) மகளிரது, காது மோது இரு கண்களில் - காதுகள் வரையிலும் சென்று மோதுகின்ற நீண்ட இருகண்களின் அழகிலும், ஆ மோத - மகிழ்ச்சியை விளைவிப்பதும், சீதள - குளிர்ந்துள்ள, குங்கும - குங்குமக் கலப்புகளையும், பாடீர - சந்தனக் குழம்பையும், பூஷண - ஆபரணங்களையும் அணிந்துள்ளதும், நகம் மேவும் - மலைபோன்றதுமாகிய, கொங்கையில் - தனபாரங்களின் அழகிலும், நீர் ஆவி மேல் வளர் - நீர் நிலைகளில் பூத்த, செங்கழு நீர் மாலை சூடிய கொண்டையில் - செங்கழுநீர் மலர்களை மூடித்துள்ள கூந்தலின் அழகிலும், ஆதார சோபையில் - உடம்பின் அழகிலும், மருளாதே - மனமயக்கம் அடையாமல், உம்பர்கள் ஸ்வாமி நமோ

நம - தேவர்களுக்குத்தலைவரே! நமஸ்காரம் நமஸ்காரம், எம்பெருமானே நமோநம - அடியேங்களாகிய எமக்கு நாயகரே! நமஸ்காரம் நமஸ்காரம்; ஒண்தொடி மோகா நமோநம - பிரகாசமான வளையல் களையணிந்துள்ள வள்ளிநாயகியார் மீது மோகமுடையவரே! நமஸ்காரம் நமஸ்காரம்; என நாளும் - என்று நாள்தோறும், உன் புகழே பாடி - தேவரீரது திருப்புகழையே பாடி, நான் இனி அன்புடன் ஆசார பூசை செய்து - அடியேன் இனிமேல் தேவரீரிடத்து மெய்யன்போடு தூய்மையாக இருந்து உம்மைப் பூசித்து, நாள் வீண்படாது உய்ந்திட - அடியேனுடைய வாழ்நாள் வீணாகாது உய்யுமாறு அருள்புரிவாய் (ஏ-அசை) திருவருள் புரிவீர்.

பொழிப்புரை.

(சிவபெருமான் சிற்றம்பலத்தில் இன்ப நடனம் புரியுங்கால் அந்நடனத்திற் கியைய) பம்பரத்தைப்போல் திருநடனம்புரிந்த சங்கரியும், பூத வேதாள கணங்களுக்குத் தலைவியும், தாமரை மலரையொத்த சிறப்பு வாய்ந்த திருவடிகளில் சிலம்புகளை யணிந்துகொண்டிருப்பவரும், திரிசூலத்தைக் கரமலரில் தரித்துக்கொண்டிருப்பவரும், குற்றமில்லாத நீலநிறத்தையுடையவரும், துர்க்கையும், அடியார்களது அச்சத்தை அகற்றுபவரும், மகா காளியும், யோகினியென்னுந் தேவதையாக இருப்பவரும் ஆகிய உமாதேவியார், முன்னளில் மதுபானஞ்செய்யும் அசுரனாகிய சூரபன்மனோடு எதிர்த்து போர்புரியக்கண்டு, "எமது குமாரனே! நீ நீடூழி வாழ்வாயாக" என்று வாழ்த்துமாறு வெற்றி பொருந்திய வேற்படையைத் தரித்தவரே! என்றும் அழியாத நித்திய சொரூபரே! விரும்பப்படுந் தன்மையினரே! வயலூரில் எழுந்தருளியிருப்பவரே! இனிய சொல்லையுடைய விசாகமூர்த்தியே! கருணைக்கு உறைவிடமானவரே! திருச்செந்தூரில் வாழ்ந்துகொண்டு அடியேன் ஈடேறுமாறு திருவருள் செய்யும் பெருமை மிக்கவரே! பூங்கொம்பைப்போல் அழகாக ஒல்குந் தன்மையுடைய விலைமகளிரது காதுவரை நீண்டுள்ள இருகண்களிலும், குளிர்ந்த குங்குமக்கலப்பையும் சந்தனக்குழம்பையும் அணிந்துகொண்டு மகிழ்ச்சியைத் தருவதும் மலைக்கு நிகரானதுமாகிய தனபாரங்களிலும், நீர் நிரம்பிய தடாகங்களில் பூத்துள்ள செங்கழுநீர் மாலையை முடித்துள்ள கூந்தலிலும், உடலின் அழகிலும், அடியேன் மனத்தை வைத்து மயக்கத்தையடையாமல், தேவர்களுக்குத் தலை

வரே! நமஸ்காரம் நமஸ்காரம்; எமது பெருமானே! நமஸ்காரம் நமஸ்காரம்; பிரகாசிக்கும் வளையலை யணிந்துள்ள வள்ளிபிராட்டியார் மீது மோகத்தையுடையவரே! நமஸ்காரம் நமஸ்காரம் என்று தினந் தோறும் தேவரீரது திருப்புகழ்ப்பாமாலைகளையே பாடி அடியேன் (அவமே சென்ற நாள் சென்றாலும்) இனியாவது அன்புடனும் ஆசாரத்துடனும் தேவரீரது திருவடிக்கமலங்களை பூசித்து, வீண் நாள் படாது உய்யுமாறு திருவருள் புரிவீர்.

விரிவுரை.

கோம்பனையார் :—

பெண்கள் இடை சிறுத்து இளங்கொடிபோல் அசையுந் தன்மையுடையோர் ஆதலால் கொம்புக்கு நிகரானவர் என்று கூறுவது கவிகளின் மரபு. பிறரும் இவ்வாறு வருமாறு காண்க.

" பூத்தவிளங் கோம்பனைய பூவைமுகங் கோடாமல் "

—*மகாபாரதம்.*

காது மோது இரு கண்களில் :—

கண்கள் நீண்டிருப்பது மாதர்க்குச் சிறந்த இலக்கணமாம். அங்ஙனம் நீண்டிருப்பதால் அக் கண்ணிலுள்ள கருவிழிகள் பிறழ்வது காதுகளுடன் போர்புரிய வருவதுபோல் தோன்றுகிறது என்பது கவிநயம். இதனை, மன்மதனது கொலைசெய்யும் நஞ்சுபூசப்பட்ட கொடிய வேல்போல் அஞ்சனமெழுதிய விழியானது தன்னோடு போர்செய்ய வருவதலினாலே அக் கண்ணின் பகையாகிய குவளை மலரை தான் படைத்துணையாகச் சேர்த்துவைப்பதுபோல் குவளை மலரை ஒரு பெண் அழகிய காதின்மிசை சூடினாள் என்னும் பொருள் தரும் அடியில் கண்ட அழகிய செய்யுளையுங் காண்க.

வேனலம்பதி கோலைவிட மூட்டிய வெவ்வேல்
மான அஞ்சன மெழுதிய விழிபோர வரலால்
தானதன்பகை தனைத்துணை கோண்டுறுந் தகைபோல்
பானலஞ்சேவி மிசையணிந் தனளோரு பாவை.

—*பிரபுலிங்கலீலை.*

நகமேவு :—

நகம் - மலை. நகக்குறி பொருந்திய தனம் என்று கூறுவாருமுளர்.

உம்பர்கள் ஸ்வாமீ :—

மூவர் தேவாதிகள் தம்பிரானுதலால் முருகப்பெருமான் தேவர்கள் யாவருக்கும் தலைவராவர்.

"தேவதேவ தேவாதிதேவப் பெருமாளே"

—(*பேரவாயூர்*) *திருப்புகழ்.*

தேவர் நாயக னாகியே யென்மனச் சிலைதனி லமர்ந்தோனே
மூவர் நாயக னெனமறை வாழ்த்திடு முத்தியின் வித்தேயிங்
கேவ ராயினு நின்றிருத் தணிகைசென் றிறைஞ்சிடி னவரேயென்
பாவ நாசஞ் செய் தென்றனை யாட்கொளும் பரஞ்சுடர்கண் டாயே.

—*திருவருட்பா*

ஒண்டொடி மோகா :—

வள்ளியென்பது ஜீவான்மா; அதனை யாட்கொள்ளவேண்டுமென்ற மோகம் தயையினுல் முருகப்பெருமானுக்குளது.

"தணியா அதிமோக தயாபரனே"

—*அனுபூதி.*

நாளும் உன்புகழே பாடி :—

பிரமனது கையெழுத்தை அழித்து இனி தாயுதரத்திற் பிறக்கவொட்டாத வேலாயுதனது திருப்புகழையே பாடுதல் வேண்டும். பிற புகழ்க்கவிகளைக் கற்று பாடுதல் கூடாது. பிறப்பிறப்பற்ற பெம்மானுகிய முருகன் புகழொன்றே இம்மை மறுமை நலன்களை நல்கும்.

"அழித்துப் பிறக்கவொட்டா அயில்வேலன் கவியை யன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்"

"கிழியும் படியடற் குன்றெறிந்தோன் கவி கேட்டுருகி
இழியுங் கவி கற்றிடா திருப்பீர்"

—*அலங்காரம்.*

நாகமலையில் வாழும் கந்தசுவாமியே! உன் திருப்புகழை யான் கேட்டறிந்த மாத்திரத்தில் நினது கோழிக்கொடி என் ஆத்துமாவை அபயங் கொடுத்து ஆண்டுகொண்டது; உன் வேலாயுதம் பிறப்புக் கிடமான பேராசையை ஒழித்துவிட்டது; உன் தேவிமாரது திருவடியுங் கிடைத்தது; இனி யான் தேடவேண்டியது என்ன இருக்கிறது? என்னும் பொருள்தரும் அருணைக்கோனது அருள் வாக்கையும் உன்னுக.

சேவிக்குன்ற வாரண நல்கிசை பூடடவன் சிந்தை யம்பு
சேவிக்குன்ற வாரண மஞ்சலென் ருண்டது நீண்ட கன்மச்
சேவிக்குன்ற வாரண வேலாயுதஞ் செற்ற துற்றன கட்
சேவிக்குன்ற வாரண வள்ளிபோற்றுண் மற்றென் றேடுவதே.

—அந்தாதி,

ஆதலால் "யார் வேண்டினும் கேட்டபொருளீயுந் தியாகாங்க சீலனும்" முருகப்பெருமானது தெய்வீகம்பொருந்திய திருப்புகழையே அன்புடன் ஓதி அப்பரம பிதாவினது திருவருளைப் பெறுவார்களாக.

"கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி"

அன்புட னுசார பூசை :—

பூஜா என்னும் வடசொல் ஆகார ஈறுகெட்டு பூசையென்று மருவியது. பூ - கன்மங்களைப் பூர்த்திசெய்து, ஜா - சிவஞானத்தை யுதிக்கச்செய்வது என்பது பொருள். இப்பூசை ஒவ்வொருவரும் செய்யற்பாலன. பூசைக்கு ஆசாரமும் அன்பும் சிறந்த அங்கங்களாம். மனவாக்குகட் கெட்டாத ஆண்டவனைப் பூசிப்பதற்கு நமது காங்களும் ஏனைய உறுப்புகளும் "என்ன மாதவஞ் செய்தனவோ" என்று இடையறாத அன்புடனும், தீய எண்ணங்களை எண்ணுமல் மனோசுத்தமுடனும், அவமொழிகளைப் பேசாமல் வாக்கு சுத்தமுடனும் அசுத்தப் பொருள்களைத் தொடாமல் காய சுத்தமுடனுமாக இருந்து இறைவனைப் பூசிக்கவேண்டும்.

வீணுள்படாது அருள்புரிவாயே :—

கிடைத்தற்கரிய வாழ்நாளை அவத்தொழில்களிலும் களியாடல்களிலும் வீண் சிந்தனைகளிலுமாக வாளா கழிக்காமல் "இரை தேடுவதோடு இறையையுந் தேடு" என்ற அமுதவசனப்படி, உடம்பை வளர்ப்பதற்காக உழைப்பதோடு உயிரை வளர்ப்பதற்கும் பாடுபடவேண்டும். சிவசிந்தனையும், சிவ வழிபாடுமே உயிருக்கு உறுதி பயப்பனவாம்.

"வீணே நாள் போய்விடாமல் ஆறுறுமீதில்
ஞானோப தேசம் அருள்வாயே"

—(மாலாசை) திருப்புகழ்.

எம்புதல்வா வாழிவாழி எனும்படி :—

சூரபன்மாவோடு தமது குமாராகிய குகப்பெருமான் போர் புரியுங்காலே, உமாதேவியார் தமது புதல்வருக்கு வெற்றியுண்டாமாறு "வாழிவாழியென்று" வாழ்த்துகிறார். ஆணவமலமாகிய சூரபன்மன் காமக்குரோதாதி துர்க்குணங்களாகிய அசுரர்களுடன் அறநெறி பிறழ்ந்து, சமதமாதி சற்குணங்களாகிய அமரர்களுக்குத் துன்பம் புரிந்தஞான்று, மறத்தையழித்து அறத்தை நிலைநாட்டுமாறு, ஞான பண்டிதராகிய எந்தை கந்தவேள் அசுத்த போகமாகிய கள்ளைக் குடித்து மயங்கியுள்ள அவ்வாணவ மலமாகிய சூரனோடு எதிர்த்துப் போர்புரிந்து ஆணவமலத்தை யழிப்பதைக்கண்ட அருட்சத்தியாகிய அம்பிகை மனமகிழ்ந்து, "சத்துவ வடிவாகிய சிவபெருமானுக்கும் சித்துவடிவமாகிய எனக்கும் தோன்றிய ஆனந்தவடிவமாகிய அண்ணலே! நீ ஆன்மாக்களின் ஆணவமலத்தை யழிப்பதற்காகவே வெளிப்பட்டுத் தோன்றினை. ஆதலால் ஆன்மாக்களது மலத்தைக் கெடுத்து ஆனந்தத்தைக்கொடுத்துக்கொண்டு நீடூழி வாழ்வாயாக" என்று வாழ்த்துகிறார் என்பது அதன் தத்துவம்.

என்று முளானே —

நங் குமாரக் கடவுள் மாறுபாடின்றி என்றும் ஒருபடித்தாக விளங்குகின்ற நித்திய வடிவினர்.

மனோகர :—

இளங் குமாரமூர்த்தியாய்த் திகழும் இன்பவடிவினராதலால் எல்லோராலும் விரும்பப்படுகின்றார்.

வயலூரா :—

அருணகிரியாரைத் திருவருணையில் ஆண்டுகொண்டு "நம் வயலூருக்குவா" என்று அறுமுகப்பெருமான் அருளிச்செய்து, வயலூரில் திருப்புகழில் "இன்ன இன்ன வைத்துப்பாடு" என்று திருவருள்புரிந்த தெய்வீகம் பொருந்திய திவ்விய க்ஷேத்திரமாதலால், அருணகிரியார் தன்னை யாட்கொண்ட வயலூரின்மீதுள்ள அளவற்ற அன்பின்பெருக்கால் அடிக்கடி அநேக பாசுரங்களில் "வயலூரா" "வயலூரா" என்று அருளிச்செய்தனர்,

இன்சொல் :—

கருணைக்குறைவிடமாகிய கந்தப்பெருமான் இன்சொல்லையுடையவராயிருக்கின்றனர். ஒவ்வொருவரும் வன் சொல்லை அறவே

ஒழித்து இன் சொல்லையே எஞ்ஞான்றும் யாரிடத்தும் உரைக்க வேண்டும். நம்மைப்பார்த்துப் பிறர் கடுமையாகப் பேசினால் நமக்கு எத்துணை வருத்தம் உண்டாகிறது? இனிமையாகப் பேசினால் எத்துணை மகிழ்ச்சியுண்டாகிறது. அதனை யுற்று நோக்கி நாமும் பிறரிடத்துப் பேசும்போது கடுஞ்சொற்களை மறந்தும் பேசாது இனிய சொற்களையே பேசுவோமாக.

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

—திருக்குறள்.

கருத்துரை.

உமாதேவியார் வாழ்த்துகூற வெற்றிவேலைத் தாங்கியுள்ளவரே! நித்தியரே! மனோகரமானவரே! வயலூரில் எழுந்தருளியவரே! விசாகரே! கிருபாகரரே! திருச்செந்தூரரே! விலைமகளிரது கண்கள், தனங்கள், கரிய கூந்தல், அழகிய உடல் என்பனவற்றைக்கண்டு மருளாமல், தேவரீரது திருப்புகழையே பாடி தேவரீரை அன்புடனும் ஆசாரத்துடனும் பூசித்து வீணாள் படாமல் உய்ந்திடத் திருவருள் புரிவீராக.

யக்ஷப்பிரவ்னை.

கே.—இந்திரியங்களால் விஷயங்களை அனுபவிக்கிறவனும், சிறந்த புத்தியுள்ளவனும், உலகத்தாரால் (செல்வமுள்ளவனென்று) பூஜிக்கப்பட்டவனும் எல்லாப் பிராணிகளுக்கும் ஸம்மதனுமான எந்த மனிதன் மூச்சுவிட்டுக்கொண்டிருந்தும் உயிரில்லாமலிருக்கிறான்.

ப.—எவன் தேவதைகள், அதிதிகள், வேலைக்காரர்கள், பித்ருக்கள், தான் இந்த ஐவர்களுக்கும் ஹவிஸ் முதலியவைகளைக் கொடுக்கவில்லையோ அவன் மூச்சுவிட்டுக்கொண்டிருந்தாலும் உயிரில்லாதவனே.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(268-ம் பக்கத் தொடர்ச்சி.)

मुनीनामुदाहो नृणां भक्ति भाजा
मभीष्टप्रदा सन्ति सर्वत्र देवाः ।
नृणामन्त्यजानामपीस्वार्थ दाने
गुहाद्दैव मन्यन् नजाने नजाने ॥

(27) முனீனு முதாஹோ ந்ருணும் பக்தி பாஜா
மபீஷ்டப்ரதா ஸந்தி ஸர்வத்ர தேவா: ।
ந்ருணு மந்த்ய ஜாணு மபீஸ்வார்த்த தானே
குஹாத்தைவ மன்யங் நஜானே நஜானே ॥

பதவுரை.

முனீனும் - முனிவர்களுக்கும்,

உதா பக்திபாஜாம் - அவ்வாறு பக்தியுள்ள மனிதர்களுக்கும்,

அபீஷ்டப்ரதா: தேவா: ஸர்வத்ரஸந்தி - விருப்பத்தையளிக்கும் தேவர்கள் எங்கும் இருக்கின்றார்கள்,

அந்த்ய ஜாணும் ந்ருணும் அபீஸ்வார்த்ததானே - சண்டாளர்களாகிய மக்களுக்கும் கூட விருப்பத்தை அல்லது முத்தியையளிப்பதில்,

குஹாத் அன்யம் தைவம் நஜானே நஜானே - முருகக்கடவுளைத் தவிர வேறு தெய்வத்தை நான் அறியேன்,

பொழிப்புரை.

முனிவர்களுக்கும் மற்ற பக்தியுள்ள பக்தர்களுக்கும் (மோக்ஷத்தை யொழியா) விருப்பத்தையளிக்கும் தேவர்கள் எங்கும் இருக்கின்றார்கள். ஆனால், கல்வியறிவற்றவர்களும், உயர் குலத்தோர் என்பவரால் 'சண்டாளர்' என்று ஒடுக்கப்பட்டிருப்பவரும் ஆகிய மக்களுக்குங் கூட மோக்ஷம் வரையிலுமுள்ள எல்லா புருஷார்த்தங்களையும் அளிக்கும் அருளும் ஆற்றலும் படைத்தவர் முருகப்பெருமான் ஒருவரே யாவர்.

இதனால் கருணைமூர்த்தியாகிய அப்பெருமானது அருட்பெருமையையறிய ஆற்றலற்ற சில மந்த மதியினர் அற்ப ஆற்றலையுடைய சில தேவர்களுக்குப் பரத்துவஞ் சொல்லித்திரிவது பாபவிசேஷத்தினாலென்றும் தெரிவிக்கப்பட்டது.

कलत्रं सुधावन्धु वर्ग पशुर्वा
नरोवाथनारी गृहे ये मदीयाः।
मजयन्तो नमन्दः स्तुवन्तो भवन्तम्
स्मरन्तश्चते सन्तु सर्वे कुमारः॥

(28) களத்ரம் ஸுதா ப[3]ந்[4]து வர்[3]க: பசுர்வா
நரோவா[2]த நாரீ க்[3]ருஹேயே மதீ[3]யா:।
யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ ப[4]வந்தம்
ஸ்மரந்தஸ்ச தேஸந்து ஸர்வே குமார:॥

பதவுரை.

க்ருஹே - கிருஹத்தின்கண்,
மதியா: யே - என்னைச் சார்ந்த யாதொரு,

களத்ரம், ஸுதா: பந்துவர்க: பசு: நரம், நாரிவா ஸந்தி தே ஸர்வேஹே குமார! } மனைவி, புத்திரர்கள், உறவினர் பசு, ஆண், பெண் ஆகிய அவ்வெல்லாரும் ஓ குமாரக்கடவுளே!

பவந்தம் யஜந்தம் நமந்தம் துவந்தம் சஸந்து } தேவரீரைப் பூசிக்கின்றவர்களாய் நமஸ்கரிக்கின்றவர்களாய் துதிக்கின்றவர்களாய் இருக்கக் கடவர்.

பொழிப்புரை.

ஓ குமாரக் கடவுளே! என்னைச் சார்ந்தவர்கள் எல்லோரும் தேவரீரது திருவடியின்கண் அன்புவைத்துப் பூசிக்கின்றவர்களாயும் நமஸ்கரிக்கின்றவர்களாயும் ஸ்தோத்திரம் செய்கின்றவர்களாயும் இருக்க அருள்புரியவேண்டும்.

இதனால் எல்லாப்பிராணிகளும் முருகப்பெருமானுடைய அடிமைகளாதலால் அவரது திருப்பணியைச் செய்ய அவசியம் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பது தெரிவிக்கப்பட்டது.

मृगाः पक्षिणो दंशकाये च दुष्टा
स्तथा व्याधयो बाधकाये मदङ्गे ।
भवच्छक्ति दीक्षणाग्रभिन्नाः सुदूरे
विनश्यन्तु ते चूर्णित क्रौञ्च शैल ॥

(29) ம்ருகா: பக்ஷிணோ தம்சகாயேச துஷ்டா
ஸ்ததா வ்யாதயோ பாதகாயே மதங்கே |
பவச் சக்தி தீக்ஷ்ணா க்ரபின்னா: ஸுதூரே
விநஸ்யந்து தே சூர்ணித க்ரௌஞ்ச சைல ||

பதவுரை.

ஹே சூர்ணிதக்ரௌஞ்ச சைல - ஓ கிரௌஞ்ச பர்வதத்தைப் பொடியாக்கிய பெருமானே!

துஷ்டா: - கொடியவைகளான,

யே ம்ருகா: பக்ஷிண: தம்சகா:- யாதொரு விலங்குகள், பறவைகள், கடிக்கும்படியான காட்டீக்கள், பாம்புகள்,

ததா மதங்கே பாதகா: - அவ்வாறே எனது உடலை வருத்துகின்ற,

யே வ்யாத: ஸந்தி - யாதொரு நாய்களும் உண்டோ,

தே - அவைகளெல்லாம்,

பவச் சக்தி தீக்ஷ்ணாக்ரபின்னா:- தேவரீருடைய வேலாயுதத்தின் கூர்மையான முனையால் பிளக்கப்பட்டு,

ஸுதூரே விநஸ்யந்து - வெகுதூரத்திலேயே (என்னை நெருங்குமுன்னேயே) நாசத்தை யடையட்டும்,

உ

ஓம் கந்தாய நம:.

கந்தர் திருவிளையாடல்

(274-வது பக்கத் தொடர்ச்சி.)

உலகங்கள் முழுதும் சென்று அரிய திருவிளையாடல்களைப் புரியும் குமாரக்கடவுள் பின்னர் ஒரு திருவிளையாடல் செய்வாராயினர். குலமலைகளனைத்தையும் ஓரிடத்தில் ஒருங்குகூட்டுவர்; அம்மலைகளைப் பின்னர் தலைகீழாகப் பூமியில் நிறுத்துவார்; அலைகளையுடைய எழு கடல்களையும் ஒன்றுகச்செய்வர்; சக்ரவாளகிரியை பாதாளம் புகுமாறு பாதத்தால் அழுத்துவர்; கங்கா நதியை ஓடவிடாமல் அடைப்பர்; பாதாள லோகத்துள்ள எட்டு நாகங்களையும் பிடித்து மேருமலை முதலிய பெரிய மலைகளிலே பூட்டிக்கட்டி உயிர்களுக்குச் சிறிதுகூடத் துன்பமில்லாவண்ணம் சிறு தேர்களாக்கி உருட்டிச் செல்வர். திசைகளிலுள்ள ஐராவதம்முதலிய எட்டு யானைகளையும் கொண்டுவந்து ஒன்றோடொன்று போர்புரியுமாறு செய்வர். ஆகாயத்திலுள்ள கங்காசலத்தால் வடவாமுகாக்கினியை அவிப்பர்; கருடனையும் வாசுகியையும் பிடித்து ஒன்றோடொன்று மாறுகொண்டு போர்புரியச் செய்

பொழிப்புரை.

ஓ க்ரௌஞ்ச சயிலத்தைப் பொடியாக்கிய கடவுளே! தேவரீரது திருவடிகளுக்கு அடிமையான என்னைத் துன்புறுத்த வரும் கொடிய உயிர்களும் அவ்வாறே கொடிய நாய்களும் தேவரீரது வேலாயுதத்தின் கூர்மையான முனையினுற் பிளக்கப்பட்டு என்னை நெருங்கு முன்னமேயே நாசத்தையடையவேண்டும்.

இதனுல் முருகக்கடவுளின் அன்பர்களுக்குத் துன்பமிழைக்க நினைக்கும் கொடிய உயிர்கள் அக்கணமே அழிந்துவிடுமென்றும் அவ்வாறே எவ்வித நோய்களும் அவ்வடியவர்களை நெருங்கித் துன்புறுத்தாவென்றும் தெரிவிக்கப்பட்டது.

(தொடரும்).

வர்; பாதாளலோகத்துள்ள நாக இனங்களைப் பூதலத்தில் சேர்த்து, பூதலத்திலுள்ள கடல்களைப் பாதாள லோகத்திற் புகுமாறு விடுவர்; சூரியனைச் சந்திரமண்டலத்திலும் சந்திரனைச் சூரியமண்டலத்திலுமாக மாற்றி பரிவர்த்தனையாக விடுவர்; அஷ்ட திக்குப்பாலர்களுடைய பதங்களனைத்தையும் முன்னையிடத்தினின்றும் பறித்துப் பிறழ வைப்பர்; மேகங்களுக்குள்ளிருந்த மின்னல்களையும் இடிகளையும் பற்றி மாலையாக்கித் தரித்துக்கொள்வர்; சூரிய சந்திரர் முதலிய கிரகங்களும் பிறவும் விண்ணிற் செல்லும் விமானங்களையும் தேர்களையும் பிணித்த கயிறுகள் துருவன் கரத்திலிருப்பன; அவற்றுள் வேண்டுவனவற்றை இடையில் அரிந்து, பூமியிலும் திசைகளிலும் செல்லுமாறு விடுப்பர்; ஆகாயத்திற் செல்லும் விற்களிரண்டையும் பற்றி, கிரகங்கள் நட்சத்திரங்கள் இவற்றை உண்டைகளாகக் கொண்டு, தேவர்களது தலை மார்பு கழுத்து முகம் இவைகளைக் குறியாகக்கொண்டு எய்து வில்வன்மையைக் காட்டுவர்; சீவன்முத்தருக்கேயன்றிப் பிறருக்கு வெளிப்படாத நிருமலராகிய எமது குமாரக் கடவுள் சுராசுரர்களும் நரர்களும் ஏனோரும் தங்கள் தங்கள் உள்ளமும் உடம்பும் தளர்தலன்றி யாதொருதீங்கும் நோாவண்ணம், எண்ணில்லாத இன்பத்தை நல்கும் திருவிளையாடல்களைச் செய்தருளினர்.

அப்பொழுது பூமண்டலத்திலுள்ள அசுரர்கள் இவ் வற்புத ஆடல்களை நோக்கி, தாம் பெரும் பாவிகளாதலால், அறுமுகப்பெருமானது திருவுருவத்தைக் காணாதவராகி, " ஆ! இவ்வண்ணம் புரிந்தார் யாவர்?" என்று வியப்புற்றுத் தியங்கினர்கள். அந்த அசுரர்கள் பின்னுஞ் சிலநாள் உயிரோடிருக்குமாறு ஆயுள்பெற்றுள்ளமையால், முருகக்கடவுள் அவர்களுக்குத் தமது திருமேனியைக் காட்டாது உலவினர். அவர்கள் தேடித் தேடி ஒருவரையுங் காணாமையால் " அரியயனுற் காணப்படாத அரனாது மாயமே இது" என்றார்கள். குமாரக்கடவுளது செய்கையை மண்ணுலகத்திலுள்ள மனிதர்கள் கண்டு, "நெறி தவறி கொடுங்கோல் செலுத்துகின்ற அசுரர்கள் எல்லோரும் இறப்பது திண்ணம்; இது அதற்கு அடையாளமாகத் தோன்றிய விம்மிதம்போலும்" என்றார்கள். திசைபாலர்களும் சூரியன் சந்திரன் முதலாயினோரும் மனம் வருந்தி, ஒருங்குகூடி, முருகப்பெருமானது திருமேனியைக் காணாதவராகித் திகைத்து, இது அசுரர்கள் செய்கையன்று வேறு யாரோ செய்தார்; இந்திரன் சிலரோடு மகாமேருகிரியில் இருக்கின்றனன்; நான்முகக்

கடவுளும் அங்கிருக்கின்றார் ; நாமெல்லாம் அவர்களிடத்திற்சென்று இதனைச் சொல்வோம்" என்று துணிந்துகொண்டு, சூரனுக்கும் அஞ்சித் துயரத்தோடு சென்று, மேரு சிகரத்தை அடைந்தார்கள். அங்கே, அறுமுகக்கடவுளுடைய திருவிளையாடலைக்கண்டு அவர் திருவுருவத்தைக்காணாது வருந்தியிருந்த இந்திரனைக்கண்டு, அவன்முன் சென்று அடிவணங்கி, இருந்துகொண்டு: "மண்ணுலகத்தினும் விண்ணுலகத்தினும் உள்ளவைகளைப் பண்டைய நிலையினின்றும் யாரோ மாறுபடச்செய்தனர்; அவரை இன்னாரென நாங்கள் அறிகிலோம் ; இராக்கதர்கள் இது செய்திலர் போலும்; இங்ஙனம் நிகழ்ந்தது என்ன ?" என்றார்கள். அதனைக்கேட்ட அயிராணி கேள்வன், "நானும் இதனை ஆராய்ந்துகொண்டேயிருக்கின்றேன்; சிறிதும் அறிந்திலேன்; நினைப்பதற்கும் அரிதாகிய இதனைப்புரிந்தார் யாவரோ? தாமரையில் வைகும் சதுர்முகப் பிரமதேவரைப்போய் வினவுவோம்; வாருங்கள்" என்று சொன்னான். உடனே, அந்த இந்திரன் முதலிய இமையவர்கள் உண்மையான தவத்தைப் புரிந்தோராதலால், அவர்கள் விழிப்புலனுக்குத் தெரியும்வண்ணம் அறுமுகக்கடவுள் ஒரு திருமுகமுடைய பாலராய் அம்மலைமீது தோன்றியருளினார்.

தேவர்கள் கொண்ட மயக்கம் நீங்கும்வண்ணம் தமது அற்புதச் செயலைக் காட்டவந்த எம்பெருமான், மகாமேருமலையை அசைத்து தாமரை இதழ்களைக் கொய்து சிந்துதல்போலக் கொடுமுடிகளைப் பறித்து வீசினார். இந்திரன் முதலிய இமயவர்களனைவரும் குமாரக் கடவுளை நோக்கி, "ஐயையோ ! மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் நிலைகலங்கத் திரிபு செய்தவன் இவனேயாகும்" என்று சிங்கத்தை எதிர்ந்த விலங்குகளைப்போல் கலங்கி, இவனது ஆற்றலை ஆராயுங்கால் இவனைக் குழந்தை என்று கொள்ளப்படாது; அசுரரிலும் இவன் மிகக் கொடியன்; யாவராலும் செய்யமுடியாத மாயா வித்தையையுடையவன்; போர்செய்து இவனை வெல்வேம்" என்று துணிந்து, அக்கினி மலையைச் சூழும் கொசுக்களைப்போல், முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய முருகப்பெருமானைச் சூழ்ந்தார்கள். அப்பொழுது இந்திரன் முன்னாளிலே தந்தமொடிந்து திருவெண்காட்டிற்சென்று சிவபெருமானைப்பூசித்துத் தந்தம் பெற்றுக்கொண்டு அங்கிருந்த வெள்ளையானையாகிய ஐராவதத்தை நினைக்க அது அம்மேருகிரிக்கு வந்தது. உடனே இந்திரன் போர்க்கோலங் கொண்டு, வச்சிராயுதம், வாள், தண்டு, வில், வேல்முதலிய ஆயுதங்

களை எடுத்துக்கொண்டு, அந்த ஐராவதத்தின் மீதூர்ந்து, குமாரக் கடவுளைத் தேவர்களோடு வளைந்து போர்செய்யத்தொடங்கினான்.

அறுமுகப்பெருமான் தேவர்கள் தம்மைப் பகைவராய் வளைந்த மையை நோக்கி, திருநகைசெய்து, யாதும் எண்ணாது முன்போலவே தமது திருவிளையாடலைச் செய்துகொண்டிருந்தார். இந்திரன் பற்பல படைகளை முருகவேள்மீது விடுப்ப, அவை யாவும் அவர்மீது மலர் போறப்பட்டன. அதுகண்டு இந்திரன் வச்சிராயுதத்தைவிட்டு ஆர வாரித்தான். அக்குலிசம் எம்பெருமானுடைய திருமார்பிலேபட்டு நுண்மணல்போலப் பொடியாயிற்று. இந்திரன் அதுகண்டு வருந்த ஐராவதம் கர்ஜித்துக்கொண்டு கந்தசுவாமியின் திருமுன்சென்றது. அறுமுகக்கடவுள் அதுகண்டு, சங்கல்பமாத்திரத்தால் ஓர் வில்லையும் பலகணைகளையும் விரைந்து படைத்துக்கொண்டு, வில்லை வளைத்து நாணொலிசெய்து, ஒரு கணையை அந்த யானையின் நெற்றியிற் புக விடுத்தார்; உடனே ஐராவதம் புலம்பிவீழ்ந்து இறந்தது. அது கண்ட இந்திரன் வருத்தமுற்று, "ஐயையோ என்று கூவி, குமரவே ளருகிற்சென்று, கோபத்தோடு தன்வில்லை வளைப்ப, முருகக்கடவுள் ஓரம்பை அவன் புயமீது விடுத்தார். அக்கணைபட்டு இந்திரன் தன் வலிமை இழந்து, விற்போரை விடுத்துத் தன் கையிலிருந்த வேலை பெருமான்மீது விடுத்தான்; அவ்வேல் ஒரு சிறு புல்லைப்போலச் சென்று அழிந்தது. அதுகண்ட அமரர்கள் அற்புதமடைந்தார்கள். கந்தப்பெருமான் இந்திரனுடைய முடியை ஓரம்பினாலும், கொடியை ஓரம்பினாலும், மார்பிற் கவசத்தை ஓரம்பினாலும் அழித்து, அவன் மார்பை எழும்பினால் துளைத்தார். உடனே அயர்ந்து வீழ்ந்தான்! அதுகண்ட மற்றைத் தேவர்கள் தமது அழிவை யெண்ணாது கந்த மூர்த்தியை வளைந்து போர் புரிந்தார்கள். அப்பொழுது அறுமுகப் பரமன் வருணனை நான்கம்பினாலும், இயமனை ஐந்தம்பினாலும், சந் திரனை ஓரம்பினாலும், சூரியனை மூன்றம்பினாலும், வாயுவை இரண்டம் பினாலும், அக்கினியை மூன்றம்பினாலும் கொன்றார். எஞ்சியதேவர் கள் எல்லோரும் குமாரக்கடவுளது போராற்றலை நோக்கி "இவனே இன்றைக்கு எல்லோரையும் கொன்றுவிடுவன்" என்று மனங்கலங்கி ஓடி ஒளிந்தார்கள். அதுகண்ட அறுமுகப்பெருமான் அப்போர்க் களத்தில் தனி நின்று உலவினார்.

இச்செயலை நாரதர்கண்டு, கருணையின் மிகுதியால் ஓடி தேவ குருவாகிய வியாழபகவானிடங் கூறினார். அதுகேட்ட பிரகஸ்பதி

"தேவர்களுடைய வாழ்க்கை அழிந்ததுபோலும்" என்று சொல்லி, துன்புற்று விரைந்துசென்று, போர்க்களத்தையடைந்து, அங்கு மாண்டுகிடக்கும் தேவர்களைக்கண்டு மனங்கவன்று, அங்கு பரமாற்புத வலியுடனிருந்து திருவிளையாடல்புரியும் தெய்வசிகாமணியாகிய செவ்வேட் பரமனது திருவடித்தாமரைமீது வீழ்ந்து, துதித்து "எம்பெருமானே! பண்ணவர் பயங்கெடுக்கவந்த பரமகருணாநிதியே! தாரகன், சிங்கமுகன், சூரன்என்னும் அசுரர்கள் தண்டிப்ப இந்திரன் நாள்தோறும் துன்பமுற்று, தனது பொன்னுலகத்தைவிடுத்து இம் மேருமலையில் மறைந்திருந்தான். அவன் உம்முடைய திருவடிகளையடைந்து வழிபட்டு, உம்மைக்கொண்டு தன் பகைவர்களையழித்து, முன்போல் தனது அரசாட்சியைப் பெற நினைந்திருந்தான். பலகாலம் அருந்தவஞ்செய்து வாடினன்; சரவணதடாகத்திற்சென்று தேவரீரது திருவவதாரத்தைக்கண்டு, தன் துயரமெல்லாம் நீங்கியதென்று உவகைபூத்தான்; உமக்குத் தொண்டுசெய்ய விரும்பிய இந்திரன் நீர் இவ்வாறு திருவிளையாடல் செய்வதை அறிந்திலன்; திருமால்முதலியோர் தேடிக்காணாத சிவபெருமானும், உமாதேவியாரும், அவர் திருவருள் பெற்றோர் சிலருமன்றி உமது அற்புதத் திருவிளையாடலை அறியவல்லார் யாவர்? அடியேம் பாசத்தையும் பசுவையும் பகுத்து இஃதித்தன்மையது என்று அறிந்திலேம். பகுதிப்பொருளாகிய உமது பெருங்கருணைத் திருவிளையாடலை எவ்வாறு அறியவல்லேம்; சிற்றறிவுடையேம்; பாசத்தினின்றும் நீங்கிலேம்; ஆதலால் இந்திரன் தனது அஞ்ஞானங் காரணமாக உமது திருவிளையாடலைத் தீது என்று எண்ணி, உம்மோடு போர் புரிந்தனன். நீதிசேர் தண்டமே நீர் புரிந்தீர்; மற்றைத் தேவர்களும் அறியாமையால் உம்மை எதிர்த்து இறந்தார்கள். தாய்தந்தைகளே தமக்குப் பிழைசெய்த தம் புதல்வர்களைக் கொல்வார்களாயின், அவர்களுக்கு வேறு யாவர் அருள்செய்வார்? ஞானவடிவாகிய தீனபந்துவே! சரபமானது சிங்கத்தைக் கொல்வதன்றி மின்மினியைக் கொல்லுதல் வெற்றியாகுமா? அருட்பெருங்கடலே! வலியர்களாகிய அசுரர்கள் ஒழியும்வண்ணம் வேரோடறுத்தருளும்; எளியவர்களும் உம்முடைய திருவடிகளை மறவாதவர்களுமாகிய தேவர்களுடைய பிழையைப் பொறுத்தருளும். மரக்கலத்தினாலே தாங்கப்படுவோரும் அதனால் தங்கள் செல்வத்தை அடைதற்பாலருமாகிய வணிகர்கள் அதனைச் சாய்த்து அது கவிழ்ப்பத் தாம் இறத்தல்போல, உம்மாலே தாங்கப்படுவோரும் உம்மாலே

தங்கள் செல்வத்தை அடைதற்பாலருமாகிய தேவர்கள் உம்மைப் பொருது நீர் கொல்லத் தாம் இறந்தார்கள். தேவதேவ! உம்மு டைய அடித்தொண்டர்கள் செய்த பிழையைத் திருவுளங்கொள்ளா தொழிக. இவர்கள் இங்கு அறிவுபெற்று எழுமாறு திருவருள்செய் வீர்'' என்று விண்ணப்பஞ் செய்தார்.

முன்னவர்க்கெல்லாம் முன்னவராகிய முருகப்பெருமான் திரு முறுவல்செய்து இந்திரன் முதலிய தேவர்கள் ஐராவதத்தோடும் எழும் வண்ணம் திருவுளங்கொண்டருளினர். உடனே ஆகண்டலனாதி அமரர்கள் எழுந்து, மெய்யறிவுதோன்ற, தாங்கள் முன்செய்த செய் கையை அறிந்து, தாங்கள் போர்செய்தது முருகப்பெருமானோ டென்று அறிந்து, உள்ளங்கலங்கி, நடுநடுங்கி, எம்பிரானுடைய சரண கமலங்களில் பன்முறை வீழ்ந்து பணிந்து, துதித்து மொழிகுழறி, மெய் விதிர்த்து நின்றார்கள்.

கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்பரமதாம்
எந்தைநம என்றும்இளை யோய்நம குமாரநம் என்று தொழுதார்

இவ்வாறு தொழுதுநின்ற தேவர்களைக்கண்டு கந்தப்பெருமான் "வருந்தா தொழிமின், வருந்தாதொழிமின்" என்று திருவருள்செய் தார். தேவர்கள் துயரமும் அச்சமும் நீங்கி, கார்த்திகேய சுவா மியை வணங்கி, "எம்பெருமானே! அமிர்தத்தோடு நஞ்சு கலந்து உண்பவரை அந்நஞ்சன்றி அமிர்தமா கொல்லும்? அதுபோல, உமது திருவருளினாலே செல்வத்தைப்பெறக் கருதிய அடியேங்கள் உம் மோடு போர்புரிந்ததனால், நீர் எம்மைக்கொன்றீரல்லீர்; எமது அக் குற்றமே எம்மைக்கொன்றது. முன்னாளிலே சிவபெருமானை இகழ்ந்த தக்கனுடைய யாகத்தில் தரப்பட்ட பாகத்தை யாம் உண்ட அதி பாதகம் இன்னும் முடிந்திலது. அதனோடு உம்மைப்பொருந்த அதி பாதகமுங்கூடிற்று. எமது பரம பிதாவே! நீர் பரமகருணையால் இப் போது அடியேங்களைத் தண்டித்து அப்பாவங்களைத் தொலைத்தருளி னீர். ஆதலால், அடியேங்களுக்கு நீர்செய்த திருவருளுக்கு நாங் கள் செய்யுங் கைம்மாறு யாது? எங்களை உமக்கு அடியார்களாகத் தருவேமெனின், அநாதிமலபெத்த பசுக்களாகிய நாங்கள் அநாதி மல முத்தபதியாகிய உமக்கு என்றும் அடிமைகளேயன்றோ? அவ்

ஓம் குஹாய நம:

கற்பு

சாவித்திரி.

(280-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறு கூறிய அறக்கடவுளினது வசனங்களைக் கேட்ட சாவித்திரி, "உம்மால் இந்தப் பிரஜைகள் விதிப்படி ஸம்யமனம் (—அடக்குதல்) செய்யப்படுகின்றன. இந்த உயிர்களை நீர் விதியைச் செய்துகொண்டுபோகிறீர். உமது இச்சையினால் கொண்டுபோகிற தில்லை; தேவரே! அதனால், உமக்கு யமனுயிருக்கை பிரசித்தமாக இருக்கிறது. என்னால் சொல்லப்பட்ட இந்த வசனத்தையும் அறிந்து கொள்ளும். எல்லாப் பிராணிகளிடமும் செய்கையினாலும் மனத்தி னாலும் வாக்கினாலும் துரோகம் செய்யாமையும் அருளுடைமையும் கொடையும் சாதுக்களுடைய பழமையான தருமம். இந்த உலக மானது பெரும்பான்மையாக இவ்வண்ணமிருக்கிறது. மனிதர்கள் சக்தியினால் குறைந்தவர்கள்; ஸத்துக்கள் மட்டுமே தம்மைவந்தடைந் திருக்கிற பகைவர்களிடமும் கருணைபுரிகிறார்கள்" என்று சொன் னாள். இயமன், "தாகங் கொண்டவனுக்குத் தண்ணீர்போல உன்னால் இந்த வாக்கியம் உரைக்கப்பட்டது. கல்யாணி! இந்த சத்தியவானுடைய உயிரைத்தவிர வேறு விரும்புகிற வரத்தைக் கேள்" என்றான்.

சாவித்திரி, "என்னுடைய பிதாவான அச்சுவபதி மன்னர் புத்திரபாக்கிய மில்லாதவர். அப்படிப்பட்ட என் பிதாவுக்குக் குலத்தை வளர்க்கத்தக்க நூறு ஔரஸ புத்திரர்கள் உண்டாகவேண்

வாருக, அடியேங்களைப் புதிதாகத் தருவது எவ்வாறு? சிறுவர்கள் தங்களைத் தங்கள் தந்தையர்களுக்குத் தருவது தகுதியாமோ? அறி வில்லாதேம் செய்த பிழைகள் அனைத்தையும் திருவுளத்திற் கொள் ளாது பொறுத்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

(தொடரும்).

டும். இந்த மூன்றாவது வரத்தை உம்மிடம் பெற விரும்புகிறேன்" என்றாள். இயமன், "பாக்கியவதி! குலத்திற்கு இடையறாத தொடர்ச்சியை உண்டுபண்ணுகிறவர்களும் நல்ல ஒளியுள்ளவர்களு மான நூறு குமாரர்கள் உன் பிதாவுக்கு உண்டாகட்டும். அரச குமாரி! என்னால் உன் விருப்பம் நிறைவேற்றப்பட்டது. ஆதலால் திரும்புவாயாக; நெடுந்தூரம் வந்துவிட்டாய்" என்றான்.

சாவித்திரி, "கணவருக்கு அருகிலிருத்தலால் எனக்கிது தூர மன்று; என் மனமானது நெடுந்தூரம் ஓடுகிறதன்றோ? என் மனத்தில் தோன்றியதும் என்னால் சொல்லப்படுகிறதுமான இந்த வார்த்தையை நீர் போய்க்கொண்டே கேட்பீராக. பிரதாபமுடைய நீர் விவஸ்வானி (சூரிய) னுடைய புத்திரர்; அதனாலன்றோ கற்றறிந்தவர்கள் உம்மை வைவஸ்தர் என்று கூறுகிறார்கள்; ஈச்வரரே! பிரசைகள் பகை நட்பு என்னும் வேறுபாடில்லாத சமமான உமது ஆட்சியினால் வசப்பட்டு நடக்கின்றன. அதனால், உமக்கு இந்த உலகத்தில் தருமராஜர் எனப் படுதல் சித்தித்திருக்கிறது; சாதுக்களிடம் உண்டாகிறதுபோன்ற நம்பிக்கை தன்னிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆகையால், ஜனங் கள் சாதுக்களிடம் மிக்க நம்பிக்கை வைக்கிறார்கள்" என்று சொன் னாள். இயமன், "பெண்மணி! கல்யாணி! உன்னால் சொல்லப்பட் டதுபோன்ற வசனத்தை உன்னைத்தவிர மற்றவர்களிடத்தில் நான் இதற்குமுன் கேட்டதில்லை; இதனால் நான் சந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவனுடைய உயிரைத்தவிர வேறான நான்காவது வரத்தை கேட்டுக்கொள்; வரத்தைப்பெற்றுக்கொண்டு போவாயாக" என்றான்.

சாவித்திரி, "தேவ சிரேட்டரே! எனக்கும் சத்தியவானுக்கும் குலத்தை உத்தாரணஞ்செய்யும் நல்ல ஆற்றலுள்ள நூறு ஔரஸபுத் திரர்கள் உண்டாகவேண்டும்; இந்த நான்காவது வரத்தை உம்மிடத் தில் யாசிக்கிறேன்" என்றாள். இயமன், "பெண்ணே! பலமும் சக்தியுமுள்ளவர்களும் பிரீதை உண்டுபண்ணுகிறவர்களுமான நூறு புத்திரர்கள் உனக்கு உண்டாவார்கள்; உனக்கு சிரமமுண்டாகவேண் டாம்; திரும்பிப்போ; நெடுந்தூரம் வந்துவிட்டாய்" என்றான்.

சாவித்திரி, "அறக்கடவுளே! என்னைப்போன்ற பதிவிரதை களுக்கு எப்பொழுதும் பதியினிடத்திலிருந்து குழந்தைகளை உண்டு பண்ணிக்கொள்வதே சநாதன தருமம். பெரியோர்கள் வாத்தைக்

கொடுத்துவிட்டு என் கொடுத்தோமென்று வாட்டமடையமாட்டார்கள்; மனவருத்தத்தையு மடையமாட்டார்கள். சாதுக்களுக்கு சாதுக்களோடு சேர்க்கையானது பயனற்றதாகாது. சாதுக்கள் சாதுக்களிடத்தில் பயத்தையடையமாட்டார்கள்; சாதுக்கள் சத்தியத்தால் சூரியனை நடத்துகிறார்கள். சாதுக்கள் தவத்தினால் பூமியைத் தாங்குகிறார்கள். சாதுக்கள் சென்றதற்கும் இனி வருவதற்கும் கதியாக இருக்கிறார்கள். சாதுக்களுடைய மத்தியில் சாதுக்கள் காரியம் நடை பெறுமையால் வருந்துகிறதில்லை 'இது பெரியோர்களால் அன்போடு அடையப்பட்ட நிலைமையான ஒழுக்கம்' என்று அறிந்து சாதுக்கள் பிறருக்கு உபகாரத்தைச்செய்து அதற்குப் பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்க்கிறதில்லை. நல்லோர்களிடம் உண்டாகிற மகிழ்ச்சி வீணாகிறதில்லை; அர்த்தமும் அழிகிறதில்லை; கௌரமும் அழிகிறதில்லை; இந்த மூன்றும் நல்லோர்களிடம் நிலைத்திருப்பதால் அவர்கள் காப்பவர்களாகிறார்கள்" என்று சொன்னாள். இயமன், "பதிவிரதையே! அறங்களோடு கூடியதும் மனத்திற்கு அனுகூலமானதுமான வசனத்தைச் சொல்லச்சொல்ல எனக்கு உன்னிடத்தில் உத்தமமான பக்தி உண்டாகிறது. நிகரில்லாத வரத்தைப் பெற்றுக்கொள்வாயாக" என்றான்.

சாவித்திரி, "தரும பூபதி! எனக்கு நூறு மக்கள் உண்டாகும் வரத்தை நீர் கொடுத்தீர்; எனது பதியை நீர் கொண்டுபோனால் எனக்கு மக்கள் எவ்வாறு தோன்றும்? உமது வார்த்தையைக் காப்பாற்றவேண்டுமானால் எனது நாயகன் பிழைக்கவேண்டும்; என்னுடைய நாயகனில்லையேல் நான் மரித்தவள் போன்றவளே; கணவனைத் தவிர சுகத்தையும் சுவர்க்கத்தையும் உயிரையும் நான் விரும்பமாட்டேன்; அறக்கடவுளே! சத்தியம் உயிரினுக்கும் சிறந்ததன்றோ? நீர் புத்திர வரத்தைக் கொடுத்தீர்; அந்த சத்தியவாக்கை நிறைவேற்றுமாறு என்பதியை வழங்குவீர்; உமது வசனம் சத்தியமே ஆகுக" என்றாள்.

சாவித்திரியின் பொருளடங்கிய வசனத்தைக்கேட்ட கூற்றுவன் மனமகிழ்ந்து, அந்த பாசத்தை அவிழ்த்துவிட்டு, சாவித்திரியே! உன் பதியைக்கொடுத்தேன்; நல்லபொருளோடும் தருமத்தோடுங் கூடிய நின் இனிய மொழிகளால் உள்ளம் மகிழ்கிறேன்; உன் கணவனை அழைத்துக்கொண்டு போ; உன்னோடு நானூறு ஆண்டுகள் சுகமே வாழ்வான். யாகங்களைப் புரிந்து தேவர்களுக்கும் தருமங்

களைப்புரிந்து உலகத்திற்கும் மகிழ்ச்சியைத்தந்து பொன்றாத புகழை யடைவான், உன்னிடத்தில் நூறு குமாரர்களை உண்டாக்குவான். அந்த நூறு புத்திரர்களும் பிள்ளை பேரன்களுள்ளவர்களும், பிரசித்தி யுள்ளவர்களும் சாவித்திரர்களென்னும் உன் பெயருள்ளவர்களுமாக நிலைபெற்றிருப்பார்கள். உன் பிதாவுக்கு உன் மாதாவான மாளவி யிடத்தில் நூறு பிள்ளைகள் உண்டாவார்கள். உன்னுடைய தம்பி மார்கள் "மாலவர்கள்" என்னும் பெயருடன் புத்திர பௌத்திர பாக்கியங்களைப்பெற்று தேவதைகளுக்கு நிகரான "திருவாளர்க ளாக விளங்குவார்கள்" என்று தரும வேந்தன் சாவித்திரிக்கு நல் வரங்களை நல்கி, அவளைத் திரும்பிச்செல்லுமாறு செய்து தன்னுடைய இருக்கை சென்றான்.

அறக்கடவுளிடம் விடைபெற்ற சாவித்திரி தன் கணவனுடைய உயிரில்லாத உடம்பிருக்கிற இடம் சென்றாள். தரையில் கிடந்த கணவனுடலைக் கட்டியெடுத்துத் தன் மடியில் அவன் தலையை வைத் துக்கொண்டு பூமியில் அமர்ந்தாள். சத்தியவான் உயிர்ப்புற்று நினைவையடைந்து, தேசாந்திரம் போய்த் திரும்பிவந்தவன்போல் சாவித்திரியை அடிக்கடி நிமிர்ந்து பார்த்து, "நெடுநேரம் தூங்கி விட்டேன், என்ன காரணத்தால் என்னை நீ எழுப்பவில்லை? என்னை இழுத்த கறுத்த புருஷன் எங்கே?" என்று வினவினான். சாவித் திரி, "அரசகுமாரரே! நீர் நெடுநேரம் என்மடியில் தூங்கினீர். உயிர் களை அடக்கும் அந்த யமபகவான் போய்விட்டார், களைப்பாறிவிட் டீர்; கூடுமானால் எழுந்திரும்; இருளடர்ந்த இரவு வந்திருப்பதைப் பாரும்" என்றாள்.

சத்தியவான் சுகமாகத்தூங்கி எழுந்தவனைப் போல் எழுந் திருந்து எல்லாத்திசைகளையும் வனங்களையும் பார்த்து, "நல்ல இடை யுள்ளவளே! பழங்களைவேண்டி புறப்பட்டுவந்தேன்; கட்டையைப் பிளந்து தலைவலியுற்று நிற்கமுடியாமல் உன் மடியில் உறங்கினேன்; பிறகு கோரமான இருட்டையும் ஒளியுள்ள ஒரு புருடனையும் பார்த் தேன்; அது என்ன? சாவித்திரி! கனவா? உண்மைதானா? உனக்குத் தெரிந்தால் சொல் என்று வினவினான்.

சாவித்திரி, "விரத சீலரே! இரவு அதிகப்பட்டு வருகிறது; எல்லாவற்றையும் நடந்தபடி உமக்கு நாளைக்குச் சொல்வேன்; எழுந் திரும்; உமக்கு மங்களம்; தாய் தந்தையர்களைப் பார்ப்போம்; நடு

நிசியாய்விட்டது; இதோ அசுரர்கள் களிப்புடன் பயங்காமாகப் பேசிக்கொண்டு உலாவுகிறார்கள்; மிருகங்களுடைய கால்களால் மிதிக்கப்படுகின்ற சருகுகளின் சத்தங்களும் கேட்கிறது; இதோ நரிகள் என்னுடைய மனத்தை நடுங்கச்செய்து தென்மேற்குத் திசையை அடைந்து கோரமாக ஊளையிடுகின்றன; வாரும்" என்றாள். சத்தியவான், "இருள்மூடி வனம் பயங்கரமாக இருக்கிறது; உனக்கு வழியுந் தெரியாது; நடக்க வலியற்றிருக்கிறாய்" என்றான். சாவித்திரி, "காதல! இவ்விடத்திலிருக்க உமக்கு விருப்பமில்லையானால் அதோ ஓர் மரம் எரிந்துகொண்டிருக்கிறது; அங்கிருந்து நெருப்பைக்கொணர்ந்து நாற்புறமும் இந்த விறகுகளால் மூட்டி எரியச் செய்வேன்; வருந்தாதீர்; உம்மை நோயுள்ளவராகக் காண்கிறேன்; நாளை காலை ஆச்சிரமம் செல்லுவோம்; உமக்கு விருப்பமிருந்தால் இந்த இரவை இவ்விடத்தில் கழிப்போம்" என்றாள்.

சத்தியவான், "தலைவலி போய்விட்டது; உடம்பு நல்ல நிலையிலிருக்கிறது; தாய்தந்தைகளை உன் உதவியால் அடைய விரும்புகிறேன்; அகாலத்திலிருந்து ஒருபோதும் நான் ஆச்சிரமத்தினின்று சென்றதில்லை; மாலைக்காலம் வாராமலிருக்கும்பொழுதே என்னுடைய தாய் என்னைத்தடுப்பாள்; பகலிற்கூட நான் வெளியிற்போயிருந்தால் என் தாய் தந்தைகள் வருந்துவார்கள்; என் பிதா ஆச்சிரமத்திலுள்ளவர்களோடு என்னைத் தேடுவார். முற்காலத்தில் மிக்க துக்கத்தை அடைந்திருக்கிற தாய் தந்தைகளால் "நீ தாமதித்து வருகிறாய்" என்று பலவாறாக நிந்திக்கப்பட்டிருக்கிறேன்; இப்பொழுது நம்மைப் பற்றி அவர்கள் எவ்வாறு வருந்துகிறார்களோ என்று கவலைப்படுகிறேன். முன்பு ஒருகாலத்தில் முதியோர்களான மாதா பிதாக்களிருவரும், இரவில் கண்களில் நீர் பெருகுகின்றவர்களும் அதிக துக்கமுள்ளவர்களும் அன்புள்ளவர்களுமாகி "அருமைக்குழந்தாய்! உன்னைவிட்டு ஒரு முகூர்த்தகாலங்கூட நாங்கள் ஜீவித்திருக்கமாட்டோம்; புத்திர! நீ உயிரோடிருக்கும் வரையில்தான் நாங்கள் உயிர் வாழ்வோம். முதுமைப்பருவமுற்று குருடர்களான எங்கள் இருவருக்கும் நீ தான் கண்; உன்னால் நமது குலம் விருத்தியடைய வேண்டும்; எங்களிருவருக்கும் பிண்டமும் கீர்த்தியும் சந்தானமும் உன்னைச் சார்ந்திருக்கின்றன" என்று என்னைப் பார்த்துப் பலமுறை சொன்னார்கள். தாய் முதியவள்; தந்தையும் முதியவர்; அவ்விருவருக்கும் நானல்லவோ ஊன்றுகோல். அவ்விருவரும் இந்த இரவில்

என்னைப்பாராமையால் எவ்வாறு வருந்துவரோ? எந்த நித்திரையால் என் தாயும் தந்தையும் ஐயமுற்றுர்களோ? நானும் பெரும் ஆபத்தை அடைந்தேனே அந்த நித்திரையை வெறுக்கிறேன். தாய்தந்தையர் களைவிட்டு நான் உயிரோடிருக்க விரும்பவில்லை. கண்ணில்லாத என் பிதா மனங்குழம்பி ஆச்சிரமத்திலுள்ள ஒவ்வொருவரையும் என்னைப் பற்றி விசாரிப்பார்; இது நிச்சயம்; கல்யாணி! நான் தாய்தந்தைகளை கவனிப்பதுபோல் என்னுடைய க்ஷேமத்தையுங்கூட கவனிப்பதில்லை. முன்னறி தெய்வங்களாகிய என் அன்னையும் பிதாவையும் காப்பாற் றுவதற்காகவே நான் உயிரோடிருக்கிறேன். அவர்கள் எனக்கு முக்கியமான தெய்வங்கள்; என்னுல் எப்பொழுதும் வழிபடத்தக்க வர்கள். அவர்கள் விஷயத்தில் இப்படிப்பட்ட இந்த பழமையான விரதமானது எப்பொழுதும எனக்கு இருக்கிறது" என்றுன்.

தர்மாத்மாவும் குருபக்தியுள்ளவனுமான அந்த உத்தமன் இவ் வண்ணம் உரைத்து பெருந்துன்பத்தால் மூடப்பட்டவனுகி இரு கைகளையும் உயர எடுத்துக்கொண்டு உரத்த குரலுடன் அழுதான். துக்கப்பட்டு அழுகின்ற தீரனுகிய தன் கணவனைப்பார்த்து சாவித் திரி தன்னிரு கைகளாலும் கணவனது கண்ணீரைத் துடைத்து "என்னுல் தவமானது செய்யப்பட்டிருந்தால், என்னுல் தானமும் ஓமமும் செய்யப்பட்டிருந்தால், என்னுடைய மாமியாருக்கும் மாமனு ருக்கும் பதிக்கும் இந்த இரவானது நன்மையைத தருவதாகுக. விளை யாட்டுக்களிலும் இதற்குமுன் பொய் சொன்னதாக எனக்கு நினை வில்லை. அந்த சத்தியத்தால் என் மாமியாரும் மாமனுரும் உயிரோ டிருக்கவேண்டும்" என்று சொன்னுள். சத்தியவான், "மாதா பிதா க்களுடைய தரிசனத்தை விரும்புகிறேன்; தாமதிக்காமல் வருவாய். என் தாய்தந்தை உயிரோடிருக்கப்பார்ப்பேனே? தாய்க்காவது தந் தைக்காவது ஏதாவது தீங்கு நேர்ந்திருக்கக்கண்டால் நான் உயிரோ டிருக்கமாட்டேன். என்னைத்தொட்டு சத்தியம் பண்ணுகிறேன். உனக்கு எண்ணமிருந்தால், நான் உயிரோடிருக்க விரும்பினுல் எனக்குப் பிரியத்தைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் உனக்கு இருந்தால் விரைவாக ஆச்சிரமம் செல்வோம் புறப்படு" என்றுன்.

உத்தமியான சாவித்திரி, பிறகு எழுந்திருந்து கூந்தலை முடிந்து கணவனை இருகைகளாலும் தழுவித்தூக்கி நிறுத்தினுள். சத்திய வானும் எழுந்திருந்து கையினுல் அங்கங்களைத் துடைத்துக்கொண்டு எல்லாத் திசைகளையும் பார்த்துப் பழக் கூடையைப் பார்த்தான்.

உ

கார்த்திகேயன் துணை.

நாம் ஏன் பிறந்தோம்?

சச்சிதானந்தம்.

எத்தனையோ ஊழிகாலமாக எண்பத்துநான்கு லக்ஷ யோனி வாய்தோறு முற்பவித்து மரிக்கின்ற நாம் இப்பொழுது பெறுதற் கரிய பிறவியாகிய மனிதப்பிறவியைப் பெற்றுளோம். அதிலும் சிவாலயங்களில்லாத நாடுகளில் பிறக்காமல் சிவமணங் கமழும் பாரத நாட்டில் பிறந்தோம். அதிலும் கடவுள் இல்லையென்ற மரபில் பிறக் காமல் தெய்வ சிந்தனையையுடைய மரபிற் பிறந்தோம். அதிலும் கொலை களவு காமம் பொய் முதலிய துற்குணங்களில்லாத நற்றவத் தோரிடம் பிறந்தோம். அதிலும் ஆண்டவனால் அருளப்பட்ட கனத்த செந்தமிழை வளர்க்கும் பாரத புத்திரர்களிடம் பிறந்தோம்.

சாவித்திரி, நாயகனை நோக்கி, நாளை இந்தப் பழங்களைக் கொண்டு போவீர்; இந்த கோடாலியை நான் கொண்டுவருவேன்" என்று கூறி, பழம் நிறைந்த கூடையை ஒரு மரக்கிளையில் தொங்கவிட்டுக் கோடாலியை எடுத்துக்கொண்டு பதியருகில் வந்து, இடத்தோளில் பதியின் கரத்தை வைக்கும்படிச்செய்து, வலக்கரத்தால் அவனைக் கட்டிக்கொண்டு சென்றாள். சத்தியவான், "பயந்தவளே! நடந்து பழக்கமிருப்பதால் எனக்கு வழி தெரிகிறது; மரங்களின் நடுவில் காணப்படுகிற நிலவினாலும் வழி தெரிகிறது; கல்யாணி! எந்த வழி யாக வந்தோமோ அந்த வழியில் வந்தபடி செல்வாயாக; ஆலோசி யாதே. இந்தப் பலாசமரங்களடர்ந்த தோப்பில் வழியானது இரண் டாகப்பிரிகிறது; அதற்கு வடக்கில் எந்த வழியிருக்கிறதோ அந்த வழியில் விரைவாகச்செல். நான் சுகமாக இருக்கிறேன்; மாதா பிதாக்களை நான் பார்க்கவிரைகிறேன்" என்று சொல்லிக்கொண்டே பத்தினியுடன் விரைவாக ஆச்சிரமத்தை நோக்கிச்சென்றான்.

(தொடரும்).

அதிலும் மூத்தத்தின் இரகசியம், விகடம், மந்திரி கதை, இராஜா கதை, நாவல் முதலிய அறிவையொழித்து நரகத்திலுள்ளாக்கும் நூல்களைக்கற்காமல் பெரியோர்கள் கூறிய திருப்புகழ், தேவாரம், திருவாசகம், அருட்பா முதலிய முத்தியை நல்கும் நூல்களைக்கற்ற புண்ணியசீலர்களிடம் பிறந்தோம். அதிலும் (1) பாசப்பெயர், (2) பசுப்பெயர்களில்லாமல், (3) பதிப்பெயரையுடையவர்களுடைய வயிற்றில் பிறந்தோம். இவ்வருமையான் பிறவியை நாம் எதற்காகப் பெற்ருேம்? இப்பிறவியை நாம் அடைவதற்கு எவ்வளவோ சிரமத்தை யடைந்தோம். வடகடலிலுள்ள நுகத்துளையுள் தென் கடலிலுள்ள ஏர்க்கொம்பு காற்றின் வேகத்தினுலும் அலையின்வேகத்தினுலும் ஒன்ருகச்சேருவது எப்படி அருமையிலும் அருமையோ அதுபோல், நாம் மானிடப்பிறவியை பெறுவதற்கு புல்லாய், புழுவாய், மரமாய், கல்லாய், பாம்பாய், இன்னோன்ன பிற உயிர்களாகப் பிறந்து, சிறிது சிறிதாகப் புண்ணியத்தைச் செய்து, கிடைப்பதற்கரிய இம்மானிட யாக்கையைப் பெற்ருேம். "நூறுகோடி ஜன்மங்களில் நன்ருய் அநுஷ்டிக்கப்பட்ட புண்ணிய கர்மங்களாலன்றி கிடைப்பதில்லை

..........ஸதகோடி ஜன்மஸுகிருதை: புண்யைர் விஞலப்யதே என்று ஆதிசங்கரர் கூறியிருக்கின்ருர். மனித தேகத்தால்தான் ஆண்டவனைக்காணமுடியும்; மனித தேகத்தால்தான் பவசாகரத்தை கடக்கமுடியும்; ஆண்டவன் புகழைக் கூறவும் முடியும். வல்லீதேவ சேனுகாந்தனுக்குப் பணிவிடைசெய்வதற்குச் சாதகமாகவிருப்பதும் இம்மானிடப் பிறவியேதான்,

இத்யாதி காரணங்களால் தாயுமானுரும்:

எல்லரிய பிறவிதனில் மானிடப்பிறவிதா
னியாதினு மரிதரிது கா
ணிப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
யாது வருமோ வறிகிலேன் என்றும்

ஔவையார்—

"அரிதரிது மானிட ராத லரிது" என்றும்

(1) உலகத்தில் அழிதற்பாலனவாகிய பெயர்கள், (2) பிறத்தலை இறத்தலையுடைய சிறுதெய்வப்பெயர்கள்; (3) அறுமுகனுடைய பெயர்களும் அவனடியார்களுடைய பெயர்களுமாம்

அறநெறிச்சாரத்தில்—

" மக்க ளுடம்பு பெறற் கரிது " என்றும்

பதிபசுபாசவிளக்கத்தில்—

" மக்க ளாக்கையிற் பிறத்தலே யரிது " என்றும்

" அரிது மானிட யாக்கையிற் பிறத்தல் " என்றும்

திருமந்திரத்தில்—

" பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும் " என்றும்

சிவஞான சித்தியாரில்—

அண்டசம் சுவேத சங்கள் உற்பிச்சம் சராயுசத்தோ(டு)
எண்தரு நாலெண்பத்து நான்குநூ றுயிரத்தால்
உண்டுபல் யோனி யெல்லாம் ஒழித்துமா னுடத்து தித்தல்
கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியங் காண்

என்றும்

நம் அருணகிரிநாத சுவாமிகள் (அலங்காரத்தில்)—

" பெறுதற் கரிய பிறவியைப் பெற்று" என்றும்

வாராஹோபநிஷத் அத்தியாயம் 2–ல்—

" துர்லபம் ப்ராப்ய மாநுஷ்யம் " என்றும்

பிரம்மபுராணம்: அத்யாயம் 119-ல்—

" கதம் ஸில்லபதே ஜன்ம தேஹம் மாநுஷ்யகம்" என்றும்

கருடபுராணம்: உத்தரகாண்டம் அத்யாயம் 2-ல்—

" ....புத்தி மத்ஸு நர: சிரேஷ்டா " என்றும்

சங்கரர்: விவேகசூடாமணியில்—

" ஜந்தூ நாம் நரஜன்ம துர்லபமத: " என்னும்

மிகமிகச் சிறப்பித்துள.

மற்ற பிராணிகள் குறுக்காக வளர்கிறது; அவைகளுக்கு திரியக்கு ஜந்து என்று பெயர். மனிதர் மட்டும் மேல்நோக்கி வளர்கின்றனர். இதனாலேயே மனித ஜன்மம் உயர்வென்று அறியலாம். ஆகவே இவ்வரும் பிறவியை எதற்காக நாம் பெற்றோம்? எதற்காக மனத்தை யடைந்தோம்? எதற்காகக் கரத்தைப்பெற்றோம்? ஏனைய பிராணிகளுக்கு மனம் இல்லை. மனிதனென்றால் மனத்தையுடையவன் என்று ஒரு பொருள். எதற்காக ஆண்டவன் நமக்குமட்டும் இந்த உறுப்புக்களை படைத்திருக்கிறானென்று நாம் யோசிப்பதே கிடையாது. ஒரு எஜமானனானவன் ஒரு வேலைக்காரனிடத்தில் ஏர்க்

காலத்தந்து உழுது பயிர்செய்து ஜீவிப்பாய் என்று உத்தரவிட்டான். அந்த வேலைக்காரனானவன் அக்கலப்பையை எடுத்துக்கொண்டு அதனால் ஆய பயனை அடையாமல் அக்கலப்பைக்கு நல்ல பட்டுவஸ்திரம் கட்டினான்; நல்ல பூஷணங்களைப் பூட்டினான்; நல்ல வாசனைத்திரவியங்களைப் பூசினான்; அக்கலப்பையை காரில் வைத்துக்கொண்டு ஊர்வலமாக வந்தான். பெரியோர்கள் அவனைப் பித்தன் என்று கூறி சிரிக்கமாட்டார்களா? எஜமானன் சினந்து ஆட்களைவிட்டு தண்டனை செய்யமாட்டானா? அதுபோல் நாம் இருக்கின்றோம். எஜமானனாகிய ஆண்டவன் வேலைக்காரனாகிய ஆத்மாவினிடத்தில் ஏர்க்காலாகிய மனித ஜன்மத்தைத் தந்து அன்பு என்கிற நிலத்தையுழுது தருமம் என்ற விதையையூன்றி அதனால் விளைந்த சிவானுபோகத்தையுண்டு பிறப்பிறப்பாகிய பசியை நீக்கிக்கொள்வாயென்று கட்டளையிட்டால் நாம் அதை மறந்து இம்மனித சரீரத்துக்கு நல்ல பட்டுவஸ்திரத்தைச் சாத்தி, பூஷணங்களையணிந்து, சென்ட், அத்தர் முதலிய வாசனைத்திரவியங்களைப்பூசி; ரிக்ஷா, கோச்சு, மாரீஸ்மைனர் (Maurice Minor) முதலிய வாகனாதிகளிலேறி ஊர்வலம் வருகின்றோம். பற்றற்ற பெரியோர்கள் ஏன் நம்மைப்பார்த்து சிரிக்கமாட்டார்கள்? எஜமானனாகிய ஆண்டவன், தூறுவனாகிய இயமனைவிட்டு தண்டனை புரிவான். அந்தோ! மாமிசம், இரத்தம் இவைகளாற் பூசப்பட்டதாயும், தோலினால் மூடப்பட்டதாயும், துர்க்கந்தம் உள்ளதாயும், மலமூத்திரங்கள் நிறைந்ததாயும்; கிழத்தனம், துன்பம், வியாதிகளையுடையதாயும், அழியத்தக்கதாயும், அழுக்குள்ளதாயும் இருக்கிற இந்த சரீரத்தை போஷிப்பதிலேயே வாளாநாளைக் கழிக்கலாமா? பாழுங் கிணற்றிலிருக்கிற தவளையைப்போலல்லவோ நாம் சம்சாரத்தில் அழுந்தியிருக்கின்றோம். இதற்காகவா கிடைப்பதற்கரிய பிறவியைப் பெற்றோம்? ஐயோ! வாழைக்குருத்தைப்போல் இம்மனித சரீரத்தை உபயோகமற்றதாக்கி விடுகின்றோம். "சிறந்ததாகிய மானிடப்பிறப்பையடைந்தும் நல்ல நிலைமையிலுள்ள பொறிகளைப் பெற்றிருந்தும், யார் ஆன்மாவுக்கு நன்மையான காரியத்தை யறியவில்லையோ அவன் ஆன்ம பகைஞனாகிறான்.

பிரம்மதர்மத்தில்—

"ப்ராப்ய சாப்யுத் தமம் ஜன்மலப்த்வா சேந்த்ரிய ஸௌஷ்டவம்"

என்று கூறப்பட்டிருக்கிறது.

இச்சரீரம் நமக்குச் சொந்தமென்று எண்ணி மோசம்போகப் படாது. இச்சரீரம் இரவலாக வாங்கிக்கொண்டு வந்திருக்கிறோம். சரீரத்திற்குடையவன் ஒரு நாளைக்கு திருப்பி வாங்கிக்கொண்டுபோய் விடுவான். ஆகவே சரீரத்திற்குடையவன் கேளாமுன்னம் மனித சரீரத்தை எதற்காக இரவல் வாங்கிக்கொண்டு வந்தோம். இதனால் என்னகாரியம் செய்யவேண்டும் என்பதனை ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும். நாம் இதனைச் சுத்தமாகவே மறந்துவிட்டோம்! ஒருவன் மற்றொருவனிடமிருந்த ஈசாவாஸ்யோபநிஷத்து வியாக்யான புத்த கத்தை இரவலாக இரண்டு நாளையில் தருவதாக வாங்கிக்கொண்டு போனான். அப்புத்தகத்தில் நான்குவரிகளைப்படித்தபின்பு "ஹா ஹா! இப்புஸ்தகம் நன்றாக இருக்கிறது; இதற்குக்கடிதத்தையா அட்டையா கப்போடுவது" என்று அக்கடிதாசி அட்டையை நீக்கிப் பட்டுஅட்டை போடுவித்தான்! மறுபடியும் தனக்குத்தானே சொல்லிக்கொள்ளு கிறதாவது—"கிரந்தங்களுக்கெல்லாம் மேலானது உபநிஷத்து! அதற்கு உயர்ந்த அட்டையே இருக்கவேண்டு" மென்று எழுந்திருந் தான்; ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு தட்டான்வீட்டுக்குப்போய் "இப்புத்தகத்துக்கு தங்கத்தினால் அட்டையும் அவ்வட்டையின்மேல் விலையுயர்ந்த ரத்தினங்களையும் பதிக்கவேண்டு" மென்று தட்டா னிடம் ஆயிரம் ரூபாய் தந்தான். வேலை யாரம்பித்து நடத்திக் கொண்டுவர நாள் மூன்றாயிற்று; அப்போது இரவல் கொடுத்தவன் "இரண்டுநாளையில் திருப்பிக்கொடுக்கிறேன் என்று கூறினானே; இன்னும் வரக்காணோமே" என்று தானே அவன் வீட்டிற்குப் போக, அவன் வீட்டிலில்லாமையால் தட்டான் வீட்டில் சந்தித்தான். பணத்தைச் செலவழித்துத் தன் புத்தகத்தை அலங்கரித்துக்கொண் டிருப்பதையும் பார்த்தான்; ஓகோ! புத்தகத்திற்கே மோசம் வந்து விட்டாற்போலிருக்கிறதே! என்று நினைத்து இரவல் வாங்கினவ னுடைய கையில் அரைகுறையாய் வேலைமுடித்திருக்கிற தன் புத்த கத்தைப்பறித்துக்கொண்டு போய்விட்டான். அப்பொழுது இரவல் வாங்கிக்கொண்டுவந்தவன் யாது நினைக்கின்றான் "இரவலாக வாங்கிக் கொண்டுவந்த புத்தகத்தை இரவல் என்பதைத் மறந்துவிட்டேன்; எதற்காக இப்புத்தகத்தை வாங்கிக்கொண்டு வந்தோமென்பதையும் மறந்துவிட்டேன்; இரவல் புத்தகத்தைச் சொந்தமென்றெண்ணி, அதற்கு அலங்கரித்துக்கொண்டிருந்தேன்; புத்தகத்திலுள்ள கூடார்த் தங்களைத் தெரிந்துக்கொள்ளாமற் போனேன்; இனி என்னை நம்பி

இரவல் கொடுக்கமாட்டான்" என்று பற்பல எண்ணி ஏங்கிநின்றனன். இத்தன்மைபோல் அருமையான மானிடச் சரீரத்தை இரவலாகப்பெற்றிருக்கிற நாம் இச்சரீரம் இரவல் என்பதனை மறந்துவிட்டோம். எதற்காக சரீரத்தை இரவலாக வாங்கிக்கொண்டு வந்தோமென்பதையும் மறந்துவிட்டோம்!

"பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" மோக்ஷ சாதனத்திற்காகவே இச்சரீரமென்பதனை மறந்து இச்சரீரத்தை தனதாக எண்ணி இச்சரீரத்தையே அலங்கரித்துக்கொண்டிருக்கின்றோம். இச்சரீரம் போனால் மறுபடியும் மானிட சரீரம் கிடைக்காது; ஏனெனில் முன் இரவல் கொடுத்து மோசம் போனவன் மறுபடியும் இரவல் கொடுக்கமாட்டான். ஆகையால் இம்மானிட ஜன்மத்தையடைய முடியாமற்போகிறோம். ஆகவே, இந்த யாக்கை இருக்கும்பொழுதே நற்கருமங்களைச்செய்யவேண்டும். காயம், வாக்கு, மனம் என்ற திரிகரணங்களாலும் எப்பொழுதும் பாபத்தைச்செய்யப்படாது. பிறரது பொருளையடையவேண்டுமென்னும் விருப்பம், பிறரது கேட்டைக் கருதுதல், பரகதியும், கடவுளும் இல்லை என்ற கருத்து, இம்மூன்றும் மனதினால் செய்யும் பாபங்களாகும்; கடுஞ்சொல், பொய், புறங்கூறுதல், பயனில்சொல், இந்நான்கும் வாக்கினாற்செய்யும் பாபம்; கொடாத பொருளைக் கவர்தல், உயிர்களைக் கொல்லுதல், பிறர் மனைவியோடு சேருதல் இம்மூன்றும் உடலினால் செய்யும் பாபம்! இதனை பிராம்மதருமத்தில் முறையே

பாத்ரவ்யேஷ்வபித்யாநம் மநஸா(அ)நிஷ்டசிந்தனம்
விததாபி நிவேசஸ்ச த்ரிவிதம் கர்மானசம் என்றும்

பாருஷ்ய மன்ருதந்சைவ பைசுன்யந்சாபிசர்வச: அசம்
பத்தப்ரலாபஸ் சவாங்மயம் ஸ்யாச்சதுர்விதம் என்றும்

அதத்தாநுமுபாதானம் ஹிம்சாசைவரவிதானத:
பாதாரோபசேவாசசாரீரம் த்ரிவிதம் ஸ்ம்ருதம் என்றும்

கூறப்படுகிறது.

மனதினால் கெட்ட நினைவை நினைத்துப் பாவத்தை செய்கின்றோம். வாயினால் பொய் பேசி பாவத்தை செய்கின்றோம். உடலினால் பிறமாதரைத் தழுவுதல் முதலிய கெட்ட காரியங்களைச் செய்து பாவத்தை சம்பாதித்துக்கொள்ளுகிறோம். இதற்காகவா மனம்,

வாக்கு, காயங்களை நமக்கு ஆண்டவன் தந்திருக்கின்றார். வம்புகளும் பொய்களும் பேசினால் "வாக்கைக்கொடுத்துப்பயன் இல்லை" என்று வாயில்லாத ஜந்துக்களாகப் பிறக்கவைப்பான். ஆகவே, நம் ஆயுள் உள்ளவரை நல்ல காரியங்களைச் செய்யவேண்டும். நமக்கு ஆண்டவனால் தரப்பட்ட ஆயுள் நூறு வருடமாகும். வேதத்தில் 'சதாயு: புருஷ:' நூறு வயதுடைய மனிதன் என்றும் பர்த்ருஹரி ஆயுர் வர்ஷ சதம் நிர்ணும்...........என்றுங் கூறியிருக்கின்றார். நமக்கு ஆயுள் இருக்கும்போதே மனித சரீரத்தினா லடையவேண்டிய பேற்றை யடைந்தேதீரவேண்டும் எனெனில்

"இப்பவோ பின்னையோ மத்யகாலத்திலோ
இரவிபடும் நேரமதிலோ
இரவிலோ பகலிலோ உதயகாலத்திலோ
எந்தெந்த நேரமதிலோ
அப்பிலோ தீயிலோ நாயிலோ பேயிலோ
அரவிலோ இடியதனிலோ
ஆறாத புண்ணிலோ அடர்நோவு தன்னிலோ
ஆயுத வகைகள் எதிலோ
செப்பரிய வீட்டிலோ மேட்டிலோ காட்டிலோ
தெருவிலோ திண்ணை தனிலோ
செகந்தன்னில் எந்தெந்தவிட மதனிலோ
சீவன் விடுகின்ற நேரம்
................."

என்று கூறினாற்போல்

எப்போ தாகிலும் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றினும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்று நல்குர வறியான்
தீயா ரென்னான் செல்வரென் றுன்னான்
தரியா னொருகணம் தருசுனுளன்
உயிர்கொடு போவா னுடல்கொடு போகான்

ஆகவே இயமன் வந்து உடல் கொடுபோவதற்குமுன் மனதினால் நல்லகாரியங்களைச்செய்யவேண்டும். ஆண்டவருடைய ஆறெழுத்

தைச்சிந்திக்கவேண்டும், மனதைத்தந்த மஹானுபாவனுடைய பாதத்தைத் தியானம் செய்யவேண்டும். தியானம் எப்படிச் செய்ய வேண்டுமென்பதனை யஜுர் வேதத்தில் அமிர்தநாதோபநிஷத்தில்

அந்தவத்ப ஸ்யரூபாணி சப்தம்பதிரவச்ச்ருணு
காஷ்டவத்பஸ்ய வைதேஹம் ப்ரசாந்தஸ்யேதிலக்ஷணம்

(இதன் பொருள்) (குருடனைப்போல் ரூபங்களைப்பார்ப்பான், செவிடனைப்போல் சப்தங்களைக்கேட்பான், கட்டையைப்போல் சரீரத்தைப் பார்ப்பான் இதுவே சாந்தியை அடைந்தவனுக்கு லக்ஷணம்).

வாக்கை எதற்காகப்பெற்றோம்? ஆண்டவனுடைய புகழைப் பேசுவதற்காகவே. தோத்திரம் செய்யவேண்டும், சத்தியத்தைச் சொல்லவேண்டும்.

உடம்பை எதற்காகப்பெற்றோம்? கோயிலுக்குப்போய் வலம் வருவதற்காக, கண்களால் அவன் அழகைப்பார்க்கவேண்டும், கரங்களால் மலர்களைக் கொண்டு ஆண்டவனை அர்ச்சிக்கவேண்டும்.

பீடுறு மானிடப் பிறப்பு வாய்ந்துநல்
லேடவிழ் மலரின லிறையைப் பூசியார்
பாடமை நாளெலாம் பாழுக் கிறைப்பவர்
மூடரை எண்ணுங்கால் முந்தி நிற்பரே.

—பிரபுலிங்கலீலை.

நாம் ஒரு பச்சிலையைக் கோழிக்கொடியோன் பாதத்தில் சாத்தினல் உடனே மோக்ஷ உலகம் உண்டாகும். பிரமோத்ரகாண்டத்தில்:

பத்ர மாத்ரேண சந்துஷ்டோ போததாதி நிஜ:
பதம் அஹோ ஈஸ்வர பூஜாயா மஹாத்மியம் விஸ்மயாவஹம்

(இ-ல்) (ஒரு பச்சிலையால் பிரியமடைந்த ஈச்சுரன் தனது பதத்தையளித்தருள்கின்றான். ஐய! பரமேஸ்வரனுடைய பூசையின் மான்மியம் வியப்பாயிருக்கிறது) எனவே கரங்களினல் மலர்களைக் கொண்டு வாருலேயனைப்பூசித்து வந்தனைசெய்யவேண்டும் அதுதான் கரம் படைத்ததன் லாபமாகும். சுருங்கக்கூறுமிடத்து ஆவி; பொருள், உடம்பு மூன்றையும் ஆண்டவனுடைய விஷயத்திலேயே உபயோகித்தல் வேண்டும். அப்பொழுதுதான் ஆன்ம லாபத்தையடை

வோம் இனிப் பிறவா நெறியைப் பெறுவோம் இதற்காகத்தான் நாம் பிறந்தோம்,

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன் றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி யைம்புலன்களார
வந்தனை யாட்கொண் டுள்ளேபுகுந்த பிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டு மிலி தனியனேற்கே.

—வாதவூரர்.

உபதேசம்.

பிறரிடத்திற் பேசும்போது இனிமையாகப் பேசு; கடிந்து பேசாதே. உன்னிடத்தில் பிறர் கடிந்து பேசுங்கால் உன் மனம் எவ்வாறு வருந்துகிறது? அதுபோல் நீயும் கடிந்து பேசுங்கால் பிறர் மனம் வருந்தும். பகைவரிடத்திலுங்கூட இனிமையாகப் பேசு. உன்னுடைய இனிய மொழிகளால் பகைவருள்ளமும் கரைந்துவிடும்.

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருக்கக் காய் கவர்ந் தற்று.

என்ற உத்தரவேத சத்திய வாக்கை ஆழ்ந்து நோக்குக. நீ பேசுகின்ற ஒவ்வொரு சொல்லிலும் அமிர்தம் கலந்திருக்கட்டும். விடங் கலந்த வார்த்தையை எப்போதும் மறந்தும் பேசாதே. தாழ்ந்தவரிடத்தும், புதியவரிடத்தும், மற்றெல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசு.

உ
ஓம் குஹாயநம:
திருப்புகழமிர்தம்.
(All Rights Reserved)
" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 2 Vol. 2	ஈஸ்வர ௵ மாசி ௴ 1௳ பிப்ரவரி—1938	இதழ் 11. No. 11.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

உருக்கம் பேசிய நீலியர் காசுகள்
பறிக்குந் தோஷிகள் மோகவி காரிகள்
உருட்டும் பார்வையர் மாபழி காரிகள் மதியாதே
உரைக்கும் பீரிகள் கோளர வாமென
உடற்றுந் தாதியர் காசள வேமனம்
உறைக்குந் தூரிகள் மீதினி லாசைகள் புரிவேனோ
அருக்கன் போலொளி வீசிய மாமுடி
யனைத்துந் தானழ காய்நல மேதர
அருட்கண் பார்வையி னாலடி யார்தமை மகிழ்வோடே
அழைத்துஞ் சேதிகள் பேசிய காரண
வடிப்பந் தானென வேயெனை நாடோறும்
அதிக்கஞ் சேர்தர வேயரு ளாலுட னினிதாளாய்
இருக்குங் காரண மீறிய வேதமும்
இசைக்குஞ் சாரமு மேதொழு தேவர்கள்
இடுக்கண் தீர்கன னேயடி யார்தவ முடன்மேவி
இலக்கந் தானென வேதொழ வேமகிழ்
விருப்பங் கூர்தரு மாதியு மாயுல
கிறுக்குந் தாதகி சூடிய வேணிய னருள்பாலா

திருக்குந் தாபதர் வேதிய ராதியர்
துதிக்குந் தாளுடை நாயக னாகிய
சேகச்செஞ் சோதியு மாகிய மாதவன் மருகோனே
செழிக்குஞ் சாலியு மேகம ளாவிய
கருப்பஞ் சோலையும் வாழையு மேதிகழ்
திருசெந் தூர்தனில் மேவிய தேவர்கள் பெருமாளே.

பதவுரை.

இருக்கும் - இருக்குவேதமும், காரணம் மீறிய வேதமும் - காரணங்களைக் கடந்துநிற்கும் (தனிப் பெருஞ்சிறப்புடைய) தமிழ் வேதமும், இசைக்குஞ்சாரமும் - அவ்வேதங்களில் மறைந்துள்ள உட்கருத்துக்களைத் தெளிவாக விளக்கிக்கூறும் வேதசாரமாகிய ஆகமங்களும், (ஏ - பிரிநிலை) தொழு - தொழுதுவழிபட நின்றவரும், தேவர்கள் இடுக்கண்தீர் -தேவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தருளியவருமாகிய, கனனே - கண்ணியமுள்ளவரே !, தவமுடன் மேவி - தவவொழுக்கத்துடன் வந்து, இலக்கந்தான் என -இலட்சக்கணக்கான, (ஏ - அசை) அடியார் தொழ - அடியார்கள் தொழுது வழிபட, மகிழ் விருப்பம் கூர்கரு - மகிழ்ந்து அவ்வடியார்கள்மீது அன்புகொள்ளும், ஆதியுமாய் - முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளுமாய், உலகு இறுக்கும் - உலகங்களை எல்லாம் (சர்வசங்காரகாலத்தில்) சங்கரிக்கும் தனிப்பெருந்தலைவராய், தாதகி சூடிய வேணியர் - ஆத்திமலரையணிந்துகொண்டுள்ள சடைமுடியுடையவராய் எழுந்தருளியுள்ள சிவபெருமான், அருள்பாலா - அருளிய திருக்குமாரரே ! திருக்கும் தாபதர் - அறிவுக்கண்ணுடன் விளங்கும் முனிவர்களும், வேதியர் ஆதியர் - வேதங்களையுணர்ந்த அந்தணர் முதலியோர்களும், துதிக்குந் தாளுடை நாயகன் ஆகிய - தோத்திரம் புரியும் திருவடிகளையுடைய தேவர்களுக்குத் தலைவரும், செகச் செஞ்சோதியும் ஆகிய மாதவன் - செவ்விய செகச்சோதியாய் விளங்குபவருமாகிய திருமாலினது, மருகோனே - மருகரே! செழிக்கும் சாலியும் - செழிப்புடன் வளர்ந்துள்ள நெற்பயிரும், மேகம் அளாவிய கருப்பஞ் சோலையும் - மேகமண்டலத்தை அளாவிவளர்ந்துள்ள கருப்பஞ்சோலையும், வாழையும் - வாழைமரங்களும், (ஏ - அசை) திகழ் - எங்கும் விளங்கப்பெற்றுள்ள, திருச்செந்தூர்தனில் மேவிய - திருச்செந்தூர் எனும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள, தேவர்கள் பெருமாளே - தேவர்களுக்குத் தேவ

ராக விளங்குபவரே! உருக்கம் பேசிய நீலியர் - மனம் உருகும்படி நயமாகப் பேசுகின்ற கொடியவரும், காசுகள் பறிக்கும் தோஷிகள் - பணத்தைப் பிடுங்கும் பாவிகளும், மோகவிகாரிகள் - மோகத்தால் மனோவிகாரமுள்ளவர்களும், உருட்டும் பார்வையர் - சமயத்திற்குத் தக்கபடி கீழும் மேலும் பக்கமுமாகக் கண்களை உருட்டிப்பார்க்கும் தன்மையுடையவர்களும், மாபழிகாரிகள்-பெரிய பழிகளைக்கூறுபவர் களும், மதியாதே உரைக்கும் பீரிகள் - ஒருவரையும் மதியாமற்படி அலறிச்சத்தமிட்டுப் பேசுகின்றவர்களும், கோள் அரவாம் என-விடத் தையுடைய பாம்பைப்போல், உடற்றும் தாதியர் - வருத்துகின்ற தாசி களும், காசு அளவே மனம் உறைக்கும் தூரிகள் மீதினில் - அவரவ ர்கள் தரும் பணத்திற்குத்தக்க அளவிலேயே மனத்தை வைக்கும் துன்மார்க்கருமாகிய விலைமகளிர்மேல், ஆசைகள் புரிவேனோ - இனி அன்பு கொள்வேனோ? (கொள்ளேன்) அருக்கன்போல் - சூரிய பகவானைப் போல், ஒளிவீசிய - பிரகாசிக்கின்ற, மாமுடி அனைத்தும் தான் - பெருமைமிக்க இரத்தின கிரீடங்கள் யாவும், அழகாய் நலமே தர - காண்பவர்களுக்கு அழகாக விளங்கி நன்மையையே வழங்க, அருள்கண் பார்வையினால் - கருணை பொழியும் திருக்கண்பார் வையால், அடியார்தமை மகிழ்வோடே அழைத்தும் - அடியார் தமை மகிழ்ச்சியுடன் வலிய அழைத்தும், சேதிகள் பேசிய காரண - ஞானச் செய்திகளைப் பேசுகின்ற காரணப்பொருளே!, வடிப்பம் தான் என (ஏ-அசை) செப்பம் என்று சொல்லும்படி, நாள்தோறும் அதிக்கம் சேர்தர - (அடியேன்) மென்மேலும் மேன்மையடையும் வண்ணம், அருளால் உடன் - தமது திருவருளால் இக்கணத்தி லேயே, எனை இனிது ஆள்வாய் - அடியேனை இனிது ஆட்கொண் டருள்வீர்.

பொழிப்புரை.

இருக்கு வேதமும் காரணங்களைக் கடந்துநிற்கும் பெருஞ் சிறப் புடைய தமிழ் வேதமும், அவ்வேதங்களில் மயங்கக்கூறிய உண்மைப் பொருள்களைத் தெளிவுறக் கூறும் வேதசாரமாகிய ஆகமங்களும் தொழுது வழிபாடுசெய்ய நின்றவரும், தேவர்களது துன்பத்தை நீக்கி யருள்பவருமாகிய கண்ணியமுள்ளவரே! தவ வொழுக்கத்துட னடைந்து இலட்சக்கணக்கான அடியார்கள் வணங்க மகிழ்ந்து, அவர்கள்மீது அன்பு கொள்ளும் ஆதி பராபரவஸ்துவாக விளங்குபவ

ரும், சர்வ சங்காரகாலத்தில் உலகத்தைச் சங்கரிப்பவரும், ஆத்தி மலரைச் சூடிய சடாமுடியை யுடையவருமாகிய சிவபெருமானருளிய திருக்குமாரரே!, அறிவுக்கண்கள் விளங்கப்பெற்ற முனிவர்களும் வேதியர் முதலியவரும் துதிக்கும் திருவடிக்கமலங்களையுடைய தேவ சிரேட்டரும், செகச்செஞ் சோதியுமாகிய நாராயணாது மருகரே! செழிப்புடன் வளர்ந்துள்ள செந்நெற்பயிரும் மேகமண்டலம்வரை வளம்பெற்றோங்கிய கருப்பஞ்சோலையும் வாழையும் நெருங்கி விளங்கிக்கொண்டிருக்கும் திருச்செந்தூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய தேவர்களுக்குத் தேவரே! உருக்கமாகப்பேசி மனத்தைக்கவரும் நீலிகளும், பணத்தைப்பறிக்கும் தோஷிகளும், மோகத்தால் விகாரத்தன்மையுற்றவர்களும், மேலும் கீழும் பக்கமுமாக விழிகளை உருட்டிப்பார்க்கும் பார்வையுடையவர்களும், பெரிய பழியைச் சுமத்தும் பழிகாரிகளும், ஒருவரையும் மதியாமற்படி வேகமாகப் பேசுபவர்களும், நச்சுப்பற்களையுடைய அரவத்தைப்போல் பிறரைத் துன்புறுத்தும் தாசிகளும், அவரவர்கள் தரும் பணத்தின் அளவாகவே மனத்தைச் செலுத்தும் துன்மார்க்கிகளுமாகிய பொருட்பெண்டிர்மீது அடியேன் இனி ஆசைவைப்பேனோ? (ஒருபோதும் வையேன்) சூரியனைப்போல் ஒளிவீசுகின்ற பெருமைமிக்க மணி மகுடங்கள் அனைத்துமே அழகாகப் பார்ப்பவர்களுக்கு நன்மையே வழங்க, திருவருள்பொழியும் திருக்கண்பார்வையால் அடியார்களைச் சந்தோஷத்துடன் வலிய அழைத்தும் ஞான வுரைகளைப் பேசுகின்ற காரணவஸ்துவே! நடுநிலைமை என்று சொல்லும்படி அடியேனை தினந்தோறும் மென்மேலும் மேன்மையை அடையுமாறு தமது திருவருளால் உடனே அடியேனை இனிது ஆட்கொண்டருள்வீர்.

விரிவுரை.

அருக்கன்போல் . . . . . நலமேதர :—

முருகப்பெருமானுடைய ஆறு திருமுகங்களிலுமுள்ள எல்லா மணிமகுடங்களும் மிக்க ஒளியுடன் ஆறு இளங்கதிர்களைப்போல் பிரகாசித்துக்கொண்டு தெரிசிப்போர்களுக்கு நலன்களையே வழங்கிக் கொண்டிருக்கின்றன.

அருட்கண்பார்வை :—

குமாரக்கடவுளது பன்னிரண்டு விழிகளிலும் கடலைப்போல் அருள்வெள்ளம் வழிந்துகொண்டேயிருக்கிறது.

"மறுவறு கடலென மருவுப னிருவிழி
வழிந்த அருளே பொழிந்த தொருபால்" —வகுப்பு.

"துங்கநீள் பன்னிரு கருணை விழிமலரும்"
—திருப்புகழ்.

அக் கருணையொழுகுங் கடைக்கண்பார்வை ஒருமுறை நமது மேல் சற்றுபட்டவுடனே மும்மலங்களும் வெந்து நீறுகிவிடுகின்றன; மெய்ஞ்ஞானம் மிளிர்கின்றது; அப் பார்வையின் பெருமைதான் என்னே! என்னே! அதனைப்பெற்ற பரம குருமூர்த்தியாகிய அருணகிரியடிகளின் பாக்கியந்தான் என்னே!

"ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கியநு
பூதியடை வித்ததொரு பார்வைக்காரனும்"
—வகுப்பு.

"கனகத்தினு நோக்கினி தாயடி
யவர்முத்தமி ழாற்புக வேபர
கதிபெற்றிட நோக்கிய பார்வையு மறவேனே"
—திருப்புகழ்.

கந்தப்பெருமானுடைய அக் கடைக்கண் அருட்பார்வையால் இவை இவையுண்டாகுமென ஆசிரியர் பிறிதோரிடத்தில் கூறுமாறுங் கண்டு மகிழ்க.

"அலைகடல் வளைந்துடுத்த எழுபுவி புரந்திருக்கும்
அரசென நிரந் தரிக்க வாழலாம்
அளகையர சன்றனக்கும் அமரரர சன்றனக்கும்
அரசென அறஞ்செலுத்தி யாளலாம்
அடைபெறுவ தென்றுமுத்தி அதிமதுர சேந்தமிழ்க்கும்
அருள்பெற நினைந்து சித்தி யாகலாம்
அதிரவரு மென்றுமுட்ட அலகில்வினை சண்டைநிற்க
அடலெதிர் புரிந்து வெற்றி யாகலாம்
இலகியந லஞ்செய்புட்ப கமுமுடனிறம் வெளுத்த
இபவர செனும் பொருப்பு மேறலாம்
இருவரவர் நின்றிடத்து மேவரேவ ரிருந்திடத்தும்
ஒருவனிவ னென்றுணர்ச்சி கூடலாம்
எமபடர்தொ டர்ந்தழைக்கில் அவருட னெதிர்ந்துளுட்க
இடியென முழங்கி வெற்றி பேசலாம்
. . . . ,
பாருளீர் . . . வேலினுன். . . கடைக்கணியலையும்
நினைந் திருக்க வாருமே"

அடியார்தமை மகிழ்வோடே அழைத்தும் :—

கருணைக் கடவுளாதலால் கந்தப்பெருமான் அடியார்களை மகிழ்ந்து வலிய அழைத்து நல்லுரைகளைஉபதேசித்து அருள்புரிகிறுர்.

" அடியவ ரிச்சையில் எவைஎவை யுற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே"
—திருப்புகழ்.

காரண :—

உலகங்களுக்கும், சிருட்டியாதி யைந்தொழில்களுக்கும், பிற வற்றிற்கும் காரணமாய் நின்ற முழுமுதற் கடவுள் முருகப்பெரு மானேயாவர். இதனை, அப்பெருமானது திருவருட்டுணை கொண்டு ஞானவிழியால் நோக்கிய சூரபன்மன் வாயார வாழ்த்தி வழுத்து தலைக்கண்டு தெளிக.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கு
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றே.

இருக்குந் . . . . தொழு :—

குகமூர்த்தி வேதாகமங்களால் தொழப்பட்டவர் என்பதை
"ஆலமுண்ட கோன்அகண்ட லோகமுண்ட மால்விரிஞ்சன்
ஆரணங்கள் ஆகமங்கள் புகழ்தாளும்" —திருப்புகழ்.

தேவர்கள் இடுக்கண் தீர்கனனே :—

சூராதியவுணர்களால் நூற்றெட்டுயுகங்களாக தேவர்கள் துன் புற்று இனி இன்புறுங்காலமும் எய்துமோ? என்று ஏங்கி இளம் பூரணனாகிய எம்பெருமானிடம் தமதுகுறைகளை முறையிட, அறுமுகக் கடவுள் போந்து அவுணர்களது மறச் செயலையழித்து அறநெறியை வளர்த்து அமரர்கள் அல்லலை நீக்கி என்றுமழியா இன்பத்தை வழங்கினர்.

" அடியவர் வினையும் அமரர்கள் துயரும்
அறஅரு ளுதவு பெருமாளே.
" வானுடரசாளும்படிக்கு வாவா வென்வா வென்றழைத்து
வானோர் பரிதாபந் தவிர்த்த பெருமாளே"

கருத்துரை.

வேதாகமங்களால் தொழப்பட்டவரே! தேவர்துயர்தீர்த்த கனம் பொருந்தியவரே! ஆதிபராபரமுதல்வரும் சர்வசங்காரகர்த் தரும் ஆத்திமலரணிந்த வேணியருமாகிய சிவகுமாரரே! முனிவர் மறையோர் முதலியோர் துதிக்கும் செகச்சோதியாகிய திருமகள் கொழுநர் மருகரே! திருச்செந்திலாதிப! தேவதேவரே! பொருள் பறிக்கும் இருமனப் பெண்டிராகிய விலைமகளிர்மீது அன்புகொள் வேனோ? கொள்ளேன்); மென்மேலும் நன்மையடையுமாறு அடி யேனை உடனே யாட்கொள்வீர்.

உ

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(300-ம் பக்கத் தொடர்ச்சி.)

जनित्री पिता च स्वपुत्रापरादम्
सहे तेन किं देव सेनाधिनाथ ।
अहं चाति बालो भवान् लोकतातः
क्षमस्वाप राधं समस्तं महेश ॥

(30) ஜனித்ரீ பிதாச ஸ்வபுத்ராப ராதம்
ஸஹேதே நகிம்? தேவ ஸேனாதி நாத |
அஹஞ் சாதி பாலோ பவான் லோகதாத:
க்ஷமஸ் வாபராதம் ஸமஸ்தம் மஹேச ||

பதவுரை.

ஹே தேவ ஸேனாதி நாத! மஹேச! - ஓ தேவர்களுக்குச் சேனாபதியாகிய மஹேசுவரனே!
ஜனித்ரீ பிதாச ஸ்வபுத்ராபராதம் - தாயும் தந்தையும் பிள்ளையின் குற்றத்தை
ஸஹேதே கிம்? - பொறுக்கின்றார்களா? இல்லையா?
அஹம் ச அதிபால: - நானோ சிறுகுழந்தை,
பவான் லோக தாத: - தேவரீரோ உலகத்திற்குத் தந்தை,
அத: அபராதம் ஸமஸ்தம் க்ஷமஸ்வ - ஆகையினால் குற்றம் யாவும் பொறுத்தருளல் வேண்டும்.

பொழிப்புரை.

ஓ தேவ ஸேனாதிபதியாகிய பரமேசுவரரே! தாய் தந்தைகள் பிள்ளைகளின் பிழைகளைப் பொறுப்பது இயற்கையாதலால் உலகத்திற்கெல்லாம் தந்தையாகிய தேவரீர் சிறுவனாகிய அடியேனுடைய பிழைகளைப் பொறுத்துக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறீர்.

இதனால் முருகக்கடவுளே உலகத்திற்கு முதற்காரணரெனத் தெளிவாகக் கூறப்பட்டது.

नमः केकिने शक्तये चापि तुभ्यम्
नमस्छागतुभ्यं नमः कुक्कुटाय ।
नमःसिन्धवे सिन्धुदेशाय तुभ्यम्
पुनःस्कन्दमूर्ते नमस्ते नमोऽस्तु ॥

(31) நம: கேகினே சக்தயே சாபி துப்யம்
நமஸ் சாக! துப்யம் நம: குக்குடாய |
நம: ஸிந்தவே ஸிந்துதேசாய துப்யம்
புன: ஸ்கந்தமூர்த்தே! நமஸ்தே நமோஸ்து ||

பதவுரை.

கேகினே நம: சாக துப்யம் நம: - சுவாமியின் வாகனங்களாகிய மயிலுக்கும் ஆட்டிற்கும் நமஸ்காரம்,
சக்தயே சாபி துப்யம் - வேலாயுதத்திற்கும் நமஸ்காரம்.
குக்குடாய நம: - கொடியாகிய கோழிக்கும் நமஸ்காரம்,
ஸிந்தவே நம: - சமுத்திரத்திற்கும் நமஸ்காரம்,
ஸிந்துதேசாய துப்யம் நம: - சுவாமி வாசம்பண்ணும் சமுத்திரக்கரைக்கும் நமஸ்காரம்,
ஹே ஸ்கந்தமூர்த்தே - ஓ ஸ்கந்தமூர்த்தியே,
தே புன: நம: அஸ்துநம: அஸ்து- தேவரீருக்கும் மீண்டும்மீண்டும் நமஸ்காரம்,

பொழிப்புரை.

முருகக்கடவுளின் வாகனங்களாகிய மயிலையும் ஆட்டினையும் வேலையும் கொடியாகிய கோழியையும், எதிரில் விளங்கும் சமுத்திரத்தையும், சுவாமியின் வாசஸ்தலமாகிய சமுத்திரக்கரையையும், சுவாமியையும் மீண்டும் மீண்டும் நமஸ்கரிக்கின்றேன்,

இதனால் முருகக்கடவுளை அடுத்தவர்களும் அனைவர்களாலும் வணங்குதற்குரியவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(தொடரும்).

உ

ஓம் கந்தாய நம:.

கந்தர் திருவிளையாடல்

(306-வது பக்கத் தொடர்ச்சி.)

முருகக்கடவுள் விஸ்வரூபம்.

இந்திரன் முதலிய இமையவர்கள் இவ்வாறு விண்ணப்பம்புரிய எந்தை கந்தவேள் அது கேட்டு, "நம்மை நீங்கள் ஒரு பாலன் என்று நினைந்து பொருதீர்கள்; நமது வன்மையையும் பெருமையையும், இன்னும் நீங்கள் உணரும்வண்ணம் காட்டுவேம்" என்று திருவாய்மலர்ந்து எட்டுத்திக்குக்களும், பதினாறு உலகங்களும், எட்டு மலைகளும், ஏழு கடல்களும், புறக்கடலும், சக்ரவாளகிரியும், வெவ்வேறண்ட நிரைகளும், சருவான்மாக்களும், பிரமவிட்டுணு உருத்திரர்களும் அடங்கிய பரமேசுர ரூபத்தைக்கொண்டருளினர்.

எண்டிசையு மீரேழ திறத்துலகு மெண்கிரியு மேழ கடலுந்
தெண்டிரையு நேமிவரை யும்பிறவும் வேறுதிரி பாகியுள சீர்
அண்டநிரை யானவு மனைத்துயிரு மெப்பொருளு மாகி யயனும்
விண்டுமா னுஞ்சேறிய வோருருவு கொண்டனன் விறற் குமரனே.

ஏழு பாதாள லோகங்கள் திருவடியிலும், ஏழு தீவுகளின் புடவி கணைக்காலிலும், ஏழுகடல்கள் உடுத்த உடையிலும், திசைகள் புயங்களிலும், ஆகாயம் நாபியிலும், தியுவென்னும் சுவர்க்கஞ் சென்னியிலும், சந்திரன் சூரியன் அக்கினி என்பன அழகிய மூன்று கண்களிலும், மேலாய மேகங்கள் கேசங்களிலும், விண்மீன்கள் அக்கேசாலங்கிருத மலர்நிலைகளிலும், சிவபரம்பொருள் ஆன்மாவிலும் (சிவசத்தியாகிய) கௌரி மதியிலும், (விட்டுணுவாகிய) சனார்த்தனர் இடப்பாரிசத்திலும், பகவானாகிய பிரமதேவன் வலப்பாரிசத்திலும், பாரதி வேதவாக்கிலும், இலக்குமி திருநிலையிலும், பிராணன்முதலிய பத்துவாயுக்களும் வாயுநிலையிலும், காலாக்கினி ருத்திரன் சீற்ற நிலையிலும், அக்கினிதேவன் சாடராக்கினியிலும், அனந்தாதி மாநாகங்கள் நூபுரம் முதலிய காலணிகளிலும், ஓடதியனைத்தும் உரோமங்களிலும், அண்டகோடிகளெல்லாம் அவ்வுரோமங்களின் மேய பேன்

2

முட்டை நிலையிலுமாகக் காணப்பட்டுச் சுடர்கோடி பகற்கதிரெனக் குளிர் கோடி இராக்கதிரென, மிளிர்கோடி காலாக்கினியெனப் பிரகாசியாநின்ற தனது பரமாற்புத வுறையுளான அப்பாரமேசுவர வடிவினை அளப்பறு மகிமையுடைய அரகுமாரனாகிய சுப்பிரமண்யமூர்த்தி காட்டியருளினார். அவ்வடிவினொளியினால் தரிசித்த தேவர்களது விழிகள் (கணப்போது) பார்வையின்றி மாழ்கின. சுரர்களாகிய பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவசிரேட்டரனைவரும் கந்தக்கடவுளது அளவிலாத் தேஜோ மண்டபத்தில் ஆயிரத்தில் ஓரமிச அளவேயறிந்தனர். (அதிகமறிய வலியிலராயினார்).

ஸப்த பாதாள பாதந்தத் ஸப்தத்வீ போர்விஜங்ககம் !
ஸப்தார்ணவ பரீதாநந் தீக்பாஹு வ்யோம நாபிதத் !!
த்யுசிரச் சந்த்ர ஸூர்யாக்நி நயநத்ரய பேசலம் !
பாஞ்ஜல தகேசந்தத் தாராதுஸ்ம தும்பிதம் !!
சிவச்சாத்மா மதிர்கௌரி வாமபார்ச்வம் ஜநார்த்தந: !
தக்ஷிணம் பகவாந்ப்ரஹ்மா பாரதி வைதிகீசவாத் !!
லக்ஷ்மிர் லக்ஷ்மிச்சபவன: ப்ராணாதி தசபேதபாத் !
மந்யு: காலாக்நி ருத்ரோக்நிர் ஜாடரஸ் ஸமுதாஹ்ருத: !!
அநந்தாதி மஹாநாகா: பாதநூபுர ஹம்சகா: !
ரோமாண்யோஷத யோபூரி யூகாண்டாந்யண்டகோடய: !!
தத்கோடி ஸூர்யஸம்காசம் கோடிசீதாம்சுசீதளம் !
கோடி காலாக்நி தேஜஸ்கம் பரமம்ருபமத்புதம் !!
அதர்சயதமேயாத்மா ப்ரஹ்மண்யோ ஹரஸம்பவ: !
தேஜஸாதஸ்ய தேவாநாம் சக்ஷூம்ஷ்யந்தீ க்ருநாந்பஹோ !!
ததஸ்தே விபுதேந்த்ராத்யா ப்ரஹ்ம விஷ்ண்வாதயஸ்ஸுரா: !
தத்தேஜோ மண்டலஸ்யைதே ஸஹஸ்ராம்சம லோகயந் !!

இவ்வாறு ஆயிரத்தில் ஓரமிசத்தை அவனருளாற் காணுந் திவ்விய விழிகளைப்பெற்ற விட்டுணுமுதலிய தேவர்கள் முழந்தாள்வரையிலுமுள்ள உரோமங்கள் ஒரோவொன்றிலும் ஆயிரக்கணக்கான பலகோடி பேன்முட்டைகள் அடுக்கடுக்காய்ச் செறிவுற்றிருத்தலையும் பிரமாண்டகோடிகளாம்; அம்முட்டைகளுள் உலகங்களையும், அவையவற்றுள் அதனையதனைச்சார்ந்த இறப்பு நிகழ்வு வரவு என்னுங் காலங்கட்குரிய பல்புவனங்களையும், மன்பதையினையும், பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவர்களையும், அவ்வவ்வாவரணங்களையும் கண்ணுற்று, "ஆ! ஆ!! இவை யென்னே? இஃதென்னே?" என இறும்பூதுற்றுப் பெரிதும் அஞ்சிநின்று, வேதவாக்கியங்களால் என்

ணிலாத தோத்திரங்களைச் செய்து வணங்கி, "ஞானனந்தவடிவாகிய முழுமுதற்கடவுளே! அடியேங்கள் முன் நீர் கொண்டருளிய விசுவ ரூபத்தை முற்றும் தரிசித்திலேம்; அடியேங்கள் முற்றுந் தரிசிக்கும் வண்ணம் காட்டியருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். பெருங்கருணைக்கடலாகிய குமாரக்கடவுள் திருவுளமிரங்கித் தேவர் களுக்குத் திவ்விய நேத்திரத்தைக்கொடுத்து, அநந்தகோடி சூரியர் கள் திரண்டாற்போலப் பேரொளியை வீசிநின்ற தமது பரமேசுர ரூபத்தைக் காட்டியருளினர். தேவர்கள் அறுமுகக்கடவுளுடைய திருவுருவமுற்றையும் அடிமுதன் முடிவரையும் அவரது திருவருளி னாலே தரிசித்து, ஆனந்த பரவசர்களாய் வணங்கிநின்று, "எம்பெரு மானே! பிருதிவியண்டமுதலிய அண்டங்களும், அங்கங்குள்ள தேவர்களும், உயிர்ப்பொருள்களும், உயிரில் பொருள்களும், பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும், உமது திருமேனி யில் இருப்பக்கண்டேம். உமது திருமேனியா அகிலமும் இருப்பது? விசுவமெல்லாம் நீரேயாய் இருக்கும் உண்மையை அடியேங்கள் இந் நாள்காறும் அறிந்திலேம்; தேவரீரே வந்து அறிவித்தமையால் இப் பொழுது அறிந்தேம்; உமது திருமேனியே யன்றிப் பிறிதொரு பொருளையும் காணேம். உமது திருவடிவத்தைச் சிறியேங்கள்காண வல்லமா? ஒரு பிரமன் இறந்தபோது விட்டுணு பேருருவங்கொண்டு திருப்பாற்கடலிலே துயில்செய்யும் அகந்தையை ஒழிக்கும்வண்ணம் சிவபெருமான் அண்டங்களெல்லாம் ஆபரணங்களாக ஒரு திருமேனி கொண்டருளினர் என்னும் தன்மையை உமது திருமேனியிற் கண் டேம். எம்பெருமானே! உமது திருவுருவம் பிரமாவும் திருமாலும் பலகாலமுந்தேட, அவர்களுக்குத் தோன்றாது அக்கினி வடிவாய் நின்ற சிவபெருமானது திருவுருவமேபோலும். எம் பரமபிதாவே! இதனை யாவரும் அறிகிலர். எங்களைப்போல உமது திருவருளைப் பெற்று அடியையும் முடியையும் தெரிந்தவர் யாவர்? திருமாலும் திசைமுகனும் உலகத்தோடும் ஒருவரை யொருவர் விழுங்கி உந்தி யாலும் முகத்தாலும் தோற்றுவித்து இருவரும் மாறுபடும்பொழுது எடுத்த பேருருவங்கள், நீர் கொண்டருளிய திருவுருவத்துக்கு மிகச் சிறியனவேயாம். ஆதலால், எம்பிரானே! நீர் அருவமும் உருவமு மாய் நின்ற ஏகநாயகரேயாம். அடியேங்கள் செய்த தவத்தினாலே சூராதியவுணர்களைக்கொன்று அடியேங்களுடைய துன்பத்தை நீக் கும்பொருட்டுப் பாலராய் திருவவதாரஞ் செய்தருளினீர். எவ்வுரு

வங்களுக்கும் ஓரிடமாயுள்ள உமது திருவுருவத்தைத் தரிசித்துச் சிறப்படைந்தேம். இருவினைப்பயன்களை நுகர்தற்கெடுத்த சரீரத் துன்பம் நீங்கிவிடுவேம் இனி நாங்கள் பிறவித்துன்பமடையாது நிரதிசய முத்தியின்பத்தை அடைவேம்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். பிறகு, முருகக்கடவுளுடைய விசுவரூபத்தை நோக்கி மனம் மிக வெருவச் சரீரம் அலமரமயங்கி, "எம்பெருமானே! உமது திருவுருவம் அளப்பில்லாத ஒளியையுடையது; இனிப் பார்க்கும் ஆற்றலில்லை; கண்கள் ஒளி யிழந்தன; அன்றியும் இதன் பெருமையை நோக்கி அஞ்சுகிறேம். அடியேங்கள் உய்யும் வண்ணம் முன்னைத்திருவுருவங்கொண்டு எளியேங்களை ஆண்டருள்வீர்" என்று வேண்டினார்கள்.

குமாரக்கடவுள் தமது விசுவரூபத்தை ஒழித்து, ஆறுதிருமுகங்களோடும் முன்னைவடிவங்கொண்டு நிற்க, இந்திரன் வணங்கித் துதித்து, பெருங் கருணைநிதியே! சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று, அடியேனும் தேவர்களும் தொண்டுசெய்யச் சுவர்க்கத்தைத் தேவரீர் அரசுசெய்துகொண் டிருத்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தான். தம்மை வழிபடும் அடியார்களுக்கு அவரவர் வேண்டியவாறே இம்மை மறுமை வீடுகளைக்கொடுத்தருளும் பெருங்கருணைக்கடலாகிய அறுமுகக்கடவுளுக்கு, இந்திரன் தன்னரசைக் கொடுப்பதாகச்சொல்லிய வாசகம் அக்கினிதேவனுக்கு ஒரு தீபம் கொடுக்க எண்ணியதைப்போலும் கந்தப்பெருமான் இந்திரனை நோக்கி நகைத்து, "நீ நமக்குத்தந்த அரசை நாம் உனக்குத்தந்தேம்; நீங்கள் சேனைகளாக நாமே சேனாதிபதியாகி அசுரர்கள் எல்லோரையும் கொல்வேம்; வருந்தாதொழி" என்று அருளிச்செய்தார் இந்திரன் அதுகேட்டுத் தேவர்களோடும் மகிழ்ச்சியுற்று, முருகக்கடவுளை நோக்கி, "எந்தையே! இவ்வண்டத்துள்ள மலைகள், கடல்கள், உலகங்கள், உயிர்கள் முதலியனவெல்லாம் இந்நாளில் உம்மாலே முறைபிறழ்ந்தன. அவைகளையெல்லாம் முன்புபோல நிறுவியருளும்" என்று வேண்டினான். எம்பெருமான் இளநகைபுரிந்து, "இவ்வண்டத்தில் நம்மாலே முறைபிறழ்ந்தன எல்லாம் பண்டைய நிலையை அடையக்கடவன" என்று திருவாய்மலர்ந்தருள, அவையெல்லாம் உடனே முன்னை நிலைமை அடைந்தன. அனைவரும் அதுகண்டு அற்புதமடைந்து நின்றார்கள்.

அப்பொழுது இந்திரன் கந்தவேளை வணங்கி, மூவர் தேவாதிகள் தம்பிரானே! வேதமுடியிலே விளங்காநின்ற உம்முடைய திருவடிகளைப் பூசிக்க விரும்புகின்றோம். அது செய்யும்வண்ணம் திருவருள் புரிக" என்று வேண்டினான். முருகக்கடவுள் அதற்கியைந்து, தேவர்கள்பின்தொடர நடந்து, மகாமேருமலையை நீங்கி, திருக்கயிலை மலைக்கு அணித்தாயுள்ள ஒரு மலையைஅடைந்தார். அப்பொழுது தேவதச்சனை நினைக்க, அவன் இந்திரன் முன்வந்து கைதொழுது நிற்க, இந்திரன் அவனை நோக்கி, "நீ இங்கே ஒரு திருக்கோயில் செய்யக்கடவாய்" என்றான். தேவதச்சன் அங்கே நவமணிகள் பதித்த ஒரு செம்பொன்னாலயமும், அதனுள்ளே ஒரு திவ்விய சிங்காசனமுஞ்செய்தான். தேவர்கள் பலர் இந்திரனுடைய ஏவலினாலே திருமஞ்சனம், சந்தனம், நறுமலர், தூபம், தீபம், நிவேதனப் பொருள்கள் முதலிய பூசோபகரணங்களையெல்லாம் கொண்டுவந்தார்கள். அப்பொழுது இந்திரன் கந்தப்பெருமானை வணங்கி, "சுவாமி! தேவரீருடைய திருவடித்தாமரைகளை அடியேங்கள் பூசித்து உய்யும் பொருட்டு இப்பொன்னெடுங்கோயிலுக்குள் எழுந்தருள்க" என்று பிரார்த்தித்தான். வேதப்பொருளாகிய முருகப்பெருமான் அது கேட்டு, அமரர்களை அனைவருந் துதிப்பத் திருக்கோயிலினுள்ளே புகுந்து, மணித்தவிசின் மீது வீற்றிருந்தருளினார். அப்பொழுது இந்திரனும் ஏனைய தேவர்களும், "ஞானநாயகரே! அடியேங்கள் உமக்குச் சேனையாக நீர் சேனாதிபதியாகுக" என்று ஆகாய கங்கா சலத்தினால் திருமஞ்சனமாட்டி, செம்பட்டு ஆடைசாத்தி, சந்தனக் குழம்பு மட்டித்து, திவ்வியாபரணங்கள் அணிந்து, நறுமலர் மாலைகள் சூட்டி, தூபதீபங்காட்டி, பூசைசெய்து வலஞ்செய்து, வணங்கித் தோத்திரம்பண்ணினார்கள். அதன்பின் முருகக்கடவுள் அங்குநின்று மறைந்து, திருக்கைலாசமலையை அடைந்தார். கந்தசுவாமி தேவர்கள் பூமாரி பெய்து பூசிப்ப எழுந்தருளியிருந்தமையால் அம்மலை கந்தவெற்பெனப் பெயர்பெற்றது. கந்தவெற்பை நீங்கி, இந்திரன் மனோவதி நகரத்தை அடைந்தான்; மற்றைத்தேவர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் தானத்திற் சென்று முன்போலிருந்தார்கள். திருக்கைலாச மலையை அடைந்த முருகக்கடவுள், இலக்கத்தொன்பது வீரர்களும் பூதர்களும் சேவிப்ப, அங்கே எழுந்தருளியிருந்தார்.

(தொடரும்).

ஓம் குஹாய நம:

கற்பு

சாவித்திரி

(512-வது பக்கத்தொடர்ச்சி)

இதே சமயத்தில், தியுமத்சேனன் சிறந்தவன்மையும் கண்பார்வையும்பெற்று எல்லாவற்றையும் பார்த்தான் ; அவன் பத்தினியாகிய சைப்யையுடன் எல்லா ஆச்சிரமங்களிலுஞ்சென்று புத்திரனைத்தேடி அதிகமான துக்கத்தை அடைந்தான். அந்தத் தம்பதிகளிருவரும் அந்த இரவில் ஆச்சிரமங்களிலும் நதிகளிலும் வனங்களிலும் தடாகங்களிலும்போய்த் தேடினார்கள். ஏதாவது சத்தத்தைக் கேட்டால் புத்திரனுடைய சத்தமோ என்கிற சந்தேகத்தால், அந்தச்சத்தமூண்டான இடத்தை நோக்கி, "சாவித்திரியோடு சத்தியவான் வருகிறான்" என்று பேசிக்கொண்டார்கள். தர்ப்பங்களும் முட்களும் உடம்பைக்கிழிக்க, கால்கள் தேய்ந்து உதிரமுண்டாகி வருந்த பித்துப்பிடித்தவர்களைப்போல் ஓடினார்கள். அவ்வனத்துள்ள முனிவர்கள் இவர்களது பரிதாபநிலைமைக்கண்டு மனம்வருந்தி அவர்களைத்தேற்றி ஆச்சிரமத்தில் அழைத்துக்கொண்டுவந்துவிட்டார்கள். முனிவர்கள் அந்த மன்னனைச்சூழ்ந்து இருந்து பண்டையரசர்களுடைய ஆச்சர்யகரமான கதைகளைச் சொல்லி சமாதானப்படுத்தினார்கள். வயது சென்றவர்களான அவ்விருவர்களும் ஆறுதலையடைவிக்கப்பட்டும் புத்திரனைப் பார்க்கவேண்டுமென்கிற விருப்பத்தால், அவனுடைய இளமைப்பருவந்தொட்டுள்ள அழகிய சரித்திரங்களையும், சாவித்திரியின் குணநிசயங்களையும் ஒருவருக்கொருவர் நினைப்பூட்டிக்கொண்டு துன்பக்கடலில் மூழ்கித்தவித்தார்கள். துயரத்தால் மிகவும் வாடிய அவ்விருமுதுகுரவர்களும், "ஆ! புத்ரா! எங்கே இருக்கிறாய்? ஆ! மருமகளே! ஆ! பதிவிரதையே! எங்கே இருக்கிறாய்?" என்று ஓலமிட்டு இரக்கமாகக் கதறிக்கொண்டு அழுதார்கள்.

அங்கிருந்தவர்களுள், சத்தியமான வாக்குள்ள சுவர்ச்சஸன் ஒரு வேதியர் அவ்விருவரையும்பார்த்து, "இந்தச் சத்தியவானுடைய

மனைவியான சாவித்திரியம்மை தவமும் இந்திரிய நிக்கிரகமும் ஆசாரமுமுள்ளவளாக இருத்தலால், இவன் உயிரோடிருக்கிறான்" என்றார். கௌதமர், "வேதங்களையும் அங்கங்களையும் ஓதியுணர்ந்திருக்கிறேன்; பெரியதவம் செய்திருக்கிறேன்; கௌமாரதசைதொடங்கிய பிரமசரியவிரதத்தை யனுஷ்டித்திருக்கிறேன்; குருவையும் அக்கினியையும் திருப்திசெய்திருக்கிறேன்; மனஅடக்கத்துடன் எல்லா விரதங்களையும் அனுஷ்டித்திருக்கிறேன்; எப்பொழுதும் காற்றைப் புசித்துக்கொண்டு உபவாசமாக இருக்கிறேன்; இவ்விதமான ஒழுக்கத்தாலும் தவத்தாலும் பிறர்செய்யவிரும்பிய எல்லாவற்றையும் நான் அறிகிறேன்; "சத்தியவான் உயிரோடிருக்கிறான்; என்ற எனது வசனத்தை உண்மையென்று அறியுங்கள்" என்றார். சீடன், எனது குருநாதருடைய வாக்கிலிருந்து வெளிப்பட்ட சொல்லின்படியே சத்தியவான் சுகமாக இருக்கிறான்; இது ஒருபோதும் பொய்யாகாது" என்று சொன்னான். இருடிகள், "இந்த சத்தியவானுடைய மனைவியான சாவித்திரி சௌமங்கல்யத்தை உண்டுபண்ணுகிற எல்லா நல்லிலக்கணங்களோடும் கூடியிருத்தலால் உமது மகன் ஜீவித்திருக்கிறான்" என்றார்கள். பாரத்துவாசர், "சாவித்திரிதேவி மகாபதிவிரதையா யிருத்தலால் இவன் உயிரோடிருக்கிறான்" என்றார். தால்ப்யர் "உமக்கு கண்கள் விளக்கமுற்றமையாலும், சாவித்திரி விரதத்தைச்செய்து ஆகாரஞ்செய்துகொள்ளாமலே கானகஞ்சென்றமையாலும், சத்தியவான் யாதொரு தீங்குமின்றி சுகித்திருக்கின்றான்" என்றார். ஆபஸ்தம்பர், எதனால் மிருகங்களும் பறவைகளும் தெளிந்திருக்கிற திசையில் உமக்குப் பூமிசம்பந்தமான பெருக்கத்தைச்சொல்லுகின்றனவோ அதனால் சத்தியவான் உயிரோடிருக்கிறான்" என்றார். தௌம்யர், "எல்லா நற்குணங்களும் ஜனங்களுக்குப் பிரியமானவனும் நல்லிலக்கணங்களுள்ளவனுமாக இருத்தலால் உம்முடைய புத்திரன் தீர்க்காயுளுள்ளவனாக இருக்கிறான்" என்றார்.

சத்தியவாக்குள்ள அந்தத்தவசிகளால் இவ்வண்ணம் தேற்றப்பட்ட தியுமத்சேனன், அத்தருமவசனங்கள் முழுமையும் ஆராய்ந்து உறுதியுள்ளவன்போலானான். பிறகு ஒரு முகூர்த்தகாலத்திற்குப் பின், சாவித்திரி தனது கணவனுடன் மிக்கமகிழ்ச்சியுடன் அந்த இரவிலேயே வந்து ஆச்சிரமத்தில் புகுந்தாள். அங்கிருந்த எல்லாரும் பார்த்தவுடன் எழுந்திருந்தார்கள்; மகிழ்ந்தார்கள். சத்தியவானு

டைய தாய்தந்தைகள் அவனுடைய கழுத்தைக்கட்டிக்கொண்டு அழு தார்கள், மறையோர்கள், "வேந்தே! புத்திரனோடு சேர்ந்தவனும் கண்களை அடைந்தவனுமான உன்னைப்பார்த்து நாங்கள் எல்லோரும் உன்னுடைய க்ஷேமத்தை வினவுகிறோம்; குணசீல! புத்திரனது வரவு, சாவித்திரியின் தரிசனம், கண்ணொளியைப்பெற்றது இந்த மூன்றினாலும் நீ வளர்ச்சியை அடைந்திருக்கிறாய்; எங்களெல்லோ ராலும் எது சொல்லப்பட்டதோ அது அப்படியேயாகும்; இதில் ஐய மில்லை. மேலும் மேலும் செல்வப்பெருக்கமானது உனக்கு விரை வாகவே உண்டாகும்" என்றார்கள் பிறகு அந்த அந்தணர்கள் அனைவரும் அங்கு அக்கினியை நன்றாகப் பிரகாசிக்கச்செய்து தியுமத் சேனனருகில் உட்கார்ந்தார்கள். சைப்யையும் சத்தியவானும் சாவித்திரியும் ஒருபுறத்தில் நின்றார்கள். அவர்கள் துன்பம் நீங்கி எல்லாராலும் அனுமதிகொடுக்கப்பட்டு உட்கார்ந்தார்கள்.

அரசனுடன் உட்கார்ந்திருந்த முனிவர்கள் ஆவலுடன் மன்னர் மகனை நோக்கி, "அரசகுமார! யாது காரணத்தால் பத்தினியுடன் முன்னரே வரவில்லை? ஏன் நடுநிசியில் வந்தாய்? உனக்கு என்ன தடை ஏற்பட்டது? பிரபுவே! மாதாவும் பிதாவும் நாங்களும் வருத்தத்தையடைந்தோம்; உனது தாமதத்தின் காரணத்தை யறி யோம்; அதனை நீ யுரைப்பாய்" என்று வினவினார்கள். சத்திய வான், "பிதாவினால் அனுமதிகொடுக்கப்பட்ட நான் சாவித்திரியுடன் சென்றேன்; வனத்தில் விறகுகளைப் பிளக்கும்பொழுது எனக்குத் தலைவலியுண்டாயிற்று; வேதனையினால் நான் நெடுநேரம் தூங்கிவிட் டேனென்று எண்ணுகிறேன்; இதற்குமுன் ஒருபொழுதும் நான் அவ்வளவுநேரம் தூங்கினவனல்லேன்; உங்களனைவருக்குமே சந்தா பம் உண்டாகவேண்டாமென்கிற காரணத்தினால் நடுநிசியில் நான் இங்கு வந்தேன். இந்த விஷயத்தில் வேறு காரணம் இல்லை" என்றான்,

கௌதமர், "சத்தியவானே! நின் தந்தைக்குத் திடீரென்று கண் கிடைத்திருக்கின்றது; இதற்குக் காரணத்தை நீ அறியாய்; சாவித்திரி சொல்வதற்குத் தகுதியுள்ளாள். சாவித்திரி! ஒளியினால் உன்னை சாவித்திரிதேவியைப்போலவன்றோ அறிகிறேன்? இந்த சம்பவத்தின் காரணத்தை நீ அறிவாய்; ஆகையால், உண்மையைச் சொல்" என்று வினவினார் சாவித்திரி, "நீர் அறிந்தது சரிதான்; உங்களுடைய எண்ணம் வேறுவிதமாகாது; எனக்கு ரகசியம் ஒன்று

மில்லையன்றோ ? உண்மையையுரைப்பேன். மகாத்துமாவான நாரத முனிவர் எனது பதியின் மரணத்தைக்கூறினார். அன்று தொடங்கி யான் நியமத்துடன் விரதங்களையனுஷ்டித்து என்பதியின் தீர்க்கா யுளைவேண்டித் தவவொழுக்கத்துடனிருந்தேன். நாரதர் குறிப்பிட்ட அந்த நாள் இன்றுவந்துவிட்டது; அதனால் இன்று நான் இவரைத் தனியாக விடவில்லை ; உறங்கிக்கொண்டிருக்கிற என் கணவரது பக்கத்தில் அறக்கடவுள் வந்தார் ; அவர் இவரைப் பாசத்தாற் கட்டிக் கொண்டு பிதுருக்களாலடையப்பட்ட திசையில் கொண்டுபோனார்; நான் அவரைத் தொடர்ந்துபோய் சத்தியமான வசனத்தால் அந்த யமபகவானைத் துதித்தேன் ; அவர் எனக்குத் தனித்தனியாக ஐந்து வரங்களை வழங்கினார், எனது மாமனாருக்குக் கண்களும் இராஜ்ய மும் உண்டாகுமாறு இருவரமும், எனது பிதாவுக்கு நூறுபுத்திரர் களும் எனக்கு நூறு புத்திரர்களும் உண்டாகுமாறு இருவரமும், என் கணவர் நானூறு வருடம் சுகித்திருக்க ஒரு வரமுமாகும். பதி யினுடைய உயிரை விரும்பி இந்த விரதத்தை நான் உறுதியுடன்செய் தேன். இதுதான் நடந்த சம்பவம். இந்த எனது துன்பம் முடிவில் இன்பமாய் முடிந்தது என்றாள்.

இருடிகள், “கற்பிற் சிறந்த காரிகையே ! நற்குலத்திற் பிறந்த வளும் நல்லொழுக்கமும் விரதமும் புண்ணியமும் பொருந்தியவளு மான உன்னால் இருள்மயமான மடுவில் முழுகுவதும் துன்பமாகிய மிருகத்தால் துரத்தப்பட்டதுமாகிய அரசனுடைய குலமானது மீண் டும் கைதூக்கி மேலேவிடப்பட்டது. பாக்கியவதியே ! உன்னால் பிறந்த வீடும் புகுந்தவீடும் பெருமையுற்றன” என்றார்கள். ஒன்று சேர்ந்திருக்கிற மாதவர்கள் மகாபதிவிரதையாகிய அந்த உத்தமியை பலவாராகப் புகழ்ந்தும் பூசித்தும் மன்னனிடம் விடை பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் தங்கள் வீடுகளுக்குச் சுகமாகச் சென்றார் கள்.

அந்த இரவுகழிந்து சூரியன் உதித்தவுடன் அந்த எல்லாத்தவசி களும் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு ஒன்றுகூடினார்கள். தியு மத்சேனனும் சைப்பையும் மருமகளது பெருமையை நினைந்து வாயார வாழ்த்திக் கொண்டாடினார்கள். மகரிஷிகள் சாவித்திரியி னுடைய மகிமையை தியுமத்சேனனுக்கு அடிக்கடி சொல்லியும் இன் னும் சொல்லவேண்டுமென்ற விருப்பமே கொண்டார்கள். பிறகு சால்வதேயத்திலிருந்து எல்லா ஜனங்களும் அரசனிடம் வந்தார்கள்.

அவனுடைய திருவடியில் விழுந்து வணங்கி, “ தங்களுடைய மந்திரியார் அந்தப் பகைவனைக் கொன்றுவிட்டார்; அரசரே! பகைவனுடைய படை பயந்து ஓடிவிட்டது ; எல்லா ஜனங்களும் “ கண்ணுள்ளவரோ கண்ணில்லாதவரோ அந்த தியுமத்சேனரே நமக்கு அரசராக இருக்கவேண்டும்” என்று ஒரே எண்ணமாக இருக்கிறார்கள் ; இந்த நிச்சயத்துடன் ஜனங்களால் அனுப்பப்பட்டோம். இதோ வாகனங்களும் தங்களுடைய நால்வகைச் சேனைகளும் வந்திருக்கின்றன. மண்டலேசுவரரே! புறப்படுவீராக ; உமக்கு மங்களம்- உம்முடைய ஜயமானது நகரத்தில் முழக்கப்பட்டது. உமது மூதாதைகள் பரம்பரையாக அரசுசெய்துவந்த அரியணையில் வீற்றிருந்து நெடுங்காலம் அரசு செய்வீராக” என்று சொல்லி மலர்ந்த கண்களுடன் அரசனைத் திரும்பவும் வணங்கினார்கள்.

பிறகு, மன்னன், அந்தத் தவ வனத்திலுள்ளவர்களும் வயது முதிர்ந்தவர்களுமான எல்லா முனிவர்களிடமும் பிரியா விடைபெற்றுக்கொண்டு நகரத்தைக்குறித்துச் சென்றான். சைப்யையும் சாவித்திரியோடுகூட சேனையினால் சூழப்பட்டவளாக நல்ல விரிப்புகளுள்ளதும் ஒளிவீசுவதும் மனிதர்களால் தூக்கப்பட்டதுமான பொற்பல்லக்கிலூர்ந்து தனது நகரஞ் சேர்ந்தாள். நல்ல நாளில் புரோகிதர்கள் சகலவைபவங்களுடன் தியுமத்சேனனுக்கு மகுடாபிஷேகஞ் செய்தார்கள். ஒப்பற்ற வீரனாகிய சத்தியவானுக்கு இளவரசு பட்டாபிஷேகம் புரிந்தார்கள். இந்த நற்செய்திகளைக்கேட்டு சாவித்திரியின் பிதாவாகிய அச்சுவபதிமன்னன் பரிவாரங்களோடுவந்து, சம்பந்தியையும் மருமகனையும் மகளையும் பார்த்து கொண்டாடி, மகளது அற்புதச்செயல்களைக்கேட்டு, உடலும் உளமும் பூரித்து, குலத்தைவிளக்க வந்த கொடியிடையாளை வாழ்த்தினான்.

சில நாட்களுக்குப்பின், சாவித்திரிக்குப் புகழை வளர்க்கிற தேவகுமாரர்களைப்போன்ற நூறு புத்திரர்கள் பிறந்தார்கள். அப்படியே மத்திரதேசாதிபதியாகிய அச்சுவபதிக்கு மாளவியிடம் சூரர்களும் போரில் பின்வாங்காத வீரர்களும் மிக்க பலசாலிகளுமாகிய நூறு குமாரர்கள் பிறந்தார்கள். சாவித்திரியினால் தான், தகப்பன், தாய், மாமியார், மாமனார், கணவன், குலம் ஆகிய அனைவரும் கரையேற்றப்பட்டார். மகா பதிவிரதா சிரோன்மணியாகிய அவ்வுத்தமியால் தந்தையின் குலமும் தனது கணவனது குலமும் வளர்ச்சியுற்

உ

கார்த்திகேயன் துணை.

வானப்பிரஸ்தம்.

(159-வது பக்கத்தொடர்ச்சி)

இந்த வானப்பிரஸ்த ஆச்சிரமத்தைப்பற்றி முற்காலத்தில் மகானுபாவராகிய வியாசமுனிவர் தமது புத்திரராகிய சுகருக்குச் சொல்லியுளார். புண்ணியமிகுந்தவர்களும் ஆன்மலாபத்தையடைய விழைகின்றோரும் இதனை அன்புடன் மேற்கொள்வர். இது மனிதனுக்கு மூன்றாவது நிலை; கிருகஸ்தனானவன் எப்பொழுது உடலில் தோல் சுருக்கத்தையும் நரையையும் பௌத்திரனையும் பார்ப்பானோ அப்பொழுதே வனத்தை யடையவேண்டும். வானப்பிரஸ்த நிலையை யடையுங்கால் தன் மனைவியைப் புத்திரனிடத்தில் வைத்துவிட்டாயினும், தன்னோடு கூட்டிக்கொண்டாயினும் வனத்திற்செல்லவேண்டும். அவ்வாறு வனத்திற்சென்று மனத்தையடக்கித் தவஞ்செய்தல் வேண்டும். ஆயுளின் மூன்றாவது பாகத்தில் இதனை மேற்கொள்ள வேண்டும். சடையும் தாடியும் மீசையும் நகமும் வளர்த்துக்கொண்டும், மரவுரி மான்றோல் முதலியவைகளை உடுத்திக்கொண்டும், தழைகளினாற் செய்யப்பட்ட குடிசைகளில் வாசஞ்செய்தல்வேண்டும். தெய்வ வழிபாடும் நியமமுடையவனாயிருக்கவேண்டும். ருசியைக் கருதாது பசித்தபோது கிடைத்த உணவை உண்ணல்வேண்டும். ஆறாவதுகாலத்தில் (பகல் பதினெட்டேமுக்கால் நாழிகை, $1\frac{1}{2}$மணி) உணவருந்தல்வேண்டும். தவறு செய்யாமல் தவநிலையிலேயே காலங் கழித்தல்வேண்டும். அதிதிகளுக்கு அன்னமிடுவதற்காகவும் தனது பசியை யாற்றுவதற்காகவும் சிலர் அந்த அந்தச் சமயத்திலேயே

றன. ' எல்லோருக்கும் மகிழ்ச்சியைத்தந்து இன்றும் என்றும் அழியாத புகழுடம்பைப்பெற்று நிலவுகிறாள்,

பெண்மணிகள் இக்கற்பரசியின் உத்தமமான சரித்திரத்தை அன்புடன் ஊன்றிப்படித்து, அவ்வண்ணம் நல்லொழுக்கத்தை மேற்கொண்டு பிறந்த வீட்டையும் புகுந்த வீட்டையும் வளர்ச்சியுறச் செய்து பொன்றாப்புகழைப் பெறுவார்களாக. அங்ஙனமே " எனதுளமேவிய ஸ்ரீ வள்ளிநாயகியார் " திருவருள்புரிவாராக.

(தொடரும்).

தேடி உடனே செலவழிக்கிறார்கள் ; சிலர் ஒரு மாதத்திற்கும், சிலர் ஒரு வருடத்திற்கும், சிலர் பன்னிரு வருடத்திற்கும் தேடிவைத்துக் கொள்ளுகிறார்கள். ஊரில் உண்ணத்தக்க உணவுகளைவிட்டு வனத்திலுள்ள கனி கிழங்கு முதலியவைகளையே உண்ணல்வேண்டும், அவை கிடையாதொழியின், மற்றை வானப்பிரஸ்தரிடத்திலேனும் வனவாசஞ்செய்யும் கிருகஸ்தரிடத்திலேனும் பிக்ஷையேற்று உண்ணலாம். அவர்களும் இல்லாதபோது ஊரிற்போய் எட்டுக்கவள அன்னம் வாங்கிப் புசிக்கலாம். மழைக்காலத்தில் ஆகாய வெளியிலும் பனிக்காலத்தில் தண்ணீரிலும், வேனிற்காலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலும் இருந்துகொண்டு தவஞ்செய்தல்வேண்டும். தரையில் படுத்தல்வேண்டும். சிலர் கால்நுனிகளால் நின்றும், பலவகை ஆசனங்களைப்போட்டுக்கொண்டும் இருந்து தவம்புரிகின்றனர். சிலர் பற்களையே உரலாக உடையவர்கள்; சிலர் கல்லினால் தேய்த்து அரிசியாக்குகிறார்கள். சிலர் சுக்லபக்ஷத்தில் ஒருவேளை சூடுள்ள கஞ்சியைப் பானஞ்செய்கிறார்கள். சிலர் கிருஷ்ணபக்ஷத்தில் அவ்விதமே பானஞ்செய்கிறார்கள் அல்லது முன்வழக்கப்படி அன்னத்தையாவது புசிக்கிறார்கள், முப்பொழுதும் நீராடி அக்கினிகாரியங்களைச்செய்து விரதங்களை அனுஷ்டித்தல்வேண்டும். வேத சிரசுகளாகிய உபநிடதங்களையே பாராயணஞ்செய்தல் வேண்டும். அகத்தியர், சப்த இருடிகள் மதுச்சந்தர், அகமர்ஷணர், ஸாங்க்ருதி, ஸுதிவாதண்டி, யதாவாசர், அக்ருதசர்மர், அகோரவீர்யர், காவ்யர், தாண்டியர், மேதாதிதி, புதர், பலவான், கர்ணநிர்வாஹர், சூன்யபாலர், கிருதசர்மர் முதலியோர் இவ்வானப்பிரஸ்த தருமத்தில் இருந்து பரகதிபெற்றார்கள். வானப்பிரஸ்தனுக்கு புணர்ச்சி கூடாது. கோபமும் மோகமும், நட்பும் பகையும் இல்லாமல் சர்வபிராணிகளுக்கும் இதத்தையே செய்துக்கொண்டு சாந்தமுள்ள மனத்துடன் இருத்தல்வேண்டும். காமாதியறுபகைவரையும் வென்று, இந்திரிய அடக்கத்துடன் இருத்தல் வேண்டும். இவ்வாறு நியமத்துடனும் உறுதியுடனும் இந்த வானப்பிரஸ்த நிலையில் நிற்பவன் அழிவில்லாத மோக்ஷவுலகை யடைகின்றனன். அவனுடைய தவவொளியானது விண்ணுட்டை அலங்கரிக்கும். அவனுக்கு நிகரானவர் மூவுலகிலுமில்லை. அவனுக்கு அடையத்தகாதபொருள் எந்த உலகத்திலுமில்லை. இகபரசித்தியை யடைகின்றனன்.

ஓம் குஹாய நம:

நான்கு இரத்தினங்கள்

(1) தான்செய்த தருமத்தைப்பற்றி தானே புகழாமலிருத்தல்; (2) ஒருவருக்கு ஒன்றைக்கொடுத்தபின் அது விஷயத்தில் மனம் வருந்தாமலிருத்தல்; (3) ஒரு பொருளை ஒருவன் கேட்கும்போது "எல்லாம் உங்களுடையதே" என்றுகூறி ஏமாற்றுமலிருத்தல்; (4) அளவுக்கு மீறிய பொறுமை; இந்த நாற்குணங்களும் நம்மால் அவசியம் அனுஷ்டிக்கத்தக்கவை.

(1) அநேகர் தாங்கள் செய்த தருமத்தைப் பலரறியுமாறு தாமாகவே சொல்லிக்கொள்ளுகிருர்கள். "இந்தக்கோயில் நான் கட்டிவைத்தது; இந்த தருமச்சாலை என் சொந்த செலவில் கட்டப்பட்டது; எங்கள் வீட்டில் தினம் 10 பேர் சாப்பிடுகிருர்கள்; என்று இப்படி தாங்கள் செய்யும் தருமத்தைத் தாமாகவே புகழ்ந்து கூறுவதால் அத்தருமத்தின் பலன் குறைகிறது. ஆதலால் தருமஞ்செய்யும் உத்தமசிலர்கள் இந்த விஷயத்தில் கவனிப்புடன் தம்முடைய தருமங்களைத்தாமாக மிகமிக அவசியம் என்று தோன்றுத காலங்களிலெல்லாம் புகழ்ந்து கூருமலிருத்தல் வேண்டும்.

(2) சிலர் தருமத்தைச் செய்துவிட்டு பின், "அதிகம்கொடுத்துவிட்டோம்" "நம்மை ஏமாற்றி வாங்கிவிட்டார்கள்" "தொந்தரையாகிவிட்டது" என்று பலவாறுகூறி மனம் வருந்துகிருர்கள். அதனால் தாம் செய்த தருமத்தின் பலன் பாதிக்குமேல் குறைந்துவிடுகின்றது. அப்படி வருந்தியதால் என்ன பயன்? ஏதாவது பொருள் வருமா? தருமத்தையுஞ் செய்துவிட்டு பலனையும் இழந்துவிடுகின்றுர்கள். ஆதலால் தருமத்தில் விருப்பமுடைய அன்பர்கள் இந்த விஷயத்தில் ஞாபகஞ்செலுத்தி தருமஞ் செய்துவிட்டு "ஏன் கொடுத்தோம்" "அதிகம் தந்துவிட்டோம்" என்று வருந்தாதிருக்கவேண்டும்.

(3) சிலர் தங்களை யாராவது ஒரு பொருளைக்கேட்டால், "இது மட்டுமா? "எல்லாம் உம்முடையதே, உங்களுடைய பொருளை நான் என்ன தருவது? இந்தவீடும் தங்களுடையதே" என்று மிகவும் நய

மாகவும் உபாயமாகவும்பேசி முடிவில் அந்தப் பொருளைக் கொடுக்கா மலே தந்திரஞ்செய்துவிடுகிறார்கள். அது அறிஞர்களால் வெறுக்கத் தக்கது. ஆதலால் ஒருவன் ஒரு பொருளைக்கேட்டால் "உம்முடை யதே" என்று நம்புமாறு கூறி பலகாலும் அவனை அலையவிடாமல் முதலிலேயே "இது தருவதற்கில்லை" என்று கூறிவிடுவது உத்தமம்.

(4) என்ன துன்பம் நேர்ந்தாலும், பெரியோர்கள் எதை எப் படி கேட்டாலும், தன்னை எப்படி நிந்தித்தாலும் அன்னியர்களால் என்ன இன்னல் வந்தாலும் பொறுமையுடனிருப்பது. இந்த வகை யான பொறுமை மேற்கொண்டவனை யுகமுடிவில் தோன்றும் சண்ட மாருதத்தாலும் அசைக்கமுடியாது. அவனை யாராலும் அழிக்க முடியாது. அவனிடம் சகல தேவர்களும் தானே வந்து திருவருள் புரிவார்கள். இந்த நான்கு நீதிகளை விளக்கும் பூர்வ சரித்திரம் ஒன்றை ஈண்டு விளக்குதும் அன்பர்கள் இதனை நன்கு ஓதியுணர்ந்து அவ்வண்ணம் ஒழுகுவார்களாக

பூர்வத்தில் புகழ்பெற்ற அஷ்டகனென்ற ஒரு அரசனிருந் தான். அவன் விஸ்வாமித்திருடைய மைந்தன். அம்மன்னர்பெரு மான் ஒரு பெரும் வேள்வியைச் செய்தான். அந்த அசுவமேதயாகத் திற்கு எல்லா அரசர்களும் சென்றார்கள். அந்த அஷ்டகனுடைய சகோதரர்களான பிரதர்த்தனன், வஸுமனஸ் உசீனரதேசாதிபதி யாகிய சிபி என்பவர்களும் சென்றிருந்தார்கள். மந்திரமுறைப்படி யாகம் நிறைவேறியது. முடிவில் அஷ்டகன் தன் சகோதரர்கள் மூவருடன் இரதத்திலூர்ந்து செல்லலானான். யாழ்வல்லோராகிய நாரதர் எதிர்ப்பட்டார் அவரை அந்த நால்வர்களும் வணங்கி, தாங் களும் இந்தத் தேரில் ஏறிக்கொள்ளவேண்டும்" என்றார்கள். நாரதர், "அப்படியே" என்று சொல்லி விமானத்திலேறினார். பிறகு அவர் களுள் ஒருவன், தேவரிஷியாகிய நாரதரைப்பார்த்து "பகவானை தேவரீரை ஒரு விஷயத்தைக் கேட்க விரும்புகிறேன்; கருணைகூர்ந்து சொல்லியருளவேண்டும்" என்று சொன்னான். நாரதர் அவனைப் பார்த்து "எந்த விஷயத்தைப்பற்றியும் கேள்" என்றார்.

அவன், "வீணை முனிவரே! நாம் ஐவர்களும் நீண்ட ஆயுளுள்ள வர்கள்; நற்குணமுடையவர்கள்; நெடுங்காலம் அனுபவிக்கத்தக்க சுவர்க்க லோகமானது நால்வரால்" மட்டும் செல்லத்தக்கதாயிருந் தால் ஐவர்களாகிய நம்முள் யார் இறங்கவேண்டும்?" என்று கேட்

டான். நாரதர், "இந்த அஷ்டகன், இறங்கவேண்டும்" என்றார். அவன், "என்ன காரணம்" என்றான். நாரதர், "நான் ஒரு சமயத்தில் அஷ்டகனுடைய அரண்மனையில் வசித்தேன்; அவன் என்னை ஒருநாள் தேறில் ஏற்றிக்கொண்டு உலாவினன். பிறகு தனித்தனியாக நிறத்திற்குத்தக்கபடி பிரிக்கப்பட்டிருக்கிற ஆயிரக்கணக்கான பசுமாடுகளை நான் பார்த்தேன். நான் அவனைப்பார்த்து, "இவை யாருடைய பசுக்கள்? என்று கேட்டேன். அஷ்டகன், "இவைகள் என்னால் தானஞ்செய்யப்பட்டவை" என்று சொல்லிய அதனாலேயே தானே தன்னைப் புகழ்ந்துகொண்டான்; ஆதலால் இவன் இறங்க வேண்டும்" என்றார்.

பிறகு முன்கேட்டவன், "மூவரால்மட்டும் போகத்தக்கதாயிருந்தால் இப்பொழுது யார் இறங்கவேண்டும்? என்று கேட்டான். நாரதர், "பிரதர்த்தனன் இறங்கவேண்டும்" என்றார். கேட்டவன், "அந்த விஷயத்தில் யாது காரணம்?" என்று கேட்க, நாரதர், "பிரதர்த்தனுடைய வீட்டிலும் நான் வாசஞ்செய்திருக்கிறேன்; அவனும் நானும் ஒருநாள் தேரின்மீது ஏறிச் சென்றோம்; வழியில் ஒரு பிராம்மணன், "எனக்கு நீ ஒரு குதிரையைக்கொடுக்கவேண்டும்" என்று யாசித்தான். அரசன் பிராம்மணனை நோக்கி, "நான் திரும்பி வந்து கொடுப்பேன்" என்றான். வேதியன், "விரைவாகவே கொடுக்கக்கடவாய்" என்று கேட்டான். அவன், "அப்படியே" என்று சொல்லி வலப்பக்கத்தில் தேரிற்பூட்டிய குதிரையை விரைவாகவே அவிழ்த்து பிராமணனுக்குக் கொடுத்தான். பிறகு மற்றொரு பிராம்மணன் வந்து ஒரு குதிரையை யாசித்தான். அரசன், "அப்படியே" என்று சொல்லி இடப்பக்கத்திற்பூட்டிய குதிரையைக்கொடுத்தான். வேறொரு வேதியன் வந்து ஒரு குதிரையைக் கேட்டான். இன்னொரு குதிரையையும் அவிழ்த்துக்கொடுத்தான். திரும்பவும் மற்றொரு மறையவன்வந்து, "சீக்கிரம் ஒரு குதிரையைக் கொடு" என்றான். மன்னன், "அப்படியே தருகிறேன்" என்று நாலாவது குதிரையையும் அவிழ்த்துக்கொடுத்துவிட்டு, தேரின் நுகக் கொம்பைத் தானே தாங்கிக்கொண்டு, "பிராம்மணர்களுக்குத் தக்கது தகாதது என்கிற ஆலோசனை சிறிதும் இல்லை" என்று சொன்னான். கொடுத்துவிட்டு அஸூயை அடைகிற இந்தப் பிரதர்த்தன்; அப்படிப்பட்ட அந்த வசனத்தினால் விமானத்திலிருந்து இறங்கவேண்டும் என்று கூறினர்.

கேட்டவன், " முனிநாதரே ! இருவரால்மட்டும் செல்லத்தக்க தாயிருந்தால் யார் இறங்கவேண்டும் ? என்று வினவ, நாரதர் "வஸுமனஸ் இறங்கவேண்டும்" என்றார். கேட்டவன், "காரணம்யாது?" என்று கேட்க, நாரதர், " நான் உலகங்களில் சஞ்சரித்துக்கொண்டு வஸுமனஸினுடைய வீட்டையடைந்தேன். அப்பொழுது அவன் அவன்வீட்டில் மங்களகாரியம் ஒன்றின் தொடக்கத்தில் மந்திரங்களைச்சொல்லி அக்ஷதையிரைப்பதாகிய ஸ்வஸ்திவசனங்கள் நடந்துகொண்டிருந்தன. காடு மலை கடல் முதலிய இடங்களில் தடைப்படாது செல்லக்கூடிய புஷ்ப ரதத்தை விரும்பி அவனை அனுசரித்தேன். பிராம்மணர்கள் ஸ்வஸ்தி வசனம் சொல்லிய பிறகு, அவர்களுக்குத் தன்னிடமுள்ள புஷ்பரதத்தைக் காட்டினான். அந்த ரதத்தை நான் புகழ்ந்தேன் ; அரசன், " தவமுனிவராகிய தங்களால் இந்த ரதம் புகழப்பட்டது ; இது தங்களுடையதே; தங்களுடையதே ; " என்று சொன்னான். பிறகு ஒருகால் நான் வஸுமனஸை அணுகினேன் ; மறுபடியுமே எனக்குப் புஷ்ப ரதத்தால் காரியம் ஆக வேண்டியிருந்தது. அரசன் " சிறப்புடையதான புஷ்ப ரதம் பகவானுடையது " என்று கூறினான். மூன்றாவது முறையும் நான் அதை வேண்டிப்போயிருந்தேன். அப்போதும் அவன் " இது தங்களுடையதே " என்று அதனைக் கொடுக்காமலே மோசவார்த்தை கூறினான். புஷ்பரதத்தைக் கொடாமல் இந்த மோசவார்த்தை சொல்லியதால் இவன் கீழே இறங்கவேண்டும்" என்றார்.

கேட்டவன், பிறகு, " பகவானே ! ஒருவரால்மட்டும் செல்லத் தக்கதாக இருந்தால் யார் இறங்கவேண்டும் " என்று வினவ, நாரதர், " சிபி செல்லக்கடவன் ; நான் இறங்கவேண்டும் " என்று சொன்னார். கேட்டவன், " இந்த விஷயத்தில் காரணம் என்ன ? " என்று வினவ, நாரதர், " நான் சிபிக்கு நிகரானவனல்லேன், என்னைவிட சிபி உயர்ந்தவன் ; ஏனென்றால் பிராம்மணனொருவன் இந்தச் சிபியைப்பார்த்து " சிபியே ! நான் அன்னத்தை விரும்புகிறேன்" என்று சொன்னான். சிபி, பிராம்மணனை நோக்கி, "என்னசெய்யவேண்டும் ? நீர் கட்டளையிடும் " என்று சொன்னான். பிராம்மணன், சிபியை நோக்கி, " பிருஹத்கர்ப்பன் உன்னுடைய புத்திரனைக் கொல்லவேண்டும்; அப்படிக்கொல்லப்பட்ட இவன் மாமிசத்தைப் பக்குவஞ்செய்து அன்னத்துடன் சித்தஞ்செய்வாயாக; பிறகு என்னை போஜனத்திற்கு எதிர்பார்க்கவேண்டும் " என்று சொன்னான். பிறகு, அரசன் சிறி

தேனும் தயங்காமலும் முகம் வாடாமலும் புத்திரனைக்கொன்று பக்குவஞ்செய்து முறைப்படி சித்தஞ்செய்து ஒரு பாத்திரத்தில் வைத்து, அதைத் தலையினால் தூக்கிக்கொண்டு பிராம்மணனைத் தேடினான். சிபி வேதியனைத் தேடிக்கொண்டிருக்கும்பொழுது, ஒருவன் ஓடிவந்து, "இந்தப்பிராம்மணன் உன் நகரத்தில் நுழைந்து கோபங்கொண்டு உன் அரண்மனையும் தனசாலையையும் ஆயுதசாலையையும் அந்தப்புரத்தையும் குதிரைச்சாலையையும் யானைச்சாலையையும் எரிக்கின்றான்" என்றான். சிபி, அப்படியே நிறம்மாறாத முகத்துடன் நகரத்தில் நுழைந்து அந்தப் பிராம்மணனைப்பார்த்து அன்புடன், "பகவானே! அன்னம் சித்தமாயிருக்கிறது" என்று சொன்னான். பிராம்மணன் ஒன்றும் பேசாமல் அவன் பொறுமையின் பெருமையைக்கண்டு ஆச்சரியத்தால் தலைகுனிந்து நின்றான். பிறகு, அரசன் "பகவானே! தாங்கள் சொல்லியபடி செய்திருக்கிறேன்; புசிக்கலாம்" என்று மிகவும் பணிவுடன் வேண்டினான். பிராம்மணன் ஒரு முகூர்த்தகாலத்திற்குப் பிறகு, சிபியை நிமிர்ந்துபார்த்து, "நீயே இதனைப்புசிப்பாயாக" என்றான். அப்பொழுது சிபி, "அப்படியே ஆகட்டும்" என்று கூறி மனத்தில் அருவருப்பில்லாதவனாகப் பிராம்மணனைப்பூசித்து, தலையின்மேல் வைத்திருந்த மாம்சத்தை எடுத்து புசிக்க எத்தனித்தான். உடனே, பிராம்மணன் இவனுடைய கையைப்பிடித்துக்கொண்டு "நீ கோபத்தை வென்றவனாக இருக்கிறாய்; பெரியோர்களுக்காக விடத்தகாதது உனக்கு யாதொன்றுமில்லை" என்று சிபியை மிகவுங்கொண்டாடினான். உடனே சிபி தேவகுமாரனைப்போன்ற தன் குமாரனை எதிரில் நல்ல அழகுடன் கண்டான். நல்ல மணமுடனும் நல்ல அலங்காரத்துடனும் விளங்குந் தன் மகனைப்பார்த்து, சிபி அதிசயித்தான். உடனே பிராம்மணன் மறைந்தான். உலகங்களைப் படைக்கும் பிரமதேவரே இந்த சிபியைச் சோதிப்பதற்காக அப்படிவந்தார். அவர் மறைந்தவுடன் மந்திரிகள் அரசனை நோக்கி, "எல்லாவற்றையும் அறிந்தவராகிய தாங்கள் எதை அடையவிரும்பி இவ்வாறு செய்தீர்" என்று வினவினார்கள். சிபி, "இதை நான் புகழுக்காகவாவது பொருளுக்காகவாவது கொடுக்கவில்லை; சுகத்தை அனுபவிப்பதிலுள்ள ஆசையினாலும் கொடுக்கவில்லை. இந்த வழியானது பாவிகளால் அடையப்படாதது" என்று இவ்வாறு இவ்வனைத்தையும் செய்கிறேன். சாதுக்களால் எப்போதும் அனுஷ்டிக்கப்பட்டதே சிறந்தது. ஆத

ஓம் குஹாய நம:

தர்மம்

சச்சிதானந்தம்.

தர்மம் என்பது திரி என்ற தாதுவிலிருந்து பிறந்தது. திரி என்றால் காப்பாற்று 'தர்மம், தரித்தல், ஆன்மாவைத் தரிக்குதல் அதாவது ஆன்மா நிம்மதியாக விருக்கக்கூடியவிதம்.' ஆன்மலாபத்திற்கு உபாயம் தர்மம் எனப்படும். மானுடப்பிறவியின் கடமையை முடித்தலின் பெயர் தருமம். தமது விஷயத்தில் தாம் செய்யவேண்டிய கடமை, மாதா பிதாக்கள் விஷயத்தில் தாம் செய்யவேண்டிய கடமை, பத்தினி விஷயமாயும் மக்கள் விஷயமாயும் தாம் செய்யவேண்டிய கடமை, அயலார் விஷயமாயும் பந்துக்கள் விஷயமாயும் செய்யவேண்டிய கடமை, ஏழைகள், தரித்திரதிசையிலுள்ளோர், திக்கற்றவர் இவர்கள் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமை; ஸ்வதேசத்தைப்பற்றிச் செய்யவேண்டிய கடமை; இவை யனைத்தையும் முடித்தலின் பெயர் தருமம். தருமத்தைவிடச் சிறந்ததொன்று மில்லை. தர்மம் மூன்று உலகத்தையும் பிரகாசிக்கச் செய்கிறது. தர்மம் எல்லா உயிர்களுக்கும் இனிமையானது; தர்மம் மண்ணுலகம் விண்ணுலகம் இரண்டிலும் சுகத்தைக்கொடுக்கிறது; உலகம் நிலையற்றது; தர்மம் நிலைபெற்றது; தர்மத்தினால்தான் நற்கதியடையமுடியும்; தர்மம் இறைவனுடைய மூத்த குமாரனாகும்; தர்மம் மோக்ஷ உலகத்திற்கு ஏணியைப்போன்றிருக்கிறது; தர்மத்தினால் பாபம் கெடுகின்றது. சுருதியில் :

தர்மேண பாபநுததி என்றும்

காஞ்சிப்புராணத்தில் :

அறமே மறங்கண் முழுதளிக்கு மறமே கடவு ளுலகேற்றும்
அறமே சிவனுக் கொருவடிவ மாதுஞ் சிவனை வழிபடுவோர்க்

லால், என்புத்தியானது சிறந்ததையே பற்றுகிறது "என்று கூறினான். ஆதலால் சிபியினுடைய இந்தப் பெருந்தன்மையை அறிகிறேன்" என்று நாரதர் சொல்லிமுடித்தார்.

கறமே யெல்லாப் பேறும்பயனு மளிக்கும் யார்க்கும் எவ்விடத்தும்
அறமே யச்சந் தவிர்ப்பதென வறைந்தான் சாதா தபமுனிவன்

என்றும், விநாயக புராணத்தில்:

தேங்குவிண் போகமுஞ் சிறந்த முத்தியும்
ஈங்குறு மார்க்கமு மினிது நல்கலால்
ஓங்கிய வறத்தினை யுளமுன் மூன்றினும்
பாங்குற நித்தலும் பரிந்து செய்தியால்

என்றும், திருக்கூவப்புராணத்தில்:

தரும மேயிணை யில்பொரு டரையிடைத் தகை சால்
ஒருமை யன்பினை யுதவிவிண் ணுலகினு முடன் போய்
அருமை இன்பமுய்த் தந்தகற் சேறுமேனி லறமே
இருமை யுந்துணை யாதவ தன்றிமற் றில்லை

என்றும், கந்தபுராணத்தில்:

தருமமென் றேருபொரு ளுளது தாவிலா
இருமையி னின்பமு மேளிதி னுக்துமால்
அருமையில் வரும்பொரு ளாது மன்னதும்
ஒருமையி னோர்க்கலா லுணர்தற் கோண்ணுமோ

என்றும், நீதிசாஸ்திரத்தில்:

ஸர்வரீதி பகஸ்சந்த்ர: ப்ரபாதோத் தீபகோரவ:
த்ரைலோக்யதீபகோ தர்மஸ்ஸுபுத்ர: குலதீபக:

என்றும் கூறப்பட்டுளது. ஆகவே தர்மத்தையனுஷ்டித்தல்வேண்டும். தைத்திரியம், சிக்ஷாவல்லி 11-வது அநுவாகம் 1-வது வாக்கியத்தில்:

தர்மஞ்சர தர்மாத்பரம் நாஸ்தி
ஸர்வேஷாம் பூதானும் மது !

ஆகவே ஒருபொழுதும் தருமத்தைவிட்டு வழுவலாகாது. தருமமார்க்கத்தில் நடப்போமாயின் நமக்குச் சிரச்சேதமுண்டாயினும் உண்மையான உயிர்ப்பைப்பெற்று அழிவற்ற பதவியை யடையவல்லோம்.

"தன்னைக் கொடுத்தாவது தர்மத்தைத் தேடவேண்டும்"

என்று பெரியோர்கள் மொழிகின்றனர். இதனால்தான் ஔவையும் "அறஞ்செய விரும்பு" என்றாள். தர்மானுஷ்டானமின்றி உள்ளம் பரிசுத்தமாவதில்லை; கடவுளுடைய அருளும் கிடைப்பதில்லை. மதங்கொண்டவன், அஜாக்கிறதையுடையவன், பித்தன், களைப்படைந்தவன், கோபத்தையுடையவன், பசித்தவன், அவசரக்காரன், லோபி, பயந்தவன், காமி இப்பதின்மரும் தர்மத்தையறிகிறதில்லை. ஆகவே

இவர்களுடன் பழகாமல் தர்மவழியில் நின்ற பெரியோர்களுடன் கூடி தர்மத்தைச் செய்வதற்கு முயலவேண்டும். தர்மவழியாகவே தான் பணத்தைச் சம்பாதிக்கவேண்டும்; தர்மவழியில்லாமல் வருகின்றபணம், இன்பம், புகழ் முதலியவைகள் பயன்படமாட்டாது ; சேதுபுராணத்தில் :

திருவு மின்புஞ் சிறப்பும் புகழுமற்
றொருவ ராக்கலு நீக்கலு முள்ளவோ
மருவும் புண்ணிய மாந்தர்க் கவைய்யெலாம்
தரும மின்றேனிற் றமே சிதையுமால்

என்றனர். தருமத்தின் வழியாக நடந்தால் யாவரும் துணைசெய்வர். தர்மத்திற்கு விரோதமானவழியில் நடந்தால் உடன்பிறந்தவர்களும் துணைசெய்யார். தாசரதி தர்மத்தின்பா லொழுகவேண்டுமென்று தன் அருமையான நாட்டையும் துறந்து காட்டிற்குச்சென்றூர். அதனுல் அவருக்கு மிருகங்களும் துணைசெய்தன. தசக்கிரீவன் தர்மத்திற்கு விரோதமானவழியில் சென்றதினுல் சகோதரர்களும் துணைசெய்யவில்லை. ஆகவே தர்மத்தின் வழியாகவே நடக்கவேண்டும். ஏழைகள் விஷயமாய் தர்மஞ்செய்யவேண்டும். அந்தோ ! கலிகாலத்தில் கிழிந்ததுண்டையும் வறியோர்கட் கீவதற்கு மனம் வாராமல் கந்தைவஸ்திரத்தையுந்தந்து பாத்திரம் வாங்குகிறுர்கள். (இது என் அன்பிற்குரியவொருவர் வாங்கவுங்கண்டேன்.) பசுவுக்காக அன்னப்பாலையும் (கஞ்சி)தருவதுகிடையாது ; பசுவையுடையோர் கஞ்சியைக் கேட்டாலும் சாணம் தந்தால்தான் தருவோம்; சாணம் தருகின்றீர்களா? என்று கேட்கிறுர்கள். இவர்களை நோக்கித்தானே மாதாறு பங்கியும்

ஆவிந்து நீரோன் றிறப்பினு நாவிற்
கிரவி னிளி வந்ததில் என்றனர்.

மெய்யன்பர்களே ! தர்மத்தின்பா லொழுகாததினுலல்லவோ பிறமதஸ்தர்களும் ஒப்புயர்வில்லாச் செப்பரும் நம் சைவமதத்தை ஏளனமாகக் கருதி தூடணைசெய்கிறுர்கள். சைவசமயத்தூடணஞ் செய்தால் நம்மை வலிந்தாட்கொள்ளும் தயாநிதியாகிய அறுமீன் காதலனை நிந்தித்ததுபோலல்லவோ ? உலகத்தில் பெண்களுக்கு மாங்கல்யதாரணம் செய்தவன் நாயகன்; புருஷர்களாகிய நமக்கு நாயகன் வாகுலேயன். நம் கணவனுக்கு நிந்தையைத் தேடிவைக்

கின்றோம். நம்பதியை நிந்திக்கும்பொழுது செவிசாய்க்கின்றோம். அதர்மம் என்ற வாளைக்கொண்டு தர்மஸ்வரூபியாகிய நம்பதியை வெட்டுகின்றோம்! ஆ! இதுவா நமது கற்பு? நம் சைவசமயத்திற்கு நிந்தையைத் தேடலாமா? தூஷிக்கும்பொழுது நாம் செவி சாய்க்கலாமா? நாம் தர்மததின்வழி நடக்காததினாலல்லவோ செவி சாய்க்க நேரிடுகிறது; ஆகவே தர்மவழியாகவே நடக்கவேண்டும். தானஞ்செய்யவேண்டும்; தானஞ் செய்யாமல் சாப்பிடப்படாது. தானஞ்செய்யாமல் தின்கிறவன் விஷத்தையுண்டவனாகிறான்!

" அஸ் நா்தா சீமலம் பூங்தேஹய ஜப: பூயசோணிதம்
அஹுனுதாசீ கிருமிம்புங் தேஹயதா விஷமஸ்நுத இதி "

—அத்திரி.

(இ-ள்)—ஸ்நானஞ் செய்யாமல் சாப்பிடுகிறவன் மலத்தைத் தின்கின்றவனாகின்றான்! ஜபஞ்செய்யாமல் புசித்தவன் இரத்தம் சீழ் புசித்தவனாகின்றான்! ஓமம் செய்யாமல் புசித்தவன் புழுக்களை யுட்கொண்டவனாகின்றான்! தானஞ்செய்யாமல் புசித்தவன் விஷத்தையுண்டவனாகிறான்! என்று அத்திரி கூறுகின்றார். ஆகவே ஏழைகளுக்கு உதவிசெய்யவேண்டும்; " அஹிம்ஸா பாமோ தர்ம: " ஹிம்சை-என்றால் தொந்தரவு, அஹிம்சை என்றால் தொந்தரவு இல்லாமை; ஆகவே பிறவுயிர்களுக்கு துன்பத்தைச் செய்யாமல் இருப்பதுவே சிறந்த தர்மம். அஹிம்ஸையே சிறந்த தர்மமாக நினைக்கும் ஜெயினர்கள் தேன் சாப்பிடுவது கிடையாதாம்; ஏனெனில் தேனீயானது புஷ்பிக்கும் காலங்களில் சிறிதேனும் சோம்பலில்லாமலும் சிரமம் பாராமலும் புஷ்பந்தோறுஞ்சென்று அலைந்தலைந்து தேனைத் துளித்துளியாகச் சேர்த்து புஷ்பமில்லாத காலத்தில் தங்களுடைய ஆகாரத்திற்காக வைத்திருக்கிறது. அந்தத்தேனை மனுஷ்யன் சாப்பிடுவதாயிருந்தால் ஆயிரக்கணக்கான தேனீக்களைக்கொன்று தேனைக் கொள்ளையடித்துதான் சாப்பிடவேண்டும். ஆகவே, தேன் சாப்பிடப்படாதென்பது ஜெயினர்களுடைய கொள்கையாம். ஜெயின மதக்கிரந்தமாகிய " உதாஜ ஜைனம் " என்னும் கிரந்தத்தில் " ஒரு துளிதேன் சாப்பிட்டவன் ஏழுகிராமங்களை எரித்து சாம்பலாக்கினவனுக்குச் சமமான பாபியாகிறான் " என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே அஹிம்ஸை என்ற தர்மத்தை ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டும். சொற்சுத்தம், மனச்சுத்தம் என்னும் இரண்டு தர்மங்களே மேலான தர்மம் " ஸத்யாந் நாஸ்தி பரோ தர்ம: " ஸத்யத்தை

விட மேலான தர்மம் இல்லை என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். பிரம தர்மத்தில் " ஸத்யத்தைவிட்டு வழுவலாகாது, தர்மத்தைவிட்டு வழுவலாகாது, நற்செய்கையைவிட்டு வழுவலாகாது

ஸத்யாந் நப்ர மதி தவ்யம் தர்மாந் நப்ர மதிதவ்யம்
குசலாந் நப்ர மதி தவ்யம்

என்று கூறுகிறது. செந்நாப்போதரும் வாய்மை என்ற அதிகாரத்தில்

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று ! என்றனர்.

ஆதலினால் சொற்சுத்தமிருப்பதுதான் சிறந்த தருமமாகும். நாம் தர்ம வழியில் நடந்தால்தான் துயர்கூர் பிறவியினின்று உய்வோம். பிரபு லிங்கலீலையில்

எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற் றென்ற லதுகொண்டு
செய்தற் கரிய வறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியினின் [தில்
றுய்தற் கொருமை பெறவேண்ணு துழல்வோ னுடம்பு பொற்கலத்
பெய்தற் குரிய பால்கமரிற் பெய்த தொக்கு மென்பரால்

என்பதுபோல் மானிடசரீரம் எடுத்ததின்பயன் அறமார்க்கத்திலேயே ஒழுகல்வேண்டும். ஏனெனில் மனுஷ்ய சரீரம் ஒரு நாளைக்கு அழிந்துபோய்விடும். ஆகவே மானிடசரீரம் இருக்கும்பொழுது தர்மத்தின்பால் நின்று ஆன்மலாபத்தை யடைந்தேதீரவேண்டும்.

தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டி ராற்றப் பாலகர்
முதியோ ரென்னு னிளையோ ரென்னுன்
கொடுந் தொழிலாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய் சுடலை தின்னக் கண்டுங்
கழில்பெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவா ருண்டோ
இளமையு நில்லா யாக்கையு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது.

—மணிமேகலை.

உ

ஓம் தத் ஸத்:

இரவல்

"இரவல்" என்பது யாவருக்கும் இன்றியமையாததென்பது பெரும்பாலோர் அபிப்பிராயம்; ஆயினும், சுயமரியாதையுள்ள ஒவ்வொருவனும், இழிவான இவ்விரவலை மேற்கொள்ளான். இரப்பதைப்பற்றி

பல்லெலாம் தெரியக் காட்டி பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லலா மிரத்த லந்தோ இழிவு, இழிவு

என்று பெரியோர் கூறியிருக்கின்றார். இதனாற்றான் இரவல் கேட்கும் பெரியோர்கள், பல்லெல்லாம் காட்டி மாயா இழிப்புடன் உடனேயோ, அடுத்த நிமிஷத்திலேயோ, தாம் பெற்றுப்போகும் சாமான்களைக் கொடுத்துவிடுவதாகச் சொல்லி வாங்கிப்போய், அவர்கள் சௌகரியப்படி உபயோகித்துக்கொண்டு திருப்பிக் கொடுப்பதை வழக்கமாய் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதைக் கௌரவமான பிச்சை என்றுதான் சொல்லவேண்டும். இரவல்! இரவல்!! அப்பா!!! இதில் எத்தனைவிதம்? வருஷக்கணக்கில் வர்ணித்தாலும் இது ஒரு முடிவிற்கு வாராது என்று நிச்சயமாகச்சொல்லலாம். இக்கொடியவியாதியால் கணக்கற்ற புத்தகங்களும், பத்திரிகைகளும் சாமான்களும் மாள்கின்றன. இந் நோயைத்தீர்க்க ஒரு L. M. P. யும் ஏற்படாதது விந்தையே.

நாம் ஒரு புத்தகத்தையோ அல்லது பத்திரிக்கையையோ அல்லது பேப்பரையோ வாசித்துக்கொண்டிருக்கும்போது நமக்குத் தெரிந்த ஒருவர் வந்து சம்புவைப்போல்பேசி, பத்து நிமிஷங்களில் கொடுத்துவிடுவதாக வாங்கிக்கொண்டு போய்விடுகின்றனர். நமது புத்தகம் உருமாறி மூலைகளில் மடிக்கப்பட்டு "நாய்க்காது" களுடன் நம்மிடம் திரும்பிவருவதுமுண்டு; நம்புத்தகம் ஆரோக்கியத்துடன் இருக்கும்பொருட்டு, அப்பியங்கஸ்நானஞ் செய்துவைத்து அனுப்புமற்றொருவிதம்; இன்னுஞ்சிலர் "அயேஸ்" சங்கத்தின் அங்கத்தி

னர்கள் நம் கண்களுக்குக்காட்டாமலே வாயில் போட்டுக்கொள்வது இன்னொருவிதம்; சிலர் (நம் புத்தகம்) இரவல்கொடுத்து நம் புத்தகத்திலுள்ள படங்களையும் இனியவிஷயங்களையும் அயேஸ் செய்துவிட்டு மிகவும் பத்திரமாய் அனுப்புவது இன்னொருவிதம் இம்மாதிரி வருடமெல்லாம் இரவல் வாங்கிப்படித்துக்கொண்டிருக்கும் தனவான்கள் காசுபோட்டு வாங்கிப் படிப்பதுதான் எப்பொழுது?

உடைகளை இரவல் கேட்பது ஒரு புதிதன்று; நமது நண்பர் நான் நாளை காலை 3-30-க்கு புகைவண்டிக்கு மதராஸ் போகிறேனென்றாவது அல்லது மாமியார் வீட்டுக்குப் போகிறேனென்றாவது சொல்லிவிட்டு நமது உடுப்புகளைப் பெற்றுப்போகிறார்கள்; இவர்கள் இவற்றைத் திருப்பிக்கொடுப்பது துர்லபமே. அப்படித் திருப்பிக்கொடுத்தாலும் ஏதாவது ஒன்றிலாயினும் ஒரு எக்ஸ்பெரிமெண்டல் போஸ்ட் ஆபீஸாவது அல்லது கடவுளாலும் அழிக்கமுடியாத சில முத்திரைகளாவது இல்லாமல் போகாது.

பேனா இரவல் கேட்பது ஒரு ஆச்சரியமானதென்று நினைப்பது கூடாது; தபாலாபீஸுக்கு அருகில் நம் பேனாவைக் காட்டிவிட்டால் கடிதம் எழுதவேண்டுமென்றும் மணியார்டர் எழுதவேண்டுமென்றும் நம் பிராணனை வாங்கிவிடுவார்கள்; ஐயா நான் அவசரமாக புகைவண்டித்தொடர் நிற்குமிடத்திற்குப் போகவேண்டும் என்று கூறினால் நீங்களாவது எழுதிக்கொடுத்துவிடுங்கள் என நம்மிடம் வேலை வாங்கிக்கொண்டு சுமார் ஒருமணி நேரம் தாமதித்து அனுப்பிவிடுவார்கள். பேனாவை அவர்களிடம் கொடுத்துவிட்டாலோ மண்வெட்டி பிடித்த தங்களுடைய கையால் தாங்கள் இஷ்டப்படி எழுதியபிறகு நாம் எழுதமுடியாதபடி திருப்பிக்கொடுத்துவிடுவார்கள். அதிகாரிகளின் முன் காட்டிவிட்டாலோ விசிட் எழுதிவிட்டுத் தருகிறேன் என்று வாங்கி எழுதியபிறகு இது என்ன பேனா? கூர்மையாக நன்றாய் எழுதுகிறதே என்று பேனாவின் பெயரைப் பார்த்துவிட்டு (the Krishna) தங்களுடைய கோட் பையில் போட்டுக்கொண்டு போய் விடுவார்கள். நாம் பேனாவைக் கொடுங்களென்று கேட்க முடியாமல் வடையை இழந்த காக்கையைப்போல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். இம்மாதிரி பேட் புத்தகம் முதலானவைகளையும் வாங்கிக் கொண்டுபோய்விடுவார்கள். இவைகளுக்குப் புது மாதிரியான இரவல் ராஜதிருடு எனப் பெயரிடலாமே. (தொடரும்)

௨

ஓம் குஹாயநம :

திருப்புகழமிர்தம்.

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 2 Vol. 2	ஈஸ்வர ஸு பங்குனிமீ 1வ மார்ச்சு—1938	இதழ் 12. No 12.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

(26) அறிவழிய மயல்பெருக வுரைபுமற விழிசுழல
அனலவிய மலமோழுக அகலாதே
அனையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழலினிகர் மறலியெனை யழையாதே
செறியுமிரு வினைகரண மருவுபுல னழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே
சிவனைநிகர் பொதியவரை முனிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே
நெறிதவறி யலரிமதி நடுவன்மக பதிமுளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி
நிலவுமறை யவனிவர்க ளலையஅர சுரிமைபுரி
நிருதனுர மறஅயிலை விடுவோனே
மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு
மகிழமடி மிசைவளரு மிளையோனே
மதலைதவ ழுததியிடை வருதரள மணிபுளின
மறையவுயர் கரையிலுறை பெருமாளே.

பதவுரை.

சிவனை நிகர் - சிவமூர்த்திக்குச் சமானமானவரும், பொதிய வரை - பொதிய மலையில் வசிப்பவருமாகிய, முனிவன் - அகத்திய முனிவர், அகமகிழ - உள்ளம் மகிழ்ச்சியடையவும், இரு செவி குளிர - அவருடைய இரண்டுசெவிகளும் குளிர்ச்சியடையவும், இனிய தமிழ் - இனிமையான தமிழ் மொழியை அம் முனிபுங்கவருக்கு, பகர்வோனே — உபதேசித்தருளியவரே!, நெறி தவறி - அற நெறியினின்றும் வழுவி, அலரி - சூரியன், மதி - சந்திரன், நடுவன் - இயமன், மகபதி - நூறு அசுவமேதங்களுக்குத் தலைவனாகிய தேவேந்திரன், முளரி - அக்கினி, நிருதி - தென்மேற்றிசைக்கு அதிபனாகிய நிருதிதேவன், நிதிபதி - நிதிகளுக்கு அதிபதியாகிய குபேரன், கரிய வனமாலி - கருமை நிறம்பொருந்திய திருமேனியை யுடையவரும் துளபமாலையை யணிந்துள்ளவருமான நாராயணர், நிலவுமறையவன் - நிலைபெற்றவராகிய பிரமதேவர், இவர்கள் அலைய - இத்தேவர்களனைவரும் வருந்தி ஏவல்புரிந்துத் திரியுமாறு, அரசு உரிமைபுரி - அரசாட்சி செய்துகொண்டிருந்த, நிருதன் உரம் அற - அசுரனாகிய சூரபன்மனது மார்பு பிளக்குமாறு, அயிலை விடுவோனே - வேலாயுதத்தைப் பிரயோகித்தவரே!, மறி பரசு கரம் இலகு - மான்குட்டியையும் மழுவையும் கரத்தில் தாங்கிக்கொண்டருள்புரியும், பரமன் - பரமபதியாகிய சிவபெருமான், உமை - உமாதேவியார், இருவிழியும் - இரண்டு கண்மலர்களும், மகிழ - மகிழ்ச்சியடைய, மடிமிசை வளரும் - உமையம்மையாரது திருமடியின்மீது வளர்கின்ற, இளையோனே - என்று மகலாத இளங் குமாரரே!, மதலை தவழ் - மரக்கலங்கள் தவழுகின்ற, உததியிடைவரும் - சமுத்திரத்தில் தோன்றும், தரளமணி - முத்து மணிகள், புளினம் மறைய உயர் - மணற்குன்றுகள் மறையுமாறு அதனினும் உயர்ந்துள்ள, கரையில் உறை - சமுத்திரக்கரையாகிய திருச்சீரலைவாயிலில் எழுந்தருளியுள்ள, பெருமாளே - பெருமையின் மிக்கவரே!, அறிவு அழிய - (அடியேனுக்கு மரணாவஸ்தையுண்டாகிற காலத்தில்) அறிவுநிலை கலங்கி அழியவும், மயல் பெருக - மயக்கம் பெருகவும், உரையும் அற - (கைகால்களின் அசைவு நீங்குவதோடு) பேசுவதும் நீங்கவும், விழிசுழல - கண்கள் சுழலவும், அனல் அவிய - உடம்பிலுள்ள அக்கினி தணியவும், மலம் ஒழுக - மலம் தானாக நீர்போல் ஒழுகவும், அகலாதே - அடியேனைவிட்டு நீங்காமல்,

அனையும் - தாயாரும், மனை - மனைவியும், அருகில் உற - சமீபத்தில் அமர்ந்து, வெருவி அழ - பயந்து ஓவென்று கதறியழவும், உறவும் அழ - சுற்றத்தார்களும் அழவும், அழலின் நிகர் மறலி - அக்கினி போற் கொளுத்துகின்ற கூற்றுவன், அழையாதே - அடியேனை தனது நரகலோகத்திற்கு வாவென்று அழையாவண்ணம், செறியும் இருவினை - அடியேனை நெருங்கியுள்ள நல்வினை தீவினைகளாகிய இரு வினைகளும், கரணம் - அந்தக்கரணங்களும், மருவு புலன் ஒழிய - பொருந்தியுள்ள ஐம்புலன்களும் செயலற்று நீங்க, உயர் திருவடியில் அணுக - தேவரீரது சிறந்த திருவடித்தாமரைகளில் அடியேன் சேருமாறு, வரம் அருள்வாயே - அடியேனுக்கு வரத்தை வழங்கியருள்வீர்.

பொழிப்புரை.

சிவபெருமானுக்கு நிகர் என்று எல்லோராலும் கருதப்படுகின்றவரும் பொதியாசலத்தில் தவம்புரிந்துகொண்டு வீற்றிருப்பவருமாகிய அகத்தியமுனிவருக்கு அவருடைய உள்ளம் மகிழவும், இருசெவிகளும் குளிரவும், இனிமையான தமிழ் மொழியை உபதேசித்தருளியவரே!. அறநெறி தவறி சூரியன், சந்திரன், இயமன், இந்திரன், அக்கினி, நிருதி, குபேரன், துளபமாலையைத் தரித்துக்கொண்டுள்ள கரிய திருமேனியையுடைய திருமால், நிலைபெற்றுள்ள பிரமதேவர், இவர்கள் (சிறைப்பட்டு) நெடுநாளாக ஏவல்புரிந்துகொண்டு ஏங்கியலையுமாறு அரசாட்சிசெய்த சூரபன்மன் மனது மார்பு பிளந்தழியுமாறு வேலாயுதத்தை விடுத்தருளியவரே! மான் மழுவைக் கரத்தில் தாங்கிக்கொண்டுள்ள சிவபெருமானும் உமையம்மையாரும் கன் களிக்க உமாதேவியார் திருமடித்தலத்தின்கண் வளருகின்ற இளைய பிள்ளையாரே! மரக்கலங்கள் தவழுகின்ற சமுத்திரத்தில் தோன்றுகின்ற முத்துமணிகள் மணற்குன்றுகள் மறையுமாறு உயர்ந்துள்ள கடற்கரையாகிய திருச்சீரலைவாயில் எழுந்தருளியுள்ள பெருமையின் மிக்கவரே! மரணகாலத்தில் அடியேனுடைய அறிவு அழியவும், மயக்கம் உண்டாகவும், (கை கால்கள் அசைவற்றதோடு) பேசுவதும் ஒழியவும் கண்கள் சுழலவும், உடம்பிலுள்ள உதராக்கினி தணியவும், தன்னாலே மலம் நீராகி ஒழுகவும், இந்நிலையிலும் என்னைவிட்டு நீங்காமற்படிக்கு தாயாரும் மனைவியும் அருகிலிருந்து பயந்து ஓவென்று கதறியழவும், சுற்றத்தார்களும் அழவும், நெருப்பைப்போல் கொதித்துக்கொண்டு வரும்படியான கூற்றுவன் என்னைத்தனது நரகலோ

கத்திற்கு அழைக்காவண்ணம், அடியேனை நெருங்கியுள்ள நல்வினை தீவினைகளாகிய இருவினைகளும், அந்தக்கரணங்களும், பொருந்தி யுள்ள ஐம்புலன்களும் செயலற்று நீங்க தேவரீரது திருவடி மலர் களில் அடியேன் சேருமாறு வரமருள்புரிவீர்.

விரிவுரை.

அறிவழிய . . . . மலமோழுக :—

ஆன்மா பிரியுங்காலத்தில் அறிவுகெட்டு மயக்கமுற்று நாவுகுழறி அவையவங்கள் அசைவற்று புலன்கள் கலங்கி துன்புறுவார்கள்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந் திட்
டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சே லென் றருள்செய்வா
னமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந்
திருவையாறே.

—(சம்பந்தர்) தமிழ்மறை.

அனையுமனை . . . . உறவுமழ :—

தாய் மனைவி மக்கள் முதலியோர் உயிர்பிரியும்போது கதறியழு வார்களேயன்றி உயிர்க்கு உறுதிபயக்குந் தன்மையைத் தேடமாட் டார்கள். இயமனுடைய பாசக்கயிற்றினின்றும் விடுவிக்கவும் ஆற்ற லற்று வாளா வருந்துவார்கள். அம்மரணகாலத்தில் காப்பாற்ற வல்ல வர் முருகவேள் ஒருவரேயாவர்.

“ முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகோடு
முதுவடவை விழிசுழல வருகாலர் தூதர்கெட
முடுகுவதும் அருணெறியி லுதவுவதும் ”

—வகுப்பு.

“ ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன்றன் அடைக்கலமே”

—அலங்காரம்.

அழலினிகர் மறலியெனை யழையாதே :—

தீவினையைச் செய்த பாவிகளை இயமதூதுவர்கள் வடவாமுகாக் கினிபோற் கொதித்துப் பாசக்கயிற்றால் இறுக்கிக்கட்டிக்கொண்டு

தமது யமபுரம் கொண்டுபோய் துன்புறுத்துவார்கள். புண்ணியஞ் செய்தவர்களை இயமதூதுவர்கள் உபசரித்து சுகமான வழியில் கொண்டுபோவார்கள்.

யமலோகத்திற்கும் மனிதலோகத்திற்கும் இடையிலுள்ள வழி எண்பத்தாறாயிரம் யோசனை தூரமாகும். அவ்வழியானது காடாகவும் கோரமாகவும் நாற்புரங்களிலும் தண்ணீரில்லாத வெளியாகவும் இருக்கிறது. அந்த வழியில் மரங்களின் நிழல் கிடையாது; தண்ணீருமில்லை; களைப்படைந்தவனும் இளைத்தவனுமான மனிதன் இளைப்பாறத்தக்க வீடுகளுமில்லை. யமனுடைய கட்டளையைச் செய்கின்ற யமதூதர்களால் ஆடவரும் மகளிரும் அப்படியே பூமியிலுள்ள மற்றவைகளும் அந்தவழியில் பலாத்காரமாகக் கொண்டுபோகப்படுகிறார்கள். எந்த மனிதர்கள் ஏழைகளுக்குக் வண்டி குதிரை முதலிய வாகனங்களைக்கொடுத்து உதவிசெய்கின்றார்களோ அவர்கள் அந்த வாகனங்களின்மேல் அந்தவழியில் துன்பமில்லாமற்செல்லுகிறார்கள். குடையைத்தானஞ்செய்தவர்கள் குடையினாலே வெய்யிலைத் தடுத்துக்கொண்டு செல்லுகிறார்கள். அன்னதானஞ் செய்தவர்கள் அந்த வழியில் அன்னத்தைப் புசித்துக்கொண்டு பசியின்றி செல்லுகிறார்கள். வஸ்திரங்களைக் கொடுப்பவர்கள் வஸ்திரமுள்ளவர்களாகவும், வஸ்திரம் கொடாதவர்கள் ஆடையின்றி நிர்வாணராகவும் செல்லுகிறார்கள். பொன்னைக் கொடுத்தவர்கள் அலங்கரிக்கப்பட்டவர்களாக சுகமாகச் செல்லுகிறார்கள். பூதானஞ் செய்பவர்கள் விரும்பின எல்லாவற்றையும் அடைந்து இன்புற்று இனிது செல்லுகிறார்கள். தானியங்களைக் கொடுக்கிற மனிதர்கள் துன்பமின்றிச் செல்லுகிறார்கள். வீட்டைத் தானஞ் செய்கிற மனிதர்கள் விமானங்களில் மிக்க சுகமாகச் செல்லுகிறார்கள். தண்ணீரைத் தானஞ் செய்தவர்கள் தாகமில்லாதவர்களாகவும் மிக மகிழ்ந்த மனமுள்ளவர்களாகவும் செல்லுகிறார்கள்; விளக்குதானஞ் செய்பவர்கள் பிரகாசமுள்ள வழியில் பிரகாசமுள்ள உருவத்துடன் செல்லுகிறார்கள்; கோதானஞ் செய்தவர்கள் எல்லாப் பாவங்களாலும் விடுபட்டு சுகமாகச் செல்லுகிறார்கள். ஒரு மாதம் உபவாச மிருப்பவர்கள் அன்னங்கட்டிய விமானத்தின்மீது செல்லுகிறார்கள். ஆறுநாளுக்கொருதரம் உபவாச மிருப்பவர்க்ள் மயில்கள் பூட்டின விமானங்களின் மேல் செல்லுவார்கள். எந்த மனிதன் ஒருவேளை சாப்பிட்டுக் கொண்டு மூன்று இரவுகளைக் கழிக்கிறானோ? இடைவேளைகளில்

சாப்பிடுகிறதில்லேயோ அவனுக்கு அழிவற்ற லோகங்கள் கிடைக்கின்றன. தண்ணீர்ப்பந்தல் வைத்து கோடைக் காலத்தில் தண்ணீரால் வாடும் மக்களுக்குத் தண்ணீரும் மோரும் கொடுத்து உதவிய உத்தமர்களுக்கு அந்த யமலோகத்தில் புஷ்போதகை என்ற நதியையுண்டாக்கிக் கொடுப்பார்கள். அந்த நதியில் அவர்கள் அமிருதம் போன்ற குளிர்ந்த தண்ணீரைக் குடித்துக்கொண்டு சுகமேயிருப்பார்கள். எவர்கள் தீவினைகளைச் செய்தவர்களோ அவர்களுக்கு அந்த நதியில் சீயானது குடிப்பதற்கு ஏற்படுத்தப்படுகிறது. மாமிசங்களை தின்றவர்கள் யமலோகத்தில் தமது மாமிசத்தை தாமேயுண்டு தங்களுடம்பில் வடியும் உதிரத்தைக் குடித்துக்கொண்டு தீவாய் நரகத்தில் மல்லாக்கப்படுத்த வண்ணமாகப் பெருந் துன்பத்தை யனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இவற்றையெல்லாம் உணர்ந்து நாம் நல்வழிப்படுமாறு நமது பரம குருமூர்த்தியாகிய அருணகிரிநாத சுவாமிகள் நம்மீதுள்ள பெருங் கருணையால் உபதேசிக்குமாறு காண்க.

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரேரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்படக் கூற்றுவ ளுர்க்குச் செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

—அலங்காரம்.

செறியு மிருவினை கரண . . . . . அணுகவுரம்:—

இருவினையொப்பு, மலபரிபாகமுற்று சத்திநிபாதமடைந்த பக்குவ ஆன்மாக்களே இறைவன் திருவடியில் இரண்டறக்கலந்து அத்துவித முத்தியின்பத்தை நுகர்ந்து பிறவாநிலையைப் பெறுவார்கள். அவ்வரத்தை ஆண்டவன்பால் வேண்டுகின்றனர்.

சிவனை நிகர் பொதியவரை முனிவன் :—

பருவத வேந்தனுக்கு அவன் செய்த தவங்காரணமாகத் திருமகளாகத் தோன்றி வளர்ந்த உமாதேவியாரைச் சிவபெருமான் திருமணஞ் செய்துகொள்ளும்பொருட்டு இமயமலையில் எழுந்தருளிய ஞான்று, திருக்கல்யாணத்தைச் சேவிக்கும்பொருட்டு எப்புவனத்திலுமுள்ள யாவரும் வந்து கூடினமையால் இமயமலை நடுங்கியது. பூமியின் வடபால் தாழ, தென்பால் மிக உயர்ந்தது. உடனே தேவர்கள்முதல் அனைவரும் ஏங்கி, 'என் செய்வது' என்று துன்புற்று "சிவா சிவா" என்று ஓலமிட்டார்கள். சிவபெருமான் அது

கண்டு திருமுறுவல்செய்து, அவர்களது குறையை நீக்கத் திருவுளங்கொண்டு, திருநந்திதேவரை நோக்கி "அகத்திய முனிவனை இங்கு அழைத்துவா" என்று பணித்தருளினர். நந்திதேவர் வணங்கிக்கொண்டுபோய், அகத்தியமுனிவரைக்கூவ", அவர் அங்கு வந்தார். அவரை அழைத்துக்கொண்டுபோய்ச், சிவபெருமான் திருமுன்பு விடுப்ப, அகத்தியர் ஆலமுண்ட அண்ணலை வணங்கி அஞ்சலியத்தராய் நிற்ப, சிவபெருமான் திருமுனிவரை நோக்கி, 'முனிவனே " இங்கே யாவரும் வந்து கூடினமையால், 'வடபால் தாழத் தென்பால் வுயர்ந்துவிட்டது; இதனால் உயிர்கள் மிகவும் வருந்துகின்றன. ஆகலால் நீ இம்மலையினின்று நீங்கித் தென்னாட்டிற் சென்று பொதியை மலையின்மேல் இருக்கக்கடவாய் ; நின்னைத்தவிர இதனைச் செய்யவல்லவர், வேறு யாருளர்? நீ ஒருவன் பொதியாசலஞ் சேர்ந்தால் பூமி சமனாகும்" என்று பணித்தருளினர். அது கேட்ட அகத்திய முனிவர் அச்சமுற்று, "பரமகருணாநிதியாகிய பரமபதியே! அடியேன் யாது குற்றஞ்செய்தேன்? தேவரீரது திருமணக்கோலத்தைக் காணவொட்டாமல் கொடியேனை விலக்குகின்றீர்; எந்தையே! திருமாலிருக்க, திசைமுகன் முதலிய தேவர்களிருக்க, எளியேனை விலக்குவது யாது காரணம்?" என்று பணிந்து உரைத்தார். சிவபெருமான், "மாதவ! உனக்கு ஒப்பான முனிவர்கள் உலகத்தில் உண்டோ? இல்லை; பிரமனும் மாலும் நினக்கு நிகராகார்; ஆதலால் நீ நினைந்தவை யாவையும் தவறின்றி முடிக்கவல்லை; இவ்வரிய செய்கை மற்றைத் தேவர்களாலேனும் முனிவர்களாலேனும் முடியுமா? யாவரினும் மேலாகிய உன்னாலே மாத்திரம் முடியும்; செல்லக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அகத்திய முனிவர், "எமது பரம பிதாவே! தங்களுடைய திருமணக்கோலத்தை வணங்காது பிரிதலாற்றாமையால் என்மனம் மிகக் கவல்கின்றது" என்ன, கைலாசபதி, "குறுமுனிவ! நீ கவலாது பொதியமலை செல்லுதி; நாம் அங்குவந்து நமது கல்யாணக்கோலத்தை காட்டுவோம்; நீ மகிழ்ந்து தரிசிக்கக்கடவை ; நீ நம்மைத் தியானித்துக் கொண்டு அங்கு சிலநாட் டங்கியிருந்து, பின்பு முன்போல் நமது பக்கத்து வருவாயாக" என்று அருளிச்செய்தார்.

அகத்திய முனிவர் அதற்கியைந்து, அரனாரை வணங்கி விடைபெற்று, பெருமூச்செறிந்து அரிதினீங்கி, தென்றிசையை நோக்கிச் சென்று பொதிய மலையை யடைந்து, சிவமூர்த்தியைத் தியானித்

துக்கொண்டு அப்பொதியமலையில் எழுந்தருளியிருந்தார்; பூமியுஞ் சமமாயின. ஆன்மாக்கள் துன்ப நீங்கி இன்பமுற்றன. என்னே! அம் முனிவரின் பெருமை? மாலயனாதி வானவராலும் முனிவர்களாலும் செய்தற்கரிய அரிய செயலைச் செய்ததனால் இங்கே நம் அருணகிரியார் "சிவனை நிகர் பொதியவரை முனிவன்" என்று ஓதியருளினார். வடபாகத்தில் கைலாயமலையில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதுபோல் தென்பாகத்தில் அகத்தியமுனிவர் எழுந்தருளியிருப்பதால் "பொதியவரை முனிவன்" என்ற குறிப்பும் உணர்தற்கிடமாயமைத்துள்ளனர்.

இனிய தமிழ் பகர்வோனே :—

அகத்தியருக்கு முருகப்பெருமான் இனிய தமிழ்மொழியையும் அதன் இலக்கத்தையும் உபதேசித்தருளினார். இதனால் தமிழ் மொழி ஏனைய மொழிகளினும் உயர்ந்த மொழியென்பதும், அதன் ஆசிரியர் முருகப்பெருமானே என்பதும், அதனை உலகிற்கு உபகரித்த சந்தானாசாரியர் அகத்தியர் என்பதும் நன்கு புலனாகின்றன.

நெறிதவறி . . . . . அயிலை விடுவோனே :—

சூரபன்மன் சிவமூர்த்தியிடம் மாளா வரம்பெற்று, உளந்தருக்கி இந்திரன் முதலிய இமையவர்கள் மீன் பிடிக்கவும், வருணன் தண்ணீர் தெளிக்கவும், பிரமன் நாள் கோள் முதலியவற்றைச் சொல்லவும், திருமால் கேட்ட வரங்களை நல்கவும், வாயு வீதிகளைக் கூட்டவும், சூரியன் தன் மண்டலத்திற் செல்லாது வீரமாமகேந்திரபுரியில் தேரைவிட்டிறங்கி குளிர்ந்த கிரணங்களை வீசிக்கொண்டு நடந்து செல்லவும், சந்திரன் எந்த நாளிலும் பூரணகலைகளுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கவும், எமன் எந்த உயிரையும் பற்றாமலிருக்கவும், அக்கினி தன்னாலே எரியவும், பிறதேவர்கள் தத்தமக்குரிய வேலைகளைச் செய்யவும், ஆக்ஞாபித்து, அவர்கள் பலநாளாய் அலைந்துதிரியுமாறு கொடுமைசெய்ததால், குமாரக்கடவுள் தேவர்கள் துன்பத்தை நீக்குமாறு திருவுளங்கொண்டு, சூராதியவுணரையழித்து ஆட்கொண்டனர்.

கருத்துரை.

அகத்தியமுனிவருக்கு இனிய தமிழை உபதேசித்தவரே! நெறி தவறிய சூராதியவுணரை யழித்தவரே! உமாதேவியாரது திருக்குமாரரே! திருச்செந்திலாதிப! மரணகாலத்தில் பொறி புலன்கள் கலங்கி அடியேன் செயலற்றுக் கிடக்குங்காலத்தில், என் மனைவி மக்கள் கதறியழ இயமன் என்னை அழைக்காவண்ணம் தேவரீரது திருவடியிற் சேர்த்தருள்வீர்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(328-ம் பக்கத் தொடர்ச்சி.)

जयानन्द भूमन् जयापार धामन्
जयामोक कीर्ति जयानन्दमूर्ति ।
जयानन्दसिन्धो जयाशेषवन्धो
जयत्वं सदा मुक्ति दाने स सूनो ॥

(32) ஜயானந்த[3] பூ[4]மன் ! ஜயாபார தா[4]மன் !
ஜயாமோக[4] கீர்த்தே ! ஜயானந்த[3] மூர்த்தே !
ஜயானந்த[3] ஸிந்[4]தோ ! ஜயா சேஷ ப[3]ந்[4]தோ !
ஜயத்வம் ஸ[3]தா முக்தி [3]தானேச ஸூநோ ! ||

பதவுரை.

ஹே ஆனந்த பூமன் ! ஜய ! - இன்பத்திற் கிருப்பிடமே ! தேவரீர் வாழ்ந்திருக்கவேண்டும்,

ஹே அபாரதாமன் ! ஜய ! - அளவற்ற காந்தியுள்ளவரே ! அல்லது அளவற்ற ஆலயங்களை யுடையவரே ! தேவரீர் வாழ்ந்திருக்கவேண்டும்,

ஹே அமோக கீர்த்தே ! ஜய ! - அழியாப் புகழ்படைத்தவரே ! தேவரீர் எப்போதும் வாழ்ந்திருக்கவேண்டும்,

ஹே அனந்த மூர்த்தே ! ஜய ! - அளவிறந்த வடிவத்தை யுடையவரே ! தேவரீர் என்றென்றும் வாழ்ந்திருக்க வேண்டும்,

ஹே ஆனந்த ஸிந்தோ ! ஜய ! - ஆனந்தக்கடலே ! தேவரீர் சதாகாலமும் வாழ்ந்திருக்கவேண்டும் !

ஹே அசேஷ பந்தோ ! ஜய ! - உலகத்திற்கெல்லாம் பந்துவே ! தேவரீர் எந்நாளும் வாழ்ந்திருக்கவேண்டும்,

ஹே முக்திதான ஈசஸூனோ ! த்வம் ஸதா ஜய! - ஓ முத்தியை யளிப்பவரே! பரமசிவனுக்குப் புத்திரரே ! தேவரீர் எக்காலமும் வாழ்ந்திருக்கவேண்டும்.

பொழிப்புரை.

ஓ முத்தியை யளிக்கும் முருகக்கடவுளே ! ஆனந்தத்திற்கு இருப்பிடமானவரும், அளவிறந்த காந்தியும், அழியாப் புகழும், அளவிறந்த வடிவமும் படைத்தவரும், உலகிற்கெல்லாம் உறைவினருமாகிய தேவரீர் எக்காலமும் வாழ்ந்திருக்கவேண்டும்.

சுவாமியானவர் பக்தர்களை அனுக்ரகிக்கச் சதாகாலமும் இவ்விடத்திலேயே எழுந்தருளியிருக்கவேண்டும் என்ற இந்நூலாசிரியரின் பிரார்த்தனையே இது.

भुजङ्गाख्यवृत्तेन क्लृप्तं स्तवं यः
पठेत्भक्ति युक्तो गुहं सं प्रणम्य।
सपुत्रान् कलत्रं धनं दीर्घमायुर्
लभेत् स्कन्दसायुज्यमन्दे नरःसः ॥

பலசுருதி

(33) புஜங்காக்ய வ்ருத்தேன க்லுப்தம் ஸ்தவம்ய:
படேத் பக்தி யுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய ।
ஸபுத்ரான் களத்ரம் தனம் தீர்க மாயுர்
லபேத் ஸ்கந்த ஸாயுஜ்ய மந்தே நர:ஸ: ॥

பதவுரை.

ய: குஹம் ஸம்ப்ரணம்ய - எந்த மனிதன் முருகக் கடவுளை நமஸ்கரித்துக்கொண்டு,

பக்தி யுக்த : - பக்தியோடு கூடினவனாய்,

புஜங்காக்யவ்ருத்தேன க்லுப்தம் - "புஜங்கப்ரயாதம்" என்னும் யாப்பினால் அமைக்கப்பெற்ற,

ஸ்தவம் படேத் - ஸ்தோத்திரத்தை ஓதுவானோ,

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(333-வது பக்கத்தொடர்ச்சி)

ஆறு சமயங்களுக்குந் தலைவனும், ஆறெழுத்தை யன்பினுடன் கூறுமவர் சிந்தை குடிகொண்டோனுமாகிய ஆறுமுகக் கடவுள், உள்ளுவார் வினையகற்றும் வெள்ளியம் பொருப்பின் முன்வாயிலின் திருமண்டபத்தின்கண், வீரவாகு தேவர் முதலிய ஒன்பான் துணைவரும், இலக்கஞ் சேனைவீரர்களும் புடை சூழ்ந்து போற்றிநிற்ப வீற்றிருந்தருளினர். அத்தருணத்தில் வீணைவல்லோராகிய நாரத முனிவர், கங்கைசூடிய மங்கைபங்காளற்கு உவகையுண்டாகுமாறு ஒரு வேள்வி செய்ய விரும்பினர். அந்தணர், இந்திரன், அருந்தவர் அயன் அரி முதலியவர்களுடன் பூவுலகின்கண் யாகத்திற்கு இடம் வகுத்து, வேதாகம விதிப்படி செய்யத்தொடங்கினர். அவ்வாறு செய்யும்போது மந்திர மாறுபாட்டால் யாகாக்கினியினின்றும் செவ்வானம்போன்ற நிறத்துடன் ஓராட்டுக்கடா தோன்றியது. அதன் கோரவடிவத்தையும் பெருஞ்சினத்தோடு செய்யும் ஆரவாரத்தையும்

ஸ:புத்ரான், களத்ரம், தனம், தீர்க்கம் ஆயு: - அவன் புத்திரர்கள், மனை, பொருள், நெடுங்கால வாழ்வு இவை களையடைந்து,

அந்தே ஸ்கந்த ஸாயுஜ்யம் லபேத் - முடிவில் முருகப் பெருமானுடைய ஸாயுஜ்ய முக்தியையும் அடைவான்.

பொழிப்புரை.

எவனொருவன் சுவாமியை வணங்கிப் பக்தியோடு இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பானோ அவன் தனதான்ய புத்திர களத்திராதிகளுடன் நெடுநாட்கள் இவ்வுலகில் வாழ்ந்திருந்து முடிவில் முருகப்பெருமானது திருவடி நிழலையடைந்து அழியாப் பேரின்ப சுகத்தையும் அனுபவிப்பான்.

ஸ்ரீ சுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்
முற்றிற்று.

கண்டு அங்குள்ளார் அனைவர்களும் அஞ்சி நடுங்கினார்கள். அந்த ஆட்டுக்கடா தோன்றியதை ஆராயுங்காலத்து, "பூமியின்கண் சிலர் வேதியரென்றிருப்பார் வேதத்தினுட் பொருளையறியாமல், பசு நிரூட பந்தம், பௌண்டரீகம், அசுவமேதம், அஜபேதம் முதலிய பெயர்களை வைத்துக்கொண்டு, நம்மினத்தவாம் ஆடுமுதலியவற்றை வதைக்கின்றனர். இனி அவ்வதைகளுக்கு இருப்பிடமாகிய யாகங்களையே புரியாவண்ணம் இங்கு சூழுமியுள்ள யாவரையும் வேரோடழித்துப் பழிக்குப்பழி வாங்குவேன்" என்று புறப்பட்டது போலிருந்தது.

ஆட்டுக்கடாவானது அண்ட கோளகையும் வெடித்துத் துகளாகவும்; அஷ்டகுலாசலங்கள் அசைந்தாடவும் ஆர்த்தது. தலையைச்சாய்த்து வயிரத்திற்கு நிகரான கொம்புகளை நிலத்திற் குத்தித் தூளி கிளப்பியது. யுகமுடிவில் தோன்றும் சண்டமாருதமும், வடவாமுகாக்கினியையுங் குளிரவைக்கும் ஊழித்தீயும், ஏழு மேகங்களும், ஏழு கடல்களும் ஒன்றுகூடி முழங்கிவருதல்போலச் சீறிக் குதித்து வருவதைக்கண்ட நாரதர் முதலியோர் நடுநடுங்கி, யாகத்தைவிட்டு 'உயிர்பிழைத்தாற் போதும்' என்று ஏங்கி, மனங்கலங்கி ஓடினர்; அங்ஙனம் ஓடுகின்றவர்களைக்கண்ட ஆட்டுக்கடா பின் தொடர்ந்து கொம்புகளால்குத்திச் சிலரைக் கொன்றது; சிலர் காலொடிந்தார்; சிலர் குடல் கிழியப்பெற்றார்; சிலர் கரமிழந்தனர். இவ்வாறு ஆட்டுக்கடாவானது உயிர்களுக்குத் துன்புறுத்தி உலகமெங்கும் உலாவியது; உலகங்கள் நடுங்கின; அநேக வுயிர்கள் மாண்டன. அத்தகர் ஆகாயத்திற் பாய்ந்து சூரிய சந்திரர்களது தேர்களையழித்து அவைகளிற் பூட்டிய குதிரைகளுடன் போர்புரிந்தது. தனக்கு எதிர்ப்பட்டவரையெல்லாம் கொம்பாற் குத்திக்கொன்று திசைகள் சுழலத் திரிந்தது.

இப்பெரும் விபத்தைக்கண்டஞ்சிய நாரதர் முதலியோர் விரைந்தோடி, சகலருக்கும் புகலிடமாகிய கண்ணுதற்கடவுள் வீற்றிருக்கும் கயிலைமலையை யடைந்து, திருமலையின்மீது ஏறிவரும்போது, ஆங்கே எல்லா ஆற்றலும் எல்லா முதன்மையும் எல்லா அனுக்கிரகமுமுடைய எந்தை கந்தவேள் எழுந்தருளியிருக்கக்கண்டனர். சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல் உவகைபொங்க உளமகிழ்ந்து, "நாம் ஐம்முகச்சிவனாரிடஞ் செல்லவேண்டாம்; அறுமுகச்சிவனாரே ஈண்டு இலக்கத்தொன்பான் வீரர்களுடன் திருவிளையாடல் செய்தருளுகின்

ளூர்; சேய்களின் குறைகளை நீக்கத் தாய் வலிந்துவருதல்போல் நமது இன்னலை நீக்க எம்பெருமான் நம்மெதிரே எழுந்தருளிவந்தனர்; இவர் சிறுவரல்ல; இந்திரன் முதலிய இமையவர்களைக்கொன்று மீளவும் உய்வித்த முழுமுதற்கடவுள்; நமது இன்னலை இவர் எளிதில் நீக்குவர்; இப்பெருமானது சரணமலரைக் கரணங்களொடுங்கப் போற்றி நிகழ்ந்ததனை விண்ணப்பம் புரிவோம்" என்று தங்களுள் உணர்ந்து, நம்பினூர்க்கருளும் எம்பிரான் திருமுன்சென்று, அப்பரம பதியின் பாதபங்கயமிசை அடியற்ற மரம்போல்வீழ்ந்து, ஓலமிட்டுத் துதிப்பாராயினூர்.

மூவர்கள் முதல்வா ஓலம் முக்கண்ணன் புதல்வா ஓலம்
சேவலங் கொடியாய் ஓலம் சிறந்த சிற்பரனே ஓலம்
தேவர்கள் தேவே ஓலம் தெய்வநா யகனே ஓலம்
ஆவலுற் றருள்வாய் ஓலம் அறுமுக ஓலம் ஓலம்

என்று முறையிட்டு நின்றனர். கந்தப்பெருமான் அவர்களுடைய துன்பத்தைக்கண்டு, "அஞ்சாதொழிமின்கள்; அஞ்சாதொழிமின்கள்" என்று அபயஸ்தந்தந்து, "நீங்கள் மிகவும் வருந்தினீர்கள்; நுமக்குற்ற துன்பம் யாது? சொல்லுங்கள் என்று அறியார்போல் வினவியருளினூர். தேவர்களும் முனிவர்களும் அது கேட்டு, "எந்தையே! தேவரீர் அறியாததொன்றுளதோ? அடியேங்கள் வேதவிதிப்படி ஒரு வேள்வி செய்தேம்; அந்த யாகாக்கினியினின்றும் ஓராட்டுக்கடா தோன்றி எம்மைக் கொல்ல யத்தனித்தது. அதனூல் யாங்கள் பெருந்துன்பமுற்று இங்கு வந்தோம்; அது கோபத்தோடு அநேகரைத் துடர்ந்துபோய்க் கொன்றும், அநேகரை வருத்தியும், உயிர்களுக்கு ஊறுவிளைத்துக்கொண்டு உலகமெங்கணுந் திரிகின்றது; விண்ணிலும் மண்ணிலும் பல வுயிர்கள் மாண்டன. இன்னும் ஒரு நாழிகைக்குள் எல்லா உயிர்களும் இறந்துவிடுமென்பது ஒருதலை. உய்வகையறியா அடியேங்கட்குத் தெய்வநாயகராம் தேவரீரே புகலிடமாம்; எமது துன்பத்தை நீக்கிக்காத்தருள்வீர்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

அறுமுக வள்ளல் அவர்கள்மீது திருவருள்நோக்கஞ்செய்து திருக்கரமமைத்துத் தேற்றி, தமது ஆக்ஞையை எதிர்பார்த்துக் கொண்டு பக்கலில் நிற்கும் வீரவாகுதேவரைத் திருநோக்கஞ் செய்தருளி, யாகாக்கினியினின்றுந்தோன்றி இவர்கள்யாகத்தை அழித்து உயிர்களைக்கொன்று எங்குந்திரியாநின்ற அவ்வாட்டுக்கடாவை நீ

விரைந்து சென்று இப்பொழுதே பிடித்துக்கொண்டுவா" என்று பணித்தருளினர். வீரவாகுதேவர் எம்பெருமானுடைய ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு, அறுமுகனாது அருண சாணாவிந்தங்களை வணங்கித் துதித்து விடைபெற்று ஆட்டுக்கடாவைத் தேடிச் செல்வாராயினர்.

அதுகாலை ஆட்டுக்கடாவானது, தேவர் முனிவர் முதலியோர் அஞ்சியோடினமையால் பூமியிலுள்ளாரைச் சிதைத்து, கீழ் ஏழுலகிலுஞ்சென்று அங்குள்ளாரையும் வதைத்து, சுவர்க்கலோகம் முதலிய மேல் உலகங்களையுந் தன் கொம்பால் தகர்த்து நாசஞ்செய்து, பிரமனுலகமான சத்திய உலகத்தையடைந்து, இறுமாந்து ஆரவாரித்து நின்றது. வீரவாகுதேவர் பூமியினும், கீழ் ஏழுலகங்களினும் தேடிக்காணாமையால் மேலுலகங்களினுந்தேடிக் காணாது பிரமலோகஞ்சென்று தேடுங்கால், ஆங்கோரிடத்தில் வடவாமுகாக்கினி அநேக ஆயிரம்யோசனை உயர்ந்து பரந்து வளர்ந்தாற்போன்ற உடலையும், அதன்கொழுந்து நீண்டாற்போன்ற நாக்கையும், ஆலகாலவிடம் போன்ற கொம்புகளையும், இடியைப்போலொலிக்கும் குளம்புகளையும் வைரஊசிபோன்ற வான்மயிரையும், பல மேருமலைகளைப் பருக்கைக் கற்களாக்கி தன் காற்சிலம்புகளில் சேர்த்தாற்போன்ற அத்துணைப் பெரிய தோற்றத்தையுமுடைய ஆட்டுக்கடாவைக் கண்டார். இவரைக் கண்டவுடனே கடா குமுறிக்கிளம்பி எதிர்த்துவந்தது. வீரவாகுதேவர் சிறிதும் அஞ்சாது அவ்வாட்டுக்கடா அஞ்சும்வண்ணம் உரப்பி, விரைந்துபோய் அதன் கொம்பைப்பற்றி காகாவென்று சத்தமுண்டாகுமாறு இழுத்துக்கொண்டுபோய் திருக்கைலாசமலையை யடைந்து, அறுமுகத்தண்ணல்முன் அத்தகரை விடுத்துப் பணிந்துநின்றார்.

குமாக்கடவுள் அதுகண்டு முறுவல்பூத்து, தேவர் முனிவர் திசைமுகன் திருமால் முதலியோரை நோக்கித் திருவாய்மலர்ந்தருள்வர். "அன்புடையீர்! ஆட்டுக்கடா நம்மிடத்து வந்துவிட்டது; இனி நீவிர் ஒரு சிறிதும் அஞ்சாது பூமியிற்சென்று நீங்கள் தொடங்கிய யாகத்தை இனிது முடியுங்கள்" என்று அருளிச்செய்தனர். அன்னவரெல்லாம் அதுகேட்டு துன்பவேலையினின்று மெழுந்து இன்பவேலையில் மூழ்கிக் கூத்தாடிப் பாவசமுற்று, வந்த வினையகற்றும் கந்தநாயக! மாய இருட்படலத்தை மாற்றும் தூய அருட்கதிரே! தேவரீர் திருவருட்கோர் எல்லையுளதோ? அடியேங்கட்கு

இன்னும் ஓர் வரந்தரல்வேண்டும்; இவ்வாட்டுக்கடாவை வேறெங்கும் விடவொல்லாது; தேவரீர் வாகனமாகக்கொண்டருளல்வேண்டும்; அடியேங்களும் மற்றையோரும் அஜாரூடராகிய தேவரீரைக் கண்டகாலத்தே, எங்கட்குண்டாகிய இடர்களை நீக்கியாண்ட பரம்பொருளிவரென்று நல்லறிவுற்று உய்தற்கேதுவாகும். வேண்டுவார் வேண்டியவண்ணம் வழங்கு வேதவித்தகரே! இவ்வரத்தை நல்கியருள்வீர் என்று குறையிரந்தார்கள்.

ஏர்தரு தமரப்புத்தே ளிவ்வகை யிசைப்ப வன்னோர்
கார்தரு கண்டத் தெந்தை காதல வேள்வித் தீயிற்
சேர்தரு தகரி னேற்றைச் சிறியரே மூய்யு மாற்றல்
ஊர்திய தாகக் கொண்டே யூர்ந்திடல் வேண்டு மென்றார்.

பக்தாபீஷ்டவரதராகிய பார்வதி புதல்வர் அதுகேட்டுப் புன்னகைசெய்து "நாம் இதனை வாகனமாகக்கொள்வேம் நீங்கள்போய் யாகத்தைமுடியுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினர். நாரதர் முதலியோர் யாவரும் முருகக்கடவுளை வணங்கிக்கொண்டு, பூதலத்தில் வந்து சிவாகமமுறைப்படி மந்திரமுறை வழாது யாகத்தை முடித்தார்கள். அவ்வன்பரெலா முன்னருளுற்றிய தவங்காரணமாக அத்தகரை வாகனமாகக்கொண்டருளினர். அதன்மேலேறி உலகமெல்லாம் பவனிவந்தனர். அக்காட்சியைக்கண்டார் அனைவர்களும் கண்ணுங் கருத்துங்களித்து கரமலரைச் சிரமீது குவித்தும் போற்றிப்புகழ்ந்தார்கள். நாரதர் முதலியோர் யாகாதிபதியும், யாகபரிபாலனரும், யாகபலப்பிரதானரும் கந்தக்கடவுளே என்று தெளிவுற்றனர். "அக்னிபூ" என்று வேதங்களாற் பிரதிபாதிக்கப்படுகின்ற குமாரக்கடவுள் அதற்கியையவும், அவ்வுண்மையை எம்போன்றார் எளிதிலுணர்ந்துய்யவும், "சோதியே சுடரே சூழொளிவிளக்கே" என்ற தமிழ்மறைக்கிணங்கவும் அக்கினிதேவனுக்குள்ளேயிருந்து வதிக்கின்ற மூலாக்கினிதேவன் தானே என்பதைக் காட்டுதற்பொருட்டு, அக்கினிதேவனைப்போல் தாமும் ஆட்டுக்கடாவாகனமுடையாராயினர். அதனால் அறுமுகச்சிவனாரை வேதங்கள் "அஜன்" என்று அழைக்கின்றன. அருண (ஆடு) மூர்ந்த கருணை நாயகன் உலகெலாம் பவனிவந்தபின் அதினின்றுமிறங்கி திருக்கைலாசமலையில் பண்டுபோல் வீற்றிருந்தருளினார்.

அஜாமேகாம் லோகித சுக்ல க்ருஷ்ணாம்
பஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம் ஸ ரூபாம்!
அஜோஹ்யேகோ ஜுஷமாணோநு சேதே
ஜஹாத்யேநாம் புக்த போகா ம ஜோந்ய: !!

(தொடரும்).

ஓம் குஹாய நம:

கற்பு

(339-வது பக்கத் தொடர்ச்சி)

நாயகனும் நாயகியும் எக்காலத்தும் கருத்துவேறுபாடின்றி ஒற்றுமையாக இருத்தல்வேண்டும். அங்ஙனம் வாழும் வாழ்க்கையில் நாளுக்குநாள் இன்பமானது ஊற்றெடுத்து இல்வாழ்வு நல்வாழ்வாக விளங்கும். பெண்மணிகள் உள்ளன்புடன் தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொண்டு வருவார்களாயின் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு யாதொரு தடையுமிராது. நாயகன் ஒருசமயத்தில் தன் கருத்துக்கு மாறுபட்டால் அதனை மெல்லமெல்ல இதவசனங்களைக்கூறி பணிவாலும் நயத்தாலும் மாற்றவேண்டும். நாயகன் ஒன்றுசொன்னால் நாயகி ஒன்று சொல்வதும், அவன் ஒன்றைச் செய்யச்சொன்னால் இவள் ஒன்றைச்செய்வதும், அவன் வேண்டுமென்பதை இவள் வேண்டாமென்பதுமாக இருந்தால் அந்தக்குடும்பத்தில் எப்போதும் தீராத மனோவேதனையே வளரும். சாந்தியும் சந்தோஷமும் ஒருபோது மிரா. நாயகியின் மாறுபட்ட செய்கைகளைக்கண்டு நாயகனுக்கும் அவளிடத்தில் அன்பு நாளுக்கு நாள் கிருஷ்ணபட்சத்துச் சந்திரனைப்போல் தேய்ந்து முடிவில் விரோதியாகவே மாறிவிடுகிறான். அந்தச் சதிபதிகளுக்குள் எந்நேரமும் கலகந்தான் தாண்டவஞ்செய்யும். இதனால் கணவனுக்கும் துன்பம்; மனைவிக்கும் துன்பம்; இருவருக்குமே மனம் சாந்தியற்று துடித்துக் கொண்டிருக்கும். கணவனைக் கண்டால் கண்ணுக்கு வெறுப்பு; அவன் நின்ற இடத்தில் இவள் நிற்பதில்லை; இப்படி நெடுநாள் இருந்து அவர்கள் இன்பவாழ்க்கை துன்பவாழ்க்கையாக மாறி, அவன் இல்லறத்தைவெறுத்துத் துறவறத்தை மேற்கொள்ளுகிறான். உள்ளபடி மனத்துறவுற்று துறந்தால் அவன் பாகதிக்கு வழிதேடுவான். குடும்பத்தில் மனைவியின் வேதனையைப் பொறுக்கமுடியாமல் "இவளுடனிருந்து படுவதைக்காட்டிலும் நாலு வீடுண்டு, ஒரு வோடுண்டு" என்று துறந்தவனாதலால், துறவு மார்க்கத்தின் தூய்மையையும் உணராது கெட்டு இரண்டு தன்மையையுமிழந்து பிறர் பழித்து நகையாடநிற்கிறான். கணவன் கதி இப்படியாக மனைவி

சிறிது துன்பமுண்டானவுடனே, "இந்த வாழ்விலிருந்து துன்புறுவதைக்காட்டிலும் இறந்து படுவதே மேல்" என்று துணிந்து கிணறு குளங்களில் வீழ்ந்து அவமே மடிகின்றனள். காமதேனுவின் பாலைக் கமரிற்கொட்டியதுபோல், கிடைத்தற்கரிய இவ்வரிய மனிதப்பிறவியை முத்திவீட்டிற்கு வழிதேடாது வீணேயாக்கி விளிக்கின்றனர். அந்தோ! பரிதாபம். தற்கொலை செய்துகொண்டவர்கள் பல ஆயிரமாண்டுகள் இருள் உலகில் அலைந்து பைசாசமாகித் திரிந்துழன்று மீளா நரகுக்கு ஆளாகின்றார்கள். இதனை யறியாத பேதைப்பெண்கள் சகிக்குந்தன்மையின்றித் தானும்மாண்டு, பிறமாதருக்கும் தன்னைப் போல் மடியுமாறு வழிகாட்டியாகின்றனர் "மெல்லியவாழைக்குத் தானீன்ற காய் கூற்றங்கூற்றமே இல்லிற் கிசைந்தொழுகாப்பெண்" என்ற மூதுரைக்கு நாயகன் மடியுமாறு நடந்து இலக்கியமாகின்றனர். இவைகளுக்குக் காரணம் நல்லுணர்ச்சியில்லாமையே. அந் நல்லுணர்ச்சி பெற்றோராலும் பெரியோராலும் உயர்ந்த நீதிகளைப் போதிக்கும் அறிவு நூல்களாலுமே உண்டாகும்.

பெண்கள் தமது கணவரோடுகூடி வாழுங்காலத்தில் எல்லா சுக துக்கங்களுக்குங் காரணம் தமது ஒற்றுமையே. ஆதலால் சகோதரிகள் தமது இல்வாழ்க்கையில் அதுவிஷயத்தில் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எந்தக் காரியத்தில் ஒற்றுமை குறைகிறதோ அந்தக்காரியத்தைச் செவ்வைப்படுத்தி ஒழுகவேண்டும். நாளுக்கு நாள் தமது ஒற்றுமை வளர்ந்து வருவதற்குண்டான முறையை அனுசரிக்கவேண்டும். அதனால் இன்பமாகிய தரு வளர்ந்து செழித்துத் தழைத்தோங்கும். அதன் நிழலில் நாயகனும் நாயகியும் பகையென்னும் வெய்யிலின் துன்பமின்றிக்கூடி மகிழ்ந்திருக்கலாம். அத் தருவில் அன்பென்னும் பூங்காற்று மெல்ல வீசும்; சாந்தியென்கின்ற மலர்கள் மலரும்; சற்புத்திரபாக்கியம் என்கின்ற பழங்கள் பழுக்கும்; சகோதரிகளே! உற்று நோக்குங்கள். இந்த இன்பமாகிய மரத்திற்கு தண்ணீர் எது? ஒற்றுமைதான். ஒற்றுமை என்னும் தண்ணீரைவிட்டு அந்த இன்பமாகிய மரத்தை வாடவிடாமல் பாதுகாப்பது உங்கள் பொறுப்பாக இருக்கிறது. மரம் வாடி உலர்ந்துவிட்டால் காற்று, பூ கனி நிழல்முதலிய எந்த நற்பயன்களையும் பெற முடியாதல்லவா? கணவன் செல்வவந்தவனாக வாழ்ந்தாலும் மகிழ்ந்து அவனுடைய சந்தோஷத்தில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும்; நித்திய தரித்திரனாகத் தாழ்ந்தாலும் அவனுடைய துக்கத்தில் பங்கெடுத்

துக்கொள்ளவேண்டும். நளன், சக்கிரவர்த்தியாக அரியணைமேல் வீற்றிருந்து அரசாண்டபோதும், ஒற்றுமையுடன் தனிவனம்போந்து முள் கல் மிருகாதிகளின் துன்பத்தால் வாடியபோதும் கற்பரசியாகிய தமயந்தி நீங்கா நிழல்போல் தொடர்ந்திருந்து சுகதுக்கங்களை யனுபவித்தாளன்றோ? அதனாலல்லவா? அவ்வுத்தமி இன்னும் புகழுடம்புடன் எங்கும் நின்று நிலவுகிறாள்.

நாயகன் ஒரு சமயத்தில் நேர்விரோதமாகவும், ஞாயத்திற்கு மாறாகவும் நடப்பானேயானால் அப்போதுதான் பெண்கள் தமது முழு சகிப்புத்தன்மையும் உபயோகப்படுத்தி, மிக்க தாழ்மையாகவும் இதமாகவும் நடந்துகொண்டுவந்தால் அவனே தன் குற்றத்தையும் மனைவியின் குணத்தையும் உணர்ந்து, தன் குற்றத்தினின்றும் விடுபட்டு மீளவும் எக்காலத்தும் குணசீலனாகவே நின்று மாறாத அன்புடன் இருக்கத் தலைப்படுவன். தான் நேர்மாறாக நடந்ததை எண்ணி நெஞ்சம் நெகிழ்வன். சகிப்புத்தன்மையும் ஒற்றுமையும் நன்கு புலனாக்கும்; இவ்வெடுத்துக்காட்டை உற்றுநோக்குக.

நடுநாட்டிலே பெண்ணையாற்றின்கரையிலே திருக்கோவலூர் என்னும் நகரம் சகல வளம்பெற்றுவிளங்கும். அந்நகரத்தை அறநெறிவழுவாத பிரதாபசீலன் என்னும் குறுநில மன்னனொருவன் அரசுசெலுத்திவந்தான். அவன் இன்சொல் வழங்கி குடிகளைத் தாய்போல் புரந்துவந்தான். காண்டற்கினியனாய்க் காட்சிக்கெளியனாய் பொறுமைக்கு உறைவிடமாய் விளங்கினன். செவியாற் பார்த்தும் கண்ணாற் பேசியும் நீதிக்கு மாறுபாடின்றி நடுநிலையாகத் தீர்ப்பு செய்வான். தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்ளராலும், மிருகங்களாலும் துன்பம் நேராவண்ணம் பாதுகாத்துவந்தான். ஆற்லொரு கடமைவாங்கி எல்லா மக்களுக்கும் உயிர்போலும், குணத்தின் பொக்கிஷம்போலும் இருந்தான். அவனைப்புகழாதார் ஒருவருமில்லை. எவர்களிடத்தில் நல்லொழுக்கமுளதோ அவர்களை உயிரினுஞ் சிறந்தவர்களாக எண்ணுவான். அவர்களோடு கலந்து உறவாடுவான். இத்தகைய மன்னர்பெருமான் நெடுநாள் மணமில்லாமல் தனித்திருப்பது குறித்து குடிகள் வருந்தினர். அறிவுடைப் பெருமக்கள் சிலர் அரசனிடம்போந்து வணங்கி, "கொடை அளி செங்கோல் குடிவோம்பலென்னும் நான்கையுமுடைய குரிசிலே! தண்ணருள்மிக்க தயாநிதியே! நீர் தனித்திருந்து அரசாள்வது நன்றன்று; இல்லறமே நல்லறமென்பது ஆன்றோர் துணிபு; ஆதலால்

தாங்கள் கற்பிற் சிறந்த காரிகையை மணந்து அரசனுதலே சாலவும் சிறப்புடைத்தாம்'' என்றனர். அதுகேட்ட மன்னன் நகைத்து, ''நன்று நன்று; கல்யாணம் புரிந்துகொண்டு கண்கலங்கி கருத்தழிந்து கவலையுற்ருேர் கவலையுறுகின்ருேர் எண்ணிலர்; நான் அதனை விரும்பவில்லை; மனைவி கற்புடையவளாயமைந்தால்தான் இன்பம்; அமையவில்லையேல் அதைவிட நாகம் வேருென்றுமில்லை; ஆதலால் இதுவிஷயத்தில் என்னை வற்புறுத்தாதீர்கள்'' என்று கூறிவிட்டான். அதுகேட்ட அவர்கள் மீளவும் மறுத்துச்சொல்ல அஞ்சி வாளா இருந்துவிட்டனர். பின்னும் ஒரு காலத்தில் தமது எண்ணத்தை முற்றுவிக்க எண்ணிய அறிவுடையோர்கள் மன்னனிடமடைந்து வணங்கி, ''வரையாது வழங்கும் வள்ளலே! தாங்கள் யார் எது கேட்டாலும் மறுக்காது நல்கும் பெருங்கொடையாளி; குடிகளின் குறைகளைநீக்கும் குணபூஷணர்; எமக்கு நேர்ந்துள்ள குறையைநீக்கி ஒரு பெரும் பாக்கியத்தைத் தரவேண்டு'' மென்று குறையிரந்தனர். அதுகேட்ட மன்னன் ''குடிகளுக்கு யாதொருகுறையும் உண்டாகா வண்ணம் கண்ணுங்கருத்துமாகக் காத்துவந்தோமே? அங்ஙனமிருக்க இப்போது என்னகுறை நேர்ந்திருக்கும்? அதனைக்கேட்டு உடனே அதை நீக்கவேண்டும்; குறைநோாவண்ணம் அரசாள்பவனன்ருே கொற்றவன்?'' என்று பற்பல எண்ணி, ''அறிஞர்களே! நுமக்கு யாதுகுறை? உமக்கு என்னவேண்டும்? கூறுங்கள்; உடனே அக்குறையை நீக்கி வேண்டியவற்றை வழங்குவன்'' என்ருன். குடிகள், ''நற்றவத்தாற் கிடைத்த கொற்றவர்பெரும! தங்களுக்குப்பின்னுல் தம்மைப்போல் நீதிதவருது அரசாள்வதற்கு ஓர் இளவாசர் இல்லையென்பதுதான் எமது பெருங்குறை; ஆதலால் தாங்கள் கருணைகூர்ந்து எமக்கோர் மகாராணியாரையும் அவர்கள் வயிற்றில் உம்மைப்போல் எம்மைக்காத்தருள ஓர் இளவாசனையுந் தந்தருளவேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். மன்னன் அது கேட்டு மறுக்கமுடியாதவனுகி ஒருவாறு இணங்கினன். கற்பின் மிக்க கன்னிகையை மணப்பதாக உறுதிகூறினன். குடிகள் தமது எண்ணம் நிறைவேறியதாக எண்ணி உவகைபூத்தனர்.

மன்னன், செல்வத்தையும் குலத்தையும் பெரிதாக மதியாமல் குணத்தையே பெரிதாக மதித்தவனுதலால் எக்குலத்திற்பிறந்தாளாயினும் நல்லொழுக்கமும் நற்குணமும் பொருந்திய நங்கையை மணப்பேனென எண்ணி யாராய்ந்தான். திருக்கோவலூருக்கடுத்த ஆயர்

பாடியில் இடைக்கோன் என்கின்ற ஓர் இடையன் இருந்தான். அவனுக்கு ஒரு செல்வப்புதல்வியுண்டு; அவள் இயற்கையழகில் இலக்குமிக்கு நிகரானவள்; கோலஞ் சிறந்ததுபோல் குணமுஞ் சிறந்திருந்தது; பொறுமையில் பூதேவி நாணத்தக்கவள்; அவள் திருமேனியின் இயற்கைவனப்பைக்கண்டு தேவமாதர்களும் தலைகுனிவார்கள்; அவளது நற்குணத்தைக்கண்டு புத்தேளிரும் புகழ்வார்கள்; பிரதாபசீலன் அவளைத் தேர்ந்தெடுத்தான். தனக்கு வாழ்க்கைத் துணைவி யவளேயென்று தீர்மானித்தான். அமைச்சர்களைவிட்டு இடைக்கோனை வரவழைத்தான்; தன் கருத்தை அமைச்சர்கள்மூலம் இடைக்கோனிடங்கூறி அவனது மகளைக்கேட்டான். அச்சமும் அதிசயமுங்கொண்டு இடைக்கோன் இறைவனை அஞ்சி

"முறைசெய்து காப்பாற்று மன்னன் மக்கட்கு
இறை யென்று வைக்கப்படும் என்ற

பொய்யாமொழிக்குப் புகழ்தந்த புண்ணிய புருஷரே! சாந்தமிக்க வேந்தர் பெரும! "யார்க்கும் இலைமுகப் பைம்பூணிறை" என்றபடி குடிகளுக்குத் தெய்வம் மன்னவனேயல்லவா? உயர்குடியிற்றோன்றிய தாங்கள் என்னைப் பொருள்படுத்திப் பெண்கேட்பது வியப்பினும் வியப்பே! தங்கட்கு சம்பந்தியாவதற்குக் குலத்தாலும் தனத்தாலும் கீர்த்தியாலும் பிறவாற்றாலும் தகுதியற்றிருக்கின்றேன்; அடியேனுடைய உடல் உயிர் பொருள் யாவும் தமது உடமைகளே. ஆதலால் தங்கள் உடைமைகளில் ஒன்றாகிய என் பெண்ணை யான் எவ்வாறு தருவது? சுதந்தரமற்ற என்னைக்கேட்பது தங்கள் பெருந்தகைமையின் பெருமிதமே! ஆதலால் என் மகளைமட்டுமல்ல எனது ஆவியை வேண்டுமென்றாலுந் தருவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்" என்று பணிவாகவும் அழகாகவுங்கூறினன். அவனுடைய பொருளடங்கிய உறைகளைக்கேட்ட மன்னன் மகிழ்ந்து மணத்திற்கு நாள் முதலியவற்றை நிச்சயித்து, குறித்த நாளில் திருமணம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச்செய்தான். அரசர்கள் கூட்டங்கூட்டமாகவந்து குழுமினர்; எல்லாவகையாலும் அந்நகரத்தை அளகாபுரிபோல் அலங்கரித்தார்கள்; ஆனால் குடிகளுக்குமட்டும் சிறிது அதிருப்தி; அரசகுலத்திற் பிறந்தவளை மன்னன் மணங்கொள்ளாது இடைச்சியை மணக்கப்போவதைக்குறித்து வருந்தினார்கள்; தடுப்பதற்கு ஆற்றலற்றுப் புழுங்கினர். குறித்த காலத்தில் பிரதாபசீல மன்னருக்கும் இடைக்கோனுடைய மகள் மங்கலவதிக்கும் திரு

மணம் சிறப்பாக நடைபெற்றது. தன் எண்ணம்போல் மனைவி வாய்த்ததற்கு மன்னன் மகிழ்ந்தார். அரண்மனையைச் சேர்ந்த பிரபுக்கள், அரசனது சுற்றத்தார்கள் முதலாயினோர் இறைவன் இழிந்த இடைச்சியை மணந்துகொண்டதைக்குறித்து வெறுத்தார்கள்; மறைவில் இழிவாகப் பேசினார்கள். குறிப்புணர்வதில் சமர்த்தனாகிய கொற்றவர் பெருமான் இதனையுணர்ந்தான். இவர்களுக்கு நல்லறிவுபுகட்ட எண்ணினான். குலம்பெரிதல்ல குணமே பெரிது என்பதை உலகிற்கு வெளிப்படுத்தவும் எண்ணினான்.

பிரதாபசீலன் தன் காதலிபால் அன்புபூண்டு வாழ்ந்திருந்தான், மங்கலவதி தன் கணவனையே கடவுளாகக்கருதி உபசரித்துவந்தாள்; பதியின் சொல்லே வேதவாக்காகவும் பதியின் பாதசேவையே தெய்வசேவையாகவும் பதியின் திருவடியே சுவர்க்கலோகமாகவும் எண்ணி, அருந்ததிக்கு நிகரென்று அனைவரும்புகழ இனிது வாழ்ந்தாள். அரசன் அரசகுடும்பத்தார்க்கு இவளது கற்பின் பொற்பையுணர்த்த எண்ணி சின்னாள் கழித்து தன் உத்தம நாயகியாகிய மங்கலவதியை துன்பத்திற்காளாக்கினான். மங்கலவதி கருவுற்று ஓர் பெண்மகவை யீன்றாள்' செல்வபுத்திரி பிறந்ததைக் கேட்ட மன்னன் மனைவியின்பால்வந்து, "மடமயிலே! உன்னை நான்மணந்துகொண்டதற்காக அரசகுடும்பத்தாரும் குடிகளும் என்னைப் பரிகசிக்கின்றார்கள்; நம்மிருவரையும் வேம்பைப்போல் கருதுகிறார்கள்' நம் சீமந்தபுத்திரியைப்பார்த்து "இடைக்கோனுடைய பௌத்திரி திருக்கோவிலூரையாள்வாள்" என்று ஏளனம் செய்கிறார்கள்; நான் பழி சுமந்ததோடு என் மகளையும் பழிக்காளாக்க என் மனம் இசையவில்லை; குடிகள் மனமறிந்தரசுசெய்வதே மன்னர்கடமை; மகள் பழி சுமந்து உயிர்வாழ்வதை நான் விரும்பவில்லை; ஆதலால் குழந்தையைக் கொன்றுவிடக் கருதியுளேன்; நின் கருத்து யாது?" என்றான்.

மங்கலவதி! "அன்பின்வடிவாயமைந்த ஆருயிர்காதல! பதியின் வாக்கியமே வேதவாக்கியம்; தங்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதுவே எனக்கும் சரி; தங்களுக்கு வந்த இன்ப துன்பத்தில் எனக்கும் பங்குண்டு; உமக்குச் சந்தோஷத்தை யுண்டு பண்ணுவதே என்கடமை; இந்தப் புத்திரியல்ல வேறே எதுவானாலும் —உயிரையேனுந்தருகிறேன்; தங்கள் திருவுளமெப்படியோ அப்படியே செய்யலாம்" என்று கல்லுங்கரையுமாறு கனிவுடன் கூறினாள். இவ்வார்த்தைகள் பிரதாபசீலனுடைய மனதைப் பிளந்தது. கண்ணில் நீரருவி பெருகிற்று; அவைகளை அவன் சிரமப்பட்டுமறைத்துக்கொண்டு மனைவியிடம் விடைபெற்று நீங்கினான்.

(தொடரும்).

கார்த்திகேயன் துணை.

மகன் தாய் தந்தைக்காற்று முதவி

சச்சிதானந்தம்.

[மாத்ரு தேவோபவ பித்ரு தேவோபவ]

தைத்திரீயம்—சிக்ஷாவல்லி 11 அனுவாகம்.

சாந்தமிகும் சத்ய சீலர்களே!

எண்ணிலாத நெடுங்காலமாக எண்ணிலாத பல பிறவிகளை எடுத்தெடுத்திளைத்தோம்; இப்பொழுது பெறுதற்கரிய பிறவியாகிய மனிதப்பிறவியைப் பெற்றுளோம். இம்மனிதயாக்கையால்தான் நாம் பெறுதற்கரிய பேற்றை யடையமுடியும். அயனொடு மாலும் தேடித் தேடிக் காணொணாத தேவதேவனுடைய திருச்சேவடியில் இருமாந்தமர்ந்திருக்க இவ்வாக்கை ஒரு வழிகாட்டியேயாகும். இவ்வரும் பிறவியை நாமடைவதற்கு அதுகாரணமாக இருந்தவர் மாதாபிதாக்கள். ஆகவே தாய்தந்தையரிடத்தில் மக்கள் ஒழுகவேண்டிய ஒழுக்கத்தைப்பற்றிச் சிறிது வரைகுவோம் என்ற பேராவலுடையவனாயினேன். இப்பெரியதோர் விஷயத்தை மாத்ரு பித்ரு பக்தியில்லாத அடியேன் எழுதுவது இழுக்காமெனினும், சேற்றினுட் பிறந்த தாமரையையும் இப்பியிற் பிறந்த முத்தையும் எவ்விதம் பெரியோர்கள் புறக்கணிக்காரோ அவ்விதம் இதனையும் ஏற்றுக்கொள்வீர்களாக.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

(தாய்தந்தை செய்யும் நன்றி)

நமது வேதங்களும் பெரியோர்களும் மக்கட்கு தாய்தந்தை தெய்வம் என்று கூறுகின்றனர். மாதாபிதாக்களைக்காட்டிலும் அன்னியமாக மற்றொருதெய்வம் மக்களுக்கு இல்லையென்பதற்குக் குணம் நிறைந்த முனிவர்களும் சாக்ஷி கூறுவார்கள். அவர்களைக்காட்டிலும் சிறந்த வஸ்து ஒன்று உண்டானதும் இல்லை; உண்டாகப்போகிறதுமில்லை. ஆகவே மனிதனுக்கு தாய்தந்தையரைவிடச் சிறந்த வஸ்து மூன்றுலகங்களிலும் இல்லை. நம்மை பெறுவதற்காக அநேக தானதருமங்கள் புரிகின்றனர்; சரீரம் இளைத்துப்போகும்படி விரதமிருக்கின்றனர்; குழந்தையைவேண்டி தமது மெல்லிய பாதங்கள் கல்லிலும் முள்ளி

லும் அடிபட யாத்திரைபுரிகின்றனர்; இவ்விதம் தவமாதவமிருந்து கர்ப்பம் உண்டானபிறகு தாயானவள் மாபலாமுதலிய கனிவர்க்கங்களை சாப்பிடுவது கிடையாது; உண்டியைச் சுருக்குகிருள்; கர்ப்பம் நாசமடையாமலிருக்கவேண்டுமேயென்று விசாரப்படுகிருள்; மூன்ருவது மாதத்தில் மசக்கு என்னும் நோயால் மிகுந்த துன்பத்தையடைகிருள்; மாதங்கள் ஏறஏற அநேகவிதமான துன்பங்களை அநுபவிக்கிருள்; 9-வது மாதத்தில் திரும்பிப் படுப்பதாயிருந்தால் மெள்ள அமர்ந்து பிறகு படுக்கிருள்; நடக்கமுடியாமல் தவிக்கிருள்; கர்ப்பத்திஞல் தாய்படும்பாடுகள் எண்ணிலடங்காவென்பது மிகையாகாதன்ரே? குழந்தை வெளிப்படுங்காலத்தில் அளவில்லாத வருத்தத்தையடைகிருள்.

“வந்திப்பரிவாய் மகனைப் பெருந்துயரம்
நொந்தறிவாளோ நுவல்” நீதிவெண்பா.

தாயுமானப்பெருந்தகையார்:

“பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளைப்
பெறப் பேதை யறிவாளோ”

என்றனர். குழந்தை மலஜல விசர்ஜனம்செய்தால் கொஞ்சங்கூட அசங்கதமில்லாமல் எடுத்தெறிகிருள்; குழந்தைக்கு ஏதேனும் வியாதி வந்தால் தான் மருந்து சாப்பிட்டு பத்தியமிருக்கிருள்; தூக்கத்தை வெறுத்துவிடுகிருள்; குழந்தை இளைத்துப்போனல் சந்திகளில்கழிப்பு கழித்துப்போடுகிருள்; குழந்தையை முன்னிட்டு சிறுதெய்வங்களையும் வந்திக்கிருள்; குழந்தை பாலருந்தாவிட்டால் கண்ணீர்விட்டழுகிருள்; குழந்தையின் சௌக்கியத்திற்காக தாழ்ந்தவர்களைக்கொண்டும் மந்திரித்து கயிறுகட்டிக்கொள்ளுகிருள்; குழந்தை சாப்பிடாமுன் தான் சாப்பிடமாட்டாள்; மகன் பள்ளிக்குச்சென்று வீட்டுக்குத் திரும்பிவர சிறிது காலதாமதமானல் இன்னும் என் அருமைக் கண்மணி வரக்காணேமே? பசியினல் வாடுவானே? என்று பரிதபித்து அடிக்கடி வாசலில் வந்து பார்க்கிருள். குழந்தை சாப்பிடாவிட்டால் “அப்பா வருவார் பழம் வாங்கிவருவார்” என்று இனிய வார்த்தைகளைக்கூறி அன்னம் அருந்தச்செய்கிருள்; சில தாய்கள் குழந்தைக்கு சலதோஷம் உண்டானல் அடிக்கடி மூக்குச்சிந்திஞல் நாசி வலிக்குமேயென்றெண்ணி வாயினலும் உறிஞ்சுகின்றனர்; ஆ! என்னே! மாதாவின் கருணை. அவர்கள் பரிவுதான் என்னே! குழந்தையினல் தன்னுயிரையும் திரணமாக மதிக்கின்றனர்; கவிசாதுர்யத்திலுள்ள

பலவகையையும் நைஷதகாவியத்தில் காணலாம். நைஷதம் இயற்றியவர் ஸ்ரீ ஹர்ஷகவி; இவருடைய தகப்பனாகிய ஸ்ரீ ஹீரன் ஒரு அரச சபையில் வித்வானாக இருந்தார். ஒருநாள் வேறு தேசத்திலிருந்து ஒரு வித்வான் அரச சபைக்கு வந்தனர். அவர் தம்முடைய திறமையினால் ஸ்ரீ ஹீரனை ஜயித்தார் தோல்வியுற்ற ஏக்கத்தினால் ஸ்ரீ ஹீரன் காலமானார். அஞ்ஞான்று ஸ்ரீ ஹர்ஷர் சிறுகுழந்தையாக இருந்தார். இவர் தாயாராகிய மாமல்லாதேவிக்கு ஸ்ரீ ஹீரன் சிந்தாமணி மந்திரத்தை உபதேசித்திருந்தார். அம்மந்திரத்தை ஜபித்தவர்கட்கு சரஸ்வதி கடாக்ஷமுண்டாகும். மாமல்லா தேவியானவள் தன் குழந்தைக்கு அச் சிந்தாமணி மந்திரத்தை சொல்லி வைத்தாள். அக்குழந்தையானது எப்பொழுதும் அம்மந்திரத்தை கூறிக்கொண்டே இருக்கும். வாமாசாரப் பிரயோகங்களில் சவத்தின்மேலிருந்துகொண்டு ஒரு மந்திரத்தை ஜபித்தால் அதிகபலன் உண்டாகுமென்று மாமல்லாதேவிக்குத் தெரியும். ஒருநாள் படுத்துக்கொண்டிருக்கும்பொழுது தன் மார்பின்கண் குழந்தையை வைத்துக்கொண்டாள். குழந்தையானது மந்திரத்தைக் கூறிக்கொண்டிருந்தது எப்படியாவது நம் குழந்தை அபிவிருத்தி யடைந்து சமானமில்லாத வித்தையடைந்தால் போதும்; நம்முடைய உயிர் போனாலும் போகட்டும் என்று நினைத்து மாமல்லாதேவியானவள் தன்கழுத்தை வெட்டிக்கொண்டாள். தாயின் சவத்தின்மேலிருந்து குழந்தை மந்திரத்தைக்கூறவே உடனே சரஸ்வதிகடாக்ஷமுண்டாகி யாவர்களாலும் புகழப்பெற்ற பெரும்புலமைவாய்ந்தது. அவர்தான் பிறகு நைஷதகாவியத்தை இயற்றினார். குழந்தைக்கு ஏதேனும் சில ஆபத்துக்கள் உண்டானால் மாதாக்கள் தன்னுயிரையும் மாய்த்துக்கொள்ளுகிறார்கள். விபவவருஷம் ஐப்பசிமாதம் ஆறும் நாள் காங்கேயநல்லூரில் எமது தகப்பனாரால் முருகப்பெருமானுடைய திருவாலயத்தில் திருக்கோபுரம் புதுக்கிக்கொண்டிருக்கும்பொழுது எமது தமயனார் ஸ்ரீ சைலவாசர் அக்கோபுரத்தின்மீது ஏறினார்; மழையால் வழுக்கி அறுபதடி உயரத்திலிருந்து தவறிவிட்டார். எம் தாயாராகிய ஸ்ரீமதி கனகவல்லியம்மையார் மகன் கோபுரத்தின் மேலிருந்து விழுந்தான் என்று கேட்டவுடனே மரணத்திற்குத் தகுந்த மூர்ச்சையடைந்து கீழே விழுந்தார்கள்; பற்களெல்லாம் கிட்டிவிட்டன; அவ்வூரிலுள்ளோரனைவரும் இம்மாது பிழைக்கமாட்டாளென்று கூறினார்கள்; குறைந்தபட்சம் அரைமணிநேரம் வரைக்

கும் அம்மூர்ச்சை தெளியவே இல்லை. ஆனால் விழுந்தவருக்கு காயங்கள் ஒன்றும் ஏற்படவில்லை. தாயாருக்குக் குழந்தையின்மீதுள்ள அன்பை அஞ்ஞான்று யான் கண்டேன். 1937-வருஷத்தில் திருவனந்தபுரம் மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்த ஒரு புகைவண்டியில் ஒரு மாது, தன் குழந்தைக்கு வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தாள் ; எவ்விதமோ குழந்தை தவறிவிட்டது ; குழந்தையின் தாயானவள் பிள்ளையின்மேல் வைத்த அன்பால் மகனே என்று குழந்தையைத் தாவி கீழேவிழுந்தாள். குழந்தைக்குச் சொற்பகாயங்கள் ஏற்பட்டன; தாய் உயிர் துறந்தனள் என்று சுதேசமித்திரன்பத்திரிகையில் கண்ணுற்றோம். இவைபோல் இன்னும் அநேக சரித்திரங்களைக் கண்டும் கேட்டுமுளோம். ஆகவே குழந்தைகள் துன்பப்படத் தாய்தந்தைகள் மனஞ்சகிக்கமாட்டார்கள். தமக்கு யாது துன்பம் வந்தபோதிலும் மகனுக்குத்தெரியாவண்ணம் தாமேயனுபவிக்கிறார்கள். ஆகாரம் சிறிது கிடைத்தால் அதனை மகனுக்குத் தந்து தாய்தந்தைகள் பட்டினியாக இருக்கின்றார்கள். தாய் தந்தைகள் செய்யும் நன்றியை யாரே கூறவல்லார் ? குழந்தையினால் மாதாபிதாக்கள் படுந்துன்பம் அளவிடமுடியாது. இதனாலல்லவோ முற்றத்துறந்த முழுஞானியாகிய பட்டினத்தடிகள்

"முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
யந்திபக லாச்சிவனை யாதரித்து—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாய்" என்றும்

"வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோண்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்" என்றும்

"நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே—யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்" என்றும்

அருணகிரிநாதர்

தந்தபசி தனையறிந்து முலை யமுது
தந்து முதுகு தடவிய தாயார் என்றும்

கூறியவற்றால் அறியக்கிடக்கின்றதன்றோ ?

துற்புத்திரன் இயல்பு.

இப்படி வெகுபாடுபட்டு வளர்த்த தாய்தந்தைகட்கு சில மக்கள் துன்பத்தைப் புரிகின்றனர். மனைவி வந்தபிறகு மாதாபிதாக்களு

டைய முகத்தைப் பார்ப்பதே கிடையாது. அவர்கட்கு குடிக்கத் தண்ணீர் கொடுப்பதும் இவனுக்கு சுமையாக இருக்கிறது; காலையில் எழுந்தவுடன் தாய்தந்தையரை வசை பாடுகின்றனர்; "தந்தைதாய்ப் பேண்" என்னும் அமுதவாக்கை மறந்து, தாய்தந்தையரைக் காப் பாற்ருமல், தன் மனைவியைப்பேணிக் காப்பாற்றுகிருர்கள்; படிப் பித்த குரங்கு சொன்னபடியாடுவதுபோலவும், கூண்டிலகப்பட்ட கிளி கற்றுக்கொடுத்தபடி கூறுவதுபோலவும், மனைவி படுக்கையில் சொல்லிக்கொடுத்தபடி மாதாபிதாக்களிடத்தில் பேசுகிருன்; தான் சம்பாதித்து அவர்களுக்கு ஒன்றும் தருவது கிடையாது; தனம் வஸ் திரம் பூஷணம் எல்லாவற்றையும் மனைவி சரீர வுபயோகத்திற்கே சமர்ப்பிக்கின்ருன். அந்தோ! அருமையாகப் பெற்றுவளர்த்த தாய் தந்தைகளின் ஞாபகமே வருகிறதில்லை; தாய்தந்தையரை வேலைக்கார ரைப்போல் நினைக்கிருர்கள். இன்னும் சிலமக்கள் தன் அழுக்கு வஸ் திரத்தைத் தோய்க்கும்படி தாயாருக்குக் கட்டளையிடுகிருர்கள். இந்த இரண்டு கிழட்டுப்பிணங்களும் தொலைந்துபோகவில்லையே? என்று கூறுகின்ருர்கள்; நல்ல உணவு தருவது கிடையாது; நல்ல ஆடை தருவது கிடையாது; தாய்தந்தையைப் பார்க்கும்பொழுதே முணு முணுக்குகிருர்கள்; மாதாபிதாக்கள் பசியால்வாடத் தானும் தன் மனைவியும் வயிறு வெடிக்க உண்டு உறங்குகின்றனர். மனைவியின் இனிய வார்த்தையாகிய விஷங்கலந்த தேனைக்குடித்து அதனுல் புத் தியை மாய்த்துக்கொண்டு, வயதுமுதிர்ந்த பெற்ருேர்களை நோக்கி, "ஊருக்கு வருகிறது உங்களுக்கு வரவில்லையே? என்று சினந்து அவர்களைத் தனியே அலையவிட்டு, பொருளையெல்லாம் எடுத்துக் கொண்டு, தானும் தன்மனைவியும் வேருேரிடத்திற்குக் குடிபோகின்ற னர். ஐயோ! கொடிது!! கொடிது!!! சில மக்கள் பிதாமாதாக் களை அடிக்கிருர்கள்; இவர்களா உருப்படப்போகிருர்கள்? இதுவோ மக்களுக்கு அழகு? இவர்கள் மனிதர்கள்தானு? "மனிதனை மனித னறிவான் மடநாயைத் தடிக்கொம்பறியும்" என்னும் பழமொழிக் கிணங்க, இவர்களை மாக்கள்தான் தம் இனம் என்று சேர்த்துக் கொள்ளவேண்டும்; மக்கள் அல்ல என்பது இழுக்காகாது. பெற் ருேர்கள் செய்த உபகாரத்திற்கு இவர்கள் செய்வதா பிரதியுபகாரம்? "நன்றி மறவேல்" என்னும் அருமையான திருமொழிக்கு மேனேக் காக சொற்பொருளைமட்டும் நோக்கினுல் நீ தாய்தந்தைக்குச் செய்ய வேண்டிய நன்றியை மறவேல் என்றும், உனக்குப் பெற்ருேர்கள்

செய்த நன்றியை நீ மறவேல் என்றும் பழய பாட்டி கூறியிருக்கின்ருள்.

ஒன்றேரு பயன்றனை யுதவினேர் மனம்
கன்றிட லொருவினை கருதிச் செய்வரேல்
புன்றெழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூற்றும் வேண்டுமோ

என்னும் கந்தபுராணச்செய்யுளை சிந்திக்கப்படாதா? தாய்தந்தைகள் மனம் நொந்தால் வாழ்வார்களா? "மாதா வயிறெரிய வாழா வொருக்காலும்" என்று ஆன்ருேர் மொழிந்திருக்கின்றனரே? எவனெருவன் ஈன்ருேரை நிந்திக்கிருனே அவன் மறுபிறவியில் ஊமையாகப்பிறக்கிருன்; பெற்ருேர்கள் பசியால்வாட எவன் உண்டுஉறங்குகின்ருனே அவனுக்குத்தான் பைத்தியம்பிடிக்கிறது; கடுஞ்சொல்கூறுகிறவனுக்கு நாக்குப்புற்று உண்டாகிறது; அடிப்பவர்கட்குத்தான் தொழுநோ யுண்டாகிறது; தாய் தந்தையைக் கோபத்தினுல் கண் சிவந்து பார்க்கிறவனுடைய கண்களை இயமதூதுவர்கள் அக்கினியினுற் காய்ச்சிய ஊசிகளைக்கொண்டு குத்துகின்றனர்; அவர்களுக்கு ஏவல்செய்யக்கூசின பாவியை இயமதூதுவர்கள் சுடுகின்ற தாமிரநீரை அவர்கள் சரீரம் நடுங்கி அலறும்படி அவர்கள்மீது வார்ப்பார்கள்; எமபுரத்தில் படுகிற துன்பம் எழுதொண்ணுது.

பாரதத்தில்

"தூரவர்நல்லுரை மறுப்பினும் . . . .
இரவியுள்ளளவும் மதியமுள்ளளவும்
இவர்களே நரகி லெய்துவார்"

என்று கூறப்பட்டுளது.

மகன் ஆற்று முதவி.

ஆகவே தாய்தந்தைக்கு ஒருநாளும் துன்பம் செய்யப்படாது; அவர்கள் மனம் வருந்துமாறு யாதொரு காரியத்தையும் செய்யப்படாது; அவர்கள் இஷ்டத்துக்கு மாருக நடக்கப்படாது; இரண்டாயிரம் வருடத்திற்கு முன் சங்கரபகவத்பாதாள் சன்னியாஸம் பண்ணிக்கொள்ள நினைத்தார்; ஆனுல் அவருடைய தாயாரோ தன்னுடைய ஒருபிள்ளைக்கு மணஞ்செய்து பார்க்கவேண்டுமென்று மிகவும் ஆசையுடையவளாக இருந்தார். ஆகையால் சன்னியாசம் வாங்கிக் கொள்ளுகிறேனென்று சொன்னுல் தாயாருக்கு மிகவும் துக்கமுண்டாகுமே? என்று நினைத்தாராம்; ஆகவே பெற்ருேர் இஷ்டம் இல்

லாமல் ஒரு காரியத்தையும் செய்யப்படாது. ஒரு கருமம் புரிய ஆரம்பிக்கும்போது தாய்தந்தையை வணங்கியே தொடங்கவேண்டும். இதனை பிரம்மாவின் அவதாரமாகிய திருவள்ளுவர் முப்பால் கூறத்தொடங்கும்போது

அகர முதலவெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

என்று தன் தாய்தந்தையாகிய ஆதியையும் பகவனையும் தோத்திரஞ் செய்து ஆரம்பித்தார் என்றும் ஊகித்தற் கிடமிருக்கிறதல்லவா? காலையில் எழுந்தவுடன் பெற்றோர்களைத் தூரத்திலிருந்து வணங்கி அவர்கள் விரும்பினால் நெருங்கிவரவேண்டும். அவர்கள் சன்னிதியில் நிமிர்ந்தும் பார்க்கப்படாது.

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை

— ஆசாரக்கோவை.

மக்கட்கு தாய்தந்தை கூறும் நல்வாக்கே வேதவாக்கு; பெற்றோர்களே மூன்றுலகங்களுமாவர்; தாய்தந்தையரைப் பூசிப்பதால் புண்ணியலோகங்களைப் பெறுகிறார்கள்; அவர்களைப்பூசிப்பதால் மூன்று லோகத்திலும் கீர்த்தியுண்டாகுகிறது; அவர்களைப் பூசிப்பதால் மும்மூர்த்தியும் பரமசந்தோஷத்தை யடைகிறார்கள்; தாய்தந்தையைத் தெய்வம்போல்நினைத்து சதாசர்வகாலமும் பூசிக்கவேண்டும்; ஈன்றோரைத் தவிர வேறுதெய்வம் இல்லை; அவர்கள் சம்மதிபெறாமல் ஒரு தர்மத்தையும் செய்யப்படாது; தாய்தந்தைக்குப் பணிவிடை செய்வதே சிறந்தவேலையென்று பணிசெய்யவேண்டும்.

மாதரம் பிதரஞ்சைவ சாக்ஷாத் ப்ரத்யக்ஷ தேவதாம்
மத்வா க்ருஹிநிஷேவேத ஸதா ஸர்வப்ரயத்நத:

என்றும், நீதிநெறிவிளக்கத்தில்

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்று
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்

என்றும், நான்மணிக்கடிகையில்

ஈன்றாளின் என்ன கடவுளு மில்

என்றும், கூர்மபுராணத்தில்

தாயினிற் சிறந்த தெய்வமில்லை யுயர் தந்தை தன்னில்
ஏயுநற் குருவு மில்லை யென்னில் மற்றிவர்க டாளில்

தூய்மலர் தூவி நாளுந் தொழுதிடு மறிஞர் தாமே
ஆய்கதிர் பாப்பு பொன்னுட் டமரா யினிது வாழ்வார்

என்றும் கூறுமாற்றுலுணர்க.

கவுரவத்துக்குரிய யாவருக்குள்ளும் தாயே அதிக கவுரவத்துக் குரியவள் ; தாய் பூமியைவிட குருத்துவமுடையவள் ; அப்படியே தந்தை வானத்தைவிட அதிக உயர்ந்தவர்.

குருணாஞ்சைவ ஸர்வேஷாம் மாதா பாமகோ குரு:
மாதா குருதா ாபூமே:காத்பிதோச்சதாஸ் ததா

என்று கூறப்பட்டுள்ளது. தாய்தந்தைகள் மனங்கோணுமல் நடத் தல்வேண்டும்; வெந்நீரினுல் பெற்ரூேர்களுக்கு அபிஷேகஞ் செய்ய வேண்டும்; அவர்கள் வஸ்திரத்தைத் தன் கரத்தினுல் தோய்க்கவேண் டும் ; அவர்களுக்கு இனிமையான உணவு தரவேண்டும்; அவர்கள் உண்டபிறகு தான் உணவுகொள்ளவேண்டும். பெற்ரூேர்களுக்குத் தன் கரத்தினுல் படுக்கை விரிக்கவேண்டும்; பிதாமாதாக்களின் பாதத்தை மெல்லப்பிடிக்கவேண்டும்; ஈன்ரூேர்கள் உறங்கின பிறகு தான் உறங்கவேண்டும் ; அவர்களிடத்தில் நயமாக வார்த்தை சொல்லல்வேண்டும் ; வயதுமுதிர்ந்த காலத்தில் தாய்தந்தைகள் படுக் கையிலேயே மலஜலங்கழித்தால் சிறிதுகூட அசங்கதமில்லாமல்— முகம் சுளிக்காமல் சுத்தப்படுத்தவேண்டும் ; பவ்வியம்பட்ட உடை களையெல்லாம் தோய்த்து உலர்த்திவைக்கவேண்டும் ; புத்திமாருட் டத்தால் ஏதேனும் தன்னைவைதாலும் அவையெல்லாம் ஆசீர்வாத மென்று நினைத்துச் சுடுமுகத்தைக்காட்டாமல் பொறுத்துக்கொளல் வேண்டும்; புத்திதடுமாற்றத்தினுல் சிலசமயம் தன்னையடித்தாலும் "அப்பா ஓங்கியடித்தால் அந்த அதிர்ச்சியினுல் தங்கள் கைவலிக் குமே" என்று இனிமையாகப் பரிவுடன் கூறவேண்டும் ; பெற்ரூேர் கள் செய்த நன்றிக்கு மக்கள் நூருண்டுவரைக்கும் தொண்டுபுரிந்தா லும் ஒருநாள் வளர்த்ததற்கு சமானமாகாது.

ஈன்று வளர்த்த தாய்தந்தைக் கேவரே கைம்மா றியற்றிடுவார்
ஆன்ற மதலை நூறுவய தளவு மடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருள் முற்றுமளித்து முறைமுறையே
ஏன்று வழிபா டியற்றிடினு மொருநாள் வளர்த்தற் கிணையாதே

யம்மாதாபிதரௌக்லேசம் ஸஹேதே சம்பவேந்ருணும்
நதஸ்யநிஷ்க்ருதி: ஸக்யாகர்தும் வர்ஷசதைாபி

என்பவற்ருலறிக.

தாய்தந்தைக்குப் பணிவிடை செய்வதே சிறந்த தவம்; பெற்றோரை நிராகரித்துக் கானகத்திற்சென்று அருமையாகத் தவம்செய்தாலும் தேவர்களும் முனிவரும் இகழ்வார்கள்.

காசிகாண்டத்தில்

"தந்தை தாய் பணிதல் செய்யுந் தவமலாற் றவம்வே றில்லை"

என்றும், உபதேசகாண்டத்தில்

ஈன்றதாயினை யீன்றெடுத் திருபுயத் தணைத்தும்
ஆன்ற தந்தையை யாந்தைசெய் தகன்றுபோ யடவி
தோன்றி மாதவந் தொடங்கினே ரிவர்களைத் தொல்லை
மூன்று தேவரு முனிவுற நிாயமுற் றிழிவார்

வருமாறு காண்க.

ஆகவே பெற்றோர்கள் எந்தக்குடிசையில் வாழ்கின்றனரோ அந்தக்குடிசையே சிறந்தகோயில்; அவர்கள் கூறும் நல்லுபதேசமே சிறந்த மந்திரம்; அவர்கள் வாழுகின்ற நாடே அமரர் வாழும் பொன்னாடு.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"
"தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை"
"தந்தைசொன் மிக்க மந்திரமில்லை."

என்னும் அருள்வாக்குகளை நினைமின்கள்; அவர்கள் காலதிசையடைந்தபிறகு நீர்க்கடன்களை முறைப்படி செய்யவேண்டும்; ஊரிலுள்ளோரனைவரும் "இக்குழந்தையைப் பெற்ற தாய் தந்தைகள் என்ன மாதவஞ்செய்தனரோ" எனப்புகழ

மகன் தந்தைக்காற்று முதவி இவன்றந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்

என்ற பொய்யில் புலவர் திருவாக்கிற்கு இலக்கியமாகத் திகழ்தல் வேண்டும்.

ஓம் தத் ஸத்:

இரவல்

A. திருஞானம், சமையபுரம்.

(328-ம் பக்கத் தொடர்ச்சி.)

உண்டவுடன் படுத்திருந்த சாய்வான நாற்காலியை நாற்காலிக்குச் சொந்தக்காரரைத் தண்ணீர் கொண்டுவர அனுப்பிவிட்டு வண்டியில் எடுத்துப்போட்டுக்கொள்வதையும், உண்ணும்போது மேலே உலர்த்தப்பட்டிருக்கும் வஸ்திரத்தைப்பார்த்து இது மிகவும் நன்றாய் இருக்கிறதே! நீர் தீபாவளிக்குக்கூட என்னை மறந்துவிட்டீரே என்று சொல்லிவிட்டு சாப்பிட்டவுடன் அந்த வஸ்திரத்தை எடுத்துக்கொள்வதையும், என்னுடைய குழந்தையின் உடுப்பு சிறிதாக இருப்பதால் இவ்வூரில் இம்மாதிரி துணியில்லாததால் உங்கள் ஊர் கடையில் தைத்துக்கொண்டுவாரும் என்று சொல்வதையும், அரிசி, கரும்பு, வெல்லம் இவைகளைக் கொடுக்கவேண்டுமென கட்டாயப்படுத்தி வாங்கிக்கொள்வதையும் எந்த இனத்திற் சேர்ப்பதென்பதை வாசகர்கள் அறிந்ததெனை நம்புகிறேன்.

துவிச்சக்கரவண்டியை இரவல் கேட்பதும் கொடுப்பதும் சகஜந்தான். ஊரார் வீட்டு “ பைசைக்கிளில் ஏறி உட்கார்ந்துவிட்டால், ஒரு தனிவேகந்தான். குதிரைசவாரி செய்வதைப்போல் வேண்டுமென்றே உடம்பைத் தூக்கித்தூக்கிப்போட்டுக்கொண்டு, கல்லிலும், முள்ளிலும், வெகுவேகமாய்க கவலையில்லாது போவது ஒரு விந்தையன்று. சிலசமயங்களில் ரப்பர்குழாய்களில் சிறைவைக்கப்பட்டிருக்கும் வாயு பகவானையும் விடுதலை செய்துவிடுவர். பிறருடைய வண்டிகளிற்றான் இவர்கள் சர்க்கஸ் பயிற்சிகள் கற்றுக்கொள்வது. இவ்வளவு ஜாக்கிறதையாகக் கையாளப்பெற்றால் நாம் இரவல் கொடுத்த பொருளின் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ?

ஒருவர் வீட்டுக்குத் தன் மருமகனோ உறவினர்களோ வந்துவிட்டால் வீட்டிலுள்ள பெண்கள் பக்கத்து வீடுகளுக்குப்போய் கூசாமல் தங்கநகைகளையும், வெள்ளிப்பாத்திரங்களையும் இரவல் வாங்கிக்கொண்டுவந்து ஷோக்பண்ணிவிடுகிறார்கள். திருப்பிக்கொடுக்கும்போது ஏதாவது ஒன்று பின்னமாகப்போவது வழக்கம். உடனே கிளம்பிவிடுகிறதையா! பெரிய இந்தியப்பெண்களின் யுத்தம் (சச்சரவு). நம்வீட்டுப்பெண்கள் சிறிது நேரம் வாங்கி விருந்தினருக்காக பகட்டினது நமக்கு ஆபத்தாய் நம்முடைய மானம் கால் காசுக்கு விற்றுப்போகிறது.

கிராமபோன் இரவல் கேட்பது மன்னிக்கத்தக்கதே. சங்கீதப் பறவைகள், மிருகங்கள், மனிதர்கள் ஆகிய எல்லோரையும் வசீகரித்து விடுகிறது. அண்ணா! அன்றையதினம் உங்கள்வீட்டில் "காந்தியோ பரம ஏழை சந்நியாசி" என்ற பாட்டைக் கேட்கச்சொன்னீரே? என்ன அது மகா இனிமையாயிருந்தது? உங்கள் மிஷினை ஒரு நாளைக்கு இரவல் கொடுங்கள்; எனது வீட்டில் என் சம்ஸாரம், பெண், மகன், தாயார், எல்லோரும் அந்தப் பாட்டைக்கேட்க மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருக்கிறார்கள்; ரிக்கார்டுகளைவைத்து முடிந்தவுடனேயே கொடுத்துவிடுகிறேன் என்கிறார் நம் நண்பர். நாமும் தட்ட முடியாமல் கொடுத்துவிடுகிறோம் அவருடைய வீட்டில் அப்போது காந்தியடிகளின் கடவுள் தத்துவத்தைப்பற்றின பேச்சை யாவரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்போது, அவ்விடம் கிராமப் போன்குழாய்க்குள் தலையை விட்டுக்கொண்டு கேட்கும் ஒருவன் பாஷாபிமான மிகுதியால் "இது என்னத்திற்கு இந்த இங்கிலீஷ் பிளேட் என்று சொல்லி, ரிக்கார்டை இறுகப்பிடித்து நிறுத்திவிடுகிறான்; அவ்வளவே, அங்கே ஒரு கீறல் விழுந்துவிடுகிறது; இந்த இடத்திற்கு ஊசிவந்ததும் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறது; இவ்விதம் நான் சொல்வது பொய்யென்று வாசகர்களுக்குத் தோன்றினால் உடனே இரவல் கிராமப்போன் வாங்கி, ரிக்கார்ட்டில் ஒரு கீறல் இழுத்து, அதற்கு நேராக ஊசியை நிறுத்திப்பாருங்கள்; ஓர் வேண்டுகோள்—சந்தேக நிவர்த்திக்காக இரவல் வாங்கவேண்டிய சிரமத்தை தியாகம்பண்ணவேண்டும்.

இப்படி அநேகமாதிரியான இரவல்கள் உலகத்தில் மலிந்துகிடக்கின்றன. மிகவும் முக்கியமானவைகளையும் விலை உயர்ந்தனவுமான பொருள்களை, ஒருவருக்கும் இரவல் கொடுக்கவே கூடாது. புத்தகங்கள், பத்திரிகைகள் ஆகியவைகளை இரவல் கேட்பது இழிவினும் இழிவு. சொந்தமாக வாங்கிப் படித்து இவைகளின் வளர்ச்சியை விரும்புதல் தனவான்களாகவுள்ள பெரியோர்களின் கடமையாகும்.

இரவல் கொடுப்பவர்களே! உங்களிடமும் குற்றமிருக்கிறது; இரவல் கொடுத்தாற்றானே அவர்களும் வாங்குகின்றார்கள்; நீங்கள் ஏன் கொடுக்கின்றீர்கள்? கொடுத்துவிட்டுத் திரும்பிவரும்போது "அதில் சொத்தை இதில் சொள்ளை" என்று ஏன் கலகத்திற்காளாகவேண்டும்? கொடுத்துவிட்டுப் பொல்லாதவனாய்ப் போவதைவிட, கொடாமலேயே பொல்லாதவனாயிருப்பது நலம் என எனக்குத் தோன்றுகின்றது. இரவல் கேட்பதையே தொழிலாகக்கொண்ட தனவான்களாகயிருக்கும்பெரியோர்கள் என்மீது சினந்துகொள்வது பிசகு என்பதைக்கூறி எனது வார்த்தைகளையும் நிறுத்திக்கொள்ளுகின்றேன். 'வாழ்க சீரடியா ரெல்லாம்'.
